சமாஜ வெளியீடு—ரு.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள்

அருளிச்செய்த

தேவாரப் பதிகங்கள்

(க, உ, ரு - திருமுறைகள்)



சைவ சித்தாந்த மகா சமாஜம்,
150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு,
சென்னை.

பிரசோற்பத்தி௵ வைகாசி௴

1931

விலை
ரூபா ஒன்று

சாது அச்சுக்கூடம்,

இராயப்பேட்டை, சென்னை.

குறிப்பு :—மிகக் குறைந்த அடக்கவிலைக்குத் தரவேண்டுமென்பதே இவ்வெளியீட்டின் நோக்கமாகையால் எவரும் பிரதி ஒன்றுக்கு ஒரு ரூபாவுக்குமேல் கொடுத்து வாங்கவும், பெற்று விற்கவும் கூடாது.

உ

சிவமயம்

உரிமையுரை

"அட்டசித்தியும் நல்அன் பருக்கருள
விருது கட்டிய பொன்அன்னமே"—தாயுமானர்.

"புன்புலால் யாக்கை புரைபுரை கனியப்
பொன்னெடுங் கோயிலாப் புகுந்தென்
என்பெலா முருக்கி எளியையா யாண்ட
ஈசனே மாசிலா மணியே"—திருவாசகம்.

கயிலை நிகர்க்கும் மயிலைப் பதிக்கண்
தொழுதுண மரபின் பழுதிலா வித்து,
செல்வ நிலனில் கல்வி யொளியில்
நேயப் புனலில் மேய ஒழுக்க
வளியில் இன்ப வெளியில் வளர்தரு,
அறநூல் சைவத் திறநூல் சாரம்
தேங்கித் திரண்ட பாங்குடைக் கேணி,
ஓதித் தமிழ்மறை ஆதியை யுன்னி
நைந்துநைந் துருகி உந்துநீ ருருவி,
குடிப்பிறப் படக்கம் படிப்பு நிறையே
விருந்தே ஈகை பொருந்திய வல்லி
முன்னைத் தொடர்பால் பின்னு பொறைமலை,
வள்ளுவர் வாசுகி உள்ளற மோம்பி
ஒப்புர வுறைந்தே ஐப்பசி அறுநாள்
நோன்பிருந் தடியனை ஈன்றிருங் கல்வி
அழியாப் பொருட்டுணை வழியால் வளர்த்த
ஆருயிர் அன்னை சீருயர் அப்பன்
ஆசில்அன் னம்மாள் மாசிலா மணிவேள்
இருமுது குரவர் பெருநினை வுக்குறி
ஆக இலங்க வாகைக்
காழியன் அருண்மறை வாழியிப் பதிப்பே.

இங்ஙனம் :

ம. பாலசுப்பிரமணியன்

உ

சிவமயம்

பதிப்புரை

சைவ சித்தாந்த மகா சமாஜத்தினர் சென்ற இரண்டு ஆண்டுகளில் முறையே சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரத்தை முதிய நல்லாடிதன்னில் சுத்தமாம் சுவாதி நாளிலும், திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரத்தைச் சித்திரைச் சதயத்திலும் அடக்கவிலைச் சுத்தப் பதிப்புக்களாக வெளியிட்டு அவ்விரு குரவர்க்கும் பாதகாணிக்கையாகச் சமர்ப்பித்தனர். இவ்வாறு இறைவன் திருவருள் இருந்ததைக் கண்ட நம் தமிழ் நாட்டினர் "சம்பந்தர் தேவாரம் எப்போது வரும் எப்போது வரும்?" என்று அனந்த முறை வினவுவாராயினர். முக்கட் பரமன் அருட்டுணை கொண்டும், மூவேந்தர் தமிழ்நாட்டின் ஆர்வத்துணை கொண்டும் திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் தேவாரத்தின் அடக்கவிலைச் சுத்தப் பதிப்பாகிய இந்நூல், திருநல்லூர்ப் பெருமணத்தில் வைகாசி மூலத் திருநாளாகிய இன்று வெளிவருவதாயிற்று. வழக்கம்போல் திருவாளர்கள் - கி. குப்புச்சாமி முதலியார், திரு. வி. உலகநாத முதலியார், அ. சோமசுந்தரம் செட்டியார், பரவி. சு. நெல்லையப்பர் ஆகிய நான்கு நண்பர்களும் அச்சுத் தாள்களைத் திருத்தி இந்நூல் சுத்தப் பதிப்பாக வருதற்குத் துணைபுரிந்தார்கள். வழக்கம்போல் சைவ அச்சுக்கூடத்தினருள் தலை சிறந்து விளங்கும் சாது அச்சுக்கூடத்தினர் மிக விரைவாகவும் மிகச் செம்மையாகவும் பணியியற்றி இப்பதிப்பு இந்நன்னாளில் வருதற்குத் துணைபுரிந்தார்கள்.

சைவ சமயத்தின்கண் மிளிர்கின்ற தோத்திரம் சாத்திரம் என்பவற்றை எனது மூன்றுமாண்டு தொட்டே எனக்

குச் சிறுகச் சிறுகப் போதித்து, என்னைச் சைவத் திருத்தொண்டில் நிலைத்திருக்குமாறு பேருதவி புரிந்த எனது தாய்தந்தையர் நினைவுக்குறியாக ஏதேனும் நிலைத்த திருப்பணி யொன்று செய்தல் வேண்டுமென்ற அவா, அவ்விரு முதுகுரவரும் உடல் நீத்தநாள் தொட்டு என்னுட் குடி கொண்டது. அத்தகைய நன்றி யறிதலான நினைவுக்குறியாக இச்சுத்தப் பதிப்பு நூலை, இறைவன் எனக்களித்த பொருளைக் கொண்டு வெளியிடுமாறு அவ்விறைவன் திருவருளே அறிவுறுத்துவதாயிற்று. இந்நூலை என் தாய் தந்தையர் நினைவுக்குறியாக வெளியிடுதற்கு விடை தந்த சைவ சித்தாந்த மகா சமாஜத்தினருக்கு நான்பெரிதும் கடப்பாடுடையேன். இம்முறையைக் கைப்பற்றி ஏனைய சிலர்கள் தத்தம் உறவினர் நினைவுக்குறிகளாகவாவது ஏனைய திருமுறைகளையும் பதினான்கு சாத்திரம் முதலிய வற்றையும் அடக்க விலைச் சுத்தப் பதிப்புக்களாக வெளியிடுதற்கு உளங் கொள்ள இறைவன் இன்னருள் துணை நிற்பதாக.

இந்நூல் வெளிவருதற்குத் துணைபுரிந்த மேற்கூறிய பெரியார்கட்கெல்லாம் நன்றி கூறுவதோடமையாது, இவர்கள் மேன்மேலும் இத்தகைய தொண்டுகளை நீடூழி செய்திருக்க அருள் புரியுமாறு முழுமுதற்கடவுளை மும்முறை வழுத்துகின்றேன்.

இங்ஙனம்:

திருநல்லூர்ப்பெருமணம்,
பிரசோற்பத்தி ஆண்டு,
வைகாசி மூலத்திருநாள்,
2—6—1931.

ம. பாலசுப்ரஹ்மண்ய முதலியார்,
பி. ஏ., பி. எல்., காரியதரிசி,
சைவ சித்தாந்த மகா சமாஜம்,
150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு,
ஜார்ஜ் டவுன் சென்னை.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

உறவும் பொருளும் ஒண்போகமும் கல்வியும் கல்வியுற்ற
அறவும் அறவிப் பயனும் எனக்குச் சுழிந்தபுனல்
புறவும் பொழிலும் பொழில்சூழ் பொதும்பும் ததும்பவண்டின்
நறவும் பொழில்எழிற் காழியர் கோன்திரு நாமங்களே. ௧

கவிக்குத் தருவன கண்ணுக் கினியன கேட்கிலின்பஞ்
செவிக்குத் தருவன சிந்தைக் குரியன பைந்தாள
நவிக்கட் சிறுமியர் முற்றின் முகந்துதஞ் சிற்றில்தொறுங்
குவிக்கத் திரைபரக்குங் கொச்சை நாதன் குரைகழலே. ௨

உறுகின்ற அன்பினெ டொத்திய தாளமும் உள்ளுருகிப்
பெறுகின்ற இன்பும் பிறைநுதல் முண்டமுங் கண்டவரைத்
தெறுகின்ற வாறென்ன செய்தவமோ வந்தென் சிந்தையுள்ளே
உறுகின்ற பாதன் கழுமலம் போலுந் துடியிடைக்கே. ௩

பெறுவது நிச்சயம் அஞ்சல் நெஞ்சே பிரமாபுரத்து
மறுவறு பொற்கழல் ஞான சம்பந்தனை வாழ்த்துதலால்
வெறியுறு கொன்றை மறியுறு செங்கை விடையெடுத்த
பொறியுறு பொற்கொடி யெம்பெரு மான்அமர் பொன்னுலகே.

என்றும் அடியவ ருள்ளத் திருப்பன இவ்வுலகோர்
நன்று மலர்சொடு தூவித் துதிப்பன நல்லசங்கத்
தோன்றும் புலவர்கள் யாப்புக் குரியன ஒண்கலியைப்
பொன்றும் கவுணியன் சைவ சிகாமணி பொன்னடியே. ௫

பிறவியெனும் பொல்லாப் பெருங்கடலை நீந்தத்
துறவியெனுந் தோற்றோணி கண்டீர்—நிறையுலகில்
பொன்மாலை மார்பன் புனற்காழிச் சம்பந்தன்
தன்மாலை ஞானத் தமிழ். ௬

—நம்பியாண்டார் நம்பி.

திருச்சிற்றம்பலம்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் சரித்திரம்

“ வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம் ”

திருச்சிற்றம்பலம்

அன்னம்பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம் முதலிய தலங்களையும், பொன்னம்பாலிக்கும் பொன்னியாறாகிய காவிரி முதலிய தீர்த்தங்களையும், முன்னங் காலனைக் காய்ந்து அடைக்கலம் புகுந்த அந்தணனுக்கருளிய அண்ணலாதிய மூர்த்திகளையும் உடையது சோழவளநாடு. இந்நாட்டிற்கொரு திலகமாய் விளங்குவது பிரமபுரம், வேணுபுரம், புகலி, வெங்குரு, தோணிபுரம், பூந்தராய், சிரபுரம், புறவம், சண்பை, காழி, கொச்சைவயம், கழுமலம் என்னும் பன்னிரண்டு திருப்பெயர்களையுடைய சீகாழிப் பதியாகும். இவ்வூரிலே கவுணிய கோத்திரத்திலே (இந்தக் கோத்திரம் இப்போது கௌண்டிந்ய கோத்திரம் என்று வழங்கப்படுகிறது) அவதரித்த சிவபாத இருதயர் என்ற அந்தணசீலர் பகவதி என்ற பெண்மணியை மணந்து, வேத நெறியிலும் மிகு சைவத் துறையிலும் வகுத்துள்ள ஒழுக்கத்தில் ஒரு சிறிதும் பிறழாது நின்று, இல்லறத்தைச் செவ்வையாய் நடத்தி வந்தனர். புத்திரப் பேறில்லாமையால், இருவரும் சிவபெருமானை நோக்கித் தவமிருந்து “இப்போது தமிழ்நாட்டில் வேரூன்றி யிருக்கும் பௌத்தம், சமணம் என்ற புறப் புறச் சமயங்களை யொழித்து சைவத்தை நிலைநாட்டவல்ல சமயாசாரியார் தோன்ற வேண்டும்” என்று வேண்டிக்

கொண்டனர். அவர்கள்தவத்துக்குஉவந்த இறைவன் அருள்சுரக்கவும், பகவதியார் கருப்பவதியாகி ஒவ்வொரு மதியிலும் நடைபெற வேண்டிய வேதவிதிச் சடங்குகள் நிறைவெய்திய பின்னர், பத்தாம் மாதத்திலே திருவாதிரை நன்னளிலே நற்கோள்கள் உச்சத்திலிருக்கும் வேளையிலே ஒளி பொருந்திய அழகுமிக்க ஆண்குழந்தையைப் பெற்றெடுத்தார். இவ்வாண் குழந்தையே தேவாரத் திருமுறைகள் முதல் மூன்றையும் திருவாய் மலர்ந்தருளிய திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் ஆவார்.

சிவபாதவிருதயரும் பகவதியாரும் குழந்தையை நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து வந்தார்கள். குழந்தைக்குரிய வைதிகச் சடங்குகளை யெல்லாம் முறைப்படி செய்து வைத்தார்கள். குழந்தைக்கு மூன்றுவது வயது நடந்து வரும்போது ஒரு நாள் தனது தகப்பனரோடு திருக்கோயிலுக்குச் செல்லவேண்டுமென்று குழந்தை பிடிவாதமாய் அழுதது. தந்தையார் குழந்தையை அழைத்துச் சென்று குளக்கரையில் உட்கார வைத்துவிட்டுக் குளத்தில் இறங்கி அகமர்ஷண மந்திரத்தை ஓதிக்கொண்டே தண்ணீருள் மூழ்கி ஸ்நானம் செய்வாராயினர். தமது தந்தையாரைக் காணுத குழந்தையார் பல திசைகளிலும் நோக்கியழுது கடைசியாக "தம்மேலைச் சார்புணர்ந்தோ சாரும் பிள்ளைமை தானே" திருத்தோணியப்பர் கோயில் சிகரத்தைப்பார்த்து "அம்மே அப்பா" என்று அழத் தொடங்கினர். உடனே தோணியப்பர் தேவியாரோடு இடபவாகனத்தின் மேலேறி அழுகின்ற பிள்ளையின் முன் தோன்றி, பொற்கிண்ணத்தில் திருமுலைப்பாலைக்கறந்து சிவஞானத்தைக் கலந்து ஊட்டும்படி பார்வதி தேவியாருக்குக்கட்டளை யிட்டார். தேவியாரும் அவ்வாறே செய்தனர். ஞானப்பாலை யுண்டவுடனே "சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம், பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம், உவமையிலாக் கலைஞானம், உணர்வரிய மெய்ஞ்ஞானம்" எனப்பட்ட ஞானம் முழுமையும் கைவரப்பெற்ற குழந்தைக்குத் திருஞானசம்பந்தர் என்ற காரணப்பெயர் உண்டாயிற்று. ஞானப்பாலை ஊட்டிவிட்டு இறைவனும் இறைவியும் மறைந்து போயினர். குழந்தையும் அப்போதுண்ட பால்வடிந்த உதடுகளோடு குளக்கரையில் உட்கார்ந்திருந்தது. தந்தையார் ஸ்நானத்தை முடித்துக்கொண்டு

கரையின்மேல் வந்த குழந்தையைக்கண்டு "உனக்குப் பால் கொடுத்தது யார்? வழிப்போக்கர் யாரோ கொடுத்த பாலை நீ என் உண்டாய்?" என்று கோபத்தோடு ஒருகுச்சியை ஓங்கி அடிப்பவர்போல் கேட்டார். உடனே சிவஞானம் கைவரப்பெற்ற குழந்தை பால் கொடுத்தவர் இறைவனும் இறைவியுமே என்பதை யுணர்த்தித் தாம் நேரேகண்ட இடபவாகனருடை திவ்விய கோலத்தை அறிவுறுத்தி "தோடுடைய செவியன்" (பக்கம் - க) என்ற திருப்பதிகத்தைத் திருவாய்மலர்ந்தருளினர். உடனே சிவபாத விருதயர் தமது குழந்தை, சிவஞானம் பெற்ற தெய்வக்குழந்தை என்பதை யுணர்ந்தார். இருவரும் திருக்கோயிலில் சிவபெருமான் சந்நிதிக்குச் சென்று வணங்கினர். கோயிலிலும் ஊரிலும் உள்ளார் அனைவரும் குழந்தை ஞானப்பாலுண்ட செய்தியை யறிந்து ஆநந்தத்தோடு திருஞானசம்பந்தரை ஊர்வலமாக இல்லத்துக்கு அழைத்துச் சென்றனர். தாம் ஞானப்பாலுண்ட செய்தியைத் திருஞானசம்பந்தர் சில ஆண்டுகள் கழித்துத் தாம் பாடிய "போதையார் பொற்கிண்ணத்தடிசில் பொல்லாதெனத், தாதையார் முனிவுறத் தானெனையாண்டவன்" (பக்கம் - சகூ) என்ற தேவாரப் பாடலிலும் கூறியுள்ள அகச்சான்று நமக்குக் கிடைத்திருக்கிறது.

சிலநாட்கழித்து, சீகாழிக் கண்மையிலுள்ள திருக்கோலக்காவைத் தரிசிப்பதற்கு விரும்பிய தம்மைத் தந்தையார் தோளின்மேல் ஏற்றிச் செல்லத் திருஞானசம்பந்தர் திருக்கோயிலை யடைந்து கைகளால் தாளம்போட்டு "மடையில் வாளை" (பக்கம் - ௩எ) என்ற பதிகத்தை ஓதியருளினர். உடனே கண்ணுதல் வள்ளல் சுவாமிகட்குப் பஞ்சாக்கரம் வரையப்பெற்ற பொற்றாளங்களிரண்டை அசரீரியாகவிருந்து உதவினர். சுவாமிகள் அவைகளைப்பெற்றுத் தமது தேவாரத் திருத்தொண்டுக்குப் பயன்படுத்திக் கொண்டார்.

திருஞானசம்பந்தர் ஞானப்பாலுண்டு பொற்றாளம் பெற்ற செய்தியைக்கேட்ட சோழநாட்டு மக்கள் ஊர் ஊராகத் திரள் திரளாகவந்து சுவாமிகளைத் தரிசித்து மகிழ்ந்து தங்கள் தங்கள் ஊர்கட்கெல்லாம் வந்தருளும்படி வேண்டினர்கள். சுவாமிகளும் அவர்கள் வேண்டுகோளுக்கிணங்கித் தலயாத்திரைசெய்து தேவாரங்களை ஓதி யருளினர். அவ்வாறு முதன்முதலாகச் சென்றவிடம் தமது தாயார் பிறந்த ஊராகிய திருநனிபள்ளி என்பதாகும்.

சிதம்பரத்துக்கருகேயுள்ள திருஎருக்கத்தம்புலியூரில் வசித்த திருநீலகண்டப் பெரும்பாணரும் அவர் மனைவி மதங்க சூளாமணியும் திருஞானசம்பந்தரைத் தரிசிக்கச் சீகாழி போந்தனர். சுவாமிகளைக்கண்டு மகிழ்வெய்தி, சுவாமிகள் தேவாரப் பதிகங்களைத் தங்கள் யாழில் அமைத்து வாசித்தனர். சுவாமிகளோடு எல்லாவிடங்கட்கும் உடன் சென்று சுவாமிகள் பாடும் தேவாரப்பதிகங்களை யெல்லாம் அவ்வப் போது யாழிலமைத்துப் பாடும் வரத்தையும் பெற்றனர்.

திருஞானசம்பந்தர் சிதம்பரம் முதலிய பல தலங்களைத் தரிசித்துத் திருநெல்வாயிலரத்துறையைக் காணவிரும்பித் தந்தையார் தோளினின்றும் இழிந்து நடந்து சென்றார். சற்றுநேரங்கழித்துக் களைப்புற்று வழியிலுள்ள மாறன்பாடி என்ற வூரில் ஐந்தெழுத்தோதி அயர்ந்தனர். அவ்விரவு இறைவன் திருநெல்வாயிலரத்துறை வாசிகளின் கனவில் தோன்றி, திருக்கோயிலில் முத்துச்சிவிகை, குடை, சின்னங்கள் வைத்திருப்பதாகவும் அவற்றைச் சுவாமிகட்குச் சேர்ப்பிக்கும்படியாகவும் கட்டளையிட்டருளினர். சுவாமிகளுக்குக் கனவில் தோன்றி அவைகளை யேற்றுக்கொள்ளும்படி கட்டளையிட்டனர். விடியற்காலத்திலே திருநெல்வாயிலரத்துறைவாசிகள் கோயிலிற் சென்று முத்துச் சிவிகை குடை சின்னங்கள் மிளிர்வதைக் கண்டு வியந்து அவற்றைச் சுவாமிகளிடம் சமர்ப்பித்தார்கள். சுவாமிகளும் "எந்தையீசனெம் பெருமான்" (பக்கம் - ௩எ0) என்ற பதிகம்பாடி ஐந்தெழுத்தோதி, சிவிகையில் ஆரோகணித்தார். பரிவாரங்கள் குடை, சின்னங்களைத் தாங்கி நின்றனர். பிறகு பல தலங்களையும் தரிசித்துக்கொண்டு சீகாழி யடைந்தனர்.

பிறகு உபநயனப் பருவத்தில் திருஞானசம்பந்தருக்கு வேத விதிப்படி உபநயனச் சடங்கு நடந்தது. வேதங்களின் முடிந்த பொருள்களை ஓதாதுணர்ந்த திருஞானசம்பந்தர் உபநயனச் சடங்குக்கு வந்திருந்த மறையோருக்குள்ள ஐயந்திரிபுகளை யெல்லாம் நீக்கி ஐந்தெழுத்தின் பெருமையை விளக்கித் "துஞ்சலுந் துஞ்சலி லாத போழ்தினும்" (பக்கம் - சகஉ) என்ற பஞ்சாக்கரப் பதிகத்தையும் ஓதியருளினர்.

திருஞானசம்பந்தர் வரலாற்றைக் கேள்விப்பட்ட திருநாவுக்கரசு சுவாமிகள் அவரைக் காண்பதற்கென்றே சீகாழிக்கு வந்தனர். சுவாமி

களும் அவரை எதிர்கொண்டழைத்து உபசரித்து இருவருமாகக் கோயிலை வணங்கிச் சிலநாள் இன்புற்றிருந்தனர். பிறகு திருநாவுக்கரசு சுவாமிகள் பல தலங்களைத் தரிசிக்கச் சென்றார். திருஞானசம்பந்தரும் சிவனடியார் புடைசூழப் பல பதிகளைத் தரிசித்துத் திருப்பாச்சிலாச் சிராமத்தை யடைந்தனர். ஆங்குள்ள கொல்லி மழவன் என்ற அரசன் சுவாமிகளை எதிர்கொண்டழைத்துக் கோயிலுக்குள் சிவ சந்நிதானத்துக்குச் சென்றான். ஆங்கு முயலகன் என்னும் கொடிய நோயினால் பீடிக்கப்பட்டு அறிவற்று நிலத்தில் வீழ்ந்து கிடக்கும் தனது புத்திரியைக் காட்டி அவள் நோயைத் தீர்த்து அருள் புரியுமாறு சுவாமிகளை வேண்டினான். உடனே இறைவன் மீது" துணிவளர் திங்கள்" (பக்கம் - எக) என்ற பதிகம்பாடி திருஞானசம்பந்தர் அவள் நோயைத் தீர்த்தருளினார். பிறகு பலதலங்களைத் தரிசித்துக்கொண்டு திருக்கொடிமாடச் செங்குன்றூரை யடைந்தார். ஆங்கு முன்பனிக் காலத்தில் ஒருவகையான விஷச்சுரநோய் வருவது வழக்கம். சுவாமிகளோடு வந்த அடியார் குழாங்களையும் அவ்விஷச்சுர நோய் பிடித்துக் கொண்டது. இதை யறிந்த சுவாமிகள் "அவ்வினைக்கிவ்வினை" (பக்கம் - கஅஉ) என்ற பதிகம் பாடி இறைவன் திருவருளால் அடியார் குழாங்களுக்குற்ற நோயைத் தீர்த்தது மட்டுமேயன்றி அவ்வூரிலும் எக்காலத்திலும் அவ்விஷச் சுரம் வரவொட்டாமல் திருவருள் புரிந்தனர்.

பிறகு பலதலங்களைத் தரிசித்துவிட்டு, திருப்பட்டீச் சரத்தை யணையும்போது வெயில் மிகுந்ததால் நிழல் தருவதற்கு ஆகாயத்தில் சிவபூதம் ஒன்று முத்துப்பந்தர் ஒன்றைத் தாங்கிற்று. பிறகு அப்பந்தர் இழிந்தது. பரிசனங்கள் அதைத் தாங்கிக் கொண்டார்கள். சுவாமிகளும் தில்லை மூதூராடிய திருவடி நீழலெனவே அம்முத்துப் பந்தர் நிழலை யெண்ணி, திருக்கோயில் சென்று "பாடன் மறை சூடன்" (பக்கம் - ருசஉ) என்னும் பதிகம்பாடிப் பலதலங்களைத் தரிசித்துக் கொண்டு திருவாவடுதுறையை அடைந்தனர்.

ஆங்குறையு நாளில் சிவபாத விருதயர் வந்து வேள்வி செய்தற்குரிய காலம் வந்துவிட்டபடியால் பொருள் வேண்டுமென்று சுவாமிகளைக் கேட்டார். சுவாமிகளும் "அந்த மில் பொருளாவன ஆவடுதுறையுள் எந்தையார் அடித்தலங்களன்றோ" என்ற கருத்துத் தோன்ற "இடரினுந்தளரினும்" (பக்கம் - சகஉ) என்ற திருப்பதிகத்

தை ஓதினர். உடனே ஒரு சிவ பூதம் தோன்றி அகன் பீடத் திச்சி வைத்தது பசும்பொன் ஆயிரங்கிழி யொன்று. வைத்துவிட்டு முன்னின்று "நல்வாக்கால் உய்த்த இக்கிழி பொன்னுல வாக்கிழி யுமக்கு நித்தனா அருள் செய்தது" எனக் கூறி மறைந்தது. அதைத் தந்தையாரிடம் கொடுத்து "நல் வேள்வி நீதுநீங்க நீர் செய்யும்" என்றருளினார் திரு மகனார்.

பிறகு பல தலங்களை வணங்கித் திருநீல கண்டத்துப் பாணனார் தாய் பிறந்த ஊராகிய தரும புரத்தைத் திருஞான சம்பந்தர் அடைந்தார். அவ்வூரில் பாணனார் சுற்றத்தார் பாணனார் திருத் தொண்டை வியந்து "திருப்பதிகத்திற் கிளர்ந்த வோசை, அளவு பெறக் கருவி யின் நீர் அமைத்தியற்று மதனாலே யகில மெல்லாம், வளர இசை நிகழ்வதென" விளம்பினார்கள். பாணனார் உளநடுங்கித் "திருப்பதிக இசை யளவுபடா வகையை இவர்களும் உலகத்தவரும் அறியுமாறு ஒரு பதிகம் பாடவேண்டும்" என்று திருஞானசம்பந்தரை வேண்ட, சுவாமிகளும் "மாதர் மடப்பிடியும்" (பக்கம்-உகஎ) என்னும் யாழ்மூரிப் பதிகம் பாடினார். அப்பதிகம் இசையாழில் அடங்காதது கண்ட பாண னார் யாழை யுடைக்க ஓங்கினார். உடனே சுவாமிகள் அதனை வாங்கி "ஐயரே, அம்மையப்பர் திருவருளின் பெருமை யெல்லாம் இக்கருவி யினில் அளவு படுமோ? இயன்றவரையிலேயே வாசிப்பீர்" என்று மீண்டும் யாழைப்பாணனாரிடம் தந்தார். அதைப் பெற்றுப் பாணனார் வழக்கம் போல் சுவாமிகட்கு யாழ்த்தொண்டு புரிந்திருந்தனர்.

இதன் பின்னர் பல தலங்களில் இறைவனை வணங்கி, சுவாமிகள் திருமருகலை யடைந்தார். ஆங்கு, கோயிலுக்கெழுந்தருளும்போது ஒரு அழுகுரலோசை கேட்டது. தன்னை மணந்து கொள்ளக்கருதிய வணி கனுந்தானுமாக வர, வழியில் அவ்வணிகன் பாம்பு கடித்திறக்கத் திக் கற்றவளுக்குத் தெய்வமே துணை யென்று ஒரு பெண் கதறியழுங் குரலோசை அது வென்பதை யறிந்த சுவாமிகள் "சடையாயெனு மால்" (பக்கம்-உசக) என்னும் பதிகம் பாடி விஷத்தை யிறக்கி அவ் வணிகனை உயிர்ப்பித்தனர். சுவாமிகளின் திருவடிகளில் இருவரும் வீழ்ந்து வணங்கவும், அவர்கட்குப் "புகலிவேந்தர், மணம்புணரும் பெருவாழ்வு வகுத்துவிட்டார்." பிறகு சிறுத் தொண்ட நாயனார், முருக நாயனார் வேண்டு கோள்களுக்கிணங்கித் திருச்செங்காட்டங்

குடியையும், திருப்புகலூரையும் தரிசித்து ஆங்கு திருநாவுக்கரசு சுவாமிகளைக் கண்டு ஆரூர் திருவாதிரைவிழாச் சிறப்பை அவர் கூறக் கேட்டுத் திருவாரூர்சென்று வணங்கி, பின் சில தலங்கட்குச் சென்று திருவீழி மிழலையை அடைந்தார். ஆங்குள்ள சிவபெருமான் காழி நகர்த் தோணியப்பரைப்போல் காட்சி கொடுத்ததைக் கண்டு களித்து அவ்வூரிலேயே சில காலம் தாமும் நாவுக்கரையருமாகத் தங்கி யிருந் தார்கள். அப்போது பஞ்சக் கொடுமையால் அடியார் குழாங்கள் வருந்த, கடவுள் கோயிலுள் இரண்டு பீடங்களில் தினந்தோறும் பஞ் சம் முடியுமளவும் ஒவ்வொரு பொற் காசு தந்து உதவினர். அக்காசு களைப் பெற்றுத் திருஞான சம்பந்தரும் திருநாவுக்கரசரும் தனித் தனியே தங்கள் திருமடங்களிற் சிறப்பாக அடியவர்க்கு அமுதளித்து வந்தனர். தாம் பெற்ற காசுகள் வாசியின்றி (வட்டமில்லாமல்) மாறுதலைக் கண்ட திருஞானசம்பந்தர் "வாசி தீரவே" (பக்கம்-௧௪௮) என்ற பதிகம் பாடி நற்காசு பெற்றனர்.

திருஞான சம்பந்தரும் திருநாவுக்கரையரும் பல தலங்களைத் தரிசித்துக் கொண்டு திருமறைக் காட்டை யடைந்தார்கள். ஆங்குள்ள திருக்கோயிலின் கதவு மறைகளால் அடைக்கப்பட்டிருந்தது. அடி யார்களெல்லாம் வேறொரு திட்டு வாசல் வழியாகவே செல்லும் வழக் கம் ஏற்பட்டது. இதைக்கண்ட இருகுரவருள் அப்பர் சுவாமிகள் திறக் கும்படி பாட, சம்பந்த சுவாமிகள் " சதுரம் மறைதான் " (ப-௨௭௧) என்ற பதிகம்பாடி மூடவும் செய்தார். பிறகு அக்கதவு மற்றைக் கதவு களைப்போல் திறக்கவும் மூடவும் இசைந்திருந்தது. இருவரும் திரு மறைக்காட்டிலேயே சிலகாலம் வீற்றிருந்தார்கள்.

அப்போது ஒரு நாள் பாண்டி நாட்டிலிருந்து சில அடியார்கள் வந்து திருஞானசம்பந்தரை வணங்கி "ஐயனே, எங்கள் நாட்டில் சைவம் மறைந்துவிட்டது. சமண சமயமே விளங்குகிறது. மன்ன னும் அச்சமயத்திற் புகுந்து சைவத்துக்குக்கேடு விளைக்கிறான். குலச் சிறையார் என்ற அமைச்சரும் மங்கையர்க்கரசியார் என்ற பாண்டிமா தேவியாரும் உளம் புழுங்கிச் சைவத்துக்குற்ற குறையை நினைந்து நினைந்து வருந்துகிறார்கள். தங்கள் நல்வருகையை வேண்டுகிறார்கள். தாங்களே சமணசமயத்தைவென்று மீண்டும் சைவத்தை நிலைநாட்ட வல்லவர்கள் என்று திண்ணமாய் நம்புகிறார்கள். தாங்கள் பாண்டி நாட்

டெழுந்தருளி எங்களைக் காத்தருள வேண்டும்'' என்று மிகப்பணிவுடன் கூறினார்கள். இதைக்கேட்ட திருஞானசம்பந்தர் அவர்கட்கு அருள்புரிந்து வருவதாக ஒப்புக்கொண்டனர். இதையறிந்த நாவுக்கரையர் "நீவிர் சிறு பாலர், வயதுமுதிர்ந்த என்னையே எவ்வளவோ துன்புறுத்தியவர்கள் சமணர்கள். மேலும் இதுபோழ்து நாளும் கோளும் சரியாகவில்லை. போதல்கூடாது'' என்று நட்புரிமை பற்றித் திருஞானசம்பந்தரைத் தடுத்தார். "திருவருள்வழி நிற்கும் சிவனடியவர்க்கு நாளும் கோளுந் தீமைவிளைக்கமாட்டா'' என்று கூறி "வேயுறு தோளி பங்கன்'' (பக்கம்-௩௯௪) என்ற பதிகத்தைப்பாடி அப்பரிடம் விடைபெற்று மறைக்காட்டீசனை வணங்கிப் பல தலங்களை வழியிலே தரிசித்துத் திருஞானசம்பந்தர் பாண்டி நாடடைந்தார்.

திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் மதுரைமா நகரத்தின் எல்லைக்கருகில் வருவதையறிந்த மங்கையர்க்கரசியார் சுவாமிகளை எதிர்கொண்டழைத்தற்காகக் குலச்சிறை நாயனர் என்னும் மந்திரியாரை அனுப்பிவைத்தார். மந்திரியாரும் சென்றழைத்தார். சுவாமிகள் திருவாலவாய் எப்புறமிருக்கிறதென்று வினவினர். கோபுரங்கள் சோலைகளிடையே தோன்றும் பக்கத்தைச் சுட்டினர் குலச்சிறையார். சுவாமிகளும் "மங்கையர்க்கரசி'' (பக்கம்-௩௪௫) என்னும் பதிகத்தைப்பாடி, திருவாலவாயைத் தொழுது உட்புகுந்து திருக்கோயில் சென்று வணங்கி, மங்கையர்க்கரசியாரையும் கண்டு மகிழ்ந்து ஒரு திருமடத்தில் பரிவாரங்களோடு தங்கியிருந்தனர். இராப்பொழுது தொடங்கியதும் சிவனடியார்கள் தமிழ்மறை முழக்கம் தொடங்கினர். அதனைக் கேட்கப் பொறாத சமண அடிகண்மாரெல்லாம் ஒருங்கு சேர்ந்து அரசனிடம் சென்று "மதுரையிற் சைவ வேதியர்தாம் மேவலாலின்று கண்டு முட்டியாமென்று'' விளம்பினர். "என்று கூறலுங் கேட்டு முட்டியாறுமென்றியம்பி'' வேந்தன் மேலே செய்யவேண்டுவது யாதெனக் கேட்டனன். சமண அடிகள் அதற்கு "நம்மை வாதில் வெல்லவந்த இவன் தங்கியிருக்கும் மடத்துக்கு மந்திரத்தினுல் தீயிடுவதே சாலும்'' என்றனர். "அவ்வாறே விரைந்து செய்யுங்கள்'' என்றான் அரசன். சமணர்கள் ஓதிய மந்திராக்கினி பஞ்சாக்ஷரத்தின் முன் பயன்படவில்லை. திருமடம் தீப்பற்றவில்லை. இதையறிந்த சமணர்கள் உடனே தீயை யெடுத்துச்சென்று திருமடத்தின் ஒரு பக்கலில் இட்டார்கள்.

அப்பக்கம் தீப்பற்றி யெரிந்ததைக்கண்ட அடியவர் திருஞானசம்பந்தரிடம் முறையிட, சுவாமிகளும் "இந்தத் தீ அரசனையெல்ல அடைந்து அவனுக்கு ஆகவேண்டியவைகளைச் செய்யட்டும்" என்று திருவுளங்கொண்டு "செய்யனே திருவாலவாய்" (பக்கம்-ருoசு) என்ற பதிகத்தை ஓதியருளினர். உடனே திருமடத்திலிட்ட தீ அணைந்து, வெப்பு நோயாக மாறி, பாண்டிய மன்னனைத் துன்புறுத்தத் தொடங்கிற்று.

அவ்வெப்பு நோய் தாங்கப்பொறாத அரசன் பல வைத்தியர்களையும் சமண மந்திர வாதிகளையும் கொண்டு சிகிச்சை செய்து கொண்டும் நோய் ஒரு சிறிதும் குறையாததை யுணர்ந்து தனது அரசியாரையும் மந்திரி குலச்சிறையாரையும் வரவழைத்து விசாரித்தான். திருஞான சம்பந்த சுவாமிகள் மடத்துக்கிட்ட தீயினால் தான் இவ்வெப்புநோய் வந்ததென்றும் அந்த சுவாமிகளே இந்நோயைத் தீர்க்க வல்லாரென்றும் அவர்கள் கூறினார்கள். மன்னனும் ஆங்குக் கூடியிருந்த சமணர்களை நோக்கி "இவர் செய்கையெல்லாம் இன்னவாறெய்து நோய்க்கே யேதுவாயின வென்றெண்ணி", "யானுற்ற பிணியைத் தீர்த்து வென்றவர் பக்கஞ் சார்வன்" என்று கூறித் திருஞானசம்பந்தரை அழைத்து வரும்படி மந்திரியாருக்குக் கட்டளையிட்டான். உடனே குலச்சிறையார் திருமடம் சென்றழைத்தார். சுவாமிகள் கோயிலுக்குள்சென்று "காட்டுமாவதுரித்து," "வேதவேள்வியை நிந்தனை" (பக்கம்-ருoo, ருகஎ) என்ற பதிகங்களை ஓதி இறைவன் திருவுள்ளத்தை யறியவேண்டி நின்றார். உடனே "நாதர் தம்மருள் முன் பெற்று நாடிய மகிழ்ச்சி பொங்கப் போதுவார் பணிந்து போற்றி விடைகொண்டு," திருநீற்றின் கோலத்தோடு அரண்மனை வாயிலை அடைந்தார். உடனே குலச்சிறையாரும் மங்கையர்க்கரசியாரும் சுவாமிகளை வரவேற்று அரசனிடம் அழைத்துச் சென்றார்கள். அரசனும் சுவாமிகளைக் கைகூப்பி வணங்கித் தன் தலைப்பக்கத்தில் ஒரு பொற்பீடத்திலிருக்கச் செய்தான். தங்கள் ஊர் எது வென்று சுவாமிகளை அரசன் வினவ, சுவாமிகள் "பிரமனூர் வேணுபுரம்" (பக்கம்-௫௫௫) என்ற பதிகமோதி ஸ்ரீகாழியின் பன்னிரு பெயர்களையும் தெரிவித்தனர்.

சமணர்கள் வாதில்வெல்ல எண்ணி "கோலு நூலெடுத்தோதித் தலை திமிர்ப்பக் குரைத்தார்கள்." சுவாமிகள் "பேசுதிர் நும் பொரு

ளெல்லை யுள்ளவாறு" என்றார். உடனே சமணர்கள் "தள்ளி யெழுந்தனேகாய்ச் சூழ்ந்து பதறிக் கதற", மங்கையர்க்கரசியார் இவ் விளம் பிள்ளையைத் தள்ளியெழும் குண்டர்கள் யாது செய்வார்களோ வென்று அஞ்சினர். இது கண்ட சுவாமிகள் "மானினேர் விழி" (பக்கம் - சஅஅ) என்ற பதிகம் பாடி அரசியாரைத் தேற்றினர். அரச னும் சமணர்களை நோக்கி "வேறுவா தென்கொல் என்மேல் வெப் பொழித்து" "நீங்கள் தேறிய தெய்வத்தன்மை யென்னிடைத் தெரிப் பீரென்றான்." சமணர்கள் அரசனது இடப் பக்கத்துள்ள வெப் பத்தை மந்திரத்தால் நீக்குவதாகக் கூறி, முயன்று தோற்றார்கள். உடனே அரசன் திருஞானசம்பந்தரை நோக்க, சுவாமிகள் இறை வனை நினைந்து "மந்திரமாவது நீறு" (பக்கம்-கூஉக) என்னும் திருப் பதிகத்தைப்பாடித் தமது கையால் மன்னன் வலதுபக்கத்தில் திருநீறு பூசினர். உடனே வலதுபக்கத்திலிருந்த வெப்பம் நீங்கித் தடாகம் போல் குளிர்ந்தது. அவ்வெப்பம் இடதுபக்கம் சென்று இரட்டித் தது. அப்பக்கலில் நின்ற சமணர்களையும் அவர்கள் கையிலிருந்த மயிற்பீலிகளையும் சுட்டது. அரசன் அவர்களை நோக்கி "நீங்கள் தோற்றீர்கள், செல்லுங்கள்" என்றுகூறி, சுவாமிகளை நோக்கி வெப்பு முழுமையும் நீங்குமாறருளவேண்டினன். சுவாமிகளும் மற்றொரு முறை திருநீற்றைத் தடவி அவ்வெப்பு நோயை முழுமையும் போக் கினர். அரசன் சுவாமிகளை வணங்கினன். ஏசற்ற சமணர்கள் தீயில் நீரில் வெல்வ தென்றெண்ணினர்கள். இதையறிந்த சுவாமிகள் "உங்கள் வாய்மை பேசுமின்கள்" என்று வாதுக்கழைத்தார். சமணர் கள் "தருக்கவாதம் வேண்டாம். கண்ணுக்குப் புலனாகும் வாதத்தால் வெல்வோம்" என்றுகூறித் தத்தம் சமயவுண்மையை ஏட்டிலெழுதித் தீயிலிட்டு, பச்சென்றிருக்குமேடு வென்றதாகவும் எரிந்தவடு தோற்ற தாகவும் கொள்வோமென்றார்கள். சுவாமிகளும் இதற்கு உடன்பட் டார்கள். உடனே தமது பதிகங்கள் எழுதப்பெற்ற ஏட்டுப்புத்தகத்தை யெடுத்துக் கயிறுசாற்ற "போகமார்த்த பூண்முலையாள்" (பக்கம்-எக) என்ற திருநள்ளாற்றுப்பதிகம் கிடைத்தது. அவ்வேட்டைக்கையி லெடுத்து நள்ளாறரை நினைந்து வணங்கித் "தளிர்இளவளரொளி...... நள்ளாறர் நாமமே, மிளிர்இளவளர் எரியிடிலிவை பழுதிலை மெய்ம் மையே" (பக்கம்-மிகூச) என்ற பதிகத்தைப்பாடி அனைவரும் காணத்

தீயிலிட்டனர். அவ்வேடு வெந்து எரியாது பச்சையாய் விளங்கிற்று. சமணர்கள் தங்கள் பொருள் வரைந்த ஏட்டை உய்யுமோ என்ற அச்ச மிகுதியோடு தீயிலிட்டார்கள். அது பஞ்சு தீயினிற்பட்டதுபோல் வெந்து சாம்பலாயிற்று. இதைக்கண்ட சமணர்கள் "இருமுறை போதாது, மூன்றாம் முறை வாது செய்தல்வேண்டும்" என்றார்கள். சுவாமிகள் "இனி என்னவாது செய்வது" என்றார். தத்தம் சமய வுண்மைகள் எழுதப்பெற்ற ஏடுகளை ஆற்றில்விட்டால், நீரோட்டத்தோடு ஓடுவது தோற்றது, நிற்பது வென்றது என்றார்கள். சுவாமிகளும் நன்று செய்வோ மென்றனர். இதற்குள் குலச்சிறையார் இம்முறை தோற்றாரை என் செய்வதென்றார். உடனே கோபமும் பொறாமையுங் கொண்ட சமணர்கள் "தங்கள்வாய் சோர்ந்து தாமே தனிவாதி லிழந்தோ மாகில், வெங்கழு வேற்றுவா னிவ்வேந்தனே" யென்று சொன்னார்கள். இதைக் கேட்ட மன்னன் "செற்றத்தாலுரைத் தீருங்கள் செய்கையு மறந்தீரென்று" கூறி வைகை ஆற்றில் ஏடுகளை இடும்படி ஏவினான். சமணர்கள் "அத்தி நாத்தி" என்றெழுதிய ஏட்டை ஆற்றிலிட்டார்கள். உடனே அது ஆற்றோட்டத்தோடு விரைந்து கடலுக்குச் சென்றது. இதைக் கண்ட சமணர்கள் தங்கள் தோல்வியையும் அச்சத்தையும் மறைப்பார் போல் "உங்கள் ஏட்டையும் ஆற்றிலிட்டால் தானே தெரியும்" என்று திருஞானசம்பந்தரைக் கேட்டார்கள். சுவாமிகளும் "வாழ்க அந்தணர்" (பக்கம் - ௩௧௧) என்னும் பதிகத்தை ஒரு ஏட்டி லெழுதிக் கடவுளை நினைந்து ஆற்றிலிட்டார். அவ்வேடு "மருவுறும் பிறவி யாற்றில் மாதவர் மனம் சென்றாற்போல்" எதிர்ந்து நீர்கிழித்துச் சென்றது. அதை யெடுப்பதற்குக் குலச்சிறையார் ஓர் குதிரை மீதேறி விரைந்தோடினார். சுவாமிகள் "வன்னியுமத்தமும்" (பக்கம் - ௪௭௭) என்ற பதிகம் பாடினார். ஓடுகின்ற ஏடு நின்று குலச்சிறையார் கையில் நட்டாற்றிற் கிடைத்தது. அவ்வேடு தங்கிய இடமே திருவேடகமாயிற்று. குலச்சிறையார் அவ்வேட்டைக் கொண்டு வந்து அரசன் முதலானவர்கட்குக் காட்டினார். அரசனும் "முன்னமே பிள்ளையார் பால் அனுசிதம் முற்றச் செய்த" சமணர்களை "அவர்கள் ஒப்புக்கொண்டபடி கழுவி லேற்றி முறை செய்க" என்று மந்திரியாருக்குக் கட்டளையிட்டான். இதைக் கேட்ட திருஞானசம்பந்தர் "இகலில

ரெனினும் சைவரிருந்து வாழ் மடத்திற்றீங்கு, தகவிலாச் சமணர் செய்த தன்மையாற் சாலுமென்றே, மிகையிலாவேந்தன் செய்கை விலக்கிடாதிருந்தார்." மடத்தில் தீவைத்த எண்ணாயிரம் சமணர்களும் கழுவேறினர்கள். திருஞானசம்பந்தர் கொடுக்க வாங்கி மன்னன் திருநீறணிந்தான். "வேந்தனும் ஓங்குக" என்ற அளவில் தன்கூன் நிமிர்ந்தான். நாட்டுள்ளார் அனைவரும் திருநீறிட்டுச் சைவராயினர். திருநீற்றின் விளக்கத்தால் அமணிருள் பாண்டி நாட்டில் மாய்ந்தது.

பிறகு திருஞானசம்பந்தர் பாண்டி நாட்டுத்தலங்களைத் தரிசித்துச் சோழநாடு போந்து பல தலங்கள் சென்று காவிரிக்கரையை யடைந்து எதிரேயுள்ள திருக்கொள்ளம் பூதூர் செல்வதற்கு ஓடமேறி ஓடம் விடுவாரின்றி, "கொட்டமே கமழும்" (பக்கம் - ௪௩௬) என்னும் பதிகம் பாடி ஓடம் தானாகச் செல்ல, அக்கரை சென்று வணங்கிப் பல தலங்களைத் தரிசித்துக்கொண்டு போதி மங்கை என்ற சமணர்கள் வாழுமூருக்கருகில் வந்தார். பரிவாரங்கள் அரன் நாமத்தை முழக்கினர். புத்த நந்தி என்பான் இதைப் பொறாது வெகுண்டு எதிர்த்தான். உடனே சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளும் பதிகங்களை அவ்வப் போது ஏட்டிலெழுதும் அன்பர் (இவர் சுவாமிகளின் நல்லம்மானாகிய சம்பந்த சரணாலயர் என்று கூறுவது வழக்கு) "புத்தர் சமண்கழுக் கையர்" (பக்கம் - ௪௯௩) என்ற பஞ்சாக்கரப் பதிகத்து அமண் பாட்டைப்பாடி இவன் தலையில் இடிவிழுகவென்ற அளவில் இடி விழுந்து புத்தநந்தி இறந்தான். இவ்வன்பரே அங்குள்ள சமணர்களோடு வாதம் செய்தும் வென்றார்.

பிறகு பல தலங்களைத் தரிசித்து அப்பர் சுவாமிகளைக் காண வேண்டி, திருஞானசம்பந்தர் திருப்பூந்துருத்தியை யடைந்தார். அப்பர் சுவாமிகள் ஒருவருங் காணாதபடி முத்துச் சிவிகையைத் தாங்குவோருடன் கலந்து தாங்கினர். சுவாமிகள் அப்பர் எங்கேயென வினவ, அப்பர் சுவாமிகளும் 'தங்கள் சிவிகையைத் தாங்கும் பாக்கியம் பெற்றிங் குற்றேன்' என்றார். உடனே இருவரும் ஒருவரையொருவர் வணங்கி மகிழ்ந்து சில நாள் அங்கேயே தங்கி யிருந்தனர். பாண்டி நாட்டுச் செய்திகளையெல்லாம் அப்பர் சுவாமிகள் திருஞானசம்பந்தரிடம் கேட்டறிந்தார். தாம் தொண்டை நாட்டுத்தலங்களைத்

தரிசித்த செய்தியைத் தெரிவித்தார். பிறகு திருஞானசம்பந்தர் சில தலங்களைத் தரிசித்துத் தொண்டை நாட்டுக்குச் சென்றார்.

திருவோத்தூரில் ஒரு சிவனடியார் வைக்கும் பனைமரங்களெல்லாம் ஆண்பனைகளாகக் காயாதிருப்பதைக்கண்ட அமணர்கள் அவரை இகழ்ந்தார்கள். அவர் திருஞானசம்பந்தரிடம் சென்று வணங்கித் தமக்கருள் புரியுமாறு வேண்டினர். சுவாமிகள் "பூத்தேர்ந்தாயன" (பக்கம் - அஎ) என்ற பதிகம்பாடி ஆண் பனைகளைப் பெண் பனைகளாக்கினர். இதுகண்ட சமணர்கள் நாட்டைவிட்டகன்றனர். பிறகு பல தலங்களைத்தரிசித்துக்கொண்டு சுவாமிகள் திருக்காளத்தி சென்று வணங்கி ஆங்கிருந்தே கயிலாயம், கேதாரம், கோகர்ணம், இந்திர நீல பருப்பதம், பருப்பதம், அநேகதங்காபதம் என்ற தலங்களை நினைந்து பதிகம்பாடி திருவேற்காடு, திருவலிதாயம் என்ற தலங்களை வணங்கித் திருவொற்றியூரடைந்து பதிகம்பாடி ஆங்கே தங்கியிருந்தார்.

திருமயிலாப்பூரில் சிவநேசர் என்ற பெருவணிகர் ஒருவர் இருந்தார். அவருக்குப் பூம்பாவை யென்ற ஒரே பெண் இருந்தாள். மதுரையில் திருஞானசம்பந்தர் சமணரை வென்ற செய்தி முதலியவற்றைக் கேட்ட சிவநேசர் "எனது பெண்ணையும் பொருளையும் திருஞான சம்பந்தருக்கே அர்ப்பணம் செய்தேன்" என்றார். பூம்பாவை கன்னி மாடத்தில் பூக்கொய்யும்போது பாம்பு கடித்திறந்தாள். புகலியர்கோனுக்கர்ப்பணம் செய்யப்பெற்ற கன்னிகையை அன்னரிடமே ஒப்புவிக்க வேண்டுமெனக் கருதிப் பூம்பாவைக்கு ஈமக்கடன் முடித்து எலும்புகளையும் சாம்பலையும் ஒரு குடத்திலடைத்துக் கன்னிமாடத்தில் வைத்துப் பூசித்துத் திருஞானசம்பந்தர் வருகையைச் சிவநேசர் எதிர்நோக்கியிருந்தார். சுவாமிகள் திருவொற்றியூரடைந்ததைத் தெரிந்து "திருவொற்றியூரளவுந் துன்னுநீள் நடைக்காவணந் துகில் விதானித்து" இன்னம் பலவகையில் ஊரை அலங்கரித்துத் திருஞானசம்பந்தரைச் சிவநேசர் அழைத்துவந்தார். திருமயிலாப்பூரையடைந்து சுவாமிகள் திருக்கோயிலை வணங்கி இறைவன் திருமுன்பு நின்று என்புக் குடத்தைத் திருமதிற்புறவாயிலில்கொண்டு வருமாறு சிவநேசருக்குக் கட்டளையிட்டார். குடமும் அவ்வாறே கொண்டுவந்து வைக்கப்பட்டது. உடனே திருஞானசம்பந்தர் இறைவன் திருவருளை நினைந்து "மட்டிட்டபுன்னை" (பக்கம்-உகடு) என்னும் பதிகத்தைப்பாடத்

தொடங்கினர். அப்பதிகத்தில் "போதியோவென்னும், அன்னமெய்த் திருவாக்கெனும் அமுதம் அவ்வங்கம், துன்னவந்து வந்துருவமாய்த் தொக்கதக்குடத்துள்." சுவாமிகள் சமண்பாட்டைப் பாடும்போது "கோற்றொடிச் செங்கை தோன்றிடக்குடமுடைந்து" எழுந்தாள் அங்கம்பூம்பாவை. பின்னர் சுவாமிகள் திருக்கடைக்காப்பையும் பாடியருளினர். இவ்வதிசயத்தைக் கண்டோரனைவரும் இறைவன் திருவருளைவியந்தனர். புறச்சமயத்தினர் கண்டு நடுங்கினர். தமக்கென்றே அர்ப்பணஞ் செய்யப்பெற்ற பூம்பாவையை மணந்துகொள்ளுமாறு திருஞானசம்பந்தரைச் சிவநேசர் வேண்டினர். "மற்றவர் தமக்கு வண்புகலி வாணர் நீர், பெற்ற பெண்விடத்தினால் வீந்த பின்னையான் கற்றைவார் சடையவர் கருணை காண்வர, உற்பவித்தலாலுரை தகாதென" மொழிந்தார். "அவ்வாறாயின் தங்களுக்கென்றர்ப்பணஞ் செய்த பாவையை மற்றெவர்க்கும் மணஞ்செய்விக்கேன்" என்று அங்கம் பூம்பாவையைக் கன்னிமாடத்திலேயே அமர்த்தினர் அவர்தந்தை. பூம்பாவையும் சிவத்தை மேவினாள்.

திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் திருமயிலாப்பூரிலிருந்து திருவான்மியூர் முதலிய பல தலங்களைத் தரிசித்துக்கொண்டு சீகாழியையடைந்தார். ஆங்கு சிவபாத இருதயரும் அவர் உறவினரும் திருஞானசம்பந்தருக்குத் திருமணம் முடிக்க வேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்தார்கள். சுவாமிகள் இசையாது மறுத்தார். மீண்டும் அவர்கள் "வேதநெறியை நிலைநாட்டவந்த தேவரீர் வேள்விக்குத் துணைபுரியும் பொருட்டு ஒரு கன்னிகையை மணந்தருளவேண்டும்" என்று பணிவுடன் வேண்டினர். சுவாமிகள் அவ்வேண்டுகோளுக் கிணங்கினர். திருநல்லூர்ப் பெருமணத்தில் (இதுவே ஆச்சாபுரம்) வாழும் நம்பாண்டார் நம்பியின் திருமகளைப் பேசி முடித்துத் திருமணத்துக்குரிய ஏற்பாடுகளையும் அவ்வூரிலேயே செய்து முடித்தார்கள். திருநீலநக்க நாயனர் வேதவிதிப்படி திருமணவினைச் சடங்குகளைச் செய்தனர். மங்கல வாழ்த்தொலி முழங்கத் திருஞானசம்பந்தர் காதலியைக் கைப்பற்றினர். அக்கினியை வலம்வரும்போது அக்கினியாவார் சிவபெருமானே என்றெண்ணி, "இந்த இல்லொழுக்கம்வந்து சூழ்ந்ததே இவள் தன்னோடும், அந்தமில் சிவன்தாள் சேர்வன் என்னும் ஆதரவுபொங்க" சுற்றத்தாரும் தொண்டர்குழாங்களும் புடைசூழத்திருக்கோயிலையடைந்

தார். "கல்லூர்ப் பெருமணம்" (பக்கம் - சுஉ௩) என்ற பதிகத்தை ஓதினர். உடனே சிவபெருமான் "காதலியும் நீவிரும் திருமணங்காண வந்தாரனைவரும் நம்பாற் சோதியிற் கலமின்" என்று திருவருள் செய்து திருக்கோயில் முழுமையும் அனைவரும் செல்லும் வரை சோதிமயமாக்கி அதில் ஒரு வழியையும் வகுத்தருளினர். சுவாமிகள் "காதலாகிக் கசிந்து" (பக்கம் - ௫0௩) என்ற நமச்சிவாயப் பதிகத்தை யோதி அனைவரையும் சோதியுட் செல்லும்படி கட்டளையிட்டார். உடனே திருநீலநக்கர், திருநீலகண்ட யாழ்ப்பாணர், முருகநாயனர், சிவபாத விருதயர், நம்பாண்டார் நம்பி முதலிய அனைவரும் சோதியிற் கலந்தார்கள். எல்லாரும் புகுந்த பின்னர், வைகாசிமூல நன்னளிலே,

"காதலியைக் கைப்பற்றிக் கொண்டு வலங்கொண்டருளித்
தீதகற்ற வந்தருளும் திருஞான சம்பந்தர்
நாதனெழில் வளர்சோதி நண்ணி யதனுட் புகுவார்
போதநிலை முடிந்தவழிப் புக்கொன்றி யுடனனர்."

திருச்சிற்றம்பலம்

"காழிநகர்ச் சிவபாத விதயர் தந்த
கவுணியர்கோன் அமுதுமையாள் கருதி யூட்டும்
எழிசையின் அமுதுண்டு தாளம் வாங்கி
இலங்கியசித் திலச்சிவிகை இசைய வேறி
வாழுமுய லகனகற்றிப் பந்த ரேய்ந்து
வளர்கிழிபெற் றரவின்விடம் மருகல் தீர்த்து
வீழிநகர்க் காசெய்தி மறைக்கதவம் பிணித்து
மீனவன்மே னியின்வெப்பு விடுவித் தாரே"

"ஆரெரியிட் டெடுத்தவே டவைமுன் னேற்றி
ஆற்றிலிடும் ஏடெதிர்போ யணைய வேற்றி
ஓரமண ரொழியாமே கழுவி லேற்றி
ஓதுதிருப் பதிகத்தால் ஓட மேற்றிக்
காருதவும் இடிபுத்தன் தலையி லேற்றிக்
காயாத பனையின்முது கனிக ளேற்றி
ஈரமிலா அங்கமுயி ரெய்த வேற்றி
இலங்குபெரு மணத்தானை யெய்தி னரே"

திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகளைப்பற்றிய

சில குறிப்புகள்

(க) சுவாமிகள் திருப்பெயர்கள்:—(1) பிறந்த ஊர்பற்றிக் காழி மன்னன், புகலியர்கோன், வெங்குருவேந்தன், தோணிபுரத் தோன்றல் முதலியனவும் (2) கோத்திரம்பற்றிக் கவுணியர்தங்குலதீபம் முதலியனவும் (3) ஞானப்பாலுண்டமைபற்றித் திருஞானசம்பந்தர், ஞானபோனகர், பாலறுவாயர் முதலியனவும் (4) பார்வதிதேவியார் குழந்தைக்குப்பால்தந்தமையாலும் சிவபெருமான் குமாரனாக எண்ணிப்பல திருவருள்கள் புரிந்தமையாலும் ஆளுடைய பிள்ளையார், புரமெரித்தார் திருமகனார், தெய்வஞானக்கன்று முதலியனவும் (5) புறச்சமயிகளை வென்றமையால் பரசமயகோளரி முதலியனவும் (6) மறைநெறிச் சைவத்தை நிலைநாட்டினமையால் மாமறைச்சிறுவர், சைவமைந்தர் முதலியனவும் (7) செந்தமிழ் மறையோதினமையால் முத்தமிழ் விரகர் முதலியனவும் பிறவும் திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகளின் சிறப்புப் பெயர்களாகும்.

(உ) சுவாமிகள் காலம் :—பல கல்வெட்டு முதலிய சரித்திரச் சான்றுகளின் துணைகொண்டு சுவாமிகளின் காலம் கி. பி. ஏழாம் நூற்றாண்டின் முற்பாதி (கி. பி. 601—650)யிலுள்ளதென ஆராய்ச்சியாளர்கள் முடிவு கூறுகின்றனர்.

(ங) சுவாமிகள் வயது :—ஈரமிலா அங்கமுயிர் எய்தவேற்றிய இறைவன் கருணையை சுவாமிகள் வியந்ததை "புண்ணியப்பதினாறுண்டபேர்பெறும் புகலிவேந்தர், கண்ணுதல் கருணைவெள்ளம் ஆயிர முகத்தாற் கண்டார்" எனச்சேக்கிழார் கூறுகிறார். அங்கம்பூம்பாவை அற்புதம் நிகழ்ந்தவுடன் சுவாமிகள் சோழிசென்று திருமணம் புரிந்து கொண்டு சோதியிற் கலந்ததே நிகழ்ந்ததால் சுவாமிகளின் வயது பதினாறென்றே துணியப்படும்.

(ச) சுவாமிகள் தேவாரத் தொகை :—இது பதினாறாயிரம் பதிகமென நம்பியாண்டார் நம்பி கூறுகின்றார். இப்போதுள்ளவை

(சமீபத்தில் கல்வெட்டொன்றிற் காணப்பட்ட திருவிடைவாய்ப் பதிகத்தையும் சேர்த்து, ௩௮௪.

(௫) சுவாமிகள் தேவாரத்திற் கூறியுள்ள செம்பொருள்:— சைவசித்தாந்த சமயத்திலுள்ள சிறந்த கொள்கைகளனைத்தையும் சுவாமிகள் தேவாரத்திற் காணலாகும். விரிக்கில் மிகப்பெருகும். சுருங்கக்கூறின், புறக்கண் கொண்டு நோக்குவார்க்குப் பல சரிதச் சான்றுகள், இயற்கைவனப்பு, இசைநுட்பம், நாட்டின் நிலை, மக்கள் நிலை, பழக்க ஒழுக்கங்கள், செய்யுள் நயம், அகத்துறைப்பாடலினிமை முதலிய பொருள்களும் அகக்கண் கொண்டு நோக்குவார்க்கு இறைவன் திருவருள் நெறியென்ற செம்பொருளும் காணப்படும்.

(௬) சுவாமிகள் அவதாரபுருஷரா?:— முருகப்பெருமான் திருவவதாரமாகத் திருஞானசம்பந்தரைக் கொள்வது ஒருவகை வழக்கு. அருணகிரிநாதர் பாடல்கள் பல இவ்வழக்கை விளக்குகின்றன. "பெம்மான் முருகன் பிறவான் இறவான்" என்ற உண்மைச் சைவக்கொள்கையுடையோர் திருமால் பத்து அவதாரங்களைப்போல் முருகன் அவதரித்ததாக ஒப்புக்கொள்ளார்; உபசாரமாகவே சொல்வர்.

(௭) சுவாமிகள் காலத்தும் முன்னும் இருந்த நாயன்மார்கள்: அறுபத்து மூன்று நாயன் மார்களுள் சண்டீசர், கண்ணப்பர், நமி நந்தியடிகள், கோச்செங்கட்சோழர், தண்டியடிகள், புகழ்த்துணையார், முருக நாயனர், சிறுத் தொண்டர், நீல நக்கர், மங்கையர்க் கரசியார், குலச்சிறையார், திருநீல கண்ட யாழ்ப்பாணர் ஆகிய பன்னிருவரைப் பற்றித் தமது தேவாரத்திலேயே சுவாமிகள் பாடியுள்ளார்கள். இவர்களுள் பின்னர் கூறப்பட்ட அறுவரும் சுவாமிகளைக் கண்டு அவரோடிருந்து அளவளாவிய சீலர்கள், இவ்வறுவரே யன்றித் திருநாவுக்கரசு சுவாமிகளும், குங்கிலியக்கலயரும், நின்றசீர் நெடுமாறனும் சுவாமிகளைக் கண்டு இன்புற்றவர்களாவார்.

(௮) சுவாமிகள் சமய குரவராவார்:— சுவாமிகள் பாண்டி நாட்டில் சமணரைவென்று சைவத்தை நிலை நாட்டாவிடில் "நீறெங்கே மாமறை நூல் தானெங்கே எந்தைபிரான் ஐந்தெழுத் தெங்கே" என்ற வினக்களுக்கு இல்லை யென்ற விடையே பகரவேண்டி யிருக்கும். எனவே சுவாமிகள் நம் சமயத்துக்குக் காலத்தாற் செய்த உதவி

ஞாலத்தின் மாணப்பெரிதே யாகும். மேலும் சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய தேவாரத்தில் சைவ சமயக் கொள்கை நுட்பங்களை யெல்லாம் ஒருங்கே காணலாகும். ஆகையால் சுவாமிகளை சைவ சமயாசாரியர்கள் நால்வரில் ஒருவராகக் கொள்வது ஆன்றோர் முடிபு.

(கூ) சுவாமிகள் நால்வருள் யாவர்?:—சைவ சமயத்தில் இறைவன் திருவருளை யடைவதற்கு நான்கு சாதனங்கள் கூறப்பட்டுள்ளன. அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பனவாகும். இவற்றையே தாச மார்க்கம், சத்புத்ர மார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் என்பர் வடமொழியாளர். இவற்றுள் திருஞானசம்பந்தர் கிரியையென்ற சத்புத்ர மார்க்கத்தை வற்புறுத்தும் சமய குரவர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்ற ஏனைய மூன்று சமய குரவரும் முறையே சரியை, யோகம், ஞானம் என்ற சாதனங்களை வற்புறுத்தும் சிறப்பினர் என்பது திருமுறை ஆராய்ச்சி யாளர் துணிபு.

(௧௦) சுவாமிகள் வரலாறுகளும் புகழ்மாலைகளும்:— திருநாவுக்கரசர், சுந்தரர் தேவாரங்களில் சில குறிப்புக்களும், நம்பி யாண்டார் நம்பிகளியற்றிய புகழ்மாலைகளும் புராண சாரமும், சேக்கிழார் இயற்றிய பெரிய புராணமும், பிற்காலத்தவர் இயற்றிய பிள்ளைத் தமிழ் முதலிய பலவும் சுவாமிகளைப்பற்றிய வரலாறுகளும் புகழ்மாலைகளுமாகும். சில ஆண்டுகளுக்கு முன்னர் திரு. கா. சுப்பிரமணியம் பிள்ளை யவர்களியற்றிய சரித்திரமும், திரு. சே. சிவஞானம் பிள்ளையவர்களியற்றிய சரித்திரமும் ஆராய்ச்சிக் குறிப்புகள் பலவும் மிகச் செவ்வையாக எழுதப்பட்டனவாகும்.

நால்வர் திருநக்ஷத்திரம்

சித்திரைச் சதயமப்பர் சிறந்தவை காசிமூலம்
அத்தரைப் பணிசம்பந்த ரானிமா மகத்திலந்த
முத்தமிழ் வாதவூரர் முதியநல் லாடிதன்னிற்
சுத்தமாஞ் சோதிநாளிற் சுந்தரர் கயிலைசேர்ந்தார்.

குறிப்பு:—இச்சரிதமும் குறிப்புகளும் சைவசித்தாந்த மகா சமாஜகாரியதரிசியும், "சித்தாந்தம்" பத்திராசிரியரும், சென்னை உயர்தர நீதிமன்ற வழக்கறிஞருமாகிய திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார், பி. ஏ. பி. எல். அவர்களால் எழுதப் பெற்றன.

பதிக அட்டவணை

முதல் திருமுறை

பதிகப் பெயர்.	பக்கம்.

இரண்டாந் திருமுறை

பதிகப் பெயர்.	பக்கம்.

பண் - சீகாமரம்

பண் - காந்தாரம்

மூன்றுந் திருமுறை

நால்வர் வயது

அப்பருக்கெண் பத்தோன் றருள்வாத வூரார்க்குச்
செப்பியநா லெட்டினிற் றெய்வீக—மிப்புவியிற்
சுந்தரர்க்கு மூவாறு தொன்ஞான சம்பந்தர்க்
கந்தம் பதினா றறி.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள்

அருளிச்செய்த

தேவாரப் பதிகங்கள்

முதல் திருமுறை

திருப்பிரமபுரம் - பண் - நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

தோடுடையசெவி யன்விடையேறியோர் தூவெண்மதிசூடிக்
காடுடையசுட லைப்பொடிபூசியென் உள்ளங்கவர்கள்வன்
ஏடுடையமல ரான்முனைநாட்பணிந் தேத்தஅருள்செய்த
பீடுடையபிர மாபுரம்மேவிய பெம்மானிவனன்றே. க

முற்றலாமையிள நாகமோடேன முளைக்கொம்பவைபூண்டு
வற்றலோடுகல னப்பலிதேர்ந்தென துள்ளங்கவர்கள்வன்
கற்றல்கேட்டலுடை யார்பெரியார்கழல் கையால்தொழுதேத்தப்
பெற்றம்ஊர்ந்தபிர மாபுரம்மேவிய பெம்மானிவனன்றே. உ

நீர்பரந்தநிமிர் புன்சடைமேலோர் நிலாவெண்மதிசூடி
ஏர்பரந்தஇன வெள்வளைசோரஎன் உள்ளங்கவர்கள்வன்
ஊர்பரந்தவுல கின்முதலாகிய ஓரூரிதுவென்னப்
பேர்பரந்தபிர மாபுரம்மேவிய பெம்மானிவனன்றே. ௩

விண்மகிழ்ந்தமதி லெய்ததுமன்றி விளங்குதலையோட்டில்
உண்மகிழ்ந்துபலி தேரியவந்தென துள்ளங்கவர்கள்வன்

மண்மகிழ்ந்தஅர வம்மலர்க்கொன்றை மலிந்தவரைமார்பிற்
பெண்மகிழ்ந்தபிர மாபுரம்மேவிய பெம்மானிவனன்றே. ௪

ஒருமைபெண்மையுடை யன்சடையன்விடை யூரும்இவனென்ன
அருமையாகவுரை செய்யஅமர்ந்தென துள்ளங்கவர்கள்வன்
கருமைபெற்றகடல் கொள்ளமிதந்ததோர் காலம்இதுவென்னப்
பெருமைபெற்றபிர மாபுரம்மேவிய பெம்மானிவனன்றே. ௫

மறைகலந்தஒலி பாடலோடாடல ராகிமழுவேந்தி
இறைகலந்தஇன வெள்வளைசோரஎன் உள்ளங்கவர்கள்வன்
கறைகலந்தகடி யார்பொழில்நீடுயர் சோலைக்கதிர்சிந்தப்
பிறைகலந்தபிர மாபுரம்மேவிய பெம்மானிவனன்றே. ௬

சடைமுயங்குபுன லன்அனலன்எரி வீசிச்சதிர்வெய்த
உடைமுயங்கும்அர வோடுழிதந்தென துள்ளங்கவர்கள்வன்
கடல்முயங்குகழி சூழ்குளிர்கானல்அம் பொன்னஞ்சிறகன்னம்
பெடைமுயங்குபிர மாபுரம்மேவிய பெம்மானிவனன்றே. ௭

வியரிலங்குவரை யுந்தியதோள்களை வீரம்விளைவித்த
உயரிலங்கையரை யன்வலிசெற்றென துள்ளங்கவர்கள்வன்
துயரிலங்கும்உல கிற்பலஊழிகள் தோன்றும்பொழுதெல்லாம்
பெயரிலங்குபிர மாபுரம்மேவிய பெம்மானிவனன்றே. ௮

தாணுதல்செய்திறை காணியமாலொடு தண்டாமரையானும்
நீணுதல்செய்தொழி யந்நிமிர்ந்தானென துள்ளங்கவர்கள்வன்
வாணுதல்செய்மக ளீர்முதலாகிய வையத்தவரேத்தப்
பேணுதல்செய்பிர மாபுரம்மேவிய பெம்மானிவனன்றே. ௯

புத்தரோடுபொறி யில்சமணும்புறங் கூறநெறிநில்லா
ஒத்தசொல்லஉல கம்பலிதேர்ந்தென துள்ளங்கவர்கள்வன்
மத்தயானைமறு கவ்வுரிபோர்த்ததோர் மாயம்இதுவென்னப்
பித்தர்போலும்பிர மாபுரம்மேவிய பெம்மானிவனன்றே. ௧௦

அருநெறியமறை வல்லமுனியகன் பொய்கையலர்மேய
பெருநெறியபிர மாபுரம்மேவிய பெம்மானிவன்றன்னை
ஒருநெறியமனம் வைத்துணர்ஞானசம் பந்தன்உரைசெய்த
திருநெறியதமிழ் வல்லவர்தொல்வினை தீர்தல்எளிதாமே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருப்புகலூர் - பண் - நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

குறிகலந்தஇசை பாடலினான்நசை யாலிவ்வுலகெல்லாம்
நெறிகலந்ததொரு நீர்மையனாயெரு தேறிப்பலிபேணி
முறிகலந்ததொரு தோலரைமேலுடை யானிடம்மொய்ம்மலரின்
பொறிகலந்தபொழில் சூழ்ந்தயலேபுய லாரும்புகலூரே. க

காதிலங்குகுழை யன்இழைசேர்திரு மார்பன்ஒருபாகம்
மாதிலங்குதிரு மேனியினான்கரு மானின்உரியாடை
மீதிலங்கஅணிந் தானிமையோர்தொழ மேவும்இடஞ்சோலைப்
போதிலங்குநசை யால்வரிவண்டிசை பாடும்புகலூரே. உ

பண்ணிலாவும்மறை பாடலினானிறை சேரும்வளையங்கைப்
பெண்ணிலாவவுடை யான்பெரியார்கழ லென்றுந்தொழுதேத்த
உள்நிலாவியவர் சிந்தையுள்நீங்கா வொருவன்னிடமென்பர்
மண்ணிலாவும்அடி யார்குடிமைத்தொழில் மல்கும்புகலூரே. ௩

நீரின்மல்குசடை யன்விடையன்அடை யார்தம்அரண்மூன்றுஞ்
சீரின்மல்குமலை யேசிலையாகமு னிந்தானுலகுய்யக்
காரின்மல்குகடல் நஞ்சமதுண்ட கடவுள்ளிடமென்பர்
ஊரின்மல்கிவளர் செம்மையினாலுயர் வெய்தும்புகலூரே. ௪

செய்யமேனிவெளி யபொடிப்பூசுவர் சேரும்அடியார்மேல்
பையநின்றவினை பாற்றுவர்போற்றிசைத் தென்றும்பணிவாரை
மெய்யநின்றபெரு மானுறையும்மிட மென்பாருள்பேணிப்
பொய்யிலாதமனத் தார்பிரியாதுபொ ருந்தும்புகலூரே. ரு

கழலினோசைசிலம் பின்னொலியோசை கலிக்கப்பயில்கானில்
குழலினோசைகுறட் பாரிடம்போற்றக் குனித்தாரிடமென்பர்
விழவினோசையடி யார்மிடைவுற்று விரும்பிப்பொலிந்தெங்கும்
முழவினோசைமுந் நீரயர்வெய்த முழங்கும்புகலூரே. சா

வெள்ளமார்ந்துமிளிர் செஞ்சடைதன்மேல் விளங்கும்மதிசூடி
உள்ளமார்ந்தஅடி யார்தொழுதேத்த வுகக்கும்அருள்தந்தெம்
கள்ளமார்ந்தகழி யப்பழிதீர்த்த கடவுள்ளிடமென்பர்
புள்ளையார்ந்தவய லின்விளைவால்வளம் மல்கும்புகலூரே. எ

தென்னிலங்கையரை யன்வரைபற்றி யெடுத்தான்முடிதிண்தோள்
தன்னிலங்குவிர லால்நெரிவித்திசை கேட்டன்றருள்செய்த
மின்னிலங்குசடை யான்மடமாதொடு மேவும்இடமென்பர்
பொன்னிலங்குமணி மாளிகைமேல்மதி தோயும்புகலூரே. அ

நாகம்வைத்தமுடி யானடிகைதொழு தேத்தும்அடியார்கள்
ஆகம்வைத்தபெரு மான்பிரமன்னொடு மாலுந்தொழுதேத்த
ஏகம்வைத்தஎரி யாய்மிகவோங்கிய எம்மானிடம்போலும்
போகம்வைத்தபொழி லின்நிழலான்மதி வாரும்புகலூரே. கூ

செய்தவத்தர்மிகு தேரர்கள்சாக்கியர் செப்பிற்பொருளல்லாக்
கைதவத்தர்மொழி யைத்தவிர்வார்கள் கடவுள்ளிடம்போலும்
கொய்துபத்தர்மல ரும்புனலுங்கொடு தூவித்துதிசெய்து
மெய்தவத்தின்முயல் வாருயர்வானக மெய்தும்புகலூரே. க0

புற்றில்வாழும்அர வம்அரையார்த்தவன் மேவும்புகலூரைக்
கற்றுநல்லவர் காழியுள்ஞானசம் பந்தன்தமிழ்மாலை
பற்றியென்றும்இசை பாடியமாந்தர் பரமன்அடிசேர்ந்து
குற்றமின்றிக்குறை பாடொழியாப்புக ழோங்கிப்பொலிவாரே. கக

திருச்சிற்றம்பலம்

திருவலிதாயம் - பண் - நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

பத்தரோடுபல ரும்பொலியம்மலர் அங்கைப்புனல்தூவி
ஒத்தசொல்லியுல கத்தவர்தாந்தொழு தேத்தஉயர்சென்னி
மத்தம்வைத்தபெரு மான்பிரியாதுறை கின்றவலிதாயம்
சித்தம்வைத்தஅடி யாரவர்மேலடை யாமற்றிடர்நோயே. க

படையிலங்குகரம் எட்டுடையான்படி றாகக்கனலேந்திக்
கடையிலங்குமனை யிற்பலிகொண்டுணுங் கள்வன்உறைகோயில்
மடையிலங்குபொழி லின்நிழல்வாய்மது வீசும்வலிதாயம்
அடையநின்றஅடி யார்க்கடையாவினை அல்லல்துயர்தானே. உ

ஐயனொய்யன்அணி யன்பிணியில்லவ ரென்றுந்தொழுதேத்தச்
செய்யன்வெய்யபடை யேந்தவல்லான்திரு மாதோடுறைகோயில்

வையம்வந்துபணி யப்பிணிதீர்த்துயர் கின்றவலிதாயம்
உய்யும்வண்ணம்நினை மின்நினைந்தால்வினை தீரும்நலமாமே. ரு

ஒற்றைஏறதுடை யான்நடமாடியோர் பூதப்படைசூழப்
புற்றில்நாகம்அரை யார்த்துழல்கின்றஎம் பெம்மான்மடவாளோ
டுற்றகோயிலுல கத்தொளிமல்கிட உள்கும்வலிதாயம்
பற்றிவாழும்அது வேசரணாவது பாடும்அடியார்க்கே. சு

புந்தியொன்றிநினை வார்வினையாயின தீரப்பொருளாய
அந்தியன்னதொரு பேரொளியான்அமர் கோயில்அயலெங்கும்
மந்திவந்துகடு வன்னொடுங்கூடி வணங்கும்வலிதாயஞ்
சிந்தியாதஅவர் தம்மடும்வெந்துயர் தீர்தலெளிதன்றே. ரு

ஊனியன்றதலை யிற்பலிகொண்டுல கத்துள்ளவரேத்தக்
கானியன்றகரி யின்னுரிபோர்த்துழல் கள்வன்சடைதன்மேல்
வானியன்றபிறை வைத்தஎம்மாதி மகிழும்வலிதாயம்
தேனியன்றநறு மாமலர்கொண்டுநின் றேத்தத்தெளிவாமே. சு

கண்நிறைந்தவிழி யின்அழலால்வரு காமன்உயிர்வீட்டிப்
பெண்நிறைந்தவொரு பால்மகிழ்வெய்திய பெம்மானுறைகோயில்
மண்நிறைந்தபுகழ் கொண்டடியார்கள் வணங்கும்வலிதாயத்
துள்நிறைந்தபெரு மான்கழலேத்தநம் உண்மைக்கதியாமே. எ

கடலில்நஞ்சமமு துண்டிமையோர்தொழு தேத்தநடமாடி
அடலிலங்கையரை யன்வலிசெற்றருள் அம்மானமர்கோயில்
மடலிலங்குகமு கின்பலவின்மது விம்மும்வலிதாயம்
உடலிலங்கும்உயி ருள்ளளவுந்தொழ உள்ளத்துயர்போமே. அ

பெரியமேருவரை யேசிலையாமலை வுற்றாரெயில்மூன்றும்
எரியஎய்தவொரு வன்இருவர்க்கறி வொண்ணாவடிவாகும்
எரியதாகியுற வோங்கியவன்வலி தாயந்தொழுதேத்த
உரியராகவுடை யார்பெரியாரென உள்கும்உலகோரே. கூ

ஆசியாரமொழி யாரமண்சாக்கிய ரல்லாதவர்கூடி
ஏசியீரமில ராய்மொழிசெய்தவர் சொல்லைப்பொருளென்னேல்
வாசிதீரஅடி யார்க்கருள்செய்து வளர்ந்தான்வலிதாயம்
பேசும்ஆர்வமுடை யாரடியாரெனப் பேணும்பெரியோரே. ௧0

வண்டுவைகும்மணம் மல்கியசோலை வளரும்வலிதாயத்
தண்டவாணனடி யுள்குதலாலருள் மாலைத்தமிழாகக்
கண்டல்வைகுகடற் காழியுள்ஞானசம் பந்தன்தமிழ்பத்துங்
கொண்டுவைகியிசை பாடவல்லார்குளிர் வானத்துயர்வாரே. கக

திருச்சிற்றம்பலம்

இவ்வூர் தொண்டைநாட்டில் பாடியென வழங்கப்படுகிறது.

திருப்புகலியும் திருவீழிமிழலையும் - பண் - நட்டபாடை

வினவுரை

திருச்சிற்றம்பலம்

மைம்மரு பூங்குழல் கற்றைதுற்ற வாள்நுதல் மான்விழி மங்கையோடும், பொய்ம்மொழி யாமறை யோர்களேத்தப் புகலி நிலாவிய புண்ணியனே, எம்மிறை யேயிமை யாதமுக்கண் ஈசஎன் நேசஇதென்கொல்சொல்லாய், மெய்ம்மொழி நான்மறை யோர்மிழலை விண்ணிழி கோயில் விரும்பியதே. க

கழல்மல்கு பந்தொடம் மானைமுற்றில் கற்றவர் சிற்றிடைக் கன்னிமார்கள், பொழில்மல்கு கிள்ளையைச் சொற்பயிற்றும் புகலி நிலாவிய புண்ணியனே, எழில்மல ரோன்சிர மேந்திஉண்டோர் இன்புறு செல்வமி தென்கொல்சொல்லாய், மிழலையுள் வேதிய ரேத்திவாழ்த்த விண்ணிழி கோயில் விரும்பியதே. உ

கன்னிய ராடல் கலந்திமிக்க கந்துக வாடை கலந்துதுங்கப், பொன்னியல் மாடம் நெருங்குசெல்வப் புகலி நிலாவிய புண்ணியனே, இன்னிசை யாழ்மொழி யாளோர்பாகத் தெம்மிறை யேயிது என்கொல்சொல்லாய், மின்னியல் நுண்ணிடை யார்மிழலை விண்ணிழி கோயில் விரும்பியதே. ௩

நாகப ணந்திக ழல்குல்மல்கு நல்நுதல் மான்விழி மங்கையோடும், பூகவ னம்பொழில் சூழ்ந்தஅந்தண் புகலி நிலாவிய புண்ணியனே, ஏகபெ ருந்தகை யாயபெம்மான் எம்மிறை யேயிது என்கொல்சொல்லாய், மேகமு ரிஞ்செயில் சூழ்மிழலை விண்ணிழி கோயில் விரும்பியதே. ச

சந்தள றேறுத டங்கொள்கொங்கைத் தையலொ டுந்தள ராத வாய்மைப், புந்தியி னூல்மறை யோர்களேத்தும் புகலி நிலாவிய புண்ணியனே, எந்தமை யாளுடை யீசஎம்மான் எம்மிறை யேயிது என்கொல்சொல்லாய், வெந்தவெண் நீறணி வார்மிழலை விண்ணிழி கோயில் விரும்பியதே. ரு

சங்கொளி யிப்பி சுறுமகரந் தாங்கி நிரந்து தரங்கம்மேன்மேற், பொங்கொலி நீர்சுமந் தோங்குசெம்மைப் புகலி நிலாவிய புண்ணியனே, எங்கள்பி ரானிமை யோர்கள்பெம்மான் எம்மிறை யேயிது என்கொல்சொல்லாய், வெங்கதிர் தோய்பொழில் சூழ்மிழலை விண்ணிழி கோயில் விரும்பியதே. சு

காமனெ ரிப்பிழம் பாகநோக்கிக் காம்பன தோளியொ டுங்கலந்து, பூமரு நான்முகன் போல்வரேத்தப் புகலி நிலாவிய புண்ணியனே, ஈமவ னத்தெரி ஆட்டுகந்த எம்பெரு மானிது என்கொல்சொல்லாய், வீமரு தண்பொழில் சூழ்மிழலை விண்ணிழி கோயில் விரும்பியதே. எ

இலங்கையர் வேந்தெழில் வாய்த்ததிண்டோ ளிற்றல றவ்விரலொற்றியைந்து, புலங்களைக் கட்டவர் போற்றஅந்தண் புகலி நிலாவிய புண்ணியனே, இலங்கெரி யேந்திநின் றெல்லியாடும் எம்மிறை யேயிது என்கொல்சொல்லாய், விலங்கலொண் மாளிகை சூழ்மிழலை விண்ணிழி கோயில் விரும்பியதே. அ

செறிமுள ரித்தவி சேறியாறுஞ் செற்றதில் வீற்றிருந் தானும் மற்றைப், பொறியர வத்தணை யானுங்காணுப் புகலி நிலாவிய புண்ணியனே, எறிமழு வோடிள மான்கையின்றி யிருந்தபி ரானிது என்கொல்சொல்லாய், வெறிகமழ் பூம்பொழில் சூழ்மிழலை விண்ணிழி கோயில் விரும்பியதே. கூ

பத்தர் கணம்பணிந் தேத்தவாய்த்த பான்மைய தன்றியும் பல்சமணும், புத்தரும் நின்றலர் தூற்றஅந்தண் புகலி நிலாவிய புண்ணியனே, எத்தவத் தோர்க்குமி லக்காய்நின்ற எம்பெரு மானிது என்கொல்சொல்லாய், வித்தகர் வாழ்பொழில் சூழ்மிழலை விண்ணிழி கோயில் விரும்பியதே. க0

விண்ணிழி கோயில் விரும்பிமேவும் வித்தக மென்கொலி தென்று சொல்லிப், புண்ணிய னைப்புக லிங்கிலாவு பூங்கொடி யோடிருந் தானைப் போற்றி, நண்ணிய கீர்த்தி நலங்கொள்கேள்வி நான்மறை ஞானசம் பந்தன்சொன்ன, பண்ணியல் பாடல்வல் லார்களிந்தப் பாரொடு விண் பரி பாலகரே. கக

திருச்சிற்றம்பலம்

கீழைத்திருக்காட்டுப்பள்ளி - பண் - நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

செய்யரு கேபுனல் பாயவோங்கிச் செங்கயல் பாயச் சிலமலர்த் தேன், கையரு கேகனி வாழையீன்று கானலெல் லாங்கமழ் காட்டுப் பள்ளிப், பையரு கேயழல் வாயவைவாய்ப் பாம்பணை யான்பணைத் தோளிபாகம், மெய்யரு கேயுடை யானையுள்கி விண்டவ ரேறுவர் மேலுலகே. க,உ

திரைகளெல் லாமல ருஞ்சுமந்து செழுமணி முத்தொடு பொன் வான்றிக், கரைகளெல் லாமணி சேர்ந்திரிஞ்சிக் காவிரி கால்பொரு காட்டுப்பள்ளி, உரைகளெல் லாமுணர் வெய்திநல்ல வுத்தம ராயுயர்ந் தாருலகில், அரவமெல் லாம்அரை யார்த்தசெல்வர்க் காட்செய அல்லல் அறுக்கலாமே. ௩

தோலுடை யான்வண்ணப் போர்வையினான் சுண்ணவெண் ணீற தணைந்திலங்கு, நூலுடை யானிமை யோர்பெருமான் நுண் ணறி வால்வழி பாடுசெய்யுங், காலுடை யான்கரி தாயகண்டன் காத லிக் கப்படுங் காட்டுப்பள்ளி, மேலுடை யானிமை யாதமுக்கண் மின் னிடை யாளொடும் வேண்டினானே. ௪

சலசல சந்தகி லோடும்உந்திச் சந்தன மேகரை சார்த்தியெங்கும், பலபல வாய்த்தலை யார்த்துமண்டிப் பாய்ந்திழி காவிரிப் பாங்கரின் வாய்க், கலகல நின்றதி ருங்கழலான் காதலிக் கப்படுங் காட்டுப்பள் ளிச், சொலவல தொண்டர்க ளேத்தநின்ற சூலம்வல் லான்கழல் சொல்லுவோமே. ௫

தளையவிழ் தண்ணிற நீலம்நெய்தல் தாமரை செங்கழு நீருமெல் லாங், களையவி ழுங்குழ லார்கடியக் காதலிக் கப்படுங் காட்டுப்பள்ளித், துளைபயி லுங்குழல் யாழ்முரலத் துன்னிய இன்னிசை யால் துதைந்த, அளைபயில் பாம்பரை யார்த்தசெல்வர்க் காட்செய அல்லல் அறுக்கலாமே. ௬

முடிகையி னாற்றொடு மோட்டுழவர் முன்கைத் தருக்கைக் கரும் பின்கட்டிக், கடிகையி னாலெறி காட்டுப்பள்ளி காதல்செய் தான்கரி தாயகண்டன், பொடியணி மேனியி னானையுள்கிப் போதொடு நீர்சுமந் தேத்திமுன்னின், றடிகையி னாற்றொழ வல்லதொண்டர் அருவினை யைத்துரந் தாட்செய்வாரே. ௭

பிறையுடை யான்பெரி யோர்கள்பெம்மான் பெய்கழல் நாடொ றும் பேணியேத்த, மறையுடை யான்மழு வாளுடையான் வார்தரு மால்கடல் நஞ்சமுண்ட, கறையுடை யான்கன லாடுகண்ணாற் காம னைக் காய்ந்தவன் காட்டுப்பள்ளிக், குறையுடை யான்குறட் பூதச் செல்வன் குரைகழ லேகைகள் கூப்பினோமே. ௮

செற்றவர் தம்அர ணம்அவற்றைச் செவ்வழல் வாயெரி யூட்டி நின்றுங், கற்றவர் தாந்தொழு தேத்தநின்றான் காதலிக் கப்படுங் காட் டுப்பள்ளி, உற்றவர் தாமுணர் வெய்திநல்ல உம்பருள் ளார்தொழு தேத்தநின்ற, பெற்றம ரும்பெரு மானையல்லால் பேசுவதும் மற்றோர் பேச்சிலோமே. ௯

ஒண்துவ ரார்துகி லாடைமெய்போர்த் துச்சிகொ ளாமையுண் டேயுரைக்குங், குண்டர்க ளோடரைக் கூறையில்லார் கூறுவ தாங் குணம் அல்லகண்டீர், அண்டம றையவன் மாலுங்காணா ஆதியி னானுறை காட்டுப்பள்ளி, வண்டம ரும்மலர்க் கொன்றைமாலை வார் சடை யான்கழல் வாழ்த்துவோமே. ௧௦

பொன்னியல் தாமரை நீலம்நெய்தல் போதுகளாற்பொலி வெய்து பொய்கைக், கன்னியர் தாங்குடை காட்டுப்பள்ளிக் காதல னைக்கடற் காழியர்கோன், துன்னிய இன்னிசை யாற்றுதைந்து சொல்லிய ஞானசம் பந்தன்நல்ல, தன்னிசை யாற்சொன்ன மாலைபத்துந் தாங்க வல் லார்புகழ் தாங்குவாரே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருமருகலும் திருச்சேங்காட்டங்குடியும் - பண் - நட்டபாடை

வினவுரை

திருச்சிற்றம்பலம்

அங்கமும் வேதமும் ஓதுநாவர் அந்தணர் நாளும் அடிபரவ
மங்குல் மதிதவழ் மாடவீதி மருகல் நிலாவிய மைந்தசொல்லாய்
செங்கய லார்புனற் செல்வமல்கு சீர்கொள்செங் காட்டங் குடியதனுள்
கங்குல் விளங்கெரி யேந்தியாடுங் கணபதி யீச்சரங் காமுறவே. க

நெய்தவழ் மூவெரி காவலோம்பும் நேர்புரி நூன்மறை யாளரேத்த
மைதவழ் மாடம் மலிந்தவீதி மருகல் நிலாவிய மைந்தசொல்லாய்
செய்தவ நான்மறை யோர்களேத்துஞ் சீர்கொள்செங் காட்டங் குடியதனுள்
கைதவழ் கூரெரி யேந்தியாடுங் கணபதி யீச்சரங் காமுறவே. உ

தோலொடு நூலிழை சேர்ந்தமார்பர் தொகுமறை யோர்கள் வளர்த்தசெந்தீ, மால்புகை போய்விம்மு மாடவீதி மருகல் நிலாவிய மைந்தசொல்லாய், சேல்புல்கு தண்வயற் சோலைசூழ்ந்த சீர்கொள்செங் காட்டங் குடியதனுள், கால்புல்கு பைங்கழ லார்க்கஆடுங் கணபதி யீச்சரங் காமுறவே. ங

நாமரு கேள்வியர் வேள்வியோவா நான்மறை யோர்வழி பாடுசெய்ய, மாமரு வும்மணிக் கோயில்மேய மருகல் நிலாவிய மைந்தசொல்லாய், தேமரு பூம்பொழிற் சோலைசூழ்ந்த சீர்கொள்செங் காட்டங் குடியதனுள், காமரு சீர்மகிழ்ந் தெல்லியாடுங் கணபதி யீச்சரங் காமுறவே. ச

பாடல் முழவும் விழவும்ஓவாப் பன்மறை யோரவர் தாம்பரவ
மாடம் நெடுங்கொடி விண்தடவும் மருகல் நிலாவிய மைந்தசொல்லாய்
சேடக மாமலர்ச் சோலைசூழ்ந்த சீர்கொள்செங் காட்டங் குடியதனுள்
காடக மேயிட மாகஆடுங் கணபதி யீச்சரங் காமுறவே. ரு

புனையழ லோம்புகை அந்தணாளர் பொன்னடி நாள்தொறும் போற்றிசைப்ப, மனைகெழு மாடம் மலிந்தவீதி மருகல் நிலாவிய மைந்தசொல்லாய், சினைகெழு தண்வயற் சோலைசூழ்ந்த சீர்கொள்செங் காட்டங் குடியதனுள், கனைவளர் கூரெரி யேந்தியாடுங் கணபதி யீச்சரங் காமுறவே. சு, எ

பூண்தங்கு மார்பின் இலங்கைவேந்தன் பொன்னெடுந் தோள் வரை யாலடர்த்து, மாண்தங்கு நூன்மறை யோர்பரவ மருகல் நிலாவிய மைந்தசொல்லாய், சேண்தங்கு மாமலர்ச் சோலைசூழ்ந்த சீர் கொள்செங் காட்டங் குடியதனுள், காண்தங்கு தோள்பெயர்த் தெல்லி யாடுங் கணபதி யீச்சரங் காமுறவே. அ

அந்தமும் ஆதியும் நான்முகனும் அரவணை யானும் அறிவரிய
மந்திர வேதங்க ளோதுநாவர் மருகல் நிலாவிய மைந்தசொல்லாய்
செந்தமி ழோர்கள் பரவியேத்துஞ் சீர்கொள்செங் காட்டங் குடியதனுள்
கந்தம் அகிற்புகை யேகமழுங் கணபதி யீச்சரங் காமுறவே. கூ

இலைமரு தேயழ காகநாளு மிடுதுவர்க் காயொடு சுக்குத்தின்னும்
நிலையமண் தேரரை நீங்கிநின்று நீதரல் லார்தொழும் மாமருகல்
மலைமகள் தோள்புணர் வாயருளாய் மாசில்செங் காட்டங் குடியதனுள்
கலைமல்கு தோலுடுத் தெல்லியாடுங் கணபதி யீச்சரங் காமுறவே. க0

நாலுங் குலைக்கமு கோங்குகாழி ஞானசம் பந்தன் நலந்திகழும்
மாலின் மதிதவழ் மாடமோங்கும் மருகலின் மற்றதன் மேல்மொழிந்த
சேலுங் கயலுந் திளைத்தகண்ணார் சீர்கொள்செங் காட்டங் குடியதனுள்
சூலம்வல் லான்கழ லேத்துபாடல் சொல்லவல் லார்வினை யில்லையாமே

திருச்சிற்றம்பலம்

திருநள்ளாறும் திருஆலவாயும் - பண் - நட்டபாடை

வினவுரை

திருச்சிற்றம்பலம்

பாடகம் மெல்லடிப் பாவையோடும் படுபிணக் காடிடம் பற்றிநின்று
நாடகம் ஆடுநள் ளாறுடைய நம்பெரு மானிது என்கொல்சொல்லாய்
சூடகம் முன்கை மடந்தைமார்கள் துணைவ ரொடுந்தொழு தேத்திவாழ்
ஆடகம் மாடம் நெருங்குகூடல் ஆலவா யின்கண் அமர்ந்தவாறே. [த்த

திங்களம் போதுஞ் செழும்புனலுஞ் செஞ்சடை மாட்டயல் வைத்துகந்து, நங்கள் மகிழுநள் ளாறுடைய நம்பெரு மானிது என் கொல்சொல்லாய், பொங்கிள மென்முலை யார்களோடும் புனமயி லாட

கிலாமுழைக்கும், அங்கழ கச்சுதை மாடக்கூடல் ஆலவா யின்கண் அமர்ந்தவாறே. ௨

தண்ணறு மத்தமுங் கூவிளமும் வெண்டலை மாலையுந் தாங்கியார்க்கும், நண்ணல் அரியநள் ளாறுடைய நம்பெரு மானிது என்கொல்சொல்லாய், புண்ணிய வாணரும் மாதவரும் புகுந்துட னேத்தப் புனையிழையார், அண்ணலின் பாட லெடுக்குங்கூடல் ஆலவா யின்கண் அமர்ந்தவாறே. ௩

பூவினில் வாசம் புனலிற்பொற்புப் புதுவிரைச் சாந்தின்இன் நாற்றத்தோடு, நாவினிற் பாடல்நள் ளாறுடைய நம்பெரு மானிது என்கொல்சொல்லாய், தேவர்கள் தானவர் சித்தர்விச்சா தரர்கணத் தோடுஞ் சிறந்துபொங்கி, ஆவினில் ஐந்துகந் தாட்டுங்கூடல் ஆலவா யின்கண் அமர்ந்தவாறே. ௪

செம்பொன்செய் மாலையும் வாசிகையுந் திருந்து புகையு மவியும் பாட்டும், நம்பும் பெருமைநள் ளாறுடைய நம்பெரு மானிது என்கொல்சொல்லாய், உம்பரும் நாகரு லகந்தானும் ஒலிகடல் சூழ்ந்த வுலகத்தோரும், அம்புத நால்களால் நீடுங்கூடல் ஆலவா யின்கண் அமர்ந்தவாறே. ௫

பாகமுந் தேவியை வைத்துக்கொண்டு பைவிரி துத்திப் பரியபேழ்வாய், நாகமும் பூண்டநள் ளாறுடைய நம்பெரு மானிது என்கொல்சொல்லாய், போகமும் நின்னை மனத்துவைத்துப் புண்ணியர் நண்ணும் புணர்வுபூண்ட, ஆகமு டையவர் சேருங்கூடல் ஆலவா யின்கண் அமர்ந்தவாறே. ௬

கோவண ஆடையும் நீறுப்பூச்சுங் கொடுமழு வேந்தலுஞ் செஞ்சடையும், நாவணப் பாட்டுநள் ளாறுடைய நம்பெரு மானிது என்கொல்சொல்லாய், பூவண மேனி யிளையமாதர் பொன்னும் மணியுங் கொழித்தெடுத்து, ஆவண வீதியி லாடுங்கூடல் ஆலவா யின்கண் அமர்ந்தவாறே. ௭

இலங்கை யிராவணன் வெற்பெடுக்க எழில்விர லூன்றி யிசை விரும்பி, நலங்கொளச் சேர்ந்தநள் ளாறுடைய நம்பெரு மானிது என்கொல்சொல்லாய், புலன்களைச் செற்றுப் பொறியைநீக்கிப் புந்

தியி லும்நினைச் சிந்தைசெய்யும், அலங்கல் நல்லார்கள் அமருங்கூடல் ஆலவா யின்கண் அமர்ந்தவாறே. ௮

பணியுடை மாலும் மலரினோனும் பன்றியும் வென்றிப் பறவையாயும், நணுகல் அரியநள் ளாறுடைய நம்பெரு மானிது என்கொல் சொல்லாய், மணியொலி சங்கொலி யோடுமற்றை மாமுர சின்னொலி யென்றுமோவா, தணிகிளர் வேந்தர் புகுதுங்கூடல் ஆலவா யின்கண் அமர்ந்தவாறே. ௯

தடுக்குடைக் கையருஞ் சாக்கியருஞ் சாதியில் நீங்கிய வத்தவத்தர், நடுக்குற நின்றநள் ளாறுடைய நம்பெரு மானிது என்கொல்சொல் லாய், எடுக்கும் விழவும் நன்னாள்விழவும் இரும்பலி யின்பினோ டெத் திசையும், அடுக்கும் பெருமைசேர் மாடக்கூடல் ஆலவா யின்கண் அமர்ந்தவாறே. ௧௦

அன்புடை யானை அரனைக்கூடல் ஆலவாய் மேவிய தென்கொ லென்று, நன்பொனை நாதனை நள்ளாற்றானை நயம்பெறப் போற்றி நலங்குலாவும், பொன்புடை சூழ்தரு மாடக்காழிப் பூசுரன் ஞானசம் பந்தன் சொன்ன, இன்புடைப் பாடல்கள் பத்தும்வல்லார் இமையவ ரேத்த இருப்பர்தாமே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருஆவூர்ப் பசுபதீச்சரம் - பண் - நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

புண்ணியர் பூதியர் பூதநாதர் புடைபடு வார்தம் மனத்தார்திங்கட்
கண்ணிய ரென்றென்று காதலாளர் கைதொழு தேத்த இருந்தவூராம்
விண்ணுயர் மாளிகை மாடவீதி விரைகமழ் சோலை சுலாவியெங்கும்
பண்ணியல் பாடல றாதஆவூர்ப் பசுபதி யீச்சரம் பாடுநாவே. ௧

முத்தியர் மூப்பில ராப்பினுள்ளார் முக்கணர் தக்கன்றன் வேள்விசாடும்
அத்திய ரென்றென் றடியரேத்தும் ஐயன் அணங்கொ டிருந்தவூராம்
தொத்திய லும்பொழில் மாடுவண்டு துதைந்தெங்குந் தூமதுப்பாயக்கோ
பத்திமைப் பாடல றாதஆவூர்ப் பசுபதி யீச்சரம் பாடுநாவே. [யிற்

பொங்கி வரும்புனல் சென்னிவைத்தார் போம்வழி வந்திழி வேற் றமானார், இங்குயர் ஞானத்தர் வானோரேத்தும் இறையவ ரென்றுமி

ருந்த வூராம், தெங்குயர் சோலைசே ராலைசாலி திளைக்கும் விளைவயல்
சேரும் பொய்கைப், பங்கய மங்கை விரும்புமாலூர்ப் பசுபதி யீச்சரம்
பாடு நாவே. ரு

தேவியோர் கூறின ரேறதேறுஞ் செலவினர் நல்குர வென்னைநீக்கும்
ஆவிய ரந்தண ரல்லல்தீர்க்கும் அப்பனு ரங்கே அமர்ந்தவூராம்
பூவிய லும்பொழில் வாசம்வீசப் புரிகுழ லார்சுவ டொற்றி முற்றப்
பாவியல் பாடல றாதஆலூர்ப் பசுபதி யீச்சரம் பாடுநாவே. சு

இந்தணை புஞ்சடை யார்விடையா ரிப்பிறப் பென்னை யறுக்கவல்லார்
வந்தணைந் தின்னிசை பாடுவார்பால் மன்னினர் மன்னி யிருந்தவூராம்
கொந்தணை யுங்குழ லார்விழவிற் கூட்ட மிடையிடை சேரும்வீதிப்
பந்தணை யும்விர லார்தம்ஆலூர்ப் பசுபதி யீச்சரம் பாடுநாவே. ௬

குற்ற மறுத்தார் குணத்தினுள்ளார் கும்பிடு வார்தமக் கன்புசெய்வார்
ஒற்றை விடையினர் நெற்றிக்கண்ணர் உறைபதி யாகுஞ் செறிகொள் [மாடம்
சுற்றிய வாசலின் மாதர்விழாச் சொற்கவி பாடநி தானம்நல்கப்
பற்றிய கையினர் வாழும்ஆலூர்ப் பசுபதி யீச்சரம் பாடுநாவே. ௬

நீறுடை யார்நெடு மால்வணங்கும் நிமிர்சடை யார்நினை வார்தமுள்ளம்
கூறுடை யாருடை கோவணத்தார் குவலய மேத்தஇ ருந்தவூராம்
தாறுடை வாழையிற் கூழைமந்தி தருகனி யுண்டுமிண் டிட்டினத்தைப்
பாறிடப் பாய்ந்துப யிலும்ஆலூர்ப் பசுபதி யீச்சரம் பாடுநாவே. எ

வெண்டலை மாலை விரவிப்பூண்ட மெய்யுடை யார்விறல் ஆரரக்கன்
வண்டமர் பூமுடி செற்றுகந்த மைந்தரி டம்வள மோங்கியெங்கும் [ப்
கண்டவர் சிந்தைக் கருத்தின்மிக்கார் கதியரு ளென்றுகை யாரக்கூப்பி
பண்டவர் கொண்டு பயிலும்ஆலூர்ப் பசுபதி யீச்சரம் பாடுநாவே. அ

மாலும் அயனும் வணங்கிநேட மற்றவ ருக்கெரி யாகிநீண்ட
சீலம் அறிவரி தாகிநின்ற செம்மையி னாவர் சேருமூராம்
கோல விழாவி னரங்கதேறிக் கொடியிடை மாதர்கள் மைந்தரோடும்
பாலென வேமொழிந் தேத்தும்ஆலூர்ப் பசுபதி யீச்சரம் பாடுநாவே. கூ

பின்னிய தாழ்சடை யார்பிதற்றும் பேதைய ராஞ்சமண் சாக்கியர்கள்
தன்னிய லும்உரை கொள்ளகில்லாச் சைவ ரிடந்தள வேறுசோலைத்

துன்னிய மாதரும் மைந்தர்தாமுஞ் சுனையிடை மூழ்கித் தொடர்ந்தசி
பன்னிய பாடல் பயிலும்ஆவூர்ப் பசுபதி யீச்சரம் பாடுநாவே. [ந்தைப்

எண்டிசை யாரும்வ ணங்கியேத்தும் எம்பெரு மானையெழில்
கொளாவூர்ப், பண்டரி யார்சிலர் தொண்டர் போற்றும் பசுபதி யீச்சரத்
தாதிதன்மேல், கண்டல்கண் மிண்டிய கானற்காழிக் கவுணியன் ஞான
சம் பந்தன்சொன்ன, கொண்டினி தாவிசை பாடியாடிக் கூடும
வர்உடை யார்கள்வானே. கக

திருச்சிற்றம்பலம்

திருவேணுபுரம் - பண் - நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

வண்டார்குழ லரிவையொடும் பிரியாவகை பாகம்
பெண்தான்மிக ஆனான்பிறைச் சென்னிப்பெரு மானூர்
தண்டாமரை மலராளுறை தவளம்நெடு மாடம்
விண்தாங்குவ போலும்மிகு வேணுபுரம் அதுவே. க

படைப்பும்நிலை யிறுதிப்பயன் பருமையொடு நேர்மை
கிடைப்பல்கண முடையான்கிறி பூதப்படை யானூர்
புடைப்பாளையின் கமுகின்னொடு புன்னைமலர் நாற்றம்
விடைத்தேவரு தென்றல்மிகு வேணுபுரம் அதுவே. உ

கடம்தாங்கிய கரியையவர் வெருவவுரி போர்த்துப்
படம்தாங்கிய அரவக்குழைப் பரமேட்டிதன் பழவூர்
நடம்தாங்கிய நடையார்நல பவளத்துவர் வாய்மேல்
விடம்தாங்கிய கண்ணார்பயில் வேணுபுரம் அதுவே. ௩

தக்கன்தன சிரமொன்றினை யரிவித்தவன் தனக்கு
மிக்கவ்வரம் அருள்செய்தஎம் விண்ணோர்பெரு மானூர்
பக்கம்பல மயிலாடிட மேகம்முழ வதிர
மிக்கம்மது வண்டார்பொழில் வேணுபுரம் அதுவே. ச

நானாவித உருவாய்நமை யாள்வான்நணு காதார்
வானார்திரி புரமூன்றெரி யுண்ணச்சிலை தொட்டான்

தேனார்ந்தெழு கதலிக்கனி யுண்பான்திகழ் மந்தி
மேனோக்கிநின் றிரங்கும்பொழில் வேணுபுரம் அதுவே. ரு

மண்ணோர்களும் விண்ணோர்களும் வெருவிம்மிக அஞ்சக்
கண்ணார்சல மூடிக்கட லோங்கவ்வுயர்ந் தானூர்
தண்ணார்நறுங் கமலம்மலர் சாயவ்விள வாளை
விண்ணார்குதி கொள்ளும்வியன் வேணுபுரம் அதுவே. சு,எ

மலையான்மக ளஞ்சவ்வரை யெடுத்தவ்வலி யரக்கன்
தலைதோளவை நெரியச்சரண் உகிர்வைத்தவன் தன்னூர்
கலையாறொடு சுருதித்தொகை கற்றோர்மிகு கூட்டம்
விலையாயின சொற்றேர்தரு வேணுபுரம் அதுவே. அ

வயமுண்டவ மாலும்அடி காணாதல மாக்கும்
பயனாகிய பிரமன்படு தலையேந்திய பரனூர்
கயம்மேவிய சங்கந்தரு கழுவிட்டுயர் செந்நெல்
வியன்மேவிவந் துறங்கும்பொழில் வேணுபுரம் அதுவே. கூ

மாசேறிய வுடலாரமண் குழுக்களொடு தேரர்
தேசேறிய பாதம்வணங் காமைத்தெரி யானூர்
தூசேறிய அல்குல்துடி யிடையார்துணை முலையார்
வீசேறிய புருவத்தவர் வேணுபுரம் அதுவே. க0

வேதத்தொலி யானும்மிகு வேணுபுரந் தன்னைப்
பாதத்தினின் மனம்வைத்தெழு பந்தன்தன பாடல்
ஏதத்தினை யில்லாஇவை பத்தும்இசை வல்லார்
கேதத்தினை யில்லார்சிவ கெதியைப்பெறு வாரே. கக

திருச்சிற்றம்பலம்

திருவண்ணாமலை - பண் - நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

உண்ணாமுலை உமையாளொடும் உடனாகிய வொருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன அருவித்திரள் மழலைம்முழ அதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை வழுவாவண்ணம் அறுமே. க

தேமாங்கனி கடுவன்கொள விடுகொம்பொடு தீண்டித்
தூமாமழை துறுவல்மிசை சிறுநுண்துளி சிதற
ஆமாம்பிணை யணையும்பொழில் அண்ணாமலை அண்ணல்
பூமாங்கழல் புனைசேவடி நினைவார்வினை யிலரே. உ

பீலிம்மயில் பெடையோடுறை பொழில்சூழ்கழை முத்தம்
சூலிம்மணி தரைமேல்நிறை சொரியும்விரி சாரல்
ஆலிம்மழை தவழும்பொழில் அண்ணாமலை அண்ணல்
காலன்வலி தொலைசேவடி தொழுவாரன புகழே. ங

உதிரும்மயி ரிடுவெண்டலை கலனாவுல கெல்லாம்
எதிரும்பலி யுணலாகவும் எருதேறுவ தல்லால்
முதிருஞ்சடை யிளவெண்பிறை முடிமேல்கொள அடிமேல்
அதிருங்கழல் அடிகட்கிடம் அண்ணாமலை யதுவே. ச

மாவஞ்சிலை தாளம்மிகு மணியுந்துவெள் ளருவி
அரவஞ்செய முரவம்படும் அண்ணாமலை அண்ணல்
உரவஞ்சடை யுலவும்புனல் உடனாவதும் ஓரார்
குரவங்கமழ் நறுமென்குழல் உமைபுல்குதல் குணமே. ரு

பெருகும்புனல் அண்ணாமலை பிறைசேர்கடல் நஞ்சைப்
பருகுந்தனை துணிவார்பொடி அணிவாரது பருகிக்
கருகும்மிட றுடையார்கமழ் சடையார்கழல் பாவி
உருகும்மனம் உடையார்தமக் குறுநோயடை யாவே. சு

கரிகாலன குடர்கொள்வன கழுகாடிய காட்டில்
நரியாடிய நகுவெண்டலை யுதையுண்டவை யுருள
எரியாடிய இறைவர்க்கிடம் இனவண்டிசை முரல
அரியாடிய கண்ணாளொடும் அண்ணாமலை யதுவே. எ

ஒளிறூபுலி யதளாடையன் உமையஞ்சுதல் பொருட்டால்
பிளிறூகுரல் மதவாரண வதனம்பிடித் துரித்து
வெளிறூபட விளையாடிய விகிர்தன்இரா வணனை
அளறூபட அடர்த்தானிடம் அண்ணாமலை யதுவே. அ

விளவார்கனி படநூறிய கடல்வண்ணனும் வேதக்
கிளர்தாமரை மலர்மேலுறை கேடில்புக ழோனும்

அளவாவணம் அழலாகிய அண்ணாமலை அண்ணல்
தளராமுலை முறுவல்உமை தலைவன்அடி சாரணே. க

வேர்வந்துற மாசூர்தர வெயில்நின்றுழல் வாரும்
மார்பம்புதை மலிசீவர மறையாவரு வாரும்
ஆரம்பர்தம் உரைகொள்ளன்மின் அண்ணாமலை அண்ணல்
கூர்வெண்மழுப் படையான்நல்ல கழல்சேர்வது குணமே. க0

வெம்புந்திய கதிரோன்ஒளி விலகும்விரி சாரல்
அம்புந்திமூ வெயிலெய்தவன் அண்ணாமலை யதனைக்
கொம்புந்துவ குயிலாலுவ குளிர்காழியுள் ஞான
சம்பந்தன தமிழ்வல்லவர் அடிபேணுதல் தவமே. கக

திருச்சிற்றம்பலம்

திருவீழிமிழலை - பண் - நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

சடையார்புன லுடையானொரு சரிகோவணம் உடையான்
படையார்மழு வுடையான்பல பூதப்படை யுடையான்
மடமான்விழி யுமைமாதிடம் உடையானெனை யுடையான்
விடையார்கொடி யுடையானிடம் வீழிம்மிழ லையே. க

ஈறாய்முத லொன்றாயிரு பெண்ணாண்குண மூன்றாய்
மாறாமறை நான்காய்வரு பூதம்அவை ஐந்தாய்
ஆறார்சுவை ஏழோசையொ டெட்டுத்திசை தானாய்
வேறாய்உடன் ஆனான்இடம் வீழிம்மிழ லையே. உ

வம்மின்னடி யீர்நாண்மல ரிட்டுத்தொழு துய்ய
உம்மன்பினொ டெம்மன்புசெய் தீசன்உறை கோயில்
மும்மென்றிசை முரல்வண்டுகள் கெண்டித்திசை யெங்கும்
விம்மும்பொழில் சூழ்தண்வயல் வீழிம்மிழ லையே. ௩

பண்ணும்பதம் ஏழும்பல வோசைத்தமி ழவையும்
உண்ணின்றதொர் சுவையும்உறு தாளத்தொலி பலவும்
மண்ணும்புனல் உயிரும்வரு காற்றுஞ்சுடர் மூன்றும்
விண்ணும்முழு தானானிடம் வீழிம்மிழ லையே. ௪

ஆயாதன சமயம்பல அறியாதஅந் நெறியின்
தாயானவன் உயிர்கட்குமுன் தலையானவன் மறைமுத்
தீயானவன் சிவனெம்மிறை செல்வத்திரு ஆரூர்
மேயானவன் உறையும்மிடம் வீழிம்மிழ லையே. ரு

கல்லால்நிழற் கீழாயிடர் காவாயென வானோர்
எல்லாம்ஒரு தேராயயன் மறைபூட்டிநின் றுய்ப்ப
வல்வாய்எரி காற்றீர்க்கரி கோல்வாசுகி நாண்கல்
வில்லால்எயில் எய்தானிடம் வீழிம்மிழ லையே. சு

கரத்தான்மலி சிரத்தான்கரி யுரித்தாயதொர் படத்தான்
புரத்தார்பொடி படத்தன்னடி பணிமூவர்கட் கோவா
வரத்தான்மிக அளித்தானிடம் வளர்புன்னைமுத் தரும்பி
விரைத்தாதுபொன் மணியீன்றணி வீழிம்மிழ லையே. எ

முன்னிற்பவ ரில்லாமுரண் அரக்கன்வட கயிலை
தன்னைப்பிடித் தெடுத்தான்முடி தடந்தோளிற வூன்றிப்
பின்னைப்பணிந் தேத்தப்பெரு வாள்பேரொடுங் கொடுத்த
மின்னிற்பொலி சடையானிடம் வீழிம்மிழ லையே. அ

பண்டேழுல குண்டானவை கண்டானுமுன் அறியா
ஒண்டீயுரு வானான்உறை கோயில்நிறை பொய்கை
வண்தாமரை மலர்மேல்மட அன்னம்நடை பயில
வெண்தாமரை செந்தாதுதிர் வீழிம்மிழ லையே. கூ

மசங்கற்சமண் மண்டைக்கையர் குண்டக்குண மிலிகள்
இசங்கும்பிறப் பறுத்தானிட மிருந்தேன்களித் திரைத்துப்
பசும்பொற்கிளி களிமஞ்ஞைகள் ஒளிகொண்டெழு பகலோன்
விசும்பைப்பொலி விக்கும்பொழில் வீழிம்மிழ லையே. க0

வீழிம்மிழ லைம்மேவிய விகிர்தன்றனை விரைசேர்
காழிந்நகர்க் கலைஞானசம் பந்தன்தமிழ் பத்தும்
யாழின்இசை வல்லார்சொலக் கேட்டாரவ ரெல்லாம்
ஊழின்மலி வினைபோயிட வுயர்வானடை வாரே. கக

திருச்சிற்றம்பலம்

திருமுதுகுன்றம் - பண் - நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

மத்தாவரை நிறுவிக்கடல் கடைந்தவ்விடம் உண்ட
தொத்தார்தரு மணிநீள்முடிச் சுடர்வண்ணன திடமாம்
கொத்தார்மலர் குளிர்சந்தகில் ஒளிர்குங்குமங் கொண்டு
முத்தாறுவந் தடிவீழ்தரு முதுகுன்றடை வோமே. க

தழையார்வட வியவீதனில் தவமேபுரி சைவன்
இழையாரிடை மடவாளொடும் இனிதாவுறை இடமாம்
மழைவானிடை முழவவ்வெழில் வளைவாளுகிர் எரிகண்
முழைவாளரி குமிறும்உயர் முதுகுன்றடை வோமே. உ

விளையாததொர் பரிசில்வரு பசுபாசவே தனையொண்
தளையாயின தவிரவ்வருள் தலைவன்னது சார்பாம்
களையார்தரு கதிராயிரம் உடையவ்வவ னோடு
முளைமாமதி தவழும்உயர் முதுகுன்றடை வோமே. ௩

சுரர்மாதவர் தொகுகின்னரர் அவரோதொலை வில்லா
நரரானபன் முனிவர்தொழ இருந்தானிடம் நலமார்
அரசார்வர அணிபொற்கல னவைகொண்டுபன் னாளும்
முரசார்வரு மணமொய்ம்புடை முதுகுன்றடை வோமே. ௪

அறையார்கழல் அந்தன்றனை அயில்மூவிலை யழகார்
கறையார்நெடு வேலின்மிசை யேற்றானிடங் கருதில்
மறையாயின பலசொல்லியொண் மலர்சாந்தவை கொண்டு
முறையால்மிகு முனிவர்தொழும் முதுகுன்றடை வோமே. ௫

ஏவார்சிலை எயினன்உரு வாகியெழில் விசயற்
கோவாதஇன் னருள்செய்தஎம் மொருவற்கிடம் உலகில்
சாவாதவர் பிறவாதவர் தவமேமிக வுடையார்
மூவாதபன் முனிவர்தொழும் முதுகுன்றடை வோமே. ௬

தழல்சேர்தரு திருமேனியர் சசிசேர்சடை முடியர்
மழமால்விடை மிகவேறிய மறையோனுறை கோயில்
விழவோடொலி மிகுமங்கையர் தகுமாடக சாலை
முழவோடிசை நடமுன்செயும் முதுகுன்றடை வோமே. ௭

செதுவாய்மைகள் கருதிவ்வரை யெடுத்ததிற லரக்கன்
கதுவாய்கள்பத் தலறியிடக் கண்டானுறை கோயில்
மதுவாயசெங் காந்தள்மலர் நிறையக்குறை வில்லா
முதுவேய்கள்முத் துதிரும்பொழில் முதுகுன்றடை வோமே. அ

இயலாடிய பிரமன்அரி யிருவர்க்கறி வரிய
செயலாடிய தீயாருரு வாகிஎழு செல்வன்
புயலாடுவண் பொழில்சூழ்புனற் படப்பைத்தடத் தருகே
முயலோடவெண் கயல்பாய்தரு முதுகுன்றடை வோமே. கூ

அருகரொடு புத்தரவ ரறியாஅரன் மலையான்
மருகன்வரும் இடபக்கொடி யுடையானிடம் மலரார்
கருகுகுழல் மடவார்கடி குறிஞ்சியது பாடி
முருகன்னது பெருமைபகர் முதுகுன்றடை வோமே. க0

முகில்சேர்தரு முதுகுன்றுடை யானைம்மிகு தொல்சீர்ப்
புகலிந்நகர் மறைஞானசம் பந்தன்உரை செய்த
நிகரில்லன தமிழ்மாலைகள் இசையோடிவை பத்தும்
பகரும்அடி யவர்கட்கிடர் பாவம்அடை யாவே. கக

திருச்சிற்றம்பலம்

திருவியலூர் - பண் - நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

குரவங்கமழ் நறும்மென்குழல் அரிவையவள் வெருவப்
பொருவெங்கரி படவென்றதன் உரிவையுடல் அணிவோன்
அரவும்அலை புனலும்இள மதியும்நகு தலையும்
விரவுஞ்சடை யடிகட்கிடம் விரிநீர்விய லூரே. க

ஏரூர்தரும் ஒருவன்பல வுருவன்நிலை யானான்
ஆரூர்தரு சடையன்அன லுருவன்புரி வுடையான்
மாரூர்புரம் எரியச்சிலை வளைவித்தவன் மடவாள்
வீரூர்தர நின்றானிடம் விரிநீர்விய லூரே. உ

செம்மென்சடை யவைதாழ்வுற மடவார்மனை தோறும்
பெய்ம்மின்பலி யெனநின்றிசை பகர்வாரவ ரிடமாம்

உம்மென்றெழும் அருவித்திரள் வரைபற்றிட வுரைமேல்
விம்மும்பொழில் கெழுவும்வயல் விரிநீர்விய லூரே. ௩

அடைவாகிய அடியார்தொழ அலரோன்தலை யதனில்
மடவாரிடு பலிவந்துண லுடையானவ னிடமாம்
கடையார்தர அகிலார்கழை முத்தம்நிரை சிந்தி
மிடையார்பொழில் புடைசூழ்தரு விரிநீர்விய லூரே. ௪

எண்ணார்தரு பயனாயய னவனாய்மிகு கலையாய்ப்
பண்ணார்தரு மறையாயுயர் பொருளாயிறை யவனாய்க்
கண்ணார்தரும் உருவாகிய கடவுள்ளிட மெனலாம்
விண்ணோரொடு மண்ணோர்தொழும் விரிநீர்விய லூரே. ௫

வசைவில்கொடு வருவேடுவ னவனாய்நிலை யறிவான்
திசையுற்றவர் காணச்செரு மலைவான்நிலை யவனை
அசையப்பொரு தசையாவணம் அவனுக்குயர் படைகள்
விசையற்கருள் செய்தானிடம் விரிநீர்விய லூரே. ௬

மானார்அர வுடையான்இர வுடையான்பகல் நட்டம்
ஊனார்தரும் உயிரானுயர் விசையான்விளை பொருள்கள்
தானாகிய தலைவன்னென நினைவாரவ ரிடமாம்
மேனாடிய விண்ணோர்தொழும் விரிநீர்விய லூரே. ௭

பொருவாரெனக் கெதிராரெனப் பொருப்பையெடுத் தான்றன்
கருமால்வரை கரந்தோளுரங் கதிர்நீள்முடி நெரிந்து
சிரமாயின கதறச்செறி கழல்சேர்திரு வடியின்
விரலாலடர் வித்தானிடம் விரிநீர்விய லூரே. ௮

வளம்பட்டவர் மலர்மேலயன் மாலும்மொரு வகையால்
அளம்பட்டறி வொண்ணாவகை அழலாகிய அண்ணல்
உளம்பட்டெழு தழல்தூணதன் நடுவேயொரு வுருவம்
விளம்பட்டருள் செய்தானிடம் விரிநீர்விய லூரே. ௯

தடுக்காலுடல் மறைப்பாரவர் தவர்சீவர மூடிப்
பிடக்கேயுரை செய்வாரொடு பேணார்நமர் பெரியோர்
கடல்சேர்தரு விடமுண்டமு தமரர்க்கருள் செய்த
விடைச்சேர்தரு கொடியானிடம் விரிநீர்விய லூரே. ௧௦

விளங்கும்பிறை சடைமேலுடை விகிர்தன்விய லூரைத்
தளங்கொண்டதொர் புகலித்தகு தமிழ்ஞானசம் பந்தன்
துளங்கில்தமிழ் பரவித்தொழும் அடியாரவ ரென்றும்
விளங்கும்புக ழதனோடுயர் விண்ணும்உடை யாரே. கக

திருச்சிற்றம்பலம்

திருக்கோடுங்குன்றம் - பண் - நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

வானிற்பொலி வெய்தும்மழை மேகங்கிழித் தோடிக்
கூனற்பிறை சேருங்குளிர் சாரற்கொடுங் குன்றம்
ஆனிற்பொலி ஐந்தும்அமர்ந் தாடியுல கேத்தத்
தேனிற்பொலி மொழியாளொடு மேயான்திரு நகரே. க

மயில்புல்குதண் பெடையோடுடன் ஆடும்வளர் சாரல்
குயிலின்இசை பாடுங்குளிர் சோலைக்கொடுங் குன்றம்
அயில்வேல்மலி நெடுவெஞ்சுடர் அனலேந்திநின் றாடி
எயில்முன்பட எய்தானவன் மேயவ்வெழில் நகரே. உ

மிளிரும்மணி பைம்பொன்னொடு விரைமாமல ருந்திக்
குளிரும்புனல் பாயுங்குளிர் சாரற்கொடுங் குன்றம்
கிளர்கங்கையொ டிளவெண்மதி கெழுவுஞ்சடை தன்மேல்
வளர்கொன்றையும் மதமத்தமும் வைத்தான்வள நகரே. ௩

பருமாமத கரியோடரி யிரியும்விரி சாரல்
குருமாமணி பொன்னோடிழி யருவிக்கொடுங் குன்றம்
பொரும்மாஎயில் வரைவில்தரு கணையிற்பொடி செய்த
பெருமானவன் உமையாளொடும் மேவும்பெரு நகரே. ௪

மேகத்திடி குரல்வந்தெழ வெருவிவ்வரை யிழியும்
கூகைக்குலம் ஓடித்திரி சாரற்கொடுங் குன்றம்
நாகத்தொடும் இளவெண்பிறை சூடிநல மங்கை
பாகத்தவன் இமையோர்தொழ மேவும்பழ நகரே. ௫

கைம்மாமத கரியின்இனம் இடியின்குர லதிரக்
கொய்ம்மாமலர்ச் சோலைபுக மண்டுங்கொடுங் குன்றம்

அம்மானென வுள்கித்தொழு வார்கட்கருள் செய்யும்
பெம்மானவன் இமையோர்தொழ மேவும்பெரு நகரே. ௬

மாவத்தொடு மணமாதவி மௌவல்லது விண்ட
குரவத்தொடு விரவும்பொழில் சூழ்தண்கொடுங் குன்றம்
அரவத்தொடும் இளவெண்பிறை விரவும்மலர்க் கொன்றை
கிரவச்சடை முடிமேலுடன் வைத்தான்நெடு நகரே. ௭

முட்டாமுது கரியின்இனம் முதுவேய்களை முனிந்து
குட்டாச்சுனை யவைமண்டிநின் றாடுங்கொடுங் குன்றம்
ஒட்டாஅரக் கன்றன்முடி யொருபஃதவை யுடனே
பிட்டானவன் உமையாளொடு மேவும்பெரு நகரே. ௮

அறையும்அரி குரலோசையை யஞ்சியடும் ஆனை
குறையும்மன மாகிம்முழை வைகுங்கொடுங் குன்றம்
மறையும்அவை யுடையானென நெடியானென இவர்கள்
இறையும்அறி வொண்ணாதவன் மேயவ்வெழில் நகரே. ௯

மத்தக்களி றாளிவ்வர வஞ்சிம்மலை தன்னைக்
குத்திப்பெரு முழைதன்னிடை வைகுங்கொடுங் குன்றம்
புத்தரொடு பொல்லாமனச் சமணர்புறங் கூறப்
பத்தர்க்கருள் செய்தானவன் மேயபழ நகரே. ௧௦

கூனற்பிறை சடைமேல்மிக வுடையான்கொடுங் குன்றைக்
கானற்கழு மலமாநகர்த் தலைவன்நல கவுணி
ஞானத்துயர் சம்பந்தன நலங்கொள்தமிழ் வல்லார்
ஊனத்தொடு துயர்தீர்ந்துல கேத்தும்எழி லோரே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருநெய்த்தானம் - பண் - நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

மையாடிய கண்டன்மலை மகள்பாகம துடையான்
கையாடிய கேடில்கரி யுரிமூடிய வொருவன்
செய்யாடிய குவளைம்மலர் நயனத்தவ ளோடும்
நெய்யாடிய பெருமானிடம் நெய்த்தானமென் னீரே. ௧

பறையும்பழி பாவம்படு துயரம்பல தீரும்
பிறையும்புனல் அரவும்படு சடையெம்பெரு மானூர்
அறையும்புனல் வருகாவிரி அலைசேர்வட கரைமேல்
நிறையும்புனை மடவார்பயில் நெய்த்தானமென் னீரே. உ

பேயாயின பாடப்பெரு நடமாடிய பெருமான்
வேயாயின தோளிக்கொரு பாகம்மிக வுடையான்
தாயாகிய வுலகங்களை நிலைபேறுசெய் தலைவன்
நேயாடிய பெருமானிட நெய்த்தானமென் னீரே. ௩

சுடுநீறணி யண்ணல்சுடர் சூலம்அன லேந்தி
நடுநள்ளிருள் நடமாடிய நம்பன்உறை யிடமாம்
கடுவாளிள அரவாடுமிழ் கடல்நஞ்சம துண்டான்
நெடுவாளைகள் குதிகொள்ளுயர் நெய்த்தானமென் னீரே. ௪

நுகராரமொ டேலம்மணி செம்பொன்னுரை யுந்திப்
பகராவரு புனல்காவிரி பரவிப்பணிந் தேத்தும்
நிகரான்மண லிடுதண்கரை நிகழ்வாயநெய்த் தான
நகரான்அடி யேத்தந்நமை நடலையடை யாவே. ௫

விடையார்கொடி யுடையவ்வணல் வீந்தார்வெளை யெலும்பும்
உடையார்நறு மாலைசடை யுடையாரவர் மேய
புடையேபுனல் பாயும்வயல் பொழில்சூழ்ந்தநெய்த் தானம்
அடையாதவ ரென்றும்அம ருலகம்அடை யாரே. ௬

நிழலார்வயல் கமழ்சோலைகள் நிறைகின்றநெய்த் தானத்
தழலானவன் அனலங்கையி லேந்தியழ காய
கழலானடி நாளுங்கழ லாதேவிட லின்றித்
தொழலாரவர் நாளுந்துய ரின்றித்தொழு வாரே. ௭

அறையார்கடல் இலங்கைக்கிறை யணிசேர்கயி லாயம்
இறையாரமுன் எடுத்தான்இரு பதுதோளிற வூன்றி
நிறையார்புனல் நெய்த்தானன்நல் நிகழ்சேவடி பரவக்
கறையார்கதிர் வாளீந்தவர் கழலேத்துதல் கதியே. ௮

கோலம்முடி நெடுமாலொடு கொய்தாமரை யானும்
சீலம்மறி வரிதாயொளி திகழ்வாயநெய்த் தானம்

காலம்பெற மலர்நீரவை தூவித்தொழு தேத்தும்
ஞாலம்புகழ் அடியாருடல் உறுநோய்நலி யாவே. ௯

மத்தம்மலி சித்தத்திறை மதியில்லவர் சமணர்
புத்தரவர் சொன்னம்மொழி பொருளாவினை யேன்மின்
நித்தம்பயில் நிமலன்உறை நெய்த்தானம தேத்தும்
சித்தம்உடை யடியாருடல் செறுநோயடை யாவே. ௧௦

தலமல்கிய புனற்காழியுள் தமிழ்ஞானசம் பந்தன்
நிலமல்கிய புகழான்மிகு நெய்த்தானனை நிகரில்
பலமல்கிய பாடல்இவை பத்தும்மிக வல்லார்
சிலமல்கிய செல்வன்அடி சேர்வர்சிவ கதியே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருப்புள்ளமங்கை திருஆலந்துறை - பண் - நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

பாலுந்துறு திரளாயின பரமன்பிர மன்தான்
போலுந்திற லவர்வாழ்தரு பொழில்சூழ்புள மங்கைக்
காலன்திற லறச்சாடிய கடவுள்ளிடங் கருதில்
ஆலந்துறை தொழுவார்தமை யடையாவினை தானே. ௧

மலையான்மகள் கணவன்மலி கடல்சூழ்தரு தன்மைப்
புலையாயின களைவானிடம் பொழில்சூழ்புள மங்கைக்
கலையால்மலி மறையோரவர் கருதித்தொழு தேத்த
அலையார்புனல் வருகாவிரி யாலந்துறை யதுவே. ௨

கறையார்மிட றுடையான்கமழ் கொன்றைச்சடை முடிமேல்
பொறையார்தரு கங்கைப்புன லுடையான்புள மங்கைச்
சிறையார்தரு களிவண்டறை பொழில்சூழ்திருவாலந்
துறையானவன் நறையார்கழல் தொழுமின்துதி செய்தே. ௩

தணியார்மதி யரவின்னொடு வைத்தானிடம் மொய்த்தெம்
பணியாயவன் அடியார்தொழு தேத்தும்புள மங்கை
மணியார்தரு கனகம்அவை வயிரத்திர ளோடும்
அணியார்மணல் அணைகாவிரி யாலந்துறை யதுவே. ௪

மெய்த்தன்னுறும் வினைதீர்வகை தொழுமின்செழு மலரின்
கொத்தின்னொடு சந்தாரகில் கொணர்காவிரிக் கரைமேல்
பொத்தின்னிடை யாந்தைபல பாடும்புள மங்கை
அத்தன்நமை யாள்வானிடம் ஆலந்துறை யதுவே. ரு

மன்னானவன் உலகிற்கொரு மழையானவன் பிழையில்
பொன்னானவன் முதலானவன் பொழில்சூழ்புள மங்கை
என்னானவன் இசையானவன் இளஞாயிறின் சோதி
அன்னானவன் உறையும்இடம் ஆலந்துறை யதுவே. சு

முடியார்தரு சடைமேல்முளை யிளவெண்மதி சூடிப்
பொடியாடிய திருமேனியர் பொழில்சூழ்புள மங்கைக்
கடியார்மலர் புனல்கொண்டுதன் கழலேதொழு தேத்தும்
அடியார்தமக் கினியானிடம் ஆலந்துறை யதுவே. எ

இலங்கைமனன் முடிதோளிற எழிலார்திரு விரலால்
விலங்கல்லிடை யடர்த்தானிடம் வேதம்பயின் றேத்திப்
புலன்கள்தமை வென்றார்புக ழவர்வாழ்புள மங்கை
அலங்கல்மலி சடையானிடம் ஆலந்துறை யதுவே. அ

செறியார்தரு வெள்ளைத்திரு நீற்றின்திரு முண்டப்
பொறியார்தரு புரிநூல்வரை மார்பன்புள மங்கை
வெறியார்தரு கமலத்தயன் மாலுந்தனை நாடி
அறியாவகை நின்றானிடம் ஆலந்துறை யதுவே. கூ

நீதியறி யாதாரமண் கையரொடு மண்டைப்
போதியவ ரோதும்உரை கொள்ளார்புள மங்கை
ஆதியவர் கோயில்திரு ஆலந்துறை தொழுமின்
சாதிம்மிகு வானோர்தொழு தன்மைபெற லாமே. க0

பொந்தின்னிடைத் தேனூறிய பொழில்சூழ்புள மங்கை
அந்தண்புனல் வருகாவிரி யாலந்துறை யானைக்
கந்தம்மலி கமழ்காழியுட் கலைஞானசம் பந்தன்
சந்தம்மலி பாடல்சொலி ஆடத்தவ மாமே. கக

திருச்சிற்றம்பலம்

திருஇடும்பாவனம் - பண் - நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

மனமார்தரு மடவாரொடு மகிழ்மைந்தர்கள் மலர்தூய்த்
தனமார்தரு சங்கக்கடல் வங்கத்திர ளுந்திச்
சினமார்தரு திறல்வாளெயிற் றரக்கன்மிகு குன்றில்
இனமாதவர் இறைவர்க்கிடம் இடும்பாவன மிதுவே. க

மலையார்தரு மடவாளொரு பாகம்மகிழ் வெய்தி
நிலையார்தரு நிமலன்வலி நிலவும்புக ழொளிசேர்
கலையார்தரு புலவோரவர் காவல்மிகு குன்றில்
இலையார்தரு பொழில்சூழ்தரும் இடும்பாவன மிதுவே. உ

சீலம்மிகு சித்தத்தவர் சிந்தித்தெழும் எந்தை
ஞாலம்மிகு கடல்சூழ்தரும் உலகத்தவர் நலமார்
கோலம்மிகு மலர்மென்முலை மடவார்மிகு குன்றில்
ஏலங்கமழ் பொழில்சூழ்தரும் இடும்பாவன மிதுவே. ங

பொழிலார்தரு குலைவாழைகள் எழிலார்திகழ் போழ்தில்
தொழிலான்மிகு தொண்டரவர் தொழுதாடிய முன்றில்
குழலார்தரு மலர்மென்முலை மடவார்மிகு குன்றில்
எழிலார்தரும் இறைவர்க்கிடம் இடும்பாவன மிதுவே. ச

பந்தார்விரல் உமையாளொரு பங்காகங்கை முடிமேல்
செந்தாமரை மலர்மல்கிய செழுநீர்வயற் கரைமேல்
கொந்தார்மலர் புன்னைமகிழ் குரவங்கமழ் குன்றில்
எந்தாயென இருந்தானிடம் இடும்பாவன மிதுவே. ரு

நெறிநீர்மையர் நீள்வானவர் நினையும்நினை வாகி
அறிநீர்மையி லெய்தும்அவர்க் கறியும்அறி வருளிக்
குறிநீர்மையர் குணமார்தரு மணமார்தரு குன்றில்
எறிநீர்வயல் புடைசூழ்தரும் இடும்பாவன மிதுவே. சு

நீறேறிய திருமேனியர் நிலவும்உல கெல்லாம்
பாறேறிய படுவெண்டலை கையிற்பலி வாங்காக்
கூறேறிய மடவாளொரு பாகம்மகிழ் வெய்தி
ஏறேறிய இறைவர்க்கிடம் இடும்பாவன மிதுவே. எ

தோரார்தரு திகழ்வாளெயிற் றரக்கன்சிவன் மலையை
ஓராதெடுத் தார்த்தான்முடி யொருபஃதவை நெரித்துக்
கூரார்தரு கொலைவாளொடு குணநாமமுங் கொடுத்த
ஏரார்தரும் இறைவர்க்கிடம் இடும்பாவன மிதுவே. அ

பொருளார்தரு மறையோர்புகழ் விருத்தர்பொலி மலிசீர்த்
தெருளார்தரு சிந்தையொடு சந்தம்மலர் பலதூய்
மருளார்தரு மாயன்அயன் காணார்மய லெய்த
இருளார்தரு கண்டர்க்கிடம் இடும்பாவன மிதுவே. கூ

தடுக்கையுடன் இடுக்கித்தலை பறித்துச்சமண் நடப்பார்
உடுக்கைபல துவர்க்கூறைகள் உடம்பிட்டுழல் வாரும்
மடுக்கண்மலர் வயல்சேர்செந்நெல் மலிநீர்மலர்க் கரைமேல்
இடுக்கண்பல களைவானிடம் இடும்பாவன மிதுவே. கo.

கொடியார்நெடு மாடக்குன்ற ளூரிற்கரைக் கோல
இடியார்கட லடிவீழ்தரும் இடும்பாவனத் திறையை
அடியாயுமந் தணர்காழியுள் அணிஞானசம் பந்தன்
படியாற்சொன்ன பாடல்சொலப் பறையும்வினை தானே. கக.

திருச்சிற்றம்பலம்

திருநின்றியூர் - பண் - நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

சூலம்படை சுண்ணப்பொடி சாந்தஞ்சுடு நீறு
பாலம்மதி பவளச்சடை முடிமேலது பண்டைக்
காலன்வலி காலின்னொடு போக்கிக்கடி கமழும்
நீலம்மலர்ப் பொய்கைநின்றி யூரின்நிலை யோர்க்கே. க

அச்சம்இலர் பாவம்இலர் கேடும்இல ரடியார்
நிச்சம்உறு நோயும்இலர் தாமுந்நின்றி யூரில்
நச்சம்மிட றுடையார்நறுங் கொன்றைநயந் தாளும்
பச்சம்உடை யடிகள்திருப் பாதம்பணி வாரே. உ

பறையின்னொலி சங்கின்னொலி பாங்காரவு மார
அறையும்ஒலி யெங்கும்அவை யறிவாரவர் தன்மை

நிறையும்புனல் சடைமேலுடை யடிகள்நின்றி யூரில்
உறையும்இறை யல்லதென துள்ளம் உணராதே. ௩

பூண்டவ்வரை மார்பிற்புரி நூலன்விரி கொன்றை
ஈண்டவ்வத னோடும்ஒரு பாலம்மதி யதனைத்
தீண்டும்பொழில் சூழ்ந்ததிரு நின்றியது தன்னில்
ஆண்டகழல் தொழிலல்லது அறியாரவ ரறிவே. ௪

குழலின்னிசை வண்டின்னிசை கண்டுகுயில் கூவும்
நிழலின்எழில் தாழ்ந்தபொழில் சூழ்ந்தநின்றி யூரில்
அழலின்வலன் அங்கையது ஏந்தியன லாடும்
கழலின்ஒலி யாடும்புரி கடவுள்களை கண்ணே. ௫

மூரன்முறு வல்வெண்ணகை யுடையாளொரு பாகம்
சாரன்மதி யதனோடுடன் சலவஞ்சடை வைத்த
வீரன்மலி யழகார்பொழில் மிடையுந்திரு நின்றி
ஊரன்கழ லல்லாதென துள்ளம்உண ராதே. ௬

பற்றியொரு தலைகையினில் ஏந்திப்பலி தேரும்
பெற்றியது வாகித்திரி தேவர்பெரு மானார்
சுற்றியொரு வேங்கையத ளோடும்பிறை சூடும்
நெற்றியொரு கண்ணார்நின்றி யூரின்நிலை யாரே. ௭, ௮

நல்லம்மலர் மேலானொடு ஞாலம்அது வுண்டான்
அல்லரென ஆவரென நின்றும்அறி வரிய
நெல்லின்பொழில் சூழ்ந்தநின்றி யூரில்நிலை யாரெம்
செல்வரடி யல்லாதென சிந்தையுண ராதே. ௯

நெறியில்வரு பேராவகை நினையாநினை வொன்றை
அறிவில்சமண் ஆதருரை கேட்டும்அய ராதே
நெறியில்லவர் குறிகள்நினை யாதேநின்றி யூரில்
மறியேந்திய கையானடி வாழ்த்தும்அது வாழ்த்தே. ௧௦

குன்றம்அது எடுத்தானுடல் தோளும்நெரி வாக
நின்றங்கொரு விரலாலுற வைத்தான்நின்றி யூரை
நன்றார்தரு புகலித்தமிழ் ஞானம்மிகு பந்தன்
குன்றாத்தமிழ் சொல்லக்குறை வின்றிநிறை புகழே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருக்கழுமலம் - திருவிராகம். பண் - நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

பிறையணி படர்சடை முடியிடை பெருகிய புனலுடை யவனிறை
இறையணி வளையிணை முலையவ ளிணைவன தெழிலுடை யிடவகை
கறையணி பொழில்நிறை வயலணி கழுமலம் அமர்கன லுருவினன்
நறையணி யலர்நறு விரைபுல்கு நலமலி கழல்தொழன் மருவுமே. க

பிணிபடு கடல்பிற விகளறல் எளிதுள ததுபெரு கியதிரை
அணிபடு கழுமலம் இனிதம ரனலுரு வினன்அவிர் சடைமிசை
தணிபடு கதிர்வள ரிளமதி புனைவனை யுமைதலை வனைநிறம்
மணிபடு கறைமிட றனைநலம் மலிகழ லிணைதொழன் மருவுமே. உ

வரியுறு புலியத ளுடையினன் வளர்பிறை யொளிகிளர் கதிர்பொதி
விரியுறு சடைவிரை புரைபொழில் விழவொலி மலிகழு மலம்அமர்
எரியுறு நிறஇறை வனதடி யிரவொடு பகல்பர வுவர்தம
தெரியுறு வினைசெறி கதிர்முனை யிருள்கெட நனிநினை வெய்துமதே.

வினைகெட மனநினை வதுமுடி கெனில்நனி தொழுதெழு குலமதி
புனைகொடி யிடைபொருள் தருபடு களிறின துரிபுதை யுடலினன்
மனைகுட வயிறுடை யனசில வருகுறள் படையுடை யவன்மலி
கனைகட லடைகழு மலம்அமர் கதிர்மதி யினன்அதிர் கழல்களே. ச

தலைமதி புனல்விட அரவிவை தலைமைய தொருசடை யிடையுடன்
நிலைமரு வவொரிட மருளினன் நிழன்மழு வினொடழல் கணையினன்
மலைமரு வியசிலை தனின்மதி லெரியுண மனமரு வினன்நல
கலைமரு வியபுற வணிதரு கழுமலம் இனிதமர் தலைவனே. ரு

வரைபொரு திழியரு விகள்பல பருகொரு கடல்வரி மணலிடை
கரைபொரு திரையொலி கெழுமிய கழுமலம் அமர்கன லுருவினன்,
அரைபொரு புலியதன் உடையினன் அடியிணை தொழவரு வினை
யெனும், உரைபொடி படவுறு துயர்கெட வுயருல கெய்தலொரு தலை
மையே. சு

முதிருறு கதிர்வளர் இளமதி சடையனை நறநிறை தலைதனில்
உதிருறு மயிர்பிணை தவிர்தசை யுடைபுலி யதளிடை யிருள்கடி
கதிருறு சுடரொளி கெழுமிய கழுமலம் அமர்மழு மலிபடை
அதிருறு கழலடி களதடி தொழுமறி வலதறி வறியமே. எ

கடலென நிறநெடு முடியவ னடுதிறல் தெறஅடி சரணென
அடல்நிறை படையரு ளியபுக ழரவரை யினன்அணி கிளர்பிறை
விடம்நிறை மிடறுடை யவன்விரி சடையவன் விடையுடையவனுமை
உடனுறை பதிகடன் மறுகுடை யுயர்கழு மலவியன் நகரதே. அ

கொழுமல ருறைபதி யுடையவன் நெடியவ னெனவிவர் களுமவன்
விழுமையை யளவறி கிலரிறை விரைபுணர் பொழிலணி விழவமர்
கழுமலம் அமர்கன லுருவினன் அடியிணை தொழுமவ ரருவினை
எழுமையு மிலநில வகைதனி லெளிதிமை யவர்விய னுலகமே. ௯

அமைவன துவரிழு கியதுகி லணியுடை யினர்அமண் உருவர்கள்
சமையமும் ஒருபொரு ளெனுமவை சலநெறி யனஅற வுரைகளும்
இமையவர் தொழுகழு மலமம ரிறைவன தடிபர வுவர்தமை
நமையல வினைநல னடைதலி லுயர்நெறி நனிநணு குவர்களே. ௧௦

பெருகிய தமிழ்விர கினன்மலி பெயரவ னுறைபிணர் திரையொடு
கருகிய நிறவிரி கடலடை கழுமலம் உறைவிட மெனநனி
பெருகிய சிவனடி பரவிய பிணைமொழி யனவொரு பதமுடன்
மருவிய மனமுடை யவர்மதி யுடையவர் விதியுடை யவர்களே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருவீழிமிழலை - திருவிராகம். பண் - நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

தடநில வியமலை நிறுவியோர் தழலுமிழ் தருபட அரவுகொ
டடல்அசு ரரொடம ரர்கள்அலை கடல்கடை வுழியெழு மிகுசின
விடம்அடை தருமிட றுடையவன் விடைமிசை வருமவ னுறைபதி
திடமலி தருமறை முறையுணர் மறையவர் நிறைதிரு மிழலையே. ௧

தரையொடு திவிதல நலிதரு தகுதிற லுறுசல தரனது
வரையன தலைவிசை யொடுவரு திகிரியை அரிபெற அருளினன்
உரைமலி தருசுர நதிமதி பொதிசடை யவனுறை பதிமிகு
திரைமலி கடல்மண லணிதரு பெறுதிடர் வளர்திரு மிழலையே. ௨

மலைமகள் தனையிகழ் வதுசெய்த மதியறு சிறுமன வனதுயர்
தலையினொ டழலுரு வனகரம் அறமுனி வுசெய்தவ னுறைபதி

கலைநில வியபுல வர்களிடர் களைதரு கொடைபயில் பவர்மிகு
சிலைமலி மதின்புடை தழுவிய திகழ்பொழில் வளர்திரு மிழலையே. ௩

மருவலர் புரமெரி யினின்மடி தரவொரு கணைசெல நிறுவிய
பெருவலி யினன்நலம் மலிதரு கரனுர மிகுபிணம் அமர்வன
இருளிடை யடையுற வொடுநட விசையுறு பரனினி துறைபதி
தெருவினில் வருபெரு விழவொலி மலிதர வளர்திரு மிழலையே. ௪

அணிபெறு வடமர நிழலினி லமர்வொடும் அடியிணை யிருவர்கள்
பணிதர அறநெறி மறையொடும் அருளிய பரனுறை விடமொளி
மணிபொரு வருமர கதநில மலிபுன லணைதரு வயலணி
திணிபொழில் தருமணம் மதுநுக ரறுபத முரல்திரு மிழலையே. ௫

வசையறு வலிவன சரவுரு வதுகொடு நினைவரு தவமுயல்
விசையன திறன்மலை மகளறி வுறுதிற லமர்மிடல் கொடுசெய்து
அசைவில படையருள் புரிதரு மவனுறை பதியது மிகுதரு
திசையினின் மலர்குல வியசெறி பொழின்மலி தருதிரு மிழலையே. ௬

நலமலி தருமறை மொழியொடு நதியுறு புனல்புகை யொளிமுதல்
மலரவை கொடுவழி படுதிறன் மறையவ னுயிரது கொளவரு
சலமலி தருமற லிதனுயிர் கெடவுதை செய்தவ னுறைபதி
திலகமி தெனவுல குகள்புகழ் தருபொழி லணிதிரு மிழலையே. ௭

அரனுறை தருகயி லையைநிலை குலைவது செய்ததச முகனது
கரமிரு பதுநெரி தரவிரல் நிறுவிய கழலடி யுடையவன்
வரன்முறை யுலகவை தருமலர் வளர்மறை யவன்வழி வழுவிய
சிரமது கொடுபலி திரிதரு சிவனுறை பதிதிரு மிழலையே. ௮

அயனொடும் எழிலமர் மலர்மகள் மகிழ்கணன் அளவிட லொழியவொர்
பயமுறு வகைதழல் நிகழ்வதொர் படியுரு வதுவர வரன்முறை
சயசய வெனமிகு துதிசெய வெளியுரு வியவவ னுறைபதி
செயநில வியமதில் மதியது தவழ்தர வுயர்திரு மிழலையே. ௯

இகழுரு வொடுபறி தலைகொடு மிழிதொழில் மலிசமண் விரகினர்
திகழ்துவ ருடையுடல் பொதிபவர் கெடஅடி யவர்மிக அருளிய
புகழுடை யிறையுறை பதிபுன லணிகடல் புடைதழு வியபுவி
திகழ்சுரர் தருநிகர் கொடையினர் செறிவொடு திகழ்திரு மிழலையே. ௧0

சினமலி கரியுரி செய்தசிவ னுறைதரு திருமிழ லையைமிகு
தனமனர் சிரபுர நகரிறை தமிழ்விர கனதுரை யொருபதும்
மனமகிழ் வொடுபயில் பவரெழின் மலர்மகள் கலைமகள் சயமகள்
இனமலி புகழ்மக ளிசைதர இருநில னிடையினி தமர்வரே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருச்சிவபுரம் - திருவிராகம். பண் - நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

புவம்வளி கனல்புனல் புவிகலை யுரைமறை திரிகுணம் அமர்நெறி
திவமலி தருசுரர் முதலியர் திகழ்தரும் உயிரவை யவைதம
பவமலி தொழிலது நினைவொடு பதுமநன் மலரது மருவிய
சிவனது சிவபுரம் நினைபவர் செழுநில னினில்நிலை பெறுவரே. ௧

மலைபல வளர்தரு புவியிடை மறைதரு வழிமலி மனிதர்கள்
நிலைமலி சுரர்முதல் உலகுகள் நிலைபெறு வகைநினை வொடுமிகும்
அலைகடல் நடுஅறி துயிலமர் அரியுரு வியல்பர னுறைபதி
சிலைமலி மதிள்சிவ புரநினை பவர்திரு மகளொடு திகழ்வரே. ௨

பழுதில கடல்புடை தழுவிய படிமுத லியவுல குகள்மலி
குழுவிய சுரர்பிறர் மனிதர்கள் குலம்மலி தருமுயி ரவையவை
முழுவதும் அழிவகை நினைவொடு முதலுரு வியல்பர னுறைபதி
செழுமணி யணிசிவ புரநகர் தொழுமவர் புகழ்மிகு முலகிலே. ௩

நறைமலி தருமள றொடுமுகை நகுமலர் புகைமிகு வளரொளி
நிறைபுனல் கொடுதனை நினைவொடு நியதமும் வழிபடும் அடியவர்
குறைவில பதம்அணை தரஅருள் குணமுடை யிறையுறை வனபதி
சிறைபுன லமர்சிவ புரமது நினைபவர் செயமகன் தலைவரே. ௪

சினமலி யறுபகை மிகுபொறி சிதைதரு வகைவளி நிறுவிய
மனனுணர் வொடுமலர் மிசையெழு தருபொருள் நியதமும் உணர்பவர்
தனதெழி லுருவது கொடுஅடை தகுபர னுறைவது நகர்மதிள்
கனமரு வியசிவ புரம்நினை பவர்கலை மகள்தர நிகழ்வரே. ௫

சுருதிகள் பலநல முதல்கலை துகளறு வகைபயில் வொடுமிகு
உருவிய லுலகவை புகழ்தர வழியொழு குமெயுறு பொறியொழி

அருதவ முயல்பவர் தனதடி யடைவகை நினையா னுறைபதி
திருவருள் சிவபுரம் நினைபவர் திகழ்குலன் நிலனிடை நிகழுமே. ௬

கதம்மிகு கருவுரு வொடுவுகி ரிடவட வரைகண கணவென
மதம்மிகு நெடுமுக னமர்வளை மதிதிக ழெயிறதன் நுதிமிசை
இதமமர் புவியது நிறுவிய எழிலரி வழிபட அருள்செய்த
பதமுடை யவனமர் சிவபுரம் நினைபவர் நிலவுவர் படியிலே. எ

அசைவுறு தவமுயல் வினில்அயன் அருளினில் வருவலி கொடுசிவன்
இசைகயி லையையெழு தருவகை யிருபது கரமவை நிறுவிய
நிசிசரன் முடியுடை தரவொரு விரல்பணி கொளுமவ னுறைபதி
திசைமலி சிவபுரம் நினைபவர் செழுநில னினில்நிகழ் வுடையரே. அ

அடல்மலி படையரி அயனொடும் அறிவரி யதொரழல் மலிதரு
சுடருரு வொடுநிகழ் தரவவர் வெருவொடு துதியது செயவெதிர்
விடமலி களநுத லமர்கண துடையுரு வெளிபடு மவன்நகர்
திடமலி பொழிலெழில் சிவபுரம் நினைபவர் வழிபுவி திகழுமே. ௯

குணமறி வுகள்நிலை யிலபொரு ளுரைமரு வியபொருள் களுமில
திணமெனு மவரொடு செதுமதி மிகுசம ணருமலி தமதுகை
உணலுடை யவருணர் வருபர னுறைதரு பதியுல கினில்நல
கணமரு வியசிவ புரம்நினை பவரெழி லுருவுடை யவர்களே. ௧0

திகழ்சிவ புரநகர் மருவிய சிவனடி யிணைபணி சிரபுர
நகரிறை தமிழ்விர கனதுரை நலம்மலி யொருபதும் நவில்பவர்
நிகழ்குலம் நிலம்நிறை திருவுரு நிகரில கொடைமிகு சயமகள்
புகழ்புவி வளர்வழி யடிமையின் மிகைபுணர் தரநலம் மிகுவரே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருமறைக்காடு - திருவிராகம். பண் - நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

சிலைதனை நடுவிடை நிறுவியொர் சினம்மலி அரவது கொடுதிவி
தலம்மலி சுரரசு ரர்களொலி சலசல கடல்கடை வுழிமிகு
கொலைமலி விடமெழ அவருடல் குலைதர வதுநுகர் பவனெழில்
மலைமலி மதில்புடை தழுவிய மறைவனம் அமர்தரு பரமனே. ௧

காமுத லியஅவ யவமவை கடவிட அரவது கொடுவரு
வான்முறை யணிதரும் அவனடல் வலிமிகு புலியத ளுடையினன்
இரவலர் துயர்கெடு வகைநினை யிமையவர் புரமெழில் பெறவளர்
மரம்நிகர் கொடைமனி தர்கள்பயில் மறைவனம் அமர்தரு பரமனே.

இழைவளர் தருமுலை மலைமக ளினிதுறை தருமெழி லுருவினன்
முழையினின் மிகுதயி லுறுமரி முசிவொடும் எழுமுள ரியொடெழு
கழைநுகர் தருகரி யிரிதரு கயிலையின் மலிபவ னிருளுறும்
மழைதவழ் தருபொழில் நிலவிய மறைவனம் அமர்தரு பரமனே. ௩

நலம்மிகு திருவித ழியின்மலர் நகுதலை யொடுகன கியின்முகை
பலசுரம் நதிபட அரவொடு மதிபொதி சடைமுடி யினன்மிகு
தலம்நில வியமனி தர்களொடு தவமுயல் தருமுனி வர்கள்தம
மலம்அற வகைமனம் நினைதரு மறைவனம் அமர்தரு பரமனே. ௪

கதிமலி களிறது பிளிறிட வுரிசெய்த அதிகுண னுயர்பசு
பதியதன் மிசைவரு பசுபதி பலகலை யவைமுறை முறையுணர்
விதியறி தருநெறி யமர்முனி கணனொடு மிகுதவம் முயல்தரும்
அதிநிபு ணர்கள்வழி படவளர் மறைவனம் அமர்தரு பரமனே. ௫

கறைமலி திரிசிகை படையடல் கனல்மழு வெழுதர வெறிமறி
முறைமுறை யொலிதம ருகமுடை தலைமுகிழ் மலிகணி வடமுகம்
உறைதரு கரனுல கினிலுய ரொளிபெறு வகைநினை வொடுமலர்
மறையவன் மறைவழி வழிபடு மறைவனம் அமர்தரு பரமனே. ௬

இருநில னதுபுன லிடைமடி தரஎரி புகஎரி யதுமிகு
பெருவளி யினில்அவி தரவளி கெடவிய னிடைமுழு வதுகெட
இருவர்க ளுடல்பொறை யொடுதிரி யெழிலுரு வுடையவன் இனமலர்
மருவிய அறுபதம் இசைமுரல் மறைவனம் அமர்தரு பரமனே ௭

சனம்வெரு வுறவரு தசமுக னொருபது முடியொடும் இருபது
கனமரு வியபுயம் நெரிவகை கழலடி யிலொர்விரல் நிறுவினன்
இனமலி கணநிசி சரன்மகிழ் வுறஅருள் செய்தகரு ணையனென
மனமகிழ் வொடுமறை முறையுணர் மறைவனம் அமர்தரு பரமனே.

அணிமலர் மகள்தலை மகன்அயன் அறிவரி யதொர்பரி சினிலெரி
திணிதரு திரளுரு வளர்தர அவர்வெரு வுறலொடு துதிசெய்து

பணியுற வெளியுரு வியபா னவனுறை மலிகடல் திரளெழும்
மணிவள ரொளிவெயில் மிகுதரு மறைவனம் அமர்தரு பரமனே. ௯

இயல்வழி தரவிது செலவுற இனமயி லிறகுறு தழையொடு
செயல்மரு வியசிறு கடமுடி யடைகையர் தலைபறி செய்துதவம்
முயல்பவர் துவர்படம் உடல்பொதி பவரறி வருபரன் அவனணி
வயலினில் வளைவளம் மருவிய மறைவனம் அமர்தரு பரமனே. ௧௦

வசையறு மலர்மகள் நிலவிய மறைவனம் அமர்பர மனைநினை
பசையொடு மிகுகலை பலபயில் புலவர்கள் புகழ்வழி வளர்தரு
இசையமர் கழுமல நகரிறை தமிழ்விர கனதுரை யியல்வல
இசைமலி தமிழொரு பதும்வல அவருல கினிலெழில் பெறுவரே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருக்கோலக்கா - பண் - தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

மடையில் வாளை பாய மாதரார்
குடையும் பொய்கைக் கோலக் காவுளான்
சடையும் பிறையுஞ் சாம்பற் பூச்சுங்கீழ்
உடையுங் கொண்ட வுருவ மென்கொலோ. ௧

பெண்தான் பாக மாகப் பிறைச்சென்னி
கொண்டான் கோலக் காவு கோயிலாக்
கண்டான் பாதங் கையாற் கூப்பவே
உண்டான் நஞ்சை உலக முய்யவே. ௨

பூணற் பொறிகொள் அரவம் புன்சடை
கோணற் பிறையன் குழகன் கோலக்கா
மாணப் பாடி மறைவல் லானையே
பேணப் பறையும் பிணிக ளானவே. ௩

தழுக்கொள் பாவந் தளர வேண்டுவீர்
மழுக்கொள் செல்வன் மறிசே ரங்கையான்
குழுக்கொள் பூதப் படையான் கோலக்கா
இழுக்கா வண்ணம் ஏத்தி வாழ்மினே. ௪

மயிலார் சாயல் மாதோர் பாகமா
எயிலார் சாய எரித்த எந்தைதன்
குயிலார் சோலைக் கோலக் காவையே
பயிலா நிற்கப் பறையும் பாவமே. ரு

வெடிகொள் வினையை வீட்ட வேண்டுவீர்
கடிகொள் கொன்றை கலந்த சென்னியான்
கொடிகொள் விழவார் கோலக் காவுளெம்
அடிகள் பாதம் அடைந்து வாழ்மினே. சு

நிழலார் சோலை நீல வண்டினங்
குழலார் பண்செய் கோலக் காவுளான்
கழலால் மொய்த்த பாதங் கைகளால்
தொழலார் பக்கல் துயர மில்லையே. எ

எறியார் கடல்சூழ் இலங்கைக் கோன்றனை
முறியார் தடக்கை யடர்த்த மூர்த்திதன்
குறியார் பண்செய் கோலக் காவையே
நெறியால் தொழுவார் வினைகள் நீங்குமே. அ

நாற்ற மலர்மேல் அயனும் நாகத்தில்
ஆற்ற லணைமே லவனுங் காண்கிலாக்
கூற்ற முதைத்த குழகன் கோலக்கா
ஏற்றான் பாதம் ஏத்தி வாழ்மினே. கூ

பெற்ற மாசு பிறக்குஞ் சமணரும்
உற்ற துவர்தோ யுருவி லாளருங்
குற்ற நெறியார் கொள்ளார் கோலக்காப்
பற்றிப் பரவப் பறையும் பாவமே. க0

நலங்கொள் காழி ஞானசம் பந்தன்
குலங்கொள் கோலக் காவு ளானையே
வலங்கொள் பாடல் வல்ல வாய்மையார்
உலங்கொள் வினைபோய் ஓங்கி வாழ்வரே. கக

திருச்சிற்றம்பலம்

சீகாழி - பண் - தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

பூவார் கொன்றைப் புரிபுன் சடையீசா
காவா யெனநின் றேத்துங் காழியார்
மேவார் புரமூன் றட்டா ரவர்போலாம்
பாவா ரின்சொற் பயிலும் பரமரே. க

எந்தை யென்றங் கிமையோர் புகுந்தீண்டிக்
கந்த மாலை கொடுசேர் காழியார்
வெந்த நீற்றர் விமல ரவர்போலாம்
அந்தி நட்டம் ஆடும் அடிகளே. உ

தேனை வென்ற மொழியா ளொருபாகங்
கான மான்கைக் கொண்ட காழியார்
வான மோங்கு கோயி லவர்போலாம்
ஆன இன்பம் ஆடும் அடிகளே. ௩

மாணா வென்றிக் காலன் மடியவே
காணா மாணிக் களித்த காழியார்
நாணார் வாளி தொட்டா ரவர்போலாம்
பேணார் புரங்கள் அட்ட பெருமானே. ௪

மாடே ஓதம் எறிய வயற்செந்நெல்
காடே றிச்சங் கீனுங் காழியார்
வாடா மலராள் பங்க ரவர்போலாம்
ஏடார் புரமூன் றெரித்த இறைவரே. ரு

கொங்கு செருந்தி கொன்றை மலர்கூடக்
கங்கை புனைந்த சடையார் காழியார்
அங்கண் அரவம் ஆட்டும் அவர்போலாஞ்
செங்கண் அரக்கர் புரத்தை யெரித்தாரே. சு

கொல்லை விடைமுன் பூதங் குனித்தாடுங்
கல்ல வடத்தை யுகப்பார் காழியார்
அல்ல விடத்து நடந்தா ரவர்போலாம்
பல்ல விடத்தும் பயிலும் பரமரே. எ

எடுத்த அரக்கன் நெரிய விரலூன்றிக்
கடுத்து முரிய அடர்த்தார் காழியார்
எடுத்த பாடற் கிரங்கு மவர்போலாம்
பொடிக்கொள் நீறு பூசும் புனிதரே. அ

ஆற்ற லுடைய அரியும் பிரமனுந்
தோற்றங் காணா வென்றிக் காழியார்
ஏற்ற மேறங் கேறு மவர்போலாங்
கூற்றம் அறுகக் குமைத்த குழகரே. கூ

பெருக்கப் பிதற்றுஞ் சமணர் சாக்கியர்
காக்கும் உரையை விட்டார் காழியார்
இருக்கின் மலிந்த இறைவ ரவர்போலாம்
அருப்பின் முலையாள் பங்கத் தையரே. க0

காரார் வயல்சூழ் காழிக் கோன்றனைச்
சீரார் ஞான சம்பந் தன்சொன்ன
பாரார் புகழப் பரவ வல்லவர்
ஏரார் வானத் தினிதா இருப்பரே. கக

திருச்சிற்றம்பலம்

திருச்செம்பொன்பள்ளி - பண் - தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

மருவார் குழலி மாதோர் பாகமாய்த்
திருவார் செம்பொன் பள்ளி மேவிய
கருவார் கண்டத் தீசன் கழல்களை
மருவா தவர்மேல் மன்னும் பாவமே. க

வாரார் கொங்கை மாதோர் பாகமாய்ச்
சீரார் செம்பொன் பள்ளி மேவிய
ஏரார் புரிபுன் சடையெம் ஈசனைச்
சேரா தவர்மேற் சேரும் வினைகளே. உ

வரையார் சந்தோ டகிலும் வருபொன்னித்
திரையார் செம்பொன் பள்ளி மேவிய

நரையார் விடையொன் றூரும் நம்பனை
உரையா தவர்மே லொழியா வூனமே. ங

மழுவா ளேந்தி மாதோர் பாகமாய்ச்
செழுவார் செம்பொன் பள்ளி மேவிய
எழிலார் புரிபுன் சடையெம் இறைவனைத்
தொழுவார் தம்மேல் துயர மில்லையே. ச

மலையான் மகளோ டுடனாய் மதிலெய்த
சிலையார் செம்பொன் பள்ளி யானையே
இலையார் மலர்கொண் டெல்லி நண்பகல்
நிலையா வணங்க நில்லா வினைகளே. ரு

அறையார் புனலோ டகிலும் வருபொன்னிச்
சிறையார் செம்பொன் பள்ளி மேவிய
கறையார் கண்டத் தீசன் கழல்களை
நிறையால் வணங்க நில்லா வினைகளே. சு

பையார் அரவே ரல்கு லாளொடும்
செய்யார் செம்பொன் பள்ளி மேவிய
கையார் சூல மேந்து கடவுளை
மெய்யால் வணங்க மேவா வினைகளே. எ

வானார் திங்கள் வளர்புன் சடைவைத்துத்
தேனார் செம்பொன் பள்ளி மேவிய
ஊனார் தலையிற் பலிகொண் டுழல்வாழ்க்கை
ஆனான் கழலே அடைந்து வாழ்மினே. அ

காரார் வண்ணன் கனகம் அனையானும்
தேரார் செம்பொன் பள்ளி மேவிய
நீரார் நிமிர்புன் சடையெம் நிமலனை
ஓரா தவர்மே லொழியா வூனமே. கூ

மாசா ருடம்பர் மண்டைத் தேரரும்
பேசா வண்ணம் பேசித் திரியவே
தேசார் செம்பொன் பள்ளி மேவிய
ஈசா என்ன நில்லா இடர்களே. கo

நறவார் புகலி ஞான சம்பந்தன்
செறுவார் செம்பொன் பள்ளி மேயானைப்
பெறுமா றிசையாற் பாட லிவைபத்தும்
உறுமா சொல்ல வோங்கி வாழ்வரே. கக

திருச்சிற்றம்பலம்

திருப்புத்தூர் - பண் - தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

வெங்கள் விம்மு வெறியார் பொழிற்சோலை
திங்க ளோடு திளைக்குந் திருப்புத்தூர்க்
கங்கை தங்கு முடியா ரவர்போலும்
எங்கள் உச்சி உறையும் இறையாரே. க

வேனல் விம்மு வெறியார் பொழிற்சோலைத்
தேனும் வண்டுந் திளைக்குந் திருப்புத்தூர்
ஊனம் இன்றி யுறைவா ரவர்போலும்
ஏனம் முள்ளும் எயிறும் புனைவாரே. உ

பாங்கு நல்ல வரிவண் டிசைபாடத்
தேங்கொள் கொன்றை திளைக்குந் திருப்புத்தூர்
ஓங்கு கோயில் உறைவா ரவர்போலும்
தாங்கு திங்கள் தவழ்புன் சடையாரே. ங

நாற விண்ட நறுமா மலர் கவ்வித்
தேறல் வண்டு திளைக்குந் திருப்புத்தூர்
ஊறல் வாழ்க்கை யுடையா ரவர்போலும்
ஏறு கொண்ட கொடியெம் இறையாரே. ச

இசைவி ளங்கும் எழில்சூழ்ந் தியல்பாகத்
திசைவி ளங்கும் பொழில்சூழ் திருப்புத்தூர்
பசைவி ளங்கப் படித்தா ரவர்போலும்
வசைவி ளங்கும் வடிசேர் நுதலாரே. ரு

வெண்ணி றத்த விரையோ டலருந்தித்
தெண்ணி றத்த புனல்பாய் திருப்புத்தூர்

ஒண்ணி றத்த ஒளியா ரவர்போலும்
வெண்ணி றத்த விடைசேர் கொடியாரே. சு

நெய்த லாம்பல் கழுநீர் மலர்ந்தெங்கும்
செய்கண் மல்கு சிவனூர் திருப்புத்தூர்த்
தையல் பாகம் மகிழ்ந்தா ரவர்போலும்
மையுள் நஞ்ச மருவும் மிடற்றூரே. எ

கருக்கம் எல்லாங் கமழும் பொழிற்சோலைத்
திருக்கொள் செம்மை விழவார் திருப்புத்தூர்
இருக்க வல்ல இறைவ ரவர்போலும்
அரக்கன் ஒல்க விரலால் அடர்த்தாரே. அ

மருவி யெங்கும் வளரும் மடமஞ்ஞை
தெருவு தோறுந் திளைக்குந் திருப்புத்தூர்ப்
பெருகி வாழும் பெருமா னவன்போலும்
பிரமன் மாலும் அறியாப் பெரியோனே. கு

கூறை போர்க்குந் தொழிலா ரமண்கூறல்
தேறல் வேண்டா தெளிமின் திருப்புத்தூர்
ஆறும் நான்கும் அமர்ந்தா ரவர்போலும்
ஏறு கொண்ட கொடியெம் இறையாரே. க0

நல்ல கேள்வி ஞான சம்பந்தன்
செல்வர் சேடர் உறையுந் திருப்புத்தூர்ச்
சொல்லல் பாடல் வல்லார் தமக்கென்றும்
அல்லல் தீரும் அவலம் அடையாவே. கக

திருச்சிற்றம்பலம்

திருப்புன்கூர் - பண் - தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

முந்தி நின்ற வினைக ளவைபோகச்
சிந்தி நெஞ்சே சிவனூர் திருப்புன்கூர்
அந்தம் இல்லா அடிகள் அவர்போலும்
கந்தம் மல்கு கமழ்புன் சடையாரே. க

மூவ ராய முதல்வர் முறையாலே
தேவ ரெல்லாம் வணங்குந் திருப்புன்கூர்
ஆவ ரென்னும் அடிகள் அவர்போலும்
ஏவின் அல்லார் எயில்மூன் றெரித்தாரே. உ

பங்க யங்கண் மலரும் பழனத்துச்
செங்க யல்கள் திளைக்குந் திருப்புன்கூர்க்
கங்கை தங்கு சடையா ரவர்போலும்
எங்கள் உச்சி உறையும் இறையாரே. ௩

கரையு லாவு கதிர்மா மணிமுத்தம்
திரையு லாவு வயல்சூழ் திருப்புன்கூர்
உரையின் நல்ல பெருமா னவர்போலும்
விரையின் நல்ல மலர்ச்சே வடியாரே. ச

பவள வண்ணப் பரிசார் திருமேனி
திகழும் வண்ணம் உறையுந் திருப்புன்கூர்
அழக ரென்னும் அடிகள் அவர்போலும்
புகழ நின்ற புரிபுன் சடையாரே. ரு

தெரிந்தி லங்கு கழுநீர் வயற்செந்நெல்
திருந்த நின்ற வயல்சூழ் திருப்புன்கூர்ப்
பொருந்தி நின்ற அடிகள் அவர்போலும்
விரிந்தி லங்கு சடைவெண் பிறையாரே. சு

பாரும் விண்ணும் பரவித் தொழுதேத்தும்
தேர்கொள் வீதி விழவார் திருப்புன்கூர்
ஆர நின்ற அடிகள் அவர்போலும்
கூர நின்ற எயில்மூன் றெரித்தாரே. எ

மலைய தனா ருடைய மதில்மூன்றும்
சிலைய தனா லெரித்தார் திருப்புன்கூர்த்
தலைவர் வல்ல அரக்கன் தருக்கினை
மலைய தனா லடர்த்து மகிழ்ந்தாரே. அ

நாட வல்ல மலரான் மாலுமாய்த்
தேட நின்றா ருறையுந் திருப்புன்கூர்

ஆட வல்ல அடிகள் அவர்போலும்
பாட லாடல் பயிலும் பரமரே. கூ

குண்டு முற்றிக் கூறை யின்றியே
பிண்ட முண்ணும் பிராந்தர் சொற்கொளேல்
வண்டு பாட மலரார் திருப்புன்கூர்க்
கண்டு தொழுமின் கபாலி வேடமே. கO

மாடம் மல்கு மதில்சூழ் காழிமன்
சேடர் செல்வ ருறையுந் திருப்புன்கூர்
நாட வல்ல ஞான சம்பந்தன்
பாடல் பத்தும் பரவி வாழ்மினே. கக

திருச்சிற்றம்பலம்

திருச்சோற்றுத்துறை - பண் - தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

செப்ப நெஞ்சே நெறிகொள் சிற்றின்பம்
துப்ப னென்னா தருளே துணையாக
ஒப்ப ரொப்பர் பெருமா னொளிவெண்ணீற்
றப்பர் சோற்றுத் துறைசென் றடைவோமே. க

பாலும் நெய்யுந் தயிரும் பயின்றாடித்
தோலும் நூலுந் துதைந்த வரைமார்பர்
மாலுஞ் சோலை புடைசூழ் மடமஞ்ஞை
ஆலுஞ் சோற்றுத் துறைசென் றடைவோமே. உ

செய்யர் செய்ய சடையர் விடையூர்வர்
கைகொள் வேலர் கழலர் கரிகாடர்
தையல் லாளொர் பாக மாயஎம்
ஐயர் சோற்றுத் துறைசென் றடைவோமே. ௩

பிணிகொ ளாக்கை யொழிய பிறப்புளீர்
துணிகொள் போரார் துளங்கு மழுவாளர்
மணிகொள் கண்டர் மேய வார்பொழில்
அணிகொள் சோற்றுத் துறைசென் றடைவோமே. ௪

பிறையும் அரவும் புனலுஞ் சடைவைத்து
மறையும் ஓதி மயானம் இடமாக
உறையுஞ் செல்வம் உடையார் காவிரி
அறையுஞ் சோற்றுத் துறைசென் றடைவோமே. ரு

துடிக ளோடு முழவம் விம்மவே
பொடிகள் பூசிப் புறங்கா டரங்காகப்
படிகொள் பாணி பாடல் பயின்றாடும்
அடிகள் சோற்றுத் துறைசென் றடைவோமே. சூ

சாடிக் காலன் மாளத் தலைமாலை
சூடி மிக்குச் சுவண்டாய் வருவார்தாம்
பாடி யாடிப் பரவு வாருள்ளத்
தாடி சோற்றுத் துறைசென் றடைவோமே. எ

பெண்ணோர் பாகம் உடையார் பிறைச்சென்னிக்
கண்ணோர் பாகங் கலந்த நுதலினார்
எண்ணா தரக்கன் எடுக்க வூன்றிய
அண்ணல் சோற்றுத் துறைசென் றடைவோமே. அ

தொழுவா ரிருவர் துயரம் நீங்கவே
அழலா யோங்கி அருள்கள் செய்தவன்
விழவார் மறுகில் விதியால் மிக்கஎம்
எழிலார் சோற்றுத் துறைசென் றடைவோமே. கூ

கோது சாற்றித் திரிவார் அமண்குண்டர்
ஓதும் ஓத்தை யுணரா தெழுநெஞ்சே
நீதி நின்று நினைவார் வேடமாம்
ஆதி சோற்றுத் துறைசென் றடைவோமே. க0

அந்தண் சோற்றுத் துறையெம் ஆதியைச்
சிந்தை செய்ம்மின் அடியீ ராயினீர்
சந்தம் பரவு ஞான சம்பந்தன்
வந்த வாறே புனைதல் வழிபாடே. கக

திருச்சிற்றம்பலம்

திருநறையூர்ச்சித்தீச்சரம் - பண் - தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

ஊரு லாவு பலிகொண் டலகேத்த
நீரு லாவு நிமிர்புன் சடையண்ணல்
சீரு லாவு மறையோர் நறையூரில்
சேருஞ் சித்தீச் சரஞ்சென் றடைநெஞ்சே. க

காடும் நாடுங் கலக்கப் பலிநண்ணி
ஓடு கங்கை யொளிர்புன் சடைதாழ
வீடு மாக மறையோர் நறையூரில்
நீடுஞ் சித்தீச் சரமே நினைநெஞ்சே. உ

கல்வி யாளர் கனகம் அழல்மேனி
புல்கு கங்கை புரிபுன் சடையானூர்
மல்கு திங்கள் பொழில்சூழ் நறையூரில்
செல்வர் சித்தீச் சரஞ்சென் றடைநெஞ்சே. ந

நீட வல்ல நிமிர்புன் சடைதாழ
ஆட வல்ல அடிக ளிடமாகும்
பாடல் வண்டு பயிலும் நறையூரில்
சேடர் சித்தீச் சரமே தெளிநெஞ்சே. ச

உம்ப ராலும் உலகின் னவராலும்
தம்பெ ருமைய ளத்தற் கரியானூர்
நண்பு லாவு மறையோர் நறையூரில்
செம்பொன் சித்தீச் சரமே தெளிநெஞ்சே. ரு

கூரு லாவு படையான் விடையேறி
போரு லாவு மழுவான் அனலாடி
பேரு லாவு பெருமான் நறையூரில்
சேருஞ் சித்தீச் சரமே யிடமாமே. சு

அன்றி நின்ற அவுணர் புரமெய்த
வென்றி வில்லி விமலன் விரும்புமூர்
மன்றில் வாசம் மணமார் நறையூரில்
சென்று சித்தீச் சரமே தெளிநெஞ்சே. எ

அரக்கன் ஆண்மை அழிய வரைதன்னல்
நெருக்க வூன்றும் விரலான் விரும்புமூர்
பரக்குங் கீர்த்தி யுடையார் நறையூரில்
திருக்கொள் சித்தீச் சரமே தெளிநெஞ்சே. அ

ஆழி யானும் அலரின் உறைவானும்
ஊழி நாடி உணரார் திரிந்தமேல்
சூழு நேட எரியாம் ஒருவன்சீர்
நீழல் சித்தீச் சரமே நினைநெஞ்சே. கூ

மெய்யின் மாசர் விரிநுண் துகிலிலார்
கையி லுண்டு கழறும் உரைகொள்ளேல்
உய்ய வேண்டில் இறைவன் நறையூரில்
செய்யுஞ் சித்தீச் சரமே தவமாமே. ௧0

மெய்த்து லாவு மறையோர் நறையூரில்
சித்தன் சித்தீச் சரத்தை உயர்காழி
அத்தன் பாதம் அணிஞான சம்பந்தன்
பத்தும் பாடப் பறையும் பாவமே. கக

திருச்சிற்றம்பலம்

திருப்புகலி - பண் - தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

விதியாய்விளை வாய்விளை வின்பய னாகிக்
கொதியாவரு கூற்றை யுதைத்தவர் சேரும்
பதியாவது பங்கய நின்றல ரத்தேன்
பொதியார்பொழில் சூழ்புக லிந்நகர் தானே. க

ஒன்னார்புர மூன்றும் எரித்த ஒருவன்
மின்னாரிடை யாளொடுங் கூடிய வேடம்
தன்னாலுறை வாவது தண்கடல் சூழ்ந்த
பொன்னார்வயற் பூம்புக லிந்நகர் தானே. உ

வலியன்மதி செஞ்சடை வைத்த மணாளன்
புலியின்அதள் கொண்டரை யார்த்த புனிதன்

மலியும்பதி மாமறை யோர்நிறைந் தீண்டிப்
பொலியும்புனற் பூம்புக லிந்நகர் தானே. ௩

கயலார்தடங் கண்ணி யொடும்எரு தேறி
அயலார்கடை யிற்பலி கொண்ட அழகன்
இயலாலுறை யும்மிடம் எண்திசை யோர்க்கும்
புயலார்கடற் பூம்புக லிந்நகர் தானே. ௪

காதார்கன பொற்குழை தோடதி லங்கத்
தாதார்மலர் தண்சடை யேற முடித்து
நாதான்உறை யும்மிட மாவது நாளும்
போதார்பொழிற் பூம்புக லிந்நகர் தானே. ௫

வலமார்படை மான்மழு ஏந்திய மைந்தன்
கலமார்கடல் நஞ்சமு துண்ட கருத்தன்
குலமார்பதி கொன்றைகள் பொன்சொரி யத்தேன்
புலமார்வயற் பூம்புக லிந்நகர் தானே. ௬

கறுத்தான்கன லால்மதில் மூன்றையும் வேவச்
செறுத்தான்திக ழுங்கடல் நஞ்சமு தாக
அறுத்தானயன் தன்சிரம் ஐந்திலும் ஒன்றைப்
பொறுத்தானிடம் பூம்புக லிந்நகர் தானே. ௭

தொழிலால்மிகு தொண்டர்கள் தோத்திரஞ் சொல்ல
எழிலார்வரை யாலன் றரக்கனைச் செற்ற
கழலானுறை யும்மிடங் கண்டல்கள் மிண்டிப்
பொழிலால்மலி பூம்புக லிந்நகர் தானே. ௮

மாண்டார்சுட லைப்பொடி பூசி மயானத்
தீண்டாநட மாடிய வேந்தன்றன் மேனி
நீண்டானிரு வர்க்கெரி யாய்அர வாரம்
பூண்டான்நகர் பூம்புக லிந்நகர் தானே. ௯

உடையார்துகில் போர்த்துழல் வார்சமண் கையர்
அடையாதன சொல்லுவர் ஆதர்கள் ஒத்தைக்
கிடையாதவன் தன்நகர் நன்மலி பூகம்
புடையார்தரு பூம்புக லிந்நகர் தானே. ௰

இரைக்கும்புனல் செஞ்சடை வைத்தஎம் மான்தன்
புரைக்கும்பொழிற் பூம்புக லிந்நகர் தன்மேல்
உரைக்குந்தமிழ் ஞானசம் பந்தனெண் மாலை
வரைக்குந்தொழில் வல்லவர் நல்லவர் தாமே. கக

திருச்சிற்றம்பலம்

திருக்குரங்கணில்முட்டம் - பண் - தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

விழுநீர்மழு வாள்படை அண்ணல் விளங்கும்
கழுநீர்குவ ளைம்மல ரக்கயல் பாயும்
கொழுநீர்வயல் சூழ்ந்த குரங்கணில் முட்டம்
தொழுநீர்மையர் தீதுறு துன்ப மிலரே. க

விடைசேர்கொடி அண்ணல் விளங்குயர் மாடக்
கடைசேர்கரு மென்குளத் தோங்கிய காட்டில்
குடையார்புனல் மல்கு குரங்கணில் முட்டம்
உடையானெனை யாளுடை யெந்தை பிரானே. உ

சூலப்படை யான்விடை யான்சுடு நீற்றான்
காலன்றனை ஆருயிர் வவ்விய காலன்
கோலப்பொழில் சூழ்ந்த குரங்கணில் முட்டத்
தேலங்கமழ் புன்சடை யெந்தை பிரானே. ங.

வாடாவிரி கொன்றை வலத்தொரு காதில்
தோடார்குழை யான்நல பாலன நோக்கிக்
கூடாதன செய்த குரங்கணில் முட்டம்
ஆடாவரு வாரவ ரன்புடை யாரே. ச

இறையார்வளை யாளையொர் பாகத் தடக்கிக்
கறையார்மிடற் றான்கரி கீறிய கையான்
குறையார்மதி சூடி குரங்கணில் முட்டத்
துறைவானெமை யாளுடை யொண்சுட ரானே. ரு

பலவும்பய னுள்ளன பற்றும் ஒழிந்தோம்
கலவம்மயில் காமுறு பேடையொ டாடிக்

குலவும்பொழில் சூழ்ந்த குரங்கணில் முட்டம்
நிலவும்பெரு மானடி நித்தல் நினைந்தே. சு

மாடார்மலர்க் கொன்றை வளர்சடை வைத்துத்
தோடார்குழை தானொரு காதில் இலங்கக்
கூடார்மதி லெய்து குரங்கணில் முட்டத்
தாடாரர வம்மரை யார்த்தமர் வானே. எ

மையார்நிறம் மேனி யரக்கர்தங் கோனை
உய்யாவகை யாலடர்த் தின்னருள் செய்த
கொய்யார்மலர் சூடி குரங்கணில் முட்டம்
கையால்தொழு வார்வினை காண்ட லரிதே. அ

வெறியார்மலர்த் தாமரை யானொடு மாலும்
அறியாதசைந் தேத்தவோர் ஆரழ லாகும்
குறியால்நிமிர்ந் தான்றன் குரங்கணில் முட்டம்
நெறியால்தொழு வார்வினை நிற்ககி லாவே. கூ

சழுவார்துவ ராடை கலந்துமெய் போர்க்கும்
வழுவாச்சமண் சாக்கியர் வாக்கவை கொள்ளேல்
குழுமின்சடை யண்ணல் குரங்கணில் முட்டத்
தெழில்வெண்பிறை யானடி சேர்வ தியல்பே. கO

கல்லார்மதிற் காழியுள் ஞானசம் பந்தன்
கொல்லார்மழு வேந்தி குரங்கணில் முட்டம்
சொல்லார்தமிழ் மாலை செவிக்கினி தாக
வல்லார்க்கெளி தாம்பிற வாவகை வீடே. கக

திருச்சிற்றம்பலம்

திருஇடைமருதூர் - பண் - தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

ஓடேகலன் உண்பதும் ஊரிடு பிச்சை
காடேயிட மாவது கல்லால் நிழற்கீழ்
வாடாமுலை மங்கையுந் தானும் மகிழ்ந்
தீடாவுறை கின்ற இடைமரு தீதோ. க

தடங்கொண்டதோர் தாமரைப் பொன்முடி தன்மேல்
குடங்கொண்டடி யார்குளிர் நீர்சுமந் தாட்டப்
படங்கொண்டதோர் பாம்பரை யார்த்த பரமன்
இடங்கொண்டிருந் தான்றன் இடைமரு தீதோ. ௨

வெண்கோவணங் கொண்டொரு வெண்தலை யேந்தி
அங்கோல்வளை யாளையொர் பாகம் அமர்ந்து
பொங்காவரு காவிரிக் கோலக் கரைமேல்
எங்கோனுறை கின்ற இடைமரு தீதோ. ௩

அந்தம்அறி யாதஅ ருங்கல முந்திக்
கந்தங்கமழ் காவிரிக் கோலக் கரைமேல்
வெந்தபொடிப் பூசிய வேத முதல்வன்
எந்தையுறை கின்ற இடைமரு தீதோ. ௪

வாசங்கமழ் மாமலர்ச் சோலையில் வண்டே
தேசம்புகுந் தீண்டியொர் செம்மை யுடைத்தாய்ப்
பூசம்புகுந் தாடிப் பொலிந்தழ காய
ஈசன்உறை கின்ற இடைமரு தீதோ. ௫

வன்புற்றிள நாகம் அசைத்தழ காக
என்பிற்பல மாலையும் பூண்டெரு தேறி
அன்பிற்பிரி யாதவ ளோடும் உடனாய்
இன்புற்றிருந் தான்றன் இடைமரு தீதோ. ௬

தேக்குந்திமி லும்பல வுஞ்சுமந் துந்திப்
போக்கிப்புறம் பூச லடிப்ப வருமால்
ஆர்க்குந்திரைக் காவிரிக் கோலக் கரைமேல்
ஏற்கஇருந் தான்றன் இடைமரு தீதோ. ௭

பூவார்குழ லார்அகில் கொண்டு புகைப்ப
ஓவாதடி யாரடி உள்குளிர்ந் தேத்த
ஆவாஅரக் கன்றனை ஆற்ற லழித்த
ஏவார்சிலை யான்றன் இடைமரு தீதோ. ௮

முற்றாததொர் பால்மதி சூடும் முதல்வன்
நற்றாமரை யானொடு மால்நயந் தேத்தப்

பொற்றேளியுந் தானும் பொலிந்தழ காக
எற்றேயுறை கின்ற இடைமரு தீதோ. க

சிறுதேரும் சில்சம ணும்புறங் கூற
நெறியேபல பத்தர்கள் கைதொழு தேத்த
வெறியாவரு காவிரிக் கோலக் கரைமேல்
எறியார்மழு வாளன் இடைமரு தீதோ. க0

கண்ணார்கமழ் காழியுள் ஞானசம் பந்தன்
எண்ணார்புக ழெந்தை யிடைமரு தின்மேல்
பண்ணேடிசை பாடிய பத்தும்வல் லார்கள்
விண்ணேருல கத்தினில் வீற்றிருப் பாரே. கக

திருச்சிற்றம்பலம்

திருஅன்பிலாலந்துறை - பண் - தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

கணைநீடெரி மாலர வம்வரை வில்லா
இணையாஎயின் மூன்றும் எரித்த இறைவர்
பிணைமாமயி லுங்குயில் சேர்மட அன்னம்
அணையும்பொழில் அன்பிலா லந்துறை யாரே. க

சடையார்சது ரன்முதி ராமதி சூடி
விடையார்கொடி யொன்றுடை யெந்தை விமலன்
கிடையாரொலி ஓத்தா வத்திசை கிள்ளை
அடையார்பொழில் அன்பிலா லந்துறை யாரே. உ

ஊரும்அர வம்சடை மேலுற வைத்துப்
பாரும்பலி கொண்டொலி பாடும் பரமர்
நீருண்கய லும்வயல் வாளை வராலோ
டாரும்புனல் அன்பிலா லந்துறை யாரே. ரு

பிறையும்அர வும்முற வைத்த முடிமேல்
நறையுண்டெழு வன்னியு மன்னு சடையார்
மறையும்பல வேதிய ரோத ஒலிசென்
றறையும்புனல் அன்பிலா லந்துறை யாரே. ச

நீடும்புனற் கங்கையுந் தங்க முடிமேல்
கூடும்மலை யாளொரு பாகம் அமர்ந்தார்
மாடும்முழ வம்அதி ரம்மட மாதர்
ஆடும்பதி அன்பிலா லந்துறை யாரே. ௫

நீரூர்திரு மேனிய ரூனமி லார்பால்
ஊரூர்சுவை யாகிய உம்பர் பெருமான்
வேரூரகி லும்மிகு சந்தனம் உந்தி
ஆரூர்வயல் அன்பிலா லந்துறை யாரே. ௬

செடியார்தலை யிற்பலி கொண்டினி துண்ட
படியார்பர மன்பர மேட்டிதன் சீரைக்
கடியார்மல ரும்புனல் தூவிநின் றேத்தும்
அடியார்தொழும் அன்பிலா லந்துறை யாரே. ௭

விடத்தார் திகழும்மிட றன்நட மாடி
படத்தாரர வம்விர வுஞ்சடை ஆதி
கொடித்தேரிலங் கைக்குலக் கோன்வரை யார
அடர்த்தாரு மன்பிலா லந்துறை யாரே. ௮

வணங்கிம்மலர் மேலய னும்நெடு மாலும்
பிணங்கியறி கின்றிலர் மற்றும் பெருமை
சுணங்கும்முகத் தம்முலை யாளொரு பாகம்
அணங்குந்திக ழன்பிலா லந்துறை யாரே. ௯

தறியார்துகில் போர்த்துழல் வார்சமண் கையர்
நெறியாவுண ராநிலை கேடினர் நித்தல்
வெறியார்மலர் கொண்டடி வீழும் அவரை
அறிவாரவர் அன்பிலா லந்துறை யாரே. ௧௦

அரவார்புன லன்பிலா லந்துறை தன்மேல்
காவாதவர் காழியுள் ஞானசம் பந்தன்
பாவார்தமிழ் பத்திசை பாடவல் லார்போய்
விரவாகுவர் வானிடை வீடெளி தாமே. ௧௧

திருச்சிற்றம்பலம்

சீகாழி - பண் - தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

அடலே றமருங் கொடியண்ணல்
மடலார் குழலா ளொடுமென்னுங்
கடலார் புடைசூழ் தருகாழி
தொடர்வா ரவர்தூ நெறியாரே. க

திரையார் புனல்சூ டியசெல்வன்
வரையார் மகளோ டுமகிழ்ந்தான்
கரையார் புனல்சூழ் தருகாழி
நிரையார் மலர்தூ வுமின்இன்றே. உ

இடியார் குரல்ஏ றுடையெந்தை
துடியா ரிடையா ளொடுதுன்னுங்
கடியார் பொழில்சூழ் தருகாழி
அடியார் அறியார் அவலம்மே. ௩

ஒளியார் விடமுண் டவொருவன்
அளியார் குழல்மங் கையொடன்பாய்க்
களியார் பொழில்சூழ் தருகாழி
எளிதாம் அதுகண் டவரின்பே. ௪

பனியார் மலரார் தருபாதன்
முனிதா னுமையோ டுமுயங்கிக்
கனியார் பொழில்சூழ் தருகாழி
இனிதாம் அதுகண் டவரீடே. ரு

கொலையார் தருகூற் றமுதைத்து
மலையான் மகளோ டுமகிழ்ந்தான்
கலையார் தொழுதேத் தியகாழி
தலையால் தொழுவார் தலையாரே. சு

திருவார் சிலையால் எயிலெய்து
உருவார் உமையோ டுடனானான்
கருவார் பொழில்சூழ் தருகாழி
மருவா தவர்வான் மருவாரே. எ

அரக்கன் வலியொல் கஅடர்த்து
வரைக்கு மகளோ டுமகிழ்ந்தான்
சுரக்கும் புனல்சூழ் தருகாழி
நிரக்கும் மலர்தூ வுகினைந்தே. ௮

இருவர்க் கெரியா கிநிமிர்ந்தான்
உருவிற் பெரியா ளொடுசேருங்
கருநற் பரவை கமழ்காழி
மருவப் பிரியும் வினைமாய்ந்தே. ௯

சமண் சாக் கியர்தாம் அலர்தூற்ற
அமைந்தான் உமையோ டுடன்அன்பாய்க்
கமழ்ந்தார் பொழில்சூழ் தருகாழி
சுமந்தார் மலர்தூ வுதல்தொண்டே. ௧௦

நலமா கியஞா னசம்பந்தன்
கலமார் கடல்சூழ் தருகாழி
நிலையா கநினைந் தவர்பாடல்
வலரா னவர்வான் அடைவாரே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருவீழிமிழலை - பண் - தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

அரையார் விரிகோ வணஆடை
நரையார் விடையூர் திநயந்தான்
விரையார் பொழில்வீ ழிம்மிழலை
உரையால் உணர்வார் உயர்வாரே. ௧

புனைதல் புரிபுன் சடைதன்மேல்
கனைதல் லொருகங் கைகரந்தான்
வினையில் லவர்வீ ழிம்மிழலை
நினைவில் லவர்நெஞ் சமும்நெஞ்சே. ௨

அழவல் லவரா டியும்பாடி
எழவல் லவரெந் தையடிமேல்

விழவல் லவர்வீ ழிம்மிழலை
தொழவல் லவர்நல் லவர்தொண்டே. ௩

உரவம் புரிபுன் சடைதன்மேல்
அரவம் அரையார்த் தஅழகன்
விரவும் பொழில்வீ ழிம்மிழலை
பரவும் அடியார் அடியாரே. ௪

கரிதா கியநஞ் சணிகண்டன்
வரிதா கியவண் டறைகொன்றை
விரிதார் பொழில்வீ ழிம்மிழலை
உரிதா வினைவார் உயர்வாரே. ௫

சடையார் பிறையான் சரிபூதப்
படையான் கொடிமே லதொர்பைங்கண்
விடையான் உறைவீ ழிம்மிழலை
அடைவார் அடியா ரவர்தாமே. ௬

செறியார் கழலுஞ் சிலம்பார்க்க
நெறியார் குழலா ளொடுநின்றான்
வெறியார் பொழில்வீ ழிம்மிழலை
அறிவா ரவலம் அறியாரே. ௭

உளையா வலியொல் கஅரக்கன்
வளையா விரலூன் றியமைந்தன்
விளையார் வயல்வீ ழிம்மிழலை
அளையா வருவார் அடியாரே. ௮

மருள்செய் திருவர் மயலாக
அருள்செய் தவனார் அழலாகி
வெருள்செய் தவன்வீ ழிம்மிழலை
தெருள்செய் தவர்தீ வினைதேய்வே. ௯

துளங்கும் நெறியா ரவர்தொன்மை
வளங்கொள் ளன்மின்புல் லமண்தேரை
விளங்கும் பொழில்வீ ழிம்மிழலை
உளங்கொள் பவர்தம் வினையோய்வே. ௧௦

களிர்கா ழியுள்ஞா னசம்பந்தன்
குளிரார் சடையான் அடிகூற
மிளிரார் பொழில்வீ ழிம்மிழலை
கிளர்பா டல்வல்லார்க் கிலைகேடே. கச

திருச்சிற்றம்பலம்

திருவையாறு - பண் - தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

கலையார் மதியோ டரநீரும்
நிலையார் சடையா ரிடமாகும்
மலையா ரமுமா மணிசந்தோ
டலையார் புனல்சே ருமையாறே. க

மதியொன் றியகொன் றைவடத்தன்
மதியோன் றவுதைத் தவர்வாழ்வும்
மதியின் னெடுசேர் கொடிமாடம்
மதியம் பயில்கின் றவையாறே. உ

கொக்கின் இறகின் னெடுவன்னி
புக்க சடையார்க் கிடமாகும்
திக்கின் னிசைதே வர்வணங்கும்
அக்கின் அரையா ரதையாறே. ந

சிறைகொண் டபுரம் அவைசிந்தக்
கறைகொண் டவர்கா தல்செய்கோயில்
மறைகொண் டநல்வா னவர்தம்மில்
அறையும் ஒலிசே ருமையாறே. ச

உமையா ளொருபா கமதாகச்
சமைவா ரவர்சார் விடமாகும்
அமையா ருடல்சோர் தரமுத்தம்
அமையா வருமந் தணையாறே. ரு

தலையின் றொடைமா லையணிந்து
கலைகொண் டதொர்கை யினர்சேர்வாம்

நிலைகொண் டமனத் தவர்நித்தம்
மலர்கொண் டுவணங் குமையாறே. ௬

வரமொன் றியமா மலரோன்றன்
சிரமொன் றையறுத் தவர்சேர்வாம்
வரையின் றிழிவார் தருபொன்னி
அரவங் கொடுசே ருமையாறே. ௭

வரையொன் றதெடுத் தஅரக்கன்
சிரமங் கநெரித் தவர்சேர்வாம்
விரையின் மலர்மே தகுபொன்னித்
திரைதன் னொடுசே ருமையாறே. ௮

சங்கக் கயனும் அறியாமைப்
பொங்குஞ் சுடரா னவர்கோயில்
கொங்கிற் பொலியும் புனல்கொண்டு
அங்கிக் கெதிர்காட் டுமையாறே. ௯

துவரா டையர்தோ லுடையார்கள்
கவர்வாய் மொழிகா தல்செய்யாதே
தவரா சர்கள்தா மரையானோ
டவர்தா மணைஅந் தணையாறே. ௧௦

கலையார் கலிக்கா ழியர்மன்னன்
நலமார் தருஞா னசம்பந்தன்
அலையார் புனல்சூ ழுமையாற்றைச்
சொலுமா லைவல்லார் துயர்வீடே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருப்பனையூர் - பண் - தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

அரவச் சடைமேல் மதிமத்தம்
விரவிப் பொலிகின் றவனூராம்
நிரவிப் பலதொண் டர்கள்நாளும்
பரவிப் பொலியும் பனையூரே. ௧

எண்ணொன் றினினைந் தவர்தம்பால்
உண்ணின் றுமகிழ்ந் தவனூராம்
கண்ணின் றெழுசோ லையில்வண்டு
பண்ணின் றொலிசெய் பனையூரே. உ

அலரும் எறிசெஞ் சடைதன்மேல்
மலரும் பிறையொன் றுடையானூர்
சிலரொன் றுமிருந் தடிபேணப்
பலரும் பரவும் பனையூரே. ங

இடியார் கடல்நஞ் சமுதுண்டு
பொடியா டியமே னியினானூர்
அடியார் தொழமன் னவரேத்தப்
படியார் பணியும் பனையூரே. ச

அறையார் கழல்மேல் அரவாட
இறையார் பலிதேர்ந் தவனூராம்
பொறையார் மிகுசீர் விழமல்கப்
பறையா ரொலிசெய் பனையூரே. ரு

அணியார் தொழவல் லவரேத்த
மணியார் மிடறொன் றுடையானூர்
தணியார் மலர்கொண் டிருபோதும்
பணிவார் பயிலும் பனையூரே. சு

அடையா தவர்மூ எயில்சீறும்
விடையான் விறலார் கரியின்தோல்
உடையா னவனெண் பலபூதப்
படையா னவனூர் பனையூரே. எ

இலகும் முடிபத் துடையானை
அலல்கண் டருள்செய் தஎம்மண்ணல்
உலகில் லுயிர்நீர் நிலமற்றும்
பலகண் டவனூர் பனையூரே. அ

வாமுன் னிமகிழ்ந் தெழுவீர்காள்
சிரமுன் னடிதா ழவணங்கும்

பிரமன் னெடுமா லறியாத
பரமன் உறையும் பனையூரே. ௯.

அழிவல் அமண ரொடுதேரர்
மொழிவல் லனசொல் லியபோதும்
இழிவில் லதொர்செம் மையினார்
பழியில் லவர்சேர் பனையூரே. ௧0.

பாரார் விடையான் பனையூர்மேல்
சீரார் தமிழ்ஞா னசம்பந்தன்
ஆரா தசொன்மா லைகள்பத்தும்
ஊரூர் நினைவா ருயர்வாரே. ௧௧.

திருச்சிற்றம்பலம்

திருமயிலாடுதுறை - பண் - தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

காவின் நிகன்மா மலர்கொண்டே
இரவும் பகலுந் தொழுவார்கள்
சிரமொன் றியசெஞ் சடையான்வாழ்
வரமா மயிலா டுதுறையே. ௧.

உரவெங் கரியின் உரிபோர்த்த
பரமன் உறையும் பதியென்பர்
குரவம் சுரபுன் னையும்வன்னி
மருவும் மயிலா டுதுறையே. ௨.

ஊனத் திருள்நீங் கிடவேண்டில்
ஞானப் பொருள்கொண் டடிபேணும்
தேனுத் தினியா னமருஞ்சேர்
வானம் மயிலா டுதுறையே. ௩.

அஞ்சொண் புலனும் அவைசெற்ற
மஞ்சன் மயிலா டுதுறையை
நெஞ்சொன் றிநினைந் தெழுவார்மேல்
அஞ்சும் பிணியா யினதானே. ௪.

தணியார் மதிசெஞ் சடையான்றன்
அணியார்ந் தவருக் கருளென்றும்
பிணியா யினதீர்த் தருள்செய்யும்
மணியான் மயிலா டுதுறையே. ௫

தொண்ட ரிசைபா டியுங்கூடிக்
கண்டு துதிசெய் பவனூராம்
பண்டும் பலவே தியரோத
வண்டார் மயிலா டுதுறையே. ௬

அணங்கோ டொருபா கம்அமர்ந்து
இணங்கி யருள்செய் தவனூராம்
நுணங்கும் புரிநூ லர்கள்கூடி
வணங்கும் மயிலா டுதுறையே. ௭

சிரங்கை யினிலேந் தியிரந்த
பரங்கொள் பரமேட் டிவரையால்
அரங்கவ் வரக்கன் வலிசெற்ற
வரங்கொள் மயிலா டுதுறையே. ௮

ஞாலத் தைநுகர்ந் தவன்தானும்
கோலத் தயனும் அறியாத
சீலத் தவனூர் சிலர்கூடி
மாலைத் தீர்மயிலா டுதுறையே. ௯

நின்றுண் சமணும் நெடுந்தேரர்
ஒன்றும் அறியா மையுயர்ந்த
வென்றி யருளா ளவனூராம்
மன்றன் மயிலா டுதுறையே. ௧௰

நயர்கா ழியுள்ஞா னசம்பந்தன்
மயல்தீர் மயிலா டுதுறைமேல்
செயலா லுரைசெய் தனபத்தும்
உயர்வாம் இவையுற் றுணர்வார்க்கே. ௧௧

திருச்சிற்றம்பலம்

இதுவே மாயூரம். (மாயவரம்.)

திருவேட்களம் - பண் - தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

அந்தமும்ஆதியும் ஆகியஅண்ணல் ஆரழல்அங்கை அமர்ந்திலங்க
மந்தமுழவம் இயம்ப மலைமகள் காணநின்றாடிச்
சந்தமிலங்கு நகுதலைகங்கை தண்மதியம் மயலேததும்ப
வெந்தவெண் ணீறுமெய்பூசும் வேட்கள நன்னகராரே. க

சடைதனைத்தாழ்தலும் ஏறமுடித்துச் சங்கவெண்தோடு சரிந் திலங்கப், புடைதனிற் பாரிடஞ்சூழப் போதருமா றிவர்போல்வார், உடைதனில்நால்விரற் கோவணஆடை உண்பதும்ஊரிடு பிச்சை வெள்ளை, விடைதனை யூர்திநயந்தார் வேட்கள நன்னகராரே.

பூதமும்பல்கண மும்புடைசூழப் பூமியும்விண்ணும் உடன்பொருந்தச்
சீதமும்வெம்மையு மாகிச் சீரொடுநின்றவெஞ் செல்வர்
ஓதமுங்கானலுஞ் சூழ்தருவேலை உள்ளங்கலந்திசை யாலெழுந்த
வேதமும்வேள்வியும் ஓவா வேட்கள நன்னகராரே. ௩

அரைபுல்கும்ஐந்தலை யாடலரவம் அமையவெண்கோவணத் தோ டசைத்து, வரைபுல்குமார்பி லொராமை வாங்கியணிந் தவர்தாந், திரை புல்குதெண்கடல் தண்கழியோதந் தேனலங்கானலில் வண்டுபண் செய்ய, விரைபுல்குபைம்பொழில் சூழ்ந்த வேட்கள நன்னகராரே. ௪

பண்ணுறுவண்டறை கொன்றையலங்கல் பால்புரைநீறுவெண் ணூல்கிடந்த, பெண்ணுறுமார்பினர் பேணார் மும்மதிலெய்த பெருமான், கண்ணுறுநெற்றி கலந்தவெண்திங்கள் கண்ணியர்விண்ணவர் கை தொழுதேத்தும், வெண்ணிறமால்விடை யண்ணல் வேட்கள நன்னக ராரே. ரு

கறிவளர்குன்றம் எடுத்தவன்காதற் கண்கவரைங்கணை யோனுட லம், பொறிவளர் ஆரழலுண்ணப் பொங்கிய பூதபுராணர், மறிவளரங் கையர் மங்கையொர்பங்கர் மைஞ்ஞிறமானுரி தோலுடையாடை, வெறி வளர்கொன்றையந் தாரார் வேட்கள நன்னகராரே. சு

மண்பொடிக்கொண்டெரித் தோர்சுடலை மாமலைவேந்தன் மகள்மகிழ
நுண்பொடிச்சேர நின்றாடி நொய்யன செய்யல்உகந்தார்

கண்பொடி வெண்டலையோடுகை யேந்திக் காலனைக் காலாற்கடிந்துகந்
வெண்பொடிச் சேர்திருமார்பர் வேட்கள நன்னகராரே. [தார்

ஆழ்தருமால்கடல் நஞ்சினையுண்டார் அமுதமமரர்க் கருளிச்
சூழ்தருபாம்பரை யார்த்துச் சூலமோடொண் மழுவேந்தித்
தாழ்தருபுன்சடை யொன்றினைவாங்கித் தண்மதியம்மய லேததும்ப
வீழ்தருகங்கை கரந்தார் வேட்கள நன்னகராரே. ௮

திருவொளிகாணிய பேதுறுகின்ற திசைமுகனுந் திசைமேலளந்த
கருவரையேந்திய மாலுங் கைதொழ நின்றதுமல்லால்
அருவரையொல்க எடுத்தஅரக்கன் ஆடெழிற்றோள்க ளாழத்தழுந்த
வெருவுறவூன்றிய பெம்மான் வேட்கள நன்னகராரே. ௯

அத்தமண்தோய்துவ ரார்அமண்குண்டர் யாதுமல்லாவுரை யே
யுரைத்துப், பொய்த்தவம் பேசுவதல்லாற் புறனுரையாதொன்றுங்
கொள்ளேன், முத்தனவெண்முறு வல்லுமையஞ்ச மூரிவல்லானையின்
ஈருரிபோர்த்த, வித்தகர்வேத முதல்வர் வேட்கள நன்னகராரே. ௰

விண்ணியன்மாடம் விளங்கொளிவீதி வெண்கொடியெங்கும்
விரிந்திலங்க, நண்ணியசீர்வளர் காழி நற்றமிழ் ஞானசம்பந்தன், பெண்
ணின்நல்லாளொரு பாகமமர்ந்து பேணியவேட்கள மேல்மொழிந்த, பண்
ணியல்பாடல் வல்லார்கள் பழியொடு பாவமிலாரே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருவாழ்கொளிபுத்தூர் - பண் - தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

பொடியுடைமார்பினர் போர்விடையேறிப் பூதகணம் புடைசூழக்
கொடியுடையூர்திரிந் தையங் கொண்டு பலபலகூறி
வடிவுடைவாள்நெடுங் கண்ணுமைபாகம் ஆயவன்வாழ்கொளி புத்தூர்க்
கடிகமழ் மாமலரிட்டுக் கறைமிடற்றானடி காண்போம். ௧

அரைகெழுகோவண ஆடையின்மேலோர் ஆடரவம்அசைத் தையம்
புரைகெழுவெண்டலை யேந்திப் போர்விடை யேறிப்புகழ
வரைகெழுமங்கைய தாகமொர்பாகம் ஆயவன்வாழ்கொளி புத்தூர்
விரைகமழ் மாமலர்தூவி விரிசடையானடி சேர்வோம். ௨

பூண்நெடுநாகம் அசைத்தனலாடிப் புன்தலையங்கையி லேந்தி
ஊண்இடுபிச்சையூ ரையம் உண்டியென்று பலகூறி [தூர்த்
வாள்நெடுங்கண்ணுமை மங்கையொர்பாகம் ஆயவன்வாழ்கொளி புத்
தாள்நெடு மாமலரிட்டுத் தலைவனதாள்நிழல் சார்வோம். ௩

தாரிடுகொன்றையொர் வெண்மதிகங்கை தாழ்சடை மேலவைசூடி
ஊரிடுபிச்சைகொள் செல்வம் உண்டியென்று பலகூறி
வாரிடுமென்முலை மாதொருபாகம் ஆயவன்வாழ்கொளி புத்தூர்க்
காரிடு மாமலர்தூவிக் கறைமிடற்றானடி காண்போம். ௪

கனமலர்க்கொன்றை அலங்கல்இலங்கக் காதிலொர் வெண்குழையோடு
புனமலர்மாலை புனைந்தூர் புகுதியென்றே பலகூறி
வனமுலைமாமலை மங்கையொர்பாகம் ஆயவன்வாழ்கொளி புத்தூர்
இனமல ரேய்ந்தனதூவி யெம்பெருமானடி சேர்வோம். ௫

அளைவளர்நாகம்அசைத்தனலாடி அலர்மிசையந்தணன் உச்சிக்
களைதலை யிற்பலிகொள்ளுங் கருத்தனே கள்வனேயென்ன [தூர்த்
வளையொலிமுன்கை மடந்தையொர்பாகம் ஆயவன்வாழ்கொளி புத்
தளையவிழ் மாமலர்தூவித் தலைவனதாளிணை சார்வோம். ௬

அடர்செவிவேழத்தின்ஈருரிபோர்த்து வழிதலையங்கையி லேந்தி
உடலிடுபிச்சையோ டையம் உண்டியென்று பலகூறி
மடல்நெடுமாமலர்க் கண்ணியொர்பாகம் ஆயவன்வாழ்கொளி புத்தூர்த்
தடமல ராயினதூவித் தலைவனதாள்நிழல் சார்வோம். ௭

உயர்வரையொல்க எடுத்தஅரக்கன் ஒளிர்கடகக்கை அடர்த்து
அயலிடுபிச்சையோ டையம் ஆர்தலையென்றடி போற்றி
வயல்விரிநீல நெடுங்கணிபாகம் ஆயவன்வாழ்கொளி புத்தூர்ச்
சயவிரி மாமலர்தூவித் தாழ்சடையானடி சார்வோம். ௮

கரியவன்நான்முகன் கைதொழுதேத்தக் காணலுஞ்சாலும் ஆகா
எரியுருவாகியூ ரையம் இடுபலியுண்ணியென் றேத்தி
வரியரவல்குல் மடந்தையொர்பாகம் ஆயவன்வாழ்கொளி புத்தூர்
விரிமல ராயினதூவி விகிர்தனசேவடி சேர்வோம். ௯

குண்டமணர்துவர்க் கூறைகள்மெய்யிற் கொள்கையினார் புறங்கூற
வெண்தலையிற்பலி கொண்டல் விரும்பினையென்று விளம்பி

வண்டமர்பூங்குழல் மங்கையொர்பாகம் ஆயவன்வாழ்கொளி புத்தூர்த்
தொண்டர்கள் மாமலர்தூவத் தோன்றிநின்றானடி சேர்வோம். ௧௦

கல்லுயர்மாக்கடல்நின்றுமுழங்குங் கரைபொரு காழியமூதூர்
நல்லுயர்நான்மறை நாவின் நற்றமிழ் ஞானசம்பந்தன்
வல்லுயர்சூலமும் வெண்மழுவாளும் வல்லவன்வாழ்கொளி புத்தூர்ச்
சொல்லியபாடல்கள் வல்லார் துயர்கெடுதல்எளி தாமே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருப்பாம்புரம் - பண் - தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

சீரணிதிகழ்திரு மார்பில்வெண்ணூலர் திரிபுரமெரிசெய்த செல்வர்
வாரணிவனமுலை மங்கையொர்பங்கர் மான்மறியேந்திய மைந்தர்
காரணிமணிதிகழ் மிடறுடையண்ணல் கண்ணுதல் விண்ணவரேத்தும்
பாரணிதிகழ்தரு நான்மறையாளர் பாம்புர நன்னகராரே. ௧

கொக்கிறகோடு கூவிளமத்தம் கொன்றையொ டெருக்கணிசடையர்
அக்கினொடாமை பூண்டழகாக அனலதுஆடுமெம் அடிகள்
மிக்கநல்வேத வேள்வியுளெங்கும் விண்ணவர்விரைமலர் தூவப்
பக்கம்பல்பூதம் பாடிடவருவார் பாம்புர நன்னகராரே. ௨

துன்னலினாடை யுடுத்ததன்மேலோர் சூறைநல்லரவது சுற்றிப்
பின்னுவார்சடைகள் தாழவிட்டாடிப் பித்தராய்த்திரியும்எம் பெருமா
மன்னுமாமலர்கள் தூவிடநாளும் மாமலையாட்டியுந் தாமும் [ன்
பன்னுநான்மறைகள் பாடிடவருவார் பாம்புர நன்னகராரே. ௩

துஞ்சுநாள்துறந்து தோற்றமுமில்லாச் சுடர்விடுசோதியெம் பெருமான்
நஞ்சுசேர்கண்டம் உடையஎன்நாதர் நள்ளிருள்நடஞ்செயும் நம்பர்
மஞ்சுதோய்சோலை மாமயிலாட மாடமாளிகை தன்மேலேறிப்
பஞ்சுசேர்மெல்லடிப் பாவையர்பயிலும் பாம்புர நன்னகராரே. ௪

நதியதன்அயலே நகுதலைமாலை நாண்மதிசடைமிசை யணிந்து
கதியதுவாகக் காளிமுன்காணக் கானிடைநடஞ்செய்த கருத்தர்
விதியதுவழுவா வேதியர்வேள்வி செய்தவர்ஒத்தொலி ஓவாப்
பதியதுவாகப் பாவையுந்தாமும் பாம்புர நன்னகராரே. ௫

ஓதிநன்குணர்வார்க் குணர்வுடையொருவர் ஒளிதிகழுருவஞ்சேர் ஒரு
மாதினையிடமா வைத்தஎம்வள்ளல் மான்மறியேந்திய மைந்தர் [வர்
ஆதிநீஅருளென் றமரர்கள்பணிய அலைகடல்கடையஅன் றெழுந்த
பாதிவெண்பிறைசடை வைத்தஎம்பரமர் பாம்புர நன்னகராரே. சு

மாலினுக்கன்று சக்கரமீந்து மலரவற்கொருமுகம் ஒழித்து
ஆலின்கீழறமோர் நால்வருக்கருளி அனலதுஆடும்எம் அடிகள்
காலனைக்காய்ந்து தம்கழலடியாற் காமனைப்பொடிபட நோக்கிப்
பாலனுக்கருள்கள் செய்தஎம்அடிகள் பாம்புர நன்னகராரே. எ

விடைத்தவல்லரக்கன் வெற்பினையெடுக்க மெல்லியதிருவிர லூன்றி
அடர்த்தவன்தனக்கன் றருள்செய்தஅடிகள் அனலதுஆடும்எம் அண்
மடக்கொடியவர்கள் வருபுனலாட வந்திழியரிசிலின் கரைமேல் [ணல்
படப்பையிற்கொணர்ந்து பருமணிசிதறும் பாம்புர நன்னகராரே. அ

கடிபடுகமலத் தயனொடுமாலுங் காதலோடடிமுடி தேடச்
செடிபடுவினைகள் தீர்த்தருள்செய்யுந் தீவணரெம்முடைச் செல்வர்
முடியுடையமரர் முனிகணத்தவர்கள் முறைமுறையடிபணிந் தேத்தப்
படியதுவாகப் பாவையுந்தாமும் பாம்புர நன்னகராரே. கூ

குண்டர்சாக்கியருங் குணமிலாதாருங் குற்றுவிட்டுடுக்கையர் தாமுங்
கண்டவாறுரைத்துக் கால்நிமிர்த்துண்ணுங் கையர்தாமுள்ளவா றறி
வண்டுசேர்குழலி மலைமகள்நடுங்க வாரணமுரிசெய்து போர்த்தார் [யார்
பண்டுநாம்செய்த பாவங்கள்தீர்ப்பார் பாம்புர நன்னகராரே. க0

பார்மலிந்தோங்கிப் பருமதில்சூழ்ந்த பாம்புர நன்னகராரைக்
கார்மலிந்தழகார் கழனிசூழ்மாடக் கழுமலமுதுபதிக் கவுணி
நார்மலிந்தோங்கும் நான்மறைஞான சம்பந்தன்செந்தமிழ் வல்லார்
சீர்மலிந்தழகார் செல்வமதோங்கிச் சிவனடி நண்ணுவர் தாமே. கக

திருச்சிற்றம்பலம்

திருப்பேணுபெருந்துறை - பண் - தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

பைம்மாநாகம் பன்மலர்கொன்றை பன்றிவெண்கொம்பொன்று
பூண்டு, செம்மாந்தையம் பெய்கென்றுசொல்லிச் செய்தொழில்பேணி
யோர் செல்வர், அம்மானோக்கிய அந்தளிர்மேனி யரிவையோர் பாகம்
அமர்ந்த, பெம்மான்நல்கிய தொல்புகழாளர் பேணு பெருந்துறையாரே.

மூவருமாகி இருவருமாகி முதல்வனுமாய்நின்ற மூர்த்தி
பாவங்கள்தீர்தர நல்வினைநல்கிப் பல்கணம்நின்று பணியச்
சாவமதாகிய மால்வரைகொண்டு தண்மதில்மூன்றும் எரித்த
தேவர்கள்தேவர் எம்பெருமானார் தீதில் பெருந்துறையாரே. ௨

செய்பூங்கொன்றை கூவிளமாலை சென்னியுட்சேர்புனல் சேர்த்திக்
கொய்பூங்கோதை மாதுமைபாகம் கூடியோர்பீடுடை வேடர்
கைபோனான்ற கனிகுலைவாழைக் காய்குலையிற்கமு கீனப்
பெய்பூம்பாளை பாய்ந்திழிதேறல் பில்கு பெருந்துறையாரே. ௩

நிலனொடுவானும் நீரொடுதீயும் வாயுவுமாகியோ ரைந்து
புலனொடுவென்று பொய்ம்மைகள்தீர்ந்த புண்ணியர்வெண்பொடிப் பூசி
நலனொடுதீங்குந் தானலதின்றி நன்கெழுசிந்தைய ராகி
மலனொடுமாசும் இல்லவர்வாழும் மல்கு பெருந்துறையாரே. ௪

பணிவாயுள்ள நன்கெழுநாவின் பத்தர்கள்பத்திமை செய்யத்
துணியார் தங்கள் உள்ளமிலாத சுமடர்கள்சோதிப் பரியார்
அணியார்நீல மாகியகண்டர் அரிசிலுரிஞ்சு கரைமேல்
மணிவாய்நீலம் வாய்கமழ்தேறல் மல்கு பெருந்துறையாரே. ௫

எண்ணார் தங்கள் மும்மதில்வேவ ஏவலங்காட்டிய எந்தை .
விண்ணோர்சாரத் தன்னருள்செய்த வித்தகர்வேத முதல்வர்
பண்ணார்பாடல் ஆடல்அறாத பசுபதியீசனோர் பாகம்
பெண்ணாண்ஆய வார்சடையண்ணல் பேணுபெருந்துறையாரே. ௬

விழையாருள்ளம் நன்கெழுநாவில் வினைகெடவேதமா றங்கம்
பிழையாவண்ணம் பண்ணியவாற்றால் பெரியோரேத்தும் பெருமான்
தழையார்மாவின் தாழ்கனியுந்தித் தண்ணரிசில்புடை சூழ்ந்த
குழையார்சோலை மெல்நடையன்னங் கூடு பெருந்துறையாரே. ௭

பொன்னங்கானல் வெண்டிரைசூழ்ந்த பொருகடல்வேலி இலங்கை
மன்னன்ஒல்க மால்வரையூன்றி மாமுரண்ஆகமுந் தோளும்
முன்னவைவாட்டிப் பின்னருள்செய்த மூவிலைவேலுடை மூர்த்தி
அன்னங்கன்னிப் பேடையொடாடி யணைவு பெருந்துறையாரே. அ

புள்வாய்போழ்ந்து மாநிலங்கீண்ட பொருகடல்வண்ணனும் பூவின்
உள்வாயல்லி மேலுறைவானும் உணர்வரியான்உமை கேள்வன்
முள்வாய்தாளின் தாமரைமொட்டின் முகமலரக்கயல் பாயக்
கள்வாய்நீலங் கண்மலரேய்க்குங் காமர் பெருந்துறையாரே. ௯

குண்டுந்தேருங் கூறைகளைந்துங் கூப்பிலர்செப்பில ராகி
மிண்டும்மிண்டர் மிண்டவைகண்டு மிண்டுசெயாது விரும்பும்
தண்டும்பாம்பும் வெண்தலைசூலந் தாங்கியதேவர் தலைவர்
வண்டுந்தேனும் வாழ்பொழிற்சோலை மல்கு பெருந்துறையாரே. ௧௦

கடையார்மாடம் நன்கெழுவீதிக் கழுமலவூரன் கலந்து
நடையார்இன்சொல் ஞானசம்பந்தன் நல்லபெருந்துறை மேய
படையார்சூலம் வல்லவன்பாதம் பரவியபத்திவை வல்லார்
உடையாராகி உள்ளமும்ஒன்றி உலகினில்மன்னுவர் தாமே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருக்கற்குடி - பண் - தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

வடந்திகழ் மென்முலை யாளைப் பாகம தாக மதித்துத்
தடந்திரை சேர்புனல் மாதைத் தாழ்சடை வைத்த சதுரர்
இடந்திகழ் முப்புரி நூலர் துன்பமொ டின்பம தெல்லாம்
கடந்தவர் காதலில் வாழுங் கற்குடி மாமலை யாரே. ௧

அங்கமொ ராறுடை வேள்வி யான அருமறை நான்கும்
பங்கமில் பாடலோ டாடல் பாணி பயின்ற படிறர்
சங்கம தார்குற மாதர் தங்கையில் மைந்தர்கள் தாவிக்
கங்குலின் மாமதி பற்றுங் கற்குடி மாமலை யாரே. ௨

நீரக லந்தரு சென்னி நீடிய மத்தமும் வைத்துத்
தாரகை யின்னொளி சூழ்ந்த தண்மதி சூடிய சைவர்

போரக வந்தரு வேடர் புனத்திடை யிட்ட விறகில்
கார்அகி லின்புகை விம்முங் கற்குடி மாமலை யாரே. ௩.

ஒருங்களி நீயிறை வாவென் றும்பர்கள் ஓல மிடக்கண்
டிருங்கள மார விடத்தை யின்னமு துண்ணிய ஈசர்
மருங்களி யார்பிடி வாயில் வாழ்வெதி ரின்முளை வாரிக்
கருங்களி யானை கொடுக்குங் கற்குடி மாமலை யாரே. ௪

போர்மலி திண்சிலை கொண்டு பூதக ணம்புடை சூழப்
பார்மலி வேடரு வாகிப் பண்டொரு வர்க்கருள் செய்தார்
ஏர்மலி கேழல் கிளைத்த இன்னொளி மாமணி யெங்கும்
கார்மலி வேடர் குவிக்குங் கற்குடி மாமலை யாரே. ௫

உலந்தவர் என்ப தணிந்தே யூரிடு பிச்சைய ராகி
விலங்கல்வில் வெங்கன லாலே மூவெயில் வேவ முனிந்தார்
நலந்தரு சிந்தைய ராகி நாமலி மாலையி னாலே
கலந்தவர் காதலில் வாழுங் கற்குடி மாமலை யாரே. ௬

மானிடம்ஆர்தரு கையர் மாமழு வாரும் வலத்தார்
ஊனிடை யார்தலை யோட்டில் உண்கல னாக வுகந்தார்
தேனிடை யார்தரு சந்தின் திண்சிறை யால்தினை வித்திக்
கானிடை வேடர் விளைக்குங் கற்குடி மாமலை யாரே. எ

வாளமர் வீரம் நினைந்த இராவணன் மாமலை யின்கீழ்த்
தோளமர் வன்தலை குன்றத் தொல்விர லூன்று துணைவர்
தாளமர் வேய்தலை பற்றித் தாழ்கரி விட்ட விசைபோய்க்
காளம தார்முகில் கீறுங் கற்குடி மாமலை யாரே. அ

தண்டமர் தாமரை யானுந் தாவியிம் மண்ணை யளந்து
கொண்டவ னும்அறி வொண்ணாக் கொள்கையர் வெள்விடை யூர்[வர்
வண்டிசை யாயின பாட நீடிய வார்பொழில் நீழல்
கண்டமர் மாமயி லாடுங் கற்குடி மாமலை யாரே. ௯.

மூத்துவ ராடையி னாரும் மூசு கடப்பொடி யாரும்
நாத்தவர் பொய்ம்மொழி யார்கள் நயமில் அராமதி வைத்தார்
ஏத்துயர் பத்தர்கள் சித்தர் இறைஞ்ச அவரிட ரெல்லாம்
காத்தவர் காமரு சோலைக் கற்குடி மாமலை யாரே. ௧௦

காமரு வார்பொழில் சூழுங் கற்குடி மாமலை யாரை
நாமரு வண்புகழ்க் காழி நலந்திகழ் ஞானசம் பந்தன்
பாமரு செந்தமிழ் மாலை பத்திவை பாடவல் லார்கள்
பூமலி வானவ ரோடும் பொன்னுல கிற்பொலி வாரே. கக

திருச்சிற்றம்பலம்

திருப்பாச்சிலாச்சிராமம் - பண் - தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

துணிவளர்திங்கள் துளங்கிவிளங்கச் சுடர்ச்சடை சுற்றிமுடித்துப்
பணிவளர்கொள்கையர் பாரிடஞ்சூழ வாரிடமும் பலிதேர்வர்
அணிவளர்கோல மெலாஞ்செய்துபாச்சி லாச்சிரா மத்துறைகின்ற
மணிவளர்கண்டரோ மங்கையைவாட மயல்செய்வதோ இவர்மாண்பே.

கலைபுனைமானுரி தோலுடையாடை கனல்சுட ராலிவர்கண்கள்
தலையணிசென்னியர் தாரணிமார்பர் தம்மடிகள் ளிவரென்ன
அலைபுனல்பூம்பொழில் சூழ்ந்தமர்பாச்சி லாச்சிரா மத்துறைகின்ற
இலைபுனைவேலரோ ஏழையைவாட இடர்செய்வதோ இவரீடே. உ

வெஞ்சுடராடுவர் துஞ்சிருள்மாலை வேண்டுவர்பூண்பது வெண்ணூல்
நஞ்சடைகண்டர் நெஞ்சிடமாக நண்ணுவர் நம்மைநயந்து
மஞ்சடைமாளிகை சூழ்தருபாச்சி லாச்சிரா மத்துறைகின்ற [ரே.
செஞ்சுடர்வண்ணரோ பைந்தொடிவாடச் சிதைசெய்வதோ இவர்சீ

கனமலர்க்கொன்றை அலங்கல்இலங்கக் கனல்தரு தூமதிக்கண்ணி
புனமலர்மாலை யணிந்தழகாய புனிதர்கொ லாமிவரென்ன
வனமலிவண்பொழில் சூழ்தருபாச்சி லாச்சிரா மத்துறைகின்ற
மனமலிமைந்தரோ மங்கையைவாட மயல்செய்வதோ இவர்மாண்பே.

மாந்தர்தம்பால்நறு நெய்மகிழ்ந்தாடி வளர்சடை மேற்புனல்வைத்து
மோந்தைமுழாக்குழல் தாளமொர்வீணை முதிரவோர் வாய்மூரிபாடி
ஆந்தைவிழிச்சிறு பூதத்தர்பாச்சி லாச்சிரா மத்துறைகின்ற
சாந்தணிமார்பரோ தையலைவாடச் சதுர்செய்வதோ இவர்சார்வே. ரு

நீறுமெய்பூசி நிறைசடைதாழ நெற்றிக்கண் ணாலுற்றுநோக்கி
ஆறதுசூடி ஆடரவாட்டி யைவிரற் கோவணஆடை

பால்தருமேனியர் பூதத்தர்பாச்சி லாச்சிரா மத்துறைகின்ற
ஏறதுஏறியர் ஏழையைவாட இடர்செய்வதோ இவரீடே. ௬

பொங்கிளநாகமொ ரேகவடத்தோ டாமைவெண் ணூல்புனைகொன்றை
கொங்கிளமாலை புனைந்தழகாய குழகர்கொ லாமிவரென்ன
அங்கிளமங்கையோர் பங்கினர்பாச்சி லாச்சிரா மத்துறைகின்ற
சங்கொளிவண்ணரோ தாழ்குழல்வாடச் சதிர்செய்வதோ இவர்சார்வே.

ஏவலத்தால்விச யற்கருள்செய்து இராவண னையீடழித்து
மூவரிலும்முத லாய்நடுவாய மூர்த்தியை யன்றிமொழியாள்
யாவர்களும்பர வும்மெழிற்பாச்சி லாச்சிரா மத்துறைகின்ற
தேவர்கள்தேவரோ சேயிழைவாடச் சிதைசெய்வதோ இவர்சார்வே.

மேலதுநான்முகன் எய்தியதில்லை கீழது சேவடிதன்னை
நீலதுவண்ணனும் எய்தியதில்லை யெனஇவர் நின்றதுமல்லால்
ஆலதுமாமதி தோய்பொழிற்பாச்சி லாச்சிரா மத்துறைகின்ற
பாலதுவண்ணரோ பைந்தொடிவாடப் பழிசெய்வதோ இவர்பண்பே.

நாணொடுகூடிய சாயினரேனும் நகுவ ரவரிருபோதும்
ஊணொடுகூடிய வுட்குநகையார் உரைக ளவைகொளவேண்டா
ஆணொடுபெண்வடி வாயினர்பாச்சி லாச்சிரா மத்துறைகின்ற
பூண்நெடுமார்பரோ பூங்கொடிவாடப் புனைசெய்வதோ இவர்பொற்பே.

அகமலிஅன்பொடு தொண்டர்வணங்க ஆச்சிரா மத்துறைகின்ற
புகைமலிமாலை புனைந்தழகாய புனிதர்கொ லாமிவரென்ன
நகைமலிதண்பொழில் சூழ்தருகாழி நற்றமிழ் ஞானசம்பந்தன்
தகைமலிதண்தமிழ் கொண்டிவையேத்தச் சாரகி லாவினைதானே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருஆலங்காடு - பண் - தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

துஞ்சவருவாருந் தொழுவிப்பாரும் வழுவிப்போய்
நெஞ்சம்புகுந்தென்னை நினைவிப்பாரும் முனைநட்பாய்
வஞ்சப்படுத்தொருத்தி வாணாள்கொள்ளும் வகைகேட்
டஞ்சும்பழையனூர் ஆலங்காட்டெம் அடிகளே. ௧

கேடும்பிறவியும் ஆக்கினருங் கேடிலா
வீடுமாநெறி விளம்பினரெம் விகிர்தனர்
காடுஞ்சுடலையுங் கைக்கொண்டெல்லிற் கணப்பேயோ
டாடும்பழையனூர் ஆலங்காட்டெம் அடிகளே. உ

கந்தங்கமழ்கொன்றைக் கண்ணிசூடி கனலாடி
வெந்தபொடிநீற்றை விளங்கப்பூசும் விகிர்தனர்
கொந்தண்பொழிற்சோலை யரவில்தோன்றிக் கோடல்பூத்
தந்தண்பழையனூர் ஆலங்காட்டெம் அடிகளே. ங

பாலமதிசென்னி படரச்சூடிப் பழியோராக்
காலனுயிர்செற்ற காலனாய கருத்தனர்
கோலம்பொழிற்சோலைப் பெடையோடாடி மடமஞ்ஞை
ஆலும்பழையனூர் ஆலங்காட்டெம் அடிகளே. ச

ஈர்க்கும்புனல்சூடி இளவெண்திங்கள் முதிரவே
பார்க்கும்அரவம்பூண் டாடிவேடம் பயின்றாரும்
கார்க்கொள்கொடிமுல்லை குருந்தமேறிக் கருந்தேன்மொய்த்
தார்க்கும்பழையனூர் ஆலங்காட்டெம் அடிகளே. ரு

பறையுஞ்சிறுகுழலும் யாழும்பூதம் பயிற்றவே
மறையும்பலபாடி மயானத்துறையும் மைந்தனர்
பிறையும்பெரும்புனல்சேர் சடையினாரும் பேடைவண்
டறையும்பழையனூர் ஆலங்காட்டெம் அடிகளே. சு

நுணங்குமறைபாடி யாடிவேடம் பயின்றாரும்
இணங்குமலைமகளோ டிருகூறொன்றா யிசைந்தாரும்
வணங்குஞ்சிறுத்தொண்டர் வைகலேத்தும் வாழ்த்துங்கேட்
டணங்கும்பழையனூர் ஆலங்காட்டெம் அடிகளே. எ

கணையும்வரிசிலையும் எரியுங்கூடிக் கவர்ந்துண்ண
இணையில்எயின்மூன்றும் எரித்திட்டாரெம் இறைவனர்
பிணையுஞ்சிறுமறியுங் கலையுமெல்லாங் கங்குல்சேர்ந்
தணையும்பழையனூர் ஆலங்காட்டெம் அடிகளே. அ

கவிழமலைதளரக் கடகக்கையால் எடுத்தான்தோள்
பவழநுனைவிரலாற் பையவூன்றிப் பரிந்தாரும்

தவழுங்கொடிமுல்லை புறவஞ்சேர நறவம்பூத்
தவிழும்பழையனூர் ஆலங்காட்டெம் அடிகளே. க

பகலும்இரவுஞ்சேர் பண்பினரும் நண்போரா
திகலும்இருவர்க்கும் எரியாய்த்தோன்றி நிமிர்ந்தாரும்
புகலும்வழிபாடு வல்லார்க்கென்றுந் தீயபோய்
அகலும்பழையனூர் ஆலங்காட்டெம் அடிகளே. க0

போழம்பலபேசிப் போதுசாற்றித் திரிவாரும்
வேழம்வருமளவும் வெயிலேதுற்றித் திரிவாரும்
கேழல்வினைபோகக் கேட்பிப்பாருங் கேடிலா
வாழ்வர்பழையனூர் ஆலங்காட்டெம் அடிகளே. கக

சாந்தங்கமழ்மறுகிற் சண்பைஞான சம்பந்தன்
ஆந்தண்பழையனூர் ஆலங்காட்டெம் அடிகளை
வேந்தன்அருளாலே விரித்தபாடல் இவைவல்லார்
சேர்ந்தஇடமெல்லாந் தீர்த்தமாகச் சேர்வாரே. கஉ

திருச்சிற்றம்பலம்

திருஅதிகைவீரட்டானம் - பண் - தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

குண்டைக் குறட்பூதங் குழும அனலேந்திக்
கெண்டைப் பிறழ்தெண்ணீர்க் கெடில வடபக்கம்
வண்டு மருள்பாட வளர்பொன் விரிகொன்றை
விண்ட தொடையலான் ஆடும்வீரட் டானத்தே. க

அரும்புங் குரும்பையும் அலைத்த மென்கொங்கைக்
கரும்பின் மொழியாளோ டுடன்கை யனல்வீசிச்
சுரும்புண் விரிகொன்றைச் சுடர்பொற் சடைதாழ
விரும்பும் அதிகையுள் ஆடும்வீரட் டானத்தே. உ

ஆடல் அழல்நாகம் அரைக்கிட் டசைத்தாடப்
பாடல் மறைவல்லான் படுதம் பலிபெயர்வான்
மாட முகட்டின்மேல் மதிதோய் அதிகையுள்
வேடம் பலவல்லான் ஆடும்வீரட் டானத்தே. ௩

எண்ணார் எயிலெய்தான் இறைவன் அனலேந்தி
மண்ணார் முழவதிர முதிரா மதிசூடிப்
பண்ணார் மறைபாடப் பரமன் அதிகையுள்
விண்ணோர் பரவநின் றாடும்வீரட் டானத்தே. ௪

கரிபுன் புறமாய கழிந்தார் இடுகாட்டில்
திருநின் றொருகையால் திருவாம் அதிகையுள்
எரியேந் தியபெருமான் எரிபுன் சடைதாழ
விரியும் புனல்சூடி யாடும்வீரட் டானத்தே. ௫

துளங்குஞ் சுடரங்கைத் துதைய விளையாடி
இளங்கொம் பனசாயல் உமையோ டிசைபாடி
வளங்கொள் புனல்சூழ்ந்த வயலா ரதிகையுள்
விளங்கும் பிறைசூடி யாடும்வீரட் டானத்தே. ௬

பாதம் பலரேத்தப் பரமன் பரமேட்டி
பூதம் புடைசூழப் புலித்தோல் உடையாகக்
கீதம் உமைபாடக் கெடில வடபக்கம்
வேத முதல்வன்நின் றாடும்வீரட் டானத்தே. ௭

கல்லார் வரையரக்கன் தடந்தோள் கவின்வாட
ஒல்லை யடர்த்தவனுக் கருள்செய் ததிகையுள்
பல்லார் பகுவாய நகுவெண் தலைசூடி
வில்லால் எயில்எய்தான் ஆடும்வீரட் டானத்தே. ௮

நெடியான் நான்முகனும் நிமிர்ந்தானைக் காண்கிலார்
பொடியாடு மார்பானைப் புரிநூ லுடையானைக்
கடியார் கழுநீலம் மலரும் அதிகையுள்
வெடியார் தலையேந்தி யாடும்வீரட் டானத்தே. ௯

அரையோ டலர்பிண்டி மருவிக் குண்டிகை
சுரையோ டுடன்ஏந்தி யுடைவிட் டுழல்வார்கள்
உரையோ டுரையொவ்வா துமையோ டுடனாகி
விரைதோ யலர்தாரான் ஆடும்வீரட் டானத்தே. ௧௦

ஞாழல் கமழ்காழி யுள்ஞான சம்பந்தன்
வேழம் பொருதெண்ணீர் அதிகைவீரட் டானத்துச்
சூழுங் கழலானைச் சொன்ன தமிழ்மாலை
வாழுந் துணையாக நினைவார் வினையிலரே. கக

திருச்சிற்றம்பலம்

திருச்சிரபுரம் - பண் - பழந்தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

பல்லடைந்த வெண்டலையிற் பலிகொள்வ தன்றியும்போய்
வில்லடைந்த புருவநல்லாள் மேனியில் வைத்தலென்னே
சொல்லடைந்த தொல்மறையோ டங்கங்கலைகளெல்லாஞ்
செல்லடைந்த செல்வர்வாழுஞ் சிரபுரம் மேயவனே. க

கொல்லைமுல்லை நகையினளோர் கூறது அன்றியும்போய்
அல்லல்வாழ்க்கைப் பலிகொண்டுண்ணும் ஆதர வென்னைகொலாஞ்
சொல்லநீண்ட பெருமையாளர் தொல்கலை கற்றுவல்லார்
செல்லநீண்ட செல்வமல்கு சிரபுரம் மேயவனே. உ

நீரடைந்த சடையின்மேலோர் நிகழ்மதி யன்றியும்போய்
ஊரடைந்த ஏறதேறி யுண்பலி கொள்வதென்னே
காரடைந்த சோலைசூழ்ந்து காமரம் வண்டிசைப்பச்
சீரடைந்த செல்வமோங்கு சிரபுரம் மேயவனே. ௩

கையடைந்த மானினோடு காரர வன்றியும்போய்
மெய்யடைந்த வேட்கையோடு மெல்லியல் வைத்தலென்னே
கையடைந்த களைகளாகச் செங்கழு நீர்மலர்கள்
செய்யடைந்த வயல்கள்சூழ்ந்த சிரபுரம் மேயவனே. ௪

புரமெரித்த வெற்றியோடும் போர்மத யானைதன்னைக்
கரமெடுத்துத் தோலுரித்த காரணம் ஆவதென்னே
மரமுரித்த தோலுடுத்த மாதவர் தேவரோடுஞ்
சிரமெடுத்த கைகள்கூப்புஞ் சிரபுரம் மேயவனே. ரு

கன்றுமூன்று முடையதன்றிக் கையினில் வெம்மழுவும்
பன்றுமூன்று வீணையோடு பாம்புடன் வைத்தலென்னே

எண்ணுமூன்று கனலும்ஓம்பி யெழுமையும் விழுமியாராய்த்
திண்ணமூன்று வேள்வியாளர் சிரபுரம் மேயவனே. ௬

குறைபடாத வேட்கையோடு கோல்வளை யாளொருபாற்
பொறைபடாத இன்பமோடு புணர்தரு மெய்ம்மையென்னே
இறைபடாத மென்முலையார் மாளிகை மேலிருந்து
சிறைபடாத பாடலோங்கு சிரபுரம் மேயவனே. ௭

மலையெடுத்த வாளரக்கன் அஞ்சவொ ருவிரலால்
நிலையெடுத்த கொள்கையானே நின்மல னேநினைவார்
துலையெடுத்த சொற்பயில்வார் மேதகு வீதிதோறுஞ்
சிலையெடுத்த தோளினனே சிரபுரம் மேயவனே. ௮

மாலினோடு மலரினானும் வந்தவர் காணாது
சாலும்அஞ்சப் பண்ணிநீண்ட தத்துவ மேயதென்னே
நாலுவேதம் ஓதலார்கள் நம்துணை யென்றிறைஞ்சச்
சேலுமேயுங் கழனிசூழ்ந்த சிரபுரம் மேயவனே. ௯

புத்தரோடு சமணர்சொற்கள் புறனுரை யென்றிருக்கும்
பத்தர்வந்து பணியவைத்த பான்மைய தென்னைகொலாம்
மத்தயானை யுரியும்போர்த்து மங்கையொ டும்முடனே
சித்தர்வந்து பணியுஞ்செல்வச் சிரபுரம் மேயவனே. ௧௦

தெங்குநீண்ட சோலைசூழ்ந்த சிரபுரம் மேயவனை
அங்கம்நீண்ட மறைகள்வல்ல அணிகொள்சம் பந்தன்உரை
பங்கம்நீங்கப் பாடவல்ல பத்தர்கள் பாரிதன்மேற்
சங்கமோடு நீடிவாழ்வர் தன்மையி னலவரே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருச்சேய்ஞலூர் - பண் - பழந்தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

நூலடைந்த கொள்கையாலே நுன்னடி கூடுதற்கு
மாலடைந்த நால்வர்கேட்க நல்கிய நல்லறத்தை
ஆலடைந்த நீழல்மேவி யருமறை சொன்னதென்னே
சேலடைந்த தண்கழனிச் சேய்ஞலூர் மேயவனே. ௧

நீறடைந்த மேனியின்கண் நேரிழை யாளொருபால்
கூறடைந்த கொள்கையன்றிக் கோல வளர்சடைமேல்
ஆறடைந்த திங்கள்சூடி யரவம் அணிந்ததென்னே
சேறடைந்த தண்கழனிச் சேய்ஞலூர் மேயவனே. உ

ஊனடைந்த வெண்டலையி னோடுப லிதிரிந்து
கானடைந்த பேய்களோடு பூதங்க லந்துடனே
மானடைந்த நோக்கிகாண மகிழ்ந்தெரி யாடலென்னே
தேனடைந்த சோலைமல்கு சேய்ஞலூர் மேயவனே. ௩

வீணடைந்த மும்மதிலும் வில்மலை யாஅரவின்
நாணடைந்த வெஞ்சரத்தால் நல்லெரி யூட்டலென்னே
பாணடைந்த வண்டுபாடும் பைம்பொழில் சூழ்ந்தழகார்
சேணடைந்த மாடம்மல்கு சேய்ஞலூர் மேயவனே. ௪

பேயடைந்த காடிடமாப் பேணுவ தன்றியும்போய்
வேயடைந்த தோளியஞ்ச வேழம் உரித்ததென்னே
வாயடைந்த நான்மறையா றங்கமோ டைவேள்வித்
தீயடைந்த செங்கையாளர் சேய்ஞலூர் மேயவனே. ரு

காடடைந்த ஏனமொன்றின் காரண மாகிவந்து
வேடடைந்த வேடனாகி விசயனொ டெய்ததென்னே
கோடடைந்த மால்களிற்றுக் கோச்செங்க ணாற்கருள்செய்
சேடடைந்த செல்வர்வாழுஞ் சேய்ஞலூர் மேயவனே. ௬

பீரடைந்த பாலதாட்டப் பேணாத வன்தாதை
வேரடைந்து பாய்ந்ததாளை வேர்த்தடிந் தான்தனக்குத்
தாரடைந்த மாலைசூட்டித் தலைமை வகுத்ததென்னே
சீரடைந்த கோயில்மல்கு சேய்ஞலூர் மேயவனே. எ

மாவடைந்த தேரரக்கன் வலிதொலை வித்தவன்தன்
நாவடைந்த பாடல்கேட்டு நயந்தருள் செய்ததென்னே
பூவடைந்த நான்முகன்போற் பூசுரர் போற்றிசெய்யும்
சேவடைந்த வூர்தியானே சேய்ஞலூர் மேயவனே. அ

காரடைந்த வண்ணனோடு கனகம னையானும்
பாரிடந்தும் விண்பறந்தும் பாதம்மு டிகாணார்

சீரடைந்து வந்துபோற்றச் சென்றருள் செய்ததென்னே
தேரடைந்த மாமறுகிற் சேய்ஞலூர் மேயவனே. கூ

மாசடைந்த மேனியாரும் மனந்திரி யாதகஞ்சி
நேசடைந்த வூணினாரும் நேசமி லாததென்னே
வீசடைந்த தோகையாட விரைகம ழும்பொழில்வாய்த்
தேசடைந்த வண்டுபாடுஞ் சேய்ஞலூர் மேயவனே. கௐ

சேயடைந்த சேய்ஞலூரிற் செல்வன சீர்பாவித்
தோயடைந்த தண்வயல்சூழ் தோணிபு ரத்தலைவன்
சாயடைந்த ஞானம்மல்கு சம்பந்தன் இன்னுரைகள்
வாயடைந்து பாடவல்லார் வானுல காள்பவரே. கக

திருச்சிற்றம்பலம்

திருநள்ளாறு - பண் - பழந்தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

போகமார்த்த பூண்முலையாள் தன்னோடும் பொன்னகலம்
பாகமார்த்த பைங்கண்வெள் ளேற்றண்ணல் பரமேட்டி
ஆகமார்த்த தோலுடையன் கோவண ஆடையின்மேல்
நாகமார்த்த நம்பெருமான் மேயது நள்ளாறே. க

தோடுடைய காதுடையன் தோலுடை யன்தொலையாப்
பீடுடைய போர்விடையன் பெண்ணுமோர் பாலுடையன்
ஏடுடைய மேலுலகோ டேழ்கட லுஞ்சூழ்ந்த
நாடுடைய நம்பெருமான் மேயது நள்ளாறே. உ

ஆன்முறையா லாற்றவெண்ணீ றாடி அணியிழையோர்
பான்முறையால் வைத்தபாதம் பத்தர்ப ணிந்தேத்த
மான்மறியும் வெண்மழுவுஞ் சூலமும் பற்றியகை
நான்மறையான் நம்பெருமான் மேயது நள்ளாறே. ௩

புல்கவல்ல வார்சடைமேற் பூம்புனல் பெய்தயலே
மல்கவல்ல கொன்றைமாலை மதியோடு டன்சூடிப்
பல்கவல்ல தொண்டர்தம்பொற் பாதநி ழற்சேர
நல்கவல்ல நம்பெருமான் மேயது நள்ளாறே. ௪

ஏறுதாங்கி யூர்திபேணி யேர்கொள் இளமதியம்
ஆறுதாங்குஞ் சென்னிமேலோர் ஆடர வஞ்சூடி
நீறுதாங்கி நூல்கிடந்த மார்பில் நிரைகொன்றை
நாறுதாங்கும் நம்பெருமான் மேயது நள்ளாறே. ௫

திங்களுச்சி மேல்விளங்குந் தேவன் இமையோர்கள்
எங்களுச்சி யெம்மிறைவன் என்றடி யேயிறைஞ்சத்
தங்களுச்சி யால்வணங்குந் தன்னடி யார்கட்கெல்லாம்
நங்களுச்சி நம்பெருமான் மேயது நள்ளாறே. ௬

வெஞ்சுடர்த்தீ யங்கையேந்தி விண்கொண்மு ழவதிர
அஞ்சிடத்தோர் ஆடல்பாடல் பேணுவ தன்றியும்போய்ச்
செஞ்சடைக்கோர் திங்கள்சூடித் திகழ்தரு கண்டத்துள்ளே
நஞ்சடைத்த நம்பெருமான் மேயது நள்ளாறே. ௭

சிட்டமார்ந்த மும்மதிலுஞ் சிலைவரைத் தீயம்பினால்
சட்டுமாட்டிச் சுண்ணவெண்ணீ றாடுவ தன்றியும்போய்ப்
பட்டமார்ந்த சென்னிமேலோர் பால்ம தியஞ்சூடி
நட்டமாடும் நம்பெருமான் மேயது நள்ளாறே. ௮

உண்ணலாகா நஞ்சகண்டத் துண்டுட னேயொடுக்கி
அண்ணலாகா வண்ணல்நீழல் ஆரழல் போலுருவம்
எண்ணலாகா வுள்வினையென் றெள்க வலித்திருவர்
நண்ணலாகா நம்பெருமான் மேயது நள்ளாறே. ௯

மாசுமெய்யர் மண்டைத்தேரர் குண்டர்கு ணமிலிகள்
பேசும்பேச்சை மெய்யென்றெண்ணி யந்நெறி செல்லன்மின்
மூசுவண்டார் கொன்றைசூடி மும்மதி லும்உடனே
நாசஞ்செய்த நம்பெருமான் மேயது நள்ளாறே. ௧௦

தண்புனலும் வெண்பிறையுந் தாங்கிய தாழ்சடையன்
நண்புநல்லார் மல்குகாழி ஞானசம் பந்தன்நல்ல
பண்புநள்ளா றேத்துபாடல் பத்தும் இவைவல்லார்
உண்புநீங்கி வானவரோ டுலகி லுறைவாரே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருவலிவலம் - பண் - பழந்தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

ஒல்லையாறி உள்ளம்ஒன்றிக் கள்ளம்ஒழிந் துவெய்ய
சொல்லையாறித் தூய்மைசெய்து காமவினை யகற்றி
நல்லவாறே யுன்றன்நாமம் நாவில்நவின் றேத்த
வல்லவாறே வந்துநல்காய் வலிவலம்மே யவனே. க

இயங்குகின்ற இரவிதிங்கள் மற்றுநல்தே வரெல்லாம்
பயங்களாலே பற்றிநின்பால் சித்தந்தெளி கின்றிலர்
தயங்குசோதீ சாமவேதா காமனைக்காய்ந் தவனே
மயங்குகின்றேன் வந்துநல்காய் வலிவலம்மே யவனே. உ

பெண்டிர்மக்கள் சுற்றமென்னும் பேதைப்பெருங் கடலை
விண்டுபண்டே வாழமாட்டேன் வேதனைநோய் நலியக்
கண்டுகண்டே யுன்றன்நாமங் காதலிக்கின்ற துள்ளம்
வண்டுகிண்டிப் பாடுஞ்சோலை வலிவலம்மே யவனே. ௩

மெய்யராகிப் பொய்யைநீக்கி வேதனையைத் துறந்து
செய்யானார் சிந்தையானே தேவர்குலக் கொழுந்தே
நைவன்நாயேன் உன்றன்நாமம் நாளும்நவிற் றுகின்றேன்
வையம்முன்னே வந்துநல்காய் வலிவலம்மே யவனே. ௪

துஞ்சும்போதுந் துற்றும்போதுஞ் சொல்லுவனுன் திறமே
தஞ்சமில்லாத் தேவர்வந்துன் தாளிணைக்கீழ்ப் பணிய
நஞ்சையுண்டாய்க் கென்செய்கேனோ நாளும்நினைந் தடியேன்
வஞ்சமுண்டென் றஞ்சுகின்றேன் வலிவலம்மே யவனே. ௫

புரிசடையாய் புண்ணியனே நண்ணலார்மூ வெயிலும்
எரியஎய்தாய் எம்பெருமான் என்றிமையோர் பரவும்
கரியுரியாய் காலகாலா நீலமணி மிடற்றா
வரியரவா வந்துநல்காய் வலிவலம்மே யவனே. ௬

தாயும்நீயே தந்தைநீயே சங்கரனே யடியேன்
ஆயுநின்பால் அன்புசெய்வான் ஆதரிக்கின் றதுள்ளம்
ஆயமாய காயந்தன்னுள் ஐவர்நின்றொன் றலொட்டார்
மாயமேயென் றஞ்சுகின்றேன் வலிவலம்மே யவனே. எ

நீரொடுங்குஞ் செஞ்சடையாய் நின்னுடையபொன் மலையை
வேரொடும்பீழ்க்தேந்தலுற்ற வேந்தன்இரா வணனைத்
தேரொடும்போய் வீழ்ந்தலறத் திருவிரலால் அடர்த்த
வாரொடுங்குங் கொங்கைபங்கா வலிவலம்மே யவனே. அ

ஆதியாய நான்முகனும் மாலும்அறி வரிய
சோதியானே நீதியில்லேன் சொல்லுவன்நின் திறமே
ஓதிநாளும் உன்னையேத்தும் என்னைவினை அவலம்
வாதியாமே வந்துநல்காய் வலிவலம்மே யவனே. க

பொதியிலானே பூவணத்தாய் பொன்திகழுங் கயிலைப்
பதியிலானே பத்தர்சித்தம் பற்றுவிடா தவனே
விதியிலாதார் வெஞ்சமணர் சாக்கியரொன் றிவர்கள்
மதியிலாதா ரென்செய்வாரோ வலிவலம்மே யவனே. க0

வன்னிகொன்றை மத்தஞ்சூடும் வலிவலம்மே யவனைப்
பொன்னிநாடன் புகலிவேந்தன் ஞானசம்பந்தன் சொன்ன
பன்னுபாடல் பத்தும்வல்லார் மெய்த்தவத்தோர் விரும்பும்
மன்னுசோதி யீசனோடே மன்னியிருப் பாரே. கக

திருச்சிற்றம்பலம்

திருச்சோபுரம் - பண் - பழந்தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

வெங்கண்ஆனை யீருரிவை போர்த்துவிளங் கும்மொழி
மங்கைபாகம் வைத்துகந்த மாண்பதுஎன் னைகொலாம்
கங்கையோடு திங்கள்சூடிக் கடிகமழுங் கொன்றைத்
தொங்கலானே தூயநீற்றாய் சோபுரம்மே யவனே. க

விடையமர்ந்து வெண்மழுவொன் றேந்திவிரித் திலங்கு
சடையொடுங்கத் தண்புனலைத் தாங்கியதென் னைகொலாம்
கடையுயர்ந்த மும்மதிலுங் காய்ந்தனலுள் அழுந்தத்
தொடைநெகிழ்ந்த வெஞ்சிலையாய் சோபுரம்மே யவனே. உ

தீயராய வல்லரக்கர் செந்தழலுள் அழுந்தச்
சாயஎய்து வானவரைத் தாங்கியதென் னைகொலாம்

பாயும்வெள்ளை ஏற்றையேறிப் பாய்புலித்தோல் உடுத்த
தூயவெள்ளை நீற்றினனே சோபுரம்மே யவனே. ௩

பல்லிலோடு கையிலேந்திப் பல்கடையும் பலிதேர்ந்
தல்லல்வாழ்க்கை மேலதான ஆதரவென் னைகொலாம்
வில்லைவென்ற நுண்புருவ வேல்நெடுங்கண் ணியொடும்
தொல்லையூழி யாகிநின்றாய் சோபுரம்மே யவனே. ௪

நாற்றமிக்க கொன்றைதுன்று செஞ்சடைமேல் மதியம்
ஏற்றமாக வைத்துகந்த காரணம்என் னைகொலாம்
ஊற்றமிக்க காலன்தன்னை யொல்கவுதைத் தருளித்
தோற்றமீறு மாகிநின்றாய் சோபுரம்மே யவனே. ௫

கொன்னவின்ற மூவிலைவேற் கூர்மழுவாட் படையன்
பொன்னைவென்ற கொன்றைமாலை சூடும்பொற்பென் னைகொலாம்
அன்னமன்ன மெல்நடையாள் பாகம்அமர்ந் தரைசேர்
துன்னவண்ண ஆடையினாய் சோபுரம்மே யவனே. ௬

குற்றமின்மை யுண்மைநீயென் றுன்னடியார் பணிவார்
கற்றல்கேள்வி ஞானமான காரணம்என் னைகொலாம்
வற்றலாமை வாளரவம் பூண்டயன்வெண் தலையில்
துற்றலான கொள்கையானே சோபுரம்மே யவனே. ௭

விலங்கலொன்று வெஞ்சிலையாக் கொண்டுவிற லரக்கர்
குலங்கள்வாழும் ஊரெரித்த கொள்கையிதென் னைகொலாம்
இலங்கைமன்னு வாளவுணர் கோனையெழில் விரலால்
தலங்கவூன்றி வைத்துகந்தாய் சோபுரம்மே யவனே. ௮

விடங்கொள்நாக மால்வரையைச் சுற்றிவிரி திரைநீர்
கடைந்தநஞ்சை யுண்டுகந்த காரணம்என் னைகொலாம்
இடந்துமண்ணை யுண்டமாலும் இன்மலர்மேல் அயனும்
தொடர்ந்துமுன்னங் காணமாட்டாச் சோபுரம்மே யவனே. ௯

புத்தரோடு புன்சமணர் பொய்யுரையே யுரைத்துப்
பித்தராகக் கண்டுகந்த பெற்றிமையென் னைகொலாம்
மத்தயானை யீருரிவை போர்த்துவளர் சடைமேல்
தத்திநாகஞ் சூடினனே சோபுரம்மே யவனே. ௰

சோலைமிக்க தண்வயல்சூழ் சோபுரம்மே யவனைச்
சீலமிக்க தொல்புகழார் சிரபுரக்கோன் நலத்தால்
ஞாலமிக்க தண்தமிழால் ஞானசம்பந்தன் சொன்ன
கோலமிக்க மாலைவல்லார் கூடுவர்வா னுலகே. கக

திருச்சிற்றம்பலம்

திருநெடுங்களம் - பண் - பழந்தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

மறையுடையாய் தோலுடையாய் வார்சடைமேல் வளரும்
பிறையுடையாய் பிஞ்ஞகனே யென்றுனைப்பே சினல்லால்
குறையுடையார் குற்றம்ஓராய் கொள்கையினால் உயர்ந்த
நிறையுடையார் இடர்களையாய் நெடுங்களம்மே யவனே. க

கனைத்தெழுந்த வெண்திரைசூழ் கடலிடைநஞ் சுதன்னைத்
தினைத்தனையா மிடற்றில்வைத்த திருந்தியதே வநின்னை
மனத்தகத்தோர் பாடல்ஆடல் பேணியிராப் பகலும்
நினைத்தெழுவார் இடர்களையாய் நெடுங்களம்மே யவனே. உ

நின்னடியே வழிபடுவான் நிமலாநினைக் கருத
என்னடியான் உயிரைவவ்வேல் என்றடற்கூற் றுதைத்த
பொன்னடியே பரவிநாளும் பூவொடுநீர் சுமக்கும்
நின்னடியார் இடர்களையாய் நெடுங்களம்மே யவனே. ௩

மலைபுரிந்த மன்னவன்தன் மகளையோர்பால் மகிழ்ந்தாய்
அலைபுரிந்த கங்கைதங்கும் அவிர்சடையா ரூரா
தலைபுரிந்த பலிமகிழ்வாய் தலைவநின்றாள் நிழற்கீழ்
நிலைபுரிந்தார் இடர்களையாய் நெடுங்களம்மே யவனே. ௪

பாங்கினல்லார் படிமஞ்செய்வார் பாரிடமும் பலிசேர்
தூங்கிநல்லார் பாடலோடு தொழுகழலே வணங்கித்
தாங்கிநில்லா அன்பினோடுந் தலைவநின்றாள் நிழற்கீழ்
நீங்கிநில்லார் இடர்களையாய் நெடுங்களம்மே யவனே. ௫

விருத்தனாகிப் பாலனாகி வேதமோர்நான் குணர்ந்த
கருத்தனாகிக் கங்கையாளைக் கமழ்சடைமேற் கரந்தாய்

அருத்தனுய ஆதிதேவன் அடியிணையே பரவும்
நிருத்தர்கீதர் இடர்களையாய் நெடுங்களம்மே யவனே. ௬

கூறுகொண்டாய் மூன்றுமொன்றுக் கூட்டியோர்வெங் கணையால்
மாறுகொண்டார் புரமெரித்த மன்னவனே கொடிமேல்
ஏறுகொண்டாய் சாந்தமீதென் றெம்பெருமா னணிந்த
நீறுகொண்டார் இடர்களையாய் நெடுங்களம்மே யவனே. ௭

குன்றின்உச்சி மேல்விளங்குங் கொடிமதில்சூழ் இலங்கை
அன்றிநின்ற அரக்கர்கோனை யருவரைக்கீழ் அடர்த்தாய்
என்றுநல்ல வாய்மொழியா லேத்தியிராப் பகலும்
நின்றுநைவார் இடர்களையாய் நெடுங்களம்மே யவனே. ௮

வேழவெண்கொம் பொசித்தமாலும் விளங்கியநான் முகனும்
சூழவெங்கும் நேடஆங்கோர் சோதியுளா கிநின்றாய்
கேழல்வெண்கொம் பணிந்தபெம்மான் கேடிலாப்பொன் னடியின்
நீழல்வாழ்வார் இடர்களையாய் நெடுங்களம்மே யவனே. ௯

வெஞ்சொல்தஞ்சொல் லாக்கிநின்ற வேடமிலாச் சமணும்
தஞ்சமில்லாச் சாக்கியருந் தத்துவமொன் றறியார்
துஞ்சலில்லா வாய்மொழியால் தோத்திரநின் அடியே
நெஞ்சில்வைப்பார் இடர்களையாய் நெடுங்களம்மே யவனே. ௧௦

நீடவல்ல வார்சடையான் மேயநெடுங் களத்தைச்
சேடர்வாழும் மாமறுகிற் சிரபுரக்கோன் நலத்தால்
நாடவல்ல பனுவன்மாலை ஞானசம்பந்தன் சொன்ன
பாடல்பத்தும் பாடவல்லார் பாவம்ப றையுமே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருமுதுகுன்றம் - பண் - பழந்தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

தேவராயும் அசுரராயுஞ் சித்தர்செழு மறைசேர்
நாவராயும் நண்ணுபாரும் விண்ணெரிகால் நீரும்
மேவராய விரைமலரோன் செங்கண்மால் ஈசன்என்னும்
மூவராய முதலொருவன் மேயதுமு துகுன்றே. ௧

பற்றுமாகி வானுளோர்க்குப் பல்கதிரோன் மதிபார்
எற்றுநீர்தீக் காலுமேலை விண்இயமா னனோடு
மற்றுமாதோர் பல்லுயிராய் மாலயனும் மறைகள்
முற்றுமாகி வேறுமானான் மேயது முதுகுன்றே. உ

வாரிமாகம் வைகுதிங்கள் வாளரவஞ் சூடி
நாரிபாகம் நயந்துபூமேல் நான்முகன்றன் தலையில்
சீரிதாகப் பலிகொள்செல்வன் செற்றலுந்தோன் றியதோர்
மூரிநாகத் துரிவைபோர்த்தான் மேயதுமு துகுன்றே. ந

பாடுவோருக் கருளும்எந்தை பனிமுதுபௌ வம்முந்நீர்
நீடுபாரும் முழுதுமோடி யண்டர்நிலை கெடலும்
நாடுதானும் ஊடுமோடி ஞாலமும்நான் முகனும்
ஊடுகாண மூடும்வெள்ளத் துயர்ந்ததுமு துகுன்றே. ச

வழங்குதிங்கள் வன்னிமத்தம் மாசுணம்மீ சணவிச்
செழுங்கல்வேந்தன் செல்விகாணத் தேவர்திசை வணங்கத்
தழங்கும்மொந்தை தக்கைமிக்க பேய்க்கணம்பூ தஞ்சூழ
முழங்குசெந்தீ யேந்தியாடி மேயதுமு துகுன்றே. ரு

சுழிந்தகங்கை தோய்ந்ததிங்கட் டொல்லரா நல்விதழி
சழிந்தசென்னிச் சைவவேடந் தான்நினைத்தைம் புலனும்
அழிந்தசிந்தை யந்தணாளர்க் கறம்பொருளின் பம்வீடு
மொழிந்தவாயான் முக்கணாதி மேயதுமு துகுன்றே. சு,எ

மயங்கும்மாயம் வல்லராகி வானினொடு நீரும்
இயங்குவோருக் கிறைவனாய இராவணன் தோள்நெரித்த
புயங்கராக மாநடத்தன் புணர்முலைமா துமையாள்
முயங்குமார்பன் முனிவரேத்த மேயதுமு துகுன்றே. அ

ஞாலமுண்ட மாலும்மற்றை நான்முகனும் அறியாக்
கோலமண்டர் சிந்தைகொள்ளா ராயினுங்கொய் மலரால்
ஏலவிண்டை கட்டிநாமம் இசையஎப்போ தும்ஏத்தும்
மூலமுண்ட நீற்றர்வாயான் மேயதுமு துகுன்றே. கூ

உறிகொள்கையர் சீவரத்தர் உண்டுழல்மிண் டர்சொல்லை
நெறிகளென்ன நினைவுறாதே நித்தலுங்கை தொழுமின்

மறிகொள்கையன் வங்கமுந்நீர்ப் பொங்குவிடத் தையுண்ட
முறிகொள்மேனி மங்கைபங்கன் மேயதுமு துகுன்றே. ௧௦

மொய்த்துவானோர் பல்கணங்கள் வணங்குமு துகுன்றைப்
பித்தர்வேடம் பெருமையென்னும் பிரமபுரத் தலைவன்.
* * * * * * ௧௧

திருச்சிற்றம்பலம்

திருவோத்தூர் - பண் - பழந்தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

பூத்தேர்ந் தாயன கொண்டுநின் பொன்னடி
ஏத்தா தாரில்லை யெண்ணுங்கால்
ஓத்தூர் மேய வொளிமழு வாள்அங்கைக்
கூத்தீ ரும்ம குணங்களே. ௧

இடையீர் போகா இளமுலை யாளையோர்
புடையீ ரேபுள்ளி மானுரி
உடையீ ரேயும்மை யேத்துதும் ஓத்தூர்ச்
சடையீ ரேயும தாளே. ௨

உள்வேர் போலநொடிமையி னார்திறம்
கொள்வீ ரல்குலோர் கோவணம்
ஒள்வா ழைக்கனி தேன்சொரி யோத்தூர்க்
கள்வீ ரேயும காதலே. ௩

தோட்டீ ரேதுத்தி யைந்தலை நாகத்தை
ஆட்டீ ரேயடி யார்வினை
ஓட்டீ ரேயும்மை யேத்துதும் ஓத்தூர்
நாட்டீ ரேயருள் நல்குமே. ௪

குழையார் காதிர்கொடுமழு வாட்படை
உழையாள் வீர்திரு வோத்தூர்
பிழையா வண்ணங்கள் பாடிநின் றாடுவார்
அழையா மேயருள் நல்குமே ௫

மிக்கார் வந்து விரும்பிப் பலியிடத்
தக்கார் தம்மக்க ளீரென்
றட்கா தாருள ரோதிரு வோத்தூர்
நக்கி ரேயருள் நல்குமே. சு

தாதார் கொன்றை தயங்கு முடியுடை
நாதா என்று நலம்புகழ்ந்
தோதா தாருள ரோதிரு வோத்தூர்
ஆதி ரேயருள் நல்குமே. எ

என்று னிம்மலை யென்ற அரக்கனை
வென்றார் போலும் விரலினால்
ஒன்றார் மும்மதி லெய்தவ னோத்தூர்
என்றார் மேல்வினை யேகுமே. அ

நன்று நான்மறை யானொடு மாலுமாய்ச்
சென்றார் போலுந் திசையெலாம்
ஒன்று யொள்ளெரி யாய்மிக வோத்தூர்
நின்றீ ரேயுமை நேடியே. கூ

கார மண்கலிங் கத்துவ ராடையர்
தேரர் சொல்லவை தேறன்மின்
ஓரம் பால்எயில் எய்தவ னோத்தூர்ச்
சீர வன்கழல் சேர்மினே. கo

குரும்பை யாண்பனை யீன்குலை யோத்தூர்
அரும்பு கொன்றை யடிகளைப்
பெரும்பு கலியுள் ஞானசம்பந் தன்சொல்
விரும்பு வார்வினை வீடே. கக

திருச்சிற்றம்பலம்

திருமாற்பேறு - பண் - பழந்தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

ஊறி யார்தரு நஞ்சினை யுண்டுமை
நீறு சேர்திரு மேனியர்
சேறு சேர்வயல் தென்திரு மாற்பேற்றின்
மாறி லாமணி கண்டரே. க

தொடையார் மாமலர் கொண்டிரு போதும்மை
அடைவா ராமடி கள்ளென
மடையார் நீர்மல்கு மன்னிய மாற்பே
றுடையீ ரேயுமை யுன்கியே. உ

பையா ரும்அர வங்கொடு ஆட்டிய
கையா னென்று வணங்குவர்
மையார் நஞ்சுண்டு மாற்பேற் றிருக்கின்ற
ஐயா நின்னடி யார்களே. ௩

சால மாமலர் கொண்டு சரணென்று
மேலை யார்கள் விரும்புவர்
மாலி னூர்வழி பாடுசெய் மாற்பேறு
நீல மார்கண்ட நின்னையே. ௪

மாறி லாமணி யேயென்று வானவர்
ஏற வேமிக ஏத்துவர்
கூற னேகுல வுந்திரு மாற்பேற்றின்
நீற னேயென்று நின்னையே. ரு

உரையா தாரில்லை யொன்றும்நின் தன்மையைப்
பரவா தாரில்லை நாள்களும்
திரையார் பாலியின் தென்கரை மாற்பேற்
றரையா னேயருள் நல்கிடே. சு, எ

அரச ளிக்கும் அரக்கன் அவன்தனை
உரைகெ டுத்தவன் ஒல்கிட
வரமி குத்தஎம் மாற்பேற் றடிகளைப்
பரவி டக்கெடும் பாவமே. அ

இருவர் தேவருந் தேடித் திரிந்தினி
ஒருவ ராலறி வொண்ணிலன்
மருவும் நீள்கழல் மாற்பேற் றடிகளைப்
பரவு வார்வினை பாறுமே. க

தூசு போர்த்துழல் வார்கையில் துற்றுணும்
நீசர் தம்உரை கொள்ளேலும்
தேசம் மல்கிய தென்திரு மாற்பேற்றின்
ஈச னென்றெடுத் தேத்துமே. க0

மன்னி மாலொடு சோமன் பணிசெயும்
மன்னும் மாற்பேற் றடிகளை
மன்னு காழியுள் ஞானசம்பந் தன்சொல்
பன்ன வேவினை பாறுமே. கக

திருச்சிற்றம்பலம்

திருப்பாற்றுறை - பண் - பழந்தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

காரார் கொன்றை கலந்த முடியினர்
சீரார் சிந்தை செலச் செய்தார்
பாரார் நாளும் பரவிய பாற்றுறை
ஆரா ராதி முதல்வரே. க

நல்லா ரும்மவர் தீய ரெனப்படும்
சொல்லார் நன்மலர் சூடினார்
பல்லார் வெண்தலைச் செல்வரெம் பாற்றுறை
எல்லா ருந்தொழும் ஈசரே. உ

விண்ணார் திங்கள் விளக்கும் நுதலினர்
எண்ணார் வந்தென் எழில்கொண்டார்
பண்ணார் வண்டினம் பாடல்செய் பாற்றுறை
உண்ணாள் நாளும் உறைவரே. ௩

பூவுந் திங்கள் புனைந்த முடியினர்
ஏவின் அல்லா ரெயிலெய்தார்

பாவந் தீர்புனல் மல்கிய பாற்றுறை
ஓவென் சிந்தை யொருவரே. ௫

மாகந் தோய்மதி சூடி மகிழ்ந்தெனை
தாகம் பொன்னிற மாக்கினார்
பாகம் பெண்ணும் உடையவர் பாற்றுறை
நாகம் பூண்ட நயவரே. ௬

போது பொன்திகழ் கொன்றை புனைமுடி
நாதர் வந்தென் நலங்கொண்டார்
பாதந் தொண்டர் பரவிய பாற்றுறை
வேத மோதும் விகிர்தரே. ௭

வாடல் வெண்தலை சூடினர் மால்விடை
கோடல் செய்த குறிப்பினர்
பாடல் வண்டினம் பண்செயும் பாற்றுறை
ஆடல் நாகம் அசைத்தாரே. ௭

வெவ்வ மேனிய ராய்வெள்ளை நீற்றினர்
எவ்வஞ் செய்தென் எழில்கொண்டார்
பவ்வம் நஞ்சடை கண்டரெம் பாற்றுறை
மவ்வல் சூடிய மைந்தரே. ௮

ஏனம் அன்னமும் ஆனவ ருக்கெரி
ஆன வண்ணத்தெம் அண்ணலார்
பான லம்மலர் விம்மிய பாற்றுறை
வான வெண்பிறை மைந்தரே. ௯

வெந்த நீற்றினர் வேலினர் நூலினர்
வந்தென் நன்னலம் வௌவினார்
பைந்தண் மாதவி சூழ்தரு பாற்றுறை
மைந்தர் தாமோர் மணாளரே. ௧௦

பத்தர் மன்னிய பாற்றுறை மேவிய
பத்து நூறு பெயரானைப்
பத்தன் ஞானசம் பந்தன தின்தமிழ்
பத்தும் பாடிப் பரவுமே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருவேற்காடு - பண் - பழந்தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

ஒள்ளி துள்ளக் கதிக்கா மிவனொளி
வெள்ளி யானுறை வேற்காடு
உள்ளி யாருயர்ந் தாரிவ் வுலகினில்
தெள்ளி யாரவர் தேவரே. க

ஆடல் நாகம் அசைத்தள வில்லதோர்
வேடங் கொண்டவன் வேற்காடு
பாடி யும்பணிந் தாரிவ் வுலகினில்
சேட ராகிய செல்வரே. உ

பூதம் பாடப் புறங்காட் டிடையாடி
வேத வித்தகன் வேற்காடு
போதுஞ் சாந்தும் புகையுங் கொடுத்தவர்க்
கேதம் எய்துத லில்லையே. ௩

ஆழ்க டலெனக் கங்கை கரந்தவன்
வீழ்ச டையினன் வேற்காடு
தாழ்வு டைமனத் தாற்பணிந் தேத்திடப்
பாழ்ப டும்அவர் பாவமே. ௪

காட்டி னாலும் அயர்த்திடக் காலனை
வீட்டி னானுறை வேற்காடு
பாட்டி னாற்பணிந் தேத்திட வல்லவர்
ஓட்டி னார்வினை ஒல்லையே. ௫

தோலி னாலுடை மேவவல் லான்சுடர்
வேலி னானுறை வேற்காடு
நூலி னாற்பணிந் தேத்திட வல்லவர்
மாலி னார்வினை மாயுமே. ௬

மல்லல் மும்மதில் மாய்தர எய்ததோர்
வில்லி னானுறை வேற்காடு
சொல்ல வல்ல சுருங்கா மனத்தவர்
செல்ல வல்லவர் தீர்க்கமே. எ

மூரல் வெண்மதி சூடும் முடியுடை
வீரன் மேவிய வேற்காடு
வார மாய்வழி பாடுசெ ய்நினைந்தவர்
சேர்வர் செய்கழல் திண்ணமே. அ

பரக்கி னார்படு வெண்தலை யிற்பலி
யிரக்கி னான்உறை வேற்காட்டூர்
அரக்கன் ஆண்மை யடரப்பட் டான்இறை
நெருக்கி னானை நினைமினே. கூ

மாறி லாமல ரானொடு மாலவன்
வேற லானுறை வேற்காடு
ஈறி லாமொழி யேமொழி யாஎழில்
கூறி னார்க்கில்லை குற்றமே. கo

விண்ட மாம்பொழில் சூழ்தரு வேற்காடு
கண்டு நம்பன் கழல்பேணிச்
சண்பை ஞானசம் பந்தன செந்தமிழ்
கொண்டு பாடக் குணமாமே. கக

திருச்சிற்றம்பலம்

திருக்கரவீரம் - பண் - பழந்தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

அரியும் நம்வினை யுள்ளன ஆசற
வரிகொள் மாமணி போற்கண்டம்
கரிய வன்திக ழுங்கர வீரத்தெம்
பெரிய வன்கழல் பேணவே. க

தங்கு மோவினை தாழ்சடை மேலவன்
திங்க ளோடுடன் சூடிய
கங்கை யான்திக ழுங்கர வீரத்தெம்
சங்க ரன்கழல் சாரவே. உ

ஏதம் வந்தடை யாஇனி நல்லன
பூதம் பல்படை யாக்கிய

காத லான்திக ழுங்கா வீரத்தெம்
நாதன் பாதம் நணுகவே. ௩

பறையும் நம்வினை யுள்ளன பாழ்பட
மறையும் மாமணி போற்கண்டம்
கறைய வன்திக ழுங்கா வீரத்தெம்
இறைய வன்கழ லேத்தவே. ௪

பண்ணி னார்மறை பாடலன் ஆடலன்
விண்ணி னார்மதி லெய்தமுக்
கண்ணி னான்உறை யுங்கா வீரத்தை
நண்ணு வார்வினை நாசமே. ௫

நிழலி னார்மதி சூடிய நீள்சடை
அழலி னான வேந்திய
கழலி னானுறை யுங்கா வீரத்தைத்
தொழவல் லார்க்கில்லை துக்கமே. ௬

வண்டர் மும்மதில் மாய்தா எய்தவன்
அண்டன் ஆரழல் போலொளிர்
கண்ட னானுறை யுங்காவீ ரத்துத்
தொண்டர் மேல்துயர் தூரமே. ௭

புனல் இலங்கையர் கோன்முடி பத்திறச்
சினவ லாண்மை செகுத்தவன்
கனல வன்உறைகின்ற காவீரம்
எனவல் லார்க்கிட ரில்லையே. ௮

வெள்ளத் தாமரை யானொடு மாலுமாய்த்
தெள்ளத் தீத்திர ளாகிய
கள்ளத் தான்உறை யுங்கா வீரத்தை
உள்ளத் தான்வினை ஓயுமே. ௯

செடிஅமணொடு சீவரத் தாரவர்
கொடிய வெவ்வுரை கொள்ளேன்மின்
கடிய வன்உறைகின்ற காவீரத்
தடிய வர்க்கில்லை யல்லலே. ௧௦

வீடி லான்விளங் குங்கர வீரத்தெம்
சேடன் மேற்கசி வால்தமிழ்
நாடு ஞானசம் பந்தன சொல்லிவை
பாடு வார்க்கில்லை பாவமே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருத்தூங்கானைமாடம் - பண் - பழந்தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

ஒடுங்கும் பிணிபிறவி கேடென்றிவை யுடைத்தாய வாழ்க்கை யொழியத்தவம், அடங்கும் இடங்கருதி நின்றீரெல்லாம் அடிக ளடி நிழற்கீ ழாளாம்வண்ணம், கிடங்கும் மதிலுஞ் சுலாவியெங்குங் கெழு மனைகள் தோறும் மறையின்ஒலி, தொடங்குங் கடந்தைத் தடங் கோயில்சேர் தூங்கானை மாடம் தொழுமின்களே. ௧

பிணிநீர சாதல் பிறத்தலிவை பிரியப் பிரியாத பேரின்பத்தோ, டணிநீரமேலுலகம்எய்தலுறில் அறிமின் குறைவில்லை ஆனேறுடை, மணிநீலகண்டம் உடையபிரான் மலைமகளுந்தானும் மகிழ்ந்துவாழும், துணிநீர்க் கடந்தைத் தடங்கோயில்சேர் தூங்கானை மாடம் தொழு மின்களே. ௨

சாநாளும் வாழ்நாளுந் தோற்றம்இவை சலிப்பாய வாழ்க்கை யொழியத்தவம், ஆமா றறியா தலமந்துநீர் அயர்ந்துங் குறைவில்லை ஆனேறுடைப், பூமாண் அலங்கல் இலங்குகொன்றை புனல்பொ திந்தபுன் சடையினன்உறையும், தூமாண் கடந்தைத் தடங்கோயில் சேர் தூங்கானை மாடம் தொழுமின்களே. ௩

ஊன்றும் பிணிபிறவி கேடென்றிவை யுடைத்தாய வாழ்க்கை யொழியத்தவம், மான்று மனங்கருதி நின்றீரெல்லாம் மனந்திரிந்து மண்ணில் மயங்காதுநீர், மூன்று மதிலெய்த மூவாச்சிலை முதல்வர்க் கிடம்போலும் முகில்தோய்கொடி, தோன்றுங் கடந்தைத் தடங் கோயில்சேர் தூங்கானை மாடம் தொழுமின்களே. ௪

மயல்தீர்மை யில்லாத தோற்றம்இவை மரணத்தொ டொத்தழியு மாறுதலால், வியல்தீர மேலுக மெய்தலுறின் மிக்கொன்றும் வேண்டா விமலனிடம், உயர்தீர வோங்கிய நாமங்களா லோவாது நாளும் அடி

பாவல்செய், துயர்நீர் கடந்தைத் தடங்கோயில்சேர் தூங்கானை மாடம் தொழுமின்களே. ரு

பல்நீர்மை குன்றிச் செவிகேட்பிலா படர்நோக் கிற்கண் பவளந் நிற, நல்நீர்மை குன்றித் திரைதோலொடு நரைதோன் றுங்காலம் நமக்காதல்முன், பொன்நீர்மை துன்றப் புறந்தோன்றுநற் புனல்பொதிந்தபுன் சடையினுன்உறையும், தொல்நீர்க் கடந்தைத் தடங்கோயில் சேர் தூங்கானை மாடம் தொழுமின்களே. சு

இறையூண் துகளோ டிடுக்கண்எய்தி யிழிப்பாய வாழ்க்கை யொழியத்தவம், நிறையூண் நெறிகருதி நின்றீரெல்லாம் நீள்கழலே நாளும் நினைமின்சென்னிப், பிறைசூ ழலங்கல் இலங்குகொன்றை பிணையும் பெருமான் பிரியாதநீர்த், துறைசூழ் கடந்தைத் தடங் கோயில்சேர் தூங்கானை மாடம் தொழுமின்களே. எ

பல்வீழ்ந்து நாத்தளர்ந்து மெய்யில்வாடிப் பழிப்பாய வாழ்க்கை யொழியத்தவம், இல்சூ ழிடங்கருதி நின்றீரெல்லாம் இறையேபிரியா தெழுந்துபோதும், கல்சூழரக்கன் கதறச்செய்தான் காதலியுந்தானுங் கருதிவாழும்,தொல்சீர்க் கடந்தைத் தடங்கோயில்சேர் தூங்கானைமாடம் தொழுமின்களே. அ

னோயும் பிணியும் அருந்துயரமும் நகருடைய வாழ்க்கை யொழியத்தவம்,வாயும் மனங்கருதி நின்றீரெல்லாம் மலர்மிசைய நான்முகனும் மண்ணும் விண்ணும், தாய அடியளந்தான் காணமாட்டாத் தலைவர்க் கிடம்போலுந் தண்சோலைவிண்,தோயுங் கடந்தைத் தடங்கோயில் சேர் தூங்கானை மாடம் தொழுமின்களே. கூ

பகரே் பசிநலிய நோய்வருதலாற் பழிப்பாய வாழ்க்கை யொழியத் தவம், முகரே் மயிர்கடிந்த செய்கையாரும் மூடுதுவ ராடையரும் நாடிச் சொன்ன, நிகழ்நீர்ந்த பொய்ம்மொழி கள்தேறவேண்டா திருந்திழையுந் தானும் பொருந்திவாழும், திகள்நீர் கடந்தைத் தடங்கோயில்சேர் தூங்கானை மாடம் தொழுமின்களே. க0

மன்னர் முழவதிரும் மாடவீதி வயற்காழி ஞானசம்பந்தன் நல்ல, பெண்ணுகடத்துப் பெருங்கோயில்சேர் பிறையுரிஞ்சுந் தூங்

கானே மாடம்மேயான், கண்ணூர் கழல்பரவு பாடல்பத்துங் கருத்துணாக் கற்றாருங் கேட்டாரும்போய், விண்ணோ ருலகத்து மேவிவாழும் விதியதுவே யாகும் வினைமாயுமே. கக

திருச்சிற்றம்பலம்

திருத்தோணிபுரம் - பண் - பழந்தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

வண்டரங்கப் புனற்கமலம் மதுமாந்திப் பெடையினொடும்
ஒண்டரங்க இசைபாடும் அளியரசே ஒளிமதியத்
துண்டரங்கப் பூண்மார்பர் திருத்தோணி புரத்துறையும்
பண்டரங்கர்க் கென்னிலைமை பரிந்தொருகாற் பகராயே. க

எறிசுறவங் கழிக்கானல் இளங்குருகே என்பயலை
அறிவுறா தொழிவதுவும் அருவினையேன் பயனன்றே
செறிசிறார் பதம்ஓதுந் திருத்தோணி புரத்துறையும்
வெறிநிறார் மலர்க்கண்ணி வேதியர்க்கு விளம்பாயே. உ

பண்பழனக் கோட்டகத்து வாட்டமிலாச் செஞ்சூட்டுக்
கண்பகத்தின் வாரணமே கடுவினையேன் உறுபயலை
செண்பகஞ்சேர் பொழில்புடைசூழ் திருத்தோணிபுரத்துறையும்
பண்பனுக்கென் பரிசுரைத்தாற் பழியாமோ மொழியாயே. ங

காண்டகைய செங்காலொண் கழிநாராய் காதலாற்
பூண்டகைய முலைமெலிந்து பொன்பயந்தா ளென்றுவளர்
சேண்டகைய மணிமாடத் திருத்தோணி புரத்துறையும்
ஆண்டகையாற் கின்றேசென் றடியறிய உணர்த்தாயே. ச

பாராரே யெனையொருகால் தொழுகின்றேன் பாங்கமைந்த
காராருஞ் செழுநிறத்துப் பவளக்காற் கபோதகங்காள்
தேராரும் நெடுவீதித் திருத்தோணி புரத்துறையும்
நீராருஞ் சடையாருக் கென்னிலைமை நிகழ்த்தீரே. ரு

சேற்றெழுந்த மலர்க்கமலச் செஞ்சாலிக் கதிர்வீச
வீற்றிருந்த அன்னங்காள் விண்ணோடு மண்மறைகள்

தோற்றுவித்த திருத்தோணி புரத்தீசன் துளங்காத
கூற்றுதைத்த திருவடியே கூடுமா கூறீரே. சு

முன்றில்வாய் மடற்பெண்ணைக் குரம்பைவாழ் முயங்குசிறை
அன்றில்காள் பிரிவுறும்நோய் அறியாதீர் மிகவல்லீர்
தென்றலார் புகுந்துலவுந் திருத்தோணி புரத்துறையுங்
கொன்றைவார் சடையார்க்கென் கூர்பயலை கூறீரே. எ

பால்நாறு மலர்ச்சூதப் பல்லவங்க ளவைகோதி
ஏனோர்க்கும் இனிதாக மொழியும் எழில் இளங்குயிலே
தேனாரும் பொழில்புடைசூழ் திருத்தோணி புரத்தமரர்
கோனாரை யென்னிடத்தே வரவொருகாற் கூவாயே. அ

நற்பதங்கள் மிகஅறிவாய் நானுன்னை வேண்டுகின்றேன்
பொற்பமைந்த வாயலகிற் பூவைநல்லாய் போற்றுகின்றேன்
சொற்பதஞ்சேர் மறையாளர் திருத்தோணி புரத்துறையும்
விற்பொலிதோள் விகிர்தனுக்கென் மெய்ப்பயலை விளம்பாயே கூ

சிறையாரும் மடக்கிளியே யிங்கேவா தேனொடுபால்
முறையாலே யுணத்தருவேன் மொய்பவளத் தொடுதரளந்
துறையாருங் கடல்தோணி புரத்தீசன் துளங்கும்இளம்
பிறையாளன் திருநாமம் எனக்கொருகாற் பேசாயே. க0

போர்மிகுத்த வயல்தோணி புரத்துறையும் புரிசடையெங்
கார்மிகுத்த கறைக்கண்டத் திறையவனை வண்கமலத்
தார்மிகுத்த வரைமார்பன் சம்பந்தன் உரைசெய்த
சீர்மிகுத்த தமிழ்வல்லார் சிவலோகஞ் சேர்வாரே. கக

திருச்சிற்றம்பலம்

திருச்செங்காட்டங்குடி - பண் - பழந்தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

நறைகொண்ட மலர்தூவி விரையளிப்ப நாள்தோறும்
முறைகொண்டு நின்றடியார் முட்டாமே பணிசெய்யச்
சிறைகொண்ட வண்டறையுஞ் செங்காட்டங் குடியதனுள்
கறைகொண்ட கண்டத்தான் கணபதீச் சரத்தானே. க

வாரேற்ற பறையொலியுஞ் சங்கொலியும் வந்தியம்ப
வூரேற்ற செல்வத்தோ டோங்கியசீர் விழவோவாச்
சீரேற்றம் உடைத்தாய செங்காட்டங் குடியதனுள்
காரேற்ற கொன்றையான் கணபதீச் சரத்தானே. ௨

வரந்தையான் சோபுரத்தான் மந்திரத்தான் தந்திரத்தான்
கிரந்தையான் கோவணத்தான் கிண்கிணியான் கையதோர்
சிரந்தையான் செங்காட்டங் குடியான்செஞ் சடைசேரும்
கரந்தையான் வெண்ணீற்றான் கணபதீச் சரத்தானே. ௩

தொங்கலுங் கமழ்சாந்தும் அகிற்புகையுந் தொண்டர்கொண்
டங்கையால் தொழுதேத்த அருச்சுனற்கன் றருள்செய்தான்
செங்கயல்பாய் வயலுடுத்த செங்காட்டங் குடியதனுள்
கங்கைசேர் வார்சடையான் கணபதீச் சரத்தானே. ௪

பாலினால் நறுநெய்யாற் பழத்தினாற் பயின்றாட்டி
நூலினால் மணமாலை கொணர்ந்தடியார் புரிந்தேத்தச்
சேலினார் வயல்புடைசூழ் செங்காட்டங் குடியதனுள்
காலினாற் கூற்றுதைத்தான் கணபதீச் சரத்தானே. ௫

நுண்ணியான் மிகப்பெரியான் ஓயுளார் வாயுளான்
தண்ணியான் வெய்யான்நம் தலைமேலான் மனத்துளான்
திண்ணியான் செங்காட்டங் குடியான்செஞ் சடைமதியக்
கண்ணியான் கண்ணுதலான் கணபதீச் சரத்தானே. ௬

மையினார் மலர்நெடுங்கண் மலைமகளோர் பாகமாம்
மெய்யினான் பையரவம் அரைக்கசைத்தான் மீன்பிறழச்
செய்யினார் தண்கழனிச் செங்காட்டங் குடியதனுள்
கையினார் கூரெரியான் கணபதீச் சரத்தானே. ௭

தோடுடையான் குழையுடையான் அரக்கன்தன் தோளடர்த்த
பீடுடையான் போர்விடையான் பெண்பாகம் மிகப்பெரியான்
சேடுடையான் செங்காட்டங் குடியுடையான் சேர்ந்தாடும்
காடுடையான் நாடுடையான் கணபதீச் சரத்தானே. ௮

ஆனூரா வுழிதருவான் அன்றிருவர் தேர்ந்துணரா
வானூரான் வையகத்தான் வாழ்த்துவார் மனத்துளான்

தேனூரான் செங்காட்டங் குடியான்சிற் றம்பலத்தான்
காறூரான் கழுமலத்தான் கணபதீச் சரத்தானே. ௯

செடிநகருஞ் சமணர்களுஞ் சீவரத்த சாக்கியரும்
படிநகரா தயருழப்பார்க் கருளாத பண்பினன்
பொடிநகருஞ் சிறுத்தொண்டர்க் கருள்செய்யும் பொருட்டாகக்
கடிநகராய் வீற்றிருந்தான் கணபதீச் சரத்தானே. ௧0

நறையிலங்கு மலர்க்குவளை கண்காட்டக் கடிபொழிலின்
நறையிலங்கு வயற்காழித் தமிழ்ஞான சம்பந்தன்
சிறையிலங்கு புனற்படப்பைச் செங்காட்டங் குடிசேர்த்தும்
மறையிலங்கு தமிழ்வல்லார் வானுலகத் திருப்பாரே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருக்கோளிலி - பண் - பழந்தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

நாளாய போகாமே நஞ்சணியுங் கண்டனுக்கே
ஆளாய அன்புசெய்வோம் மடநெஞ்சே யரன்நாமம்
கேளாய்நங் கிளைகிளைக்குங் கேடுபடாத் திறம்அருளிக்
கோளாய நீக்குமவன் கோளிலியெம் பெருமானே. ௧

ஆடரவத் தழகாமை அணிகேழற் கொம்பார்த்த
தோடரவத் தொருகாதன் துணைமலர்நற் சேவடிக்கே
பாடரவத் திசைபயின்று பணிந்தெழுவார் தம்மனத்தில்
கோடரவம் தீர்க்குமவன் கோளிலியெம் பெருமானே. ௨

நன்றுநகு நாண்மலரால் நல்லிருக்கு மந்திரங்கொண்
டொன்றிவழி பாடுசெய லுற்றவன்றன் ஓங்குயிர்மேல்
கன்றிவரு காலனுயிர் கண்டவனுக் கன்றளித்தான்
கொன்றைமலர் பொன்திகழுங் கோளிலியெம் பெருமானே. ௩

வந்தமண லால்இலிங்கம் மண்ணியின்கட் பாலாட்டும்
சிந்தைசெய்வோன் தன்கருமந் தேர்ந்துசிதைப் பான்வருமத்
தந்தைதனைச் சாடுதலுஞ் சண்டீச னென்றருளிக்
கொந்தணவும் மலர்கொடுத்தான் கோளிலியெம் பெருமானே. ௪

வஞ்சமனத் தஞ்சொடுக்கி வைகலும்நற் பூசனையால்
நஞ்சமுது செய்தருளும் நம்பியென வேநினையும்
பஞ்சவரிற் பார்த்தனுக்குப் பாசுபதம் ஈந்துகந்தான்
கொஞ்சுகிளி மஞ்சணவுங் கோளிலியெம் பெருமானே. ரு

தாவியவ னுடனிருந்துங் காணாத தற்பரனை
ஆவிதனி லஞ்சொடுக்கி அங்கணனென் றாதரிக்கும்
நாவியல்சீர் நமிநந்தி யடிகளுக்கு நல்குமவன்
கோவியலும் பூவெழுகோற் கோளிலியெம் பெருமானே. சு

கல்நவிலு மால்வரையான் கார்திகழு மாமிடற்றான்
சொல்நவிலும் மாமறையான் தோத்திரஞ்செய் வாயினுளான்
மின்நவிலுஞ் செஞ்சடையான் வெண்பொடியான் அங்கையினில்
கொன்னவிலுஞ் சூலத்தான் கோளிலியெம் பெருமானே. எ

அந்தரத்தில் தேரூரும் அரக்கன்மலை அன்றெடுப்பச்
சுந்தரத்தன் திருவிரலால் ஊன்றஅவன் உடல்நெரிந்து
மந்திரத்த மறைபாட வாளவனுக் கீந்தானும்
கொந்தரத்த மதிச்சென்னிக் கோளிலியெம் பெருமானே. அ

நாணமுடை வேதியனும் நாரணனும் நண்ணவொணாத்
தாணுவெனை யாளுடையான் தன்னடியார்க் கன்புடைமை
பாணன்இசை பத்திமையாற் பாடுதலும் பரிந்தளித்தான்
கோணல்இளம் பிறைச்சென்னிக் கோளிலியெம் பெருமானே. கூ

தடுக்கமருஞ் சமணரொடு தர்க்கசாத் திரத்தவர்சொல்
இடுக்கண்வரும் மொழிகேளா தீசனையே ஏத்துமின்கள்
நடுக்கமிலா அமருலகம் நண்ணலுமாம் அண்ணல்கழல்
கொடுக்ககிலா வரங்கொடுக்குங் கோளிலியெம் பெருமானே. க0

நம்பனைநல் அடியார்கள் நாமுடைமா டென்றிருக்கும்
கொம்பனையாள் பாகனெழிற் கோளிலியெம் பெருமானை
வம்பமருந் தண்காழிச் சம்பந்தன் வண்டமிழ்கொண்
டின்பமர வல்லார்க ளெய்துவர்கள் ஈசனையே. கக

திருச்சிற்றம்பலம்

திருப்பிரமபுரம் - பல்பெயர்ப்பத்து. பண் - தக்கேசி

திருச்சிற்றம்பலம்

எரியார்மழுவொன் றேந்திஅங்கை யிடுதலையேகலனா
வரியார்வளையா ரையம்வவ்வாய் மாநலம்வவ்வுதியே
சரியாநாவின் வேதகீதன் தாமரைநான்முகத்தன்
பெரியான்பிரமன் பேணியாண்ட பிரமபுரத்தானே. க

பெயலார்சடைக்கோர் திங்கள்சூடிப் பெய்பலிக்கென் றயலே
கயலார்தடங்கண் அஞ்சொல்நல்லார் கண்டுயில்வவ்வுதியே
இயலால்நடாவி யின்பமெய்தி யிந்திரனாள்மண்மேல்
வியலார்முரச மோங்குசெம்மை வேணுபுரத்தானே. உ

நகலார்தலையும் வெண்பிறையும் நளிர்சடைமாட்டயலே
பகலாப்பலிதேர்ந் தையம்வவ்வாய் பாய்கலைவவ்வுதியே
அகலாதுறையும் மாநிலத்தில் அயலின்மையாலமரர்
புகலால்மலிந்த பூம்புகலி மேவியபுண்ணியனே. ௩

சங்கோடிலங்கத் தோடுபெய்து காதிலோர் தாழ்குழையன்
அங்கோல்வளையார் ஐயம்வவ்வா யால்நலம்வவ்வுதியே
செங்கோல்நடாவிப் பல்லுயிர்க்குஞ் செய்வினைமெய்தெரிய
வெங்கோத்தருமன் மேவியாண்ட வெங்குருமேயவனே. ௪

தணிநீர்மதியஞ் சூடிநீடு தாங்கியதாழ்சடையன்
பிணிநீர்மடவார் ஐயம்வவ்வாய் பெய்கலைவவ்வுதியே
அணிநீருலக மாகியெங்கும் ஆழ்கடலாலழுங்கத்
துணிநீர்ப்பணியத் தான்மிதந்த தோணிபுரத்தானே. ௫

கவர்பூம்புனலுந் தண்மதியுங் கமழ்சடைமாட்டயலே
அவர்பூம்பலியோ டையம்வவ்வா யால்நலம்வவ்வுதியே
அவர்பூணரையர்க் காதியாய் அவன்தன் மன்னன்ஆள்மண்மேல்
தவர்பூம்பதிக ளெங்குமெங்குந் தங்குதராயவனே. ௬

முலையாழ்கெழும மொந்தைகொட்ட முன்கடைமாட்டயலே
நிலையாய்ப்பலிதேர்ந் தையம்வவ்வாய் நீநலம்வவ்வுதியே
தலையாய்க்கிடந்திவ் வையமெல்லாந் தன்னதோராணைநடாய்ச்
சிலையால்மலிந்த சீர்ச்சிலம்பன் சிரபுரமேயவனே. ௭

எருதேகொணர்கென் றேறியங்கை யிடுதலையேகலனுக்
கருதேர்மடவார் ஐயம்வவ்வாய் கண்டியில்வவ்வுதியே
ஒருதேர்கடாவி ஆரமரு ளொருபதுதோள்தொலையப்
பொருதேர்வலவன் மேவியாண்ட புறவமர் புண்ணியனே. அ

துவர்சேர்கலிங்கப் போர்வையாருந் தூய்மையிலாச்சமணுங்
கவர்செய்துழலக் கண்டவண்ணம் காரிகைவார்குழலார்
அவர்பூம்பலியோ டையம்வவ்வா யால்நலம்வவ்வுதியே
தவர்செய்நெடுவேற் சண்டனுளச் சண்பையமர்ந்தவனே. க

நிழலால்மலிந்த கொன்றைசூடி நீறுமெய்பூசிநல்ல
குழலார்மடவா ரையம்வவ்வாய் கோல்வளைவவ்வுதியே
அழலாயுலகம் கவ்வைதீர ஐந்தலைநீண்முடிய
கழல்நாகரையன் காவலாகக் காழியமர்ந்தவனே. கO

கட்டார் துழாயன் தாமரையா னென்றிவர் காண்பரிய
சிட்டார்பலிதேர்ந் தையம்வவ்வாய் செய்கலைவவ்வுதியே
நட்டார்நடுவே நந்தனுள நல்வினையாலுயர்ந்த
கொட்டாறுடுத்த தண்வயல்சூழ் கொச்சையமர்ந்தவனே. கக

கடையார்கொடிநன் மாடவீதிக் கழுமலவூர்க்கவுணி
நடையார்பனுவல் மாலையாக ஞானசம்பந்தன்நல்ல
படையார்மழுவன் மேல்மொழிந்த பல்பெயர்ப்பத்தும்வல்லார்க்
கடையாவினைகள் உலகில்நாளும் அமருலகாள்பவரே. கஉ

திருச்சிற்றம்பலம்

திருப்பூவணம் - பண் - தக்கேசி

திருச்சிற்றம்பலம்

அறையார்புனலும்மா மலரும் ஆடரவார்சடைமேல்
குறையார்மதியஞ் சூடிமாதோர் கூறுடையானிடமாம்
முறையால்முடிசேர் தென்னர்சேரர் சோழர்கள் தாம்வணங்கும்
திறையாரொளிசேர் செம்மையோங்குந் தென்திருப்பூவணமே. க

மருவார்மதில்மூன் றொன்றஎய்து மாமலையான்மடந்தை
ஒருபால்பாக மாகச்செய்த வும்பர்பிரானவனூர்

கருவார்சாலி யாலைமல்கிக் கழல்மன்னர் காத்தளித்த
திருவால்மலிந்த சேடர்வாழுந் தென்திருப்பூவணமே. ௨

போரார்மதமா வுரிவைபோர்த்துப் பொடியணிமேனியனுக்
காரார்கடலின் நஞ்சமுண்ட கண்ணுதல்விண்ணவனூர்
பாரார்வைகைப் புனல்வாய்பரப்பிப் பன்மணிபொன்கொழித்துச்
சீரார்வாரி சேரநின்ற தென்திருப்பூவணமே. ௩

கடியாரலங்கல் கொன்றைசூடிக் காதிலோர்வார்குழையன்
கொடியார்வெள்ளை யேறுகந்த கோவணவன்னிடமாம்
படியார்கூடி நீடியோங்கும் பல்புகழாற்பரவச்
செடியார்வைகை சூழநின்ற தென்திருப்பூவணமே. ௪

கூரார்வாளி சிலையிற்கோத்துக் கொடிமதில்கூட்டழித்த
போரார்வில்லி மெல்லியலாளோர் பால்மகிழ்ந்தானிடமாம்
ஆராஅன்பில் தென்னர்சேரர் சோழர்கள்போற்றிசைப்பத்
தேரார்வீதி மாடம்நீடுந் தென்திருப்பூவணமே. ௫

நன்றுதீதென் றொன்றிலாத நான்மறையோன்கழலே
சென்றுபேணி யேத்தநின்ற தேவர்பிரானிடமாம்
குன்றிலொன்றி ஓங்கமல்கு குளிர்பொழில்சூழ்மலர்மேல்
தென்றலொன்றி முன்றிலாருந் தென்திருப்பூவணமே. ௬

பைவாயரவம் அரையிற்சாத்திப் பாரிடம்போற்றிசைப்ப
மெய்வாய்மேனி நீறுபூசி ஏறுகந்தானிடமாம்
கைவாழ்வளையார் மைந்தரோடுங் கலவியினால்நெருங்கிச்
செய்வார்தொழிலின் பாடலோவாத் தென்திருப்பூவணமே. ௭

மாடவீதி மன்னிலங்கை மன்னனை மாண்பழித்துக்
கூடவென்றி வாள்கொடுத்தான் கொள்கையினார்க்கிடமாம்
பாடலோடும் ஆடலோங்கிப் பன்மணிபொன்கொழித்து
ஓடநீரால் வைகைசூழும் உயர்திருப்பூவணமே. ௮

பொய்யாவேத நாவினானும் பூமகள்காதலனும்
கையால்தொழுது கழல்கள்போற்றக் கனலெரியானவனூர்
மையார்பொழிலின் வண்டுபாட வைகைமணிகொழித்துச்
செய்யார்கமலம் தேன்அரும்புந் தென்திருப்பூவணமே. ௯

அலையார்புனலை நீத்தவருந் தேரரும் அன்புசெய்யா
நிலையாவண்ணம் மாயம்வைத்த நின்மலன் தன்னிடமாம்
மலைபோல்துன்னி வென்றியோங்கு மாளிகைசூழ்ந்தயலே
சிலையார்புரிசை பரிசுபண்ணுந் தென்திருப்பூவணமே. கO

திண்ணார்புரிசை மாடமோங்குந் தென்திருப்பூவணத்துப்
பெண்ணார்மேனி யெம்மிறையைப் பேரியல்இன் தமிழால்
நண்ணாருட்கக் காழிமல்கு ஞானசம்பந்தன்சொன்ன
பண்ணார்பாடல் பத்தும்வல்லார் பயில்வதுவானிடையே. கக

திருச்சிற்றம்பலம்

காவிரிப்பூம்பட்டினத்துத் திருப்பல்லவனீச்சரம்

பண் - தக்கேசி

திருச்சிற்றம்பலம்

அடையார்தம் புரங்கள்மூன்றும் ஆரழலில் அழுந்த
விடையார்மேனி யராய்ச்சீறும் வித்தகர்மேயவிடம்
கடையார்மாடம் நீடியெங்குங் கங்குல்புறந்தடவப்
படையார்புரிசைப் பட்டினஞ்சேர் பல்லவனீச்சரமே. க

எண்ணாரெயில்கள் மூன்றுஞ்சீறும் எந்தைபிரான் இமையோர்
கண்ணாயுலகங் காக்கநின்ற கண்ணுதல்நண்ணுமிடம்
மண்ணார்சோலைக் கோலவண்டு வைகலுந்தேன்அருந்திப்
பண்ணார்செய்யும் பட்டினத்துப் பல்லவனீச்சரமே. உ

மங்கையங்கோர் பாகமாக வாள்நிலவார்சடைமேல்
கங்கையங்கே வாழவைத்த கள்வன் இருந்தஇடம்
பொங்கயஞ்சேர் புணரியோத மீதுயர்பொய்கையின்மேற்
பங்கயஞ்சேர் பட்டினத்துப் பல்லவனீச்சரமே. ங

தாரார்கொன்றை பொன்தயங்கச் சாத்தியமார்பகலம்
நீரார்நீறு சாந்தம்வைத்த நின்மலன் மன்னுமிடம்
போரார்வேற்கண் மாதர்மைந்தர் புக்கிசைபாடலினாற்
பாரார்கின்ற பட்டினத்துப் பல்லவனீச்சரமே. ச

மைசேர்கண்டர் அண்டவாணர் வானவருந்துதிப்ப
மெய்சேர்பொடிய ரடியாரேத்த மேவியிருந்தவிடங்
கைசேர்வளையார் விழைவினேடு காதன்மையாற்கழலே
பைசேரரவார் அல்குலார்சேர் பல்லவனீச்சரமே. ௫

குழலினேசை வீணைமொந்தை கொட்டமுழவதிரக்
கழலினேசை யார்க்கஆடுங் கடவுளிருந்தவிடஞ்
சுழியிலாருங் கடலிலோதந் தெண்டிரைமொண்டெறியப்
பழியிலார்கள் பயில்புகாரிற் பல்லவனீச்சரமே. ௬

வெந்தலாய வேந்தன்வேள்வி வேறச்சாடிவிண்ணோர்
வந்தெலாம்முன் பேணநின்ற மைந்தன்மகிழ்ந்தஇடம்
மந்தலாய மல்லிகையும் புன்னைவளர்குரவின்
பந்தலாரும் பட்டினத்துப் பல்லவனீச்சரமே. ௭

தோரக்கன் மால்வரையைத் தெற்றியெடுக்கஅவன்
தாரராக்குந் திண்முடிகள் ஊன்றியசங்கரனூர்
காரக்குங் கடல்கிளர்ந்த காலமெலாமுணரப்
பாராக்கம் பயில்புகாரிற் பல்லவனீச்சரமே. ௮

அங்கமாறும் வேதநான்கும் ஓதும்அயன்நெடுமால்
தங்களாலும் நேடநின்ற சங்கரன்தங்குமிடம்
வங்கமாரு முத்தம்இப்பி வார்கடலூடலைப்பப்
பங்கமில்லார் பயில்புகாரிற் பல்லவனீச்சரமே. ௯

உண்டுடுக்கை யின்றியேநின் றூர்நகவேதிரிவார்
கண்டுடுக்கை மெய்யிற்போர்த்தார் கண்டறியாதவிடந்
தண்டுடுக்கை தாளந்தக்கை சாரநடம்பயில்வார்
பண்டிடுக்கண் தீரநல்கும் பல்லவனீச்சரமே. ௧0

பத்தரேத்தும் பட்டினத்துப் பல்லவனீச்சரத்தெம்
அத்தன்றன்னை அணிகொள்காழி ஞானசம்பந்தன்சொல்
சித்தஞ்சேரச் செப்புமாந்தர் தீவினைநோயிலராய்
ஒத்தமைந்த வும்பர்வானி லுயர்வினேடோங்குவரே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருச்சண்பைநகர் - பண் - தக்கேசி

திருச்சிற்றம்பலம்

பங்கமேறு மதிசேர்சடையார் விடையார்பலவேதம்
அங்கமாறும் மறைநான்கவையும் ஆனார்மீனாரும்
வங்கம்மேவு கடல்வாழ்பரதர் மனைக்கேநுனைமூக்கின்
சங்கமேறி முத்தமீனுஞ் சண்பைநகராரே. ௧

சூதகஞ்சேர் கொங்கையாளோர் பங்கர்சுடர்க்கமலப்
போதகஞ்சேர் புண்ணியனார் பூதகணநாதர்
மேதகஞ்சேர் மேகமந்தண் சோலையில்விண்ணார்ந்த
சாதகஞ்சேர் பாளைநீர்சேர் சண்பைநகராரே. ௨

மகரத்தாடு கொடியோனுடலம் பொடிசெய்தவனுடைய
நிகரொப்பில்லாத் தேவிக்கருள்செய் நீலகண்டனார்
பகரத்தாரா வன்னம்பகன்றில் பாதம்பணிந்தேத்தத்
தகரப்புன்னை தாழைப்பொழில்சேர் சண்பைநகராரே. ௩

மொய்வல்லசுரர் தேவர்கடைந்த முழுநஞ்சதுவுண்ட
தெய்வர்செய்ய வுருவர்கரிய கண்டர்திகழ்சத்திக்
கையர்கட்டங் கத்தர்கரியின் உரியர்காதலாற்
சைவர்பாசு பதர்கள்வணங்குஞ் சண்பைநகராரே. ௪

கலமார்கடலுள் விடமுண்டமரர்க் கமுதம்அருள்செய்த
குலமார்கயிலைக் குன்றதுடைய கொல்லையெருதேறி
நலமார்வெள்ளை நாளிகேரம் விரியாநறும்பாளை
சலமார்கரியின் மருப்புக்காட்டுஞ் சண்பைநகராரே. ௫

மாகரஞ்சேர் அத்தியின்தோல் போர்த்துமெய்ம்மாலான்
சூகரஞ்சேர் எயிறுபூண்ட சோதியன்மேதக்க
ஆகரஞ்சேர் இப்பிமுத்தை அந்தண்வயலுக்கே
சாகரஞ்சேர் திரைகளுந்துஞ் சண்பைநகராரே. ௬,௭

இருளைப்புரையும் நிறத்திலரக்கன் றனையீடழிவித்து
அருளைச்செய்யும் அம்மான்ஏரா ரந்தண்கந்தத்தின்
மருளைச்சுரும்பு பாடியளக்கர் வரையார்திரைக்கையால்
தரளத்தோடு பவளம்ஈனுஞ் சண்பைநகராரே. ௮

மண்தான்முழுதும் உண்டமாலும் மலர்மிசைமேலயனும்
எண்தானறியா வண்ணம்நின்ற இறைவன்மறையோதி
தண்டார்குவளைக் கள்ளருந்தித் தாமரைத்தாதின்மேற்
பண்தான்கொண்டு வண்டுபாடுஞ் சண்பைநகராரே. ௯

போதியாரும் பிண்டியாரும் புகழலசொன்னாலும்
நீதியாகக் கொண்டங்கருளும் நிமலன்இருநான்கின்
மாதிசித்தர் மாமறையின் மன்னியதொன்னூலர்
சாதிகீத வர்த்தமானர் சண்பைநகராரே. ௧௦

வந்தியோடு பூசையல்லாப் போழ்தின்மறைபேசிச்
சந்திபோதிற் சமாதிசெய்யுஞ் சண்பைநகர்மேய
அந்திவண்ணன் தன்னையழகார் ஞானசம்பந்தன்சொற்
சிந்தைசெய்து பாடவல்லார் சிவகதிசேர்வாரே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருப்பழனம் - பண் - தக்கேசி

திருச்சிற்றம்பலம்

வேதமோதி வெண்ணூல்பூண்டு வெள்ளையெருதேறிப்
பூதஞ்சூழப் பொலியவருவார் புலியினுரிதோலார்
நாதாஎனவும் நக்காஎனவும் நம்பாஎனநின்று
பாதந்தொழுவார் பாவந்தீர்ப்பார் பழனநகராரே. ௧

கண்மேற்கண்ணுஞ் சடைமேற்பிறையும் உடையார்காலனைப்
புண்ணாறுதிர மெதிராரோடப் பொன்றப்புறந்தாளால்
எண்ணாதுதைத்த எந்தைபெருமான் இமவான்மகளோடும்
பண்ணார்களிவண் டறைபூஞ்சோலைப் பழனநகராரே. ௨

பிறையும்புனலுஞ் சடைமேலுடையார் பறைபோல்விழிகட்பேய்
உறையும்மயான மிடமாவுடையார் உலகர்தலைமகன்
அறையுமலர்கொண் டடியார்பரவி ஆடல்பாடல்செய்
பறையுஞ்சங்கும் பலியும்ஓவாப் பழனநகராரே. ௩

உரமன்றுயர்கோட் டலறுகூகை யலறும்மயானத்தில்
இரவிற்பூதம் பாடஆடி யெழிலாரலர்மேலைப்

பிரமன்தலையின் னறவமேற்ற பெம்மான்எமையாளும்
பரமன்பகவன் பரமேச்சுவரன் பழனநகாரே. ரு

குலவெஞ்சிலையால் மதில்மூன்றெரித்த கொல்லேறுடையண்ணல்
கலவமயிலுங் குயிலும்பயிலுங் கடல்போற்காவேரி
நலமஞ்சுடைய நறுமாங்கனிகள் குதிகொண்டெதிருந்திப்
பலவின்கனிகள் திரைமுன்சேர்க்கும் பழனநகாரே. ௬

வீளைக்குரலும் விளிசங்கொலியும் விழவின்ஒலியோவா
மூளைத்தலைகொண் டடியாரேத்தப் பொடியாமதிளெய்தார்
ஈளைப்படுகில் இலையார்தெங்கிற் குலையார்வாழையின்
பாளைக்கமுகின் பழம்வீழ்சோலைப் பழனநகாரே. சு

பொய்யாமொழியார் முறையாலேத்திப் புகழ்வார்திருமேனி
செய்யார்கரிய மிடற்றார்வெண்ணூல் சேர்ந்தஅகலத்தார்
கையாடலினர் புனலால்மல்கு சடைமேற்பிறையோடும்
பையாடரவ முடனேவைத்தார் பழனநகாரே. எ

மஞ்சோங்குயரம் உடையான்மலையை மாறாயெடுத்தான்தோள்
அஞ்சோடஞ்சும் ஆறுநான்கும் அடரவூன்றினார்
நஞ்சார்சுடலைப் பொடிநீறணிந்த நம்பான்வம்பாரும்
பைந்தாமரைகள் கழனிசூழ்ந்த பழனநகாரே. அ

கடியார்கொன்றைச் சுரும்பின்மாலை கமழ்புன்சடையார்விண்
முடியாப்படிமூ வடியாலுலக முழுதுந்தாவிய
நெடியான்நீள்தா மரைமேலயனும் நேடிக்காணாத
படியார்பொடியா டகலமுடையார் பழனநகாரே. கூ

கண்டரன்கழுவா முன்னேயோடிக் கலவைக்கஞ்சியை
உண்டாங்கவர்கள் உரைக்குஞ்சிறுசொல் லோரார்பாராட்ட
வண்தாமரையின் மலர்மேல்நறவ மதுவாய்மிகவுண்டு
பண்தான்கெழும வண்டியாழ்செய்யும் பழனநகாரே. கo

வேய்முத்தோங்கி விரைமுன்பரக்கும் வேணுபுரந்தன்னுள்
நாவுய்த்தனைய திறலால்மிக்க ஞானசம்பந்தன்
பேசற்கினிய பாடல்பயிலும் பெருமான்பழனத்தை
வாயிற்பொலிந்த மாலைபத்தும் வல்லார்நல்லாரே. கக

திருச்சிற்றம்பலம்

திருக்கயிலாயம் - பண் - தக்கேசி

திருச்சிற்றம்பலம்

பொடிகொளுருவர் புலியினதளர் புரிநூல்திகழ்மார்பில்
கடிகொள்கொன்றை கலந்தநீற்றர் கறைசேர்கண்டத்தர்
இடியகுரலால் இரியும்மடங்கல் தொடங்குமுனைச்சாரல்
கடியவிடைமேற் கொடியொன்றுடையார் கயிலைமலையாரே. க

புரிகொள்சடையார் அடியர்க்கெளியார் கிளிசேர்மொழிமங்கை
தெரியவுருவில் வைத்துகந்த தேவர்பெருமானார்
பரியகளிற்றை யரவுவிழுங்கி மழுங்கஇருள்கூர்ந்த
கரியமிடற்றர் செய்யமேனிக் கயிலைமலையாரே. உ

மாவினுரிவை மங்கைவெருவ மூடிமுடிதன்மேல்
மேவுமதியும் நதியும்வைத்த இறைவர்கழலுன்னும்
தேவர்தேவர் திரிசூலத்தர் திரங்கன்முகவன்சேர்
காவும்பொழிலுங் கடுங்கற்சுனைசூழ் கயிலைமலையாரே. ௩

முந்நீர்சூழ்ந்த நஞ்சமுண்ட முதல்வர்மதனன்தன்
தென்னீர்உருவம் அழியத்திருக்கண் சிவந்தநுதலினார்
மன்னீர்மடுவும் படுகல்லறையி னுழுவைசினங்கொண்டு
கன்னீர்வரைமே லிரைமுன்தேடுங் கயிலைமலையாரே. ச

ஒன்றும்பலவு மாயவேடத் தொருவர்கழல்சேர்வார்
நன்றுநினைந்து நாடற்குரியார் கூடித்திரண்டெங்கும்
தென்றியிருளில் திகைத்தகரிதண் சாரல்நெறியோடிக்
கன்றும்பிடியும் அடிவாரஞ்சேர் கயிலைமலையாரே. ரு

தாதார்கொன்றை தயங்குமுடியர் முயங்குமடவாளைப்
போதார்பாக மாகவைத்த புனிதர்பனிமல்கும்
மூதாருலகின் முனிவருடனாய் அறநான்கருள்செய்த
காதார்குழையர் வேதத்திரளர் கயிலைமலையாரே. சு, எ

தொடுத்தார்புரமூன் றெரியச்சிலைமே லெரியொண்பகழியார்
எடுத்தான்திரள்தோள் முடிகள்பத்தும் இடியவிரல்வைத்தார்
கொடுத்தார்படைகள் கொண்டாராளாக் குறுகிவருங்கூற்றைக்
கடுத்தாங்கவனைக் கழலா லுதைத்தார் கயிலைமலையாரே. அ

ஊணுப்பலிகொண் டலகிலேலற்றார் இலகுமணிநாகம்
பூணுணா மாகப்பூண்டார் புகழுமிருவர்தாம்
பேணுவோடி நேடஎங்கும் பிறங்குமெரியாகிக்
காணுவண்ணம் உயர்ந்தார்போலுங் கயிலைமலையாரே. கூ

விருதுபகரும் வெஞ்சொற்சமணர் வஞ்சச்சாக்கியர்
பொருதுபகரும் மொழியைக்கொள்ளார் புகழ்வார்க்கணியராய்
எருதொன்றுகைத்திங் கிடுவார்தம்பால் இரந்துண்டிகழ்வார்கள்
கருதும்வண்ணம் உடையார்போலுங் கயிலைமலையாரே. க0

போரார்கடலிற் புனல்சூழ்காழிப் புகழார்சம்பந்தன்
காரார்மேகங் குடிகொள்சாரற் கயிலைமலையார்மேல்
தேராவுரைத்த செஞ்சொன்மாலை செப்பும்அடியார்மேல்
வாராபிணிகள் வானோருலகில் மருவும்மனத்தாரே. கக

திருச்சிற்றம்பலம்

திருவண்ணாமலை - பண் - தக்கேசி

திருச்சிற்றம்பலம்

பூவார்மலர்கொண் டடியார்தொழுவார் புகழ்வார்வானோர்கள்
மூவார்புரங்கள் எரித்தஅன்று மூவர்க்கருள்செய்தார்
தூமாமழைநின் றதிரவெருவித் தொறுவின்நிரையோடும்
ஆமாம்பிணைவந் தணையுஞ்சாரல் அண்ணாமலையாரே. க

மஞ்சைப்போழ்ந்த மதியஞ்சூடும் வானோர்பெருமானார்
நஞ்சைக்கண்டத் தடக்கும்அதுவும் நன்மைப்பொருள்போலும்
வெஞ்சொற்பேசும் வேடர்மடவார் இதணம்அதுஏறி
அஞ்சொற்கிளிகள் ஆயோஎன்னும் அண்ணாமலையாரே. உ

ஞானத்திரளாய் நின்றபெருமான் நல்லஅடியார்மேல்
ஊனத்திரளை நீக்கும்அதுவும் உண்மைப்பொருள்போலும்
ஏனத்திரளோ டினமான்காடி இழியும்இரவின்கண்
ஆனைத்திரள்வந் தணையுஞ்சாரல் அண்ணாமலையாரே. ௩

இழைத்தஇடையாள் உமையாள்பங்கர் இமையோர்பெருமானார்
தழைத்தசடையார் விடையொன்றேறித் தரியார்புரமெய்தார்

பிழைத்தபிடியைக் காணாதோடிப் பெருங்கைமதவேழம்
அழைத்துத்திரிந்தங் குறங்குஞ்சாரல் அண்ணாமலையாரே. ரு

உருவிற்றிகழும் உமையாள்பங்கர் இமையோர்பெருமானார்
செருவில்லொருகால் வளையவூன்றிச் செந்தீயெழுவித்தார்
பருவிற்குறவர் புனத்திற்குவித்த பருமாமணிமுத்தம்
அருவித்திரளோ டிழியுஞ்சாரல் அண்ணாமலையாரே. ௬

எனைத்தோருழி யடியாரேத்த இமையோர்பெருமானார்
நினைத்துத்தொழுவார் பாவந்தீர்க்கும் நிமலருறைகோயில்
கனைத்தமேதி காணாதாயன் கைம்மேற்குழல்ஊத
அனைத்துஞ்சென்று திரளுஞ்சாரல் அண்ணாமலையாரே. ௬

வந்தித்திருக்கும் அடியார்தங்கள் வருமேல்வினையோடு
பந்தித்திருந்த பாவந்தீர்க்கும் பரமனுறைகோயில்
முந்தியெழுந்த முழவின்ஓசை முதுகல்வரைகள்மேல்
அந்திப்பிறைவந் தணையுஞ்சாரல் அண்ணாமலையாரே. ௭

மறந்தான்கருதி வலியைநினைந்து மாறாயெடுத்தான்தோள்
நிறந்தான்முரிய நெரியவூன்றி நிறையஅருள்செய்தார்
திறந்தான்காட்டி யருளாயென்று தேவரவர்வேண்ட
அறந்தான்காட்டி அருளிச்செய்தார் அண்ணாமலையாரே. ௮

தேடிக்காணார் திருமால்பிரமன் தேவர்பெருமானை
மூடியோங்கி முதுவேய்உகுத்த முத்தம்பலகொண்டு
கூடிக்குறவர் மடவார்குவித்துக் கொள்ளவம்மினென்
றாடிப்பாடி யளக்குஞ்சாரல் அண்ணாமலையாரே. ௯

தட்டையிடுக்கித் தலையைப்பறித்துச் சமணேநின்றுண்ணும்
பிட்டர்சொல்லுக் கொள்ளவேண்டா பேணித்தொழுமின்கள்
வட்டமுலையாள் உமையாள்பங்கர் மன்னியுறைகோயில்
அட்டயானைத் திரள்வந்தணையும் அண்ணாமலையாரே. ௧0

அல்லாடரவம் இயங்குஞ்சாரல் அண்ணாமலையாரை
நல்லார்பரவப் படுவான்காழி ஞானசம்பந்தன்
சொல்லால்மலிந்த பாடலான பத்தும்இவைகற்று
வல்லாரெல்லாம் வானோர்வணங்க மன்னிவாழ்வாரே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருஈங்கோய்மலை - பண் - தக்கேசி

திருச்சிற்றம்பலம்

வானத்துயர்தண் மதிதோய்சடைமேல் மத்தமலர்சூடித்
தேனொத்தனமென் மொழிமான்விழியாள் தேவிபாகமாக்
கானத்திரவில் எரிகொண்டாடுங் கடவுள்உலகேத்த
ஏனத்திரள்வந் திழியுஞ்சாரல் ஈங்கோய்மலையாரே. ௧

சூலப்படையொன் றேந்தியிரவிற் சுடுகாடிடமாகக்
கோலச்சடைகள் தாழக்குழல்யாழ் மொந்தைகொட்டவே
பாலொத்தனைய மொழியாள்காண ஆடும்பரமனார்
ஏலத்தொடுநல் இலவங்கமழும் ஈங்கோய்மலையாரே. ௨

கண்கொள்நுதலார் கறைகொள்மிடற்றார் கரியின்உரிதோலார்
விண்கொள்மதிசேர் சடையார்விடையார் கொடியார்வெண்ணீறு
பெண்கொள்திருமார் பதனிற்பூசும் பெம்மான்எமையாள்வார்
எண்கும்அரியுந் திரியுஞ்சாரல் ஈங்கோய்மலையாரே. ௩

மறையின்இசையார் நெறிமென்கூந்தல் மலையான்மகளோடும்
குறைவெண்பிறையும் புனலுந்நிலவுங் குளிர்புன்சடைதாழப்
பறையுங்குழலுங் கழலும்ஆர்ப்பப் படுகாட்டெரியாடும்
இறைவர்சிறைவண் டறைபூஞ்சாரல் ஈங்கோய்மலையாரே. ௪

நொந்தசுடலைப் பொடிநீறணிவார் நுதல்சேர்கண்ணினார்
கந்தமலர்கள் பலவுந்நிலவு கமழ்புன்சடைதாழப்
பந்தண்விரலாள் பாகமாகப் படுகாட்டெரியாடும்
எந்தம்அடிகள் கடிகொள்சாரல் ஈங்கோய்மலையாரே. ௫

நீறார்அகலம் உடையார்நிரையார் கொன்றைஅரவோடும்
ஆறார்சடையார் அயில்வெங்கணையால் அவுணர்புரம்மூன்றும்
சீறாஎரிசெய் தேவர்பெருமான் செங்கண்அடல்வெள்ளை
ஏறார்கொடியார் உமையாளோடும் ஈங்கோய்மலையாரே. ௬

வினையாயினதீர்த் தருளேபுரியும் விகிர்தன்விரிகொன்றை
நனையார்முடிமேல் மதியஞ்சூடும் நம்பர்நலம்மல்கு
தனையார்கமல மலர்மேலுறைவான் தலையோடனலேந்தும்
எனையாளுடையான் உமையாளோடும் ஈங்கோய்மலையாரே. ௭

பாக்கும்பெருமை இலங்கையென்னும் பதியிற்பொலிவாய
அரக்கர்க்கிறைவன் முடியுக்தோளும் அணியார்விரல்தன்னால்
நெருக்கியடர்த்த நிமலாபோற்றி யென்றுநின்றேத்த
இரக்கம்புரிந்தார் உமையாளோடும் ஈங்கோய்மலையாரே. அ

வரியார்புலியின் உரிதோலுடையான் மலையான்மகளோடும்
பிரியாதுடனாய் ஆடல்பேணும் பெம்மான் திருமேனி
அரியோடயனும் அறியாவண்ணம் அளவில்பெருமையோ
டெரியாய்நிமிர்ந்த எங்கள்பெருமான் ஈங்கோய்மலையாரே. க

பிண்டியென்ற பெயராநிற்கும் பிணங்குசமணரும்
மண்டைக்கலனாக் கொண்டுதிரியும் மதியில்தேரரும்
உண்டிவயிறர் உரைகள்கொள்ளா துமையோடுடனாகி
இண்டைச்சடையான் இமையோர்பெருமான் ஈங்கோய்மலையாரே. க0

விழவாரொலியும் முழவும்ஓவா வேணுபுரந்தன்னுள்
அழலார்வண்ணத் தடிகளருள்சே ரணிகொள்சம்பந்தன்
எழிலார்சுனையும் பொழிலும்புடைசூழ் ஈங்கோய்மலையீசன்
கழல்சேர்பாடல் பத்தும்வல்லார் கவலைகளைவாரே. கக

திருச்சிற்றம்பலம்

திருநறையூர்ச்சித்தீச்சரம் - பண் - தக்கேசி

திருச்சிற்றம்பலம்

பிறைகொள்சடையர் புலியினுரியர் பேழ்வாய்நாகத்தர்
கறைகொள்கண்டர் கபாலமேந்துங் கையர்கங்காளர்
மறைகொள்கீதம் பாடச்சேடர் மனையில்மகிழ்வெய்திச்
சிறைகொள்வண்டு தேனார்நறையூர்ச் சித்தீச்சரத்தாரே. க

பொங்கார்சடையர் புனலர்அனலர் பூதம்பாடவே
தங்காதலியுந் தாமும்உடனாய்த் தனியோர்விடையேறிக்
கொங்கார்கொன்றை வன்னிமத்தஞ் சூடிக்குளிர்பொய்கைச்
செங்கால்அனமும் பெடையுஞ்சேருஞ் சித்தீச்சரத்தாரே. உ

முடிகொள்சடையர் முளைவெண்மதியர் மூவாமேனிமேல்
பொடிகொள்நூலர் புலியினதளர் புரிபுன்சடைதாழக்

கடிகொள்சோலை வயல்சூழ்மடுவிற் கயலாரினம்பாயக்
கொடிகொள்மாடக் குழாம்ஆர்நறையூர்ச் சித்தீச்சரத்தாரே. ரு

பின்தாழ்சடைமேல் நகுவெண்தலையர் பிரமன்தலையேந்தி
மின்தாழுருவிற் சங்கார்குழைதான் மிளிரும்ஒருகாதர்
பொன்தாழ்கொன்றை செருந்திபுன்னை பொருந்துசெண்பகம்
சென்றூர்செல்வத் திருவார்நறையூர்ச் சித்தீச்சரத்தாரே. சு

நீரார்முடியர் கறைகொள்கண்டர் மறைகள்நிறைநாவர்
பாரார்புகழால் பத்தர்சித்தர் பாடியாடவே
தேரார்வீதி முழவார்விழவின் ஒலியுந்திசைசெல்லச்
சீரார்கோலம் பொலியும்நறையூர்ச் சித்தீச்சரத்தாரே. ரு

நீண்டசடையர் நிரைகொள்கொன்றை விரைகொள்மலர்மாலை
தூண்டுசுடர்பொன் னொளிகொள்மேனிப் பவளத்தெழிலார்வந்
தீண்டுமாடம் எழிலார்சோலை யிலங்குகோபுரம்
தீண்டுமதியந் திகழும்நறையூர்ச் சித்தீச்சரத்தாரே. சு

குழலார்சடையர் கொக்கின்இறகர் கோலநிறமத்தம்
தழலார்மேனித் தவளநீற்றர் சரிகோவணக்கீளர்
எழிலார்நாகம் புலியின்உடைமேல் இசைத்துவிடையேறிக்
கழலார்சிலம்பு புலம்பவருவார் சித்தீச்சரத்தாரே. எ

கரையார்கடல்சூழ் இலங்கைமன்னன் கயிலைமலைதன்னை
வரையார்தோளா லெடுக்கமுடிகள் நெரித்துமனமொன்றி
உரையார்கீதம் பாடநல்ல வுலப்பிலருள்செய்தார்
திரையார்புனல்சூழ் செல்வநறையூர்ச் சித்தீச்சரத்தாரே. அ

நெடியான்பிரமன் நேடிக்காணார் நினைப்பார்மனத்தாராய்
அடியாரவரும் அருமாமறையும் அண்டத்தமரரும்
முடியால்வணங்கிக் குணங்களேத்தி முதல்வாஅருளென்னச்
செடியார்செந்நெல் திகழும்நறையூர்ச் சித்தீச்சரத்தாரே. க

நின்றுண்சமணர் இருந்துண்தேரர் நீண்டபோர்வையார்
ஒன்றுமுணரா ஊமர்வாயில் உரைகேட்டுழல்வீர்காள்
கன்றுண்பயப்பா லுண்ணமுலையில் கபாலமயல்பொழியச்
சென்றுண்டார்ந்து சேரும்நறையூர்ச் சித்தீச்சரத்தாரே. க0

குயிலார்கோல மாதவிகள் குளிர்பூஞ்சுரபுன்னை
செயிலார்பொய்கை சேரும்நறையூர்ச் சித்தீச்சரத்தாரை
மயிலார்சோலை சூழ்ந்தகாழி மல்குசம்பந்தன்
பயில்வார்க்கினிய பாடல்வல்லார் பாவநாசமே. கக

திருச்சிற்றம்பலம்

திருக்குடந்தைக்காரோணம் - பண் - தக்கேசி

திருச்சிற்றம்பலம்

வாரார்கொங்கை மாதோர்பாக மாகவார்சடை
நீரார்கங்கை திங்கள்சூடி நெற்றியொற்றைக்கண்
கூரார்மழுவொன் றேந்தியந்தண் குழகன்குடமூக்கில்
காரார்கண்டத் தெண்டோள் எந்தை காரோணத்தாரே. க

முடியார்மன்னர் மடமான்விழியார் மூவுலகும் ஏத்தும்
படியார்பவள வாயார்பலரும் பரவிப்பணிந்தேத்தக்
கொடியார் விடையார் மாடவீதிக் குடந்தைக்குழகாரும்
கடியார்சோலைக் கலவமயிலார் காரோணத்தாரே. உ

மலையார்மங்கை பங்கர்அங்கை அனலர்மடலாரும்
குலையார்தெங்கு குளிர்கொள்வாழை யழகார் குடமூக்கில்
முலையாரணிபொன் முளைவெண்நகையார் மூவாமதியினர்
கலையார்மொழியார் காதல்செய்யுங் காரோணத்தாரே. ங

போதார்புனல்சேர் கந்தம்உந்திப் பொலியஅழகாரும்
தாதார்பொழில்சூழ்ந் தெழிலார்புறவி லந்தண்குடமூக்கில்
மாதார்மங்கை பாகமாக மனைகள்பலிதேர்வார்
காதார்குழையர் காளகண்டர் காரோணத்தாரே. ச

பூவார்பொய்கை அலர்தாமரைசெங் கழுநீர்புறவெல்லாம்
தேவார்சிந்தை அந்தணாளர் சீரால்அடிபோற்றக்
கூவார்குயில்கள் ஆலும்மயில்கள் இன்சொற்கிளிப்பிள்ளை
காவார்பொழில்சூழ்ந் தழகார்குடந்தைக் காரோணத்தாரே. ரு

முப்பூர்நலிய நெதியார்விதியாய் முன்னேஅனல்வாளி
கோப்பார்பார்த்தன் நிலைகண்டருளுங் குழகர்குடமூக்கில்

தீர்ப்பாருடலில் அடுநோய்அவலம் வினைகள்நலியாமைக்
காப்பார்காலன் அடையாவண்ணங் காரோணத்தாரே. ௬

ஊனார்தலைகை யேந்தியுலகம் பலிதேர்ந்துழல்வாழ்க்கை
மானார்தோலார் புலியினுடையார் கரியின்உரிபோர்வை
தேனார்மொழியார் திளைத்தங்காடித் திகழுங்குடமூக்கில்
கானார்நட்டம் உடையார்செல்வக் காரோணத்தாரே. ௭

வரையார்திரள்தோள் மதவாளரக்கன் எடுப்பமலைசேரும்
விரையார்பாதம் நுதியாலூன்ற நெரிந்துசிரம்பத்தும்
உரையார்கீதம் பாடக்கேட்டங் கொளிவாள்கொடுத்தாரும்
கரையார்பொன்னி சூழ்தண்குடந்தைக் காரோணத்தாரே. ௮

கரியமாலுஞ் செய்யபூமேல் அயனுங்கீழ்மேலறிப்போய்
அரியஅண்டந் தேடிப்புக்கும் அளக்கவொண்கிலார்
தெரியஅரிய தேவர்செல்வந் திகழுங்குடமூக்கில்
கரியகண்டர் காலகாலர் காரோணத்தாரே. ௯

நாணார்அமணர் நல்லதறியார் நாளுங்குரத்திகள்
பேணார்தூய்மை மாசுகழியார் பேசேலவரோடும்
சேணார்மதிதோய் மாடம்மல்கு செல்வநெடுவீதிக்
கோணாகரமொன் றுடையார்குடந்தைக் காரோணத்தாரே. ௧௦

கருவார்பொழில்சூழ்ந் தழகார்செல்வக் காரோணத்தாரைத்
திருவார்செல்வம் மல்குசண்பைத் திகழுஞ்சம்பந்தன்
உருவார்செஞ்சொல் மாலையிவைபத் துரைப்பாருலகத்துக்
கருவாரிடும்பைப் பிறப்பதறுத்துக் கவலைகழிவாரே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருக்கானூர் - பண் - தக்கேசி

திருச்சிற்றம்பலம்

வானார்சோதி மன்னுசென்னி வன்னிபுனக்கொன்றைத்
தேனார்போது தானார்கங்கை திங்களொடுசூடி
மானேர்நோக்கி கண்டங்குவப்ப மாலையாடுவார்
கானூர்மேய கண்ணார்நெற்றி ஆனூர்செல்வரே. ௧

நீந்தலாகா வெள்ளம்மூழ்கு நீள்சடைதன்மேலோர்
ஏய்ந்தகோணற் பிறையோடரவு கொன்றைஎழிலாரப்
போந்தமென்சொல் இன்பம்பயந்த மைந்தரவர்போலாம்
காந்தள்விம்மு கானூர்மேய சாந்தநீற்றாரே. ௨

சிறையார்வண்டுந் தேனும்விம்மு செய்யமலர்க்கொன்றை
மறையார்பாட லாடலோடு மால்விடைமேல்வருவார்
இறையார்வந்தென் இல்புகுந்தென் எழில்நலமுங்கொண்டார்
கறையார்சோலைக் கானூர்மேய பிறையார்சடையாரே. ௩

விண்ணார்திங்கட் கண்ணிவெள்ளை மாலையதுசூடித்
தண்ணாரக்கோ டாமைபூண்டு தழைபுன்சடைதாழ
எண்ணாவந்தென் இல்புகுந்தங் கெவ்வநோய்செய்தான்
கண்ணார்சோலைக் கானூர்மேய விண்ணோர்பெருமானே. ௪

தார்கொள்கொன்றைக் கண்ணியோடுந் தண்மதியஞ்சூடி
சீர்கொள்பாட லாடலோடு சேடராய்வந்து
ஊர்கள்தோறும் ஐயம்ஏற்றென் னுள்வெந்நோய்செய்தார்
கார்கொள்சோலைக் கானூர்மேய கறைக்கண்டத்தாரே. ௫

முளிவெள்எலும்பு நீறுநூலும் மூழ்குமார்பராய்
எளிவந்தார்போல் ஐயமென்றென் இல்லேபுகுந்துள்ளத்
தெளிவும்நாணுங் கொண்டகள்வர் தேறலார்பூவில்
களிவண்டியாழ்செய் கானூர்மேய ஒளிவெண்பிறையாரே. ௬

மூவாவண்ணர் முளைவெண்பிறையர் முறுவல்செய்திங்கே
பூவார்கொன்றை புனைந்துவந்தார் பொக்கம்பலபேசிப்
போவார்போல மால்செய்துள்ளம் புக்கபுரிநூலர்
தேவார்சோலைக் கானூர்மேய தேவதேவரே. ௭

தமிழின்நீர்மை பேசித்தாளம் வீணைபண்ணிநல்ல
முழவம்மொந்தை மல்குபாடல் செய்கையிடமோவார்
குமிழின்மேனி தந்துகோல நீர்மையதுகொண்டார்
கமழுஞ்சோலைக் கானூர்மேய பவளவண்ணரே. ௮

அந்தமாதி அயனும்மாலும் ஆர்க்கும்அறிவரியான்
சிந்தையுள்ளும் நாவின்மேலுஞ் சென்னியுமன்னினான்

வந்தென்னுள்ளம் புகுந்துமாலை காலையாடுவான்
கந்தம்மல்கு கானூர்மேய எந்தைபெம்மானே. க

ஆமையரவோ டேனவெண்கொம் பக்குமாலைபூண்
டாமோர்கள்வர் வெள்ளர்போல உள்வெந்நோய்செய்தார்
ஓமவேத நான்முகனுங் கோணாகணையானும்
சேமமாய செல்வர்கானூர் மேயசேடரே. க0

கழுதுதுஞ்சுங் கங்குலாடுங் கானூர்மேயானைப்
பழுதில்ஞான சம்பந்தன்சொற் பத்தும்பாடியே
தொழுதுபொழுது தோத்திரங்கள் சொல்லித்துதித்துநின்
றழுதுநக்கும் அன்புசெய்வார் அல்லல்அறுப்பாரே. கக

திருச்சிற்றம்பலம்

திருப்புறவம் - பண் - தக்கேசி

திருச்சிற்றம்பலம்

நறவநிறைவண் டறைதார்க்கொன்றை நயந்துநயனத்தால்
சுறவஞ்செறிவண் கொடியோன்உடலம் பொடியாவிழிசெய்தான்
புறவம்உறைவண் பதியாமதியார் புரமூன்றெரிசெய்த
இறைவன்அறவன் இமையோரேத்த உமையோடிருந்தானே. க

உரவன்புலியின் உரிதோலாடை யுடைமேற்படநாகம்
விரவிவிரிபூங் கச்சாஅசைத்த விகிர்தன்உகிர்தன்னாற்
பொருவெங்களிறு பிளிறவுரித்துப் புறவம்பதியாக
இரவும்பகலும் இமையோரேத்த உமையோடிருந்தானே. உ

பந்தமுடைய பூதம்பாடப் பாதஞ்சிலம்பார்க்கக்
கந்தம்மல்கு குழலிகாணக் கரிகாட்டெரியாடி
அந்தண்கடல்சூழ்ந் தழகார்புறவம் பதியாஅமர்வெய்தி
எந்தம்பெருமான் இமையோரேத்த உமையோடிருந்தானே. ங

நினைவார்நினைய இனியான்பனியார் மலர்தூய்நித்தலுங்
கனையார்விடையொன் றுடையான்கங்கை திங்கள்கமழ்கொன்றை
புனைவார்சடையின் முடியான்கடல்சூழ் புறவம்பதியாக
எனையாளுடையான் இமையோரேத்த உமையோடிருந்தானே. ச

செங்கண்அரவும் நகுவெண்தலையும் முகிழ்வெண்திங்களுந்
தங்குசடையன் விடையனுடையன் சரிகோவணஆடை
பொங்குதிரைவண் கடல்சூழ்ந்தழகார் புறவம்பதியாக
எங்கும்பரவி யிமையோரேத்த உமையோடிருந்தானே. ரு

பின்னுசடைகள் தாழக்கேழல் எயிறுபிறழப்போய்
அன்னநடையார் மனைகள்தோறும் அழகாற்பலிதேர்ந்து
புன்னைமடலின் பொழில்சூழ்ந்தழகார் புறவம்பதியாக
என்னையுடையான் இமையோரேத்த உமையோடிருந்தானே. சு

உண்ணற்கரிய நஞ்சையுண் டொருதோழந்தேவர்
விண்ணிற்பொலிய அமுதமளித்த விடைசேர்கொடியண்ணல்
பண்ணிற்சிறைவண் டறைபூஞ்சோலைப் புறவம்பதியாக
எண்ணிற்சிறந்த இமையோரேத்த உமையோடிருந்தானே. எ

விண்தான் அதிர வியனார்கயிலை வேரோடெடுத்தான்தன்
திண்தோளுடலும் முடியும்நெரியச் சிறிதேயூன்றிய
புண்தான் ஒழிய அருள்செய்பெருமான் புறவம்பதியாக
எண்தோளுடையான் இமையோரேத்த உமையோடிருந்தானே. அ

நெடியான்நீள்தா மரைமேலயனும் நேடிக்காண்கிலாப்
படியாமேனி யுடையான்பவள வரைபோல்திருமார்பிற்
பொடியார்கோலம் உடையான்கடல்சூழ் புறவம்பதியாக
இடியார்முழவார் இமையோரேத்த உமையோடிருந்தானே. கூ

ஆலும்மயிலின் பீலியமணர் அறிவில்சிறுதேரர்
கோலும்மொழிகள் ஒழியக்குழுவுந் தழலும்எழில்வானும்
போலும்வடிவும் உடையான்கடல்சூழ் புறவம்பதியாக
ஏலும்வகையால் இமையோரேத்த உமையோடிருந்தானே. க௦

பொன்னார்மாடம் நீடுஞ்செல்வப் புறவம்பதியாக
மின்னாரிடையாள் உமையாளோடும் இருந்தவிமலனைத்
தன்னார்வஞ்செய் தமிழின்விரகன் உரைத்ததமிழ்மாலை
பன்னாள்பாடி யாடப்பிரியார் பரலோகந்தானே. கக

திருச்சிற்றம்பலம்

திருவெங்குரு - பண் - குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

காலைநன்மாமலர் கொண்டடிபரவிக் கைதொழுமாணியைக் கறுத்தவெங்காலன், ஓலமதிடமுன் னுயிரொடுமாள வுதைத்தவன் உமையவள் விருப்பன் எம்பெருமான், மாலைவந்தணுக ஓதம்வந்தலவி மறிதிரைசங்கொடு பவளம்முன் உந்தி, வேலைவந்தணையுஞ் சோலைகள் சூழ்ந்த வெங்குருமேவியுள் வீற்றிருந்தாரே. க

பெண்ணினைப்பாகம் அமர்ந்துசெஞ்சடைமேற் பிறையொடும் அரவினை யணிந்தழகாகப், பண்ணினைப்பாடி யாடிமுன்பலிகொள் பரம ரெம்அடிகளார் பரிசுகள்பேணி, மண்ணினைமூடி வான்முகடேறி மறி திரைகடல்முகந் தெடுப்பமற்றுயர்ந்து, விண்ணளவோங்கி வந்திழி கோயில் வெங்குருமேவியுள் வீற்றிருந்தாரே. உ

ஓரியல்பில்லா வுருவமதாகி யொண்திறல்வேடன துருவது கொண்டு, காரிகைகாணத் தனஞ்சயன்தன்னைக் கறுத்தவற்களித்து டன் காதல்செய்பெருமான், நேரிசையாக அறுபதமூன்று நிரை மலர்த்தாதுகள் மூசவிண்டுதிர்ந்து, வேரிகளெங்கும் விம்மியசோலை வெங்குருமேவியுள் வீற்றிருந்தாரே. ௩

வண்டணைகொன்றை வன்னியுமத்தம் மருவியகூவிளம் எருக் கொடுமிக்க, கொண்டணிசடையர் விடையினர்பூதங் கொடுகொட்டி குடமுழாக் கூடியுமுழவப், பண்டிகழ்வாகப் பாடியொர்வேதம் பயில் வர்முன்பாய்புனற் கங்கையைச்சடைமேல், வெண்பிறைசூடி யுமை யவளோடும் வெங்குருமேவியுள் வீற்றிருந்தாரே. ௪

சடையினர்மேனி நீறதுபூசித் தக்கைகொள்பொக்கண மிட்டுடனு கக், கடைதொறும்வந்து பலியதுகொண்டு கண்டவர்மனமவை கவர்ந் தழகாகப், படையதுஏந்திப் பைங்கயக்கண்ணி யுமையவள்பாகமும் அமர்ந் தருள்செய்து, விடையொடுபூதஞ் சூழ்தரச்சென்று வெங்குருமேவி யுள் வீற்றிருந்தாரே. ௫

கரைபொருகடலில் திரையதுமோதக் கங்குல்வந்தேறிய சங்கமும் இப்பி, உரையுடைமுத்தம் மணலிடைவைகி ஒங்குவான்இருளறத் துரப்பஎண்திசையும், புரைமலிவேதம் போற்றுபூசுரர்கள் புரிந்தவர்

நலங்கொள் ஆகுதியினில்நிறைந்த, விரைமலிதூபம் விசும்பினைமறைக்கும் வெங்குருமேவியுள் வீற்றிருந்தாரே. ௬

வல்லிநுண்இடையாள் உமையவள்தன்னை மறுகிடவரும்மதகளிற்றினைமயங்க,ஒல்லையிற்பிடித்தங் குரித்தவள்வெருவல் கெடுத்தவர் விரிபொழில் மிகுதிருஆலில், நல்லறம்உரைத்து ஞானமோடிருப்ப நலிந்திடலுற்று வந்தஅக்கருப்பு, வில்லியைப்பொடிபட விழித்தவர் விரும்பி வெங்குருமேவியுள் வீற்றிருந்தாரே. ௭

பாங்கிலாஅரக்கன் கயிலைஅன்றெடுப்பப் பலதலைமுடியொடு தோளவைநெரிய, ஓங்கியவிரலால் ஊன்றியன்றவற்கே ஒளிதிகழ் வாளது கொடுத்தழகாய, கோங்கொடுசெருந்தி கூவிளமத்தங் கொன்றையுங்குலாவிய செஞ்சடைச்செல்வர், வேங்கைபொன்மலரார் விரைதருகோயில் வெங்குருமேவியுள் வீற்றிருந்தாரே. ௮

ஆறுடைச்சடையெம் அடிகளைக்காண அரியொடுபிரமனும் அளப்பதற்காகிச், சேறிடைதிகழ்வா னத்திடைபுக்குஞ் செலவறத்தவிர்ந்தனர் எழிலுடைத்திகழ்வெண், நீறுடைக்கோல மேனியர்நெற்றிக் கண்ணினர்விண்ணவர் கைதொழுதேத்த, வேறெமையாள விரும்பிய விகிர்தர் வெங்குருமேவியுள் வீற்றிருந்தாரே. ௯

பாடுடைக்குண்டர் சாக்கியர்சமணர் பயில்தருமறவுரை விட்டழகாக, ஏடுடைமலரான் பொருட்டுவன்தக்கன் எல்லையில்வேள்வியைத் தகர்த்தருள்செய்து, காடிடைக்கடிநாய் கலந்துடன்சூழக் கண்டவர்வெருவுற விளித்துவெய்தாய, வேடுடைக்கோலம் விரும்பியவிகிர்தர் வெங்குருமேவியுள் வீற்றிருந்தாரே. ௧௦

விண்ணியல்விமானம் விரும்பியபெருமான் வெங்குருமேவியுள் வீற்றிருந்தாரை, நண்ணியநூலன் ஞானசம்பந்தன் நவின்றஇவ்வாய்மொழி நலம்மிகுபத்தும், பண்ணியல்பாகப் பத்திமையாலே பாடியும் ஆடியும் பயிலவல்லார்கள், விண்ணவர்விமானங் கொடுவரஏறி வியனுலகாண்டுவீற் றிருப்பவர்தாமே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருஇலம்பையங்கோட்டூர் - பண் - குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

மலையினார்பருப்பதந் துருத்திமாற்பேறு மாசிலாச்சீர்மறைக் காடு நெய்த்தானம், நிலையினானெனதுரை தனதுரையாக நீறணிந்தேறுகந் தேறியவிமலன், கலையினார்மடப்பிணை துணையொடுந்துயிலக் கானலம் பெடைபுல்கிக் கணமயிலாலும், இலையினார்பைம்பொழில் இலம்பை யங்கோட்டூர் இருக்கையாப்பேணியென் எழில்கொள்வதியல்பே. க

திருமலர்க்கொன்றையான் நின்றியூர்மேயான் தேவர்கள்தலைமகன் திருக்கழிப்பாலை, நிருமலனெனதுரை தனதுரையாக நீறணிந்தேறுகந் தேறியவிமலன், கருமலர்க்கமழ்சுனை நீள்மலர்க்குவளை கதிர்முலையிளைய வர் மதிமுகத்துலவும், இருமலர்த்தண்பொய்கை இலம்பையங்கோட் டூர் இருக்கையாப்பேணியென் எழில்கொள்வதியல்பே. உ

பாலனும்விருத்தனும் பசுபதிதானும் பண்டுவெங்கூற்றுதைத் தடி யவர்க்கருளும், காலனும்எனதுரை தனதுரையாகக் கனலெரிஅங்கை யில் ஏந்தியகடவுள், நீலமாமலர்ச்சுனை வண்டுபண்செய்ய நீர்மலர்க் குவளைகள் தாதுவிண்டோங்கும், ஏலம்நாறும்பொழில் இலம்பையங் கோட்டூர் இருக்கையாப்பேணியென் எழில்கொள்வதியல்பே. ௩

உளங்கொள்வார்உச்சியார் கச்சியேகம்பன் ஒற்றியூருறையும் அண்ணாமலை யண்ணல், விளம்புவானெனதுரை தனதுரையாக வெள்ளநீர்விரிசடைத் தாங்கியவிமலன், குளம்புறக்கலைதுள மலைகளுஞ் சிலம்பக் கொழுங்கொடி யெழுந்தெங்குங் கூவிளங்கொள்ள, இளம் பிறை தவழ்பொழில் இலம்பையங்கோட்டூர் இருக்கையாப்பேணியென் எழில்கொள்வதியல்பே. ச

தேனுமாய்அமுதுமாய்த் தெய்வமுந்தானாய்த் தீயொடுநீருடன் வாயுவாந்தெரியில், வானுமாம்எனதுரை தனதுரையாக, வரிஅரா அரைக்கசைத் துழிதரும்மைந்தன், கானமான்வெருவுறக் கருவிரலூகங் கடுவனோடுகளுமூர் கற்கடுஞ்சாரல், ஏனம்மான்உழிதரும் இலம்பையங் கோட்டூர் இருக்கையாப்பேணியென் எழில்கொள்வதியல்பே. ரு

மனமுலாம்அடியவர்க் கருள்புரிகின்ற வகையலாற்பலிதிரிந் துண்பிலான்மற்றோர், தனமிலான்எனதுரை தனதுரையாகத் தாழ்

சடையிளமதி தாங்கியதலைவன், புனமெலாம்அருவிகள் இருவிசேர்
முத்தம் பொன்னொடுமணிகொழித் தீண்டிவந்தெங்கும், இனமெலாம்
அடைகரை இலம்பையங்கோட்டூர் இருக்கையாப்பேணியென் எழில்
கொள்வதியல்பே. ௬

நீருளான்தீயுளான் அந்தரத்துள்ளான் நினைப்பவர்மனத்துளான்
நித்தமாவத்தும், ஊருளான் எனதுரை தனதுரையாக, ஒற்றைவெள்
ளேறுகந் தேறியவொருவன், பாருளார்பாடலோ டாடல்அறாத பண்
முரன்றஞ்சிறை வண்டினம்பாடும், ஏருளார்பைம்பொழில் இலம்பை
யங்கோட்டூர் இருக்கையாப்பேணியென் எழில்கொள்வதியல்பே. ௭

வேருலாய்ஆழ்கடல் வருதிரையிலங்கை வேந்தனதடக்கைகள்
அடர்த்தவனுலகில், ஆருலாய்எனதுரை தனதுரையாக ஆகமோர்
அரவணிந் துழிதரும்அண்ணல், வாருலாநல்லன மாக்களுஞ்சார வார
ணம்உழிதரும் மல்லலங்கானல், ஏருலாம்பொழிலணி இலம்பையங்
கோட்டூர் இருக்கையாப்பேணியென் எழில்கொள்வதியல்பே. ௮

கிளர்மழைதாங்கினன் நான்முகமுடையோன் கீழடிமேல்முடி
தேர்ந்தளக்கில்லா, உளமழையெனதுரை தனதுரையாக வொள்ளழல்
அங்கையி லேந்தியவொருவன், வளமழையெனக்கழை வளர்துளிசோர
மாசுணமுழிதரு மணியணிமாலை, இளமழைதவழ்பொழில் இலம்பை
யங்கோட்டூர் இருக்கையாப்பேணியென் எழில்கொள்வதியல்பே. ௯

உரிஞ்சனகூறைகள் உடம்பினராகி உழிதருசமணருஞ் சாக்
கியப்பேய்கள், பெருஞ்செல்வன்எனதுரை தனதுரையாகப் பெய்
பலிக்கென்றுழல் பெரியவர்பெருமான், கருஞ்சுனைமுல்லைநன் பொன்
னடைவேங்கை களிமுகவண்டொடு தேன்இனம்முரலும், இருஞ்
சுனை மல்கிய இலம்பையங்கோட்டூர் இருக்கையாப்பேணியென் எழில்
கொள்வதியல்பே. ௧௦

கந்தனைமலிகனை கடலொலியோதங் கானலங்கழிவளர் கழுமல
மென்னும், நந்தியாருறைபதி நான்மறைநாவன் நற்றமிழ்க்கின் துணை
ஞானசம்பந்தன், எந்தையார்வளநகர் இலம்பையங்கோட்டூர் இசை
யொடுகூடிய பத்தும்வல்லார்போய், வெந்துயர்கெடுகிட விண்ணவ
ரோடும் வீடுபெற்றிம்மையின் வீடெளிதாமே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருஅச்சிறுபாக்கம் - பண் - குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

பொன்றிரண்டன்ன புரிசடைபுரளப் பொருகடற்பவளமொ
டழல்நிறம்புரையக், குன்றிரண்டன்ன தோளுடையகலங் குலாய
வெண்ணூலொடு கொழும்பொடியணிவர், மின்றிரண்டன்ன நுண்
ணிடைஅரிவை மெல்லியலாளையோர் பாகமாப்பேணி, அன்றிரண்டு
ருவம் ஆயஎம்அடிகள் அச்சிறுபாக்கம தாட்சிகொண்டாரே. க

தேனினும்இனியர் பாலனநீற்றர் தீங்கரும்பனையர்தந் திருவடி
தொழுவார், ஊன்நயந்துருக உவகைகள்தருவார் உச்சிமேலுறைபவர்
ஒன்றலாதூரார், வானகமிறந்து வையகம்வணங்க வயங்கொளநிற்ப
தோர் வடிவினையுடையார், ஆனையின்உரிவை போர்த்தஎம்அடிகள்
அச்சிறுபாக்கம தாட்சிகொண்டாரே. உ

காரிருளுருவம் மால்வரைபுரையக் களிற்றினதுரிவைகொண்
டரிவைமேலோடி, நீருருமகளை நிமிர்சடைத்தாங்கி நீறணிந்தேறுகந்
தேறியநிமலர், பேரருளாளர் பிறவியிற்சேரார் பிணியிலர்கேடிலர்
பேய்க்கணஞ்சூழ, ஆரிருண்மாலை யாடும்எம்அடிகள் அச்சிறுபாக்கம
தாட்சிகொண்டாரே. ங

மைம்மலர்க்கோதை மார்பினரெனவும் மலைமகளவளொடு மரு
வினரெனவும், செம்மலர்ப்பிறையுஞ் சிறையணிபுனலுஞ் சென்னி
மேலுடையரெஞ் சென்னிமேலுறைவார், தம்மலரடியொன் றடியவர்
பரவத் தமிழ்ச்சொலும்வடசொலுந் தாள்நிழற்சேர, அம்மலர்க்கொன்
றை யணிந்தஎம்அடிகள் அச்சிறுபாக்கம தாட்சிகொண்டாரே. ச

விண்ணுலாமதியஞ் சூடினரெனவும் விரிசடையுள்ளது வெள்ள
நீரெனவும், பண்ணுலாம்மறைகள் பாடினரெனவும் பலபுகழல்லது பழி
யிலரெனவும், எண்ணலாகாத இமையவர்நாளும் ஏத்தரவங்களோ
டெழில்பெறநின்ற, அண்ணலான்ஊர்தி ஏறும்எம்அடிகள் அச்சிறு
பாக்கம தாட்சிகொண்டாரே. ரு

நீடிருஞ்சடைமேல் இளம்பிறைதுளங்க நிழல்திகழ்மழுவொடு
நீறுமெய்பூசித், தோடொருகாதினிற் பெய்துவெய்தாய சுடலையிலாடு
வர் தோலுடையாகக், காடரங்காகக் கங்குலும்பகலுங் கழுதொடுபாரிடங்

கைதொழுதேத்த, ஆடரவாட ஆடும்எம்அடிகள் அச்சிறுபாக்கம தாட்சி கொண்டாரே. சு

ஏறுமொன்றேறி நீறுமெய்பூசி இளங்கிளை அரிவையொ டொருங் குடனுகிக், கூறுமொன்றருளிக் கொன்றையந்தாருங் குளிரிளமதிய முங் கூவிளமலரும், நாறுமல்லிகையும் எருக்கொடுமுருக்கும் மகிழிள வன்னியும் இவைநலம்பகர, ஆறுமோர்சடைமேல் அணிந்தஎம்அடிகள் அச்சிறுபாக்கம தாட்சிகொண்டாரே. எ

கச்சும்ஒள்வாளுங் கட்டியவுடையர் கதிர்முடிசுடர்விடக் கவரியுங் குடையும், பிச்சமும்பிறவும் பெண்அணங்காய பிறைநுதலவர்தமைப் பெரியவர்பேணப், பச்சமும்வலியுங் கருதியஅரக்கன் பருவரை யெடுத்ததிண் தோள்களையடர்வித், தச்சமும்அருளுங் கொடுத்தஎம் அடிகள் அச்சிறுபாக்கம தாட்சிகொண்டாரே. அ

நோற்றலாரேனும் வேட்டலாரேனும் நுகர்புகர்சாந்தமோ டேந் தியமாலைக், கூற்றலாரேனும் இன்னவாறென்றும் எய்தலாகாத்தோ ரியல்பினையுடையார், தோற்றலார்மாலும் நான்முகமுடைய தோன்ற லும்அடியொடு முடியுறத்தங்கள், ஆற்றலாற்காணு ராயஎம்அடிகள் அச்சிறுபாக்கம தாட்சிகொண்டாரே. கூ

வாதுசெய்சமணுஞ் சாக்கியப்பேய்கள் நல்வினைநீக்கிய வல்வினை யாளர், ஓதியுங்கேட்டும் உணர்வினையிலாதார் உள்கலாகாததோ ரியல் பினையுடையார், வேதமும்வேத நெறிகளுமாகி விமலவேடத்தொடு கமலமாமதிபோல், ஆதியும்ஈறும் ஆயஎம்அடிகள் அச்சிறுபாக்கம தாட்சிகொண்டாரே. க௦

மைச்செறிகுவளை தவளைவாய்நிறைய மதுமலர்ப்பொய்கையிற் புதுமலர்கிழியப், பச்சிறவெறிவயல் வெறிகமழ்காழிப் பதியவர்அதி பதி கவுணியர்பெருமான், கைச்சிறுமறியவன் கழலலாற்பேணுக் கருத் துடைஞானசம் பந்தனதமிழ்கொண், டச்சிறுபாக்கத் தடிகளையேத் தும் அன்புடையடியவர் அருவினையிலரே. கக

திருச்சிற்றம்பலம்

திருஇடைச்சுரம் - பண் - குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

வரிவளரவிரொளி யரவரைதாழ வார்சடைமுடிமிசை வளர்மதி சூடிக்,கரிவளர்தருகழல் கால்வலனேந்திக் கனலெரியாடுவர் காடரங்காக, விரிவளர்தருபொழில் இளமயில்ஆல வெண்ணிறத்தருவிகள் திண்ணெனவீழும், எரிவளரினமணி புனமணிசாரல் இடைச்சுரம்மேவிய இவர்வணமென்னே. க

ஆற்றையும்ஏற்றதோர் அவிர்சடையுடையர் அழகினையருளுவர் குழகலதறியார், கூற்றுயிர்செகுப்பதோர் கொடுமையையுடையர் நடு விருளாடுவர் கொன்றையந்தாரார், சேற்றயல்மிளிர்வன கயலிளவாளை செருச்செயவோர்ப்பன செம்முகமந்தி, ஏற்றையொடுழிதரும் எழில் திகழ்சாரல் இடைச்சுரம்மேவிய இவர்வணமென்னே. உ

கானமுஞ்சுடலையுங் கற்படுநிலனுங் காதலர்தீதிலர் கனல்மழு வாளர், வானமும்நிலமையும் இருமையுமானார் வணங்கவும்இணங்கவும் வாழ்த்தவும்படுவார், நானமும்புகையொளி விரையொடுகமழ நளிர் பொழில்இளமஞ்ஞை மன்னியபாங்கர், ஏனமும்பிணையலும் எழில் திகழ்சாரல் இடைச்சுரம்மேவிய இவர்வணமென்னே. ங

கடமணிமார்பினர் கடல்தனிலுறைவார் காதலர்தீதிலர் கனல்மழு வாளர், விடமணிமிடறினர் மிளிர்வதோர்அரவர் வேறுமோர்சரிதையர் வேடமும்உடையர், வடமுலையயலன கருங்குருந்தேறி வாழையின் தீங்கனி வார்ந்துதேன்அட்டும், இடமுலையரிவையர் எழில்திகழ்சாரல் இடைச்சுரம்மேவிய இவர்வணமென்னே. ச

கார்கொண்டகடிகமழ் விரிமலர்க்கொன்றைக் கண்ணியர்வளர்மதி கதிர்விடக்கங்கை, நீர்கொண்டசடையினர் விடையுயர்கொடியர் நிழல் திகழ்மழுவினர் அழல்திகழ்நிறத்தர், சீர்கொண்டமென்சிறை வண்டு பண்செய்யும் செழும்புனலனையன செங்குலைவாழை, ஏர்கொண்ட பலவினொ டெழில்திகழ்சாரல் இடைச்சுரம்மேவிய இவர்வண மென்னே. ரு

தோடணிகுழையினர் சுண்ணவெண்ணீற்றர் சுடலையின்ஆடுவர் தோலுடையாகப், பீடுயர்செய்ததோர் பெருமையையுடையர் பேயு

டன்ஆடுவர் பெரியவர்பெருமான். கோடல்கள்ஒழுகுவ முழுகுவதும்பி குரவமும் அரவமும் மன்னியபாங்கர், ஏடவிழ்புதுமலர் கடிகமழ்சாரல் இடைச்சுரம்மேவிய இவர்வண மென்னே ௬

கழல்மல்குகாலினர் வேலினர்நூலர் கவர்தலையரவொடு கண்டியும் பூண்பர், அழல்மல்கும்எரியொடும் அணிமழுவேந்தி ஆடுவர்பாடுவர் ஆரணங்குடையர், பொழில்மல்குநீடிய அரவமுமரவம் மன்னிய கவட்டிடைப் புணர்குயிலாலும், எழில்மல்குசோலையில் வண்டிசை பாடும் இடைச்சுரம்மேவிய இவர்வணமென்னே. ௭

தேங்கமழ்கொன்றையந் திருமலர்புனைவார் திகழ்தருசடைமிசைத் திங்களுஞ்சூடி, வீந்தவர்சுடலைவெண் ணீறுமெய்பூசி வேறுமோர்சரிதையர் வேடமும்உடையர், சாந்தமும்அகிலொடு முகில்பொதிந்தலம்பித் தவழ்கனமணியொடு மிகுபளிங்கிடறி, ஏந்துவெள்ளருவிகள் எழில்திகழ்சாரல் இடைச்சுரம்மேவிய இவர்வணமென்னே.

பலஇலம்இடுபலி கையிலொன்றேற்பர் பலபுகழல்லது பழியிலர் தாமும், தலையிலங்கவிரொளி நெடுமுடியரக்கன் தடக்கைகள்அடர்த்ததோர் தன்மையையுடையர், மலையிலங்கருவிகள் மணமுழவதிர மழைதவழ்இளமஞ்ஞை மல்கியசாரல், இலைஇலவங்கமும் ஏலமுங்கமழும் இடைச்சுரம்மேவிய இவர்வணமென்னே. ௯

பெருமைகள்தருக்கியோர் பேதுறுகின்ற பெருங்கடல்வண்ணனும் பிரமனும்ஓரா, அருமையரடிநிழல் பரவிநின்றேத்தும் அன்புடையடியவர்க் கணியருமாவர், கருமைகொள்வடிவொடு சுனைவளர்குவளைக் கயலினம்வயல்இள வாளைகள்இரிய, எருமைகள்படிதர இளஅனம் ஆலும் இடைச்சுரம்மேவிய இவர்வணமென்னே. ௧௦

மடைச்சுரமறிவன வாளையுங்கயலும் மருவியவயல்தனில் வருபுனற்காழிச், சடைச்சுரத்துறைவதோர் பிறையுடையண்ணல் சரிதைகள்பரவிநின் றுருகுசம்பந்தன், புடைச்சுரத்தருவரைப் பூக்கமழ்சாரற் புணர்மடநடையவர் புடையிடையார்ந்த, இடைச்சுரம்ஏத்திய இசையொடுபாடல் இவைசொலவல்லவர் பிணியிலர்தாமே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருக்கழுமலம் - பண் - குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

அயிலுறுபடையினர் விடையினர்முடிமேல் அரவமும்மதியமும் விரவியஅழகர், மயிலுறுசாயல வனமுலையொருபால் மகிழ்பவர்வானிடை முகில்புல்குமிடறர், பயில்வுறுசரிதையர் எருதுகந்தேறிப் பாடியும்ஆடியும் பலிகொள்வர்வலிசேர், கயிலையும்பொதியிலும் இடமெனவுடையார் கழுமலம்நினையநம் வினைகரிசறுமே. க

கொண்டலும்நீலமும் புரைதிருமிடறர் கொடுமுடியுறைபவர் படுதலைக்கையர், பண்டலர்அயன்சிரம்அரிந்தவர்பொருந்தும் படர்சடையடிகளார் பதியதனயலே, வண்டலும்வங்கமுஞ் சங்கமுஞ்சுறவும் மறிகடல்திரைகொணர்ந் தெற்றியகரைமேற், கண்டலுங்கைதையும் நெய்தலுங்குலவுங் கழுமலம்நினையநம் வினைகரிசறுமே. உ

எண்ணிடையொன்றினர் இரண்டினர்உருவம் எரியிடைமூன்றினர் நான்மறையாளர், மண்ணிடைஐந்தினர் ஆறினர்அங்கம் வகுத்தனர்ஏழிசை யெட்டிருங்கலைசேர், பண்ணிடையொன்பதும் உணர்ந்தவர்பத்தர் பாடிநின்றடிதொழ மதனனைவெகுண்ட, கண்ணிடைக்கனலினர் கருதியகோயில் கழுமலம்நினையநம் வினைகரிசறுமே. ௩

எரியொருகரத்தினர் இமையவர்க்கிறைவர் ஏறுகந்தேறுவர் நீறுமெய்பூசித், திரிதருமியல்பினர் அயலவர்புரங்கள் தீயெழவிழித்தனர் வேய்புரைதோளி, வரிதருகண்ணிணை மடவரலஞ்ச மஞ்சுறநிமிர்ந்ததோர்வடிவொடும்வந்த, கரியுரிமருவிய அடிகளுக்கிடமாங் கழுமலம்நினையநம் வினைகரிசறுமே. ச

ஊரெதிர்ந்திடுபலி தலைகலனாக உண்பவர்விண்பொலிந் திலங்கியவுருவர், பாரெதிர்ந்தடிதொழ விரைதருமார்பிற் படஅரவாமைஅக் கணிந்தவர்க்கிடமாம், நீரெதிர்ந்திழிமணி நித்திலம்முத்தம் நிரைசுரிசங்கமொ டொண்மணிவான்றிக், காரெதிர்ந் தோதம்வன் திரைகரைக்கெற்றுங் கழுமலம்நினையநம் வினைகரிசறுமே. ரு

முன்னுயிர்த்தோற்றமும் இறுதியுமாகி முடியுடையமரர்கள் அடிபணிந்தேத்தப், பின்னியசடைமிசைப் பிறைநிறைவித்த பேருளாளனூர் பேணியகோயில், பொன்னியல் நறுமலர் புனலொடுதூபஞ்

சாந்தமும்வெந்திய கையினராகிக், கன்னியர்நாள்தொறும் வேடமேபரா
வுங் கழுமலம்நினையநம் வினைகரிசறுமே. ௬

கொலைக்கணித்தாவரு கூற்றுதைசெய்தார் குரைகழல்பணிந்தவர்க்
கருளியபொருளின், நிலைக்கணித்தாவர நினையவல்லார்தம் நெடுந்துயர்
தவிர்த்தவெம் நிமலருக்கிடமாம், மலைக்கணித்தாவர வன்றிரைமுரல
மதவிரிபுன்னைகள் முத்தெனஅரும்பக், கலைக்கணம்கானலின்நீழலில்
வாழுங் கழுமலம்நினையநம் வினைகரிசறுமே. ௭

புயம்பலவுடையதென் இலங்கையர்வேந்தன் பொருவரையெடுத்
தவன் பொன்முடிதிண்தோள், பயம்பலபடஅடர்த் தருளியபெரு
மான் பரிவொடுமினிதுறை கோயிலதாகும், வியன்பலவிண்ணினும்
மண்ணினுமெங்கும் வேறுவேறுகங்களிற் பெயருளதென்னக், கயம்
பலபடக்கடல் திரைகரைக்கெற்றுங் கழுமலம்நினையநம் வினைகரி
சறுமே. ௮

விலங்கலொன்றேந்திவன் மழைதடுத்தோனும் வெறிகமழ்தா
மரை யோனுமென்றிவர்தம், பலங்களால்நேடியும் அறிவரிதாய பரி
சினன்மருவிநின் றினிதுறைகோயில், மலங்கிவன்றிரைவரை யெனப்
பரந்தெங்கும் மறிகடலோங்கிவெள் இப்பியுஞ்சுமந்து, கலங்கடன்சாக்
கொடு நிரக்கவந்தேறுங் கழுமலம்நினையநம் வினைகரிசறுமே. ௯

ஆம்பலதவமுயன் றறவுரைசொல்லும் அறிவிலாச்சமணருந்
தேரருங்கணிசேர், நோம்பலதவமறி யாதவர்நொடிந்த மூதுரைகொள்
கிலா முதல்வர்தம்மேனிச், சாம்பலும்பூசிவெண் தலைகலனாகத் தைய
லாரிடுபலி வையகத்தேற்றுக், காம்பனதோளியொ டினிதுறைகோயில்
கழுமலம்நினையநம் வினைகரிசறுமே. ௧௦

கலிகெழுபாரிடை யூரெனவுளதாங் கழுமலம்விரும்பிய கோயில்
கொண்டவர்மேல், வலிகெழுமனம்மிக வைத்தவன்மறைசேர் வருங்
கலைஞானசம் பந்தனதமிழின், ஒலிகெழுமாலையென் றுரைசெய்த
பத்தும் உண்மையினால்நினைந் தேத்தவல்லார்மேல், மெலிகெழுதுய
ரடை யாவினைசிந்தும் விண்ணவராற்றலின் மிகப்பெறுவாரே. ௧௧

திருச்சிற்றம்பலம்

கோயில் - பண் - குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

கற்றாங் கெரியோம்பிக் கலியை வாராமே
செற்றார் வாழ்தில்லைச் சிற்றம் பலம்மேய
முற்றா வெண்டிங்கள் முதல்வன் பாதமே
பற்றா நின்றாரைப் பற்றா பாவமே. க

பறப்பைப் படுத்தெங்கும் பசுவேட் டெரியோம்புஞ்
சிறப்பர் வாழ்தில்லைச் சிற்றம் பலம்மேய
பிறப்பில் பெருமானைப் பின்றாழ் சடையானை
மறப்பி லார்கண்டீர் மையல் தீர்வாரே. உ

மையா ரொண்கண்ணார் மாட நெடுவீதிக்
கையாற் பந்தோச்சுங் கழிசூழ் தில்லையுள்
பொய்யா மறைபாடல் புரிந்தா னுலகேத்தச்
செய்யா னுறைகோயில் சிற்றம் பலந்தானே. ௩

நிறைவெண் கொடிமாட நெற்றி நேர்தீண்டப்
பிறைவந் திறைதாக்கும் பேரம் பலந்தில்லைச்
சிறைவண் டறையோவாச் சிற்றம் பலம்மேய
இறைவன் கழலேத்தும் இன்பம் இன்பமே. ௪

செல்வ நெடுமாடஞ் சென்று சேணோங்கிச்
செல்வ மதிதோயச் செல்வம் உயர்கின்ற
செல்வர் வாழ்தில்லைச் சிற்றம் பலம்மேய
செல்வன் கழலேத்துஞ் செல்வஞ் செல்வமே. ரு

வருமாந் தளிர்மேனி மாதோர் பாகமாந்
திருமாந் தில்லையுட் சிற்றம் பலம்மேய
கருமா னுரியாடைக் கறைசேர் கண்டத்தெம்
பெருமான் கழலல்லாற் பேணா துள்ளமே. ௬

அலையார் புனல்சூடி யாகத் தொருபாகம்
மலையான் மகளோடு மகிழ்ந்தான் உலகேத்தச்
சிலையால் எயிலெய்தான் சிற்றம் பலந்தன்னைத்
தலையால் வணங்குவார் தலையா னார்களே. எ

கூர்வாள் அரக்கன்றன் வலியைக் குறைவித்துச்
சீரா லேமல்கு சிற்றம் பலம்மேய
நீரார் சடையானை நித்த லேத்துவார்
தீரா நோயெல்லாந் தீர்தல் திண்ணமே. அ

கோணா கணையானுங் குளிர்தா மரையானுங்
காணார் கழலேத்தக் கனலாய் ஓங்கினான்
சேணார் வாழ்தில்லைச் சிற்றம் பலம்மேய
மாணா நோயெல்லாம் வாளா மாயுமே. கூ

பட்டைத் துவராடைப் படிமங் கொண்டாடும்
முட்டைக் கட்டுரை மொழிவ கேளாதே
சிட்டர் வாழ்தில்லைச் சிற்றம் பலம்மேய
நட்டப் பெருமானை நாளுந் தொழுவோமே. க0

ஞாலத் துயர்காழி ஞான சம்பந்தன்
சீலத் தார்கொள்கைச் சிற்றம் பலம்மேய
சூலப் படையானைச் சொன்ன தமிழ்மாலை
கோலத் தாற்பாட வல்லார் நல்லாரே. கக

திருச்சிற்றம்பலம்

சீகாழி - பண் - குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

நல்லார் தீமேவுந் தொழிலார் நால்வேதஞ்
சொல்லார் கேண்மையார் சுடர்பொற் கழலேத்த
வில்லாற் புரஞ்செற்றான் மேவும் பதிபோலுங்
கல்லார் மதில்சூழ்ந்த காழிந் நகர்தானே. க

அளிவண் டேன்பாயும் இதழி தூமத்தந்
தெளிவெண் திங்கள்மா சுணநீர் திகழ்சென்னி
ஒளிவெண் தலைமாலை உகந்தா னூர்போலுங்
களிவண் டியாழ்செய்யுங் காழிந் நகர்தானே. உ

ஆலக் கோலத்தின் நஞ்சுண் டமுதத்தைச்
சாலத் தேவர்க்கீந் தளித்தான் தன்மையால்

பாலற் காய்நன்றும் பரிந்து பாதத்தால்
காலற் காய்ந்தானூர் காழிந் நகர்தானே. ௩, ௪, ௫, ௬, ௭

இரவில் திரிவோர்கட் கிறைதோ ளிணைபத்தும்
நிரவிக் கரவாளை நேர்ந்தா னிடம்போலும்
பரவித் திரிவோர்க்கும் பால் நீறணிவோர்க்குங்
கரவில் தடக்கையார் காழிந் நகர்தானே. ௮

மாலும் பிரமனும் அறியா மாட்சியான்
தோலும் புரிநூலுந் துதைந்த வரைமார்பன்
ஏலும் பதிபோலும் இரந்தோர்க் கெந்நாளுங்
காலம் பகராதார் காழிந் நகர்தானே. ௯

தங்கை யிடவுண்பார் தாழ்சீ வரத்தார்கள்
பெங்கை யுணராதே பேணித் தொழுமின்கள்
மங்கை யொருபாகம் மகிழ்ந்தான் மலர்ச்சென்னிக்
கங்கை தரித்தானூர் காழிந் நகர்தானே. ௧௦

வாசம் கமழ்காழி மதிசெஞ் சடைவைத்த
ஈசன் நகர்தன்னை யிணையில் சம்பந்தன்
பேசுந் தமிழ்வல்லோர் பெருநீ ருலகத்துப்
பாசந் தனையற்றுப் பழியில் புகழாரே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருவீழிமிழலை - பண் - குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

இரும்பொன் மலைவில்லா எரியம் பாநாணில்
திரிந்த புரமூன்றுஞ் செற்றான் உறைகோயில்
தெரிந்த அடியார்கள் சென்ற திசைதோறும்
விரும்பி யெதிர்கொள்வார் வீழி மிழலையே. ௧

வாதைப் படுகின்ற வானோர் துயர்தீர
ஓதக் கடல்நஞ்சை உண்டான் உறைகோயில்
கீதத் திசையோடுங் கேள்விக் கிடையோடும்
வேதத் தொலியோவா வீழி மிழலையே. ௨

பயிலும் மறையாளன் தலையிற் பலிகொண்டு
துயிலும் பொழுதாடுஞ் சோதி யுறைகோயில்
மயிலும் மடமானும் மதியும் மிளவேயும்
வெயிலும் போல்மாதர் வீழி மிழலையே. ௩

இரவன் பகலோனும் எச்சத் திமையோரை
நிரவிட் டருள்செய்த நிமலன் உறைகோயில்
குரவஞ் சுரபுன்னை குளிர்கோங் கிளவேங்கை
விரவும் பொழிலந்தண் வீழி மிழலையே. ௪

கண்ணிற் கனலாலே காமன் பொடியாகப்
பெண்ணுக் கருள்செய்த பெருமான் உறைகோயில்
மண்ணிற் பெருவேள்வி வளர்தீப் புகைநாளும்
விண்ணிற் புயல்காட்டும் வீழி மிழலையே. ௫

மாலா யிரங்கொண்டு மலர்க்கண் ணிடஆழி
ஏலா வலயத்தோ டீந்தான் உறைகோயில்
சேலா கியபொய்கைச் செழுநீர்க் கமலங்கள்
மேலா லெரிகாட்டும் வீழி மிழலையே. ௬

மதியால் வழிபட்டான் வாணாள் கொடுபோவான்
கோதியா வருகூற்றைக் குமைத்தான் உறைகோயில்
நெதியான் மிகுசெல்வர் நித்த நியமங்கள்
விதியால் நிற்கின்றார் வீழி மிழலையே. ௭

எடுத்தான் தருக்கினை யிழித்தான் விரலூன்றிக்
கொடுத்தான் வாளாளாக் கொண்டான் உறைகோயில்
படித்தார் மறைவேள்வி பயின்றார் பாவத்தை
விடுத்தார் மிகவாழும் வீழி மிழலையே ௮

கிடந்தான் இருந்தானுங் கீழ்மேல் காணாது
தொடர்ந்தாங் கவரேத்தச் சுடரா யவன்கோயில்
படந்தாங் கரவல்குல் பவளத் துவர்வாய்மேல்
விடந்தாங் கியகண்ணார் வீழி மிழலையே. ௯

சிக்கார் துவராடைச் சிறுதட் டுடையாரும்
நக்காங் கலர்தூற்றும் நம்பான் உறைகோயில்

தக்கார் மறைவேள்வித் தலையா யுலகுக்கு
மிக்கார் அவர்வாழும் வீழி மிழலையே. க0

மேனின் றிழிகோயில் வீழி மிழலையுள்
ஏனத் தெயிற்றானை யெழிலார் பொழில்காழி
ஞானத் துயர்கின்ற நலங்கொள் சம்பந்தன்
வாய்மைத் திவைசொல்ல வல்லோர் நல்லோரே. கக

திருச்சிற்றம்பலம்

திருஅம்பர்மாகாளம் - பண் - குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

அடையார் புரமூன்றும் அனல்வாய் விழவெய்து
மடையார் புனலம்பர் மாகா ளம்மேய
விடையார் கொடியெந்தை வெள்ளைப் பிறைசூடும்
சடையான் கழலேத்தச் சாரா வினைதானே. க

தேனார் மதமத்தந் திங்கள் புனல்சூடி
வானார் பொழிலம்பர் மாகா ளம்மேய
ஊனார் தலைதன்னிற் பலிகொண் டுழல்வாழ்க்கை
ஆனான் கழலேத்த அல்லல் அடையாவே. உ

திரையார் புனலோடு செல்வ மதிசூடி
விரையார் பொழிலம்பர் மாகா ளம்மேய
நரையார் விடையூரும் நம்பான் கழல்நாளும்
உரையா தவர்கண்மேல் ஒழியா வூனம்மே. ௩

கொந்தண் பொழிற்சோலைக் கோல வரிவண்டு
மந்தம் மலியம்பர் மாகா ளம்மேய
கந்தம் கமழ்கொன்றை கமழ்புன் சடைவைத்த
எந்தை கழலேத்த இடர்வந் தடையாவே. ச

அணியார் மலைமங்கை ஆகம் பாகமாய்
மணியார் புனலம்பர் மாகா ளம்மேய
துணியா ருடையினான் துதைபொற் கழல்நாளும்
பணியா தவர்தம்மேற் பறையா பாவம்மே. ரு

பண்டாழ் கடல்நஞ்சை உண்டு களிமாந்தி
வண்டார் பொழிலம்பர் மாகா ளம்மேய
விண்டார் புரம்வேவ மேருச் சிலையாகக்
கொண்டான் கழலேத்தக் குறுகா குற்றம்மே. ௬

மிளிரும் அரவோடு வெள்ளைப் பிறைசூடி
வளரும் பொழிலம்பர் மாகா ளம்மேய
கிளருஞ் சடையண்ணல் கேடில் கழலேத்தத்
தளரும் உறுநோய்கள் சாருந் தவந்தானே. ௭

கொலையார் மழுவோடு கோலச் சிலையேந்தி
மலையார் புனலம்பர் மாகா ளம்மேய
இலையார் திரிசூலப் படையான் கழல்நாளும்
நிலையா நினைவார்மேல் நில்லா வினைதானே. ௮

சிறையார் வரிவண்டு தேனுண் டிசைபாட
மறையார் நிறையம்பர் மாகா ளம்மேய
கறையார் மலரானும் மாலுங் காண்பொண்ணா
இறையான் கழலேத்த எய்தும் இன்பம்மே. ௯

மாசூர் வடிவின்னார் மண்டை யுணல்கொள்வார்
கூசா துரைக்குஞ்சொற் கொள்கை குணமல்ல
வாசார் பொழிலம்பர் மாகா ளம்மேய
ஈசா என்பார்கட் கில்லை யிடர்தானே. ௧௦

வெருநீர் கொளவோங்கும் வேணு புரந்தன்னுள்
திருமா மறைஞான சம்பந்தன்சேணார்
பெருமான் மலியம்பர் மாகா ளம்பேணி
உருகா வுரைசெய்வார் உயர்வான் அடைவாரே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருநாகைக்காரோணம் - பண் - குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

புனையும் விரிகொன்றைக் கடவுள் புனல்பாய
நனையுஞ் சடைமேலோர் நகுவெண் டலைசூடி
வினையில் லடியார்கள் விதியால் வழிபட்டுக்
கனையுங் கடல்நாகைக் காரோ ணத்தானே. க

பெண்ணாண் எனநின்ற பெம்மான் பிறைச்சென்னி
அண்ணா மலைநாடன் ஆரூ ருறையம்மான்
மண்ணார் முழவோவா மாடந் நெடுவீதிக்
கண்ணார் கடல்நாகைக் காரோ ணத்தானே. உ

பாரோர் தொழவிண்ணோர் பணியம் மதில்மூன்றும்
ஆரார் அழலூட்டி அடியார்க் கருள்செய்தான்
தேரார் விழவோவாச் செல்வன் திரைசூழ்ந்த
காரார் கடல்நாகைக் காரோ ணத்தானே. ௩

மொழிசூழ் மறைபாடி முதிருஞ் சடைதன்மேல்
அழிசூழ் புனலேற்ற அண்ணல் லணியாய
பழிசூழ் விலாய பத்தர் பணிந்தேத்தக்
கழிசூழ் கடல்நாகைக் காரோணத்தானே. ௪

ஆணும் பெண்ணுமாய் அடியார்க் கருள்நல்கிச்
சேணின் றவர்க்கின்னஞ் சிந்தை செயவல்லான்
பேணி வழிபாடு பிரியா தெழுந்தொண்டர்
காணுங் கடல்நாகைக் காரோ ணத்தானே. ௫

ஏனத் தெயிறோடும் அரவம் மெய்பூண்டு
வானத் திளந்திங்கள் வளருஞ் சடையண்ணல்
ஞானத் துரைவல்லார் நாளும் பணிந்தேத்தக்
கானற் கடல்நாகைக் காரோ ணத்தானே. ௬

அரையார் அழல்நாகம் அக்கோ டசைத்திட்டு
விரையார் வரைமார்பின் வெண்ணீ றணியண்ணல்
வரையார் வனபோல வளரும் வங்கங்கள்
கரையார் கடல்நாகைக் காரோ ணத்தானே. எ

வலங்கொள் புகழ்பேணி வரையா லுயர்திண்டோள்
இலங்கைக் கிறைவாட அடர்த்தங் கருள்செய்தான்
பலங்கொள் புகழ்மண்ணிற் பத்தர் பணிந்தேத்தக்
கலங்கொள் கடல்நாகைக் காரோ ணத்தானே. அ

திருமா லடிவீழத் திசைநான் முகனேத்தப்
பெருமா னெனநின்ற பெம்மான் பிறைசென்னிச்
செருமால் விடையூருஞ் செல்வன் திரைசூழ்ந்த
கருமால் கடல்நாகைக் காரோ ணத்தானே. கூ

நல்லா ரறஞ்சொல்லப் பொல்லார் புறங்கூற
அல்லா ரலர்தூற்ற அடியார்க் கருள்செய்வான்
பல்லார் தலைமாலை யணிவான் பணிந்தேத்தக்
கல்லார் கடல்நாகைக் காரோ ணத்தானே. க0

கரையார் கடல்நாகைக் காரோ ணம்மேய
நரையார் விடையானை நவிலுஞ் சம்பந்தன்
உரையார் தமிழ்மாலை பாடும் மவரெல்லாம்
கரையா வுருவாகிக் கலிவான் அடைவாரே. கக

திருச்சிற்றம்பலம்

திருநல்லம் - பண் - குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

கல்லால் நிழல்மேய கறைசேர் கண்டாவென்
றெல்லா மொழியாலும் இமையோர் தொழுதேத்த
வில்லால் அரண்மூன்றும் வெந்து விழவெய்த
நல்லான் நமையாள்வான் நல்லம் நகரானே. க

தக்கன் பெருவேள்வி தன்னி லமரரைத்
துக்கம் பலசெய்து சுடர்பொற் சடைதாழக்
கொக்கின் இறகோடு குளிர்வெண் பிறைசூடும்
நக்கன் நமையாள்வான் நல்லம் நகரானே. உ

அந்தி மதியோடும் அரவச் சடைதாழ
முந்தி யனலேந்தி முதுகாட் டெரியாடிச்

சிந்தித் தெழவல்லார் தீரா வினைதீர்க்கும்
நந்தி நமையாள்வான் நல்லம் நகரானே. ௩

குளிரும் மதிசூடிக் கொன்றைச் சடைதாழ
மிளிரும் அரவோடு வெண்ணூல் திகழ்மார்பில்
தளிருந் திகழ்மேனித் தையல் பாகமாய்
நளிரும் வயல்சூழ்ந்த நல்லம் நகரானே. ௪

மணியார் திகழ்கண்டம் உடையான் மலர்மல்கு
பிணிவார் சடையெந்தை பெருமான் கழல்பேணித்
துணிவார் மலர்கொண்டு தொண்டர் தொழுதேத்த
நணியான் நமையாள்வான் நல்லம் நகரானே. ௫

வாசம் மலர்மல்கு மலையான் மகளோடும்
பூசுஞ் சுடுநீறு புனைந்தான் விரிகொன்றை
ஈசன் எனவுள்கி யெழுவார் வினைகட்கு
நாசன் நமையாள்வான் நல்லம் நகரானே. ௬

அங்கோல் வளைமங்கை காண அனலேந்திக்
கொங்கார் நறுங்கொன்றை சூடிக் குழகாக
வெங்கா டிடமாக வெந்தீ விளையாடும்
நங்கோன் நமையாள்வான் நல்லம் நகரானே. ௭

பெண்ணார் திருமேனிப் பெருமான் பிறைமல்கு
கண்ணார் நுதலினன் கயிலை கருத்தினல்
எண்ணா தெடுத்தானை யிறையே விரலூன்றி
நண்ணார் புரமெய்தான் நல்லம் நகரானே. ௮

நாகத் தணையானும் நளிர்மா மலரானும்
போகத் தியல்பினற் பொலிய அழகாகும்
ஆகத் தவளோடும் அமர்ந்தங் கழகாரும்
நாகம் அரையார்த்தான் நல்லம் நகரானே. ௯

குறியில் சமணோடு குண்டர் வண்தேரர்
அறிவில் உரைகேட்டங் கவமே கழியாதே
பொறிகொள் அரவார்த்தான் பொல்லா வினைதீர்க்கும்
நறைகொள் பொழில்சூழ்ந்த நல்லம் நகரானே. ௧௦

நலமார் மறையோர்வாழ் நல்லம் நகர்மேய
கொலைசேர் மழுவானைக் கொச்சை யமர்ந்தோங்கு
தலமார் தமிழ்ஞான சம்பந் தன்சொன்ன
கலைக ளிவைவல்லார் கவலை கழிவாரே. கக

திருச்சிற்றம்பலம்

திருநல்லூர் - பண் - குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

கொட்டும் பறைசீராற் குழும அனலேந்தி
நட்டம் பயின்றாடும் நல்லூர்ப் பெருமானை
முட்டின் றிருபோதும் முனியா தெழுந்தன்பு
பட்ட மனத்தார்கள் அறியார் பாவமே. க

ஏறில் எருதேறும் எழிலா யிழையோடும்
வேறும் உடனுமாம் விகிர்த ரவரென்ன
நாறும் மலர்ப்பொய்கை நல்லூர்ப் பெருமானைக்
கூறும் அடியார்கட் கடையா குற்றமே. உ

சூடும் இளந்திங்கள் சுடர்பொற் சடைதாழ
ஓடுண் கலனாக வூரு ரிடுபிச்சை
நாடும் நெறியானை நல்லூர்ப் பெருமானைப்
பாடும் அடியார்கட் கடையா பாவமே. ௩

நீத்த நெறியானை நீங்காத் தவத்தானை
நாத்த நெறியானை நல்லூர்ப் பெருமானைக்
காத்த நெறியானைக் கைகூப் பித்தொழு
தேத்தும் அடியார்கட் கில்லை யிடர்தானே. ச

ஆகத் துமைகேள்வன் அரவச் சடைதாழ
நாகம் அசைத்தானை நல்லூர்ப் பெருமானைத்
தாகம் புகுந்தண்மித் தாள்கள் தொழுந்தொண்டர்
போகம் மனத்தராய்ப் புகழத் திரிவாரே. ரு

கொல்லுங் களியானை யுரிபோர்த் துமையஞ்ச
நல்ல நெறியானை நல்லூர்ப் பெருமானைச்

செல்லும் நெறியானைச் சேர்ந்தா ரிடர்தீரச்
சொல்லும் அடியார்கள் அறியார் துக்கமே. சு

எங்கள் பெருமானை யிமையோர் தொழுதேத்தும்
நங்கள் பெருமானை நல்லூர் பிரிவில்லா
தங்கை தலைக்கேற்றி யாளென் றடிநீழல்
தங்கும் மனத்தார்கள் தமொற் றறுப்பாரே. எ

காமன் எழில்வாட்டிக் கடல்சூழ் இலங்கைக்கோன்
காமம் இறுத்தானை நல்லூர்ப் பெருமானை
ஏம மனத்தாரா யிகழா தெழுந்தொண்டர்
தீப மனத்தார்கள் அறியார் தீயவே. அ

வண்ண மலரானும் வையம் அளந்தானும்
நண்ண லரியானை நல்லூர்ப் பெருமானைத்
தண்ண மலர்தூவித் தாள்கள் தொழுதேத்த
எண்ணும் அடியார்கட் கில்லை யிடுக்கணே. கூ

பிச்சக் குடைநீழற் சமணர் சாக்கியர்
நிச்சம் அலர்தூற்ற நின்ற பெருமானை
நச்சு மிடற்றானை நல்லூர்ப் பெருமானை
எச்சும் அடியார்கட் கில்லை யிடர்தானே. க0

தண்ணம் புனற்காழி ஞான சம்பந்தன்
நண்ணும் புனல்வேலி நல்லூர்ப் பெருமானை
வண்ணம் புனைமாலை வைக லேத்துவார்
விண்ணும் நிலனுமாய் விளங்கும் புகழாரே. கக

திருச்சிற்றம்பலம்

திருவடுகூர் - பண் - குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

சுடுகூ டெரிமாலை யணிவர் சுடர்வேலர்
கொடுகூர் மழுவாளொன் றுடையார் விடையூர்வர்
கடுகூர் பசிகாமங் கவலை பிணியில்லார்
வடுகூர் புனல்சூழ்ந்த வடுகூ ரடிகளே. க

பாலுந் நறுநெய்யுந் தயிரும் பயின்றாடி
ஏலுஞ் சுடுநீறும் என்பும் ஒளிமல்கக்
கோலம் பொழிற்சோலைக் கூடி மடஅன்னம்
ஆலும் வடகூரில் ஆடும் அடிகளே. உ

சூடும் இளந்திங்கள் சுடர்பொற் சடைதன்மேல்
ஓடுங் களியானை உரிபோர்த் துமையஞ்ச
ஏடு மலர்மோந்தங் கெழிலார் வரிவண்டு
பாடும் வடகூரில் ஆடும் அடிகளே. ௩

தவரும் புரிசையுந் துதைந்த மணிமாடம்
கவர வெரியோட்டிக் கடிய மதிலெய்தார்
கவரு மணிகொல்லைக் கடிய முலைநல்லார்
பவரும் வடகூரில் ஆடும் அடிகளே. ௪

துணியா ருடையாடை துன்னி யரைதன்மேல்
தணியா அழல்நாகந் தரியா வகைவைத்தார்
பணியா ரடியார்கள் பலரும் பயின்றேத்த
அணியார் வடகூரில் ஆடும் அடிகளே. ௫

தளருங் கொடியன்னாள் தன்னோ டுடனாகிக்
கிளரும் அரவார்த்துக் கிளரு முடிமேலோர்
வளரும் பிறைசூடி வரிவண் டிசைபாட
ஒளிரும் வடகூரில் ஆடும் அடிகளே. ௬

நெடியர் சிறிதாய நிரம்பா மதிசூடும்
முடியர் விடையூர்வர் கொடியர் மொழிகொள்ளார்
கடிய தொழிற்காலன் மடிய வுதைகொண்ட
அடியர் வடகூரில் ஆடும் அடிகளே. ௭

பிறையும் நெடுநீரும் பிரியா முடியினார்
மறையும் பலபாடி மயானத் துறைவாரும்
பறையும் அதிர்குழலும் போலப் பலவண்டாங்
கறையும் வடகூரில் ஆடும் அடிகளே. ௮

சந்தம் மலர்வேய்ந்த சடையின் இடைவிம்மு
கந்தம் மிகுதிங்கள் சிந்து கதிர்மாலை

வந்து நயந்தெம்மை நன்றும் அருள்செய்வார்
அந்தண் வடுகூரில் ஆடும் அடிகளே. க

திருமா லடிவீழத் திசைநான் முகனுய
பெருமான் உணர்கில்லாப் பெருமான் நெடுமுடிசேர்
செருமால் விடையூருஞ் செம்மான் திசைவில்லா
அருமா வடுகூரில் ஆடும் அடிகளே. க0

படிநோன் பவையாவர் பழியில் புகழான
கடிநாண் மிகழ்சோலை கமழும் வடுகூரைப்
படியா னசிந்தை மொழியார் சம்பந்தன்
அடிஞா னம்வல்லா ரடிசேர் வார்களே. கக

திருச்சிற்றம்பலம்

திருஆப்பனூர் - பண் - குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

முற்றுஞ் சடைமுடிமேன் முதிரா இளம்பிறையன்
ஒற்றைப் படஅரவம் அதுகொண் டரைக்கணிந்தான்
செற்றமில் சீரானைத் திருஆப்ப னூரானைப்
பற்றும் மனமுடையார் வினைபற் றறுப்பாரே. க

குரவங் கமழ்குழலாள் குடிகொண்டு நின்றுவிண்ணோர்
விரவுந் திருமேனி விளங்கும் வளையெயிற்றின்
அரவம் அணிந்தானை அணியாப்ப னூரானைப்
பரவும் மனமுடையார் வினைபற் றறுப்பாரே. உ

முருகு விரிகுழலார் மனங்கொள் அநங்கனைமுன்
பெரிதும் முனிந்துகந்தான் பெருமான் பெருங்காட்டின்
அரவம் அணிந்தானை அணியாப்ப னூரானைப்
பரவும் மனமுடையார் வினைபற் றறுப்பாரே. ௩

பிணியும் பிறப்பறுப்பான் பெருமான் பெருங்காட்டில்
துணியின் உடைதாழச் சுடரேந்தி யாடுவான்
அணியும் புனலானை அணியாப்ப னூரானைப்
பணியும் மனமுடையார் வினைபற் றறுப்பாரே. ச

தகர மணியருவித் தடமால் வரைசிலையா
நகரம் ஒருமூன்றும் நலங்குன்ற வென்றுகந்தான்
அகர முதலானை அணியாப்ப னூரானைப்
பகரும் மனமுடையார் வினைபற் றறுப்பாரே. ரு

ஓடுந் திரிபுரங்கள் உடனே யுலந்தவியக்
காட திடமாகக் கனல்கொண்டு நின்றிரவில்
ஆடுந் தொழிலானை அணியாப்ப னூரானைப்
பாடும் மனமுடையார் வினைபற் றறுப்பாரே. சு

இயலும் விடையேறி யெரிகொள் மழுவீசிக்
கயலி னிணைக்கண்ணாள் ஒருபால் கலந்தாட
இயலும் இசையானை யெழிலாப்ப னூரானைப்
பயிலும் மனமுடையார் வினைபற் றறுப்பாரே. எ

கருக்கும் மணிமிடறன் கதநாகக் கச்சையினன்
உருக்கும் அடியவரை ஒளிவெண் பிறைசூடி
அரக்கன் திறலழித்தான் அணியாப்ப னூரானைப்
பருக்கும் மனமுடையார் வினைபற் றறுப்பாரே. அ

கண்ணன் கடிக்கமல மலர்மே லினிதுறையும்
அண்ணற் களப்பரிதாய் நின்றங் கடியார்மேல்
எண்ணில் வினைகளைவான் எழிலாப்ப னூரானைப்
பண்ணின் இசைபகர்வார் வினைபற் றறுப்பாரே. கூ

செய்ய கலிங்கத்தார் சிறுதட் டுடையார்கள்
பொய்யர் புறங்கூறப் புரிந்த அடியாரை
ஐயம் அகற்றுவான் அணியாப்ப னூரானைப்
பைய நினைந்தெழுவார் வினைபற் றறுப்பாரே. கo

அந்தண் புனல்வைகை அணியாப்ப னூர்மேய
சந்த மலர்க்கொன்றை சடைமே லுடையானை
நந்தி யடிபரவும் நலஞான சம்பந்தன்
சந்த மிவைவல்லார் தடுமாற் றறுப்பாரே. கக

திருச்சிற்றம்பலம்

திருஎருக்கத்தம்புலியூர் - பண் - குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

படையார் தருபூதப் பகடார் உரிபோர்வை
உடையான் உமையோடும் உடனு யிடுகங்கைச்
சடையான் எருக்கத்தம் புலியூர்த் தருகோயில்
விடையான் அடியேத்த மேவா வினைதானே. க

இலையார் தருசூலப் படையெம் பெருமானுய்
நிலையார் மதில்மூன்றும் நீருய் விழவெய்த
சிலையான் எருக்கத்தம் புலியூர்த் திகழ்கோயில்
கலையான் அடியேத்தக் கருதா வினைதானே. உ

விண்ணோர் பெருமானே விகிர்தா விடையூர்தீ
பெண்ணுண் அலியாகும் பித்தா பிறைசூடீ
எண்ணுர் எருக்கத்தம் புலியூ ருறைகின்ற
அண்ணு எனவல்லார்க் கடையா வினைதானே. ங

அரையார் தருநாகம் அணிவான் அலர்மாலை
விரையார் தருகொன்றை யுடையான் விடையேறி
வரையான் எருக்கத்தம் புலியூர் மகிழ்கின்ற
திரையார் சடையானைச் சேரத் திருவாமே. ச

வீறுர் முலையாளைப் பாகம் மிகவைத்துச்
சீறு வருகாலன் சினத்தை யழிவித்தான்
ஏறுன் எருக்கத்தம் புலியூ ரிறையானை
வேறு நினைவாரை விரும்பா வினைதானே. ரு

நகுவெண் தலையேந்தி நானுவிதம் பாடிப்
புகுவா னயம்பெய்யப் புலித்தோல் பியற்கிட்டுத்
தகுவான் எருக்கத்தம் புலியூர்த் தகைந்தங்கே
தொகுவான் கழலேத்தத் தொடரா வினைதானே. சு, எ

ஆவா வெனஅரக்கன் அலற அடர்த்திட்டுத்
தேவா எனஅருளார் செல்வங் கொடுத்திட்ட
கோவே யெருக்கத்தம் புலியூர் மிகுகோயில்
தேவே யெனஅல்லல் தீர்தல் திடமாமே. அ

மறையான் நெடுமால்காண் பரியான் மழுவேந்தி
நிறையா மதிசூடி நிகழ்முத் தின்தொத்தே
இறையான் எருக்கத்தம் புலியூ ரிடங்கொண்ட
கறையார் மிடற்றானைக் கருதக் கெடும்வினையே. கூ

புத்தர் அருகர்தம் பொய்கள் புறம்போக்கிச்
சுத்தி தரித்துறையுஞ் சோதி யுமையோடும்
நித்தன் எருக்கத்தம் புலியூர் நிகழ்வாய
அத்தன் அறவன்தன் அடியே அடைவோமே. கo

ஏரார் எருக்கத்தம் புலியூர் உறைவானைச்
சீரார் திகழ்காழித் திருவார் சம்பந்தன்
ஆரா அருந்தமிழ் மாலை யிவைவல்லார்
பாரா ரவரேத்தப் பதிவான் உறைவாரே. கக

திருச்சிற்றம்பலம்

திருப்பிரமபுரம் - திருவிருக்குக்குறள். பண் - குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

அரனை உன்குவீர், பிரம னூருளெம்
பரனையே மனம், பரவி உய்ம்மினே. க

காண உன்குவீர், வேணு நற்புரத்
தாணு வின்கழல், பேணி உய்ம்மினே. உ

நாதன் என்பிர்காள், காதல் ஒண்புகல்
ஆதி பாதமே, ஓதி உய்ம்மினே. ந

அங்கம் மாதுசேர், பங்கம் ஆயவன்
வெங்குரு மன்னும், எங்க ளீசனே. ச

வாணி லாச்சடைத், தோணி வண்புரத்
தாணி நற்பொனைக், காணு மின்களே. ரு

பாந்த ளார்சடைப், பூந்த ராய்மன்னும்
ஏந்து கொங்கையாள், வேந்த னென்பரே. சு

கரிய கண்டனைச், சிரபு ரத்துளெம்
அரசை நாள்தொறும், பரவி உய்ம்மினே. எ

நறவம் ஆர்பொழிற், புறவம் நற்பதி
இறைவன் நாமமே, மறவல் நெஞ்சமே. அ

தென்றி லரக்கனைக், குன்றிற் சண்பைமன்
அன்று நெரித்தவா, நின்று நினைமினே. கூ

அயனும் மாலுமாய், முயலுங் காழியான்
பெயல்வை யெய்திநின், றியலும் உள்ளமே. க0

தேரர் அமணரைச், சேர்வில் கொச்சைமன்
நேரில் கழல்நினைந், தோரும் உள்ளமே. கக

தொழும னத்தவர், கழும லத்துறை
பழுதில் சம்பந்தன், மொழிகள் பத்துமே. கஉ

திருச்சிற்றம்பலம்

திருஆரூர் - திருவிருக்குக்குறள். பண் - குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

சித்தந் தெளிவீர்காள், அத்தன் ஆரூரைப்
பத்தி மலர்தூவ, முத்தி யாகுமே. க

பிறவி யறுப்பீர்காள், அறவன் ஆரூரை
மறவா தேத்துமின், துறவி யாகுமே. உ

துன்பந் துடைப்பீர்காள், அன்பன் அணியாரூர்
நன்பொன் மலர்தூவ, இன்ப மாகுமே. ந

உய்ய லுறுவீர்காள், ஐயன் ஆரூரைக்
கையி னல்தொழ, நையும் வினைதானே. ச

பிண்டம் அறுப்பீர்காள், அண்டன் ஆரூரைக்
கண்டு மலர்தூவ, விண்டு வினைபோமே. ரு

பாசம் அறுப்பீர்காள், ஈசன் அணியாரூர்
வாச மலர்தூவ, நேச மாகுமே. சு

வெய்ய வினைதீர, ஐயன் அணியாரூர்
செய்ய மலர்தூவ, வையம் உமதாமே. எ

அரக்கன் ஆண்மையை, நெருக்கி னான்ஆரூர்
கரத்தி னால்தொழத், திருத்த மாகுமே. அ

தள்ளும் இருவர்க்கும், வள்ளல் ஆரூரை
உள்ளு மவர்தம்மேல், விள்ளும் வினைதானே. கூ

கடுக்கொள் சீவரை, அடக்கி னான்ஆரூர்
எடுத்து வாழ்த்துவார், விடுப்பர் வேட்கையே. கO

சீரூர் சம்பந்தன், ஆரூ ரைச்சொன்ன
பாரூர் பாடலார், பேறா ரின்பமே. கக

திருச்சிற்றம்பலம்

திருவீழிமிழலை - திருவிருக்குக்குறள். பண் - குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

வாசி தீரவே, காசு நல்குவீர்
மாசின் மிழலையீர், ஏச லில்லையே. க

இறைவ ராயினீர், மறைகொள் மிழலையீர்
கறைகொள் காசினை, முறைமை நல்குமே. உ

செய்ய மேனியீர், மெய்கொள் மிழலையீர்
பைகொள் அரவினீர், உய்ய நல்குமே. ௩

நீறு பூசினீர், ஏறு தேறினீர்
கூறும் மிழலையீர், பேறும் அருளுமே. ச

காமன் வேவவோர், தூமக் கண்ணினீர்
நாமம் மிழலையீர், சேமம் நல்குமே. ரு

பிணிகொள் சடையினீர், மணிகொள் மிடறினீர்
அணிகொள் மிழலையீர், பணிகொண் டருளுமே. சு

மங்கை பங்கினீர், துங்க மிழலையீர்
கங்கை முடியினீர், சங்கை தவிர்மினே. எ

அரக்கன் நெரிதர, இரக்க மெய்தினீர்
பரக்கும் மிழலையீர், கரக்கை தவிர்மினே. அ

அயனும் மாலுமாய், முயலும் முடியினீர்
இயலும் மிழலையீர், பயனும் அருளுமே. கூ

பறிகொள் தலையினர், அறிவ தறிகிலார்
வெறிகொள் மிழலையீர், பிறிவ தரியதே. க0

காழி மாநகர், வாழி சம்பந்தன்
வீழி மிழலைமேல், தாழும் மொழிகளே. கக

திருச்சிற்றம்பலம்

திருமுதுகுன்றம் - திருவிருக்குக்குறள். பண் - குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

நின்று மலர்தூவி, இன்று முதுகுன்றை
நன்றும் ஏத்துவீர்க், கென்றும் இன்பமே. க

அத்தன் முதுகுன்றைப், பத்தி யாகிநீர்
நித்தம் ஏத்துவீர்க், குய்த்தல் செல்வமே. உ

ஐயன் முதுகுன்றைப், பொய்கள் கெடநின்று
கைகள் கூப்புவீர், வையம் உமதாமே. ந

ஈசன் முதுகுன்றை, நேச மாகிநீர்
வாச மலர்தூவப், பாச வினைபோமே. ச

மணியார் முதுகுன்றைப், பணிவா ரவர்கண்டீர்
பிணியா யினகெட்டுத், தணிவா ருலகிலே. ரு

மொய்யார் முதுகுன்றில், ஐயா வெனவல்லார்
பொய்யா ரிரவோர்க்குச், செய்யாள் அணியாளே. சூ

விடையான் முதுகுன்றை, இடையா தேத்துவார்
படையா யினசூழ, உடையா ருலகமே. எ

பத்துத் தலையோனைக், கத்த விரலூன்றும்
அத்தன் முதுகுன்றை, மொய்த்துப் பணிமினே. அ

இருவ ரறியாத, ஒருவன் முதுகுன்றை
உருகி நினைவார்கள், பெருகி நிகழ்வோரே. க

தேரர் அமணரும், சேரும் வகையில்லான்
நேரின் முதுகுன்றை, நீர்நின் றுள்குமே. கo

நின்று முதுகுன்றை, நன்று சம்பந்தன்
ஒன்றும் உரைவல்லார், என்றும் உயர்வாரே. கக

திருச்சிற்றம்பலம்

திருஆலவாய் - திருவிருக்குக்குறள். பண் - குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

நீல மாமிடற், றால வாயிலான்
பால தாயினார், ஞாலம் ஆள்வரே. க

ஞாலம் ஏழுமாம், ஆல வாயிலார்
சீல மேசொலீர், காலன் வீடவே. உ

ஆல நீழலார், ஆல வாயிலார்
கால காலனார், பால தாமினே. ங

அந்த மில்புகழ், எந்தை யாலவாய்
பந்தி யார்கழல், சிந்தை செய்ம்மினே. ச

ஆட லேற்றினான், கூட லாலவாய்
பாடி யேமனம், நாடி வாழ்மினே. ரு

அண்ணல் ஆலவாய், நண்ணி னான்தனை
எண்ணி யேதொழத், திண்ணம் இன்பமே. சா

அம்பொன் ஆலவாய், நம்ப னார்கழல்
நம்பி வாழ்பவர், துன்பம் வீடுமே. எ

அரக்க னார்வலி, நெருக்கன் ஆலவாய்
உரைக்கு முள்ளத்தார்க், கிரக்கம் உண்மையே. அ

அருவன் ஆலவாய், மருவி னான்தனை
இருவ ரேத்தநின், றுருவம் ஓங்குமே. கூ

ஆரம் நாகமாம், சீரன் ஆலவாய்த்
தேர மண்செற்ற, வீர னென்பரே. க0

அடிகள் ஆலவாய்ப், படிகொள் சம்பந்தன்
முடிவி லின்தமிழ், செடிகள் நீக்குமே. கக

திருச்சிற்றம்பலம்

திருஇடைமருதூர் - திருவிருக்குக்குறள். பண் - குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

தோடொர் காதினன், பாடும் மறையினன்
காடு பேணிநின், ருடும் மருதனே. க

கருதார் புரமெய்வர், எருதே யினிதூர்வர்
மருதே யிடமாகும், விருதாம் வினைதீர்ப்பே. உ

எண்ணும் அடியார்கள், அண்ணல் மருதரைப்
பண்ணின் மொழிசொல்ல, விண்ணுந் தமதாமே. ௩

விரியார் சடைமேனி, எரியார் மருதரைத்
தரியா தேத்துவார், பெரியா ருலகிலே. ச

பந்த விடையேறும், எந்தை மருதரைச்
சிந்தை செய்பவர், புந்தி நல்லரே. ரு

கழலுஞ் சிலம்பார்க்கும், எழிலார் மருதரைத்
தொழலே பேணுவார்க், குழலும் வினைபோமே. சு

பிறையார் சடையண்ணல், மறையார் மருதரை
நிறையால் நினைபவர், குறையா ரின்பமே. எ

எடுத்தான் புயந்தன்னை, அடுத்தார் மருதரைத்
தொடுத்தார் மலர்சூட்ட, விடுத்தார் வேட்கையே. அ

இருவர்க் கரியாய, உருவ மருதரைப்
பரவி யேத்துவார், மருவி வாழ்வரே. கூ

நின்றுண் சமண்தேரர், என்றும் மருதரை
அன்றி யுரைசொல்ல, நன்று மொழியாரே. க0

கருதுசம் பந்தன், மருத ரடிபாடிப்
பெரிதுந் தமிழ்சொல்லப், பொருத வினைபோமே. கக
திருச்சிற்றம்பலம்

திருஅன்னியூர் - திருவிருக்குக்குறள். பண் - குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

மன்னி யூரிறை, சென்னி யார்பிறை
அன்னி யூரமர், மன்னு சோதியே. க

பழகுந் தொண்டர்வம், அழகன் அன்னியூர்க்
குழகன் சேவடி, தொழுது வாழ்மினே. உ

நீதி பேணுவீர், ஆதி யன்னியூர்ச்
சோதி நாமமே, ஓதி உய்ம்மினே. ங

பத்த ராயினிர், அத்தர் அன்னியூர்ச்
சித்தர் தாள்தொழ, முத்த ராவரே. ச

நிறைவு வேண்டுவீர், அறவன் அன்னியூர்
மறையு ளான்கழற், குறவு செய்ம்மினே. ரு

இன்பம் வேண்டுவீர், அன்பன் அன்னியூர்
நன்பொ னென்னுமின், உம்ப ராகவே. சு

அந்த ணாளர்தம், தந்தை அன்னியூர்
எந்தை யேயெனப், பந்தம் நீங்குமே. எ

தூர்த்தனைச்செற்ற, தீர்த்தன் அன்னியூர்
ஆர்த்த மாஅடைந், தேத்தி வாழ்மினே. அ

இருவர் நாடிய, அரவன் அன்னியூர்
பரவு வார்விண்ணுக், கொருவ ராவரே. கூ

குண்டர் தேரருக், கண்டன் அன்னியூர்த்
தொண்டு ளார்வினை, விண்டு போகுமே. க0

பூந்த ராய்ப்பந்தன், ஆய்ந்த பாடலால்
வேந்தன் அன்னியூர், சேர்ந்து வாழ்மினே. கக
திருச்சிற்றம்பலம்

திருப்புறவம் - பண் - குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

எய்யாவென்றித் தானவரூர்மூன் றெரிசெய்த
மையார்கண்டன் மாதுமைவைகுந் திருமேனிச்
செய்யான்வெண்ணீ றணிவான்திகழ்பொற் பதிபோலும்
பொய்யாநாவின் அந்தணர்வாழும் புறவம்மே. க

மாதொருபாலும் மாலொருபாலும் மகிழ்கின்ற
நாதனென்றேத்தும் நம்பான்வைகுந் நகர்போலும்
மாதவிமேய வண்டிசைபாட மயிலாடப்
போதலர்செம்பொன் புன்னைகொடுக்கும் புறவம்மே. உ

வற்றாநதியும் மதியும்பொதியுஞ் சடைமேலே
புற்றாடரவின் படமாடவுமிப் புவனிக்கோர்
பற்றாயிடுமின் பலியென்றடைவார் பதிபோலும்
பொற்றாமரையின் பொய்கைநிலாவும் புறவம்மே. ங

துன்னார்புரமும் பிரமன்சிரமுந் துணிசெய்து
மின்னார்சடைமேல் அரவும்மதியும் விளையாடப்
பன்னாளிடுமின் பலியென்றடைவார் பதிபோலும்
பொன்னார்புரிநூல் அந்தணர்வாழும் புறவம்மே. ச

தேவாஅரனே சரணென்றிமையோர் திசைதோறுங்
காவாயென்று வந்தடையக்கார் விடம்உண்டு
பாவார்மறையும் பயில்வோருறையும் பதிபோலும்
பூவார்கோலச் சோலைசுலாவும் புறவம்மே. ரு

கற்றறிவெய்திக் காமன்முன்னாகும் முகவெல்லாம்
அற்றரனேநின் அடிசரணென்னும் அடியோர்க்குப்
பற்றதுவாய பாசுபதன்சேர் பதியென்பர்
பொற்றிகழ்மாடத் தொளிகள்நிலாவும் புறவம்மே. சு

எண்டிசையோருஞ் சிடுவகைகார்சேர் வரையென்னக்
கொண்டெழுகோல முகில்போற்பெரிய கரிதன்னைப்
பண்டுரிசெய்தோன் பாவனைசெய்யும் பதியென்பர்
புண்டரிகத்தோன் போன்மறையோர்சேர் புறவம்மே. எ

பரக்குந்தொல்சீர்த் தேவர்கள்சேனைப் பௌவத்தைத்
தாக்குஞ்செந்தீப் போலமர்செய்யுந் தொழில்மேவும்
அரக்கன்திண்டோள் அழிவித்தானக் காலத்திற்
புரக்கும்வேந்தன் சேர்தருமூதூர் புறவம்மே. ௮

மீத்திகழண்டந் தந்தயனோடு மிகுமாலும்
மூர்த்தியைநாடிக் காணவொணாது முயல்விட்டாங்
கேத்தவெளிப்பா டெய்தியவன்றன் இடமென்பர்
பூத்திகழ்சோலைத் தென்றல்உலாவும் புறவம்மே. ௯

வையகம்நீர்தீ வாயுவும்விண்ணும் முதலானான்
மெய்யலதேரர் உண்டிலையென்றே நின்றேதம்
கையினிலுண்போர் காணவொணாதான் நகரென்பர்
பொய்யகமில்லாப் பூசுரர்வாழும் புறவம்மே. ௧௦

பொன்னியல்மாடப் புரிசைநிலாவும் புறவத்து
மன்னியஈசன் சேவடிநாளும் பணிகின்ற
தன்னியல்பில்லாச் சண்பையர்கோன்சீர்ச் சம்பந்தன்
இன்னிசையீரைந் தேத்தவல்லோர்கட் கிடர்போமே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருச்சிராப்பள்ளி - பண் - குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

நன்றுடையானைத் தீயதிலானை நரைவெள்ளே
றொன்றுடையானை உமையொருபாகம் உடையானைச்
சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளிக்
குன்றுடையானைக் கூறஎன்னுள்ளங் குளிரும்மே. ௧

கைம்மகவேந்திக் கடுவனொடூடிக் கழைபாய்வான்
செம்முகமந்தி கருவரையேறுஞ் சிராப்பள்ளி
வெம்முகவேழத் தீருரிபோர்த்த விகிர்தாநீ
பைம்முகநாகம் மதியுடன்வைத்தல் பழியன்றே. ௨

மந்தம்முழவம் மழலைததும்ப வரைநீழல்
செந்தண்புனமுஞ் சுனையுஞ்சூழ்ந்த சிராப்பள்ளிச்

சந்தம்மலர்கள் சடைமேலுடையார் விடையூரும்
எந்தம்அடிகள் அடியார்க்கல்லல் இல்லையே. ரு

துறைமல்குசாரற் சுனைமல்குநீலத் திடைவைகிச்
சிறைமல்குவண்டுந் தும்பியும்பாடுஞ் சிராப்பள்ளிக்
கறைமல்குகண்டன் கனலெரியாடுங் கடவுளெம்
பிறைமல்குசென்னி யுடையவனெங்கள் பெருமானே. சு

கொலைவரையாத கொள்கையர்தங்கள் மதில்மூன்றுஞ்
சிலைவரையாகச் செற்றனரேனுஞ் சிராப்பள்ளித்
தலைவரைநாளுந் தலைவரல்லாமை யுரைப்பீர்காள்
நிலவரைநீல முண்டதும்வெள்ளை நிறமாமே. ௫

வெய்யதண்சாரல் விரிநிறவேங்கைத் தண்போது
செய்யபொன்சேருஞ் சிராப்பள்ளிமேய செல்வனார்
தையலொர்பாகம் மகிழ்வர்நஞ்சுண்பர் தலையோட்டில்
ஐயமுங்கொள்வர் ஆரிவர்செய்கை அறிவாரே. சு

வேயுயர்சாரல் கருவிரலூகம் விளையாடும்
சேயுயர்கோயிற் சிராப்பள்ளிமேய செல்வனார்
பேயுயர்கொள்ளி கைவிளக்காகப் பெருமானார்
தீயுகந்தாடல் திருக்குறிப்பாயிற் றாகாதே. எ

மலைமல்குதோளன் வலிகெடவூன்றி மலரோன்றன்
தலைகலனாகப் பலிதிரிந்துண்பர் பழியோரார்
சொலவலவேதஞ் சொலவலகீதஞ் சொல்லுங்கால்
சிலவலபோலுஞ் சிராப்பள்ளிச்சேடர் செய்கையே. அ

அரப்பள்ளியானும் மலருறைவானும் அறியாமைக்
கரப்புள்ளிநாடிக் கண்டிலரேனுங் கல்சூழ்ந்த
சிரப்பள்ளிமேய வார்சடைச்செல்வர் மனைதோறும்
இரப்புள்ளீருமை யேதிலர்கண்டால் இகழாரே. க

நாணாதுடைநீத் தோர்களுங்கஞ்சி நாட்காலை
ஊணாப்பகலுண் டோதுவோர்கள் உரைக்குஞ்சொல்
பேணாதுறுசீர் பெறுதுமென்பீரெம் பெருமானார்
சேணார்கோயில் சிராப்பள்ளிசென்று சேர்மினே. க0

தேனயம்பாடுஞ் சிராப்பள்ளியானைத் திரைசூழ்ந்த
கானல்சங்கேறுங் கழுமலவூரிற் கவுணியன்
ஞானசம்பந்தன் நலம்மிகுபாடல் இவைவல்லார்
வானசம்பந்தத் தவரொடுமென்னி வாழ்வாரே. கக

திருச்சிற்றம்பலம்

திருக்குற்றாலம் - பண் - குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

வம்பார்குன்றம் நீடுயர்சாரல் வளர்வேங்கைக்
கொம்பார்சோலைக் கோலவண்டியாழ்செய் குற்றாலம்
அம்பால்நெய்யோ டாடல்அமர்ந்தான் அலர்கொன்றை
நம்பான்மேய நன்னகர்போலும் நமரங்காள். க

பொடிகள்பூசித் தொண்டர்பின்செல்லப் புகழ்விம்மக்
கொடிகளோடும் நாள்விழமல்கு குற்றாலம்
கடிகொள்கொன்றை கூவிளமாலை காதல்செய்
அடிகள்மேய நன்னகர்போலும் அடியீர்காள். உ

செல்வம்மல்கு செண்பகம்வேங்கை சென்றேறிக்
கொல்லைமுல்லை மெல்லரும்பீனுங் குற்றாலம்
வில்லின்ஒல்க மும்மதிலெய்த வினைபோக
நல்கும்நம்பான் நன்னகர்போலும் நமரங்காள். ங

பக்கம்வாழைப் பாய்கனியோடு பலவின்தேன்
கொக்கின்கோட்டுப் பைங்கனிதூங்குங் குற்றாலம்
அக்கும்பாம்பும் ஆமையும்பூண்டோர் அனலேந்தும்
நக்கன்மேய நன்னகர்போலும் நமரங்காள். ச

மலையார்சாரல் மகவுடன்வந்த மடமந்தி
குலையார்வாழைத் தீங்கனிமாந்துங் குற்றாலம்
இலையார்சூலம் ஏந்தியகையான் எயிலெய்த
சிலையான்மேய நன்னகர்போலுஞ் சிறுதொண்டீர். ரு

மைம்மாநீலக் கண்ணியர்சாரல் மணிவாரிக்
கொய்ம்மாஏனல் உண்கிளியோப்புங் குற்றாலம்

கைம்மாவேழத் தீருரிபோர்த்த கடவுள்எம்
பெம்மான்மேய நன்னகர்போலும் பெரியீர்காள். சு

நீலம்நெய்தல் தண்சுனைசூழ்ந்த நீள்சோலைக்
கோலமஞ்ஞை பேடையொடாடுங் குற்றாலம்
காலன் தன்னைக் காலாற்காய்ந்த கடவுள்எம்
சூலபாணி நன்னகர்போலுந் தொழுவீர்காள். எ

போதும்பொன்னும் உந்தியருவி புடைசூழக்
கூதன்மாரி நுண்துளிதூங்குங் குற்றாலம்
மூதூரிலங்கை முட்டியகோனை மிறைசெய்த
நாதன்மேய நன்னகர்போலும் நமரங்காள். அ

அரவின்வாயின் முள்ளெயிறேய்ப்ப அரும்பீன்று
குரவம்பாவை முருகமர்சோலைக் குற்றாலம்
பிரமன்னோடு மாலறியாத பெருமையெம்
பரமன்மேய நன்னகர்போலும் பணிவீர்காள். கூ

பெருந்தண்சாரல் வாழ்சிறைவண்டு பெடைபுல்கிக்
குருந்தமேறிச் செவ்வழிபாடுங் குற்றாலம்
இருந்துண்தேரும் நின்றுண்சமணும் எடுத்தார்ப்ப
அருந்தண்மேய நன்னகர்போலும் அடியீர்காள். க0

மாடவீதி வருபுனற்காழி யார்மன்னன்
கோடலீன்று கொழுமுனைகூம்புங் குற்றாலம்
நாடவல்ல நற்றமிழ்ஞான சம்பந்தன்
பாடல்பத்தும் பாடநம்பாவம் பறையுமே. கக

திருச்சிற்றம்பலம்

திருப்பரங்குன்றம் - பண் - குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

நீடலர்சோதி வெண்பிறையோடு நிரைகொன்றை
சூடலன்அந்திச் சுடரெரியேந்திச் சுடுகானில்
ஆடலன்அஞ்சொல் அணியிழையாளை யொருபாகம்
பாடலன்மேய நன்னகர்போலும் பரங்குன்றே. க

அங்கமோராறும் அருமறைநான்கும் அருள்செய்து
பொங்குவெண்ணூலும் பொடியணிமார்பிற் பொலிவித்துத்
திங்களும்பாம்புந் திகழ்சடைவைத்தோர் தேன்மொழி
பங்கினன்மேய நன்னகர்போலும் பரங்குன்றே. உ

நீரிடங்கொண்ட நிமிர்சடைதன்மேல் நிரைகொன்றை
சீரிடங்கொண்ட எம்மிறைபோலுஞ் சேய்தாய
ஓருடம்புள்ளே உமையொருபாகம் உடனாகிப்
பாரிடம்பாட இனிதுறைகோயில் பரங்குன்றே. ங

வளர்பூங்கோங்கம் மாதவியோடு மல்லிகைக்
குளிர்பூஞ்சாரல் வண்டறைசோலைப் பரங்குன்றம்
தளிர்போல்மேனித் தையல்நல்லாளோ டொருபாகம்
நளிர்பூங்கொன்றை சூடினன்மேய நகர்தானே. ச

பொன்னியல்கொன்றை பொறிகிளர்நாகம் புரிசடைத்
துன்னியசோதி யாகியஈசன் தொன்மறை
பன்னியபாடல் ஆடலன்மேய பரங்குன்றை
உன்னியசிந்தை உடையவர்க்கில்லை உறுநோயே. ரு

கடைநெடுமாடக் கடியரண்மூன்றுங் கனல்மூழ்கத்
தொடைநவில்கின்ற வில்லினன்அந்திச் சுடுகானில்
புடைநவில்பூதம் பாடநின்றாடும் பொருசூலப்
படைநவில்வான்றன் நன்னகர்போலும் பரங்குன்றே. சு

அயிலுடைவேலோர் அனல்புல்குகையின் அம்பொன்றால்
எயில்படஎய்த எம்மிறைமேய இடம்போலும்
மயில்பெடைபுல்கி மாநடமாடும் வளர்சோலைப்
பயில்பெடைவண்டு பாடலறாத பரங்குன்றே. எ

மைத்தகுமேனி வாளரக்கன்றன் மகுடங்கள்
பத்தினதிண்தோள் இருபதுஞ்செற்றான் பரங்குன்றைச்
சித்தமதொன்றிச் செய்கழலுன்னிச் சிவனென்று
நித்தலுமேத்தத் தொல்வினைநம்மேல் நில்லாவே. அ

முந்தியிவ்வையந் தாவியமாலும் மொய்யொளி
உந்தியில்வந்திங் கருமறையீந்த உரவோனும்

சிந்தையினாலுந் தெரிவரிதாகித் திகழ்சோதி
பந்தியல்அங்கை மங்கையொர்பங்கன் பரங்குன்றே. கூ

குண்டாய்முற்றுந் திரிவார்கூறை மெய்போர்த்து
மிண்டாய்மிண்டர் பேசியபேச்சு மெய்யல்ல
பண்டால்நீழல் மேவியஈசன் பரங்குன்றைத்
தொண்டாயேத்தத் தொல்வினைநம்மேல் நில்லாவே. க0

தடமலிபொய்கைச் சண்பைமன்ஞான சம்பந்தன்
படமலிநாகம் அரைக்கசைத்தான்றன் பரங்குன்றைத்
தொடைமலிபாடல் பத்தும்வல்லார்தந் துயர்போகி
விடமலிகண்டன் அருள்பெறுந்தன்மை மிக்கோரே. கக

திருச்சிற்றம்பலம்

திருக்கண்ணார்கோயில் - பண் - குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

தண்ணார்திங்கட் பொங்கரவந்தாழ் புனல்சூடிப்
பெண்ணாண்ஆய பேரருளாளன் பிரியாத
கண்ணார்கோயில் கைதொழுவோர்கட் கிடர்பாவம்
நண்ணாவாகும் நல்வினையாய நண்ணுமே. க

கந்தமர்சந்துங் காரகிலுந்தண் கதிர்முத்தும்
வந்தமர்தெண்ணீர் மண்ணிவளஞ்சேர் வயல்மண்டிக்
கொந்தலர்சோலைக் கோகிலம்ஆடக் குளிர்வண்டு
செந்திசைபாடுஞ் சீர்திகழ்கண்ணார் கோயிலே. உ

பல்லியல்பாணிப் பாரிடம்வத்தப் படுகோனின்
எல்லிநடஞ்செய் யீசனெம்மான்றன் இடமென்பர்
கொல்லையின்முல்லை மல்லிகைமௌவற் கொடிபின்னிக்
கல்லியல்இஞ்சி மஞ்சமர்கண்ணார் கோயிலே. ௩

தருவளர்கானந் தங்கியதுங்கப் பெருவேழம்
மருவளர்கோதை அஞ்சவுரித்து மறைநால்வர்க்
குருவளர்ஆல நீழலமர்ந்தீங் குரைசெய்தார்
கருவளர்கண்ணார் கோயிலடைந்தோர் கற்றோரே. ௪

மருமாணுருவாய் மற்றிணையின்றி வானோரைச்
செறுமாவலிபாற் சென்றுலகெல்லாம் அளவிட்ட
குறுமாணுருவன் தற்குறியாகக் கொண்டாடும்
கறுமாகண்டன் மேயதுகண்ணார் கோயிலே. ரு

விண்ணவருக்காய் வேலையுள்நஞ்சம் விருப்பாக
உண்ணவனைத்தே வர்க்கமுதீந்தெவ் வுலகிற்கும்
கண்ணவனைக்கண் ணார்திகழ்கோயிற் கனிதன்னை
நண்ணவல்லோர்கட் கில்லைநமன்பால் நடலையே. சு

முன்னொருகாலத் திந்திரன்உற்ற முனிசாபம்
பின்னொருநாளவ் விண்ணவரேத்தப் பெயர்வெய்தித்
தன்னருளாற்கண் ஆயிரம்ஈந்தோன் சார்பென்பர்
கன்னியர்நாளுந் துன்னமர்கண்ணார் கோயிலே. எ

பெருக்கெண்ணாத பேதையரக்கன் வரைக்கீழால்
நெருக்குண்ணாத்தன் நீள்கழல்நெஞ்சில் நினைந்தேத்த
முருக்குண்ணாதோர் மொய்கதிர்வாள்தேர் முன்ஈந்த
திருக்கண்ணார்என் பார்சிவலோகஞ் சேர்வாரே. அ

செங்கமலப்போ தில்திகழ்செல்வன் திருமாலும்
அங்கமலக்கண் நோக்கரும்வண்ணத் தழலானான்
தங்கமலக்கண் ணார்திகழ்கோயில் தமதுள்ளம்
அங்கமலத்தோ டேத்திடஅண்டத் தமர்வாரே. கூ

தாறிடுபெண்ணைத் தட்டுடையாருந் தாம்உண்ணும்
சோறுடையார்சொல் தேறன்மின்வெண்ணூல் சேர்மார்பன்
ஏறுடையன்பரன் என்பணிவான்நீள் சடைமேலோர்
ஆறுடையண்ணல் சேர்வதுகண்ணார் கோயிலே. கo

காமருகண்ணார் கோயிலுளானைக் கடல்சூழ்ந்த
பூமருசோலைப் பொன்னியல்மாடப் புகலிக்கோன்
நாமருதொன்மைத் தன்மையுள்ஞான சம்பந்தன்
பாமருபாடல் பத்தும்வல்லார்மேற் பழிபோமே. கக

திருச்சிற்றம்பலம்

சீகாழி - பண் - குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

உரவார்கலையின் கவிதைப்புலவர்க் கொருநாளுங்
காவாவண்கைக் கற்றவர்சேருங் கலிக்காழி
அரவார்அரையா அவுணர்புரமூன் றெரிசெய்த
சரவாஎன்பார் தத்துவஞானத் தலையாரே. க

மொய்சேர்வண்டுண் மும்மதநால்வாய் முரண்வேழக்
கைபோல்வாழை காய்குலையீனுங் கலிக்காழி
மைசேர்கண்டத் தெண்தோள்முக்கண் மறையோனே
ஐயாஎன்பார்க் கல்லல்களான அடையாவே. உ

இளகக்கமலத் தீன்களியங்குங் கழிசூழக்
களகப்புரிசைக் கவினார்சாருங் கலிக்காழி
அளகத்திருநல் நுதலிபங்கா அரனேயென்
றுளகப்பாடும் அடியார்க்குறநோய் அடையாவே. ௩

எண்ணார்முத்தம் ஈன்றுமரகதம் போறகாய்த்துக்
கண்ணார்கமுகு பவளம்பழுக்குங் கலிக்காழிப்
பெண்ணோர்பாகா பித்தாபிரானே யென்பார்க்கு
நண்ணாவினைகள் நாள்தொறும்இன்பந் நணுகும்மே. ௪

மழையார்சாரற் செம்புனல்வந்தங் கடிவருடக்
கழையார்கரும்பு கண்வளர்சோலைக் கலிக்காழி
உழையார்கரவா வுமையாள்கணவா வொளிர்சங்கக்
குழையாஎன்று கூறவல்லார்கள் குணவோரே. ரு

குறியார்திரைகள் வரைகள்நின்றுங் கோட்டாறு
கறியார்கழிசம் பிரசங்கொடுக்குங் கலிக்காழி
வெறியார்கொன்றைச் சடையாவிடையா என்பாரை
அறியாவினைகள்அருநோய்பாவம் அடையாவே. சு, எ

உலங்கொள்சங்கத் தார்கலியோகத் துதையுண்டு
கலங்கள்வந்து கார்வயலேறுங் கலிக்காழி
இலங்கைமன்னன் தன்னையிடர்கண் டருள்செய்த
சலங்கொள்சென்னி மன்னாஎன்னத் தவமாமே. அ

ஆவிக்கமலத் தன்னம்இயங்குங் கழிசூழக்
காவிக்கண்ணார் மங்கலம்ஓவாக் கலிக்காழிப்
பூவில்தோன்றும் புத்தேளொடுமா லவன்தானும்
மேவிப்பரவும் அரசேயென்ன வினைபோமே. கூ

மலையார்மாடம் நீடுயர்இஞ்சி மஞ்சாருங்
கலையார்மதியஞ் சேர்தரும்அந்தண் கலிக்காழித்
தலைவாசமணர் சாக்கியர்க்கென்றும் அறிவொண்ணா
நிலையாயென்னத் தொல்வினையாய நில்லாவே. க0

வடிகொள்வாவிச் செங்கழுநீரிற் கொங்காடிக்
கடிகொடென்றன் முன்றினில்வைகுங் கலிக்காழி
அடிகள்தம்மை அந்தமில்ஞான சம்பந்தன்
படிகொள்பாடல் வல்லவர்தம்மேற் பழிபோமே. கக

திருச்சிற்றம்பலம்

திருக்கழுக்குன்றம் - பண் - குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

தோடுடையானொரு காதில்தூய குழைதாழ
ஏடுடையான் தலைகலனாக இரந்துண்ணும்
நாடுடையான் நள்ளிருள்ஏம நடமாடும்
காடுடையான் காதல்செய்கோயில் கழுக்குன்றே. க

கேணவல்லான் கேழல்வெண்கொம்பு குறளாமை
பூணவல்லான் புரிசடைமேலோர் புனல்கொன்றை
பேணவல்லான் பெண்மகள்தன்னை யொருபாகம்
காணவல்லான் காதல்செய்கோயில் கழுக்குன்றே. உ

தேனகத்தார் வண்டதுவுண்ட திகழ்கொன்றை
தானகத்தார் தண்மதிசூடித் தலைமேலோர்
வானகத்தார் வையகத்தார்கள் தொழுதேத்தும்
கானகத்தான் காதல்செய்கோயில் கழுக்குன்றே. ஙு

துணையல்செய்தான் தூயவண்டியாழ்செய் சுடர்க்கொன்றை
பிணையல்செய்தான் பெண்ணின்நல்லாளை யொருபாகம்

இணையல்செய்யா இலங்கெயின்மூன்றும் எரியுண்ணக்
கணையல்செய்தான் காதல்செய்கோயில் கழுக்குன்றே. ௮

பையுடைய பாம்பொடுநீறு பயில்கின்ற
மெய்யுடையான் வெண்பிறைசூடி விரிகொன்றை
மையுடைய மாமிடற்றண்ணல் மறிசேர்ந்த
கையுடையான் காதல்செய்கோயில் கழுக்குன்றே. ௬

வெள்ளமெல்லாம் விரிசடைமேலோர் விரிகொன்றை
கொள்ளவல்லான் குரைகழலேத்துஞ் சிறுத்தொண்டர்
உள்ளமெல்லாம் உள்கிநின்றாங்கே உடனாடும்
கள்ளம்வல்லான் காதல்செய்கோயில் கழுக்குன்றே. ரு, எ

ஆதல்செய்தான் அரக்கர்தங்கோனை யருவரையின்
நோதல்செய்தான் நொடிவரையின்கண் விரலூன்றிப்
பேர்தல்செய்தான் பெண்மகள்தன்னோ டொருபாகம்
காதல்செய்தான் காதல்செய்கோயில் கழுக்குன்றே. அ

இடந்தபெம்மான் ஏனமதாயும் அனமாயும்
தொடர்ந்தபெம்மான் தூமதிசூடி வரையார்தம்
மடந்தைபெம்மான் வார்கழலோச்சிக் காலனைக்
கடந்தபெம்மான் காதல்செய்கோயில் கழுக்குன்றே. ௯

தேயநின்றான் திரிபுரங்கங்கை சடைமேலே
பாயநின்றான் பலர்புகழ்ந்தேத்த வுலகெல்லாம்
சாயநின்றான் வன்சமண்குண்டர் சாக்கியர்
காயநின்றான் காதல்செய்கோயில் கழுக்குன்றே. ௧௦

கண்ணுதலான் காதல்செய்கோயில் கழுக்குன்றை
நண்ணியசீர் ஞானசம்பந்தன் தமிழ்மாலை
பண்ணியல்பாற் பாடியபத்தும் இவைவல்லார்
புண்ணியராய் விண்ணவரோடும் புகுவாரே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருப்புகலி - பண் - வியாழக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

ஆடல் அரவசைத்தான் அருமாமறை தான்விரித்தான் கொன்றை
சூடிய செஞ்சடையான் சுடுகா டமர்ந்தபிரான்
ஏடவிழ் மாமலையாள் ஒருபாகம் அமர்ந்தடியார்ஏத்த
ஆடிய எம்மிறையூர் புகலிப் பதியாமே. ௧

ஏலம் மலிகுழலார் இசைபாடி யெழுந்தருளாற் சென்று
சோலை மலிசுனையிற் குடைந்தாடித் துதிசெய்ய
ஆலை மலிபுகைபோ யண்டர்வானத்தை மூடிநின்று நல்ல
மாலை யதுசெய்யும் புகலிப் பதியாமே. ௨

ஆறணி செஞ்சடையான் அழகார்புரம் மூன்றும்அன்று வேவ
நீறணி யாகவைத்த நிமிர்புன்சடை யெம்இறைவன்
பாறணி வெண்தலையிற் பகலேபலி யென்றுவந்து நின்ற
வேறணி கோலத்தினான் விரும்பும் புகலியதே. ௩

வெள்ள மதுசடைமேற் கரந்தான் விரவார்புரங்கள் மூன்றுங்
கொள்ள எரிமடுத்தான் குறைவின்றி யுறைகோயில்
அள்ளல் விளைகழனி யழகார்விரைத் தாமரைமேல் அன்னம்
புள்ளினம் வைகியெழும் புகலிப் பதிதானே. ௪

சூடும் மதிச்சடைமேற் சுரும்பார்மலர்க் கொன்றைதுன்ற நட்டம்
ஆடும் அமர்பிரான் அழகாருமை யோடும்உடன்
வேடு படநடந்த விகிர்தன் குணம்பரவித் தொண்டர்
பாட இனிதுறையும் புகலிப் பதியாமே. ௫

மைந்தணி சோலையின்வாய் மதுப்பாய்வரி வண்டினங்கள் வந்து
நந்திசை பாடநடம் பயில்கின்ற நம்பன்இடம்
அந்திசெய் மந்திரத்தால் அடியார்கள் பரவியெழ விரும்பும்
புந்திசெய் நான்மறையோர் புகலிப் பதிதானே. ௬

மங்கையோர் கூறுகந்த மழுவாளன் வார்சடைமேல் திங்கள்
கங்கை தனைக்கரந்த கறைக்கண்டன் கருதும்இடம்
செங்கயல் வார்கழனி திகழும் புகலிதனைச் சென்றுதம்
அங்கையி னால்தொழுவார் அவலம் அறியாரே. ௭

வல்லிய நுண்இடையாள் உமையாள் விருப்பனவன் நண்ணும்
நல்லிட மென்றறியான் நலியும் விறலரக்கன்
பல்லொடு தோள்நெரிய விரலூன்றிப் பாடலுமே கைவாள்
ஒல்லை அருள்புரிந்தான் உறையும் புகலியதே. அ

தாதலர் தாமரைமேல் அயனுந் திருமாலுந் தேடி
ஓதியுங் காண்பரிய வுமைகோன் உறையுமிடம்
மாதவி வான்வகுளம் மலர்ந்தெங்கும் விரைதோய வாய்ந்த
போதலர் சோலைகள்சூழ் புகலிப் பதிதானே. கூ

வெந்துவர் மேனியினர் விரிகோவணம் நீத்தார் சொல்லும்
அந்தர ஞானமெல்லாம் அவையோர் பொருளென்னேல்
வந்தெதி ரும்புரமூன் றெரித்தான் உறைகோயில் வாய்ந்த
புந்தியி னார்பயிலும் புகலிப் பதிதானே. க0

வேதமோர் கீதம்உணர் வாணர்தொழு தேத்த மிகுவாசப்
போதனைப் போன்மறையோர் பயிலும் புகலிதன்னுள்
நாதனை ஞானம்மிகு சம்பந்தன் தமிழ்மாலை நாவில்
ஓதவல் லார்உலகில் உறுநோய் களைவாரே. கக

திருச்சிற்றம்பலம்

திருஆரூர் - பண் - வியாழக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

பாடலன் நான்மறையன் படிபட்ட கோலத்தன் திங்கள்
சூடலன் மூவிலைய சூலம் வலனேந்திக்
கூடலர் மூவெயிலும் எரியுண்ணக் கூரெரிகொண் டெல்லி
ஆடலன் ஆதிரையன் ஆரூர் அமர்ந்தானே. க

சோலையில் வண்டினங்கள் சுரும்போ டிசைமுரலச் சூழ்ந்த
ஆலையின் வெம்புகைபோய் முகில்தோயும் ஆரூரில்
பாலொடு நெய்தயிரும் பயின்றாடும் பரமேட்டி பாதம்
காலையும் மாலையும்போய்ப் பணிதல் கருமமே. உ

உள்ளமோர் இச்சையினால் உகந்தேத்தித் தொழுமின்தொண்டீர் மெய்
கள்ளம் ஒழிந்திடுமின் கரவா திருபொழுதும் [யே

வெள்ளமோர் வார்சடைமேற் கரந்திட்ட வெள்ளேற்றான் மேய
அள்ளல் அகன்கழனி ஆரூர் அடைவோமே. ௩

வெந்தற வெண்மழுவாள் படையான் மணிமிடற்றான் அரையின்
ஐந்தலை யாடரவம் அசைத்தான் அணியாரூர்ப்
பைந்தளிர்க் கொன்றையந்தார்ப் பரமன் அடிபரவப் பாவம்
நைந்தறும் வந்தணையும் நாடொறும் நல்லனவே. ௪

வீடு பிறப்பெளிதாம் அதனை வினவுதிரேல் வெய்ய
காடிட மாகநின்று கனலேந்திக் கைவீசி
ஆடும் அவிர்சடையான் அவன்மேய ஆரூரைச் சென்று
பாடுதல் கைதொழுதல் பணிதல் கருமமே. ௫

கங்கையோர் வார்சடைமேற் கரந்தான் கிளிமழலைக் கேடில்
மங்கையோர் கூறுடையான் மறையான் மழுவேந்தும்
அங்கையினான் அடியே பரவி யவன்மேய ஆரூர்
தங்கையினால் தொழுவார் தடுமாற் றறுப்பாரே. ௬

நீறணி மேனியனாய் நிரம்பா மதிசூடி நீண்ட
ஆறணி வார்சடையான் ஆரூர் இனிதமர்ந்தான்
சேறணி மாமலர்மேற் பிரமன் சிரமரிந்த செங்கண்
ஏறணி வெல்கொடியான் அவனெம் பெருமானே. ௭, ௮

வல்லியந் தோலுடையான் வளர்திங்கட் கண்ணியினான் வாய்த்த
நல்லியல் நான்முகத்தோன் தலையின் அறவேற்றான்
அல்லியங் கோதைதன்னை யாகத் தமர்ந்தருளி ஆரூர்ப்
புல்லிய புண்ணியனைத் தொழுவாரும் புண்ணியரே. ௯

செந்தவர் ஆடையினார் உடைவிட்டு நின்றுழல்வார் சொன்ன
இந்திர ஞாலமொழிந் தின்புற வேண்டுதிரேல்
அந்தர மூவெயிலும் அரணம் எரியூட்டி ஆரூர்த்
தந்திர மாவுடையான் அவனெந் தலைமையனே. ௧௦

நல்ல புனற்புகலித் தமிழ்ஞான சம்பந்தன் நல்ல
அல்லி மலர்க்கழனி ஆரூர் அமர்ந்தானை
வல்லதோ ரிச்சையினால் வழிபாடிவை பத்தும் வாய்க்கச்
சொல்லுதல் கேட்டல்வல்லார் துன்பந் துடைப்பாரே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருஊறல் - பண் - வியாழக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

மாறில் அவுணர் அரணம் அவைமாயவோர் வெங்கணையா லன்று
நீறெழ எய்தஎங்கள் நிமலன் இடம்வினவில்
தேறல் இரும்பொழிலுந் திகழ்செங்கயல் பாய்வயலுஞ் சூழ்ந்த
ஊறல் அமர்ந்தபிரான் ஒலியார்கழல் உள்குதுமே. க

மத்த மதக்கரியை மலையான்மகள் அஞ்சஅன்று கையால்
மெத்த உரித்தஎங்கள் விமலன் விரும்புமிடம்
தொத்தல ரும்பொழில்சூழ் வயல்சேர்ந்தொளிர் நீலம்நாளும் நயனம்
ஒத்தல ருங்கழனித் திருவூறலை உள்குதுமே. உ

ஏன மருப்பினொடும் எழிலாமையும் பூண்டழகார் நன்றும்
கானமர் மான்மறிக்கைக் கடவுள் கருதுமிடம்
வான மதிதடவும் வளர்சோலைகள் சூழ்ந்தழகார் நம்மை
ஊனம் அறுத்தபிரான் திருவூறலை உள்குதுமே. ங

நெய்யணி மூவிலைவேல் நிறைவெண்மழு வும்அனலும் அன்று
கையணி கொள்கையினான் கடவுள் இடம்வினவில்
மையணி கண்மடவார் பலர்வந் திறைஞ்சமன்னி நம்மை
உய்யும் வகைபுரிந்தான் திருவூறலை உள்குதுமே. ச

எண்டிசை யோர்மகிழ எழில்மாலையும் போனகமும் பண்டு
சண்டி தொழஅளித்தான் அவன்தாழும் இடம்வினவில்
கொண்டல்கள் தங்குபொழிற் குளிர்பொய்கை கள்சூழ்ந்து நஞ்சை
உண்டபி ரான்அமருந் திருவூறலை உள்குதுமே. ரு, சு, எ

கறுத்த மனத்தினொடுங் கடுங்காலன்வந் தெய்துதலுங் கலங்கி
மறுக்குறும் மாணிக்கருள மகிழ்ந்தா னிடம்வினவில்
செறுத்தெழு வாளரக்கன் சிரந்தோளும் மெய்யுந்நெரிய அன்று
ஒறுத்தருள் செய்தபிரான் திருவூறலை உள்குதுமே. அ

நீரின் மிசைத்துயின்றோன் நிறைநான் முகனும்அறியா தன்று
தேரும் வகைநிமிர்ந்தான் அவன்சேரும் இடம்வினவில்
பாரின் மிசையடியார் பலர்வந் திறைஞ்சமகிழ்ந் தாகம்
ஊரும் அரவசைத்தான் திருவூறலை உள்குதுமே. க

பொன்னியல் சீவரத்தார் புளித்தட்டையர் மோட்டமணர் குண்டர்
என்று மிவர்க்கருளா ஈசனிடம் வினவில்
தென்னென வண்டினங்கள் செறியார்பொழில் சூழ்ந்தழகார் தன்னை
உன்ன வினைகெடுப்பான் திருவூறலை உள்குதுமே. க0

கோட லிரும்புறவிற் கொடிமாடக் கொச்சையர்மன் மெச்ச
ஓடு புனல்சடைமேற் கரந்தான் திருவூறல்
நாட லரும்புகழான் மிகுஞானசம் பந்தன்சொன்ன நல்ல
பாடல்கள் பத்தும்வல்லார் பரலோகத் திருப்பாரே. கக

திருச்சிற்றம்பலம்

திருக்கோடிமாடச்செங்குன்றூர் - பண் - வியாழக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

வெந்தவெண் ணீறணிந்து விரிநூல் திகழ்மார்பின் நல்ல
பந்தண வும்விரலாள் ஒருபாகம் அமர்ந்தருளிக்
கொந்தண வும்பொழில்சூழ் கொடிமாடச் செங்குன்றூர் நின்ற
அந்தண னைத்தொழுவார் அவலம் அறுப்பாரே. க

அலைமலி தண்புனலோ டரவஞ் சடைக்கணிந் தாகம்
மலைமகள் கூறுடையான் மலையார் இளவாழைக்
குலைமலி தண்பொழில்சூழ் கொடிமாடச் செங்குன்றூர் நின்ற
தலைமக னைத்தொழுவார் தடுமாற் றறுப்பாரே. உ

பாலன நீறுபுனை திகழ்மார்பிற் பல்வளைக்கை நல்ல
ஏல மலர்க்குழலாள் ஒருபாகம் அமர்ந்தருளிக்
கோல மலர்ப்பொழில்சூழ் கொடிமாடச் செங்குன்றூர் மல்கும்
நீலனன் மாமிடற்றான் கழலேத்தல் நீதியே. ௩

வாருறு கொங்கைநல்ல மடவாள் திகழ்மார்பில் நண்ணும்
காருறு கொன்றையொடுங் கதநாகம் பூண்டருளிச்
சீருறும் அந்தணர்வாழ் கொடிமாடச் செங்குன்றூர் நின்ற
நீருறு செஞ்சடையான் கழலேத்தல் நீதியே. ச

பொன்றிகழ் ஆமையொடு புரிநூல் திகழ்மார்பில் நல்ல
பன்றியின் கொம்பணிந்து பணைத்தோளியோர் பாகமாகக்

குன்றன மாளிகைசூழ் கொடிமாடச் செங்குன்றூர் வானில்
மின்திகழ் செஞ்சடையான் கழலேத்தல் மெய்ப்பொருளே. ரு

ஓங்கிய மூவிலைநற் சூல மொருகையன் சென்னி
தாங்கிய கங்கையொடு மதியஞ் சடைக்கணிந்து
கோங்கண வும்பொழில்சூழ் கொடிமாடச் செங்குன்றூர் வாய்ந்த
பாங்கன தாள்தொழுவார் வினையாய பற்றறுமே. சு

நீடலர் கொன்றையொடு நிமிர்புன் சடைதாழ வெள்ளை
வாட லுடைதலையிற் பலிகொள்ளும் வாழ்க்கையனுக்
கோடல் வளம்புறவிற் கொடிமாடச் செங்குன்றூர் நின்ற
சேடன தாள்தொழுவார் வினையாய தேயுமே. எ

மத்தம்நன் மாமலரும் மதியும்வளர் கொன்றையுடன் துன்று
தொத்தலர் செஞ்சடைமேல் துதைய வுடன்சூடிக்
கொத்தலர் தண்பொழில்சூழ் கொடிமாடச் செங்குன்றூர் மேய
தத்துவ னைத்தொழுவார் தடுமாற் றறுப்பாரே. அ

செம்பொனின் மேனியனும் பிரமன்திரு மாலுந்தேட நின்ற
அம்பவ ளத்திரள்போல் ஒளியாய ஆதிபிரான்
கொம்பண வும்பொழில்சூழ் கொடிமாடச் செங்குன்றூர் மேய
நம்பன தாள்தொழுவார் வினையாய நாசமே. கூ

போதியர் பிண்டியரென் றிவர்கள் புறங்கூறும் பொய்ந்நூல்
ஓதிய கட்டுரைகேட் டுழல்வீர் வரிக்குயில்கள்
கோதிய தண்பொழில்சூழ் கொடிமாடச் செங்குன்றூர் நின்ற
வேதிய னைத்தொழநும் வினையான வீடுமே. க0

அலைமலி தண்புனல்சூழ்ந் தழகார் புகலிந்நகர் பேணும்
தலைமக னாகிநின்ற தமிழ்ஞான சம்பந்தன்
கொலைமலி மூவிலையான் கொடிமாடச் செங்குன்றா ரேத்தும்
நலம்மலி பாடல்வல்லார் வினையான நாசமே. கக

திருச்சிற்றம்பலம்

திருப்பாதாளீச்சரம் - பண் - வியாழக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

மின்னியல் செஞ்சடைமேல் விளக்கும்மதி மத்தமொடு நல்ல
பொன்னியல் கொன்றையினன் புனல்சூடிப் பொற்பமரும்
அன்னம் அனநடையாள் ஒருபாகத் தமர்ந்தருளி நாளும்
பன்னிய பாடலினன் உறைகோயில் பாதாளே. க

நீடலர் கொன்றையொடு நிரம்பா மதிசூடி வெள்ளைத்
தோடமர் காதில்நல்ல குழையான் சுடுநீற்றன்
ஆடர வம்பெருக அனலேந்திக் கைவீசி வேதம்
பாடலி னல்இனியான் உறைகோயில் பாதாளே. உ

நாகமும் வான்மதியுந் நலம்மல்கு செஞ்சடையான் சாமம்
போகநல் வில்வரையாற் புரமூன் றெரித்துகந்தான்
தோகைநன் மாமயில்போல் வளர்சாயல் தூமொழியைக் கூடப்
பாகமும் வைத்துகந்தான் உறைகோயில் பாதாளே. ௩

அங்கமும் நான்மறையும் அருள்செய் தழகார்ந்த அஞ்சொல்
மங்கையோர் கூறுடையான் மறையோன் உறைகோயில்
செங்கயல் நின்றுகளுஞ் செறுவில் திகழ்கின்ற சோதிப்
பங்கயம் நின்றலரும் வயல்சூழ்ந்த பாதாளே. ச

பேய்பல வுந்நிலவப் பெருங்காடரங் காகவுன்னி நின்று
தீயொடு மான்மறியும் மழுவுந் திகழ்வித்துத்
தேய்பிறை யும்அரவும் பொலிகொன்றைச் சடைதன்மேற் சேரப்
பாய்புன லும்உடையான் உறைகோயில் பாதாளே. ரு

கண்ணமர் நெற்றியினன் கமழ்கொன்றைச் சடைதன்மேல் நின்றும்
விண்ணியல் மாமதியும் உடன்வைத் தவன்விரும்பும்
பெண்ணமர் மேனியினன் பெருங்கா டரங்காக ஆடும்
பண்ணியல் பாடலினன் உறைகோயில் பாதாளே. சு

விண்டலர் மத்தமொடு மிளிரும்இள நாகம்வன் னிதிகழ்
வண்டலர் கொன்றைநகு மதிபுல்கு வார்சடையான்
விண்டவர் தம்புரம்மூன் றெரிசெய்துரை வேதநான் கும்அவை
பண்டிசை பாடலினன் உறைகோயில் பாதாளே. எ

மல்கிய நுண்ணிடையாள் உமைநங்கை மறுகஅன் றுகையால்
தொல்லை மலையெடுத்த அரக்கன்தலை தோள்நெரித்தான்
கொல்லை விடையுகந்தான் குளிர்திங்கள் சடைக்க ணிந்தோன்
பல்லிசை பாடலினான் உறைகோயில் பாதாளே. அ

தாமரை மேலயனும் அரியுந்தம தாள்வினையால் தேடிக்
காமனை வீடுவித்தான் கழல்காண்பில ராயகன்றூர்
பூமரு வுங்குழலாள் உமைநங்கை பொருந்தியிட்ட நல்ல
பாமரு வுங்குணத்தான் உறைகோயில் பாதாளே. கூ

காலையில் உண்பவருஞ் சமண்கையருங் கட்டுரை விட்டன்
றாலவிடம் நுகர்ந்தான் அவன்றன் அடி யேபரவி
மாலையில் வண்டினங்கள் மதுவுண் டிசைமுரல வாய்த்த
பாலையாழ்ப் பாட்டுகந்தான் உறைகோயில் பாதாளே. க0

பன்மலர் வைகுபொழில் புடைசூழ்ந்த பாதாளைச் சேரப்
பொன்னியன் மாடம்மல்கு புகலிந்நகர் மன்னன்
தன்னொளி மிக்குயர்ந்த தமிழ்ஞான சம்பந்தன் சொன்ன
இன்னிசை பத்தும்வல்லார் எழில்வானத் திருப்பாரே. கக

திருச்சிற்றம்பலம்

திருச்சிரபுரம் - பண் - வியாழக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

வாருறு வனமுலை மங்கைபங்கன்
நீருறு சடைமுடி நிமலனிடம்
காருறு கடிபொழில் சூழ்ந்தழகார்
சீருறு வளவயற் சிரபுரமே. க

அங்கமொ டருமறை அருள்புரிந்தான்
திங்களொ டரவணி திகழ்முடியன்
மங்கையொ டினிதுறை வளநகரஞ்
செங்கயல் மிளிர்வயற் சிரபுரமே. உ

பரிந்தவன் பன்முடி யமரர்க்காகித்
திரிந்தவர் புரமவை தீயின்வேவ

வரிந்தவெஞ் சிலைபிடித் தடுசரத்தைத்
தெரிந்தவன் வளநகர் சிரபுரமே. ௩

நீறணி மேனியன் நீள்மதியோ
டாறணி சடையினன் அணியிழையோர்
கூறணிந் தினிதுறை குளிர்நகராஞ்
சேறணி வளவயற் சிரபுரமே. ௪

அரும்திறல் அவுணர்கள் அரண் அழியச்
சரம்துரந் தெரிசெய்த சங்கரனூர்
குருந்தொடு கொடிவிடும் மாதவிகள்
திருந்திய புறவணி சிரபுரமே. ௫

கலையவன் மறையவன் காற்றொடுதீ
மலையவன் விண்ணொடு மண்ணும்அவன்
கொலையவன் கொடிமதில் கூட்டழித்த
சிலையவன் வளநகர் சிரபுரமே. ௬

வானமர் மதியொடு மத்தஞ்சூடித்
தானவர் புரமெய்த சைவனிடம்
கானமர் மடமயில் பெடைபயிலுந்
தேனமர் பொழிலணி சிரபுரமே. ௭

மறுத்தவர் திரிபுரம் மாய்ந்தழியக்
கறுத்தவன் காரரக் கன்முடிதோள்
இறுத்தவன் இருஞ்சினக் காலனைமுன்
செறுத்தவன் வளநகர் சிரபுரமே. ௮

வண்ணநன் மலருறை மறையவனுங்
கண்ணனுங் கழல்தொழக் கனலுருவாய்
விண்ணுற வோங்கிய விமலனிடம்
திண்ணநன் மதிலணி சிரபுரமே. ௯

வெற்றரை யுழல்பவர் விரிதுகிலார்
கற்றிலர் அறவுரை புறனுரைக்கப்
பற்றலர் திரிபுரம் மூன்றும்வேவச்
செற்றவன் வளநகர் சிரபுரமே. ௧௦

அருமறை ஞானசம் பந்தன்அந்தண்
சிரபுர நகருறை சிவனடியைப்
பரவிய செந்தமிழ் பத்தும்வல்லார்
திருவொடு புகழ்மல்கு தேசினரே. கக

திருச்சிற்றம்பலம்

திருஇடைமருதூர் - பண் - வியாழக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

மருந்தவன் வானவர் தானவர்க்கும்
பெருந்தகை பிறவினொ டிறவுமானன்
அருந்தவ முனிவரொ டால்நீழற்கீழ்
இருந்தவன் வளநகர் இடைமருதே. க

தோற்றவன் கேடவன் துணைமுலையாள்
கூற்றவன் கொல்புலித் தோலசைத்த
நீற்றவன் நிறைபுனல் நீள்சடைமேல்
ஏற்றவன் வளநகர் இடைமருதே. உ

படையுடை மழுவினன் பால்வெண்ணீற்றன்
நடைநவில் ஏற்றினன் ஞாலமெல்லாம்
முடைதலை யிடுபலி கொண்டுழல்வான்
இடைமரு தினிதுறை யெம்மிறையே. ங

பணைமுலை யுமையொரு பங்கன்ஒன்னார்
துணைமதில் மூன்றையுஞ் சுடரின்மூழ்கக்
கணைதுரந் தடுதிறற் காலற்செற்ற
இணையிலி வளநகர் இடைமருதே. ச

பொழிலவன் புயலவன் புயலியக்குந்
தொழிலவன் துயரவன் துயரகற்றும்
கழலவன் கரியுரி போர்த்துகந்த
எழிலவன் வளநகர் இடைமருதே. ரு

நிறையவன் புனலொடு மதியும்வைத்த
பொறையவன் புகழவன் புகழநின்ற

மறையவன் மறிகடல் நஞ்சையுண்ட
இறையவன் வளநகர் இடைமருதே. ௬

நனிவளர் மதியொடு நாகம்வைத்த
பனிமலர்க் கொன்றையம் படர்சடையன்
முனிவரொ டமரர்கள் முறைவணங்க
இனிதுறை வளநகர் இடைமருதே. ௭

தருக்கின அரக்கன தாளுந்தோளும்
நெரித்தவன் நெடுங்கைமா மதகரிஅன்
றுரித்தவன் ஒன்னலர் புரங்கள்மூன்றும்
எரித்தவன் வளநகர் இடைமருதே. ௮

பெரியவன் பெண்ணினொ டாணுமானான்
வரியரா வணைமறி கடல்துயின்ற
கரியவன் அலரவன் காண்பரிய
எரியவன் வளநகர் இடைமருதே. ௯

சிந்தையில் சமணொடு தேரர்சொன்ன
புந்தியில் உரையவை பொருள்கொளாதே
அந்தணர் ஓத்தினொ டரவம்ஓவா
எந்தைதன் வளநகர் இடைமருதே. ௧௦

இலைமலி பொழிலிடை மருதிறையை
நலம்மிகு ஞானசம் பந்தன்சொன்ன
பலமிகு தமிழிவை பத்தும்வல்லார்
உலகுறு புகழினொ டோங்குவரே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருக்கடைமுடி - பண் - வியாழக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

அருத்தனை அறவனை அமுதனைநீர்
விருத்தனைப் பாலனை வினவுதிரேல்
ஒருத்தனை யல்லதிங் குலகமேத்தும்
கருத்தவன் வளநகர் கடைமுடியே. ௧

திரைபொரு திருமுடி திங்கள்விம்மும்
அரைபொரு புலியதள் அடிகளிடம்
திரையொடு நுரைபொரு தெண்சுனைநீர்
கரைபொரு வளநகர் கடைமுடியே. ௨

ஆலிள மதியினொ டரவுகங்கை
கோலவெண் ணீற்றனைத் தொழுதிறைஞ்சி
ஏலநன் மலரொடு விரைகமழும்
காலன வளநகர் கடைமுடியே. ௩

கொய்யணி நறுமலர்க் கொன்றையந்தார்
மையணி மிடறுடை மறையவனூர்
பையணி யரவொடு மான்மழுவாள்
கையணி பவன்இடங் கடைமுடியே. ௪

மறையவன் உலகவன் மாயம்அவன்
பிறையவன் புனலவன் அனலும்அவன்
இறையவன் எனவுல கேத்துங்கண்டம்
கறையவன் வளநகர் கடைமுடியே. ௫

படஅர வேரல்குல் பல்வளைக்கை
மடவர லாளையோர் பாகம்வைத்துக்
குடதிசை மதியது சூடுசென்னிக்
கடவுள்தன் வளநகர் கடைமுடியே. ௬

பொடிபுல்கு மார்பினிற் புரிபுல்குநூல்
அடிபுல்கு பைங்கழல் அடிகளிடம்
கொடிபுல்கு மலரொடு குளிர்சுனைநீர்
கடிபுல்கு வளநகர் கடைமுடியே. ௭

நோதல்செய் தாக்கனை நோக்கழியச்
சாதல்செய் தவன்அடி சரணெனலும்
ஆதர வருள்செய்த அடிகளவர்
காதல்செய் வளநகர் கடைமுடியே. ௮

அடிமுடி காண்கிலர் ஓரிருவர்
புடைபுல்கி யருளென்று போற்றிசைப்பச்

சடையிடைப் புனல்வைத்த சதுரனிடம்
கடைமுடி யதன்அயல் காவிரியே. கூ

மண்ணுதல் பறித்தலு மாயமிவை
எண்ணிய காலவை யின்பமல்ல
ஒண்ணுத லுமையையோர் பாகம்வைத்த
கண்ணுதல் வளநகர் கடைமுடியே. க0

பொன்திகழ் காவிரிப் பொருபுனல்சீர்
சென்றடை கடைமுடிச் சிவனடியை
நன்றுணர் ஞானசம் பந்தன்சொன்ன
இன்தமி ழிவைசொல இன்பமாமே. கக

திருச்சிற்றம்பலம்

திருச்சிவபுரம் - பண் - வியாழக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

இன்குர லிசைகெழும் யாழ்முரலத்
தன்கரம் மருவிய சதுரன்நகர்
பொன்கரை பொருபழங் காவிரியின்
தென்கரை மருவிய சிவபுரமே. க

அன்றடற் காலனைப் பாலனுக்காய்ப்
பொன்றிட வுதைசெய்த புனிதன்நகர்
வென்றிகொ ளெயிற்றுவெண் பன்றிமுன்னாள்
சென்றடி வீழ்தரு சிவபுரமே. உ

மலைமகன் மறுகிட மதகரியைக்
கொலைமல்க வுரிசெய்த குழகன்நகர்
அலைமல்கும் அரிசிலின் அதன்அயலே
சிலைமல்கும் மதிளணி சிவபுரமே. ௩

மண்புனல் அனலொடு மாருதமும்
விண்புனை மருவிய விகிர்தன்நகர்
பண்புனை குரல்வழி வண்டுகிண்டிச்
செண்பக மலர்பொழிற் சிவபுரமே. ச

வீறுநன் குடையவள் மேனிபாகம்
கூறுநன் குடையவன் குளிர்நகர்தான்
நாறுநன் குரவிரி வண்டுகிண்டித்
தேறலுண் டெழுதரு சிவபுரமே. ரு

மாறெதிர் வருதிரி புரமெரித்து
நீறது வாக்கிய விமலன்நகர்
நாறுடை நடுபவர் உழவரொடும்
சேறுடை வயலணி சிவபுரமே. சு

ஆவிலைந் தமர்ந்தவன் அரிவையொடு
மேவிநன் கிருந்ததொர் வியன்நகர்தான்
பூவில்வண் டமர்தரு பொய்கையன்னச்
சேவல்தன் பெடைபுல்கு சிவபுரமே. எ

எழில்மலை யெடுத்தவல் இராவணன்தன்
முழுவலி யடக்கிய முதல்வன்நகர்
விழவினில் எடுத்தவெண் கொடிமிடைந்து
செழுமுகில் அடுக்கும்வண் சிவபுரமே. அ

சங்கள வியகையன் சதுர்முகனும்
அங்கள வறிவரி யவன்நகர்தான்
கங்குலும் பறவைகள் கமுகுதொறும்
செங்கனி நுகர்தரு சிவபுரமே. கூ

மண்டையிற் குண்டிகை மாசுதரும்
மிண்டரை விலக்கிய விமலன்நகர்
பண்டமர் தருபழங் காவிரியின்
தெண்டிரை பொருதெழு சிவபுரமே. க0

சிவனுறை தருசிவ புரநகரைக்
கவுணியர் குலபதி காழியர்கோன்
தவம்மல்கு தமிழிவை சொல்லவல்லார்
நவமொடு சிவகதி நண்ணுவரே. கக

திருச்சிற்றம்பலம்

திருவல்லம் - பண் - வியாழக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

எரித்தவன் முப்புரம் எரியின் மூழ்கத்
தரித்தவன் கங்கையைத் தாழ்ச டைமேல்
விரித்தவன் வேதங்கள் வேறு வேறு
தெரித்தவன் உறைவிடந் திருவல் லமே. க

தாயவன் உலகுக்குத் தன்னொப் பிலாத்
தூயவன் தூமதி சூடி யெல்லாம்
ஆயவன் அமரர்க்கும் முனிவர் கட்கும்
சேயவன் உறைவிடந் திருவல் லமே. உ

பார்த்தவன் காமனைப் பண்ப ழியப்
போர்த்தவன் போதகத் தின்உரிவை
ஆர்த்தவன் நான்முகன் தலையை யன்று
சேர்த்தவன் உறைவிடந் திருவல் லமே. ங

கொய்தஅம் மலரடி கூடு வார்தம்
மைதவழ் திருமகள் வணங்க வைத்துப்
பெய்தவன் பெருமழை யுலகம் உய்யச்
செய்தவன் உறைவிடந் திருவல் லமே. ச

சார்ந்தவர்க் கின்பங்கள் தழைக்கும் வண்ணம்
நேர்ந்தவன் நேரிழை யோடுங் கூடித்
தேர்ந்தவர் தேடுவார் தேடச் செய்தே
சேர்ந்தவன் உறைவிடந் திருவல் லமே. ரு

பதைத்தெழு காலனைப் பாதம் ஒன்றால்
உதைத்தெழு மாமுனிக் குண்மை நின்று
விதிர்த்தெழு தக்கன்றன் வேள்வியன்று
சிதைத்தவன் உறைவிடந் திருவல் லமே. சு, எ

இகழ்ந்தரு வரையினை யெடுக்க லுற்றாங்
ககழ்ந்தவல் அரக்கனை யடர்த்த பாதம்
நிகழ்ந்தவர் நேடுவார் நேடச் செய்தே
திகழ்ந்தவன் உறைவிடந் திருவல் லமே. அ

பெரியவன் சிறியவர் சிந்தை செய்ய
அரியவன் அருமறை யங்க மாஞன்
கரியவன் நான்முகன் காண வொண்ணுத்
தெரியவன் வளநகர் திருவல் லமே. ௯

அன்றிய அமணர்கள் சாக்கி யர்கள்
குன்றிய அறவுரை கூறு வண்ணம்
வென்றவன் புலனைந்தும் விளங்க எங்கும்
சென்றவன் உறைவிடந் திருவல் லமே. ௧௦

கற்றவர் திருவல்லங் கண்டு சென்று
நற்றமிழ் ஞானசம் பந்தன் சொன்ன
குற்றமில் செந்தமிழ் கூற வல்லார்
பற்றுவர் ஈசன்பொற் பாதங்களே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருமாற்பேறு - பண் - வியாழக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

குருந்தவன் குருகவன் கூர்மையவன்
பெருந்தகை பெண்ணவன் ஆணுமவன்
கருந்தடம் மலர்க்கண்ணி காதல்செய்யும்
மருந்தவன் வளநகர் மாற்பேறே. ௧

பாறணி வெண்டலை கையிலேந்தி
வேறணி பலிகொளும் வேட்கையனுய்
நீறணிந் துமையொரு பாகம்வைத்த
மாறிலி வளநகர் மாற்பேறே. ௨

கருவுடை யாருல கங்கள்வேவச்
செருவிடை யேறியுஞ் சென்றுநின்
றுருவுடை யாளுமை யாளுந்தானும்
மருவிய வளநகர் மாற்பேறே. ௩

தலையவன் தலையணி மாலைபூண்டு
கொலைநவில் கூற்றினைக் கொன்றுகந்தான்

கலைநவின் றான்கயி லாயம் என்னும்
மலையவன் வளநகர் மாற்பேறே. ௪

துறையவன் தொழிலவன் தொல்லுயிர்க்கும்
பிறையணி சடைமுடிப் பெண்ணோர்பாகன்
கறையணி மிடற்றண்ணல் காலற்செற்ற
மறையவன் வளநகர் மாற்பேறே. ௫

பெண்ணின்நல் லாளையோர் பாகம்வைத்துக்
கண்ணினாற் காமனைக் காய்ந்தவன்றன்
விண்ணவர் தானவர் முனிவரொடு
மண்ணவர் வணங்குநன் மாற்பேறே. ௬,௭

நீதிலா மலையெடுத் தவ்வரக்கன்
நீதியால் வேதகீ தங்கள்பாட
ஆதியா னாகிய அண்ணல் எங்கள்
மாதிதன் வளநகர் மாற்பேறே. ௮

செய்யதண் தாமரைக் கண்ணனொடும்
கொய்யணி நறுமலர் மேலயனும்
ஐயன்நன் சேவடி யதனையுள்க
மையல்செய் வளநகர் மாற்பேறே. ௯

குளித்துணா அமணர்குண் டாக்கரென்றும்
களித்துநன் கழலடி காணலுற்றார்
முளைத்தவெண் மதியினொ டரவஞ்சென்னி
வளைத்தவன் வளநகர் மாற்பேறே. ௰

அந்தமில் ஞானசம் பந்தன்நல்ல
செந்திசை பாடல்செய் மாற்பேற்றைச்
சந்தம்இன் தமிழ்கள்கொண் டேத்தவல்லார்
எந்தைதன் கழலடி யெய்துவரே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருஇராமனதீச்சரம் - பண் - வியாழக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

சங்கொளிர் முன்கையர் தம்மிடையே
அங்கிடு பலிகொளும் அவன்கோபப்
பொங்கர வாடலோன் புவனியோங்க
எங்குமன் இராமன தீச்சரமே. க

சந்தநன் மலரணி தாழ்சடையன்
தந்தம தத்தவன் தாதையோதான்
அந்தமில் பாடலோன் அழகன்நல்ல
எந்தவன் இராமன தீச்சரமே. உ

தழைமயி லேறவன் தாதையோதான்
மழைபொழி சடையவன் மன்னுகாதில்
குழையது இலங்கிய கோலமார்பின்
இழையவன் இராமன தீச்சரமே. ௩

சத்தியு ளாதியோர் தையல்பங்கன்
முத்திய தாகிய மூர்த்தியோதான்
அத்திய கையினில் அழகுசூலம்
வைத்தவன் இராமன தீச்சரமே. ச

தாழ்ந்தகு ழற்சடை முடியதன்மேல்
தோய்ந்த இளம்பிறை துளங்குசென்னிப்
பாய்ந்த கங்கையொடு படஅரவம்
ஏய்ந்தவன் இராமன தீச்சரமே. ரு

சரிகுழல் இலங்கிய தையல்காணும்
பெரியவன் காளிதன் பெரியகூத்தை
அரியவன் ஆடலோன் அங்கையேந்தும்
எரியவன் இராமன தீச்சரமே. சு

மாறிலா மாதொரு பங்கன்மேனி
நீறது ஆடலோன் நீள்சடைமேல்
ஆறது சூடுவான் அழகன்விடை
ஏறவன் இராமன தீச்சரமே. எ

தடவரை யரக்கனைத் தலைநெரித்தோன்
படஅர வாட்டிய படர்சடையன்
நடமது ஆடலான் நான்மறைக்கும்
இடமவன் இராமன தீச்சரமே. அ

தனமணி தையல்தன் பாகன்தன்னை
அனம்அணி அயன்அணி முடியுங்காணான்
பனம்அணி அரவரி பாதங்காணான்
இனமணி யிராமன தீச்சரமே. கூ

தறிபோலாஞ் சமணர்சாக் கியர்சொற்கொளேல்
அறிவோரால் நாமம் அறிந்துரைமின்
மறிகையோன் தன்முடி மணியார்கங்கை
எறிபவன் இராமன தீச்சரமே. க0

தேன்மலர்க் கொன்றையோன்* *
* * * *
* * * *
* * முந்தமக் கூனமன்றே. கக

திருச்சிற்றம்பலம்

திருநீலகண்டம்

பொது - பண் - வியாழக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

அவ்வினைக் கிவ்வினை யாமென்று சொல்லும் அஃதறிவீர்
உய்வினை நாடா திருப்பதும் உந்தமக் கூனமன்றே
கைவினை செய்தெம் பிரான்கழல் போற்றுதும் நாம்அடியோம்
செய்வினை வந்தெமைத் தீண்டப்பெ றாதிரு நீலகண்டம். க

காவினை யிட்டுங் குளம்பல தொட்டுங் கனிமனத்தால்
ஏவினை யால்எயில் மூன்றெரித் தீரென் றிருபொழுதும்
பூவினைக் கொய்து மலரடி போற்றுதும் நாமடியோம்
தீவினை வந்தெமைத் தீண்டப்பெ றாதிரு நீலகண்டம். உ

மூலத்தடம் மூழ்கிய போகங் களும்மற் றெவையும்எல்லாம்
விலைத்தலை யாவணங் கொண்டெமை யாண்ட விரிசடையீர்

இலைத்தலைச் சூலமுந் தண்டும் மழுவும் இவையுடையீர்
சிலைத்தெமைத் தீவினை தீண்டப்பெ றாதிரு நீலகண்டம். ங

விண்ணுல காள்கின்ற விச்சா தரர்களும் வேதியரும்
புண்ணிய ரென்றிரு போதுந் தொழப்படும் புண்ணியரே
கண்ணிமை யாதன மூன்றுடை யீருங் கழலடைந்தோம்
திண்ணிய தீவினை தீண்டப்பெ றாதிரு நீலகண்டம். ச

மற்றிணை யில்லா மலைதிரண் டன்னதிண் தோளுடையீர்
கிற்றெமை யாட்கொண்டு கேளா தொழிவதுந் தன்மைகொல்லோ
சொற்றுணை வாழ்க்கை துறந்துந் திருவடி யேயடைந்தோம்
செற்றெமைத் தீவினை தீண்டப்பெ றாதிரு நீலகண்டம். ரு

மறக்கும் மனத்தினை மாற்றியெம் ஆவியை வற்புறுத்திப்
பிறப்பில் பெருமான் திருந்தடிக் கீழ்ப்பிழை யாதவண்ணம்
பறித்த மலர்கொடு வந்துமை யேத்தும் பணியடியோம்
சிறப்பிலித் தீவினை தீண்டப்பெ றாதிரு நீலகண்டம். சு, எ

கருவைக் கழித்திட்டு வாழ்க்கை கடிந்துங் கழலடிக்கே
உருகி மலர்கொடு வந்துமை யேத்துதும் நாமடியோம்
செருவில் அரக்கனைச் சீரி லடர்த்தருள் செய்தவரே
திருவிலித் தீவினை தீண்டப்பெ றாதிரு நீலகண்டம். அ

நாற்ற மலர்மிசை நான்முகன் நாரணன் வாதுசெய்து
தோற்ற முடைய அடியும் முடியுந் தொடர்வரியீர்
தோற்றினுந் தோற்றுந் தொழுதுவணங்குதும் நாமடியோம்
சீற்றம தாம்வினை தீண்டப்பெ றாதிரு நீலகண்டம். ௯

சாக்கியப் பட்டுஞ் சமணுரு வாகி யுடையொழிந்தும்
பாக்கிய மின்றி யிருதலைப் போகமும் பற்றும்விட்டார்
பூக்கமழ் கொன்றைப் புரிசடை யீரடி போற்றுகின்றோம்
தீக்குழித் தீவினை தீண்டப்பெ றாதிரு நீலகண்டம். கo

பிறந்த பிறவியிற் பேணியெஞ் செல்வன் கழலடைவான்
இறந்த பிறவியுண் டாகில் இமையவர் கோன்அடிக்கண்
திறம்பயில் ஞானசம் பந்தன செந்தமிழ் பத்தும்வல்லார்
நிறைந்த வுலகினில் வானவர் கோனொடுங் கூடுவரே. கக

திருச்சிற்றம்பலம்

திருப்பிரமபுரம் - மொழிமாற்று. பண் - வியாழக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

காட தணிகலங் கார வம்பதி காலதனில்
தோட தணிகுவர் சுந்தரக் காதினில் தூச்சிலம்பர்
வேட தணிவர் விசயற் குருவம் வில்லுங்கொடுப்பர்
பீட தணிமணி மாடப் பிரம புரத்தாரே. க

கற்றைச் சடையது கங்கண முன்கையில் திங்கள்கங்கை
பற்றித்து முப்புரம் பார்படைத் தோன்தலை சுட்டதுபண்
டெற்றித்துப் பாம்பை யணிந்தது கூற்றை யெழில்விளங்கும்
வெற்றிச் சிலைமதில் வேணு புரத்தெங்கள் வேதியரே. உ

கூவிளங் கையது பேரி சடைமுடிக் கூட்டத்தது
தூவிளங் கும்பொடிப் பூண்டது பூசிற்றுத் துத்திநாகம்
ஏவிளங் குந்நுத லாளையும் பாகமும் உரித்தனர்இன்
பூவிளஞ் சோலைப் புகலியுள் மேவிய புண்ணியரே. ௩

உரித்தது பாம்பை யுடல்மிசை யிட்டதோர் ஒண்களிற்றை
எரித்ததொ ராமையை யின்புறப் பூண்டது முப்புரத்தைச்
செருத்தது சூலத்தை யேந்திற்றுத் தக்கனை வேள்விபன்னூல்
விரித்தவர் வாழ்தரு வெங்குரு வில்வீற் றிருந்தவரே. ச

கொட்டுவர் அக்கரை யார்ப்பது தக்கை குறுந்தாளன
விட்டுவர் பூதங் கலப்பில ரின்புக ழென்புலவின்
மட்டுவ ருந்தழல் சூடுவர் மத்தமும் ஏந்துவர்வான்
தொட்டுவ ருங்கொடித் தோணி புரத்துறை சுந்தரரே. ரு

சாத்துவர் பாசந் தடக்கையி லேந்துவர் கோவணந்தங்
கூத்தவர் கச்சுக் குலவிநின் றாடுவர் கொக்கிறகும்
போர்த்தவர் பல்படை பேயவை சூடுவர் பேரெழிலார்
பூத்தவர் கைதொழு பூந்தராய் மேவிய புண்ணியரே. சு

காலது கங்கை கற்றைச் சடையுள்ளாற் கழல்சிலம்பு
மாலது ஏந்தல் மழுவது பாகம் வளர்கொழுங்கோட்
டாலது வூர்வர் அடலேற் றிருப்பர் அணிமணிநீர்ச்
சேலது கண்ணியொர் பங்கர் சிரபுரம் மேயவரே. எ

நெருப்புரு வெள்விடை மேனியர் ஏறுவர் நெற்றியின்கண்
மருப்புறு வன்கண்ணர் தாதையைக் காட்டுவர் மாமுருகன்
விருப்புறு பாம்புக்கு மெய்த்தந்தை யார்விறல் மாதவர்வாழ்
பொருப்புறு மாளிகைத் தென்புற வத்தணி புண்ணியரே. அ

இலங்கைத் தலைவனை யேந்திற் றிறுத்த திரலையின்னாள்
கலங்கிய கூற்றுயிர் பெற்றது மாணி குமைபெற்றது
கலங்கிளர் மொந்தையி னாடுவர் கொட்டுவர் காட்டகத்துச்
சலங்கிளர் வாழ்வயற் சண்பையுள் மேவிய தத்துவரே. கூ

அடியிணை கண்டிலன் தாமரை யோன்மால் முடிகண்டிலன்
கொடியணி யும்புலி யேறுகந் தேறுவர் தோலுடுப்பர்
பிடியணி யுந்நடை யாள்வெற் பிருப்பதோர் கூறுடையர்
கடியணி யும்பொழிற் காழியுள் மேய கறைக்கண்டரே. க0

கையது வெண்குழை காதது சூலம் அமணர்புத்தர்
எய்துவர் தம்மை யடியவர் எய்தாரொர் ஏனக்கொம்பு
மெய்திகழ் கோவணம் பூண்ப துடுப்பது மேதகைய
கொய்தலர் பூம்பொழிற் கொச்சையுள் மேவிய கொற்றவரே. கக

கல்லுயர் கழுமல இஞ்சியுள் மேவிய கடவுள்தன்னை
நல்லுரை ஞானசம் பந்தன் ஞானத் தமிழ்நன்குணரச்
சொல்லிடல் கேட்டல் வல்லோர்தொல்லை வானவர் தங்களொடும்
செல்குவர் சீரரு ளாற்பெற லாஞ்சிவ லோகமதே. கஉ

திருச்சிற்றம்பலம்

திருப்பருப்பதம் - பண் - வியாழக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

சுடுமணி யுமிழ்நாகஞ் சூழ்தர அரைக்கசைத்தான்
இடுமணி யெழிலானை யேறலன் எருதேறி
விடமணி மிடறுடையான் மேவிய நெடுங்கோட்டுப்
படுமணி விடுசுடரார் பருப்பதம் பரவுதுமே. க

நோய்புல்கு தோல்திரைய நரைவரு நுகருடம்பில்
தீபுல்கு தோற்றமெல்லாம் தினையுள்கு மடநெஞ்சே

வாய்புல்கு தோத்திரத்தால் வலஞ்செய்து தலைவணங்கிப்
பாய்புலித் தோலுடையான் பருப்பதம் பரவுதுமே. உ

துனியுறு துயர்தீரத் தோன்றியோர் நல்வினையால்
இனியுறு பயனாதல் இரண்டுற மனம்வையேல்
கனியுறு மரமேறிக் கருமுசுக் கழையுகளும்
பனியுறு கதிர்மதியான் பருப்பதம் பரவுதுமே. ங

கொங்கணி நறுங்கொன்றைத் தொங்கலன் குளிர்சடையான்
எங்கள்நோய் அகலநின்றான் எனஅருள் ஈசனிடம்
ஐங்கணை வரிசிலையான் அநங்கனை அழகழித்த
பைங்கண்வெள் ளேறுடையான் பருப்பதம் பரவுதுமே. ச

துறைபல சுனைமூழ்கித் தூமலர் சுமந்தோடி
மறையொலி வாய்மொழியால் வானவர் மகிழ்ந்தேத்தச்
சிறையொலி கிளிபயிலுந் தேன்இனம் ஒலியோவாப்
பறைபடு விளங்கருவிப் பருப்பதம் பரவுதுமே. ரு

சீர்கெழு சிறப்போவாச் செய்தவ நெறிவேண்டில்
ஏர்கெழு மடநெஞ்சே யிரண்டுற மனம்வையேல்
கார்கெழு நறுங்கொன்றைக் கடவுள திடம்வகையால்
பார்கெழு புகழோவாப் பருப்பதம் பரவுதுமே. சு

புடைபுல்கு படர்கமலம் புகையொடு விரைகமழத்
தொடைபுல்கு நறுமாலை திருமுடி மிசையேற
விடைபுல்கு கொடியேந்தி வெந்தவெண் ணீறணிவான்
படைபுல்கு மழுவாளன் பருப்பதம் பரவுதுமே. எ

நினைப்பெனும் நெடுங்கிணற்றை நின்றுநின் றயராதே
மனத்தினை வலித்தொழிந்தேன் அவலம்வந் தடையாமைக்
கனைத்தெழு திரள்கங்கை கமழ்சடைக் கரந்தான்றன்
பனைத்திரள் பாயருவிப் பருப்பதம் பரவுதுமே. அ

மருவிய வல்வினைநோய் அவலம்வந் தடையாமல்
திருவுரு அமர்ந்தானுந் திசைமுகம் உடையானும்
இருவரும் அறியாமை யெழுந்ததோர் எரிநடுவே
பருவரை யுறநிமிர்ந்தான் பருப்பதம் பரவுதுமே. கூ

சடங்கொண்ட சாத்திரத்தார் சாக்கியர் சமண்குண்டர்
மடங்கொண்ட விரும்பியராய் மயங்கியோர் பேய்த்தேர்ப்பின்
குடங்கொண்டு நீர்க்குச்செல்வார் போதுமின் குஞ்சரத்தின்
படங்கொண்ட போர்வையினான் பருப்பதம் பரவுதுமே. க0

வெண்செநெல் விளைகழனி விழவொலி கழுமலத்தான்
பண்செலப் பலபாடல் இசைமுரல் பருப்பதத்தை
நன்சொலி னாற்பரவும் ஞானசம் பந்தன்நல்ல
ஒண்சொலின் இவைமாலை யுருவெணத் தவமாமே. கக

திருச்சிற்றம்பலம்

திருக்கள்ளில் - பண் - வியாழக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

முள்ளின்மேல் முதுகூகை முரலுஞ் சோலை
வெள்ளின்மேல் விடுகூறைக் கொடி விளைந்த
கள்ளில்மேய அண்ணல் கழல்கள் நாளும்
உள்ளுமேல் உயர்வெய்தல் ஒரு தலையே. க

ஆடலான் பாடலான் அரவங்கள் பூண்டான்
ஓடலாற் கலனில்லான் உறை பதியால்
காடலாற் கருதாத கள்ளில் மேயான்
பாடெலாம் பெரியார்கள் பரசு வாரே. உ

எண்ணார்மும் மதிலெய்த இமையா முக்கண்
பண்ணார்நான் மறைபாடும் பரம யோகி
கண்ணார்நீ றணிமார்பன் கள்ளில் மேயான்
பெண்ணாணும் பெருமான்எம் பிஞ்ஞ கனே. ங

பிறைபெற்ற சடையண்ணல் பெடைவண் டாலும்
நறைபெற்ற விரிகொன்றைத் தார் நயந்த
கறைபெற்ற மிடற்றண்ணல் கள்ளில் மேயான்
நிறைபெற்ற அடியார்கள் நெஞ்சுள் ளானே. ச

விரையாலும் மலராலும் விழுமை குன்றா
உரையாலும் எதிர்கொள்ள வூரா ரம்மாக்

கரையார்பொன் புனல்வேலிக் கள்ளில் மேயான்
அரையார்வெண் கோவணத்த அண்ணல் தானே. ரு

நலனாய பலிகொள்கை நம்பான் நல்ல
வலனாய மழுவாளும் வேலும் வல்லான்
கலனாய தலையோட்டான் கள்ளில் மேயான்
மலனாய தீர்த்தெய்தும் மாதவத் தோர்க்கே. சு

பொடியார்மெய் பூசினும் புறவின் நறவம்
குடியாவூர் திரியினுங் கூப்பி டினும்
கடியார்பூம் பொழிற்சோலைக் கள்ளில் மேயான்
அடியார்பண் பிகழ்வார்கள் ஆதர் களே. எ

திருநீல மலரொண்கண் தேவி பாகம்
புரிநூலுந் திருநீறும் புல்கு மார்பில்
கருநீல மலர்விம்மு கள்ளி லென்றும்
பெருநீல மிடற்றண்ணல் பேணு வதே. அ

வரியாய மலரானும் வையந் தன்னை
உரிதாய அளந்தானும் உள்ளு தற்கங்
கரியானும் அறியாத கள்ளில் மேயான்
பெரியானென் றறிவார்கள் பேசு வாரே. கூ

ஆச்சியப் பேய்களோ டமணர் குண்டர்
பேச்சிவை நெறியல்ல பேணு மின்கள்
மாச்செய்த வளவயல் மல்கு கள்ளில்
தீச்செய்த சடையண்ணல் திருந் தடியே. க0

திசைநான்கும் புகழ்காழிச் செல்வம் மல்கு
பகல்போலும் பேரொளியான் பந்தன் நல்ல
முசைமேவும் முதிர்சடையான் கள்ளி லேத்தப்
புகழோடும் பேரின்பம் புகுது மன்றே. கக

திருச்சிற்றம்பலம்

திருவையாறு - திருவிராகம். பண் - வியாழக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

பணிந்தவர் அருவினை பற்றறுத் தருள்செயத்
துணிந்தவன் தோலொடு நூல்துதை மார்பினில்
பிணிந்தவன் அரவொடு பேரெழி லாமைகொண்
டணிந்தவன் வளநகர் அந்தண் ஐயாறே. க

கீர்த்திமிக் கவன்நகர் கிளரொளி யுடனடப்
பார்த்தவன் பனிமதி படர்சடை வைத்துப்
போர்த்தவன் கரியுரி புலியதள் அரவரை
ஆர்த்தவன் வளநகர் அந்தண் ஐயாறே. உ

வரிந்தவெஞ் சிலைபிடித் தவுணர்தம் வளநகர்
எரிந்தற எய்தவன் எழில்திகழ் மலர்மேல்
இருந்தவன் சிரமது இமையவர் குறைகொள
அரிந்தவன் வளநகர் அந்தண் ஐயாறே. ௩

வாய்ந்தவல் அவுணர்தம் வளநகர் எரியிடை
மாய்ந்தற எய்தவன் வளர்பிறை விரிபுனல்
தோய்ந்தெழு சடையினன் தொன்மறை ஆறங்கம்
ஆய்ந்தவன் வளநகர் அந்தண் ஐயாறே. ௪

வானமர் மதிபுல்கு சடையிடை அரவொடு
தேனமர் கொன்றையன் திகழ்தரு மார்பினன்
மான்அன மென்விழி மங்கையொர் பாகமும்
ஆனவன் வளநகர் அந்தண் ஐயாறே. ரு

முன்பனை முனிவரோ டமரர்கள் தொழுதெழும்
இன்பனை யிணையில இறைவனை யெழில்திகழ்
என்பொனை யேதமில் வேதியர் தாந்தொழும்
அன்பன வளநகர் அந்தண் ஐயாறே. சு

வன்திறல் அவுணர்தம் வளநகர் எரியிடை
வெந்தற எய்தவன் விளங்கிய மார்பினில்
பந்தமர் மெல்விரல் பாகம தாகிதன்
அந்தமில் வளநகர் அந்தண் ஐயாறே. எ

விடைத்தவல் அரக்கன்நல் வெற்பினை யெடுத்தலும்
அடித்தலத் தால்இறை யூன்றிமற் றவனது
முடித்தலை தோளவை நெரிதர முறைமுறை
அடர்த்தவன் வளநகர் அந்தண் ஐயாறே. ௮

விண்ணவர் தம்மொடு வெங்கதி ரோன்நல
எண்ணிலி தேவர்கள் இந்திரன் வழிபடக்
கண்ணனும் பிரமனுங் காண்பரி தாகிய
அண்ணல்தன் வளநகர் அந்தண் ஐயாறே. ௯

மருளுடை மனத்தவன் சமணர்கள் மாசறு
இருளுடை யிணைத்துவர்ப் போர்வையி னார்களும்
தெருளுடை மனத்தவர் தேறுமின் திண்ணமா
அருளுடை யடிகள்தம் அந்தண் ஐயாறே. ௧௦

நலம்மலி ஞானசம் பந்தன தின்தமிழ்
அலைமலி புனல்மல்கும் அந்தண்ஐ யாற்றினைக்
கலைமலி தமிழிவை கற்றுவல் லார்மிக
நலமலி புகழ்மிகும் நன்மையர் தாமே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருஇடைமருதூர் - திருவிராகம். பண் - வியாழக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

நடைமரு திரிபுரம் எரியுண நகைசெய்த
படைமரு தழலெழ மழுவல பகவன்
புடைமரு திளமுகில் வளம்அமர் பொதுளிய
இடைமரு தடையநம் இடர்கெடல் எளிதே. ௧

மழைநுழை மதியமொ டழிதலை மடமஞ்ஞை
கழைநுழை புனல்பெய்த கமழ்சடை முடியன்
குழைநுழை திகழ்செவி யழகொடு மிளிர்வதொர்
இழைநுழை புரியணல் இடம்இடை மருதே. ௨

அருமையன் எளிமையன் அழல்விடம் மிடறினன்
கருமையின் ஒளிபெறு கமழ்சடை முடியன்

பெருமையன் சிறுமையன் பிணைபெண்ணொ டொருமையின்
இருமையும் உடையணல் இடம்இடை மருதே. ௩

பொரிபடு முதுகுற முளிகளி புலடபுல்கு
நரிவளர் சுடலையுள் நடமென நவில்வோன்
வரிவளர் குளிர்மதி யொளிபெற மிளிர்வதோர்
எரிவளர் சடையணல் இடம்இடை மருதே. ௪

வருநல மயிலன மடநடை மலைமகள்
பெருநல முலையிணை பிணைசெய்த பெருமான்
செருநல மதிலெய்த சிவனுறை செழுநகர்
இருநல புகழ்மல்கும் இடம்இடை மருதே. ௫

கலையுடை விரிதுகில் கமழ்குழல் அகில்புகை
மலையுடை மடமகள் தனையிடம் உடையோன்
விலையுடை அணிகலன் இலனென மழுவிணோ
டிலையுடை படையவன் இடம்இடை மருதே. ௬

வளமென வளர்வன வரிமுரல் பறவைகள்
இளமணல் அணைகரை யிசைசெயும் இடைமரு
தளமென வினைபவர் ஒலிகழல் இணையடி
குளமண லுறமூழ்கி வழிபடல் குணமே. ௭

மறையவன் உலகவன் மதியவன் மதிபுல்கு
துறையவ னெனவல அடியவர் துயரிலர்
கறையவன் மிடறது கனல்செய்த கமழ்சடை
இறையவன் உறைதரும் இடம்இடை மருதே. ௮

மருதிடை நடவிய மணிவணர் பிரமரும்
இருதுடை யகலமொ டிகலின ரினதெனக்
கருதிடல் அரியதோர் உருவொடு பெரியதோர்
எருதுடை யடிகள்தம் இடம்இடை மருதே. ௯

துவருறு விரிதுகில் உடையரும் அமணரும்
அவருறு சிறுசொலை நயவன்மின் இடுமணல்
கவருறு புனல்இடை மருதுகை தொழுதெழும்
அவருறு வினைகெடல் அணுகுதல் குணமே. ௧௦

தடமலி புகலியர் தமிழ்கெழு விரகினன்
இடமலி பொழில்இடை மருதினை யிசைசெய்த
படமலி தமிழிவை பரவவல் லவர்வினை
கெடமலி புகழொடு கிளரொளி யினரே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருஇடைமருதூர் - திருவிராகம். பண் - வியாழக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

விரிதரு புலியுரி விரவிய அரையினர்
திரிதரும் எயிலவை புனைகணை யினிலெய்த
எரிதரு சடையினர் இடைமரு தடைவுனல்
புரிதரு மனனவர் புகழ்மிக வுளதே. ௧

மறிதிரை படுகடல் விடமடை மிடறினர்
எறிதிரை கரைபொரும் இடைமரு தெனுமவர்
செறிதிரை நரையொடு செலவிலர் உலகினில்
பிறிதிரை பெறும்உடல் பெறுகுவ தரிதே. ௨

சலசல சொரிபுனல் சடையினர் மலைமகள்
நிலவிய வுடலினர் நிறைமறை மொழியினர்
இலரென இடுபலி யவர்இடை மருதினை
வலமிட வுடல்நலி விலதுள வினையே. ௩

விடையினர் வெளியதொர் தலைகல னெனநனி
கடைகடை தொறுபலி யிடுகென முடுகுவர்
இடைவிட லரியவர் இடைமரு தெனும்நகர்
உடையவ ரடியிணை தொழுவதெம் உயர்வே. ௪

உரையரும் உருவினர் உணர்வரு வகையினர்
அரைபொரு புலியதள் உடையினர் அதன்மிசை
இரைமரும் அரவினர் இடைமரு தெனவுளம்
உரைகள துடையவர் புகழ்மிக வுளதே. ௫

ஒழுகிய புனல்மதி அரவமொ டுறைதரும்
அழகிய முடியுடை அடிகள தறைகழல்

எழிலினர் உறைஇடை மருதினை மலர்கொடு
தொழுதல்செய் தெழுமவர் துயருறல் இலரே. சு

கலைமலி விரலினர் கடியதொர் மழுவொடும்
நிலையினர் சலமகள் உலவிய சடையினர்
மலைமகள் முலையிணை மருவிய வடிவினர்
இலைமலி படையவர் இடம்இடை மருதே. எ

செருவடை யிலவல செயல்செயத் திறலொடும்
அருவரை யினிலொரு பதுமுடி நெரிதர
இருவகை விரனிறி யவரிடை மருததை
பரவுவர் அருவினை யொருவுதல் பெரிதே. அ

அரியொடு மலரவன் எனஇவ ரடிமுடி
தெரிவகை யரியவர் திருவடி தொழுதெழ
எரிதரும் உருவர்தம் இடைமரு தடைவுறல்
புரிதரு மனனவர் புகழ்மிக வுளதே. கூ

குடைமயி லினதழை மருவிய வுருவினர்
உடைமரு துவரினர் பலசொல வுறவிலை
அடைமரு திருவினர் தொழுதெழு கழலவர்
இடைமரு தெனமனம் நினைவதும் எழிலே. க0

பொருகட லடைதரு புகலியர் தமிழொடு
விரகினன் விரிதரு பொழிலிடை மருதினைப்
பரவிய வொருபது பயிலவல் லவரிடர்
விரவிலர் வினையொடு வியனுல குறவே. கக

திருச்சிற்றம்பலம்

திருவலிவலம் - திருவிராகம். பண் - வியாழக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

பூவியல் புரிகுழல் வரிசிலை நிகர்நுதல்
ஏவியல் கணைபிணை யெதிர்விழி யுமையவள்
மேவிய திருவுரு வுடையவன் விரைமலர்
மாவியல் பொழில்வலி வலம்உறை யிறையே. க

இட்டம தமர்பொடி யிசைதலின் நசைபெறு
பட்டவிர் பவளநன் மணியென அணிபெறு
விட்டொளிர் திருவுரு வுடையவன் விரைமலர்
மட்டமர் பொழில்வலி வலம்உறை யிறையே. உ

உருமலி கடல்கடை வுழிவுல கமருயிர்
வெருவுற வகையெழு விடம்வெளி மலையணி
கருமணி நிகர்களம் உடையவன் மிடைதரும்
மருமலி பொழில்வலி வலம்உறை யிறையே. ௩

அனல்நிகர் சடையழல் அவியுற வெனவரு
புனல்நிகழ் வதுமதி நனைபொறி அரவமும்
எனநினை வொடுவரு மிதுமெல முடிமிசை
மனமுடை யவர்வலி வலம்உறை யிறையே. ௪

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலம்உறை யிறையே. ரு

தரைமுதல் உலகினில் உயிர்புணர் தகைமிக
விரைமலி குழலுமை யொடுவிர வதுசெய்து
நரைதிரை கெடுதக வதுஅரு ளினன்எழில்
வரைநிகழ் மதில்வலி வலம்உறை யிறையே. ௬

நலிதரு தரைவர நடைவரும் இடையவர்
பொலிதரு மடவர லியர்மனை யதுபுகு
பலிகொள வருபவன் எழில்மிகு தொழில்வளர்
வலிவரு மதில்வலி வலம்உறை யிறையே. எ

இரவணன் இருபது கரமெழில் மலைதனில்
இரவண நினைதர அவன்முடி பொடிசெய்து
இரவணம் அமர்பெயர் அருளின னகநெறி
இரவண நிகர்வலி வலம்உறை யிறையே. அ

தேன்அமர் தருமலர் அணைபவன் வலிமிகும்
ஏனம தாய்நிலம் அகழ்அரி யடிமுடி

தானணை யாவுரு வுடையவன் மிடைகொடி
வான்அணை மதில்வலி வலம்உறை யிறையே. கூ

இலைமலி தரமிகு துவருடை யவர்களும்
நிலைமையில் உணல்உடை யவர்களும் நினைவது
தொலைவலி நெடுமறை தொடர்வகை யுருவினன்
மலைமலி மதில்வலி வலம்உறை யிறையே. க0

மன்னிய வலிவல நகருறை யிறைவனை
இன்னியல் கழுமல நகரிறை யெழில்மறை
தன்னியல் கலைவல தமிழ்விர கனதுரை
உன்னிய வொருபதும் உயர்பொருள் தருமே. கக

திருச்சிற்றம்பலம்

திருவீழிமிழலை - திருவிராகம். பண் - வியாழக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

அலர்மகள் மலிதர அவனியில் நிகழ்பவர்
மலர்மலி குழலுமை தனையிடம் மகிழ்பவர்
நலம்மலி யுருவுடை யவர்நகர் மிகுபுகழ்
நிலம்மலி மிழலையை நினையவல் லவரே. க

இருநில மிதன்மிசை யெழில்பெறும் உருவினர்
கருமலி தருமிகு புவிமுதல் உலகினில்
இருளறு மதியினர் இமையவர் தொழுதெழு
நிருபமன் மிழலையை நினையவல் லவரே. உ

கலைமகள் தலைமகன் இவனென வருபவர்
அலைமலி தருபுனல் அரவொடு நகுதலை
இலைமலி யிதழியு மிசைதரு சடையினர்
நிலைமலி மிழலையை நினையவல் லவரே. ௩

மாடமர் சனம்மகிழ் தருமனம் உடையவர்
காடமர் கழுதுக ளவைமுழ வொடுமிசை
பாடலின் நவில்பவர் மிகுதரும் உலகினில்
நீடமர் மிழலையை நினையவல் லவரே. ௪

புகழ்மகன் துணையினர் புரிகுழல் உமைதனை
இகழ்வுசெய் தவனுடை யெழின்மறை வழிவளர்
முகமது சிதைதர முனிவுசெய் தவன்மிகு
நிகழ்தரு மிழலையை நினையவல் லவரே. ௫

அன்றினர் அரியென வருபவர் அரிதினில்
ஒன்றிய திரிபுரம் ஒருநொடி யினிலெரி
சென்றுகொள் வகைசிறு முறுவல்கொ டொளிபெற
நின்றவன் மிழலையை நினையவல் லவரே. ௬

கரம்பயில் கொடையினர் கடிமல ரயனதோர்
சிரம்பயில் வறவெறி சிவனுறை செழுநகர்
வரம்பயில் கலைபல மறைமுறை யறநெறி
நிரம்பினர் மிழலையை நினையவல் லவரே. ௭

ஒருக்கிய வுணர்வினொ டொளிநெறி செலுமவர்
அரக்கனன் மணிமுடி யொருபதும் இருபது
கரக்கனல் நெரிதர மலரடி விரல்கொடு
நெருக்கினன் மிழலையை நினையவல் லவரே. ௮

அடியவர் குழுமிட அவனியில் நிகழ்பவர்
கடிமலர் அயனரி கருதரு வகைதழல்
வடிவுரு வியல்பினொ டுலகுகள் நிறைதரு
நெடியவன் மிழலையை நினையவல் லவரே. ௯

மன்மத னெனவொளி பெறுமவர் மருதமர்
வன்மலர் துவருடை யவர்களும் மதியிலர்
துன்மதி யமணர்கள் தொடர்வரு மிகுபுகழ்
நின்மலன் மிழலையை நினையவல் லவரே. ௧௦

நித்திலன் மிழலையை நிகரிலி புகலியுள்
வித்தக மறைமலி தமிழ்விர கனமொழி
பத்தியில் வருவன பத்திவை பயில்வொடு
கற்றுவல் லவருல கினிலடி யவரே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருச்சிவபுரம் - திருவிராகம். பண் - வியாழக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

கலைமலி யகலல்குல் அரிவைதன் உருவினன்
முலைமலி தருதிரு வுருவம துடையவன்
சிலைமலி மதில்பொதி சிவபுர நகர்தொழ
இலைநலி வினையிரு மையுமிடர் கெடுமே. ௧

படரொளி சடையினன் விடையினன் மதிலவை
சுடரெரி கொளுவிய சிவனவன் உறைபதி
திடவிடு புனல்வயல் சிவபுரம் அடையநம்
இடர்கெடும் உயர்கதி பெறுவது திடனே. ௨

வரைதிரி தரவர வகடழ லெழவரு
நுரைதரு கடல்விடம் நுகர்பவன்எழில்திகழ்
திரைபொரு புனலரி சிலதடை சிவபுரம்
உரைதரும் அடியவர் உயர்கதி யினரே. ௩

துணிவுடை யவர்சுடு பொடியினர் உடலடு
பிணியடை விலர்பிற வியுமற விசிறுவர்
தணிவுடை யவர்பயில் சிவபுரம் மருவிய
மணிமிட றனதடி யிணைதொழு மவரே. ௪

மறையவன் மதியவன் மலையவன் நிலையவன்
நிறையவன் உமையவள் மகிழ்நடம் நவில்பவன்
இறையவன் இமையவர் பணிகொடு சிவபுரம்
உறைவென வுடையவன் எமையுடை யவனே. ௫

முதிர்சடை யிளமதி நதிபுனல் பதிவுசெய்
ததிர்கழல் ஒலிசெய வருநடம் நவில்பவன்
எதிர்பவர் புரமெய்த இணையிலி யணைபதி
சதிர்பெறும் உளமுடை யவர்சிவ புரமே. ௬

வடிவுடை மலைமகள் சலமக ளுடன்அமர்
பொடிபடும் உழையதள் பொலிதிரு வுருவினன்
செடிபடு பலிதிரி சிவனுறை சிவபுரம்
அடைதரும் அடியவர் அருவினை யிலரே. ௭

காம்இரு பதுமுடி யொருபதும் உடையவன்
ஊம்நெரி தரவரை யடர்வுசெய் தவனுறை
பானென அடியவர் பணிதரு சிவபுர
நகரது புகுதல்நம் உயர்கதி யதுவே. ௮

அன்றிய லுருவகொள் அரியய னெனுமவர்
சென்றள விடலரி யவனுறை சிவபுரம்
என்றிரு பொழுதும்முன் வழிபடு மவர்துயர்
ஒன்றிலர் புகழொடும் உடையரிவ் வுலகே. ௯

புத்தரொ டமணர்கள் அறவுரை புறவுரை
வித்தக மொழிகில விடையுடை யடிகள்தம்
இத்தவ முயல்வுறில் இறைவன சிவபுரம்
மெய்த்தக வழிபடல் விழுமிய குணமே. ௧0

புந்தியர் மறைநவில் புகலிமன் ஞானசம்
பந்தன தமிழ்கொடு சிவபுர நகருறை
எந்தையை யுரைசெய்த இசைமொழி பவர்வினை
சிந்திமு னுறவுயர் கதிபெறு வர்களே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருக்கழுமலம் - திருத்தாளச்சதி. பண் - வியாழக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

பந்தத்தால் வந்தெப்பால் பயின்றுநின்ற வும்பரப்
பாலேசேர்வா யேனோர்கான் பயில்கண முனிவர்களுஞ்
சிந்தித்தே வந்திப்பச் சிலம்பின்மங்கை தன்னொடுஞ்
சேர்வார்நாள்நாள் நீள்கயிலைத் திகழ்தரு பரிசதெலாஞ்
சந்தித்தே யிந்தப்பார் சனங்கணின்று தங்கணால்
தாமேகாணா வாழ்வாரத் தகவுசெய் தவனதிடங்
கந்தத்தால் எண்டிக்குங் கமழ்ந்திலங்கு சந்தனக்
காடார்பூவார் சீர்மேவுங் கழுமல வளநகரே. ௧

பிச்சைக்கே யிச்சித்துப் பிசைந்தணிந்த வெண்பொடிப்
பீடார்நீடார் மாடாரும் பிறைநுதல் அரிவையொடும்
உச்சத்தால் நச்சிப்போல் தொடர்ந்தடர்ந்த வெங்கணே
றூராவூரா நீள்வீதிப் பயில்வொடும் ஒலிசெயிசை
வச்சத்தான் நச்சுச்சேர் வடங்கொள்கொங்கை மங்கைமார்
வாராநேரே மாலாகும் வசிவல வவனதிடங்
கச்சத்தான் மெச்சிப்பூக் கலந்திலங்கு வண்டினங்
காரார்காரார் நீள்சோலைக் கழுமல வளநகரே. உ

திங்கட்கே தும்பைக்கே திகழ்ந்திலங்கு மத்தையின்
சேரேசேரே நீராகச் செறிதரு சுரநதியோ
டங்கைச்சேர் வின்றிக்கே யடைந்துடைந்த வெண்டலைப்
பாலேமேலே மாலேயப் படர்வுறு மவனிறகும்
பொங்கப்பேர் நஞ்சைச்சேர் புயங்கமங்கள் கொன்றையின்
போதார்தாரே தாமேவிப் புரிதரு சடையனிடங்
கங்கைக்கே யும்பொற்பார் கலந்துவந்த பொன்னியின்
காலேவாரா மேலேபாய் கழுமல வளநகரே. ந

அண்டத்தால் எண்திக்கும் அமைந்தடங்கும் மண்டலத்
தாறேவேறே வானுள்வா ரவரவ ரிடமதெலாம்
மண்டிப்போய் வென்றிப்போர் மலைந்தலைந்த வும்பரும்
மாறேலாதார் தாமேவும் வலிமிகு புரமெரிய
முண்டத்தே வெந்திட்டே முடிந்திடிந்த இஞ்சிசூழ்
மூவாமூதூர் மூதூரா முனிவுசெய் தவனதிடங்
கண்டிட்டே செஞ்சொற்சேர் கவின்சிறந்த மந்திரக்
காலேயோவா தார்மேவுங் கழுமல வளநகரே. ச

திக்கிற்றே வற்றற்றே திகழ்ந்திலங்கு மண்டலச்
சீரூர்வீரூர் போரார்தா ருகனுட லவனெதிரே
புக்கிட்டே வெட்டிட்டே புகைந்தெழுந்த சண்டத்தீப்
போலேபூநீர் தீகான்மீப் புணர்தரும் உயிர்கள்திறஞ்
சொக்கத்தே நிர்த்தத்தே தொடர்ந்தமங்கை செங்கதத்
தோடேயாமே மாலோகத் துயர்களை பவனதிடங்
கைக்கப்போ யுக்கத்தே கனன்றுமிண்டு தண்தலைக்
காடேயோடா வூரேசேர் கழுமல வளநகரே. ரு

செற்றிட்டே வெற்றிச்சேர் திகழ்ந்ததும்பி மொய்ம்புறுஞ்
சேரேவாரார் நீன்கோதைத் தெரியிழை பிடியதுவாய்
ஒற்றைச்சேர் முற்றற்கொம் புடைத்தடக்கை முக்கண்மிக்
கோவாதேபாய் மாதானத் துறுபுகர் முகஇறையைப்
பெற்றிட்டே மற்றிப்பார் பெருத்துமிக்க துக்கமும்
போரானோய்தா மேயாமைப் பிரிவுசெய் தவனதிடங்
கற்றிட்டே யெட்டெட்டுக் கலைத்துறைக் கரைச்செலக்
காணுதாரே சேராமெய்க் கழுமல வளநகரே. சு

பத்திப்பேர் வித்திட்டே பரந்தஐம் புலன்கள்வாய்ப்
பாலேபோகா மேகாவாப் பகையறும் வகைநினையா
முத்திக்கே விக்கத்தே முடிக்குமுக்கு ணங்கள்வாய்
மூடாவூடா நாலந்தக் கரணமும் ஒருநெறியாய்ச்
சித்திக்கே யுய்த்திட்டுத் திகழ்ந்தமெய்ப் பரம்பொருள்
சேர்வார்தாமே தானாகச் செயுமவன் உறையுமிடங்
கத்திட்டோர் சட்டங்கங் கலந்திலங்கு நற்பொருள்
காலேயோவா தார்மேவுங் கழுமல வளநகரே. எ

செம்பைச்சேர் இஞ்சிச்சூழ் செறிந்திலங்கு பைம்பொழிற்
சேரேவாரா வாரீசத் திரையெறி நகர்இறைவன்
இம்பர்க்கே தஞ்செய்திட் டிருந்தான் பயின்றவெற்
பேரார்பூநே ரோர்பாதத் தெழில்விரல் அவண்இறுவிட்
டம்பொற்பூண் வென்றித்தோள் அழிந்துவந்த னஞ்செய்தாற்
காரார்கூர்வாள் வாளுளன் றருள்புரி பவனதிடங்
கம்பத்தார் தும்பித்திண் கவுட்சொரிந்த மும்மதக்
காரார்சேரூர் மாவீதிக் கழுமல வளநகரே. அ

பன்றிக்கோ லங்கொண்டிப் படித்தடம் பயின்றிடப்
பாலுமால் தானுமேயப் பறவையி னுருவுகொள
ஒன்றிட்டே யம்புச்சே ருயர்ந்தபங் கயத்தவ
னோதானோதான் அஃதுணரா துருவின தடிமுடியுஞ்
சென்றிட்டே வந்திப்பத் திருக்களங்கொள் பைங்கணின்
றேசால்வேறோர் ஆகாரந் தெரிவுசெய் தவனதிடங்
கன்றுக்கே முன்றிற்கே கலந்திலந் நிறைக்கவுங்
காலேவாரா மேலேபாய் கழுமல வளநகரே. கூ

தட்டிட்டே முட்டிக்கைத் தடக்கிடுக்கி நின்றுணுத்
    தாமேபேணு தேநாளுஞ் சமணொடும் உழல்பவரும்
இட்டத்தால் அத்தந்தான் இதன்றதென்று நின்றவர்க்
    கேயாமேவா யேதுச்சொல் இலைமலி மருதம்பூப்
புட்டத்தே யட்டிட்டுப் புதைக்குமெய்க்கொள் புத்தரும்
    போல்வார்தாமோ ராமேபோய்ப் புணர்வுசெய் தவனதிடங்
கட்டிக்கால் வெட்டித்தீய் கரும்புதந்த பைம்புனற்
    காலேவாரா மேலேபாய் கழுமல வளநகரே. ௧௦

கஞ்சத்தேன் உண்டிட்டே களித்துவண்டு சண்பகக்
    கானேதேனே போராருங் கழுமல நகரிறையைத்
தஞ்சச்சார் சண்பைக்கோன் சமைத்தநற் கலைத்துறை
    தாமேபோல்வார் தேனேரார் தமிழ்விர கனமொழிகள்
எஞ்சத்தேய் வின்றிக்கே யிமைத்திசைத்த மைத்தகொண்
    டேழேயேழே நாலேமூன் றியலிசை யிசையியல்பா
வஞ்சத்தேய் வின்றிக்கே மனங்கொளப் பயிற்றுவோர்
    மார்பேசேர்வாள் வானோர்சீர் மதிநுதல் மடவாலே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருப்பிரமபுரம் - பண் - வியாழக்குறிஞ்சி

ஏகபாதம்

திருச்சிற்றம்பலம்

பிரம புரத்துறை பெம்மா னெம்மான்
பிரம புரத்துறை பெம்மா னெம்மான்
பிரம புரத்துறை பெம்மா னெம்மான்
பிரம புரத்துறை பெம்மா னெம்மான். ௧

விண்டலர் பொழிலணி வேணு புரத்தான்
விண்டலர் பொழிலணி வேணு புரத்தான்
விண்டலர் பொழிலணி வேணு புரத்தான்
விண்டலர் பொழிலணி வேணு புரத்தான். ௨

புண்ட ரிகத்தவன் மேவிய புகலியே
புண்ட ரிகத்தவன் மேவிய புகலியே

புண்ட ரிகத்தவன் மேவிய புகலியே
புண்ட ரிகத்தவன் மேவிய புகலியே. ௩

விளங்கொளி திகழ்தரு வெங்குரு மேவினன்
விளங்கொளி திகழ்தரு வெங்குரு மேவினன்
விளங்கொளி திகழ்தரு வெங்குரு மேவினன்
விளங்கொளி திகழ்தரு வெங்குரு மேவினன். ௪

சுடர்மணி மாளிகைத் தோணி புரத்தவன்
சுடர்மணி மாளிகைத் தோணி புரத்தவன்
சுடர்மணி மாளிகைத் தோணி புரத்தவன்
சுடர்மணி மாளிகைத் தோணி புரத்தவன். ௫

பூசுரர் சேர்பூந்த ராயவன் பொன்னடி
பூசுரர் சேர்பூந்த ராயவன் பொன்னடி
பூசுரர் சேர்பூந்த ராயவன் பொன்னடி
பூசுரர் சேர்பூந்த ராயவன் பொன்னடி. ௬

செருக்குவாய்ப் புடையான் சிரபுர மென்னில்
செருக்குவாய்ப் புடையான் சிரபுர மென்னில்
செருக்குவாய்ப் புடையான் சிரபுர மென்னில்
செருக்குவாய்ப் புடையான் சிரபுர மென்னில். ௭

பொன்னடி மாதவர் சேர்புற வத்தவன்
பொன்னடி மாதவர் சேர்புற வத்தவன்
பொன்னடி மாதவர் சேர்புற வத்தவன்
பொன்னடி மாதவர் சேர்புற வத்தவன். ௮

தசமுக னெரிதர வூன்று சண்பையான்
தசமுக னெரிதர வூன்று சண்பையான்
தசமுக னெரிதர வூன்று சண்பையான்
தசமுக னெரிதர வூன்று சண்பையான். ௯

காழி யானய னுள்ளவா காண்பரே
காழி யானய னுள்ளவா காண்பரே
காழி யானய னுள்ளவா காண்பரே
காழி யானய னுள்ளவா காண்பரே. ௧0

கொச்சையன் ணலைக்கூட கிலாருடன் மூடரே
கொச்சையன் ணலைக்கூட கிலாருடன் மூடரே
கொச்சையன் ணலைக்கூட. கிலாருடன் மூடரே
கொச்சையன் ணலைக்கூட கிலாருடன் மூடரே. ௧௧

கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை
கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை
சழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை
கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை. ௧௨

திருச்சிற்றம்பலம்

திருப்பிரமபுரம் - பண் - வியாழக்குறிஞ்சி

திருவெழுகூற்றிருக்கை

திருச்சிற்றம்பலம்

ஓருரு வாயினை மானாங் காரத்
தீரியல் பாயொரு விண்முதல் பூதலம்
ஒன்றிய இருசுடர் உம்பர்கள் பிறவும்
படைத்தளித் தழிப்பமும் மூர்த்திக ளாயினை
இருவரோ டொருவ னாகி நின்றனை
ஓரால் நீழல் உன்கழல் இரண்டும்
முப்பொழு தேத்திய நால்வர்க் கொளிநெறி
காட்டினை நாட்ட மூன்றாகக் கோட்டினை
இருநதி அரவமோ டொருமதி சூடினை
ஒருதா ளீரயின் மூவிலைச் சூலம்
நாற்கால் மான்மறி ஐந்தலை அரவம்
ஏந்தினை காய்ந்த நால்வாய் மும்மதத்
திருகோட் டொருகரி யீடழித் துரித்தனை
ஒருதனு இருகால் வளைய வாங்கி
முப்புரத் தோடு நால்நிலம் அஞ்சக்
கொன்று தலத்துற அவுணரை யறுத்தனை
ஐம்புலன் நாலாம் அந்தக் கரணம்
முக்குணம் இருவளி யொருங்கிய வானோர்

எத்த நின்றனை யொருங்கிய மனத்தோ
டிருபிறப் போர்ந்து முப்பொழுது குறைமுடித்து
நான்மறை யோதி ஐவகை வேள்வி
அமைத்தா றங்க முதலெழுத் தோதி
வரன்முறை பயின்றெழு வான்றனை வளர்க்கும்
பிரமபுரம் பேணினை
அறுபதம் முரலும் வேணுபுரம் விரும்பினை
இகலிய மைந்துணர் புகலி யமர்ந்தனை
பொங்குநாற் கடல்சூழ் வெங்குரு விளங்கினை
பாணிமூ வுலகும் புதையமேல் மிதந்த
தோணிபுரத் துறைந்தனை தொலையா இருநிதி
வாய்ந்த பூந்தராய் எய்ந்தனை
வரபுரம் என்றுணர் சிரபுரத் துறைந்தனை
ஒருமலை யெடுத்த இருதிறல் அரக்கன்
விறல்கெடுத் தருளினை புறவம் புரிந்தனை
முந்நீர்த் துயின்றோன் நான்முகன் அறியாப்
பண்பொடு நின்றனை சண்பை யமர்ந்தனை
ஐயுறும் அமணரும் அறுவகைத் தேரரும்
ஊழியும் உணராக் காழி யமர்ந்தனை
எச்சனே ழிசையோன் கொச்சையை மெச்சினை
ஆறு பதமும் ஐந்தமர் கல்வியும்
மறைமுதல் நான்கும்
மூன்று காலமுந் தோன்ற நின்றனை
இருமையின் ஒருமையும் ஒருமையின் பெருமையும்
மறுவிலா மறையோர்
கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை
கழுமல முதுபதிக் கவுணியன் அறியும்
அனைய தன்மையை யாதலின் நின்னை
நினைய வல்லவ ரில்லை நீணிலத்தே.

திருச்சிற்றம்பலம்

திருக்கழுமலம் - பண் - மேகராகக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

சேவுயருந் திண்கொடியான் திருவடியே சரணென்று சிறந்தஅன்பால்
நாவியலும் மங்கையொடு நான்முகன்றான்வழிபட்ட நலங்கொள்கோயில்
வாவிதொறும் வண்கமலம் முகங்காட்டச் செங்குமுதம் வாய்கள்காட்டக்
காவியிருங் கருங்குவளை கருநெய்தல் கண்காட்டுங் கழுமலமே. க

பெருந்தடங்கண் செந்துவர்வாய்ப் பீடுடைய மலைச்செல்வி பிரியாமேனி, அருந்தகைய சுண்ணவெண்ணீ றலங்கரித்தான் அமரர்தொழ அமருங்கோயில், தருந்தடக்கை முத்தழலோர் மனைகள்தொறும் இறைவனது தன்மைபாடிக், கருந்தடங்கண் ணார்கழல்பந் தம்மானைப் பாட்டயருங் கழுமலமே. உ

அலங்கல்மலி வானவருந் தானவரும் அலைகடலைக் கடையப்பூதங்
கலங்கஎழு கடுவிடமுண் டிருண்டமணி கண்டத்தோன் கருதுங்கோயில்
விலங்கலமர் புயன்மறந்து மீன்சனிபுக் கூன்சலிக்குங் காலந்தானுங்
கலங்கலிலா மனப்பெருவண் மையுடைய மெய்யர்வாழ் கழுமலமே. ங

பாரிதனை நலிந்தமரர் பயமெய்தச் சயமெய்தும் பரிசுவெம்மைப், போரிசையும் புரமூன்றும் பொன்றவொரு சிலைவளைத்தோன் பொருந் துங்கோயில், வாரிசைமென் முலைமடவார் மாளிகையின் சூளிகைமேல் மகப்பாராட்டக், காரிசையும் விசும்பியங்குங் கணங்கேட்டு மகிழ்வெய் துங் கழுமலமே. ச

ஊர்கின்ற அரவமொளி விடுதிங்க ளொடுவன்னி மத்தமன்னும்
நீர்நின்ற கங்கைநகு வெண்தலைசேர் செஞ்சடையான் நிகழுங்கோயில்
ஏர்தங்கி மலர்நிலவி யிசைவெள்ளி மலையென்ன நிலவிநின்ற
கார்வண்டின் கணங்களாற் கவின்பெருகு சுதைமாடக் கழுமலமே. ரு

தருஞ்சரதந் தந்தருளென் றடிநினைந்து கழலணைந்து தவங்கள் செய்த, பெருஞ்சதுரர் பெயலர்க்கும் பீடார்தோ ழமையளித்த பெருமான்கோயில், அரிந்தவயல் அரவிந்தம் மதுவுகுப்ப அதுகுடித்துக் களித்துவாளை, கருஞ்சகடம் இளகவளர் கரும்பிரிய அகம்பாயுங் கழு மலமே. சா

புவிமுதல்ஐம் பூதமாய்ப் புலன்ஐந்தாய் நிலன்ஐந்தாய்க் கரணம் நான்காய், அவையவைசேர் பயனுருவா யல்லவுரு வாய்நின்றான் அமருங்கோயில், தவமுயல்வோர் மலர்பறிப்பத் தாழவிடு கொம்புதைப்பக் கொக்கின்காய்கள், கவணெறிகற் போற்சுனையிற் கரைசேரப் புள்ளிரியுங் கழுமலமே. எ

அடல்வந்த வானவரை யழித்துலகு தெழித்துழலும் அரக்கர் கோமான், மிடல்வந்த இருபதுதோள் நெரியவிரற் பணிகொண்டோன் மேவுங்கோயில், நடவந்த வுழவரிது நடவொணு வகைபரலாய்த் தென்று தன்று, சடல்வந்த சங்கீன்ற முத்துவயற் கரைகுவிக்குங் கழுமலமே. அ

பூமகன்தன் கோன்அயனும் புள்ளினொடு கேழல்உரு வாகிப்புக்கிட் டாமளவுஞ் சென்றுமுடி யடிகாணு வகைநின்றான் அமருங்கோயில் பாமருவுங் கலைப்புலவோர் பன்மலர்கள் கொண்டணிந்து பரிசினாலே காமனைகள் பூரித்துக் களிகூர்ந்து நின்றேத்துங் கழுமலமே. கூ

குணமின்றிப் புத்தர்களும் பொய்த்தவத்தை மெய்த்தவமாய் நின்றுகையில், உணல்மருவுஞ் சமணர்களும் உணராத வகைநின்றான் உறையுங்கோயில், மணமருவும் வதுவையொலி விழவின்ஒலி யிவையிசைய மண்மேல்தேவர், கணமருவும் மறையினொலி கீழ்ப்படுக்க மேற்படுக்குங் கழுமலமே. க0

கற்றவர்கள் பணிந்தேத்துங் கழுமலத்துள் ஈசன்றன் கழல்மேல் நல்லோர், நற்றுணையாம் பெருந்தன்மை ஞானசம் பந்தன்றான் நயந்து சொன்ன, சொற்றுணையோ ரைந்தினொடைந் திவைவல்லார் தூமலரான் துணைவராகி, முற்றுலகம் அதுஆண்டு முக்கணன் அடிசேர முயல்கின்றாரே. கக

திருச்சிற்றம்பலம்

திருவையாறு - பண் - மேகராகக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி யறிவழிந்திட் டைம் மேலுந்தி, அலமந்த போதாக அஞ்சேலென் றருள்செய்வான் அம ருங்கோயில், வலம்வந்த மடவார்கள் நடமாட முழவதிர மழையென் றஞ்சிச், சிலமந்தி யலமந்து மரமேறி முகில்பார்க்குந் திருவையாறே. க

விடலேறு படநாகம் அரைக்கசைத்து வெற்பரையன் பாவை யோடும், அடலேறொன் றதுவேறி யஞ்சொலீர் பலியென்னும் அடி கள்கோயில், கடலேறித் திரைமோதிக் காவிரியி னுடன்வந்து கங்குல் வைகித், திடலேறிச் சுரிசங்கஞ் செழுமுத்தங் கீன்றலைக்குந் திருவை யாறே. உ

கங்காளர் கயிலாய மலையாளர் கானப்பே ராளர்மங்கை
பங்காளர் திரிசூலப் படையாளர் விடையாளர் பயிலுங்கோயில் [கிச்
கொங்காளப் பொழில்நுழைந்து கூர்வாயால் இறகுலர்த்திக் கூதல்நீங்
செங்கால்நல் வெண்குருகு பைங்கானல் இரைதேருந் திருவையாறே.

ஊன்பாயும் முடைதலைகொண் டூரின் பலிக்குழல்வார் உமை யாள் பங்கர், தான்பாயும் விடையேறுஞ் சங்கரனூர் தழலுருவர் தங்குங் கோயில், மான்பாய வயலருகே மரமேறி மந்திபாய் மடுக்கள்தோறும், தேன்பாய மீன்பாயச் செழுங்கமல மொட்டலருந் திருவையாறே. ச

நீரோடு கூவிளமும் நிலாமதியும் வெள்ளெருக்கும் நிறைந்த கொன்றைத், தாரோடு தண்கரந்தை சடைக்கணிந்த தத்துவனூர் தங் குங்கோயில், காரோடி விசும்பளந்து கடிநாறும் பொழிலணைந்த கமழ் தார்வீதித், தேரோடும் அரங்கேறிச் சேயிழையார் நடம்பயிலுந் திருவையாறே. ரு

வேந்தாகி விண்ணவர்க்கும் மண்ணவர்க்கும் நெறிகாட்டும் விகிர்த னாகிப், பூந்தாம நறுங்கொன்றை சடைக்கணிந்த புண்ணியனூர் நண் ணுங்கோயில், காந்தார மிசையமைத்துக் காரிகையார் பண்பாடக் கவி னார்வீதித், தேந்தாமென் றரங்கேறிச் சேயிழையார் நடமாடுந் திருவை யாறே. சு

நின்றுலா நெடுவிசும்பில் நெருக்கிவரு புரமூன்றும் நீள்வாயம்பு
சென்றுலாம் படிதொட்ட சிலையாளி மலையாளி சேருங்கோயில்
குன்றெலாங் குயில்கூவக் கொழும்பிரச மலர்பாய்ந்து வாசம்மல்கு
தென்றலார் அடிவருடச் செழுங்கரும்பு கண்வளருந் திருவையாறே.

அஞ்சாதே கயிலாய மலையெடுத்த அரக்கர்கோன் தலைகள்பத்தும்
மஞ்சாடு தோள்நெரிய அடர்த்தவனுக் கருள்புரிந்த மைந்தர்கோயில்
இஞ்சாயல் இளந்தெங்கின் பழம்வீழ இளமேதி யிரிந்தங்கோடிச்
செஞ்சாலிக் கதிருழக்கிச் செழுங்கமல வயல்படியுந் திருவையாறே.

மேலோடி விசும்பணவி வியன்நிலத்தை மிகஅகழ்ந்து மிக்குநாடும்
மாலோடு நான்முகனும் அறியாத வகைநின்றான் மன்னுங்கோயில்
கோலோடக் கோல்வளையார் கூத்தாடக் குவிமுலையார் முகத்தினின்று
சேலோடச் சிலையாடச் சேயிழையார் நடமாடுந் திருவையாறே. க

குண்டாடு குற்றுடுக்கைச் சமணரொடு சாக்கியருங் குணமொன்றில்லா
மிண்டாடு மிண்டருரை கேளாதே யாளாமின் மேவித்தொண்டீர்
எண்டோளர் முக்கண்ணர் எம்மீசர் இறைவர்இனி தமருங்கோயில் [றே.
செண்டாடு புனற்பொன்னிச் செழுமணிகள் வந்தலைக்குந் திருவையா

அன்னம்மலி பொழில்புடைசூழ் ஐயாற்றெம் பெருமானை அந்தண்காழி
மன்னியசீர் மறைநாவன் வளர்ஞான சம்பந்தன் மருவுபாடல்
இன்னிசையால் இவைபத்தும் இசையுங்கால் ஈசனடி யேத்துவார்கள்
தன்னிசையோ டமருலகில் தவநெறிசென் றெய்துவார்தாழாதன்றே.

திருச்சிற்றம்பலம்

திருமுதுகுன்றம் - பண் - மேகராகக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

மெய்த்தாறு சுவையும் ஏழிசையும் எண்குணங்களும் விரும்பு நால்வே, தத்தாலும் அறிவொண்ணு நடைதெளியப் பளிங்கேபோல் அரிவைபாகம், ஒத்தாறு சமயங்கட் கொருதலைவன் கருதுமூர் உலவு தெண்ணீர், முத்தாறு வெதிருதிர நித்திலம்வா ரிக்கொழிக்கும் முது குன்றமே. க

வேரிமிகு குழலியொடு வேடுவனாய் வெங்கானில் விசயன்மேவு
போரின்மிகு பொறையளந்து பாசுபதம் புரிந்தளித்த புராணர்கோயில்
காரின்மலி கடிபொழில்கள் கனிகள்பல மலருதிர்த்துக் கயமுயங்கி
மூரிவளங் கிளர்தென்றல் திருமுன்றிற் புகுந்துலவும் முதுகுன்றமே.

தக்கனது பெருவேள்விச் சந்திரன்இந் திரன்எச்சன் அருக்கன் அங்கி, மிக்கவிதா தாவினொடும் விதிவழியே தண்டித்த விமலர் கோயில், கொக்கினிய கொழும்வருக்கை கதலிகமு குயர்தெங்கின் குவைகொள்சோலை, முக்கனியின் சாறொழுகிச் சேறுலரா நீள்வயல்சூழ் முதுகுன்றமே. ௫

வெம்மைமிகு புரவாணர் மிகைசெய்ய விறலழிந்து விண்ணுளோர்கள், செம்மலரோன் இந்திரன்மால் சென்றிரப்பத் தேவர்களே தேரதாக, மைம்மருவு மேருவிலு மாசுணநாண் அரியெரிகால் வாளியாக, மும்மதிலும் நொடியளவிற் பொடிசெய்த முதல்வனிடம் முதுகுன்றமே. ௬

இழைமேவு கலையல்குல் ஏந்திழையாள் ஒருபாலா யொருபாலெள்கா, துழைமேவும் உரியுடுத்த வொருவனிருப் பிடமென்பர் உம்பரோங்கு, கழைமேவு மடமந்தி மழைகண்டு மகவினொடும் புகவொண்கல்லின், முழைமேவும் மால்யானை யிரைதேரும் வளர்சாரல் முதுகுன்றமே. ௭

நகையார்வெண் தலைமாலை முடிக்கணிந்த நாதனிடம்நன்முத்தாறு, வகையாரும் வரைப்பண்டங் கொண்டிரண்டு கரையருகு மறியமோதித், தகையாரும் வரம்பிடறிச் சாலிகழு நீர்குவளை சாயப்பாய்ந்து, முகையார்செந் தாமரைகள் முகமலர வயல்தழுவு முதுகுன்றமே. ௮

அறங்கிளரும் நால்வேத மாலின்கீழ் இருந்தருளி யமரர்வேண்ட, நிறங்கிளர்செந் தாமரையோன் சிரம்ஐந்தின் ஒன்றறுத்த நிமலர்கோயில், திறங்கொள்மணித் தரளங்கள் வரத்திரண்டங் கெழிற்குறவர் சிறுமிமார்கள், முறங்களினாற் கொழித்துமணி செலவிலக்கி முத்துலைப்பெய் முதுகுன்றமே. ௯

கதிரொளிய நெடுமுடிபத் துடையகடல் இலங்கையர்கோன் கண்ணும்வாயும், பிதிரொளிய கனல்பிறங்கப் பெருங்கயிலை மலையை

நிலை பெயர்த்தஞான்று, மதிலளகைக் கிறைமூல மலரடியொன் றூன்றிமறை பாடவாங்கே, முதிரொளிய சுடர்நெடுவாள் முன்னீந் தான் வாய்ந்தபதி முதுகுன்றமே. ௮

பூவார்பொற் றவிசின்மிசை யிருந்தவனும் பூந்துழாய் புனைந்தமாலும்
ஓவாது கழுகேன மாயுயர்ந்தாழ்ந் துறநாடி யுண்மைகாணாத்
தேவாருந் திருவுருவன் சேருமலை செழுநிலத்தை மூடவந்த
மூவாத முழங்கொலிநீர் கீழ்தாழ மேலுயர்ந்த முதுகுன்றமே. ௯

மேனியிற்சீ வரத்தாரும் விரிதருதட் டுடையாரும் விரவலாகா, வூனிகளா யுள்ளார்சொற் கொள்ளாதும் உள்ளுணர்ந்தங் குய்மின் தொண்டீர், ஞானிகளா யுள்ளார்கள் நான்மறையை முழுதுணர்ந்தைம் புலன்கள்செற்று, மோனிகளாய் முனிச்செல்வர் தனித்திருந்து தவம் புரியும் முதுகுன்றமே. ௧௦

முழங்கொலிநீர் முத்தாறு வலஞ்செய்யும் முதுகுன்றத் திறையை மூவாப், பழங்கிழமைப் பன்னிருபேர் படைத்துடைய கழுமலமே பதியாக்கொண்டு, தழங்கெரிமூன் றோம்புதொழில் தமிழ்ஞான சம்பந் தன் சமைத்தபாடல், வழங்கும்இசை கூடும்வகை பாடுமவர் நீடுலகம் ஆள்வர் தாமே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருவீழிமிழலை - பண் - மேகராகக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

ஏரிசையும் வடவாலின் கீழிருந்தங் கீரிருவர்க் கிரங்கிநின்று, நேரியநான் மறைப்பொருளை யுரைத்தொளிசேர் நெறியளித்தோன் நின்றகோயில், பாரிசையும் பண்டிதர்கள் பன்னாளும் பயின்றோதும் ஓசைகேட்டு, வேரிமலி பொழிற்கிள்ளை வேதங்கள் பொருட்சொல்லும் மிழலையாமே. ௧

பொறியரவம் அதுசுற்றிப் பொருப்பேமத் தாகப்புத் தேளிர்கூடி, மறிகடலைக் கடைந்திட்ட விடமுண்ட கண்டத்தோன் மன்னுங் கோயில், செறியிதழ்த்தா மரைத்தவிசில் திகழ்ந்தோங்கும் இலைக் குடைக்கீழ்ச் செய்யார் செந்நெல், வெறிகதிர்ச்சா மரையிரட்ட இள அன்னம் வீற்றிருக்கும் மிழலையாமே. ௨

எழுந்தலகை நலிந்தழலும் அவுணர்கள்தம் புரமூன்றும் எழிற் கண்ணாடி, உழுந்துருளும் அளவையினொள் ளெரிகொளவெஞ் சிலை வளைத்தோன் உறையுங் கோயில், கொழுந்தாளம் நகைகாட்டக் கோகநதம் முகங்காட்டக் குதித்துநீர்மேல், விழுந்தகயல் விழிகாட்ட விற்பவளம் வாய்காட்டும் மிழலையாமே. ரு

உரைசேரும் எண்பத்து நான்குநூ றாயிரமாம் யோனிபேதம், நிரைசேரப் படைத்தவற்றின் உயிர்க்குயிராய் அங்கங்கே நின்றான் கோயில், வரைசேரும் முகில்முழவ மயில்கள் பல நடமாட வண்டு பாட, விரைசேர்பொன் இதழிதர மென்காந்தள் கையேற்கும் மிழலையாமே. சா

காணுமா றரியபெரு மானாகிக் காலமாய்க் குணங்கள் மூன்றாய்ப் [யில்
பேணுமூன் றுருவாகிப் பேருலகம் படைத்தளிக்கும் பெருமான் கோ
தாணுவாய் நின்றபர தத்துவனை உத்தமனை யிறைஞ்சீரென்று
வேணுவார் கொடிவிண்ணோர் தமைவிளிப்ப போலோங்கு மிழலையாமே.

அகனமர்ந்த அன்பினராய் அறுபகைசெற் றைம்புலனும் அடக்கி ஞானம், புகலுடையோர் தம்முள்ளப் புண்டரிகத் துள்ளிருக்கும் புராணர்கோயில், தகவுடைநீர் மணித்தலத்துச் சங்குளவர்க் கந்திகழச் சலசத்தீயுள், மிகவுடைய புன்குமலர்ப் பொரியட்ட மணஞ்செய்யும் மிழலையாமே. சு

ஆறுடு சடைமுடியன் அனலாடும் மலர்க்கையன் இமயப்பாவை
கூறுடு திருவுருவன் கூத்தாடுங் குணமுடையோன் குளிருங்கோயில்
சேறுடு செங்கழுநீர்த் தாதாடி மதுவுண்டு சிவந்தவண்டு
வேறாய வுருவாகிச் செவ்வழிநற் பண்பாடும் மிழலையாமே. எ

கருப்பமிகும் உடலடர்த்துக் காலூன்றிக் கைமறித்துக் கயிலை யென்னும், பொருப்பெடுக்க லுறும்அரக்கன் பொன்முடிதோள் நெரித்தவிரற் புனிதர்கோயில், தருப்பமிகு சலந்தரன்றன் உடல் தடிந்த சக்கரத்தை வேண்டியீண்டு, விருப்பொடுமால் வழிபாடு செய்ய விழி விமானஞ்சேர் மிழலையாமே. அ

செந்தளிர்மா மலரோனுந் திருமாலும் ஏனமோ டன்னமாகி
அந்தம்அடி காணாதே அவரேத்த வெளிப்பட்டோன் அமருங்கோயில்

புத்தியினுல் மறைவழியே புற்பாப்பி நெய்சமிதை கையிற்கொண்டு
வெந்தழலின் வேட்டுலகின் மிகஅளிப்போர் சேருமூர் மிழலையாமே. ௯

எண்ணிறந்த அமணர்களும் இழிதொழில்சேர் சாக்கியரும் என்றுந்தன்னை, நண்ணரிய வகைமயக்கித் தன்னடியார்க் கருள்புரியும் நாதன்கோயில், பண்ணமரும் மென்மொழியார் பாலகரைப் பாராட்டும் ஓசைகேட்டு, விண்ணவர்கள் வியப்பெய்தி விமானத்தோ டும்மிழியும் மிழலையாமே. ௰

மின்னியலும் மணிமாடம் மிடைவீழி மிழலையான் விரையார் பாதம், சென்னிமிசைக் கொண்டொழுகுஞ் சிரபுரக்கோன் செழுமறைகள் பயிலுநாவன், பன்னியசீர் மிகுஞான சம்பந்தன் பரிந்துரைத்த பத்துமேத்தி, இன்னிசையாற் பாடவல்லார் இருநிலத்தில் ஈசனெனும் இயல்பினேரே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருக்கச்சியேகம்பம் - பண் - மேகராகக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

வெந்தவெண் பொடிப்பூசு மார்பின்விரி நூலொருபால் பொருந்தக்
கந்தமல்கு குழலியோடுங் கடிபொழிற் கச்சி தன்னுள்
அந்தமில் குணத்தா ரவர்போற்ற அணங்கினொ டாடல்புரி
எந்தை மேவிய ஏகம்பந் தொழுதேத்த இடர்கெடுமே. ௧

வரந்திகழும் அவுணர் மாநகர்மூன் றுடன்மாய்ந் தவியச்
சரந்துரந் தெரிசெய்த தாழ்சடைச் சங்கரன் மேயஇடம்
குருந்தம் மல்லிகை கோங்குமா தவிநல்ல குராமரவம்
திருந்தபைம் பொழிற்கச்சி யேகம்பஞ்சேர இடர்கெடுமே. ௨

வண்ணவெண் பொடிப்பூசு மார்பின் வரியர வம்புனைந்து
பெண்ணமர்ந் தெரியாடல் பேணிய பிஞ்ஞகன் மேயவிடம்
விண்ணமர் நெடுமாட மோங்கி விளங்கிய கச்சிதன்னுள்
திண்ணமாம் பொழில்சூழ்ந்த ஏகம்பஞ் சேர இடர்கெடுமே. ௩

தோலும்நூ லுந்துதைந்த வரைமார்பிற் சுடலைவெண் ணீறணிந்து
காலன்மாள் வுறக்காலாற் காய்ந்த கடவுள் கருதுமிடம்

மாலைவெண் மதிதோயும் மாமதிற் கச்சி மாநகருள்
ஏலம்நாறிய சோலைசூழ் ஏகம்பம் ஏத்த இடர்கெடுமே. ௪

தோடணிம் மலர்க்கொன்றை சேர்சடைத் தூமதி யம்புனைந்து
பாடல்நான் மறையாகப் பல்கணப் பேய்க ளவைசூழ
வாடல்வெண் தலையோ டனலேந்தி மகிழ்ந்துட னுடல்புரி
சேடர்சேர் கலிக்கச்சி யேகம்பஞ் சேர இடர்கெடுமே. ரு

சாகம்பொன் வரையாகத் தானவர் மும்மதில் சாயவெய்து
ஆகம்பெண் ணொருபாக மாக அரவொடு நூலணிந்து
மாகந்தோய் மணிமாட மாமதிற் கச்சி மாநகருள்
ஏகம்பத் துறையீசன் சேவடி யேத்த இடர்கெடுமே. சு, எ

வாணிலா மதிபுல்கு செஞ்சடை வாளர வம்அணிந்து
நாணிடத் தினில்வாழ்க்கை பேணி நகுதலையிற் பலிதேர்ந்
தேணிலா அரக்கன்றன் நீள்முடி பத்தும் இறுத்தவனூர்
சேணுலாம் பொழிற்கச்சி யேகம்பஞ் சேர இடர்கெடுமே. அ

பிரமனுந் திருமாலுங் கைதொழப் பேரழ லாயபெம்மான்
அரவஞ் சேர்சடை யந்தணன் அணங்கினொ டமருமிடம்
கரவில்வண் கையினார்கள் வாழ்கலிக் கச்சி மாநகருள்
மரவஞ்சூழ் பொழிலேகம் பந்தொழ வல்வினை மாய்ந்தறுமே. கூ

குண்டுபட் டமணா யவரொடுங் கூறைதம் மெய்போர்க்கும்
மிண்டர் கட்டிய கட்டுரை யவைகொண்டு விரும்பேன்மின்
விண்டவர் புரம்மூன்றும் வெங்கணை யொன்றினால் அவியக்
கண்டவன் கலிக்கச்சி யேகம்பங் காண இடர்கெடுமே. க0

ஏரினார் பொழில்சூழ்ந்த கச்சி யேகம்பம் மேயவனைக்
காரினார் மணிமாட மோங்கு கழுமல நன்னகருள்
பாரினார் தமிழ்ஞான சம்பந்தன் பரவிய பத்தும்வல்லார்
சீரினார் புகழோங்கி விண்ணவ ரோடுஞ் சேர்பவரே. கக

திருச்சிற்றம்பலம்

திருப்பறியலூர்வீரட்டம் - பண் - மேகராகக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

கருத்தன் கடவுள் கனலேந் தியாடும்
நிருத்தன் சடைமேல் நிரம்பா மதியன்
திருத்த முடையார் திருப்பறி யலூரில்
விருத்தன் எனத்தகும் வீரட்டத் தானே. க

மருந்தன் அமுதன் மயானத்துள் மைந்தன்
பெருந்தண் புனற்சென்னி வைத்த பெருமான்
திருந்து மறையோர் திருப்பறி யலூரில்
விரிந்த மலர்ச்சோலை வீரட்டத் தானே. உ

குளிர்ந்தார் சடையன் கொடுஞ்சிலை விற்காமன்
விளிந்தான் அடங்க வீந்தெய்தச் செற்றான்
தெளிந்தார் மறையோர் திருப்பறி யலூரில்
மிளிர்ந்தார் மலர்ச்சோலை வீரட்டத் தானே. ௩

பிறப்பாதி யில்லான் பிறப்பார் பிறப்புச்
செறப்பாதி யந்தஞ் செலச்செய்யுந் தேசன்
சிறப்பா டுடையார் திருப்பறி யலூரில்
விறற்பா ரிடஞ்சூழ வீரட்டத் தானே. ௪

கரிந்தார் இடுகாட்டில் ஆடுங்க பாலி
புரிந்தார் படுதம் புறங்காட் டிலாடும்
தெரிந்தார் மறையோர் திருப்பறி யலூரில்
விரிந்தார் மலர்ச்சோலை வீரட்டத் தானே. ரு

அரவற்ற நாணு அனல்அம்ப தாகச்
செருவுற் றவர்புரந் தீயெழச் செற்றான்
தெருவிற் கொடிசூழ் திருப்பறி யலூரில்
வெருவுற் றவர்தொழும் வீரட்டத் தானே. ௬

நரையார் விடையான் நலங்கொள் பெருமான்
அரையார் அரவம் அழகா அசைத்தான்
திரையார் புனல்சூழ் திருப்பறி யலூரில்
விரையார் மலர்ச்சோலை வீரட்டத் தானே. ௭

வளைக்கும் எயிற்றின் அரக்கன் வரைக்கீழ்
இளைக்கும் படிதா னிருந்தேழை யன்னம்
திளைக்கும் படுகர்த் திருப்பறி யலூரில்
விளைக்கும் வயல்சூழ்ந்த வீரட்டத் தானே. ௯

வளங்கொள் மலர்மேல் அயன்ஓத வண்ணன்
துளங்கும் மனத்தார் தொழத்தழ லாய்நின்றான்
இளங்கொம் பனாளோ டிணைந்தும் பிணைந்தும்
விளங்குந் திருப்பறியல் வீரட்டத் தானே. ௯

சடையன் பிறையன் சமண்சாக் கியரோ
டடையன் பிலாதான் அடியார் பெருமான்
உடையன் புலியின் உரிதோல் அரைமேல்
விடையன் திருப்பறியல் வீரட்டத் தானே. ௧௦

நறுநீ ருகுங்காழி ஞானசம் பந்தன்
வெறுநீர்த் திருப்பறியல் வீரட்டத் தானைப்
பொறிநீ டரவன் புனைபாடல் வல்லார்க்
கறும்நீ டவலம் அறும்பிறப் புத்தானே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருப்பராய்த்துறை - பண் - மேகராகக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

நீறுசேர்வதொர் மேனியர்நேரிழை
கூறுசேர்வதொர் கோலமாய்ப்
பாறுசேர்தலைக் கையர்பராய்த்துறை
ஆறுசேர்சடை அண்ணலே. ௧

கந்தமாமலர்க் கொன்றைகமழ்சடை
வந்தபூம்புனல் வைத்தவர்
பைந்தண்மாதவி சூழ்ந்தபராய்த்துறை
அந்தமில்ல அடிகளே. ௨

வேதர்வேதமெல் லாம்முறையால்விரித்
தோதநின்ற வொருவனார்

பாதிபெண்ணுரு ஆவர்பராய்த்துறை
ஆதியாய அடிகளே. ௩

தோலுந்தம்அரை யாடைசுடர்விடு
நூலுந்தாமணி மார்பினர்
பாலும்நெய்பயின் றாடுபராய்த்துறை
ஆலநீழல் அடிகளே. ௪

விரவிநீறுமெய் பூசுவர் மேனிமேல்
இரவில்நின்றெரி யாடுவர்
பரவினாவர் வேதம்பராய்த்துறை
அரவமார்த்த அடிகளே. ௫

மறையும்ஓதுவர் மான்மறிக்கையினர்
கறைகொள்கண்ட முடையவர்
பறையுஞ்சங்கும் ஒலிசெய்பராய்த்துறை
அறையநின்ற அடிகளே. ௬

விடையும் ஏறுவர் வெண்பொடிப்பூசுவர்
சடையிற்கங்கை தரித்தவர்
படைகொள்வெண்மழு வாளர்பராய்த்துறை
அடையநின்ற அடிகளே. ௭

தருக்கின்மிக்க தசக்கிரிவன்றனை
நெருக்கினார்விர லொன்றினால்
பருக்கினாவர் போலும்பராய்த்துறை
அரக்கன்றன்னை அடிகளே. ௮

காற்றமாமல ரானொடுமாலுமாய்த்
தோற்றமும்அறி யாதவர்
பாற்றினார்வினை யானபராய்த்துறை
ஆற்றல்மிக்க அடிகளே. ௯

திருவிலிச்சில தேரமண்ஆதர்கள்
உருவிலாவுரை கொள்ளேலும்
பருவிலால்எயில் எய்தபராய்த்துறை
மருவினன்றனை வாழ்த்துமே. ௧0

செல்வம்மல்கிய செல்வர்பாய்த்துறைச்
செல்வர்மேற்சிதை யாதன
செல்வன்ஞானசம் பந்தனசெந்தமிழ்
செல்வமாமிவை செப்பவே. கக

திருச்சிற்றம்பலம்

திருத்தருமபுரம் - பண் - யாழ்மூரி

திருச்சிற்றம்பலம்

மாதர்ம டப்பிடியும் மட அன்னமும் அன்னதோர்
நடை யுடைம் மலை மகள் துணையென மகிழ்வர்
பூதஇ னப்படைநின் றிசை பாடவும் ஆடுவர்
அவர் படர் சடைந் நெடு முடியதொர் புனலர்
வேதமொ டேழிசைபா டுவ ராழ்கடல் வெண்டிரை
யிரைந் நுரை கரை பொரு துவிம்மிநின் றயலே
தாதவிழ் புன்னைதயங் குமலர்ச்சிறை வண்டறை
யெழில் பொழில் குயில் பயில் தருமபு ரம்பதியே. க

பொங்குந டைப்புகலில் விடை யாமவர் ஊர்திவெண்
பொடி யணி தடங் கொள்மார் புபூண நூல் புரள
மங்குலி டைத்தவழும் மதி சூடுவர் ஆடுவர்
வளங் கிளர் புனல்அர வம்வைகிய சடையர்
சங்குக டல்திரையால் உதை யுண்டுச ரிந்திரிந்
தொசிந் தசைந் திசைந் துசே ரும்வெண்மணற் குவைமேல்
தங்குக திர்ம்மணிநித் திலம் எல்லிருள் ஒல்கநின்
றிலங் கொளிந் நலங் கெழில் தருமபு ரம்பதியே. உ

விண்ணுறு மால்வரைபோல் விடை யேறுவ ராறுசூ
டுவர் விரி சுரி யொளி கொள்தோடு நின்றிலங்கக்
கண்ணுற நின்றொளிருங் கதிர்வெண்மதிக் கண்ணியர்
கழிந் தவ ரிழிந் திடும் முடைதலை கலனாப்

பெண்ணுற நின்றவர்தம் உரு வம்அயன் மால்தொழவ்
வரி வையைப் பிணைந் திணைந் தணைந்ததும் பிரியார்
தண்ணிதழ் முல்லையொடெண் இதழ் மௌவல்ம ருங்கலர்
கருங் கழிந் நெருங் குநல் தருமபு ரம்பதியே. ௩

வாருறு மென்முலைநல் நுதல் ஏழையொ டாடுவர்
வளங் கிளர் விளங் குதிங் கள்வைகிய சடையர்
காருற நின்றலரும் மலர்க் கொன்றையங் கண்ணியர்
கடவ் விடை கொடி வெடி கொள்காடுறை பதியர்
பாருற விண்ணுலகம் பர வப்படு வோரவர்
படு தலைப் பலி கொளல் பரிபவந் நினையார்
தாருறு நல்லரவம் மலர் துன்னிய தாதுதிர்
தழை பொழில் மழைந் நுழை தருமபு ரம்பதியே. ௪

நேரும வர்க்குணரப் புகி லில்லைநெ டுஞ்சடைக்
கடும் புனல் படர்ந் திடம் படுவ்வதொர் நிலையர்
பேரும வர்க்கெனையா யிர முன்னைப்பி றப்பிறப்
பிலா தவ ருடல் தடர்த் தபெற்றியா ரறிவார்
ஆரம வர்க்கழல்வா யதொர் நாகம ழல்குறவ்
வெழில் கொழும் மலர் கொள்பொன் னிதழிநல் அலங்கல்
தாரம வர்க்கிமவான் மகள் ஊர்வது போர்விடை
கடி படு செடி பொழில் தருமபு ரம்பதியே. ௫

கூழையங் கோதைகுலா யவள் தம்பிணை புல்கமல் [துவர்வாய்
குமென் முலைப் பொறி கொள்பொற் கொடியிடைத்
மாழையொண் கண்மடவா ளையொர் பாகம கிழ்ந்தவர்
வலம் மலி படை விடை கொடிகொடும் மழுவ்வாள்
யாழையும் எள்கிடவே ழிசை வண்டுமு ரன்றினந்
துவன் றிமென் சிறகு கறை யுறந்நறவ்வி ரியுங்கல்
தாழையும் ஞாழலுந்நீ டிய கானலி னள்ளலி
சைபுள் ளினந் துயில் பயில் தருமபு ரம்பதியே. ௬

தேமரு வார்குழல்அன் னநடைப்பெடை மான்விழித்
திருந் திழை பொருந் துமே னிசெங்கதிர் விரியத்
தூமரு செஞ்சடையில் துதை வெண்மதி துன்றகொன்
றைதொல் புனல் சிரங் கரந் துரித்ததோ லுடையர்

காமரு தண்கழிநீ டிய கானல கண்டகங்
கடல் அடை கழி யிழி யமுண்டகத் தயலே
தாமரை சேர்குவளைப் படு கிற்கழு நீர்மலர்
வெறி கமழ் செறிவ் வயல் தருமபு ரம்பதியே. எ

தூவண நீறகலம் பொலி யவ்விரை புல்கமல்
குமென் மலர் வரை புரை திரள்புயம் அணிவர்
கோவண மும்உழையின் அத ளும்முடை யாடையர்
கோலம் மலி படை யொர்கு லமேந்திய குழகர்
பாவண மாவலறத் தலை பத்துடை யவ்வரக்
கனவ் வலி யொர்கவ் வைசெய் தருள்புரி தலைவர்
தாவண ஏறுடையெம் அடி கட்கிடம் வன்தடங்
கடல் இடுந் தடங் கரைத் தருமபு ரம்பதியே. அ

வார்மலி மென்முலைமா தொரு பாகம தாகுவர்
வளங் கிளர் மதி யர வம்வைகிய சடையர்
கூர்மலி சூலமும்வெண் மழு வும்மவர் வெல்படை
குனி சிலை தனிம் மலைய தேந்திய குழகர்
ஆர்மலி யாழிகொள்செல் வனும் அல்லிகொள் தாமரைம்
மிசை யவன் அடிம் முடி யளவுதாம் அறியார்
தார்மலி கொன்றையலங் கலு கந்தவர் தங்கிடங்
தடங் கடல் விடுந் திரைத் தருமபு ரம்பதியே. கூ

புத்தர்கள் தத்துவர்மொய்த் துறி புல்கிய கையர்பொய்ம்
மொழிந் தழி வில்பெற் றியுற் றநற்றவர் புலவோர்
பத்தர்க ளத்தவமெய்ப் பய னாகவு கந்தவர்
நிகழ்ந் தவர் சிவந் தவர் சுடலைப்பொடி யணிவர்
முத்தன வெண்ணகையொண் மலை மாதுமை பொன்னணி
புணர்ம் முலை யிணை துணை யணைவதும் பிரியார்
தத்தரு வித்திரளுந் திய மால்கட லோதம்வந்
தடர்ந் திடுந் தடம் பொழில் தருமபு ரம்பதியே. கய

பொன்னெடு நன்மணிமா ளிகைசூழ்விழ வம்மலி
   பொருஉ புனல் திருஉ அமர் புகலியென் றுலகில்
தன்னொடு நேர்பிறவில் பதி ஞானசம் பந்தனஃ
   தசெந் தமிழ்த் தடங் கடல் தருமபுரம் பதியைப்
பின்னொடு வார்சடையிற் பிறை யும்அர வும்முடை
   யவன் பிணை தணை கழல் கள்பேணுத லுரியார்
இன்னொடு நன்னுலகெய் துவ ரெய்திய போகமும்
   உறு வர்கள் இடர் பிணி துயரணைவ் விலரே. கக

திருச்சிற்றம்பலம்

முதல் திருமுறை

ஆ பதிகங்கள் - கங௬.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள்

அருளிச்செய்த

தேவாரப் பதிகங்கள்

இரண்டாந் திருமுறை

திருப்பூந்தராய் - பண் - இந்தளம்

விறுவுரை

திருச்சிற்றம்பலம்

செந்நெ லங்கழ னிப்பழ னத்தய லேசெழும்
புன்னை வெண்கிழி யிற்பவ ளம்புரை பூந்தராய்
துன்னி நல்லிமை யோர்முடி தோய்கழ லீர்சொலீர்
பின்னு செஞ்சடை யிற்பிறை பாம்புடன் வைத்ததே. க

எற்று தெண்டிரை யேறிய சங்கினொ டிப்பிகள்
பொற்றி கழ்கம லப்பழ னம்புகு பூந்தராய்ச்
சுற்றி நல்லிமை யோர்தொழு பொற்கழ லீர்சொலீர்
பெற்ற மேறுதல் பெற்றிமை யோபெரு மானீரே. உ

சங்கு செம்பவ ளத்திரள் முத்தவை தாங்கொடு
பொங்கு தெண்டிரை வந்தலைக் கும்புனற் பூந்தராய்த்
தங்க மால்களிற் றின்னுரி போர்த்துகந் தீர்சொலீர்
மங்கை பங்கமும் அங்கத்தொ டொன்றிய மாண்பதே. ங

சேம வன்மதில் பொன்னணி மாளிகை சேணுயர்
பூம ணங்கம ழும்பொழில் சூழ்தரு பூந்தராய்ச்
சோம னும்அர வுந்தொடர் செஞ்சடை யீர்சொலீர்
காமன் வெண்பொடி யாகக் கடைக்கண் சிவந்ததே. ௪

பள்ள மீன்இரை தேர்ந்துழ லும்பகு வாயன
புள்ளும் நாள்தொறுஞ் சேர்பொழில் சூழ்தரு பூந்தராய்த்
துள்ளும் மான்மறி யேந்திய செங்கையி னீர்சொலீர்
வெள்ள நீரொரு செஞ்சடை வைத்த வியப்பதே. ௫

மாதி லங்கிய மங்கைய ராடம ருங்கெலாம்
போதி லங்கம லம்மது வார்புனற் பூந்தராய்ச்
சோதி யஞ்சுடர் மேனிவெண் ணீறணி வீர்சொலீர்
காதி லங்குழை சங்கவெண் தோடுடன் வைத்ததே. ௬, ௭

வருக்க மார்தரு வான்கடு வன்னொடு மந்திகள்
தருக்கொள் சோலை தருங்கனி மாந்திய பூந்தராய்த்
துரக்கும் மால்விடை மேல்வரு வீரடி கேள்சொலீர்
அரக்க னாற்றல் அழித்தரு ளாக்கிய ஆக்கமே. ௮

வரிகொள் செங்கயல் பாய்புனல் சூழ்ந்த மருங்கெலாம்
புரிசை நீடுயர் மாடம்நி லாவிய பூந்தராய்ச்
சுருதி பாடிய பாணியல் தூமொழி யீர்சொலீர்
கரிய மாலயன் தேடியு மைக்கண்டி லாமையே. ௯

வண்ட லங்கழ னிம்மடை வாளைகள் பாய்புனற்
புண்ட ரீகம லர்ந்தும துத்தரு பூந்தராய்த்
தொண்டர் வந்தடி போற்றிசெய் தொல்கழ லீர்சொலீர்
குண்டர் சாக்கியர் கூறிய தாங்குறி யின்மையே. ௧0

மகர வார்கடல் வந்தணை யும்மணற் கானல்வாய்ப்
புகலி ஞானசம் பந்தன் எழில்மிகு பூந்தராய்ப்
பகவ னாரைப் பரவுசொல் மாலைபத் தும்வல்லார்
அகல்வர் தீவினை நல்வினை யோடுட னாவரே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருவலஞ்சுழி - பண் - இந்தளம்

வினவுரை

திருச்சிற்றம்பலம்

விண்டெ லாமல ரவ்விரை நாறுதண் தேன்விம்மி
வண்டெ லாம்நசை யாலிசை பாடும் வலஞ்சுழித்
தொண்டெ லாம்பர வுஞ்சுடர் போலொளி யீர்சொலீர்
பண்டெ லாம்பலி தேர்ந்தொலி பாடல் பயின்றதே. க

பாரல் வெண்குரு கும்பகு வாயன நாரையும்
வாரல் வெண்டிரை வாயிரை தேரும் வலஞ்சுழி
மூரல் வெண்முறு வல்நகு மொய்யொளி யீர்சொலீர்
ஊரல் வெண்தலை கொண்டுல கொக்கவு ழன்றதே. உ

கிண்ண வண்ணமல ருங்கிளர் தாமரைத் தாதளாய்
வண்ண நுண்மணல் மேலனம் வைகும் வலஞ்சுழிச்
சுண்ண வெண்பொடிக் கொண்டுமெய் பூசவ லீர்சொலீர்
விண்ண வர்தொழ வெண்தலை யிற்பலி கொண்டதே. ங

கோடெ லாம்நிறை யக்குவ ளைம்மல ருங்குழி
மாடெ லாம்மலி நீர்மண நாறும் வலஞ்சுழிச்
சேடெ லாமுடை யீர்சிறு மான்மறி யீர்சொலீர்
நாடெ லாம்அறி யத்தலை யின்னற வேற்றதே. ச

கொல்லை வென்றபுனத் திற்குரு மாமணி கொண்டுபோய்
வல்லை நுண்மணல் மேலனம் வைகும் வலஞ்சுழி
முல்லை வெண்முறு வல்நகை யாளொளி யீர்சொலீர்
சில்லை வெண்தலை யிற்பலி கொண்டுழல் செல்வமே. ரு

பூச நீர்பொழி யும்புனற் பொன்னியிற் பன்மலர்
வாச நீர்குடை வாரிடர் தீர்க்கும் வலஞ்சுழித்
தேச நீர்திரு நீர்சிறு மான்மறி யீர்சொலீர்
ஏச வெண்தலை யிற்பலி கொள்வதி லாமையே. சு

கந்த மாமலர்ச் சந்தொடு காரகி லுந்தழீஇ
வந்த நீர்குடை வாரிடர் தீர்க்கும் வலஞ்சுழி

அந்தம் நீர்முதல் நீர்நடு வாமடி கேள்சொலீர்
பந்தம் நீர்கரு தாதுல கிற்பலி கொள்வதே. எ

தேனுற் றநறு மாமலர்ச் சோலையில் வண்டினம்
வானுற் றநசை யாலிசை பாடும் வலஞ்சுழிக்
கானுற் றகளிற் றின்னுரி போர்க்கவல் லீர்சொலீர்
ஊனுற் றதலை கொண்டுல கொக்கவு ழன்றதே. அ

தீர்த்த நீர்வந் திழிபுனற் பொன்னியிற் பன்மலர்
வார்த்த நீர்குடை வாரிடர் தீர்க்கும் வலஞ்சுழி
ஆர்த்து வந்த அரக்கனை யன்றடர்த் தீர்சொலீர்
சீர்த்த வெண்டலை யிற்பலி கொள்வதுஞ் சீர்மையே. க

உரம னுஞ்சடை யீர்விடை யீரும தின்னருள்
வரம னும்பெற லாவதும் எந்தை வலஞ்சுழிப்
பிரம னுந்திரு மாலும் அளப்பரி யீர்சொலீர்
சிரமெ னுங்கல னிற்பலி வேண்டிய செல்வமே. கo

வீடும் ஞானமும் வேண்டுதி ரேல்விர தங்களால்
வாடி ஞானமென் னாவதும் எந்தை வலஞ்சுழி
நாடி ஞானசம் பந்தன செந்தமிழ் கொண்டிசை
பாடும் ஞானம்வல் லாரடி சேர்வது ஞானமே. கக

திருச்சிற்றம்பலம்

திருத்தெளிச்சேரி - பண் - இந்தளம்

திருச்சிற்றம்பலம்

பூவ லர்ந்தன கொண்டுமுப் போதும்உம் பொற்கழல்
தேவர் வந்து வணங்கு மிகுதெளிச் சேரியீர்
மேவ ருந்தொழி லாளொடு கேழற்பின் வேடனாம்
பாவகங் கொடு நின்றது போலும்நும் பான்மையே. க

விளக்கும் பத்திக்கு விண்ணவர் மண்ணவ ரேத்தவே
திளைக்குந் தீர்த்த மறுத நிகழ்தெளிச் சேரியீர்
வளைக்குந் திண்சிலை மேலைந்து பாணமுந் தானெய்து
களிக்குங் காமனை யெங்ஙனம் நீர்கண்ணிற் காய்ந்ததே. உ

வம்ப டுத்த மலர்ப்பொழில் சூழ மதிதவழ்
செம்ப டுத்த செழும்புரி சைத்தெளிச் சேரியீர்
கொம்ப டுத்ததொர் கோல விடைமிசைக் கூர்மையோ
டம்ப டுத்தகண் ணாளொடு மேவல் அழகிதே. ரு

காரு லாங்கடல் இப்பிகள் முத்தங் கரைப்பெயும்
தேரு லாநெடு வீதிய தார்தெளிச் சேரியீர்
ஏரு லாம்பலிக் கேகிட வைப்பிட மின்றியே
வாரு லாமுலை யாளையொர் பாகத்து வைத்ததே. சு

பக்கம் நுந்தமைப் பார்ப்பதி யேத்திமுன் பாவிக்கும்
செக்கர் மாமதி சேர்மதில் சூழ்தெளிச் சேரியீர்
மைக்கொள் கண்ணியர் கைவளை மால்செய்து வெளவவே
நக்க ராயுல கெங்கும் பலிக்கு நடப்பதே. ௫

தவள வெண்பிறை தோய்தரு தாழ்பொழில் சூழநல்
திவள மாமணி மாடந் திகழ்தெளிச் சேரியீர்
குவளை போற்கண்ணி துண்ணென வந்து குறுகிய
கவள மால்கரி யெங்ஙனம் நீர்கையிற் காய்ந்ததே. சு

கோட டுத்தபொ ழிலின்மி சைக்குயில் கூவிடும்
சேடடுத்த தொழிலின் மிகுதெளிச் சேரியீர்
மாடடுத்த மலர்க்கண்ணி னாள்கங்கை நங்கையைத்
தோடடுத்த மலர்ச்சடை யென்கொல்நீர் சூடிற்றே. எ

கொத்திரைத்த மலர்க்குழ லாள்குயில் கோலஞ்சேர்
சித்திரக் கொடி மாளிகை சூழ்தெளிச் சேரியீர்
வித்தகப் படை வல்லஅரக்கன் விறல்தலை
பத்தி ரட்டிக் கரம்நெரித் திட்டதும் பாதமே. அ

காலெ டுத்த திரைக்கை கரைக்கெறி கானல்சூழ்
சேல டுத்த வயற்பழ னத்தெளிச் சேரியீர்
மால டித்தலம் மாமல ரான்முடி தேடியே
ஓல மிட்டிட எங்ஙனம் ஒருருக் கொண்டதே. கூ

மந்தி ரந்தரு மாமறையோர்கள் தவத்தவர்
செந்தி லங்கு மொழியவர் சேர்தெளிச் சேரியீர்

வெந்த லாகிய சாக்கிய ரோடுச மணர்கள்
தந்தி றத்தன நீக்குவித் தீரோர் சதிரரே. ௧௦

திக்கு லாம்பொழில் சூழ்தெளிச் சேரியெஞ் செல்வனை
மிக்க காழியுள் ஞானசம் பந்தன் விளம்பிய
தக்க பாடல்கள் பத்தும்வல் லார்கள் தடமுடித்
தொக்க வானவர் சூழ இருப்பவர் சொல்லிலே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருவான்மியூர் - பண் - இந்தளம்

வினவுரை

திருச்சிற்றம்பலம்

கரையு லாங்கட லிற்பொலி சங்கம்வெள் ளிப்பிவன்
திரையு லாங்கழி மீனுக ளுந்திரு வான்மியூர்
உரையு லாம்பொரு ளாயுல காளுடை யீர்சொலீர்
வரையு லாமட மாதுட னாகிய மாண்பதே. ௧

சந்த யர்ந்தெழு காரகில் தண்புனல் கொண்டுதம்
சிந்தை செய்தடி யார்பர வுந்திரு வான்மியூர்ச்
சுந்தரக் கழல் மேற்சிலம் பார்க்கவல் லீர்சொலீர்
அந்தி யின்னொளி யின்நிற மாக்கிய வண்ணமே. ௨

கான யங்கிய தண்கழி சூழ்கட லின்புறம்
தேன யங்கிய பைம்பொழில் சூழ்திரு வான்மியூர்த்
தோன யக்கம ராடையி னீரடி கேள்சொலீர்
ஆனையங் கவ்வுரி போர்த்தன லாட வுகந்ததே. ௩

மஞ்சு லாவிய மாடம திற்பொலி மாளிகைச்
செஞ்சொ லாளர்கள் தாம்பயி லுந்திரு வான்மியூர்த்
துஞ்சு வஞ்சிரு ளாடலு கக்கவல் லீர்சொலீர்
வஞ்ச நஞ்சுண்டு வானவர்க் கின்னருள் வைத்ததே. ௪

மண்ணி னிற்புகழ் பெற்றவர் மங்கையர் தாம்பயில்
திண்ணெ னப்புரி சைத்தொழி லார்திரு வான்மியூர்த்

துண்ணெ னத்திரி யுஞ்சரி தைத்தொழி லீர்சொலீர்
விண்ணி னிற்பிறை செஞ்சடை வைத்த வியப்பதே. ரு

போது லாவிய தண்பொழில் சூழ்புரி சைப்புறம்
தீதில் அந்தணர் ஓத்தொழி யாத்திரு வான்மியூர்ச்
சூது லாவிய கொங்கையொர் பங்குடை யீர்சொலீர்
மூதெ யில்லொரு மூன்றெரி யூட்டிய மொய்ம்பதே. சு

வண்டி ரைத்த தடம்பொழி லின்நிழற் கானல்வாய்த்
தெண்டி ரைக்கட லோதமல் குந்திரு வான்மியூர்த்
தொண்டி ரைத்தெழுந் தேத்திய தொல்கழ லீர்சொலீர்
பண்டி ருக்கொரு நால்வர்க்கு நீருரை செய்ததே. எ

தக்கில் வந்த தசக்கிரி வன்தலை பத்திறத்
திக்கில் வந்தல றவ்வடர்த் தீர்திரு வான்மியூர்த்
தொக்க மாதொடும் வீற்றிருந் தீரரு ளென்சொலீர்
பக்க மேபல பாரிடம் பேய்கள் பயின்றதே. அ

பொருது வார்கட லெண்திசை யுந்தருவாரியால்
திரித ரும்புகழ் செல்வமல் குந்திரு வான்மியூர்ச்
சுருதியாரிரு வர்க்கும் அறிவரி யீர்சொலீர்
எருது மேல்கொ டுழன்றுகந் தில்பலி யேற்றதே. கூ

மைத ழைத்தெழு சோலையின் மாலைசேர் வண்டினம்
செய்த வத்தொழி லாரிசை சேர்திரு வான்மியூர்
மெய்த வப்பொடி பூசிய மேனியி னீர்சொலீர்
கைதவச் சமண் சாக்கியர் கட்டுரைக் கின்றதே. ௧௦

மாதொர் கூறுடை நற்றவ னைத்திரு வான்மியூர்
ஆதி யெம்பெரு மானருள் செய்ய வினவுரை
ஓதி யன்றெழு காழியுள் ஞானசம் பந்தன்சொல்
நீதி யால்நினை வார்நெடு வானுல காள்வரே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருஅனேகதங்காவதம் - பண் - இந்தளம்

திருச்சிற்றம்பலம்

நீடல் மேவுநிமிர் புன்சடை மேலோர் நிலாமுளை
சூடல் மேவுமறை யின்முறை யாலோர் சுலாவழல்
ஆடல் மேவுமவர் மேய அனேகதங் காவதம்
பாடல் மேவுமனத் தார்வினை பற்றறுப் பார்களே. க

சூல முண்டுமழு வுண்டவர் தொல்படை சூழ்கடல்
ஆல முண்டபெரு மான்தன் அனேகதங் காவதம்
நீல முண்டதடங் கண்ணுமை பாகம் நிலாயதோர்
கோல முண்டள வில்லை குலாவிய கொள்கையே. உ

செம்பி னாருமதில் மூன்றெரி யச்சின வாயதோர்
அம்பி னாலெய்தருள் வில்லி யனேகதங் காவதம்
கொம்பின் நேரிடை யாளொடுங் கூடிக்கொல் லேறுடை
நம்பன் நாமநவி லாதன நாவென லாகுமே. ங

தந்தத் திந்தத்தட மென்றரு வித்திரள் பாய்ந்துபோய்ச்
சிந்த வெந்தகதி ரோனொடு மாசறு திங்களார்
அந்த மில்லவள வில்ல அனேகதங் காவதம்
எந்தை வெந்தபொடி நீறணி வார்க்கிட மாவதே. ச

பிறையு மாசில்கதி ரோன்அறி யாமைப் பெயர்ந்துபோய்
உறையுங் கோயில் பசும்பொன் அணியார் அசும்பார்புனல்
அறையும் ஓசை பறைபோலும் அனேகதங் காவதம்
இறையெம் மீச னெம்மா னிடமாக வுகந்ததே. ரு

தேனை யேறுநறு மாமலர் கொண்டடி சேர்த்துவீர்
ஆனை யேறுமணி சாரல் அனேகதங் காவதம்
வானை யேறுநெறி சென்றுணருந் தனை வல்லிரேல்
ஆனை யேறுமுடி யானருள் செய்வதும் வானையே. சு

வெருவி வேழம்இரி யக்கதிர் முத்தொடு வெண்பளிங்
குருவி வீழவயி ரங்கொழி யாவகி லுந்திவெள்
அருவி பாயுமணி சாரல் அனேகதங் காவதம்
மருவி வாழும்பெரு மான்கழல் சேர்வது வாய்மையே. எ

ஈர மேதுமில னாகி யெழுந்த இராவணன்
வீர மேதுமில னாக விளைத்த விலங்கலான்
ஆரம் பாம்ப தணிவான்றன் அனேகதங் காவதம்
வாரமாகிநினை வார்வினை யாயின மாயுமே. அ

கண்ணன் வண்ணமல ரானொடுங் கூடியோர்க் கையமாய்
எண்ணும் வண்ணமறி யாமையெ ழுந்ததோ ராரழல்
அண்ணல் நண்ணுமணி சாரல் அனேகதங் காவதம்
நண்ணும் வண்ணமுடை யார்வினை யாயின நாசமே. க

மாப தம்அறி யாதவர் சாவகர் சாக்கியர்
ஏப தம்பட நின்றிறு மாந்துழல் வார்கள்தாம்
ஆப தம்அறி வீருளி ராகில் அனேகதங்
காப தம்மமர்ந் தான்கழல் சேர்தல் கருமமே. க0

தொல்லை யூழிப்பெயர் தோன்றிய தோணிபு ரத்திறை
நல்ல கேள்வித்தமிழ் ஞானசம் பந்தன்நல் லார்கள்முன்
அல்லல் தீரவுரை செய்த அனேகதங் காவதம்
சொல்ல நல்லஅடை யும்அடை யாசுடு துன்பமே. கக

திருச்சிற்றம்பலம்

திருவையாறு - பண் - இந்தளம்

திருச்சிற்றம்பலம்

கோடல் கோங்கங் குளிர் கூவிளமாலை குலாயசீர்
ஓடு கங்கை ஒளிவெண் பிறைசூடும் ஒருவனார்
பாடல் வீணை முழவங்குழல் மொந்தைபண் ணாகவே
ஆடுமா றுவல் லானும் ஐயா றுடை ஐயனே. க

தன்மை யாரும் அறிவாரில்லை தாம்பிறர் எள்கவே
பின்னும் முன்னுஞ்சில பேய்க்க ணஞ்சூழத் திரிதர்வர்
துன்ன ஆடை யுடுப்பர் சுடலைப்பொடிப் பூசுவர்
அன்னம் ஆலுந்துறை யானும் ஐயா றுடை ஐயனே. உ

கூறு பெண்உடை கோவணம் உண்பதும் வெண்தலை
மாறி லாருங்கொள் வாரில்லை மார்பி லணிகலம்

ஏறும் ஏறித்திரி வரிவமை யோர்தொழு தேத்தவே
ஆறும் நான்குஞ்சொன் னானும் ஐயா றுடை ஐயனே. ரு

பண்ணின் நல்லமொழி யார்பவ ளத்துவர் வாயினார்
எண்ணின் நல்லகுணத் தாரிணை வேல்வென்ற கண்ணினார்
வண்ணம் பாடிவலி பாடித்தம் வாய்மொழி பாடவே
அண்ணல் கேட்டுகந் தானும் ஐயா றுடை ஐயனே. ௬

வேன லானை வெருவவுரி போர்த்துமை யஞ்சவே
வானை யூடறுக் கும்மதி சூடிய மைந்தனார்
தேன்நெய் பால்தயிர் தெங்கிள நீர்கரும் பின்தெளி
ஆனஞ் சாடுமுடி யானும் ஐயா றுடை ஐயனே. ௭

எக்கு மாகி நின்றானும் இயல்பறி யப்படா
மங்கை பாகங்கொண் டானும் மதிசூடு மைந்தனும்
பங்க மில்பதி னெட்டொடு நான்குக் குணர்வுமாய்
அக்கம் ஆறுஞ்சொன் னானும் ஐயா றுடை ஐயனே. ௮

ஓதி யாருமறி வாரில்லை யோதி யுலகெலாம்
சோதி யாய்நிறைந் தான்சுடர்ச் சோதியுட் சோதியான்
வேதி யாகிவிண் ணாகிமண் ணோடெறி காற்றுமாய்
ஆதி யாகிநின் றானும் ஐயா றுடை ஐயனே. ௭

குரவ நாண்மலர் கொண்டடி யார்வழி பாடுசெய்
விரவி நீறணி வார்சில தொண்டர் வியப்பவே
பரவி நாள்தொறும் பாடநம் பாவம் பறைதலால்
அரவ மார்த்துகந் தானும் ஐயா றுடை ஐயனே. அ

உரைசெய் தொல்வழி செய்தறி யாஇலங் கைக்குமன்
வரைசெய் தோளடர்த் தும்மதி சூடிய மைந்தனார்
கரைசெய் காவிரி யின்வட பாலது காதலான்
அரைசெய் மேகலை யானும் ஐயா றுடை ஐயனே. ௯

மாலுஞ் சோதி மலரானும் அறிகிலா வாய்மையான்
காலங் காம்பு வயிரங் கடிகையன் பொற்கழல்
கோல மாய்க்கொழுந் தீன்று பவளந் திரண்டதோர்
ஆல நீழலு ளானும் ஐயா றுடை ஐயனே. ௰

கையி லுண்டுழல் வாருங் கமழ்துவ ராடையால்
மெய்யைப் போர்த்துழல் வாரும் உரைப்பன மெய்யல
மைகொள் கண்டத்தெண் தோள்முக்க ணன்கழல் வாழ்த்தவே
ஐயந் தேர்ந்தளிப் பானும் ஐயாறுடை ஐயனே. கக

பலிதி ரிந்துழல் பண்டங்கன் மேய ஐயாற்றினைக்
கலிக டந்தகை யான்கடற் காழியர் காவலன்
ஒலிகொள் சம்பந்தன் ஒண்தமிழ் பத்தும்வல் லார்கள்போய்
மலிகொள் விண்ணிடை மன்னிய சீர்பெறு வார்களே. கஉ

திருச்சிற்றம்பலம்

திருவாஞ்சியம் - பண் - இந்தளம்

திருச்சிற்றம்பலம்

வன்னி கொன்றை மதமத்தம் எருக்கொடு கூவிளம்
பொன்னி யன்றசடை யிற்பொலி வித்தபு ராணனார்
தென்ன வென்றுவரி வண்டிசை செய்திரு வாஞ்சியம்
என்னை யாளுடை யானிட மாகவு கந்ததே. க

காலகா லர்கரி கானிடை மாநட மாடுவர்
மேலர்வே லைவிட முண்டிருள் கின்றமி டற்றினர்
மாலைகோ லமதி மாடமன் னுந்திரு வாஞ்சியம்
ஞாலம்வந் துபணி யப்பொலி கோயில் நயந்ததே. உ

மேவிலொன் றர்விரி வுற்ற இரண்டினர் மூன்றுமாய்
நாவின்நா லர்உட லஞ்சினர் ஆறர் ஏழோசையர்
தேவில்எட் டர்திரு வாஞ்சியம் மேவிய செல்வனார்
பாவந்தீர்ப் பர்பழி போக்குவர் தம்அடி யார்கட்கே. ௩

சூலமேந் திவளர் கையினர் மெய்சுவண் டாகவே
சாலநல் லபொடிப் பூசுவர் பேசுவர் மாமறை
சீலமே வுபுக ழாற்பெரு குந்திரு வாஞ்சியம்
ஆலமுண் டஅடி கள்ளிட மாக அமர்ந்ததே. ௪

கையிலங் குமறி யேந்துவர் காந்தளம் மெல்விரல்
தையல்பா கமுடை யார்அடை யார்புரஞ் செற்றவர்

செய்யமே னிக்கரி யம்மிடற் றார்திரு வாஞ்சியத்
தையர்பா தம்அடை வார்க்கடை யாஅரு நோய்களே. ரு

அரவம்பூண் பாணி யுஞ்சிலம் பார்க்க அகந்தொறும்
இரவில்நல் லபலி பேணுவர் நாணிலர் நாமமே
பரவு வார்வினை தீர்க்கநின் றார்திரு வாஞ்சியம்
மருவியேத் தமட மாதொடு நின்றஎம் மைந்தரே. சு

விண்ணி லானபிறை சூடுவர் தாழ்ந்து விளங்கவே
கண்ணி னால்அநங் கன்னுட லம்பொடி யாக்கினார்
பண்ணி லானஇசை பாடல்மல் குந்திரு வாஞ்சியத்
தண்ணலார் தம்அடி போற்றவல் லார்க்கில்லை அல்லலே. எ

மாடநீ டுகொடி மன்னிய தென்னிலங் கைக்குமன்
வாடியூ டவரை யாலடர்த் தன்றருள் செய்தவர்
வேடவே டர்திரு வாஞ்சியம் மேவிய வேந்தரைப்
பாடநீ டுமனத் தார்வினை பற்றறுப் பார்களே. அ

செடிகொள்நோ யின்அடை யார்திறம் பார்செறு தீவினை
கடியகூற் றமுங் கண்டக லும்புகல் தான்வரும்
நெடியமா லொடயன் ஏத்தநின் றார்திரு வாஞ்சியத்
தடிகள்பா தம்அடைந் தாரடி யாரடி யார்கட்கே. கூ

பிண்டமுண் டுதிரி வார்பிரி யுந்துவ ராடையார்
மிண்டர்மிண் டும்மொழி மெய்யல பொய்யிலை யெம்இறை
வண்டுகெண் டிமரு வும்பொழில் சூழ்திரு வாஞ்சியத்
தண்டவா ணன்அடி கைதொழு வார்க்கில்லை அல்லலே. க0

தென்றல்துன் றும்பொழில் சென்றணை யுந்திரு வாஞ்சியத்
தென்றநின் றஇறை யானையு ணர்ந்தடி யேத்தலால்
நன்றுகா ழிமறை ஞானசம் பந்தன செந்தமிழ்
ஒன்றும்உள் ளமுடை யாரடை வாருயர் வானமே. கக

திருச்சிற்றம்பலம்

திருச்சிக்கல் - பண் - இந்தளம்

திருச்சிற்றம்பலம்

வானுலா வும்மதி வந்துலா வும்மதில் மாளிகை
தேனுலா வும்மலர்ச் சோலைமல் குந்திகழ் சிக்கலுள்
வேனல்வே ளைவிழித் திட்டவெண் ணெய்ப்பெரு மானடி
ஞானமா கநினை வார்வினை யாயின நையுமே. க

மடங்கொள்வா ளைகுதி கொள்ளும் மணமலர்ப் பொய்கைசூழ்
திடங்கொள் மாமறை யோரவர் மல்கிய சிக்கலுள்
விடங்கொள் கண்டத்துவெண் ணெய்ப்பெரு மானடி மேவிய
அடைந்துவா ழும்அடி யாரவர் அல்லல் அறுப்பரே. உ

நீலம்நெய் தல்நில விம்மல ருஞ்சுனை நீடிய
சேலுமா லுங்கழ னிவ்வளம் மல்கிய சிக்கலுள்
வேலொண் கண்ணியி னாளையொர் பாகன்வெண் ணெய்ப்பிரான்
பாலவண் ணன்கழ லேத்தநம் பாவம்ப றையுமே. ௩

கந்தமுந் தக்கைதை பூத்துக்க மழ்ந்துசே ரும்பொழிற்
செந்துவண் டின்னிசை பாடல்மல் குந்திகழ் சிக்கலுள்
வெந்தவெண் ணீற்றண்ணல் வெண்ணெய்ப் பிரான்விரை யார்கழல்
சிந்தைசெய் வார்வினை யாயின தேய்வது திண்ணமே. ௪

மங்குல்தங் கும்மறை யோர்கள்மா டத்தய லேமிகு
தெங்குதுங் கப்பொழிற் செல்வமல் குந்திகழ் சிக்கலுள்
வெங்கண்வெள் ளேறுடை வெண்ணெய்ப்பி ரானடி மேவவே
தங்கு மேற்சா தந்திரு நாளுந்த கையுமே. ரு

வண்டிரைத் தும்மது விம்மிய மாமலர்ப் பொய்கைசூழ்
தெண்டிரைக் கொள்புனல் வந்தொழு கும்வயற் சிக்கலுள்
விண்டிரைத் தம்மல ராற்றிகழ் வெண்ணெய்ப் பிரானடி
கண்டிரைத் தும்மன மேமதி யாய்கதி யாகவே. சா

முன்னுமா டம்மதில் மூன்றுட னேயெரி யாய்விழத்
துன்னுவார் வெங்கணை யொன்றுசெ லுத்திய சோதியான்
செந்நெலா ரும்வயற் சிக்கல்வெண் ணெய்ப்பெரு மானடி
உன்னிநீ டம்மன மேநினை யாய்வினை ஓயவே. எ

தெற்ற லாகிய தென்னிலங் கைக்கிறை வன்மலை
பற்றி ஞன்முடி பத்தொடு தோள்கள் நெரியவே
செற்ற தேவன்நஞ் சிக்கல்வெண் ணெய்ப்பெரு மானடி
உற்று நீகினை யாய்வினை யாயின ஓயவே. அ

மாலி னோடரு மாமறை வல்லமு னிவனும்
கோலி னர்குறு கச்சிவன் சேவடி கோலியும்
சிலந் தாமறி யார்திகழ் சிக்கல்வெண் ணெய்ப்பிரான்
பாலும் பன்மலர் தூவப்ப றையும்நம் பாவமே. கூ

பட்டை நல்துவ ராடையி னூரொடும் பாங்கிலாக்
கட்டமண்கழுக் கள்சொல்வி னைக்கரு தாதுநீர்
சிட்டன் சிக்கல்வெண் ணெய்ப்பெரு மான்செழு மாமறைப்
பட்டன் சேவடி யேபணி மின்பிணி போகவே. கo

கந்த மார்பொழிற் காழியுள் ஞானசம் பந்தன்நல்
செந்தண் பூம்பொழிற் சிக்கல்வெண் ணெய்ப்பெரு மானடிச்
சந்த மாச்சொன்ன செந்தமிழ் வல்லவர் வானிடை
வெந்த நீறணி யும்பெரு மானடி மேவரே. கக

திருச்சிற்றம்பலம்

திருமழபாடி - பண் - இந்தளம்

திருச்சிற்றம்பலம்

களையும் வல்வினை யஞ்சல்நெஞ் சேகரு தார்புரம்
உளையும் பூசல்செய் தானுயர் மால்வரை நல்விலா
வளைய வெஞ்சரம் வாங்கியெய் தான்மதுத் தும்பிவண்
டளையுங் கொன்றையந் தார்மழ பாடியுள் அண்ணலே. க

காச்சி லாதபொன் னோக்குங்க னவயி ரத்திரள்
ஆச்சி லாதப ளிங்கினன் அஞ்சுமுன் ஆடினன்
பேச்சி னாலுமக் காவதென் பேதைகாள் பேணுமின்
வாச்ச மாளிகை சூழ்மழ பாடியை வாழ்த்துமே. உ

ஊங்கெ டப்பவன் உம்பர்க ளாயவர் தங்களைப்
பாங்கெ டப்பவன் நஞ்சையுண் டபக லோன்றனை

முரண்கெ டுப்பவன் முப்புரந் தீயெழச் செற்றுமுன்
வரங்கொ டுப்பவன் மாமழ பாடியுள் வள்ளலே. ௩

பள்ள மார்சடை யிற்புடை யேயடை யப்புனல்
வெள்ளம் ஆதரித் தான்விடை யேறிய வேதியன்
வள்ளல் மாமழ பாடியுள் மேயம ருந்தினை
உள்ளம் ஆதரி மின்வினை யாயின ஓயவே. ௪

தேனு லாமலர் கொண்டுமெய்த் தேவர்கள் சித்தர்கள்
பால்நெய் அஞ்சுடன் ஆட்டமுன் ஆடிய பால்வணன்
வான நாடர்கள் கைதொழு மாமழ பாடியெம்
கோனை நாள்தொறுங் கும்பிட வேகுறி கூடுமே. ௫

தெரிந்த வன்புர மூன்றுடன் மாட்டிய சேவகன்
பரிந்து கைதொழு வாரவர் தம்மனம் பாவினான்
வரிந்த வெஞ்சிலை யொன்றுடை யான்மழ பாடியைப்
புரிந்து கைதொழு மின்வினை யாயின போகுமே. ௬

சந்த வார்குழ லாளுமை தன்னொரு கூறுடை
எந்தை யான்இமை யாதமுக் கண்ணினன் எம்பிரான்
மைந்தன் வார்பொழில் சூழ்மழ பாடிம ருந்தினைச்
சிந்தி யாவெழு வார்வினை யாயின தேயுமே. ௭

இரக்கம் ஒன்றுமி லான்இறை யான்திரு மாமலை
உரக்கை யாலெடுத் தான்தன தொண்முடி பத்திற
விரல்த லைந்நிறு வியுமை யாளொடு மேயவன்
வரத்தை யேகொடுக் கும்மழ பாடியுள் வள்ளலே. ௮

ஆலம் உண்டமு தம்அம ரர்க்கருள் அண்ணலார்
காலன் ஆருயிர் வீட்டிய மாமணி கண்டனார்
சால நல்லடி யார்தவத் தார்களுஞ் சார்விடம்
மால யன்வணங் கும்மழ பாடியெம் மைந்தனே. ௯

கலியின் வல்லம ணுங்கருஞ் சாக்கியப் பேய்களும்
நலியும் நாள்கெடுத் தாண்டஎன் நாதனார் வாழ்பதி
பலியும் பாட்டொடு பண்முழ வும்பல வோசையும்
மலியும் மாமழ பாடியை வாழ்த்திவ ணங்குமே. ௧௦

மலியும் மாளிகை சூழ்மழ பாடியுள் வள்ளலைக்
கலிசெய் மாமதில் சூழ்கடற் காழிக் கவுணியன்
• • • * ௧௧

திருச்சிற்றம்பலம்

திருமங்கலக்குடி - பண் - இந்தளம்

திருச்சிற்றம்பலம்

சீரி னார்மணி யும்அகில் சந்துஞ்செ றிவரை
வாரி நீர்வரு பொன்னிவ டமங்க லக்குடி
நீரின் மாமுனி வன்நெடுங் கைகொடு நீர்தனைப்
பூரித் தாட்டியர்ச் சிக்கஇ ருந்த புராணனே. ௧

பணங்கொ ளாடர வல்குல்நல் லார்பயின் றேத்தவே
மணங்கொள் மாமயி லாலும்பொ ழில்மங்க லக்குடி
இணங்கி லாமறை யோரிமை யோர்தொழு தேத்திட
அணங்கி னோடிருந் தானடி யேசர ணாகுமே. ௨

கருங்கை யானையின் ஈருரி போர்த்திடு கள்வனார்
மருங்கெ லாம்மண மார்பொழில் சூழ்மங்க லக்குடி
அரும்பு சேர்மலர்க் கொன்றையி னானடி யன்பொடு
விரும்பி யேத்தவல் லார்வினை யாயின வீடுமே. ௩

பறையி னோடொலி பாடலும் ஆடலும் பாரிடம்
மறையி னோடியல் மல்கிடு வார்மங்க லக்குடிக்
குறைவி லாநிறை வேகுண மில்குண மேயென்று
முறையி னால்வணங் கும்மவர் முன்னெறி காண்பரே. ௪

ஆனி லங்கிளர் ஐந்தும் அவிர்முடி யாடியோர்
மானி லங்கையி னான்மண மார்மங்க லக்குடி
ஊனில் வெண்தலைக் கையுடை யானுயர் பாதமே
ஞான மாகநின் றேத்தவல் லார்வினை நாசமே. ௫

தேனு மாயமு தாகிநின் றான்தெளி சிந்தையுள்
வானு மாய்மதி சூடவல் லான்மங்க லக்குடிக்

கோனை நாள்தொறும் ஏத்திக்கு ணங்கொடு கூறுவார்
ஊன மானவை போயறும் உய்யும்வ கையதே. ௬

வேள்படுத்திடு கண்ணினன் மேருவில் லாகவே
வாள ரக்கர்பு ரமெரித் தான்மங்க லக்குடி
ஆளும் ஆதிப்பி ரானடி கள்ளடைந் தேத்தவே
கோளும் நாளவை போயறுங் குற்றமில் லார்களே. எ

பொலியும் மால்வரை புக்கெடுத் தான்புகழ்ந் தேத்திட
வலியும் வாளொடு நாள்கொடுத் தான்மங்க லக்குடிப்
புலியின் ஆடையி னானடி யேத்திடும் புண்ணியர்
மலியும் வானுல கம்புக வல்லவர் காண்மினே. அ

ஞாலம் முன்படைத் தான்நளிர் மாமலர் மேலயன்
மாலுங் காணவொ ணாஎரி யான்மங்க லக்குடி
ஏல வார்குழ லாளொரு பாகமி டங்கொடு
கோல மாகிநின் றான்குணங் கூறுங் குணமதே. ௯

மெய்யின் மாசினர் மேனிவி ரிதுவ ராடையர்
பொய்யை விட்டிடும் புண்ணியர் சேர்மங்க லக்குடிச்
செய்ய மேனிச்செ ழும்புனற் கங்கைசெ றிசடை
ஐயன் சேவடி யேத்தவல் லார்க்கழ காகுமே. ௧௦

மந்த மாம்பொழில் சூழ்மங்க லக்குடி மன்னிய
எந்தை யையெழி லார்பொழிற் காழியர் காவலன்
சிந்தை செய்தடி சேர்த்திடு ஞானசம் பந்தன்சொல்
முந்தி யேத்தவல் லாரிமை யோர்முத லாவரே. ௧௧

திருச்சிற்றம்பலம்

சீகாழி - பண் - இந்தளம்

திருச்சிற்றம்பலம்

நல்லானை நான்மறை யோடிய லாறங்கம்
வல்லானை வல்லவர் பான்மலிந் தோங்கிய
சொல்லானைத் தொன்மதிற் காழியே கோயிலாம்
இல்லானை யேத்தநின் றார்க்குள தின்பமே. ௧

நம்மானம் மாற்றி நமக்கரு ளாய்நின்ற
பெம்மானைப் பேயுடன் ஆடல்பு ரிந்தானை
அம்மானை யந்தணர் சேருமணிகாழி
எம்மானை யேத்தவல் லார்க்கிட ரில்லையே. ௨

அருந்தானை யன்புசெய் தேத்தகில் லார்பாற்
பொருந்தானைப் பொய்யடி மைத்தொழில் செய்வாருள்
விருந்தானை வேதிய ரோதிமி டைகாழி
இருந்தானை யேத்துமின் நும்வினை யேகவே. ௩

புற்றானைப் புற்றர வம்அரை யின்மிசைச்
சுற்றானைத் தொண்டுசெய் வாரவர் தம்மொடும்
அற்றானை அந்தணர் காழி அமர்கோயில்
பற்றானைப் பற்றிநின் றார்க்கில்லை பாவமே. ௪

நெதியானை நெஞ்சிடங் கொள்ளநி னைவார்தம்
விதியானை விண்ணவர் தாம்வியந் தேத்திய
கதியானைக் காருல வும்பொழிற் காழியாம்
பதியானைப் பாடுமின் நும்வினை பாறவே. ௫

செப்பான மென்முலை யாளைத் திகழ்மேனி
வைப்பானை வார்கழ லேத்தி நினைவார்தம்
ஒப்பானை ஓதம் உலாவு கடற்காழி
மெய்ப்பானை மேவிய மாந்தர் வியந்தாரே. ௬

துன்பானைத் துன்பம் அழித்தரு ளாக்கிய
இன்பானை யேழிசை யின்னிலை பேணுவார்
அன்பானை அணிபொழிற் காழிந கர்மேய
நம்பானை நண்ணவல் லார்வினை நாசமே. ௭

குன்றானைக் குன்றெடுத் தான்புயம் நாலைந்தும்
வென்றானை மென்மல ரானொடு மால்தேட
நின்றானை நேரிழை யாளொடுங் காழியுள்
நன்றானை நம்பெரு மானை நணுகுமே. ௮

சாவாயும் வாதுசெய் சாவகர் சாக்கியர்
மேவாத சொல்லவை கேட்டுவெ குளேன்மின்

பூவாய கொன்றையி னானைப் புனற்காழிக்
கோவாய கொள்கையி னானடி கூறுமே. ௧, ௧0

கழியார்சீ ரோதம்மல் குங்கடற் காழியுள்
ஒழியாது கோயில்கொண் டானை யுகந்துள்கித்
தழியார்சொல் ஞானசம் பந்தன் தமிழார
மொழிவார்கள் மூவுல கும்பெறு வார்களே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருக்கச்சியேகம்பம் - பண் - இந்தளம்

திருச்சிற்றம்பலம்

மறையானை மாசிலாப் புன்சடை மல்குவெண்
பிறையானைப் பெண்ணொடா ணாகிய பெம்மானை
இறையானை யேர்கொள்கச் சித்திரு வேகம்பத்
துறைவானை யல்லதுள் காதென துள்ளமே. ௧

நொச்சியே வன்னிகொன் றைமதி கூவிளம்
உச்சியே புனைதல்வே டம்விடை யூர்தியான்
கச்சியே கம்பம்மே யகறைக் கண்டனை
நச்சியே தொழுமின்நும் மேல்வினை நையுமே. ௨

பாராரு முழவம்மொந் தைகுழல் யாழொலி
சீராலே பாடலா டல்சிதை வில்லதோர்
ஏரார்பூங் கச்சியே கம்பனை யெம்மானைச்
சேராதார் இன்பமா யந்நெறி சேராரே. ௩

குன்றேய்க்கு நெடுவெண்மா டக்கொடி கூடிப்போய்
மின்தேய்க்கும் முகில்கள்தோ யும்வியன் கச்சியுள்
மன்றேய்க்கு மல்குசீ ரான்மலி யேகம்பம்
சென்றேய்க்குஞ் சிந்தையார் மேல்வினை சேராவே. ௪

சடையானைத் தலைகையேந் திப்பலி தருவார்தம்
கடையேபோய் மூன்றுங்கொண் டான்கலிக் கச்சியுள்
புடையேபொன் மலருங்கம் பைக்கரை யேகம்பம்
உடையானை யல்லதுள் காதென துள்ளமே. ௫

மழுவாளோ டெழில்கொள்சூ லப்படை வல்லார்தம்
கெழுவாளோ ரிமையாருச் சியுமை யாள்கங்கை
வழுவாமே மல்குசீ ரால்வள ரேகம்பம்
தொழுவாரே விழுமியார் மேல்வினை துன்னாவே. ௬

விண்ணுளார் மறைகள்வே தம்விரித் தோதுவார்
கண்ணுளார் கழலின்வெல் வார்கரி காலனை
நண்ணுவா ரெழில்கொள்கச் சிநக ரேகம்பத்
தண்ணலா ராடுகின் றஅலங் காரமே. ௭

தூயானைத் தூயவா யம்மறை யோதிய
வாயானை வாளரக் கன்வலி வாட்டிய
தீயானைத் தீதில்கச் சித்திரு வேகம்பம்
மேயானை மேவுவா ரென்தலை மேலாரே. ௮

நாகம்பூண் ஏறதே றல்நறுங் கொன்றைதார்
பாகம்பெண் பலியுமேற் பர்மறை பாடுவர்
ஏகம்பம் மேவியா டுமிறை யிருவர்க்கும்
மாகம்பம் அறியும்வண் ணத்தவ னல்லனே. ௯

போதியார் பிண்டியா ரென்றிவர் பொய்ந்நூலை
வாதியா வம்மினம் மாவெனுங் கச்சியுள்
ஆதியார் மேவியா டுந்திரு வேகம்பம்
நீதியால் தொழுமின்நும் மேல்வினை நில்லாவே. ௧௦

அந்தண்பூங் கச்சியே கம்பனை யம்மானைக்
கந்தண்பூங் காழியூ ரன்கலிக் கோவையால்
சந்தமே பாடவல் லதமிழ் ஞானசம்
பந்தன்சொற் பாடியா டக்கெடும் பாவமே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருக்கோழம்பம் - பண் - இந்தளம்

திருச்சிற்றம்பலம்

நீற்றானை நீள்சடை மேல்நிறை வுள்ளதோர்
ஆற்றானை அழகமர் மென்முலை யாளையோர்
கூற்றானைக் குளிர்பொழிற் கோழம்பம் மேவிய
ஏற்றானை யேத்துமின் நும்மிடர் ஏகவே. க

மையான கண்டனை மான்மறி யேந்திய
கையானைக் கடிபொழிற் கோழம்பம் மேவிய
செய்யானைத் தேன்நெய்பா லுந்திகழ்ந் தாடிய
மெய்யானை மேவுவார் மேல்வினை மேவாவே. உ

ஏதனை யேதமி லாஇமை யோர்தொழும்
வேதனை வெண்குழை தோடுவி ளங்கிய
காதனைக் கடிபொழிற் கோழம்பம் மேவிய
நாதனை யேத்துமின் நும்வினை நையவே. ௩

சடையானைத் தண்மல ரான்சிரம் ஏந்திய
விடையானை வேதமும் வேள்வியும் ஆயநன்
குடையானைக் குளிர்பொழில் சூழ்திருக் கோழம்பம்
உடையானை உள்குமின் உள்ளங்கு ளிரவே. ௪

காரானைக் கடிகமழ் கொன்றையம் போதணி
தாரானைத் தையலோர் பால்மகிழ்ந் தோங்கிய
சீரானைச் செறிபொழிற் கோழம்பம் மேவிய
ஊரானை யேத்துமின் நும்மிடர் ஒல்கவே. ௫

பண்டாலின் நீழலா னைப்பரஞ் சோதியை
விண்டார்கள் தம்புரம் மூன்றுட னேவேவக்
கண்டானைக் கடிகமழ் கோழம்பங் கோயிலாக்
கொண்டானைக் கூறுமின் உள்ளங் குளிரவே. ௬

சொல்லானைச் சுடுகணை யால்புரம் மூன்றெய்த
வில்லானை வேதமும் வேள்வியு மானானைக்
கொல்லானை உரியானைக் கோழம்பம் மேவிய
நல்லானை யேத்துமின் நும்மிடர் நையவே. ௭

விற்றானை வல்லரக் கர்விறல் வேந்தனைக்
குற்றானைத் திருவிர லாற்கொடுங் காலனைச்
செற்றானைச் சீர்திக ழுந்திருக் கோழம்பம்
பற்றானைப் பற்றுவார் மேல்வினை பற்றாவே. அ

நெடியானோ டயனறி யாவகை நின்றதோர்
படியானைப் பண்டங்க வேடம்ப யின்றானைக்
கடியாருங் கோழம்பம் மேவிய வெள்ளேற்றின்
கொடியானைக் கூறுமின் உள்ளங் குளிரவே. ௯

புத்தருந் தோகையம் பீலிகொள் பொய்ம்மொழிப்
பித்தரும் பேசவ பேச்சல்ல பீடுடைக்
கொத்தலர் தண்பொழில் கோழம்பம் மேவிய
அத்தனை யேத்துமின் அல்லல் அறுக்கவே. ௧0

தண்புன லோங்குதண் ணந்தாய் மாநகர்
நண்புடை ஞானசம் பந்தன்நம் பான்உறை
விண்பொழிற் கோழம்பம் மேவிய பத்திவை
பண்கொளப் பாடவல் லார்க்கில்லை பாவமே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருவெண்ணியூர் - பண் - இந்தளம்

திருச்சிற்றம்பலம்

சடையானைச் சந்திர னோடுசெங் கண்அரா
உடையானை உடைதலை யிற்பலி கொண்டூரும்
விடையானை விண்ணவர் தாந்தொழும் வெண்ணியை
உடையானை யல்லதுள் காதென துள்ளமே. ௧

சோதியைச் சுண்ணவெண் ணீறணிந் திட்டஎம்
ஆதியை ஆதியும் அந்தமு மில்லாத
வேதியை வேதியர் தாந்தொழும் வெண்ணியில்
நீதியை நினையவல் லார்வினை நில்லாவே. உ

கனிதனைக் கனிந்தவ ரைக்கலந் தாட்கொள்ளும்
முனிதனை மூவுல குக்கொரு மூர்த்தியை

நனிதனை நல்லவர் தாந்தொழும் வெண்ணியில்
இனிதனை யேத்துவ ரேதமி லாதாரே. ரு

மூத்தானை மூவுல குக்கொரு மூர்த்தியாய்க்
காத்தானைக் கனிந்தவ ரைக்கலந் தாளாக
ஆர்த்தானை யழகமர் வெண்ணியம் மான்தன்னை
ஏத்தாதா ரென்செய்வார் ஏழையப் பேய்களே. ச

நீரானை நிறைபுனல் சூழ்தரு நீள்கொன்றைத்
தாரானைத் தையலொர் பாகமு டையானைச்
சீரானைத் திகழ்தரு வெண்ணிய மர்ந்துறை
ஊரானை உள்கவல் லார்வினை ஓயுமே. ரு

முத்தினை முழுவயி ரத்திரள் மாணிக்கத்
தொத்தினைத் துளக்கமில் லாதவி ளக்காய
வித்தினை விண்ணவர் தாந்தொழும் வெண்ணியில்
அத்தனை யடையவல் லார்க்கில்லை அல்லலே. சு

காய்ந்தானைக் காமனை யுஞ்செறு காலனைப்
பாய்ந்தானைப் பரியகை மாவுரித் தோன்மெய்யில்
மேய்ந்தானை விண்ணவர் தாந்தொழும் வெண்ணியில்
நீந்தானை நினையவல் லார்வினை நில்லாவே. எ

மறுத்தானை மாமலை யைமதி யாதோடிச்
செறுத்தானைத் தேசழி யத்திகழ் தோள்முடி
இறுத்தானை யெழிலமர் வெண்ணியெம் மானெனப்
பொறுத்தானைப் போற்றுவார் ஆற்றலு டையாரே. அ

மண்ணினை வானவ ரோடு மனிதர்க்கும்
கண்ணினைக் கண்ணனும் நான்முக னுங்காணா
விண்ணினை விண்ணவர் தாந்தொழும் வெண்ணியில்
அண்ணலை அடையவல் லார்க்கில்லை அல்லலே. கூ

குண்டருங் குணமிலா தசமண் சாக்கிய
மிண்டர்கள் மிண்டவை கேட்டுவெ குளேன்மின்
விண்டவர் தம்புரம் எய்தவன் வெண்ணியில்
தொண்டரா யேத்தவல் லார்துயர் தோன்றுவே. ௧0

மருவாரு மல்குகா ழித்திகழ் சம்பந்தன்
திருவாருந் திகழ்தரு வெண்ணி யமர்ந்தானை
உருவாரும் ஒண்தமிழ் மாலையி வைவல்லார்
பொருவாகப் புக்கிருப் பார்புவ லோகத்தே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருக்காறாயில் - பண் - இந்தளம்

திருச்சிற்றம்பலம்

நீரானே நீள்சடை மேலொரு நிரைகொன்றைத்
தாரானே தாமரை மேலயன் தான்தொழும்
சீரானே சீர்திக ழுந்திருக் காறாயில்
ஊரானே யென்பவர் ஊனமி லாதாரே. ௧

மதியானே வரியா வோடுடன் மத்தஞ்சேர்
விதியானே விதியுடை வேதியர் தாந்தொழும்
நெதியானே நீர்வயல் சூழ்திருக் காறாயிற்
பதியானே யென்பவர் பாவமி லாதாரே. ௨

விண்ணானே விண்ணவ ரேத்திவி ரும்புஞ்சீர்
மண்ணானே மண்ணிடை வாழுமு யிர்க்கெல்லாம்
கண்ணானே கடிபொழில் சூழ்திருக் காறாயில்
எண்ணானே யென்பவர் ஏதமி லாதாரே. ௩

தாயானே தந்தையு மாகிய தன்மைகள்
ஆயானே ஆயநல் லன்பர்க்க ணியானே
சேயானே சீர்திக ழுந்திருக் காறாயில்
மேயானே யென்பவர் மேல்வினை மேவாவே. ௪

கலையானே கலைமலி செம்பொற் கயிலாய
மலையானே மலைபவர் மும்மதில் மாய்வித்த
சிலையானே சீர்திக ழுந்திருக் காறாயில்
நிலையானே யென்பவர் மேல்வினை நில்லாவே. ௫

ஆற்றானே ஆறணி செஞ்சடை யாடர
வேற்றானே யேழுல கும்இமை யோர்களும்

போற்றானே பொழில்திக ழுந்திருக் காறாயில்
நீற்றானே யென்பவர் மேல்வினை நில்லாவே. சு

சேர்த்தானே தீவினை தேய்ந்தறத் தேவர்கள்
ஏத்தானே யேத்துநன் மாமுனி வர்க்கிடர்
காத்தானே கார்வயல் சூழ்திருக் காறாயில்
ஆர்த்தானே யென்பவர் மேல்வினை யடாவே. எ

கடுத்தானே காலனைக் காலாற் கயிலாயம்
எடுத்தானே யேதமா கம்முனி வர்க்கிடர்
கெடுத்தானே கேழ்கிள ருந்திருக் காறாயில்
அடுத்தானே யென்பவர் மேல்வினை யடாவே. அ

பிறையானே பேணிய பாடலொ டின்னிசை
மறையானே மாலொடு நான்முகன் காணாத
இறையானே யெழில்திக ழுந்திருக் காறாயில்
உறைவானே யென்பவர் மேல்வினை ஓடுமே. கூ

செடியாரும் புன்சமண் சீவரத் தார்களும்
படியாரும் பாவிகள் பேச்சுப் பயனில்லை
கடியாரும் பூம்பொழில் சூழ்திருக் காறாயில்
குடியாருங் கொள்கையி னார்க்கில்லை குற்றமே. க0

ஏய்ந்தசீ ரெழில்திக ழுந்திருக் காறாயில்
ஆய்ந்தசீ ரானடி யேத்தி அருள்பெற்ற
பாய்ந்தநீர்க் காழியுள் ஞானசம் பந்தன்சொல்
வாய்ந்தவா றேத்துவார் வானுல காள்வாரே. கக

திருச்சிற்றம்பலம்

திருமணஞ்சேரி - பண் - இந்தளம்

திருச்சிற்றம்பலம்

அயிலாரும் அம்பத னாற்புரம் மூன்றெய்து
குயிலாரும் மென்மொழி யாளொரு கூறாகி
மயிலாரும் மல்கிய சோலை மணஞ்சேரிப்
பயில்வானைப் பற்றிநின் றார்க்கில்லை பாவமே. க

விதியானை விண்ணவர் தாந்தொழு தேத்திய
நெதியானை நீள்சடை மேல்நிகழ் வித்தவான்
மதியானை வண்பொழில் சூழ்ந்த மணஞ்சேரிப்
பதியானைப் பாடவல் லார்வினை பாறுமே. உ

எய்ப்பானார்க் கின்புறு தேனளித் தூறிய
இப்பாலா யெனையும் ஆள வுரியானை
வைப்பான மாடங்கள் சூழ்ந்த மணஞ்சேரி
மெய்ப்பானை மேவிநின் றார்வினை வீடுமே. ௩

விடையானை மேலுல கேழுமிப் பாரெல்லாம்
உடையானை யூழிதோ றூழி உளதாய
படையானைப் பண்ணிசை பாடு மணஞ்சேரி
அடைவானை யடையவல் லார்க்கில்லை யல்லலே. ௪

எறியார்பூங் கொன்றையி னோடும் இளமத்தம்
வெறியாருஞ் செஞ்சடை யாரமி லைத்தானை
மறியாருங் கையுடை யானை மணஞ்சேரிச்
செறிவானைச் செப்பவல் லார்க்கிடர் சேராவே. ௫

மொழியானை முன்னொரு நான்மறை யாறங்கம்
பழியாமைப் பண்ணிசை யான பகர்வானை
வழியானை வானவ ரேத்து மணஞ்சேரி
இழியாமை யேத்தவல் லார்க்கெய்தும் இன்பமே. ௬

எண்ணானை யெண்ணமர் சீரிமை யோர்கட்குக்
கண்ணானைக் கண்ணொரு மூன்று முடையானை
மண்ணானை மாவயல் சூழ்ந்த மணஞ்சேரிப்
பெண்ணானைப் பேசநின் றார்பெரி யோர்களே. ௭

எடுத்தானை யெழில்முடி யெட்டும் இரண்டுந்தோள்
கெடுத்தானைக் கேடிலாச் செம்மை யுடையானை
மடுத்தார வண்டிசை பாடும் மணஞ்சேரி
பிடித்தாரப் பேணவல் லார்பெரி யோர்களே. ௮

சொல்லானைத் தோற்றங்கண் டானும் நெடுமாலும்
கல்லானைக் கற்றன சொல்லித் தொழுதோங்க

வல்லார்நன் மாதவ ரேத்தும் மணஞ்சேரி
எல்லாமாம் எம்பெரு மான்கழல் ஏத்துமே. ௯

சற்றேயுந் தாம்அறி வில்சமண் சாக்கியர்
சொல்தேயும் வண்ணமொர் செம்மை யுடையானை
வற்றாத வாவிகள் சூழ்ந்த மணஞ்சேரி
பற்றாக வாழ்பவர் மேல்வினை பற்றாவே. ௧௦

கண்ணாருங் காழியர் கோன்கருத் தார்வித்த
தண்ணார்சீர் ஞானசம் பந்தன் தமிழ்மாலை
மண்ணாரும் மாவயல் சூழ்ந்த மணஞ்சேரி
பண்ணாரப் பாடவல் லார்க்கில்லை பாவமே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருவேணுபுரம் - பண் - இந்தளம்

திருச்சிற்றம்பலம்

நிலவும் புனலும் நிறைவா ளரவும்
இலகுஞ் சடையார்க் கிடமாம் எழிலார்
உலவும் வயலுக் கொளியார் முத்தம்
விலகுங் கடலார் வேணு புரமே. ௧

அரவார் கரவன் அமையார் திரள்தோள்
குரவார் குழலா ளொருகூ றனிடங்
கரவா தகொடைக் கலந்தா ரவர்க்கு
விரவா கவல்லார் வேணு புரமே. ௨

ஆகம் அழகா யவள்தான் வெருவ
நாகம் உரிபோர்த் தவன்நண் ணுமிடம்
போகந் தருசீர் வயல்சூழ் பொழில்கள்
மேகந் தவழும் வேணு புரமே. ௩

காசக் கடலில் விடமுண் டகண்டத்
தீசர்க் கிடமா வதுஇன் நறவ
வாசக் கமலத் தனம்வன் திரைகள்
வீசத் துயிலும் வேணு புரமே. ௪

அரையார் கலைசே ரனம்மென் னடையை
உரையா வுகந்தா னுறையும் இடமாம்
நிரையார் கமுகின் நிகழ்பா ளையுடை
விரையார் பொழில்சூழ் வேணு புரமே. ௫

ஒளிரும் பிறையும் முறுகூ விளவின்
தளிருஞ் சடைமே லுடையா னிடமாம்
நளிரும் புனலின் நலசெங் கயல்கள்
மிளிரும் வயல்சூழ் வேணு புரமே. ௬, ௭

ஏவும் படைவேந் தன்இரா வணனை
ஆவென் றலற அடர்த்தா னிடமாம்
தாவும் மறிமா னொடுதண் மதியம்
மேவும் பொழில்சூழ் வேணு புரமே. ௮

கண்ணன் கடிமா மலரில் திகழும்
அண்ணல் இருவர் அறியா இறையூர்
வண்ணச் சுதைமா ளிகைமேற் கொடிகள்
விண்ணில் திகழும் வேணு புரமே. ௯

போகம் அறியார் துவர்போர்த் துழல்வார்
ஆகம் அறியா அடியார் இறையூர்
மூகம் அறிவார் கலைமுத் தமிழ்நூல்
மீகம் அறிவார் வேணு புரமே. ௧௦

கலமார் கடல்போல் வளமார் தருநற்
புலமார் தருவே ணுபுரத் திறையை
நலமார் தருஞா னசம்பந் தன்சொன்ன
குலமார் தமிழ்கூ றுவர்கூர் மையரே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருமருகல் - பண் - இந்தளம்

விடந்தீர்த்த பதிகம்

திருச்சிற்றம்பலம்

சடையா யெனுமால் சரண்நீ யெனுமால்
விடையா யெனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவள்உள் மெலிவே. க

சிந்தா யெனுமால் சிவனே யெனுமால்
முந்தா யெனுமால் முதல்வா எனுமால்
கொந்தார் குவளை குலவும் மருகல்
எந்தாய் தகுமோ இவள் ஏசறவே. உ

அறையார் கழலும் அழல்வா யரவும்
பிறையார் சடையும் உடையாய் பெரிய
மறையார் மருகல் மகிழ்வா யிவளை
இறையார் வளைகொண் டெழில்வவ் வினையே. ௩

ஒலிநீர் சடையிற் கரந்தா யுலகம்
பலிநீ திரிவாய் பழியில் புகழாய்
மலிநீர் மருகல் மகிழ்வா யிவளை
மெலிநீர் மையளாக் கவும்வேண் டினையே. ௪

துணிநீ லவண்ணம் முகில்தோன் றியன்ன
மணிநீ லகண்டம் உடையாய் மருகல்
கணிநீ லவண்டார் குழலாள் இவள்தன்
அணிநீ லவொண்கண் அயர்வாக் கினையே. ரு

பலரும் பரவப் படுவாய் சடைமேல்
மலரும் பிறையொன் றுடையாய் மருகல்
புலருந் தனையுந் துயிலாள் புடைபோந்
தலரும் படுமோ அடியா ளிவளே. சு

வழுவாள் பெருமான் கழல்வாழ் கவெனா
எழுவாள் நினைவாள் இரவும் பகலும்
மழுவா ளுடையாய் மருகற் பெருமான்
தொழுவா ளிவளைத் துயராக் கினையே. எ

இலங்கைக் கிறைவன் விலங்கல் எடுப்பத்
துலங்கவ் விரலூன் றலுங்தோன் றலனய்
வலங்கொள் மதில்சூழ் மருகற் பெருமான்
அலங்கல் இவளை அலராக் கினையே. அ

எரியார் சடையும் அடியும் இருவர்
தெரியா ததோர்தீத் திரளா யவனே
மரியார் பிரியா மருகற் பெருமான்
அரியாள் இவளை அயர்வாக் கினையே. க

அறிவில் சமணும் அலர்சாக் கியரும்
நெறியல் லனசெய் தனர்நின் றுழல்வார்
மறியேந் துகையாய் மருகற் பெருமான்
நெறியார் குழலி நிறைநீக் கினையே. கo

வயஞா னம்வல்லார் மருகற் பெருமான்
உயர்ஞா னமுணர்ந் தடியுள் குதலால்
இயன்ஞா னசம்பந் தனபா டல்வல்லார்
வியன்ஞா லமெல்லாம் விளங்கும் புகழே. கக

திருச்சிற்றம்பலம்

திருநேல்லிக்கா - பண் - இந்தளம்

திருச்சிற்றம்பலம்

அறத்தா லுயிர்கா வலமர்ந் தருளி
மறத்தான் மதில்மூன் றுடன்மாண் பழித்த
திறத்தால் தெரிவெய் தியதீவெண் திங்கள்
நிறத்தான் நெல்லிக்கா வுள்நிலா யவனே. க

பதிதா னிடுகா டுபைங்கொன் றைதொங்கல்
மதிதா னதுசூ டியமைந் தனுந்தான்
விதிதான் வினைதான் விழுப்பம் பயக்கும்
நெதிதான் நெல்லிக்கா வுள்நிலா யவனே. உ

நலந்தா னவன்நான் முகன்தன் தலையைக்
கலந்தா னதுகொண் டகபா லியுந்தான்

புலந்தான் புகழா லெரிவிண் புகழும்
நிலந்தான் நெல்லிக்கா வுள்நிலா யவனே. ௩

தலைதா னதுஏந் தியதம் அடிகள்
கலைதான் திரிகா டிடம்நா டிடமா
மலைதா னெடுத்தான் மதில்மூன் றுடைய
நிலைதான் நெல்லிக்கா வுள்நிலா யவனே. ௪

தவந்தான் கதிதான் மதிவார் சடைமேல்
உவந்தான் சுரவேந் தனுரு வழியச்
சிவந்தான் செயச்செய் தசெறுத் துலகில்
நிவந்தான் நெல்லிக்கா வுள்நிலா யவனே. ௫

வெறியார் மலர்க்கொன் றையந்தார் விரும்பி
மறியார் மலைமங் கைமகிழ்ந் தவன்றான்
குறியாற் குறிகொண் டவர்போய்க் குறுகும்
நெறியான் நெல்லிக்கா வுள்நிலா யவனே. ௬

பிறைதான் சடைச்சேர்த் தியஎந் தைபெம்மான்
இறைதான் இறவாக் கயிலை மலையான்
மறைதான் புனலொண் மதிமல் குசென்னி
நிறைதான் நெல்லிக்கா வுள்நிலா யவனே. ௭

மறைத்தான் பிணிமா தொருபா கந்தன்னை
மிறைத்தான் வரையா லரக்கன் மிகையைக்
குறைத்தான் சடைமேற் குளிர்கோல் வளையை
நிறைத்தான் நெல்லிக்கா வுள்நிலா யவனே. ௮

தழல்தா மரையான் வையந்தா யவனும்
கழல்தான் முடிகா ணியநா ணொளிரும்
அழல்தான் அடியார்க் கருளாய்ப் பயக்கும்
நிழல்தான் நெல்லிக்கா வுள்நிலா யவனே. ௯

கனத்தார் திரைமாண் டழற்கான் றநஞ்சை
எனத்தா வெனவாங் கியதுண் டகண்டன்
மனத்தாற் சமண்சாக் கியர்மாண் பழிய
நினைத்தான் நெல்லிக்கா வுள்நிலா யவனே. ௧0

புகரே தமிலா தபுத்தே ளுலகில்
நிகரா நெல்லிக்கா வுள்நிலா யவனே
நகரா நலஞா னசம்பந் தன்சொன்ன
பகர்வா ரவர்பா வமிலா தவரே. கக

திருச்சிற்றம்பலம்

திருஅழுந்தூர் - பண் - இந்தளம்

திருச்சிற்றம்பலம்

தொழுமா றுவல்லார் துயர்தீ ரநினைந்
தெழுமா றுவல்லார் இசைபா டவிம்மி
அழுமா றுவல்லார் அழுந்தை மறையோர்
வழிபா டுசெய்மா மடம்மன் னினையே. க

கடலே றியநஞ் சமுதுண் டவனே
உடலே உயிரே உணர்வே யெழிலே
அடலே றுடையாய் அழுந்தை மறையோர்
விடலே தொழமா மடம்மே வினையே. உ

கழிகா டலனே கனலா டலினாய்
பழிபா டிலனே யவையே பயிலும்
அழிபா டிலராய் அழுந்தை மறையோர்
வழிபா டுசெய்மா மடம்மன் னினையே. ங

வானே மலையே யெனமன் னுயிரே
தானே தொழுவார் தொழுதாள் மணியே
ஆனே சிவனே அழுந்தை யவரெம்
மானே யெனமா மடம்மன் னினையே. ச

அலையார் புனல்சூழ் அழுந்தைப் பெருமான்
நிலையார் மறியும் நிறைவெண் மழுவும்
இலையார் படையும் மிவையேந் துசெல்வ
நிலையா வதுகொள் கெனநீ நினையே. ரு

நறவார் தலையின் நயவா வுலகில்
பிறவா தவனே பிணியில் லவனே

அறையார் கழலாய் அழுந்தை மறையோர்
மறவா தெழமா மடம்மன் னினையே. சு

தடமோறு வல்லாய் தலைவா மதியம்
சுடமா றுவல்லாய் சுடரார் சடையில்
ஆடமா றுவல்லாய் அழுந்தை மறையோர்
நெடுமா நகர்கை தொழவின் றினையே. எ

பெரியாய் சிறியாய் பிறையாய் மிடறு
கரியாய் கரிகா டுயர்வீ டுடையாய்
அரியாய் எளியாய் அழுந்தை மறையோர்
வெரியார் தொழமா மடம்மே வினையே. அ

மணிநீள் முடியான் மலையை அரக்கன்
தணியா தெடுத்தான் உடலம் நெரித்த
அணியார் விரலாய் அழுந்தை மறையோர்
பணிமா மடம்மன் னியிருந் தனையே. கூ

முடியார் சடையாய் முனம்நா ளிருவர்
நெடியான் மலரான் நிகழ்வா லிவர்கள்
அடிமே லறியார் அழுந்தை மறையோர்
படியால் தொழமா மடம்பற் றினையே. க0

அருஞா னம்வல்லார் அழுந்தை மறையோர்
பெருஞா னமுடைப் பெருமா னவனைத்
திருஞா னசம்பந் தனசெந் தமிழ்கள்
உருஞா னமுண்டாம் உணர்ந்தார் தமக்கே. கக

திருச்சிற்றம்பலம்

திருக்கழிப்பாலை - பண் - இந்தளம்

திருச்சிற்றம்பலம்

புனலா டியபுன் சடையா யரணம்
அனலா கவிழித் தவனே அழகார்
கனலா டலினாய் கழிப்பா லையுளாய்
உனவார் கழல்கை தொழுதுள் குதுமே. க

துணையா கவொர்தூ வளமா தினையும்
இணையா கவுகந் தவனே யிறைவா
கணையால் எயிலெய் கழிப்பா லையுளாய்
இணையார் கழலேத்த இடர் கெடுமே. ௨

நெடியாய் குறியாய் நிமிர்புன் சடையின்
முடியாய் சுடுவெண் பொடிமுற் றணிவாய்
கடியார் பொழில்சூழ் கழிப்பா லையுளாய்
அடியார்க் கடையா அவலம் அவையே. ௩

எளியாய் அரியாய் நிலம்நீ ரொடுதீ
வளிகா யமென வெளிமன் னியதூ
ஒளியாய் உனையே தொழுதுன் னுமவர்க்
களியாய் கழிப்பா லையமர்ந் தவனே. ௪

நடம்நண் ணியொர்நா கமசைத் தவனே
விடம்நண் ணியதூ மிடறா விகிர்தா
கடல்நண் ணுகழிப் பதிகா வலனே
உடன்நண் ணிவணங் குவனுன் னடியே. ௫

பிறையார் சடையாய் பெரியாய் பெரியம்
மறையார் தருவாய் மையினா யுலகிற்
கறையார் பொழில்சூழ் கழிப்பா லையுளாய்
இறையார் கழலேத்த இடர் கெடுமே. ௬

முதிருஞ் சடையின் முடிமேல் விளங்குங்
கதிர்வெண் பிறையாய் கழிப்பா லையுளாய்
எதிர்கொள் மொழியால் இரந்தேத் தமவர்க்
கதிரும் வினையா யின ஆசறுமே. ௭

எரியார் கணையால் எயிலெய் தவனே
விரியார் தருவீழ் சடையாய் இரவிற்
கரிகா டலினாய் கழிப்பா லையுளாய்
உரிதா கிவணங் குவனுன் னடியே. ௮

நலநா ரணன்நான் முகன்நண் ணலுறக்
கனலா னவனே கழிப்பா லையுளாய்

உனவார் கழலே தொழுதன் னுமவர்க்
கிலதாம் வினைதான் எயிலெய் தவனே. ௯

தவர்கொண் டதொழிற் சமண்வே டரொடுந்
துவர்கொண் டனநுண் துகிலா டையரும்
அவர்கொண் டனவிட் டடிகள் உறையும்
உவர்கொண் டகழிப் பதியுள் குதமே. ௧0

கழியார் பதிகா வலனைப் புகலிப்
பழியா மறைஞா னசம்பந் தனசொல்
வழிபா டிவைகொண் டடிவாழ்த் தவல்லார்
கெழியா ரிமையோ ரொடுகே டிலரே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருக்குடவாயில் - பண் - இந்தளம்

திருச்சிற்றம்பலம்

திகழுந் திருமா லொடுநான் முகனும்
புகழும் பெருமான் அடியார் புகல
மகிழும் பெருமான் குடவாயில் மன்னி
நிகழும் பெருங்கோ யில்நிலா யவனே. ௧

ஓடுந் நதியும் மதியோ டுரகம்
சூடுஞ் சடையன் விடைதொல் கொடிமேல்
கூடுங் குழகன் குடவா யில்தனில்
நீடும் பெருங்கோ யில்நிலா யவனே. ௨

கலையான் மறையான் கனலேந் துகையான்
மலையா ளவள்பா கம்மகிழ்ந்த பிரான்
கொலையார் சிலையான் குடவா யில்தனில்
நிலையார் பெருங்கோ யில்நிலா யவனே. ௩

சுலவுஞ் சடையான் சுடுகா டிடமா
நலமென் முலையாள் நகைசெய் யநடம்
குலவுங் குழகன் குடவா யில்தனில்
நிலவும் பெருங்கோ யில்நிலா யவனே. ௪

என்றன் உளமே வியிருந் தபிரான்
கன்றன் மணிபோல் மிடறன் கயிலைக்
குன்றன் குழகன் குடவா யில்தனில்
நின்ற பெருங்கோ யில்நிலா யவனே. ௫

அலைசேர் புனலன் அனலன் அமலன்
தலைசேர் பலியன் சதுரன் விதிரும்
கொலைசேர் படையன் குடவா யில்தனில்
நிலைசேர் பெருங்கோ யில்நிலா யவனே. ௬

அறையார் கழலன் அழலன் இயலின்
பறையாழ் முழவும் மறைபா டநடம்
குறையா அழகன் குடவா யில்தனில்
நிறையார் பெருங்கோ யில்நிலா யவனே. ௭

வரையார் திரள்தோள் அரக்கன் மடியவ்
வரையா ரவொர்கால் விரல்வைத் தபிரான்
வரையார் மதில்சூழ் குடவா யில்மன்னும்
வரையார் பெருங்கோ யில்மகிழ்ந் தவனே. ௮

பொன்னொப் பவனும் புயலொப் பவனும்
தன்னொப் பறியாத் தழலாய் நிமிர்ந்தான்
கொன்னற் படையான் குடவா யில்தனில்
மன்னும் பெருங்கோயில் மகிழ்ந் தவனே. ௯

வெயிலின் நிலையார் விரிபோர் வையினர்
பயிலும் உரையே பகர்பா விகள்பால்
குயிலன் குழகன் குடவா யில்தனில்
உயரும் பெருங்கோ யிலுயர்ந் தவனே. ௧௦

கடுவாய் மலிநீர் குடவா யில்தனில்
நெடுமா பெருங்கோ யில்நிலா யவனைத்
தடமார் புகலித் தமிழார் விரகன்
வடமார் தமிழ்வல் லவர்நல் லவரே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருவானைக்கா - பண் - இந்தளம்

திருச்சிற்றம்பலம்

மழையார் மிடறா மழுவா ளுடையாய்
உழையார் கரவா உமையாள் கணவா
விழவா ரும்வெண்நா வலின்மே வியஎம்
அழகா எனும் ஆயிழையாள் அவளே. க

கொலையார் கரியின் உரிமூ டியனே
மலையார் சிலையா வளைவித் தவனே
விலையா லெனையா ளும்வெண்நா வலுளாய்
நிலையா அருளாய் எனும் நேரிழையே. உ

காலா லுயிர்கா லனைவீ டுசெய்தாய்
பாலோ டுநெய்யா டியபால் வணனே
வேலா டுகையா யெம்வெண்நா வலுளாய்
ஆலார் நிழலாய் எனும் ஆயிழையே. ௩

சுறவக் கொடிகொண் டவன்நீ றதுவாய்
உறநெற் றிவிழித் தஎம்உத் தமனே
விறல்மிக் ககரிக் கருள்செய் தவனே
அறமிக் கதுவென் னுமென் ஆயிழையே. ௪

செங்கட் பெயர்கொண் டவன்செம் பியர்கோன்
அங்கட் கருணை பெரிதா யவனே
வெங்கண் விடையா யெம்வெண்நா வலுளாய்
அங்கத் தயர்வா யினள் ஆயிழையே. ௫

குன்றே யமர்வாய் கொலையார் புலியின்
தன்தோ லுடையாய் சடையாய் பிறையாய்
வென்றாய் புரமூன் றைவெண்நா வலுளே
நின்றா யருளா யெனும் நேரிழையே. ௬, ௭

மலையன் றெடுத்த அரக்கன் முடிதோள்
தொலையவ் விரலூன் றியதூ மழுவா
விலையா லெனையா ளும்வெண்நா வலுளாய்
அலசா மல்நல்காய் எனும் ஆயிழையே. ௮

திருவார் தருநா ரணன்நான் முகனும்
மருவா வெருவா அழலாய் நிமிர்ந்தாய்
விரையா ரும்வெண்நா வலுள்மே வியஎம்
அரவா எனும் ஆயிழையா ளவளே. ௯

புத்தர் பலரோ டமண்பொய்த் தவர்கள்
ஒத்தவ் வுரைசொல் லிவையோ ரகிலார்
மெய்த்தே வர்வணங் கும்வெண்நா வலுளாய்
அத்தா அருளாய் எனும் ஆயிழையே. ௧௦

வெண்நா வலமர்ந் துறைவே தியனைக்
கண்ணார் கமழ்கா ழியர்தந் தலைவன்
பண்ணோ டிவைபா டியபத் தும்வல்லார்
விண்ணோ ரவரேத் தவிரும் புவரே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருநாகேச்சரம் - பண் - இந்தளம்

திருச்சிற்றம்பலம்

பொன்னேர் தருமே னியனே புரியும்
மின்னேர் சடையாய் விரைகா விரியின்
நன்னீர் வயல்நா கேச்சர நகரின்
மன்னே யெனவல் வினைமாய்ந் தறுமே. ௧

சிறவார் புரமூன் றெரியச் சிலையில்
உறவார் கணையுய்த் தவனே உயரும்
நறவார் பொழில்நா கேச்சர நகருள்
அறவா எனவல் வினையா சறுமே. ௨

கல்லால் நிழல்மே யவனே கரும்பின்
வில்லான் எழில்வே வவிழித் தவனே
நல்லார் தொழுநா கேச்சர நகரில்
செல்வா வெனவல் வினைதேய்ந் தறுமே. ௩

நகுவான் மதியோ டரவும் புனலும்
தகுவார் சடையின் முடியாய் தளவம்

நகுவார் பொழில்நா கேச்சர நகருள்
பகவா எனவல் வினைபற் றறுமே. ௪

கலைமான் மறியுங் கனலும் மழுவும்
நிலையா கியகை யினனே நிகழும்
நலமா கியநா கேச்சர நகருள்
தலைவா எனவல் வினைதான் அறுமே. ௫

குரையார் கழலா டநடங் குலவி
வரையான் மகள்கா ணமகிழ்ந் தவனே
நரையார் விடையே றுநாகேச் சரத்தெம்
அரைசே யெனநீங் கும்அருந் துயரே. ௬

முடையார் தருவெண் தலைகொண் டுலகில்
கடையார் பலிகொண் டுழல்கா ரணனே
நடையார் தருநா கேச்சர நகருள்
சடையா எனவல் வினைதான் அறுமே. ௭

ஓயா தஅரக் கன்ஒடிந் தலற
நீயா ரருள்செய் திகழ்ந் தவனே
வாயா ரவழுத் துவர்நா கேச்சரத்
தாயே யெனவல் வினைதான் அறுமே. ௮

நெடியா னொடுநான் முகன்நே டலுறச்
சுடுமா லெரியாய் நிமிர்சோ தியனே
நடுமா வயல்நா கேச்சர நகரே
இடமா வுறைவா யெனஇன் புறுமே. ௯

மலம்பா வியகை யொடுமண் டையதுண்
கலம்பா வியர்கட் டுரைவிட் டுலகில்
நலம்பா வியநா கேச்சர நகருள்
சிலம்பா எனத்தீ வினைதேய்ந் தறுமே. ௧0

கலமார் கடல்சூழ் தருகா ழியர்கோன்
தலமார் தருசெந் தமிழின் விரகன்
நலமார் தருநா கேச்சரத் தரனைச்
சொலமா லைகள்சொல் லநிலா வினையே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருப்புகலி - பண் - இந்தளம்

திருச்சிற்றம்பலம்

உகலி யாழ்கட லோங்கு பாருளீர்
அகலி யாவினை யல்லல் போயறும்
இகலி யார்புர மெய்த வன்உறை
புகலி யாம்நகர் போற்றி வாழ்மினே. க

பண்ணி யாள்வதோ ரேற்றர் பால்மதிக்
கண்ணி யார்கமழ் கொன்றை சேர்முடிப்
புண்ணி யன்உறை யும்பு கலியை
நண்ணு மின்நல மான வேண்டிலே. உ

வீச மின்புரை காதன் மேதகு
பாச வல்வினை தீர்த்த பண்பினன்
பூசு நீற்றினன் பூம்பு கலியைப்
பேசு மின்பெரி தின்ப மாகவே. ௩

கடிகொள் கூவிளம் மத்தம் வைத்தவன்
படிகொள் பாரிடம் பேசும் பான்மையன்
பொடிகொள் மேனியன் பூம்பு கலியுள்
அடிகளை யடைந் தன்பு செய்யுமே. ௪

பாதத் தாரொலி பல்சி லம்பினன்
ஓதத் தார்விட முண்ட வன்படைப்
பூதத் தான்புக லிந்ந கர்தொழ
ஏதத் தார்க்கிட மில்லை யென்பரே. ௫

மறையி னன்ஒலி மல்கு வீணையன்
நிறையி னார்நிமிர் புன்ச டையனெம்
பொறையி னானுறை யும்பு கலியை
நிறையி னால்தொழ நேச மாகுமே. ௬

காவி டைமனத் தாரைக் காண்கிலான்
இரவி டைப்பலி கொள்ளும் எம்மிறை
பொருவி டையுயர்த் தான்பு கலியைப்
பாவி டப்பயில் பாவம் பாறுமே. ௭

அருப்பி னார்முலை மங்கை பங்கினன்
விருப்பி னன்அரக் கன்னு ரஞ்செகும்
பொருப்பி னன்பொழி லார்பு கலியூர்
இருப்பி னனடி யேத்தி வாழ்த்துமே. அ

மாலும் நான்முகன் தானும் வார்கழற்
சீல மும்முடி தேட நீண்டெரி
போலும் மேனியன் பூம்பு கலியுள்
பால தாடிய பண்பன் நல்லனே. கூ

நின்று துய்ப்பவர் நீசர் தேரர்சொல்
ஒன்ற தாகவை யாஉ ணர்வினுள்
நின்ற வன்நக ழூம்பு கலியைச்
சென்று கைதொழச் செல்வ மாகுமே. க0

புல்லம் ஏறிதன் பூம்பு கலியை
நல்ல ஞானசம் பந்தன் நாவினாற்
சொல்லு மாலையீ ரைந்தும் வல்லவர்க்
கில்லை யாம்வினை யிருநி லத்துளே. கக

திருச்சிற்றம்பலம்

திருநெல்வாயில் - பண் - இந்தளம்

திருச்சிற்றம்பலம்

புடையி னார்புள்ளி கால்பொ ருந்திய
மடையி னார்மணி நீர்நெல் வாயிலார்
நடையில் நால்விரற் கோவ ணந்நயந்
துடையி னாரெம துச்சி யாரே. க

வாங்கி னார்மதில் மேற்க ணைவெள்ளந்
தாங்கி னார்தலை யாய தன்மையர்
நீங்கு நீர்நெல் வாயி லார்தொழ
ஓங்கி னாரெம துச்சி யாரே. உ

நிச்ச லேத்தும்நெல் வாயி லார்தொழ
இச்சை யாலுறை வாரெம் ஈசனார்

கச்சை யாவதோர் பாம்பி னார்கவின்
இச்சை யாரெம தச்சி யாரே. ௩

மறையி னார்மழு வாளி னார்மல்கு
பிறையி னார்பிறை யோடி லங்கிய
நிறையி னாரநெல் வாயி லார்தொழும்
இறைவ னாரெம தச்சி யாரே. ௪

விருத்த னாகிவெண் ணீறு பூசிய
கருத்த னார்கன லாட்டு கந்தவர்
திருத்த னாரநெல் வாயில் மேவிய
ஒருத்த னாரெம தச்சி யாரே. ௫

காரி னார்கொன்றைக் கண்ணி யார்மல்கு
பேரி னார்பிறை யோடி லங்கிய
நீரி னாரநெல் வாயி லார்தொழும்
ஏரி னாரெம தச்சி யாரே. ௬

ஆதி யாரந்த மாயி னார்வினை
கோதி யார்மதில் கூட்ட ழித்தவர்
நீதி யாரநெல் வாயி லார்மறை
ஓதி யாரெம தச்சி யாரே. ௭

பற்றி னன்அரக் கன்க யிலையை
ஒற்றி னாரொரு கால்வி ரலுற
நெற்றி யாரநெல் வாயி லார்தொழும்
பெற்றி யாரெம தச்சி யாரே. ௮

நாடி னார்மணி வண்ணன் நான்முகன்
கூடி னார்குறு காத கொள்கையர்
நீடி னாரநெல் வாயி லார்தலை
ஓடி னாரெம தச்சி யாரே. ௯

குண்ட மண்துவர்க் கூறை மூடர்சொல்
பண்ட மாகவை யாத பண்பினர்
விண்ட யங்குநெல் வாயி லார்நஞ்சை
உண்ட கண்டரெம் உச்சி யாரே. ௧௦

நெண்ப யங்குநெல் வாயி லீசனைச்
சண்பை ஞானசம் பந்தன் சொல்லிவை
பண்ப யன்கொளப் பாட வல்லவர்
விண்ப யன்கொளும் வேட்கை யாளரே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருஇந்திரநீலப்பருப்பதம் - பண் - இந்தளம்

திருச்சிற்றம்பலம்

குலவு பாரிடம் போற்ற வீற்றிருந்
திலகும் மான்மழு வேந்தும் அங்கையன்
நிலவும் இந்திர நீலப் பர்ப்பதத்
துலவி னான்அடி யுள்க நல்குமே. ௧

குறைவி லார்மதி சூடி யாடல்வண்
டறையு மாமலர்க் கொன்றை சென்னிசேர்
இறைவன் இந்திர நீலப் பர்ப்பதத்
துறைவி னான்றனை யோதி யுய்ம்மினே. ௨

என்பொன் என்மணி யென்ன ஏத்துவார்
நம்பன் நான்மறை பாடும் நாவினான்
இன்பன் இந்திர நீலப் பர்ப்பதத்
தன்பன் பாதமே யடைந்து வாழ்மினே. ௩

நாச மாம்வினை நன்மை தான்வரும்
தேச மார்புக ழாய செம்மையெம்
ஈசன் இந்திர நீலப் பர்ப்பதம்
கூசி வாழ்த்துதுங் குணம தாகவே. ௪

மருவு மான்மட மாதொர் பாகமாய்ப்
பரவு வார்வினை தீர்த்த பண்பினான்
இரவன் இந்திர நீலப் பர்ப்பதத்
தருவி சூடிடும் அடிகள் வண்ணமே. ௫

வெண்ணி லாமதி சூடும் வேணியன்
எண்ணி லார்மதி லெய்த வில்லினன்

அண்ணல் இந்திர நீலப் பர்ப்பதத்
தன்னி லாவுறும் ஒருவன் நல்லனே. சு

கொடிகொள் ஏற்றினர் கூற்று தைத்தவர்
பொடிகொள் மேனியிற் பூண்ட பாம்பினர்
அடிகள் இந்திர நீலப் பர்ப்பதம்
உடைய வாண ருகந்த கொள்கையே. எ

எடுத்த வல்லரக் கன்க ரம்புயம்
அடர்த்த தோர்விர லான வனையாட்
படுத்தன் இந்திர நீலப் பர்ப்பதம்
முடித்த வம்முற முயலும் இன்பமே. அ

பூவி னானொடு மாலும் போற்றுறும்
தேவன் இந்திர நீலப் பர்ப்பதம்
பாவி யாதெழு வாரைத் தம்வினை
கோவி யாவருங் கொல்லுங் கூற்றமே. கூ

கட்டர் குண்டமண் தேரர் சீரிலர்
விட்டர் இந்திர நீலப் பர்ப்பதம்
எட்ட னைவினை யாத தென்கொலோ
சிட்ட தாயுறை யாதி சீர்களே. க0

கந்த மார்பொழில் சூழ்ந்த காழியான்
இந்தி ரன்தொழு நீலப் பர்ப்பதத்
தந்த மில்லியை யேத்தும் ஞானசம்
பந்தன் பாடல்கொண் டோதி வாழ்மினே. கக

திருச்சிற்றம்பலம்

திருக்கருவூரானிலை - பண் - இந்தளம்

திருச்சிற்றம்பலம்

தொண்டெ லாம்மலர் தூவி யேத்தநஞ்
சுண்ட லாருயி ராய தன்மையர்
கண்ட னூர்கரு வூரு ளானிலை
அண்டனாரு ளியும் அன்பரே. க

நீதி யார்நினைந் தாய நான்மறை
ஓதி யாரொடுங் கூடி லார்குழைக்
காதி னார்கரு வூரு ளானிலை
ஆதி யாரடி யார்தம் அன்பரே. உ

விண்ணு லாமதி சூடி வேதமே
பண்ணு ளார்பர மாய பண்பினர்
கண்ணு ளார்கரு வூரு ளானிலை
அண்ண லாரடி யார்க்கு நல்லரே. ௩

முடியர் மும்மத யானை யீருரி
பொடியர் பூங்கணை வேளைச் செற்றவர்
கடியு ளார்கரு வூரு ளானிலை
அடிகள் யாவையு மாய ஈசரே. ச

பங்க யம்மலர்ப் பாதர் பாதியோர்
மங்கை யர்மணி நீல கண்டர்வான்
கங்கை யர்கரு வூரு ளானிலை
அங்கை யாடா வத்தெம் அண்ணலே. ரு

தேவர் திங்களும் பாம்புஞ் சென்னியில்
மேவர் மும்மதி லெய்த வில்லியர்
காவ லர்கரு வூரு ளானிலை
மூவ ராகிய மொய்ம்ப ரல்லரே. சு

பண்ணி னார்படி யேற்றர் நீற்றர் மெய்ப்
பெண்ணி னார்பிறை தாங்கு நெற்றியர்
கண்ணி னார்கரு வூரு ளானிலை
நண்ணி னார்நமை யாளும் நாதரே. எ

கடுத்த வாளரக் கன்க யிலையை
எடுத்த வன்தலை தோளுந் தாளினல்
அடர்த்த வன்கரு வூரு ளானிலை
கொடுத்த வன்னருள் கூத்த னல்லனே. அ

உழுது மாநிலத் தேன மாகிமால்
தொழுது மாமல ரோனுங் காண்கிலார்

கழுதி ஞன்கரு ஆரு ளானிலை
முழுது மாகிய மூர்த்தி பாதமே. க

புத்தர் புன்சமண் ஆதர் பொய்யுரைப்
பித்தர் பேசிய பேச்சை விட்டுமெய்ப்
பத்தர் சேர்கரு ஆரு ளானிலை
அத்தர் பாதம் அடைந்து வாழ்மினே. க0

கந்தமார் பொழில் காழி ஞானசம்
பந்தன் சேர்கரு ஆரு ளானிலை
எந்தை யைச்சொன்ன பத்தும் வல்லவர்
சிந்தை யில்துய ராய தீர்வரே. கக

திருச்சிற்றம்பலம்

திருப்புகலி - திருவிராகம். பண் - இந்தளம்

திருச்சிற்றம்பலம்

முன்னிய கலைப்பொருளும் மூவுலகில் வாழ்வும்
பன்னிய வொருத்தர்பழ வூர்வினவின் ஞாலந்
தன்னியிமை யோர்கள்துதி செய்துமுன் வணங்குஞ்
சென்னியர் விருப்புறு திருப்புகலி யாமே. க

வண்டிரை மதிச்சடை மிலைத்தபுனல் சூடிப்
பண்டெரிகை யாடுபர மன்பதிய தென்பர்
புண்டரிக வாசமது வீசமலர் சோலைத்
தெண்டிரை கடற்பொலி திருப்புகலி யாமே. உ

பாஅணவு சிந்தையவர் பத்தரொடு கூடி
நாஅணவும் அந்தணன் விருப்பிடம தென்பர்
பூஅணவு சோலையிருள் மாலையெதிர் கூரத்
தேவண விழாவளர் திருப்புகலி யாமே. ௩

மைதவழும் மாமிடறன் மாநடம தாடி
கைவளையி ஞளொடு கலந்தபதி யென்பர்
செய்பணி பெருத்தெழும் உருத்திரர்கள் கூடித்
தெய்வம திணக்குறு திருப்புகலி யாமே. ச

முன்னமிரு மூன்றுசம யங்களவை யாகிப்
பின்னையருள் செய்தபிறை யாளனுறை கோயில்
புன்னைய மலர்ப்பொழில் களக்கினொளி காட்டச்
செந்நெல்வய லார்தரு திருப்புகலி யாமே. ரு.

வங்கம்மலி யுங்கடல் விடத்தினை நுகர்ந்த
அங்கண னருத்திசெய் திருக்குமிட மென்பர்
கொங்கண வியன்பொழிலின் மாசுபனி மூசத்
தெங்கணவு தேன்மலி திருப்புகலி யாமே. சு.

நல்குரவும் இன்பமும் நலங்களவை யாகி
வல்வினைகள் தீர்த்தருளும் மைந்தனிட மென்பர்
மல்குமடி யார்கள்படி யாரஇசை பாடிச்
செல்வமறை யோருறை திருப்புகலி யாமே. எ.

பரப்புறு புகழ்ப்பெருமை யாளன்வரை தன்னால்
அரக்கனை யடர்த்தருளும் அண்ணலிட மென்பர்
நெருக்குறு கடல்திரைகள் முத்தமணி சிந்தச்
செருக்குறு பொழிற்பொலி திருப்புகலி யாமே. அ.

கோடலொடு கூன்மதி குலாயசடை தன்மேல்
ஆடரவம் வைத்தருளும் அப்பன்இரு வர்க்கும்
நேடஎரி யாகியிரு பாலும்அடி பேணித்
தேடவுறை யுங்நகர் திருப்புகலி யாமே. கூ.

கற்றமண ருற்றுலவு தேருரை செய்த
குற்றமொழி கொள்கையதி லாதபெரு மானூர்
பொற்றொடி மடந்தையரும் மைந்தர்புல னைந்துஞ்
செற்றவர் விருப்புறு திருப்புகலி யாமே. ௧௦.

செந்தமிழ் பரப்புறு திருப்புகலி தன்மேல்
அந்தமுத லாகிநடு வாயபெரு மானைப்
பந்தனுரை செந்தமிழ்கள் பத்துமிசை கூற
வந்தவண மேத்துமவர் வானமுடை யாரே. ௧௧.

திருச்சிற்றம்பலம்

திருப்புறம்பயம் - திருவிராகம். பண் - இந்தளம்

திருச்சிற்றம்பலம்

மறம்பய மலைந்தவர் மதிற்பரி சறுத்தனை
நிறம்பசுமை செம்மையொ டிசைந்துனது நீர்மை
திறம்பய னுறும்பொருள் தெரிந்துணரு நால்வர்க்
கறம்பய னுரைத்தனை புறம்பயம் அமர்ந்தோய். க

விரித்தனை திருச்சடை யரித்தொழுகு வெள்ளம்
தரித்தனை யதன்றியும் மிகப்பெரிய காலன்
செருத்திற வுதைத்தனை யிலங்கிழையொர் பாகம்
பொருத்துதல் கருத்தினை புறம்பயம் அமர்ந்தோய். உ

விரிந்தனை குவிந்தனை விழுங்குயி ருமிழ்ந்தனை
திரிந்தனை குருந்தொசி பெருந்தகையும் நீயும்
பிரிந்தனை புணர்ந்தனை பிணம்புகு மயானம்
புரிந்தனை மகிழ்ந்தனை புறம்பயம் அமர்ந்தோய். ங

வளங்கெழு கடும்புன லொடுஞ்சடை யொடுங்கத்
துளங்கம ரிளம்பிறை சுமந்தது விளங்க
உளங்கொள வளைந்தவர் சுடுஞ்சுடலை நீறு
புளங்கொள விளங்கினை புறம்பயம் அமர்ந்தோய். ச

பெரும்பிணி பிறப்பினொ டிறப்பிலையொர் பாகம்
கரும்பொடு படுஞ்சொலின் மடந்தையை மகிழ்ந்தோய்
சுரும்புண அரும்பவிழ் திருந்தியெழு கொன்றை
விரும்பினை புறம்பயம் அமர்ந்தஇறை யோனே. ரு

அனற்படு தடக்கையவ ரெத்தொழில ரேனும்
நினைப்புடை மனத்தவர் வினைப்பகையு நீயே
கனற்படு சுடர்ச்சடை தனிப்பிறையொ டொன்றப்
புனற்படு கிடக்கையை புறம்பயம் அமர்ந்தோய். சு

மறத்துறை மறுத்தவர் தவத்தடிய ருள்ள
மறத்துறை யொறுத்துன தருட்கிழமை பெற்றோர்
திறத்துள திறத்தினை மதித்தகல நின்றும்
புறத்துள திறத்தினை புறம்பயம் அமர்ந்தோய். எ

இலங்கைய ரிறைஞ்சிறை விலங்கலின் முழங்க
உலங்கெழு தடக்கைக ளடர்த்திடலும் அஞ்சி
வலங்கொள எழுந்தவன் நலங்கவின அஞ்சு
புலங்களை விலங்கினை புறம்பயம் அமர்ந்தோய். அ

வடங்கெட நுடங்குண இடந்தவிடை யல்லிக்
கிடந்தவன் இருந்தவன் அளந்துணா லாகார்
தொடர்ந்தவ ருடம்பொடு நிமிர்ந்துடன் வணங்கப்
புடங்கருள்செய் தொன்றினை புறம்பயம் அமர்ந்தோய். ௯

விடக்கொருவர் நன்றெென விடக்கொருவர் தீதென
உடற்குடை களைந்தவ ருடம்பினை மறைக்கும்
படக்கர்கள் பிடக்குரை படுத்துமையொர் பாகம்
அடக்கினை புறம்பயம் அமர்ந்தவுர வோனே. ௧௦

கருங்கழி பொருந்திரை கரைக்குலவு முத்தம்
தருங்கழு மலத்திறை தமிழ்க்கிழமை ஞானன்
சுரும்பவிழ் புறம்பயம் அமர்ந்ததமிழ் வல்லார்
பெரும்பிணி மருங்கற ஒருங்குவர் பிறப்பே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருக்கருப்பறியலூர் - திருவிராகம். பண் - இந்தளம்

திருச்சிற்றம்பலம்

சுற்றமொடு பற்றவை துயக்கற அறுத்துக்
குற்றமில் குணங்களொடு கூடும்அடி யார்கள்
மற்றவரை வானவர்தம் வானுலக மேற்றக்
கற்றவ னிருப்பது கருப்பறிய லூரே. ௧

வண்டணைசெய் கொன்றையது வார்சடைகள் மேலே
கொண்டணைசெய் கோலமது கோளரவி னோடும்
விண்டணைசெய் மும்மதிலும் வீழ்தரவொ ரம்பால்
கண்டவ னிருப்பது கருப்பறிய லூரே. ௨

வேதமொடு வேதியர்கள் வேள்விமுத லாகப்
போதினொடு போதுமலர் கொண்டுபுனை கின்ற

நாதனென நள்ளிருண்முன் ஆடுகுழை தாழும்
காதவ னிருப்பது கருப்பறிய லூரே. ௫

மடம்படு மலைக்கிறைவன் மங்கையொரு பங்கன்
உடம்பினை விடக்கருதி நின்றமறை யோனைத்
தொடர்ந்தணவு காலனுயிர் காலவொரு காலால்
கடந்தவ னிருப்பது கருப்பறிய லூரே. ௬

ஒருத்தியுமை யோடுமொரு பாகமது வாய
திருத்தனவன் நீதியவன் நித்தன்நெறி யாய
விருத்தனவன் வேதமென அங்கமவை யோதும்
கருத்தவ னிருப்பது கருப்பறிய லூரே. ௭

விண்ணவர்கள் வெற்பரசு பெற்றமகள் மெய்த்தேன்
பண்ணமரும் மென்மொழியி னாளையணை விப்பான்
எண்ணிவரு காமனுடல் வேவஎரி காலும்
கண்ணவ னிருப்பது கருப்பறிய லூரே. ௬

ஆதியடி யைப்பணிய அப்பொடு மலர்ச்சேர்
சோதியொளி நற்புகை வளர்க்குவடு புக்குத்
தீதுசெய வந்தணையும் அந்தகன் அரங்கக்
காதினன் இருப்பது கருப்பறிய லூரே. ௭

வாய்ந்தபுகழ் விண்ணவரும் மண்ணவரும் அஞ்சப்
பாய்ந்தமர்செ யுந்தொழிலி லங்கைநகர் வேந்தற்
கேய்ந்தபுயம் அத்தனையும் இற்றுவிழ மேனாள்
காய்ந்தவ னிருப்பது கருப்பறிய லூரே. ௮

பரந்தது நிரந்துவரு பாய்திரைய கங்கை
கரந்தொர்சடை மேன்மிசை யுகந்தவளை வைத்து
நிரந்தரம் நிரந்திருவர் நேடியறி யாமல்
கரந்தவ னிருப்பது கருப்பறிய லூரே. ௯

அற்றமறை யாவமண ராதமிலி புத்தர்
சொற்றமறி யாதவர்கள் சொன்னசொலை விட்டுக்
குற்றமறி யாதபெரு மான்கொகுடிக் கோயில்
கற்றென இருப்பது கருப்பறிய லூரே. ௧௦

நலந்தரு புனற்புகலி ஞானசம் பந்தன்
கலந்தவர் கருப்பறியல் மேயகட வுள்ளைப்
பலந்தரு தமிழ்க்கிளவி பத்துமிவை கற்று
வலந்தரு மவர்க்குவினை வாடலெளி தாமே. கக

திருச்சிற்றம்பலம்

திருவையாறு - திருவிராகம். பண் - இந்தளம்

திருச்சிற்றம்பலம்

திருத்திகழ் மலைச்சிறுமி யோடுமிகு தேசர்
உருத்திகழ் எழிற்கயிலை வெற்பிலுறை தற்கே
விருப்புடைய அற்புத ரிருக்குமிடம் ஏரார்
மருத்திகழ் பொழிற்குலவு வண்திருவை யாறே. க

கந்தமர உந்துபுகை யுந்தவில் விளக்கேர்
இந்திர னுணர்ந்துபணி யெந்தையிட மெங்கும்
சந்தமலி யுந்தரு மிடைந்தபொழில் சார
வந்தவளி நந்தணவு வண்திருவை யாறே. உ

கட்டுவட மெட்டுமுறு வட்டமுழ வத்தில்
கொட்டுகர மிட்டவொலி தட்டும்வகை நந்திக்
கிட்டமிக நட்டமவை யிட்டவ ரிடஞ்சீர்
வட்டமதி லுள்திகழும் வண்திருவை யாறே. ங

நண்ணியொர் வடத்தின்நிழல் நால்வர்முனி வர்க்கன்
றெண்ணிலி மறைப்பொருள் விரித்தவ ரிடஞ்சீர்த்
தண்ணின்மலி சந்தகிலொ டுந்திவரு பொன்னி
மண்ணின்மிசை வந்தணவு வண்திருவை யாறே. ச

வென்றிமிகு தாரகன தாருயிர் மடங்கக்
கன்றிவரு கோபம்மிகு காளிகதம் ஓவ
நின்றுநட மாடியிட நீடுமலர் மேலால்
மன்றல்மலி யும்பொழில்கொள் வண்திருவை யாறே. ரு

பூதமொடு பேய்கள் பலபாடநட மாடிப்
பாதமுதல் பையரவு கொண்டணி பெறுத்திக்

கோதைய ரிடும்பலி கொளும்பா னிடம்பூ
மாதவி மணங்கமழும் வண்திருவை யாறே. ௬

தன்னுகுழல் மங்கையுமை நங்கைசுளி வெய்தப்
பின்னொரு தவஞ்செய்துழல் பிஞ்ஞகனு மங்கே
என்னசதி யென்றுரைசெ யங்கண னிடஞ்சீர்
மன்னுகொடை யாளர்பயில் வண்திருவை யாறே. ௭

இரக்கமில் குணத்தொடுல கெங்குமலி வெம்போர்
அரக்கன்முடி யத்தலை புயத்தொடு மடங்கத்
துரக்கவிர லிற்சிறிது வைத்தவ ரிடஞ்சீர்
வரக்கருணை யாளர்பயில் வண்திருவை யாறே. ௮

பருத்துருவ தாகிவிண் அடைந்தவனோர் பன்றிப்
பெருத்துருவ தாயுல கிடந்தவனு மென்றும்
கருத்துரு வொணுவகை நிமிர்ந்தவ னிடங்கார்
வருத்துவகை தீர்கொள்பொழில் வண்திருவை யாறே. ௯

பாக்கியம தொன்றுமில் சமண்பதகர் புத்தர்
சாக்கியர்க ளென்றுடல் பொதிந்துதிரி வார்தாம்
நோக்கரிய தத்துவ னிடம்படியின் மேலால்
மாக்கமுற நீடுபொழில் வண்திருவை யாறே. ௧௦

வாசமலி யும்பொழில்கொள் வண்திருவை யாற்றுள்
ஈசனை யெழிற்புகலி மன்னவன்மெய்ஞ் ஞானப்
பூசு னுரைத்ததமிழ் பத்துமிவை வல்லார்
நேசமலி பத்தரவர் நின்மல னடிக்கே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருநள்ளாறு - திருவிராகம். பண் - இந்தளம்

திருச்சிற்றம்பலம்

ஏடுமலி கொன்றையர விந்துஇள வன்னி
மாடவல செஞ்சடையெம் மைந்தனிட மென்பர்
கோடுமலி ஞாழல்குர வேறுசுர புன்னை
நாடுமலி வாசமது வீசியநள் ளாறே. ௧

விண்ணியல் பிறைப்பிள வறைப்புனல் முடித்த
புண்ணிய னிருக்குமிட மென்பர்புவி தன்மேல்
பண்ணிய நடத்தொடிசை பாடும்அடி யார்கள்
நண்ணிய மனத்தின்வழி பாடுசெய்நள் ளாறே. உ

விளங்கிழை மடந்தைமலை மங்கையொரு பாகத்
துளங்கொள இருத்திய வொருத்தனிட மென்பர்
வளங்கெழுவு தீபமொடு தூபம்மலர் தூவி
நளன்கெழுவி நாளும்வழி பாடுசெய்நள் ளாறே. ௩

கொக்கரவர் கூன்மதியர் கோபர்திரு மேனிச்
செக்கரவர் சேருமிடம் மென்பர்தடம் மூழ்கிப்
புக்கரவர் விஞ்சையரும் விண்ணவரும் நண்ணி
நக்கரவர் நாமம்நினை வெய்தியநள் ளாறே. ௪

நெஞ்சமிது கண்டுகொ ளுனக்கென நினைந்தார்
வஞ்சம தறுத்தருளும் மற்றவனை வானோர்
அஞ்சமுது காகியவர் கைதொழ எழுந்த
நஞ்சமுது செய்தவ னிருப்பிடம்நள் ளாறே. ௫

பாலனடி பேணவவ னுருயிர் குறைக்குங்
காலனுடன் மாளமு னுதைத்தஅர னூராம்
கோலமலர் நீர்க்குட மெடுத்துமறை யாளர்
நாலின்வழி நின்றுதொழில் பேணியநள் ளாறே. ௬

நீதியர் நெடுந்தகையர் நீள்மலையர் பாவை
பாதியர் பராபரர் பரம்பர ரிருக்கை
வேதியர்கள் வேள்வியொழி யாதுமறை நாளும்
ஓதியான் நாமமும் உணர்த்திடும்நள் ளாறே. ௭

கடுத்துவல் லரக்கன்முன் நெருக்கிவரை தன்னை
எடுத்தவன் முடித்தலைகள் பத்தும்மிகு தோளும்
அடர்த்தவர் தமக்கிடம தென்பரளி பாட
நடத்தகல வைத்திரள்கள் வைகியநள் ளாறே. ௮

உயர்ந்தவ னுருக்கொடு திரிந்துலக மெல்லாம்
பயந்தவன் நினைப்பரிய பண்பனிட மென்பர்

வியந்தமரர் மெச்சமலர் மல்குபொழி லெங்கும்
நயந்தரும வேதவொலி யார்திருநன் னாறே. ௯

சிந்தைதிரு கற்சமணர் தேரர்தவ மென்னும்
பந்தனை யறுத்தருளு கின்றபர மன்னூர்
மந்தமுழ வந்தரு விழாவொலியும் வேதச்
சந்தம்விர விப்பொழில் முழங்கியநள் ளாறே. ௧௦

ஆடலர வார்சடையன் ஆயிழைதன் னோடும்
நாடுமலி வெய்திட இருந்தவன்நள் ளாற்றை
மாடமலி காழிவளர் பந்தனது செஞ்சொல்
பாடலுடை யாரையடை யாபழிகள் நோயே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருப்பழுவூர் - திருவிராகம். பண் - இந்தளம்

திருச்சிற்றம்பலம்

முத்தன்மிகு மூவிலைநல் வேலன்விரி நூலன்
அத்தனெமை யாளுடைய அண்ணலிட மென்பர்
மைத்தழை பெரும்பொழிலின் வாசமது வீசப்
பத்தரொடு சித்தர்பயில் கின்றபழு வூரே. ௧

கோடலொடு கோங்கவை குலாவுமுடி தன்மேல்
ஆடரவம் வைத்தபெரு மானதிட மென்பர்
மாடமலி சூளிகையி லேறிமட வார்கள்
பாடலொலி செய்யமலி கின்றபழு வூரே. ௨

வாலிய புரத்திலவர் வேவவிழி செய்த
போலியவொ ருத்தர்புரி நூலரிட மென்பர்
வேலியின் விரைக்கமல மன்னமுக மாதர்
பாலென மிழற்றிநட மாடுபழு வூரே. ௩

எண்ணுமோ ரெழுத்துமிசை யின்கிளவி தேர்வார்
கண்ணுமுத லாயகட வுட்கிடம தென்பர்
மண்ணின்மிசை யாடிமலை யாளர்தொழு தேத்திப்
பண்ணினொலி கொண்டுபயில் கின்றபழு வூரே. ௪

சாதல்புரி வார்சுடலை தன்னில்நட மாடும்
நாதன்நமை யாளுடைய நம்பனிட மென்பர்
வேதமொழி சொல்லிமறை யாளரிறை வன்றன்
பாதமவை யேத்தநிகழ் கின்றபழு வூரே. ரு

மேவயரு மும்மதிலும் வெந்தழல் விளைத்து
மாவயர அன்றுரிசெய் மைந்தனிட மென்பர்
பூவையை மடந்தையர்கள் கொண்டுபுகழ் சொல்லிப்
பாவையர்கள் கற்பொடு பொலிந்தபழு வூரே. சு

மந்தண மிருந்துபுரி மாமடிதன் வேள்வி
சிந்தவிளை யாடுசிவ லோகனிட மென்பர்
அந்தணர்கள் ஆகுதியி லிட்டஅகில் மட்டார்
பைந்தொடிநன் மாதர்சுவ டொற்றுபழு வூரே. எ

உரக்கடல் விடத்தினை மிடற்றிலுற வைத்தன்
றரக்கனை யடர்த்தருளும் அப்பனிட மென்பர்
குரக்கினம் விரைப்பொழிலின் மீதுகனி யுண்டு
பரக்குறு புனற்செய்விளை யாடுபழு வூரே. அ

நின்றநெடு மாலுமொரு நான்முகனும் நேட
அன்றுதழ லாய்நிமிரும் ஆதியிட மென்பர்
ஒன்றுமிரு மூன்றுமொரு நாலுமுணர் வார்கள்
மன்றினி லிருந்துடன் மகிழ்ந்தபழு வூரே. கூ

மொட்டையமண் ஆதர்துகில் மூடுவிரி தேரர்
முட்டைகள் மொழிந்தமுனி வான்றனிட மென்பர்
மட்டைமலி தாழையிள நீர்திசை பூகம்
பட்டையொடு தாறுவிரி கின்றபழு வூரே. க0

அந்தணர்க ளானமலை யாளரவ ரேத்தும்
பந்தமலி கின்றபழு வூரரனை யாரச்
சந்தம்மிகு ஞானமுணர் பந்தனுரை பேணி
வந்தவண மேத்துமவர் வானமுடை யாரே. கக

திருச்சிற்றம்பலம்

திருத்தென்குரங்காடுதுறை - பண் - இந்தளம்

திருச்சிற்றம்பலம்

பரவக் கெடும்வல் வினைபா ரிடஞ்சூழ
இரவிற் புறங்காட் டிடைநின் றெரியாடி
அரவச் சடையந் தணன்மேய அழகார்
குரவப் பொழில்சூழ் குரங்கா டுதுறையே. ௧

விண்டார் புரமூன்று மெரித்த விமலன்
இண்டார் புறங்காட் டிடைநின் றெரியாடி
வண்டார் கருமென் குழல்மங் கையொர்பாகம்
கொண்டான் நகர்போல் குரங்கா டுதுறையே. ௨

நிறைவில் புறங்காட் டிடைநே ரிழையோடும்
இறைவில் லெரியான் மழுவேந் திநின்றாடி
மறையின் னொலிவா னவர்தா னவரேத்தும்
குறைவில் லவனூர் குரங்கா டுதுறையே. ௩

விழிக்குந் நுதன்மே லொருவெண் பிறைசூடித்
தெழிக்கும் புறங்காட் டிடைச்சேர்ந் தெரியாடிப்
பழிக்கும் பரிசே பலிதேர்ந் தவனூர்பொன்
கொழிக்கும் புனல்சூழ் குரங்கா டுதுறையே. ௪

நீரூர் தருமே னியன்நெற் றியொர்கண்ணன்
ஏரூர் கொடியெம் மிறையீண் டெரியாடி
ஆரூர் சடையந் தணன் ஆயிழையாளோர்
கூறன் நகர்போல் குரங்கா டுதுறையே. ௫

நளிரும் மலர்க்கொன் றையுநா றுகரந்தைத்
துளிருஞ் சுலவிச் சுடுகாட் டெரியாடி
மிளிரும் அரவார்த் தவன்மேவியகோயில்
குளிரும் புனல்சூழ் குரங்கா டுதுறையே. ௬

பழகும் வினைதீர்ப் பவன்பார்ப் பதியோடும்
முழவம் குழல்மொந் தைமுழங் கெரியாடும்
அழகன் அயில்மூ விலைவேல் வலனேந்தும்
குழகன் நகர்போல் குரங்கா டுதுறையே. ௭

வரையார்த் தெடுத்தவ் வரக்கன் வலியொல்க
நிரையார் விரலால் நெரித்திட் டவனூராம்
கரையார்ந் திழிகா விரிக்கோ லக்கரைமேல்
குரையார் பொழில்சூழ் குரங்கா டுதுறையே. அ

நெடியா னொடுநான் முகனும் நினைவொண்ணாப்
படியா கியபண் டங்களின் றெரியாடி
செடியார் தலையேந் தியசெங்கண் வெள்ளேற்றின்
கொடியான் நகர்போல் குரங்கா டுதுறையே. க

துவரா டையர்வே டமலாச் சமண்கையர்
கவர்வாய் மொழிகா தல்செய்யா தவனூராம்
நவையார் மணிபொன் அகில்சந் தனமுந்திக்
குவையார் கரைசேர் குரங்கா டுதுறையே. க0

நல்லார் பயில்கா ழியுள்ஞா னசம்பந்தன்
கொல்லே றுடையான் குரங்கா டுதுறைமேல்
சொல்லார் தமிழ்மா லைபத்துந் தொழுதேத்த
வல்லா ரவர்வா னவரோ டுறைவாரே. கக

திருச்சிற்றம்பலம்

திருவிரும்பூளை - பண் - இந்தளம்

வினவுரை

திருச்சிற்றம்பலம்

சீரார் கழலே தொழுவீ ரிதுசெப்பீர்
வாரார் முலைமங் கையொடும் முடனாகி
ஏரா ரிரும்பூ ளையிடங் கொண்டஈசன்
காரார் கடல்நஞ் சமுதுண் டகருத்தே. க

தொழலார் கழலே தொழுதொண் டர்கள்சொல்லீர்
குழலார் மொழிக்கோல் வளையோ டுடனாகி
எழிலா ரிரும்பூ ளையிடங் கொண்டஈசன்
கழல்தான் கரிகா னிடையா டுகருத்தே. உ

அன்பா லடிகை தொழுவீ ரறியீரே
மின்போல் மருங்குல் மடவா ளொடுமேவி

இன்பா யிரும்பூ ளையிடங் கொண்டஈசன்
பொன்போற் சடையிற் புனல்வைத்த பொருளே. ௬

நச்சித் தொழுவீர் கள்நமக் கிதுசொல்லீர்
கச்சிப் பொலிகா மக்கொடி யுடன்கூடி
இச்சித் திரும்பூ ளையிடங் கொண்டஈசன்
உச்சித் தலையிற் பலிகொண் டுழலூணே. ௭

சுற்றார்ந் தடியே தொழுவீ ரிதுசொல்லீர்
நற்றாழ் குழல்நங் கையொடும் உடனாகி
எற்றே யிரும்பூ ளையிடங் கொண்டஈசன்
புற்றா டரவோ டென்பூண் டபொருளே. ௫

தோடார் மலர்தூய்த் தொழுதொண் டர்கள்சொல்லீர்
சேடார் குழற்சே யிழையோ டுடனாகி
ஈடா யிரும்பூ ளையிடங் கொண்டஈசன்
காடார் கடுவே டுவனா னகருத்தே. ௬,௭

ஒருக்கும் மனத்தன் பருள்ளீ ரிதுசொல்லீர்
பருக்கைம் மதவே ழமுரித் துமையோடும்
இருக்கை யிரும்பூ ளையிடங் கொண்டஈசன்
அரக்கன் உரந்தீர்த் தருளாக் கியவாறே. ௮

அயரா யினநீங் கித்தொழுந் தொண்டர்சொல்லீர்
கயலார் கருங்கண் ணியொடும் உடனாகி
இயல்பா யிரும்பூ ளையிடங் கொண்டஈசன்
முயல்வா ரிருவர்க் கெரியா கியமொய்ம்பே. ௯

துணைநன் மலர்தூய்த் தொழுந்தொண் டர்கள்சொல்லீர்
பணைமென் முலைப்பார்ப் பதியோ டுடனாகி
இணையில் லிரும்பூ ளையிடங் கொண்டஈசன்
அணைவில் சமண்சாக் கியமாக் கியவாறே. ௧௦

எந்தை யிரும்பூ ளையிடங் கொண்டஈசன்
சந்தம் பயில்சண் பையுண்ஞா னசம்பந்தன்
செந்தண் தமிழ்செப் பியபத் திவைவல்லார்
பந்தம் மறுத்தோங் குவர்பான் மையினாலே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருமறைக்காடு - பண் - இந்தளம்

கதவு அடைக்கப் பாடிய பதிகம்

திருச்சிற்றம்பலம்

சதுரம் மறைதான் துதிசெய் துவணங்கும்
மதுரம் பொழில்சூழ் மறைக்காட் டுறைமைந்தா
இதுநன் கிறைவைத் தருள்செய்க எனக்குன்
கதவந் திருக்காப் புக்கொள்ளுங் கருத்தாலே. க

சங்கந் தரளம் அவைதான் கரைக்கெற்றும்
வங்கக் கடல்சூழ் மறைக்காட் டுறைமைந்தா
மங்கை உமைபா கமுமா கவிதென்கொல்
கங்கை சடைமே லடைவித் தகருத்தே. உ

குரவங் குருக்கத் திகள்புன் னைகள்ஞாழல்
மருவும் பொழில்சூழ் மறைக்காட் டுறைமைந்தா
சிரமும் மலருந் திகழ்செஞ் சடைதன்மேல்
அரவம் மதியோ டடைவித் தவழகே. ௩

படர்செம் பவளத் தொடுபன் மலர்முத்தம்
மடலம் பொழில்சூழ் மறைக்காட் டுறைமைந்தா
உடலம் உமைபங் கமதா கியுமென்கொல்
கடல்நஞ் சமுதா அதுவுண் டகருத்தே. ச

வானோர் மறைமா தவத்தோர் வழிபட்ட
தேனார் பொழில்சூழ் மறைக்காட் டுறைசெல்வா
ஏனோர் தொழுதேத்த இருந்தநீ யென்கொல்
கானார் கடுவே டுவனா னகருத்தே. ரு

பலகா லங்கள்வே தங்கள்பா தங்கள்போற்றி
மலரால் வழிபா டுசெய்மா மறைக்காடா
உலகே முடையாய் கடைதோ றும்முன்னென்கொல்
தலைசேர் பலிகொண் டதிலுண் டதுதானே. சு

வேலா வலயத் தயலே மிளிர்வெய்தும்
சேலார் திருமா மறைக்காட் டுறைசெல்வா
மாலோ டயன்இந் திரன்அஞ் சமுன்என்கொல்
காலார் சிலைக்கா மனைக்காய்ந் தகருத்தே. எ

கலங்கொள் கடலோ தம்உலா வுங்கரைமேல்
வலங்கொள் பவர்வாழ்த் திசைக்கும் மறைக்காடா
இலங்கை யுடையான் அடர்ப்பட் டிடரெய்த
அலங்கல் விரலூன் றியருள் செய்தவாறே. ௮

கோனென் றுபல்கோ டியுருத் திரர்போற்றும்
தேனம் பொழில்சூழ் மறைக்காட் டுறைசெல்வா
ஏனங் கழுகா னவருன் னைமுன்என்கொல்
வானந் தலமண் டியுங்கண் டிலாவாறே. ௯

வேதம் பலவோ மம்வியந் தடிபோற்ற
ஓதம் உலவும் மறைக்காட் டிலுறைவாய்
ஏதில் சமண்சாக் கியர்வாக் கிவையென்கொல்
ஆத ரொடுதா மலர்தூற் றியவாறே. ௧௦

காழிந் நகரான் கலைஞா னசம்பந்தன்
வாழும் மறைக்கா டனைவாய்ந் தறிவித்த
ஏழின் இசைமா லையீரைந் திவைவல்லார்
வாழி புலகோர் தொழவான் அடைவாரே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருச்சாய்க்காடு - பண் - இந்தளம்

திருச்சிற்றம்பலம்

நித்தலு நியமஞ் செய்துநீர் மலர்தூவிச்
சித்தமொன் றவல்லார்க் கருளுஞ் சிவன்கோயில்
மத்தயா னையின்கோ டும்வண்பீ லியும்வாரித்
தத்துநீர்ப் பொன்னி சாகரம்மேவு சாய்க்காடே. ௧

பண்டலைக் கொண்டுபூ தங்கள்பா டநின்றாடும்
வெண்டலைக் கருங்கா டுறைவே தியன்கோயில்
கொண்டலைத் திகழ்பே ரிமுழங் கக்குலாவித்
தண்டலைத் தடமா மயிலாடு சாய்க்காடே. ௨

நாறுகூ விளநா ளமெவண் மதியத்தோ
டாறுசூ டும்அம ரர்பிரா னுறைகோயில்

ஊறுதேங் கனிமாங் கனியோங் கியசோலைத்
தாறுதன் கதலிப் புதல்மேவு சாய்க்காடே. ௩

வாங்கள்வண் புகழ்மன் னியஎந் தைமருவார்
புரங்கள்மூன் றும்பொடி படஎய் தவன்கோயில்
இரங்கலோ சையுமீட் டியசாத் தொடுமீண்டித்
தரங்கம்நீள் கழித்தண் கரைவைகு சாய்க்காடே. ௪

ஏழைமாதர் கடைதோ றுமிடு பலிக்கென்று
கூழைவா ளரவாட் டும்பிரா னுறைகோயில்
மாழையொண் கண்வளைக் கைநுளைச் சியர்வண்பூந்
தாழைவெண் மடற்கொய்து கொண்டாடு சாய்க்காடே. ௫

துங்கவா னவர்சூழ் கடல்தாம் கடைபோதில்
அங்கோர்நீ ழலளித் தஎம்மா னுறைகோயில்
வங்கம்அங் கொளிர்இப் பியுமுத் துமணியுஞ்
சங்கும்வா ரித்தடங் கடலுந்து சாய்க்காடே. ௬

வேதநா வினர்வெண் பளிங்கின் குழைக்காதர்
ஓதநஞ் சணிகண் டருகந் துறைகோயில்
மாதர்வண் டுதன்கா தல்வண்டா டியபுன்னைத்
தாதுகண் டுபொழில் மறைந்தூடு சாய்க்காடே. ௭

இருக்குநீள் வரைபற் றியடர்த் தன்றெடுத்த
அரக்கன் ஆகம்நெரித் தருள்செய் தவன்கோயில்
மருக்குலா வியமல் லிகைசண் பகம்வண்பூந்
தருக்குலா வியதண் பொழில்நீடு சாய்க்காடே. ௮

மாலினோ டயன்காண் டற்கரி யவர்வாய்ந்த
வேலையார் விடமுண் டவர்மே வியகோயில்
சேலின்நேர் விழியார் மயிலா லச்செருந்தி
காலையே கனகம் மலர்கின்ற சாய்க்காடே. ௯

ஊத்தைவாய்ச் சமண்கை யர்கள்சாக் கியர்க்கென்றும்
ஆத்தமா கஅறி வரிதா யவன்கோயில்
வாய்த்தமா ளிகைசூழ் தருவண் புகார்மாடே
பூத்தவா விகள்சூழ்ந் துபொலிந்த சாய்க்காடே. ௧௦

ஏனையோர் புகழ்ந்தேத் தியஎந்தை சாய்க்காட்டை
ஞானசம் பந்தன்கா ழியர்கோன் நவில்பத்தும்
ஊனமின் றியுரை செயவல் லவர்தாம்போய்
வானநா டினிதாள் வரிம்மா நிலத்தோரே. கக

திருச்சிற்றம்பலம்

திருக்ஷேத்திரக்கோவை - பண் - இந்தளம்

திருச்சிற்றம்பலம்

ஆரூர் தில்லையம் பலம்வல் லம்நல்லம் வடகச் சியுமச் சிறு பாக்கம் நல்ல, கூரூர் குடவாயில் குடந்தை வெண்ணி கடல்சூழ் கழிப் பாலை தென்கோடி பீடார், நீரூர் வயல்நின் றியூர் குன்றியூருங் குருகா வையூர் நாரையூர் நீடுகானப், பேரூர் நன்னீள் வயல்நெய்த் தானமும் பிதற்றாய் பிறை சூடிதன் பேரிடமே. க

அண்ணாமலை யீங்கோயும் அத்தி முத்தா றகலா முதுகுன் றங் கொடுங் குன்றமுங், கண்ணார் கழுக்குன்றங் கயிலை கோணம் பயில்கற் குடி காளத்தி வாட்போக்கியும், பண்ணார் மொழி மங்கையோர் பங் குடையான் பரங்குன்றம் பருப்பதம் பேணி நின்றே, எண்ணாய் இர வும்பகலும் இடும்பைக் கடல் நீந்தலாங் காரணமே. உ

அட்டா னமென் றோதிய நாலிரண்டும் அழகன் னுறை காவனைத் துந் துறைகள், எட்டாந் திருமூர்த் தியின்கா டொன்பதுங் குளம்மூன் றுங் களமஞ்சம் பாடி நான்கும், மட்டார் குழலாள் மலைமங்கை பங்கன் மதிக்கும் இடமா கியபாழி மூன்றும், சிட்டா னவன்பா சூரென்றே விரும்பாய் அரும்பா வங்களா யினதேய்ந் தறவே. ௩

அறப்பள்ளி அகத்தியான் பள்ளி வெள்ளைப் பொடிப்பூசி யாறணி வானமர் காட்டுப்பள்ளி, சிறப்பள்ளி சிராப்பள்ளி செம்பொன் பள்ளி திருநனி பள்ளி சீர்மகேந் திரத்துப், பிறப்பில் லவன்பள்ளி வெள்ளச் சடையான் விரும்பும் மிடைப்பள்ளி வண்சக் காமால், உறைப்பா லடி போற்றக் கொடுத்த பள்ளி உணராய் மட நெஞ்சமே உன்னிநின்றே.

ஆறை வடமாகறல்அம்பர் ஐயாறணியார் பெருவேளூர் விளமர்தெங்கூர்
சேறை துலைபுக ளூரக லாதிவை காதலித்தானவன் சேர்பதியே
* * * * ரு

மனவஞ்சர் மற்றோட முன்மாத ராரும் மதிகூர் திருக்கூடலில்ஆல வாயும், இனவஞ் சொலிலா இடைமா மருதும் இரும்பைப் பதிமா காளம் வெற்றியூரும், கனமஞ் சினமால் விடையான் விரும்புங் கருகா ஊர் நல்லூர்பெரும் புலியூர், தனமென் சொலிற்றஞ்ச மென்றே நினை மின் தவமாம் மலமா யினதா னறுமே. ௬

மாட்டூர் மடப் பாச்சி லாச்சிராமம் முண்டீச் சாம்வாத வூர்வார ணாசி, காட்டூர் கடம்பூர் படம்பக்கங் கொட்டுங் கடலொற்றி யூர்மற் றுறையூ ரவையும், கோட்டூர் திருவாமாத் தூர்கோ ழம்பமுங் கொடுங் கோவலூர் திருக்குண வாயில் * * * * ௭

* * குலாவுதிங்கட் சடையான் குளிரும் பரிதிநியமம், போற்றூ ரடியார் வழிபா டொழியாத்தென் புறம்பயம் பூவணம் பூழி யூரும், காற் றூர் வரையன் றெடுத்தான் முடிதோள் நெரித்தானுறை கோயிலென் றென்று நீகருதே. ௮

நெற்குன்றம் ஓத்தூர் நிறைநீர் மருகல் நெடுவாயில் குறும்பலா நீடுதிரு, நற்குன்றம் வலம்புரம் நாகேச்சுரம் நளிர்சோலை உஞ்சேனை மாகாளம் வாய்மூர், கற்குன்ற மொன்றேந்தி மழை தடுத்த கடல்வண் ணனும் மாமலரோனுங் காணச், சொற்கென்றுந் தொலைவிலாதானுறை யுங் குடமூக் கென்றுசொல்லிக் குலாவுமினே. ௯

குத்தங் குடி வேதிகுடி புனல்சூழ் குருந்தங் குடி தேவன்குடி மருவும், அத்தங்குடி தண்டிரு வண்குடியும் அலம்புஞ் சலந்தன்சடை வைத்துகந்த, நித்தன் நிமலன்உமையோ டுங்கூடநெடுங்காலம் உறை விடமென்று சொல்லாப், புத்தர் புறங் கூறிய புன்சமணர் நெடும் பொய்களை விட்டு நினைந் துய்ம்மினே. ௧௦

அம்மானை யருந்தவ மாகி நின்ற அமரர் பெருமான்பதியானவுன் னிக், கொய்ம்மா மலர்ச்சோலை குலாவு கொச்சைக் கிறைவன் சிவ ஞான சம்பந்தன் சொன்ன, இம்மாலை யீரைந்தும் இரு நிலத்தில் இர வும் பகலுந் நினைந்தேத்தி நின்று, விம்மா வெருவா விரும்பும் அடியார் விதியார் பிரியார் சிவன்சே வடிக்கே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருப்பிரமபுரம் - பண் - சீகாமரம்

திருச்சிற்றம்பலம்

எம்பிரான் எனக்கமுத மாவானுந் தன்னடைந்தார்
தம்பிரான் ஆவானுந் தழலேந்து கையானுங்
கம்பமா கரியுரித்த காபாலி கறைக்கண்டன்
வம்புலாம் பொழிற்பிரம புரத்துறையும் வானவனே. க

தாமென்றும் மனந்தளராத் தகுதியரா யுலகத்துக்
காமென்று சரண்புகுந்தார் தமைக்காக்குங் கருணையினான்
ஓமென்று மறைபயில்வார் பிரமபுரத் துறைகின்ற
காமன்றன் உடலெரியக் கனல்சேர்ந்த கண்ணானே. உ

நன்னெஞ்சே யுனையிரந்தேன் நம்பெருமான் திருவடியே
உன்னஞ்செய் திருகண்டாய் உய்வதனை வேண்டுதியேல்
அன்னஞ்சேர் பிரமபுரத் தாரமுதை யெப்போதும்
பன்னுஞ்சீர் வாயதுவே பார்கண்ணே பரிந்திடவே. ௩

சாநாளின் றிம்மனமே சங்கைதனைத் தவிர்ப்பிக்குங்
கோனாளுந் திருவடிக்கே கொழுமலர்தூ வெத்தனையுந்
தேனாளும் பொழிற்பிரம புரத்துறையுந் தீவணனை
நாநாளும் நல்நியமஞ் செய்தவன்சீர் நவின்றேத்தே. ௪

கண்ணுதலான் வெண்ணீற்றான் கமழ்சடையான் விடையேறி
பெண்ணிதமாம் உருவத்தான் பிஞ்ஞகன்பேர் பலவுடையான்
விண்ணுதலாத் தோன்றியசீர்ப் பிரமபுரந் தொழவிரும்பி
எண்ணுதலாஞ் செல்வத்தை யியல்பாக அறிந்தோமே. ௫

எங்கேனும் யாதாகிப் பிறந்திடினுந் தன்னடியார்க்
கிங்கேயென் றருள்புரியும் எம்பெருமான் எருதேறிக்
கொங்கேயும் மலர்ச்சோலைக் குளிர்பிரம புரத்துறையுஞ்
சங்கேயொத் தொளிர்மேனிச் சங்கரன்றன் தன்மைகளே. ௬

சிலையதுவெஞ் சிலையாகத் திரிபுரமூன் றெரிசெய்த
இலைநுனைவேல் தடக்கையன் ஏந்திழையா ளொருகூறன்
அலைபுனல்சூழ் பிரமபுரத் தருமணியை யடிபணிந்தால்
நிலையுடைய பெருஞ்செல்வம் நீடுலகிற் பெறலாமே. ௭

எரித்தமயிர் வாளரக்கன் வெற்பெடுக்கத் தோளொடுதாள்
நெரித்தருளுஞ் சிவமூர்த்தி நீறணிந்த மேனியினன்
உரித்தவரித் தோலுடையான் உறைபிரம புரந்தன்னைத்
தரித்தமனம் எப்போதும் பெறுவார்தாம் தக்காரே. அ

கரியானும் நான்முகனுங் காணாமைக் கனலுருவாய்
அரியானாம் பரமேட்டி அரவஞ்சே ரகலத்தான்
தெரியாதான் இருந்துறையுந் திகழ்பிரம புரஞ்சேர
உரியார்தாம் ஏழுலகும் உடனாள உரியாரே. கூ.

உடையிலார் சீவரத்தார் தன்பெருமை யுணர்வரியான்
முடையிலார் வெண்டலைக்கை மூர்த்தியாந் திருவுருவன்
பெடையிலார் வண்டாடும் பொழிற்பிரம புரத்துறையுஞ்
சடையிலார் வெண்பிறையான் தாள்பணிவார் தக்காரே. க0.

தன்னடைந்தார்க் கின்பங்கள் தருவானைத் தத்துவனைக்
கன்னடைந்த மதிற்பிரம புரத்துறையுங் காவலனை
முன்னடைந்தான் சம்பந்தன் மொழிபத்து மிவைவல்லார்
பொன்னடைந்தார் போகங்கள் பலவடைந்தார் புண்ணியரே. கக.

திருச்சிற்றம்பலம்

திருச்சாய்க்காடு - பண் - சீகாமரம்

திருச்சிற்றம்பலம்

மண்புகார் வான்புகுவர் மனமிளையார் பசியாலுங்
கண்புகார் பிணியறியார் கற்றாருங் கேட்டாரும்
விண்புகா ரெனவேண்டா வெண்மாட நெடுவீதித்
தண்புகார்ச் சாய்க்காட்டெந் தலைவன்தாள் சார்ந்தாரே. க

போய்க்காடே மறைந்துறைதல் புரிந்தானும் பூம்புகார்ச்
சாய்க்காடே பதியாக வுடையானும் விடையானும்
வாய்க்காடு முதுமரமே யிடமாக வந்தடைந்த
பேய்க்காடல் புரிந்தானும் பெரியோர்கள் பெருமானே. உ

நீநாளும் நன்னெஞ்சே நினைகண்டாய் யாரறிவார்
சாநாளும் வாழ்நாளுஞ் சாய்க்காட்டெம் பெருமாற்கே

பூநாளுந் தலைசுமப்பப் புகழ்நாமஞ் செவிகேட்ப
நாநாளும் நவின்றேத்தப் பெறலாமே நல்வினையே. ௩

கட்டலர்த்த மலர்தூவிக் கைதொழுமின் பொன்னியன்ற
தட்டலர்த்த பூஞ்செருந்தி கோங்கமருந் தாழ்பொழில்வாய்
மொட்டலர்த்த தடந்தாழை முருகுயிர்க்குங் காவிரிப்பூம்
பட்டினத்துச் சாய்க்காட்டெம் பரமேட்டி பாதமே. ௪

கோங்கன்ன குவிமுலையாள் கொழும்பணைத்தோட் கொடியிடையைப்
பாகென்ன வைத்துகந்தான் படர்சடைமேற் பால்மதியந்
தாங்கினான் பூம்புகார்ச் சாய்க்காட்டான் தாள்நிழற்கீழ்
ஓங்கினார் ஓங்கினா ரெனவுரைக்கும் உலகமே. ௫

சாந்தாக நீறணிந்தான் சாய்க்காட்டான் காமனைமுன்
தீந்தாகம் எரிகொளுவச் செற்றுகந்தான் திருமுடிமேல்
ஓய்ந்தார மதிசூடி யொளிதிகழும் மலைமகள்தோள்
தோய்ந்தாகம் பாகமா வுடையானும் விடையானே. ௬

மங்குல்தோய் மணிமாடம் மதிதவழும் நெடுவீதிச்
சங்கெலாங் கரைபொருது திரைபுலம்புஞ் சாய்க்காட்டான்
கொங்குலா வரிவண்டின் இசைபாடு மலர்க்கொன்றைத்
தொங்கலான் அடியார்க்குச் சுவர்க்கங்கள் பொருளலவே. ௭

தொடலரிய தொருகணையாற் புரமூன்றும் எரியுண்ணப்
படஅரவத் தெழிலாரம் பூண்டான்பண் டரக்கனையுந்
தடவரையால் தடவரைத்தோ ளூன்றினான் சாய்க்காட்டை
இடவகையால் அடைவோமென் றெண்ணுவார்க் கிடரிலையே. ௮

வையநீ ரேற்றானும் மலருறையும் நான்முகனும்
ஐயன்மார் இருவர்க்கும் அளப்பரிதால் அவன்பெருமை
தையலார் பாட்டோவாச் சாய்க்காட்டெம் பெருமானைத்
தெய்வமாப் பேணாதார் தெளிவுடைமை தேறோமே. ௯

குறங்காட்டு நால்விரலிற் கோவணத்துக் கோலோவிப்போய்
அறங்காட்டுஞ் சமணருஞ் சாக்கியரும் அலர்தூற்றுந்
திறங்காட்டல் கேளாதே தெளிவுடையீர் சென்றடைமின்
புறங்காட்டில் ஆடலான் பூம்புகார்ச் சாய்க்காடே. ௰

நொம்பைந்து புடைத்தொல்கு நூபுரஞ்சேர் மெல்லடியார்
அம்பந்தும் வரிக்கழலும் அரவஞ்செய் பூங்காழிச்
சம்பந்தன் தமிழ்பகர்ந்த சாய்க்காட்டுப் பத்தினையும்
எம்பந்த மெனக்கருதி யேத்துவார்க் கிடர்கெடுமே. கக

திருச்சிற்றம்பலம்

திருஆக்கூர்த்தான்றேன்றிமாடம் - பண் - சீகாமரம்

திருச்சிற்றம்பலம்

அக்கிருந்த ஆரமும் ஆடரவும் ஆமையும்
தொக்கிருந்த மார்பினன் தோலுடையான் வெண்ணீற்றான்
புக்கிருந்த தொல்கோயில் பொய்யிலா மெய்ந்நெறிக்கே
தக்கிருந்தார் ஆக்கூரில் தான்தோன்றி மாடமே. க

நீரார வார்சடையான் நீறுடையான் ஏறுடையான்
காரார்பூங் கொன்றையினன் காதலித்த தொல்கோயில்
கூரால் வாய்நிறையக் கொண்டயலே கோட்டகத்தில்
தாராமல் காக்கூரில் தான்தோன்றி மாடமே. உ

வாளார்கண் செந்துவர்வாய் மாமலையான் தன்மடந்தை
தோளாகம் பாகமாப் புல்கினன் தொல்கோயில்
வேளாள ரென்றவர்கள் வள்ளன்மையான் மிக்கிருக்கும்
தாளாளர் ஆக்கூரில் தான்தோன்றி மாடமே. ங

கொங்குசேர் தண்கொன்றை மாலையினன் கூற்றடரப்
பொங்கினன் பொங்கொளிசேர் வெண்ணீற்றான் பூங்கோயில்
அங்கம் ஆறோடும் அருமறைகள் ஐவேள்வி
தங்கினர் ஆக்கூரில் தான்தோன்றி மாடமே. ச

வீக்கினன் ஆடரவம் வீந்தழிந்தார் வெண்தலையென்
பாக்கினன் பலகலன்க ளாதரித்துப் பாகம்பெண்
ஆக்கினன் தொல்கோயில் ஆம்பலம்பூம் பொய்கைபுடை
தாக்கினர் ஆக்கூரில் தான்தோன்றி மாடமே. ரு

பண்ணொளிசேர் நான்மறையான் பாடலினோ டாடலினன்
கண்ணொளிசேர் நெற்றியினன் காதலித்த தொல்கோயில்

விண்ணொளிசேர் மாமதியந் தீண்டியக்கால் வெண்மாடம்
தண்ணொளிசேர் ஆக்கூரில் தான்தோன்றி மாடமே. ௬

வீங்கினார் மும்மதிலும் வில்வரையால் வெந்தவிய
வாங்கினார் வானவர்கள் வந்திறைஞ்சுந் தொல்கோயில்
பாங்கினார் நான்மறையோ டாறங்கம் பலகலைகள்
தாங்கினார் ஆக்கூரில் தான்தோன்றி மாடமே. ௭

கல்நெடிய குன்றெடுத்தான் தோளடரக் காலூன்றி
இன்னருளா லாட்கொண்ட எம்பெருமான் தொல்கோயில்
பொன்னடிக்கே நாள்தோறும் பூவோடு நீர்சுமக்கும்
தன்னடியார் ஆக்கூரில் தான்தோன்றி மாடமே. ௮

நன்மையாம் நாரணனும் நான்முகனுங் காண்பரிய
தொன்மையான் தோற்றங்கே டில்லாதான் தொல்கோயில்
இன்மையாற் சென்றிரந்தார்க் கில்லையென்னா தீந்துவக்குந்
தன்மையார் ஆக்கூரில் தான்தோன்றி மாடமே. ௯

நாமருவு புன்மை நவிற்றச் சமண்தேரர்
பூமருவு கொன்றையினான் புக்கமருந் தொல்கோயில்
சேல்மருவு பைங்கயத்துச் செங்கழுநீர் பைங்குவளை
தாமருவும் ஆக்கூரில் தான்தோன்றி மாடமே. ௧௦

ஆடல் அமர்ந்தானை ஆக்கூரில் தான்தோன்றி
மாடம் அமர்ந்தானை மாடஞ்சேர் தண்காழி
நாடற் கரியசீர் ஞானசம் பந்தன்சொல்
பாடலிவை வல்லார்க் கில்லையாம் பாவமே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருப்புள்ளிருக்குவேளூர் - பண் - சீகாமரம்

திருச்சிற்றம்பலம்

கள்ளார்ந்த பூங்கொன்றை மதமத்தம் கதிர்மதியம்
உள்ளார்ந்த சடைமுடியெம் பெருமானார் உறையுமிடந்
தள்ளாய சம்பாதி சடாயென்பார் தாமிருவர்
புள்ளானார்க் கரையனிடம் புள்ளிருக்கு வேளூரே. ௧

தையலாள் ஒருபாகஞ் சடைமேலாள் அவளோடும்
ஐயந்தேர்ந் தழல்வாரோர் அந்தணர் உறையுமிடம்
மெய்சொல்லா இராவணனை மேலோடி யீடழித்துப்
பொய்சொல்லா துயிர்போனான் புள்ளிருக்கு வேளூரே. ௨

வாசநலஞ் செய்திமையோர் நாள்தோறும் மலர்தூவ
ஈசனெம் பெருமானார் இனிதாக உறையுமிடம்
யோசனைபோய்ப் பூக்கொணர்ந்தங் கொருநாளும் ஒழியாமே
பூசனைசெய் தினிதிருந்தான் புள்ளிருக்கு வேளூரே. ௩

மாகாயம் பெரியதொரு மானுரிதோ லுடையாடை
ஏகாய மிட்டுகந்த எரியாடி உறையுமிடம்
ஆகாயந் தேரோடும் இராவணனை அமரின்கண்
போகாமே பொருதழித்தான் புள்ளிருக்கு வேளூரே. ௪

கீதத்தை மிகப்பாடும் அடியார்கள் குடியாகப்
பாதத்தைத் தொழநின்ற பரஞ்சோதி பயிலுமிடம்
வேதத்தின் மந்திரத்தால் வெண்மணலே சிவமாகப்
போதத்தால் வழிபட்டான் புள்ளிருக்கு வேளூரே. ௫

திறங்கொண்ட அடியார்மேல் தீவினைநோய் வாராமே
அறங்கொண்டு சிவதன்மம் உரைத்தபிரான் அமருமிடம்
மறங்கொண்டங் கிராவணன்றன் வலிகருதி வந்தானைப்
புறங்கண்ட சடாயென்பான் புள்ளிருக்கு வேளூரே. ௬

அத்தியின்ஈ ருரிமூடி அழகாக அனலேந்திப்
பித்தரைப்போற் பலிதிரியும் பெருமானார் பேணுமிடம்
பத்தியினால் வழிபட்டுப் பலகாலந் தவஞ்செய்து
புத்தியொன்ற வைத்துகந்தான் புள்ளிருக்கு வேளூரே. ௭

பண்ணொன்ற இசைபாடும் அடியார்கள் குடியாக
மண்ணின்றி விண்கொடுக்கும் மணிகண்டன் மருவுமிடம்
எண்ணின்றி முக்கோடி வாழ்நாள துடையானைப்
புண்ணொன்றப் பொருதழித்தான் புள்ளிருக்கு வேளூரே. ௮

வேதித்தார் புரமூன்றும் வெங்கணையால் வெந்தவியச்
சாதித்த வில்லாளி கண்ணாளன் சாருமிடம்

ஆதித்தன் மகனென்ன அகன்ஞாலத் தவரோடும்
போதித்த சடாயென்பான் புள்ளிருக்கு வேளூரே. ௯

கடுத்தவருங் கங்கைதனைக் கமழ்சடையொன் றூடாமே
தடுத்தவனெம் பெருமானூர் தாமினிதா யுறையுமிடம்
விடைத்தவரும் இலங்கைக்கோன் மலங்கச்சென் றிராமற்காய்ப்
புடைத்தவனைப் பொருதழித்தான் புள்ளிருக்கு வேளூரே. ௧0

செடியாய வுடல்தீர்ப்பான் தீவினைக்கோர் மருந்தாவான்
பொடியாடிக் கடிமைசெய்த புள்ளிருக்கு வேளூரைக்
கடியார்ந்த பொழிற்காழிக் கவுணியன்சம் பந்தன்சொல்
மடியாது சொல்லவல்லார்க் கில்லையாம் மறுபிறப்பே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருஆமாத்தூர் - பண் - சீகாமரம்

திருச்சிற்றம்பலம்

துன்னம்பெய் கோவணமுந் தோலு முடையாடை
பின்னஞ் சடைமேலோர் பிள்ளை மதிசூடி
அன்னஞ்சேர் தண்கானல் ஆமாத்தூர் அம்மான்றன்
பொன்னங் கழல்பரவாப் பொக்கமும் பொக்கமே. ௧

கைம்மாவின் தோல்போர்த்த காபாலி வானுலகில்
மும்மா மதிலெய்தான் முக்கணான் பேர்பாடி
அம்மா மலர்ச்சோலை ஆமாத்தூர் அம்மான்எம்
பெம்மானென் றேத்தாதார் பேயரிற் பேயரே. ௨

பாம்பரைச் சாத்தியோர் பண்டரங்கன் விண்டதோர்
தேம்பல் இளமதியஞ் சூடிய சென்னியான்
ஆம்பலம் பூம்பொய்கை ஆமாத்தூர் அம்மான்றன்
சாம்பல் அகலத்தார் சார்பல்லாற் சார்பிலமே. ௩

கோணாகப் பேரல்குல் கோல்வளைக்கை மாதராள்
பூணாகம் பாகமாப் புல்கி யவளோடும்
ஆணாகக் காதல்செய் ஆமாத்தூர் அம்மானைக்
காணாத கண்ணெல்லாங் காணாத கண்களே. ௪

பாடல் நெறிநின்றான் பைங்கொன்றைத் தண்தாரே
சூடல் நெறிநின்றான் சூலஞ்சேர் கையினன்
ஆடல் நெறிநின்றான் ஆமாத்தூர் அம்மான்றன்
வேட நெறிநில்லா வேடமும் வேடமே. ரு

சாமவரை வில்லாகச் சந்தித்த வெங்கணையால்
காவல் மதிலெய்தான் கண்ணுடை நெற்றியான்
யாவருஞ் சென்றேத்தும் ஆமாத்தூர் அம்மானைத்
தேவர் தலைவணங்குந் தேவர்க்குந் தேவனே. ௬

மாறாத வெங்கூற்றை மாற்றி மலைமகளை
வேறாக நில்லாத வேடமே காட்டினான்
ஆறாத தீயாடி ஆமாத்தூர் அம்மானைக்
கூறாத நாவெல்லாங் கூறாத நாக்களே. ௭

தாளால் அரக்கன்தோள் சாய்த்த தலைமகன்றன்
நாள்ஆ திரையென்றே நம்பன்றன் நாமத்தால்
ஆளானார் சென்றேத்தும் ஆமாத்தூர் அம்மானைக்
கேளாச் செவியெல்லாங் கேளாச் செவிகளே. ௮

புள்ளுங் கமலமுங் கைக்கொண்டார் தாமிருவர்
உள்ளும் அவன்பெருமை ஒப்பளக்குந் தன்மையதே
அள்ளல் விளைகழனி ஆமாத்தூர் அம்மான்எம்
வள்ளல் கழல்பரவா வாழ்க்கையும் வாழ்க்கையே. ௯

பிச்சை பிறர்பெய்யப் பின்சாரக் கோசாரக்
கொச்சை புலால்நாற ஈருரிவை போர்த்துகந்தான்
அச்சந்தன் மாதேவிக் கீந்தான்றன் ஆமாத்தூர்
நிச்சல் நினையாதார் நெஞ்சமும் நெஞ்சமே. ௧௦

ஆட லரவசைத்த ஆமாத்தூர் அம்மானைக்
கோட லிரும்புறவிற் கொச்சை வயத்தலைவன்
நாட லரியசீர் ஞானசம் பந்தன்றன்
பாட லிவைவல்லார்க் கில்லையாம் பாவமே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருக்கைச்சினம் - பண் - சீகாமரம்

திருச்சிற்றம்பலம்

தையலோர் கூறுடையான் தண்மதிசேர் செஞ்சடையான்
மையுலா மணிமிடற்றான் மறைவிளங்கு பாடலான்
நெய்யுலா மூவிலைவே லேந்தி நிவந்தொளிசேர்
கையுடையான் மேவியுறை கோயில் கைச்சினமே. க

விடம்மல்கு கண்டத்தான் வெள்வளையோர் கூறுடையான்
படம்மல்கு பாம்பரையான் பற்றார் புரமெரித்தான்
நடம்மல்கும் ஆடலினான் நான்மறையோர் பாடலினான்
கடம்மல்கு மாவுரியான் உறைகோயில் கைச்சினமே. உ

பாடலார் நான்மறையான் பைங்கொன்றை பாம்பினொடும்
சூடலான் வெண்மதியந் துன்று கரந்தையொடும்
ஆடலான் அங்கை அனலேந்தி ஆடரவக்
காடலான் மேவியுறை கோயில் கைச்சினமே. ஙு

பண்டமரர் கூடிக் கடைந்த படுகடல்நஞ்
சுண்டபிரான் என்றிறைஞ்சி உம்பர் தொழுதேத்த
விண்டவர்கள் தொல்நகரம் மூன்றுடனே வெந்தவியக்
கண்டபிரான் மேவியுறை கோயில் கைச்சினமே. ச

தேய்ந்தமதி வெண்பிறையான் செய்யதிரு மேனியினான்
வாய்ந்திலங்கு வெண்ணீற்றான் மாதினையோர் கூறுடையான்
சாய்ந்தமரர் வேண்டத் தடங்கடல்நஞ் சுண்டுஅனங்கைக்
காய்ந்தபிரான் மேவியுறை கோயில் கைச்சினமே. ரு

மங்கையோர் கூறுடையான் மன்னு மறைபயின்றான்
அங்கையோர் வெண்டலையான் ஆடரவம் பூண்டுகந்தான்
திங்களொடு பாம்பணிந்த சீரார் திருமுடிமேல்
கங்கையினான் மேவியுறை கோயில் கைச்சினமே. சு

வரியரவே நாணாக மால்வரையே வில்லாக
எரிகணையால் முப்புரங்கள் எய்துகந்த எம்பெருமான்
பொரிசுடலை யீமப் புறங்காட்டான் போர்த்ததோர்
கரியுரியான் மேவியுறை கோயில் கைச்சினமே. எ

போதலவு கொன்றை புனைந்தான் திருமுடிமேல்
மாதுமையா ளஞ்ச மலையெடுத்த வாளரக்கன்
நீதியினு லேத்த நிகழ்வித்து நின்ருடும்
காதலினுன் மேவியுறை கோயில் கைச்சினமே. அ

மண்ணினைமுன் சென்றிரந்த மாலும் மறையவனும்
எண்ணறியா வண்ணம் எரியுருவ மாயபிரான்
பண்ணிசையா லேத்தப் படுவான்றன் நெற்றியின்மேல்
கண்ணுடையான் மேவியுறை கோயில் கைச்சினமே. கூ, க0

தண்வயல்சூழ் காழித் தமிழ்ஞான சம்பந்தன்
கண்ணுதலான் மேவியுறை கோயில் கைச்சினத்தைப்
பண்ணிசையா லேத்திப் பயின்ற இவைவல்லார்
விண்ணவரா யோங்கி வியனுலகம் ஆள்வாரே. கக

திருச்சிற்றம்பலம்

திருநாலூர்மயானம் - பண் - சீகாமரம்

திருச்சிற்றம்பலம்

பாலூரும் மலைப்பாம்பும் பனிமதியும் மத்தமும்
மேலூருஞ் செஞ்சடையான் வெண்ணூல்சேர் மார்பினன்
நாலூர் மயானத்து நம்பான்றன் அடிநினைந்து
மாலூருஞ் சிந்தையர்பால் வந்தூரா மறுபிறப்பே. க

சூடும் பிறைச்சென்னிச் சூழ்கா டிடமாக
ஆடும் பறைசங் கொலியோ டழகாக
நாடுஞ் சிறப்போவா நாலூர் மயானத்தைப்
பாடுஞ் சிறப்போர்பாற் பற்ருவாம் பாவமே. உ

கல்லால் நிழல்மேவிக் காமுறுசீர் நால்வர்க்கன்
றெல்லா அறனுரையும் இன்னருளாற் சொல்லினன்
நல்லார் தொழுதேத்தும் நாலூர் மயானத்தைச்
சொல்லா தவரெல்லாஞ் செல்லாதார் தொல்நெறிக்கே. ந

கோலத்தார் கொன்றையான் கொல்புலித்தோ லாடையான்
நீலத்தார் கண்டத்தான் நெற்றியோர் கண்ணினன்

ஞாலத்தார் சென்றேத்தும் நாலூர் மயானத்தில்
சூலத்தா னென்பார்பால் சூழாவாந் தொல்வினையே. ௪

கறையார் மணிமிடற்றான் காபாலி கட்டங்கன்
பிறையார் வளர்சடையான் பெண்பாகன் நண்பாய
நறையார் பொழில்புடைசூழ் நாலூர் மயானத்தெம்
இறையானென் றேத்துவார்க் கெய்துமாம் இன்பமே. ௫

கண்ணார் நுதலான் கனலா டிடமாகப்
பண்ணார் மறைபாடி யாடும் பரஞ்சோதி
நண்ணார் புரமெய்தான் நாலூர் மயானத்தை
நண்ணா தவரெல்லாம் நண்ணாதார் நன்னெறியே. ௬

கண்பாவு வேகத்தாற் காமனைமுன் காய்ந்துகந்தான்
பெண்பாவு பாகத்தான் நாகத்தோல் ஆகத்தான்
நண்பாவு குணத்தோர்கள் நாலூர் மயானத்தை
எண்பாவு சிந்தையார்க் கேலா இடர்தானே. ௭

பத்துத் தலையோனைப் பாதத் தொருவிரலால்
வைத்து மலையடர்த்து வாளோடு நாள்கொடுத்தான்
நத்தின் ஒலியோவா நாலூர் மயானத்தென்
அத்தன் அடிநினைவார்க் கல்லல் அடையாவே. ௮

மாலோடு நான்முகனும் நேட வளரெரியாய்
மேலோடு கீழ்காணா மேன்மையான் வேதங்கள்
நாலோடும் ஆறங்கம் நாலூர் மயானத்தெம்
பாலோடு நெய்யாடி பாதம் பணிவோமே. ௯

துன்பாய மாசார் துவராய போர்வையார்
புன்பேச்சுக் கேளாதே புண்ணியனை நண்ணுமின்கள்
நண்பாற் சிவாயவெனா நாலூர் மயானத்தே
இன்பா யிருந்தானை யேத்துவார்க் கின்பமே. ௧௦

ஞாலம் புகழ்காழி ஞானசம் பந்தன்றான்
நாலு மறையோது நாலூர் மயானத்தைச்
சீலம் புகழாற் சிறந்தேத்த வல்லாருக்
கேலும் புகழ்வானத் தின்பா யிருப்பாரே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருமயிலாப்பூர் - பண் - சீகாமரம்

பூம்பாவையை எழுப்பிய திருப்பதிகம்

திருச்சிற்றம்பலம்

மட்டிட்ட புன்னையங் கானல் மடமயிலைக்
கட்டிட்டங் கொண்டான் கபாலீச் சரம்அமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பின் உருத்திர பல்கணத்தார்க்
கட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய். க

மைப்பயந்த ஒண்கண் மடநல்லார் மாமயிலைக்
கைப்பயந்த நீற்றான் கபாலீச் சரம்அமர்ந்தான்
ஐப்பசி ஓண விழாவும் அருந்தவர்கள்
துய்ப்பனவுங் காணாதே போதியோ பூம்பாவாய். உ

வளைக்கை மடநல்லார் மாமயிலை வண்மறுகில்
துளக்கில் கபாலீச் சரத்தான்தொல் கார்த்திகைநாள்
தளத்தேந் திளமுலையார் தையலார் கொண்டாடும்
விளக்கீடு காணாதே போதியோ பூம்பாவாய். ஙு

ஊர்திரை வேலை யுலாவும் உயர்மயிலைக்
கூர்தரு வேல்வல்லார் கொற்றங்கொள் சேரிதனில்
கார்தரு சோலைக் கபாலீச் சரம்அமர்ந்தான்
ஆதிரைநாள் காணாதே போதியோ பூம்பாவாய். ச

மைப்பூசும் ஒண்கண் மடநல்லார் மாமயிலைக்
கைப்பூசு நீற்றான் கபாலீச் சரம்அமர்ந்தான்
நெய்ப்பூசும் ஒண்புழுக்கல் நேரிழையார் கொண்டாடும்
தைப்பூசங் காணாதே போதியோ பூம்பாவாய். ரு

மடலார்ந்த தெங்கின் மயிலையார் மாசிக்
கடலாட்டுக் கண்டான் கபாலீச் சரம்அமர்ந்தான்
அடல்ஆனே றூரும்அடிக ளடிபரவி
நடமாடல் காணாதே போதியோ பூம்பாவாய். சு

மலிவிழா வீதி மடநல்லார் மாமயிலைக்
கலிவிழாக் கண்டான் கபாலீச் சரம்அமர்ந்தான்
பலிவிழாப் பாடல்செய் பங்குனி யுத்திரநாள்
ஒலிவிழாக் காணாதே போதியோ பூம்பாவாய். எ

தண்ணுறு அரக்கன்தோள் சாய்த்துகந்த தாளினன்
கண்ணார் மயிலைக் கபாலீச் சரம்அமர்ந்தான்
பண்ணார் பதினெண் கணங்கள்தம் அட்டமிநாள்
கண்ணாரக் காணுதே போதியோ பூம்பாவாய். அ

நற்று மரைமலர்மேல் நான்முகனும் நாரணனும்
உற்றுக் குணர்கிலா மூர்த்தி திருவடியைக்
கற்றார்க ளேத்துங் கபாலீச் சரம்அமர்ந்தான்
பொற்றாப்புக் காணுதே போதியோ பூம்பாவாய். க

உரிஞ்சாய வாழ்க்கை அமணுடையைப் போர்க்கும்
இருஞ்சாக் கியர்க ளெடுத்துரைப்ப நாட்டில்
கருஞ்சோலை சூழ்ந்த கபாலீச் சரம்அமர்ந்தான்
பெருஞ்சாந்தி காணுதே போதியோ பூம்பாவாய். க0

கானமர் சோலைக் கபாலீச் சரம்அமர்ந்தான்
தேனமர் பூம்பாவைப் பாட்டாகச் செந்தமிழான்
ஞானசம் பந்தன் நலம்புகழ்ந்த பத்தும்வலார்
வானசம் பந்தத் தவரோடும் வாழ்வாரே. கக

திருச்சிற்றம்பலம்

திருவெண்காடு - பண் - சீகாமரம்

திருச்சிற்றம்பலம்

கண்காட்டு நுதலானுங் கனல்காட்டுங் கையானும்
பெண்காட்டும் உருவானும் பிறைகாட்டுஞ் சடையானும்
பண்காட்டும் இசையானும் பயிர்காட்டும் புயலானும்
வெண்காட்டில் உறைவானும் விடைகாட்டுங் கொடியானே. க

பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினே டுள்ளநினை
வாயினவே வரம்பெறுவர் ஐயுறவேண் டாவொன்றும்
வேயனதோ ளுமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையார் அவர்தம்மைத் தோயாவாந் தீவினையே. உ

மண்ணொடுநீர் அனல்காலோ டாகாயம் மதியிரவி
எண்ணில்வரும் இயமானன் இகபரமும் எண்டிசையும்

பெண்ணிஞெடான் பெருமையொடு சிறுமையுமாம் பேராளன்
விண்ணவர்கோன் வழிபடவெண் காடிடமா விரும்பினனே. ௩

விடமுண்ட மிடற்றண்ணல் வெண்காட்டின் தண்புறவின்
மடல்விண்ட முடத்தாழை மலர்நிழலைக் குருகென்று
தடம்மண்டு துறைக்கெண்டை தாமரையின் பூமறையக்
கடல்விண்ட கதிர்முத்த நகைகாட்டுங் காட்சியதே. ௪

வேலைமலி தண்கானல் வெண்காட்டான் திருவடிக்கீழ்
மாலைமலி வண்சாந்தால் வழிபடுநன் மறையவன்றன்
மேலடர்வெங் காலனுயிர் விண்டபினை நமன்தூதர்
ஆலமிடற் றான்அடியார் என்றடரா அஞ்சுவரே. ௫

தண்மதியும் வெய்யரவுந் தாங்கினன் சடையினுடன்
ஒண்மதிய நுதலுமையோர் கூறுகந்தான் உறைகோயில்
பண்மொழியா லவன்நாமம் பலவோதப் பசுங்கிள்ளை
வெண்முகில்சேர் கரும்பெணைமேல் வீற்றிருக்கும் வெண்காடே. ௬

சக்கரம்மாற் கீந்தானுஞ் சலந்தரனைப் பிளந்தானும்
அக்கரைமே லசைத்தானும் அடைந்தயிரா வதம்பணிய
மிக்கதனுக் கருள்சுரக்கும் வெண்காடும் வினைதுரக்கும்
முக்குளம்நன் குடையானும் முக்கணுடை யிறைவனே. ௭

பண்மொய்த்த இன்மொழியாள் பயமெய்த மலையெடுத்த
உன்மத்தன் உரம்நெரித்தன் றருள்செய்தான் உறைகோயில்
கண்மொய்த்த கருமஞ்ஞை நடமாடக் கடல்முழங்க
விண்மொய்த்த பொழில்வரிவண் டிசைமுரலும் வெண்காடே. ௮

கள்ளார்செங் கமலத்தான் கடல்கிடந்தான் எனஇவர்கள்
ஒள்ளாண்மை கொளற்கோடி உயர்ந்தாழ்ந்தும் உணர்வரியான்
வெள்ளானை தவஞ்செய்யும் மேதகுவெண் காட்டானென்
றுள்ளாடி யுருகாதார் உணர்வுடைமை யுணரோமே. ௯

போதியர்கள் பிண்டியர்கள் மிண்டுமொழி பொருளென்னும்
பேதையர்கள் அவர்பிரிமின் அறிவுடையீர் இதுகேண்மின்
வேதியர்கள் விரும்பியசீர் வியன்திருவெண் காட்டானென்
றோதியவர் யாதுமொரு தீதிலரென் றுணருமினே. ௧௦

தண்பொழில்சூழ் சண்பையர்கோன் தமிழ்ஞான சம்பந்தன்
விண்பொலிவெண் பிறைச்சென்னி விகிர்தனுறை வெண்காட்டைப்
பண்பொலிசெந் தமிழ்மாலை பாடியபத் திவைவல்லார்
மண்பொலிய வாழ்ந்தவர்போய் வான்பொலியப் புகுவாரே. கக

திருச்சிற்றம்பலம்

சீகாழி - பண் - சீகாமரம்

திருச்சிற்றம்பலம்

பண்ணின் நேர்மொழி மங்கை மார்பலர்
பாடி யாடிய வோசை நாள்தொறுங்
கண்ணின் நேரயலே பொலியுங் கடற்காழிப்
பெண்ணின் நேரொரு பங்கு டைப்பெரு
மானை யெம்பெரு மானென் றென்றுன்னும்
அண்ண லாரடியார் அருளாலுங் குறைவிலரே. க

மொண்ட லம்பிய வார்தி ரைக்கடல்
மோதி மீதெறி சங்கம் வங்கமுங்
கண்டலம் புடைசூழ் வயல்சேர் கலிக்காழி
வண்ட லம்பிய கொன்றை யானடி
வாழ்த்தி யேத்திய மாந்தர் தம்வினை
விண்டல் அங்கெளிதாம் அதுநல் விதியாமே. உ

நாடெ லாமொளி யெய்த நல்லவர்
நன்று மேத்தி வணங்கு வார்பொழிற்
காடெ லாம்மலர் தேன்துளிக்குங் கடற்காழித்
தோடு லாவிய காது ளாய்சுரி
சங்க வெண்குழை யாயென் றென்றுன்னும்
வேடங் கொண்டவர்கள் வினை நீங்கலுற்றாரே. ௩

மையி னார்பொழில் சூழ நீழலில்
வாச மார்மது மல்க நாள்தொறுங்
கையி னார்மலர் கொண்டெழுவார் கலிக்காழி
ஐய னேயர னேயென் றாதரித்
தோதி நீதியு ளேநி னைப்பவர்
உய்யு மாறலகில் உயர்ந்தாரி னுள்ளாரே. ௪

மலிக டுந்திரை மேல்வி யிர்ந்தெதிர்
வந்து வந்தொளிர் வித்தி லம்விழக்
கலிக டிந்தகையார் மருவுங் கலிக்காழி
வலிய காலனை வீட்டி மாணிதன்
இன்னு யிரளித் தானை வாழ்த்திட
மெலியுந் தீவினைநோ யவைமேவுவர் வீடே. ரு

மற்றும் இவ்வுல கத்து ளோர்களும்
வானு ளோர்களும் வந்து வைகலுங்
கற்ற சிந்தையராய்க் கருதுங் கலிக்காழி
நெற்றி மேலமர் கண்ணி னானை
வினைந்தி ருந்திசை பாடு வார்வினை
செற்றமாந் தரெனத் தெளிமின்கள் சிந்தையுளே. சு

தான்ந லம்புரை வேதிய ரொடு
தக்க மாதவர் தாந்தொ ழப்பயில்
கானலின் விரைசேர விம்முங் கலிக்காழி
ஊனு ளாருயிர் வாழ்க்கை யாயுற
வாகி நின்றவொ ருவனே யென்றென்
றுனலங் கொடுப்பார் அருள்வேந்த ராவாரே. எ

மைத்த வண்டெழு சோலை யாலைகள்
சாலி சேர்வய லார வைகலுங்
கத்து வார்கடல் சென்றுலவுங் கலிக்காழி
அத்த னேயர னேய ரக்கனை
யன்ற டர்த்துகந் தாயு னகழல்
பத்தராய்ப் பரவும் பயன்ஈங்கு நல்காயே. அ

பரும ராமொடு தெங்கு பைங்கத
லிப்ப ருங்கனி யுண்ண மந்திகள்
கருவரா லுகளும் வயல்சூழ் கலிக்காழித்
திருவின் நாயக னாய மாலொடு
செய்ய மாமலர்ச் செல்வ னாகிய
இருவர் காண்பரியா னெனவேத்துத லின்பமே. கூ

பிண்ட முண்டுழல் வார்க ளும்பிரி
யாது வண்துகி லாடை போர்த்தவர்
கண்டு சேரகிலா ரழகார் கலிக்காழித்
தொண்டை வாயுமை யோடு கூடிய
வேட னேசுட லைப்பொ டியணி
அண்டவா ணனென்பார்க் கடையா அல்லல்தானே. ௧௦

பெயரொ னும்மிவை பன்னி ரண்டினும்
உண்டெ னப்பெயர் பெற்ற வூர்திகழ்
கயலுலாம் வயல்சூழ்ந் தழகார் கலிக்காழி
நயன டன்கழ லேத்தி வாழ்த்திய
ஞான சம்பந்தன் செந்த மிழுரை
உயருமா மொழிவா ருலகத் துயர்ந்தாரே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருஆமாத்தூர் - பண் - சீகாமரம்

திருச்சிற்றம்பலம்

குன்ற வார்சிலை நாண்அ ராஅரி
வாளி கூரெரி காற்றின் மும்மதில்
வென்றவா றெங்ஙனே விடையேறும் வேதியனே
தென்ற லார்மணி மாட மாளிகை
சூளி கைக்கெதிர் நீண்ட பெண்ணைமேல்
அன்றில் வந்தணையும் ஆமாத்தூர் அம்மானே. ௧

பரவி வானவர் தான வர்பல
ருங்க லங்கிட வந்த கார்விடம்
வெருவ உண்டுகந்த அருளென்கொல் விண்ணவனே
கரவின் மாமணி பொன்கொ ழித்திழி
சந்து காரகில் தந்து பம்பைநீர்
அருவி வந்தலைக்கும் ஆமாத்தூர் அம்மானே. ௨

நீண்ட வார்சடை தாழ நேரிழை
பாட நீறுமெய் பூசி மாலயன்
மாண்ட வார்சுடலை நடமாடும் மாண்பதுஎன்
பூண்ட கேழல் மருப்ப ராவிரி
கொன்றை வாள்வரி யாமை பூணென
ஆண்ட நாயகனே ஆமாத்தூர் அம்மானே. ௩

சேலின் நேரன கண்ணி வெண்ணகை
மான்வி ழித்திரு மாதைப் பாகம்வைத்
தேல மாதவம்நீ முயல்கின்ற வேடமிதென்
பாலின் நேர்மொழி மங்கை மார்நட
மாடி யின்னிசை பாட நீள்பதி
ஆலை சூழ்கழனி ஆமாத்தூர் அம்மானே. ௪

தொண்டர் வந்து வணங்கி மாமலர்
தூவி நின்கழ லேத்து வாரவர்
உண்டியால் வருந்த இரங்காத தென்னைகொலாம்
வண்ட லார்கழ னிக்க லந்தும
லர்ந்த தாமரை மாதர் வாண்முகம்
அண்டவாணர் தொழும் ஆமாத்தூர் அம்மானே. ௫

ஓதி யாரண மாய நுண்பொருள்
அன்று நால்வர்முன் கேட்க நன்னெறி
நீதி யாலநீழ லுரைக்கின்ற நீர்மையதென்
சோதி யேசுட ரேசு ரும்பமர்
கொன்றை யாய்திரு நின்றி யூருறை
ஆதியே அரனே ஆமாத்தூர் அம்மானே. ௬

மங்கை வாள்நுதன் மான்ம னத்திடை
வாடி யூடம ணங்க மழ்சடைக்
கங்கையா ளிருந்த கருத்தாவ தென்னைகொலாம்
பங்க யம்மது வுண்டு வண்டிசை
பாட மாமயி லாட விண்முழ
வங்கையா லதிர்க்கும் ஆமாத்தூர் அம்மானே. ௭

நின்ற டர்த்திடும் ஐம்பு லன்நிலை
யாதவண்ணம் நினைந்து ளத்திடை
வென்றடர்த் தொருபால் மடமாதை விரும்புதலென்
குன்றெ டுத்தநி சாச ரன்திரள்
தோளி ருபது தான்நெ ரிதர
அன்றடர்த் துகந்தாய் ஆமாத்தூர் அம்மானே. அ

செய்ய தாமரை மேலி ருந்தவ
னோடு மாலடி தேட நீள்முடி
வெய்ய ஆரழலாய் நிமிர்கின்ற வெற்றிமையென்
தைய லாளொடு பிச்சைக் கிச்சை
தயங்கு தோலரை யார்த்த வேடங்கொண்
டைய மேற்றுகந்தாய் ஆமாத்தூர் அம்மானே. கூ

புத்தர் புன்சமண் ஆதர் பொய்ம்மொழி
நூல்பி டித்தலர் தூற்ற நின்னடி
பத்தர் பேணநின்ற பரமாய பான்மையதென்
முத்தை வென்ற முறுவ லாளுமை
பங்க னென்றிமை யோர்ப ரவிடும்
அத்தனே அரியாய் ஆமாத்தூர் அம்மானே. ௧௦

வாடல் வெண்தலை மாலை யார்த்தும
யங்கி ருள்ளெரி யேந்தி மாநடம்
ஆடல் மேயதென்னென் றூமாத்தூர் அம்மானைக்
கோடல் நாகம் அரும்பு பைம்பொழிற்
கொச்சை யாரிறை ஞான சம்பந்தன்
பாடல் பத்தும்வல்லார் பரலோகஞ் சேர்வாரே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருக்களர் - பண் - சீகாமரம்

திருச்சிற்றம்பலம்

நீரு ளார்கயல் வாவி சூழ்பொழில்
நீண்ட மாவய லீண்டு மாமதில்
தேரினார் மறுகில் விழாமல்கு திருக்களருள்
ஊரு ளாரிடு பிச்சை பேணும்
ஒருவ னேயொளிர் செஞ்ச டைம்மதி
ஆரனின் றவனே யடைந்தார்க் கருளாயே. க

தோளின் மேலொளி நீறு தாங்கிய
தொண்டர் வந்தடி போற்ற மிண்டிய
தாளினார் வளருந் தவம்மல்கு திருக்களருள்
வேளின் நேர்விச யற்க ருள்புரி
வித்த காவிரும் பும்அ டியாரை
ஆளுகந் தவனே யடைந்தார்க் கருளாயே. உ

பாட வல்லநல் மைந்த ரோடு
பனிம லர்பல கொண்டு போற்றிசெய்
சேடர்வாழ் பொழில்சூழ் செழுமாடத் திருக்களருள்
நீடவல்ல நிமல னேயடி
நிரைக ழல்சிலம் பார்க்க மாநடம்
ஆடவல் லவனே யடைந்தார்க் கருளாயே. ௩

அம்பின் நேர்தடங் கண்ணி னாருடன்
ஆட வர்பயில் மாட மாளிகை
செம்பொனார் பொழில்சூழ்ந் தழகாய திருக்களருள்
என்பு பூண்டதோர் மேனி யெம்மிறை
வாஇ ணையடி போற்றி நின்றவர்க்
கன்பு செய்தவனே யடைந்தார்க் கருளாயே. ௪

கொங்கு லாமலர்ச் சோலை வண்டினங்
கிண்டி மாமது வுண்டி சைசெயத்
தெங்கு பைங்கமுகம் புடைசூழ்ந்த திருக்களருள்
மங்கை தன்னொடுங் கூடிய மண
வாள னேபிணை கொண்டொர் கைத்தலத்
தங்கை யிற்படையா யடைந்தார்க் கருளாயே. ௫

கோல மாமயில் ஆலக் கொண்டல்கள்
சேர்பொ ழிற்குல வும்வ யலிடைச்
சேலிளங் கயலார் புனல்சூழ்ந்த திருக்களருள்
நீலம் மேவிய கண்ட னேபிமிர்
புன்ச டைப்பெரு மானெ னப்பொலி
ஆல நீழலுளா யடைந்தார்க் கருளாயே. ௬

தம்ப லம்மறி யாதவர் மதில்
தாங்கு மால்வரை யாலழ லெழத்
திண்பலங் கெடுத்தாய் திகழ்கின்ற திருக்களருள்
வம்ப லர்மலர் தூவி நின்னடி
வானவர் தொழக் கூத்து கந்தபேர்
அம்பலத் துறைவா யடைந்தார்க் கருளாயே. ௭

குன்ற டுத்தநன் மாளி கைக்கொடி
மாட நீடியர் கோபு ரங்கள் மேல்
சென்ற டுத்துயர்வான் மதிதோயுந் திருக்களருள்
நின்ற டுத்துயர் மால்வ ரைத்திரள்
தோளி னலெடுத் தான்றன் நீள்முடி
அன்றடர்த் துகந்தா யடைந்தார்க் கருளாயே. ௮

பண்ணி யாழ்பயில் கின்ற மங்கையர்
பாட லாடலொ டார வாழ்பதி
தெண்ணி லாமதியம் பொழில்சேருந் திருக்களருள்
உண்ணி லாவிய வொருவ னேயிரு
வர்க்கு நின்கழல் காட்சி யாரழல்
அண்ண லாயஎம்மான் அடைந்தார்க் கருளாயே. ௯

பாக்கி யம்பல செய்த பத்தர்கள்
பாட்டொ டும்பல பணிகள் பேணிய
தீக்கியல் குணத்தார் சிறந்தாருந் திருக்களருள்
வாக்கின் நான்மறை யோதி னயமண்
தேரர் சொல்லிய சொற்க ளானபொய்
ஆக்கி நின்றவனே யடைந்தார்க் கருளாயே. ௧0

இந்து வந்தெழு மாட வீதியெ
    ழில்கொள் காழிந் நகர்க் கவுணியன்
செந்து நேர்மொழியா ரவர்சேருந் திருக்களருள்
அந்தி யன்னதொர் மேனி யானை
    அமரர் தம்பெரு மானை ஞானசம்
பந்தன் சொல்லிவை பத்தும்பாடத் தவமாமே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருக்கோட்டாறு - பண் - சீகாமரம்

திருச்சிற்றம்பலம்

கருந்த டங்கண்ணின் மாத ராரிசை
    செய்யக் காரதிர் கின்ற பூம்பொழிற்
குருந்த மாதவியின் விரைமல்கு கோட்டாற்றில்
இருந்த எம்பெரு மானை யுள்கி
    இணைய டிதொழு தேத்தும் மாந்தர்கள்
வருந்து மாறறியார் நெறிசேர்வர் வானூடே. ௧

நின்று மேய்ந்து நினைந்து மாகரி
    நீரொ டும்மலர் வேண்டி வான்மழை
குன்றின் நேர்ந்துகுத்திப் பணிசெய்யுங் கோட்டாற்றுள்
என்றும் மன்னிய எம்பி ரான்கழல்
    ஏத்தி வானர சாள வல்லவர்
பொன்று மாறறியார் புகழார்ந்த புண்ணியரே. ௨

விரவி நாளும் விழா விடைப்பொலி
    தொண்டர் வந்து வியந்து பண்செயக்
குரவ மாரும் நீழற் பொழில்மல்கு கோட்டாற்றில்
அரவ நீள்சடை யானை யுள்கிநின்
    றாத ரித்துமுன் அன்பு செய்தடி
பரவு மாறுவல் லார்பழிபற் றறுப்பாரே. ௩

அம்பின் நேர்விழி மங்கை மார்பலர்
ஆட கம்பெறு மாட மாளிகைக்
கொம்பி னேர்துகி லின்கொடியாடு கோட்டாற்றில்
நம்ப னேநட னேந லந்திகழ்
நாதனே யென்று காதல் செய்தவர்
தம்பின் நேர்ந்தறி யார்தமொற்ற வல்வினையே. ௪

பழைய தம்மடி யார்து திசெயப்
பாரு ளோர்களும் விண்ணு ளோர்தொழக்
குழலும் மொந்தை விழாவொலிசெய்யுங் கோட்டாற்றில்
கழலும் வண்சிலம் பும்மொ லிசெயக்
கானி டைக்கண மேத்த ஆடிய
அழக னென்றெழுவா ரணியாவர் வானவர்க்கே. ௫

பஞ்சின் மெல்லடி மாத ராடவர்
பத்தர் சித்தர்கள் பண்பு வைகலும்
கொஞ்சி இன்மொழியால் தொழில்மல்கு கோட்டாற்றில்
மஞ்ச னேமணி யேம ணிமிடற்
றண்ண லேயென வுள்நெ கிழ்ந்தவர்
அஞ்சு மாறறியார் பிறவார்இத் தொல்நிலத்தே. ௬

கலவம் மாமயி லாளோர் பங்கனைக்
கண்டு கண்மிசை நீர்நெ கிழ்த்திசை
குலவு மாறுவல்லார் குடிகொண்ட கோட்டாற்றில்
நிலவு மாமதி சேர்ச டையுடை
நின்ம லாவென வுன்னு வாரவர்
உலவு வானவரின் உயர்வாகுவ தன்மையதே. ௭

வண்ட லார்வயற் சாலி யாலைவ
ளம்பொ லிந்திட வார்பு னல்திரை
கொண்ட லார்கொணர்ந் தங்குலவுந்திகழ் கோட்டாற்றில்
தொண்டெ லாந்துதி செய்ய நின்ற
தொழில னேகழ லால ரக்கனை
மிண்டெ லாந்தவிர்த் தென்னுகந்திட்ட வெற்றிமையே. ௮

கருதி வந்தடி யார்தொ ழுதெழக்
கண்ண னோடயன் தேடஆனையின்
குருதி மெய்கலப்ப உரிகொண்டு கோட்டாற்றில்
விருதி னுன்மட மாதும் நீயும்வி
யப்பொ டும்உயர் கோயில் மேவிவெள்
எருதுகந் தவனே யிரங்காயுன தின்னருளே. ௯

உடையி லாதுழல் கின்ற குண்டரும்
ஊண ருந்தவத் தாய சாக்கியர்
கொடையி லாமனத்தார் குறையாருங் கோட்டாற்றில்
படையி லார்மழு வேந்தி யாடிய
பண்ப னேயிவ ரென்சொ லோநுனை
அடைகி லாதவண்ணம் அருளாயுன் அடியவர்க்கே. ௧0

கால னைக்கழ லாலு தைத்தொரு
காம னைக்கன லாகச் சீறிமெய்
கோல வார்குழலாள் குடிகொண்ட கோட்டாற்றில்
மூல னைம்முடி வொன்றி லாதஎம்
முத்த னைப்பயில் பந்தன் சொல்லிய
மாலை பத்தும்வல்லார்க் கெளிதாகும் வானகமே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருப்புறவார்பனங்காட்டூர் - பண் - சீகாமரம்

திருச்சிற்றம்பலம்

விண்ண மர்ந்தன மும்ம தில்களை
வீழ வெங்கணை யாலெய் தாய்விரி
பண்ணமர்ந் தொலிசேர் புறவார் பனங்காட்டூர்ப்
பெண்ண மர்ந்தொரு பாக மாகிய
பிஞ்ஞ காபிறை சேர்நு தலிடைக்
கண்ணமர்ந் தவனே கலந்தார்க் கருளாயே. ௧

நீடல் கோடல் அலரவெண் முல்லை
நீர்ம லர்நிரைத் தாத ளஞ்செயப்
பாடல் வண்டறையும் புறவார் பனங்காட்டூர்த்
தோடி லங்கிய காத யல்மின்
துளங்க வெண்குழை துள்ள நள்ளிருள்
ஆடுஞ் சங்கரனே அடைந்தார்க் கருளாயே. ௨

வாளை யுங்கய லும்மிளிர் பொய்கை
வார்பு னற்கரை யருகெ லாம்வயல்
பாளை யொண்கமுகம் புறவார் பனங்காட்டூர்ப்
பூளை யுந்நறுங் கொன்றை யும்மத
மத்த மும்புனை வாய்க ழலிணைத்
தாளையே பரவுந் தவத்தார்க் கருளாயே. ௩

மேய்ந்தி ளஞ்செந்நெல் மென்க திர்கவ்வி
மேற்ப டுகலின் மேதி வைகறை
பாய்ந்த தண்பழனப் புறவார் பனங்காட்டூர்
ஆய்ந்த நான்மறை பாடி யாடும்
அடிக ளென்றென் றேத்தி நன்மலர்
சாய்ந்தடி பரவுந் தவத்தார்க் கருளாயே. ௪

செங்க யல்லொடு சேல்செ ருச்செயச்
சீறி யாழ்முரல் தேனி னத்தொடு
பங்கயம் மலரும் புறவார் பனங்காட்டூர்க்
கங்கை யும்மதி யுங்க மழ்சடைக்
கேண்மை யாளொடுங் கூடி மான்மறி
அங்கை யாடலனே அடியார்க் கருளாயே. ௫

நீரி னார்வரை கோலி மால்கடல்
நீடி யபொழில் சூழ்ந்து வைகலும்
பாரி னார்பிரியாப் புறவார் பனங்காட்டூர்க்
காரி னார்மலர்க் கொன்றை தாங்கு
கடவு ளென்றுகை கூப்பி நாள்தொறும்
சீரி னால்வணங்குந் திறத்தார்க் கருளாயே. ௬

கைய ரிவையர் மெல்வி ரல்லவை
　　காட்டி யும்மலர்க் காந்த ளங்குறி
பையரா விரியும் புறவார் பனங்காட்டூர்
மெய்ய ரிவையொர் பாக மாகவும்
　　மேவி னாய்கழ லேத்தி நாள்தொறும்
பொய்யிலா அடிமை புரிந்தார்க் கருளாயே. ௭

தூவி யஞ்சிறை மெல்ந டையன
　　மல்கி யொல்கிய தூமலர்ப் பொய்கைப்
பாவில் வண்டறையும் புறவார் பனங்காட்டூர்
மேவி யந்நிலை யாய ரக்கன
　　தோள டர்த்தவன் பாடல் கேட்டருள்
ஏவியெம் பெருமான் என்பவர்க் கருளாயே. ௮

அந்தண் மாதவி புன்னை நல்ல
　　அசோக மும்மர விந்தம் மல்லிகை
பைந்தண் ஞாழல்கள் சூழ்புறவார் பனங்காட்டூர்
எந்தி ளம்முகில் வண்ணன் நான்முகன்
　　என்றி வர்க்கரி தாய்நி மிர்ந்ததொர்
சந்தம் ஆயவனே தவத்தார்க் கருளாயே. ௯

நீண மார்முரு குண்டு வண்டினம்
　　நீல மாமலர் கவ்வி நேரிசை
பாணில் யாழ்முரலும் புறவார் பனங்காட்டூர்
நாண ழிந்துழல் வார்ச மணரும்
　　நண்பில் சாக்கிய ரும்ந கத்தலை
ஊணுரி யவனே உகப்பார்க் கருளாயே. ௧௦

மையி னார்மணி போல்மி டற்றனை
　　மாசில் வெண்பொடிப் பூசும் மார்பனைப்
பைய தேன்பொழில்சூழ் புறவார் பனங்காட்டூர்
ஐய னைப்புக ழான காழியுள்
　　ஆய்ந்த நான்மறை ஞான சம்பந்தன்
செய்யுள் பாடவல்லார் சிவலோகஞ் சேர்வாரே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருப்புகலி - பண் - காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

உருவார்ந்த மெல்லியலோர் பாகமுடையீர் அடைவோர்க்குக்
கருவார்ந்த வானுலகங் காட்டிக்கொடுத்தல் கருத்தானீர்
பொருவார்ந்த தெண்கடலொண் சங்கந்திளைக்கும் பூம்புகலித்
திருவார்ந்த கோயிலே கோயிலாகத் திகழ்ந்தீரே. க

நீரார்ந்த செஞ்சடையீர் நிரையார்கழல்சேர் பாதத்தீர்
ஊரார்ந்த சில்பலியீர் உழைமானுரிதோ லாடையீர்
போரார்ந்த தெண்டிரைசென் றணையுங்கானற் பூம்புகலிச்
சீரார்ந்த கோயிலே கோயிலாகச் சேர்ந்தீரே. உ

அழிமல்கு பூம்புனலும் அரவுஞ்சடைமே லடைவெய்த
மொழிமல்கு மாமறையீர் கறையார்கண்டத் தெண்தோளீர்
பொழில்மல்கு வண்டினங்கள் அறையுங்கானற் பூம்புகலி
எழில்மல்கு கோயிலே கோயிலாக இருந்தீரே. ௩

கையிலார்ந்த வெண்மழுவொன் றுடையீர்கடிய கரியின்தோல்
மயிலார்ந்த சாயல்மட மங்கைவெருவ மெய்போர்த்தீர்
பயிலார்ந்த வேதியர்கள் பதியாய்விளங்கும் பைம்புகலி
எயிலார்ந்த கோயிலே கோயிலாக இசைந்தீரே. ௪

நாவார்ந்த பாடலீர் ஆடலரவம் அரைக்கார்த்தீர்
பாவார்ந்த பல்பொருளின் பயன்களானீர் அயன்பேணும்
பூவார்ந்த பொய்கைகளும் வயலுஞ்சூழ்ந்த பொழிற்புகலித்
தேவார்ந்த கோயிலே கோயிலாகத் திகழ்ந்தீரே. ௫

மண்ணார்ந்த மண்முழவந் ததும்பமலையான் மகளென்னும்
பெண்ணார்ந்த மெய்மகிழப் பேணியெரிகொண் டாடினீர்
விண்ணார்ந்த மதியமிடை மாடத்தாரும் வியன்புகலிக்
கண்ணார்ந்த கோயிலே கோயிலாகக் கலந்தீரே. ௬

களிபுல்கு வல்லவுணர் ஊர்மூன் றெரியக் கணைதொட்டீர்
அளிபுல்கு பூமுடியீர் அமரரேத்த அருள்செய்தீர்
தெளிபுல்கு தேன்இனமும் மலருள்விரைசேர் திண்புகலி
ஒளிபுல்கு கோயிலே கோயிலாக வுகந்தீரே. ௭

பரந்தோங்கு பல்புகழ்சேர் அரக்கர்கோனை வரைக்கீழிட்
டரந்தோன்றும் பாடல்கேட் டுகவையளித்தீர் உகவாதார்
புரந்தோன்று மும்மதிலும் எரியச்செற்றீர் பூம்புகலி
வரந்தோன்று கோயிலே கோயிலாக மகிழ்ந்தீரே. ௮

சலந்தாங்கு தாமரைமேல் அயனுந்தரணி யளந்தானுங்
கலந்தோங்கி வந்திழிந்துங் காணாவண்ணங் கனலானீர்
புலந்தாங்கி ஐம்புலனுஞ் செற்றார்வாழும் பூம்புகலி
நலந்தாங்கு கோயிலே கோயிலாக நயந்தீரே. ௯

நெடிதாய வன்சமணும் நிறைவொன்றில்லாச் சாக்கியருங்
கடிதாய கட்டுரையாற் கழறமேலோர் பொருளானீர்
பொடியாரும் மேனியினீர் புகலிமறையோர் புரிந்தேத்த
வடிவாருங் கோயிலே கோயிலாக மகிழ்ந்தீரே. ௧0

ஒப்பரிய பூம்புகலி ஓங்குகோயில் மேயானை
அப்பரிசிற் பதியான அணிகொள்ஞான சம்பந்தன்
செப்பரிய தண்டமிழால் தெரிந்தபாட லிவைவல்லார்
எப்பரிசில் இடர்நீங்கி யிமையோருலகத் திருப்பாரே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருத்தலைச்சங்காடு - பண் - காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

நலச்சங்க வெண்குழையுந் தோடும்பெய்தோர் நால்வேதம்
சொலச்சங்கை யில்லாதீர் சுடுகாடல்லாற் கருதாதீர்
குலைச்செங்காய்ப் பைங்கமுகின் குளிர்கொள்சோலைக் குயிலாலும்
தலைச்சங்கைக் கோயிலே கோயிலாகத் தாழ்ந்தீரே. ௧

துணிமல்கு கோவணமுந் தோலுங்காட்டித் தொண்டாண்டீர்
மணிமல்கு கண்டத்தீர் அண்டர்க்கெல்லாம் மாண்பானீர்
பிணிமல்கு நூல்மார்பர் பெரியோர்வாழுந் தலைச்சங்கை
அணிமல்கு கோயிலே கோயிலாக அமர்ந்தீரே. ௨

சீர்கொண்ட பாடலீர் செங்கண்வெள்ளே றூர்தியீர்
நீர்கொண்டும் பூக்கொண்டு நீங்காத்தொண்டர் நின்றேத்தத்

தார்கொண்ட நூல்மார்பர் தக்கோர்வாழுந் தலைச்சங்கை
ஏர்கொண்ட கோயிலே கோயிலாக இருந்தீரே. ௩

வேடஞ்சூழ் கொள்கையீர் வேண்டிநீண்ட வெண் திங்கள்
ஓடஞ்சூழ் கங்கையும் உச்சிவைத்தீர் தலைச்சங்கைக்
கூடஞ்சூழ் மண்டபமுங் குலாயவாசற் கொடித்தோன்றும்
மாடஞ்சூழ் கோயிலே கோயிலாக மகிழ்ந்தீரே. ௪

சூலஞ்சேர் கையினீர் சுண்ணவெண்ணீ றாடலீர்
நீலஞ்சேர் கண்டத்தீர் நீண்டசடைமேல் நீரேற்றீர்
ஆலஞ்சேர் தண்கானல் அன்னம்மன்னுந் தலைச்சங்கைக்
கோலஞ்சேர் கோயிலே கோயிலாகக் கொண்டீரே. ௫

நிலம்நீரொ டாகாசம் அனல்காலாகி நின்றைந்து
புலன்நீர்மை புறங்கண்டார் பொக்கஞ்செய்யார் போற்றோவார்
சலம்நீத ரல்லாதார் தக்கோர்வாழுந் தலைச்சங்கை
நலம்நீர கோயிலே கோயிலாக நயந்தீரே. ௬

அடிபுல்கு பைங்கழல்கள் ஆர்ப்பப்போந்தோர் அனலேந்திக்
கொடிபுல்கு மென்சாயல் உமையோர் பாகங்கூடினீர்
பொடிபுல்கு நூல்மார்பர் புரிநூலாளர் தலைச்சங்கைக்
கடிபுல்கு கோயிலே கோயிலாகக் கலந்தீரே. ௭

திரையார்ந்த மாகடல்சூழ் தென்இலங்கைக் கோமானை
வரையார்ந்த தோளடர விரலாலூன் றும் மாண்பினீர்
அரையார்ந்த மேகலையீர் அந்தணாளர் தலைச்சங்கை
நிரையார்ந்த கோயிலே கோயிலாக நினைந்தீரே. ௮

பாயோங்கு பாம்பணைமே லானும்பைந்தா மரையானும்
போயோங்கிக் காண்கிலார் புறம்நின்றோரார் போற்றோவார்
தீயோங்கு மறையாளர் திகழுஞ்செல்வத் தலைச்சங்கைச்
சேயோங்கு கோயிலே கோயிலாகச் சேர்ந்தீரே. ௯

அலையாரும் புனல்துறந்த அமணர்குண்டர் சாக்கியர்
தொலையாதங் கலர்தூற்றத் தோற்றங்காட்டி யாட்கொண்டீர்
தலையான நால்வேதந் தரித்தார்வாழுந் தலைச்சங்கை
நிலையார்ந்த கோயிலே கோயிலாக நின்றீரே. ௧௦

களிரும் புனற்காழி நல்லஞான சம்பந்தன்
குளிருந் தலைச்சங்கை ஓங்குகோயில் மேயானை
ஒளிரும் பிறையானை யுரைத்தபாடல் இவைவல்லார்
மிளிருந் திரைசூழ்ந்த வையத்தார்க்கு மேலாரே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருஇடைமருதூர் - பண் - காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

பொங்குநூல் மார்பினீர் பூதப்படையீர் பூங்கங்கை
தங்குசெஞ் சடையினீர் சாமவேதம் ஓதினீர்
எங்குமெழிலார் மறையோர்கள் முறையாலேத்த இடைமருதில்
மங்குல்தோய் கோயிலே கோயிலாக மகிழ்ந்தீரே. ௧

நீரார்ந்த செஞ்சடையீர் நெற்றித்திருக்கண் நிகழ்வித்தீர்
போரார்ந்த வெண்மழுவொன் றுடையீர் பூதம்பாடலீர்
ஏரார்ந்த மேகலையாள் பாகங்கொண்டீர் இடைமருதில்
சீரார்ந்த கோயிலே கோயிலாகச் சேர்ந்தீரே. ௨

அழல்மல்கும் அங்கையி லேந்திப்பூதம் அவைபாடச்
சுழல்மல்கும் ஆடலீர் சுடுகாடல்லாற் கருதாதீர்
எழில்மல்கு நான்மறையோர் முறையாலேத்த இடைமருதில்
பொழில்மல்கு கோயிலே கோயிலாகப் பொலிந்தீரே. ௩

பொல்லாப் படுதலையொன் றேந்திப்புறங் காட்டாடலீர்
வில்லாற் புரமூன்றும் எரித்தீர்விடை யார்கொடியினீர்
எல்லாக் கணங்களும் முறையாலேத்த இடைமருதில்
செல்வாய கோயிலே கோயிலாகச் சேர்ந்தீரே. ௪

வருந்திய மாதவத்தோர் வானோரேனோர் வந்தீண்டிப்
பொருந்திய தைப்பூச மாடியுலகம் பொலிவெய்தத்
திருந்திய நான்மறையோர் சீராலேத்த இடைமருதில்
பொருந்திய கோயிலே கோயிலாகப் புக்கீரே. ௫

சலம்மல்கு செஞ்சடையீர் சாந்தம்நீறு பூசினீர்
வலம்மல்கு வெண்மழுவொன் றேந்திமயானத் தாடலீர்

இலமல்கு நான்மறையோ ரினிதாயேத்த இடைமருதில்
புலம்மல்கு கோயிலே கோயிலாகப் பொலிந்தீரே. ௬

புனம்மல்கு கொன்றையீர் புலியின்அதளீர் பொலிவார்ந்த
சினம்மல்கு மால்விடையீர் செய்யீர்கரிய கண்டத்தீர்
இனம்மல்கு நான்மறையோ ரேத்துஞ்சீர்கொள் இடைமருதில்
கனம்மல்கு கோயிலே கோயிலாகக் கலந்தீரே. ௭

சிலையுய்த்த வெங்கணையாற் புரமூன்றெரித்தீர் திறலரக்கன்
தலைபத்துந் திண்டோளும் நெரித்தீர் தையல்பாகத்தீர்
இலைமொய்த்த தண்பொழிலும் வயலுஞ்சூழ்ந்த இடைமருதில்
நலமொய்த்த கோயிலே கோயிலாக நயந்தீரே. ௮

மறைமல்கு நான்முகனும் மாலும்அறியா வண்ணத்தீர்
கறைமல்கு கண்டத்தீர் கபாலமேந்து கையினீர்
அறைமல்கு வண்டினங்கள் ஆலுஞ்சோலை யிடைமருதில்
நிறைமல்கு கோயிலே கோயிலாக நிகழ்ந்தீரே. ௯

சின்போர்வைச் சாக்கியரும் மாசுசேருஞ் சமணரும்
துன்பாய கட்டுரைகள் சொல்லி யல்லல்தூற்றவே
இன்பாய அந்தணர்கள் ஏத்தும்ஏர்கொள் இடைமருதில்
அன்பாய கோயிலே கோயிலாக அமர்ந்தீரே. ௧௦

கல்வின் மணிமாடக் கழுமலத்தார் காவலவன்
நல்ல அருமறையான் நற்றமிழ் ஞானசம்பந்தன்
எல்லி யிடைமருதில் ஏத்துபாட லிவைபத்தும்
சொல்லு வார்க்குங் கேட்பார்க்குந் துயரமில்லையே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருநல்லூர் - பண் - காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

பெண்ணமருந் திருமேனி யுடையீர் பிறங்குசடைதாழப்
பண்ணமரும் நான்மறையே பாடியாடல் பயில்கின்றீர்
திண்ணமரும் பைம்பொழிலும் வயலுஞ்சூழ்ந்த திருநல்லூர்
மண்ணமருங் கோயிலே கோயிலாக மகிழ்ந்தீரே. ௧

அலைமல்கு தண்புனலும் பிறையுஞ்சூடி அங்கையில்
கொலைமல்கு வெண்மழுவும் அனலுமேந்துங் கொள்கையீர்
சிலைமல்கு வெங்கணையாற் புரமூன்றெரித்தீர் திருநல்லூர்
மலைமல்கு கோயிலே கோயிலாக மகிழ்ந்தீரே. ௨

குறைவிரம்பா வெண்மதியஞ் சூடிக்குளிர்புன் சடைதாழப்
பறைநவின்ற பாடலோ டாடல்பேணிப் பயில்கின்றீர்
சிறைநவின்ற தண்புனலும் வயலுஞ்சூழ்ந்த திருநல்லூர்
மறைநவின்ற கோயிலே கோயிலாக மகிழ்ந்தீரே. ௩

கூனமரும் வெண்பிறையும் புனலுஞ்சூடுங் கொள்கையீர்
மானமரும் மென்விழியாள் பாகமாகும் மாண்பினீர்
தேனமரும் பைம்பொழிலின் வண்டுபாடுந் திருநல்லூர்
வானமருங் கோயிலே கோயிலாக மகிழ்ந்தீரே. ௪

நிணங்கவரும் மூவிலையும் அனலுமேந்தி நெறிகுழலாள்
அணங்கமரும் பாடலோ டாடல்மேவும் அழகினீர்
திணங்கவரும் ஆடரவும் பிறையுஞ்சூடித் திருநல்லூர்
மணங்கமழுங் கோயிலே கோயிலாக மகிழ்ந்தீரே. ௫

கார்மருவு பூங்கொன்றை சூடிக்கமழ்புன் சடைதாழ
வார்மருவு மென்முலையாள் பாகமாகும் மாண்பினீர்
தேர்மருவு நெடுவீதிக் கொடிகளாடுந் திருநல்லூர்
ஏர்மருவு கோயிலே கோயிலாக இருந்தீரே. ௬

ஊன்தோயும் வெண்மழுவும் அனலுமேந்தி உமைகாண
மீன்தோயுந் திசைநிறைய வோங்கியாடும் வேடத்தீர்
தேன்தோயும் பைம்பொழிலின் வண்டுபாடுந் திருநல்லூர்
வான்தோயுங் கோயிலே கோயிலாக மகிழ்ந்தீரே. ௭

காதமரும் வெண்குழையீர் கறுத்தஅரக்கன் மலையெடுப்ப
மாதமரும் மென்மொழியாள் மறுகும்வண்ணங் கண்டுகந்தீர்
நீதமரா அந்தணர்கள் பரவியேத்துந் திருநல்லூர்
மாதமருங் கோயிலே கோயிலாக மகிழ்ந்தீரே. ௮

போதின்மேல் அயன்திருமால் போற்றியும்மைக் காணாது
நாதனே யிவனென்று நயந்தேத்த மகிழ்ந்தளித்தீர்

நீதிலா அந்தணர்கள் நியமஞ்செய் திருநல்லூர்
மாதராள் அவளோடு மன்னுகோயில் மகிழ்ந்தீரே. ௯

பொல்லாத சமணரொடு புறங்கூறுஞ் சாக்கியரொன்
றல்லாதார் அறவுரைவிட் டடியார்கள் போற்றோவா
நல்லார்கள் அந்தணர்கள் நாளுமேத்துந் திருநல்லூர்
மல்லார்ந்த கோயிலே கோயிலாக மகிழ்ந்தீரே. ௧௦

கொந்தணவும் பொழில்புடைசூழ் கொச்சைமேவு குலவேந்தர்
செந்தமிழின் சம்பந்தன் சிறைவண்புனல்சூழ் திருநல்லூர்
பந்தணவும் மெல்விரலாள் பங்கன்றன்னைப் பயில்பாடல்
சிந்தையா லுரைசெய்வார் சிவலோகஞ்சேர்ந் திருப்பாரே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருக்குடவாயில் - பண் - காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

கலைவாழும் அங்கையீர் கொங்கையாருங் கருங்கூந்தல்
அலைவாழுஞ் செஞ்சடையில் அரவும்பிறையும் அமர்வித்தீர்
குலைவாழை கமுகம்பொன் பவளம்பழுக்குங் குடவாயில்
நிலைவாழுங் கோயிலே கோயிலாக நின்றீரே. ௧

அடியார்ந்த பைங்கழலுஞ் சிலம்பும்ஆர்ப்ப அங்கையில்
செடியார்ந்த வெண்டலையொன் றேந்தியுலகம் பலிதேர்வீர்
குடியார்ந்த மாமறையோர் குலாவியேத்துங் குடவாயில்
படியார்ந்த கோயிலே கோயிலாகப் பயின்றீரே. ௨

கழலார்பூம் பாதத்தீர் ஓதக்கடலில் விடமுண்டன்
றழலாருங் கண்டத்தீர் அண்டர்போற்றும் அளவினீர்
குழலார வண்டினங்கள் கீதத்தொலிசெய் குடவாயில்
நிழலார்ந்த கோயிலே கோயிலாக நிகழ்ந்தீரே. ௩

மறியாருங் கைத்தலத்தீர் மங்கைபாக மாகச்சேர்ந்
தெறியாரும் மாமழுவும் எரியுமேந்துங் கொள்கையீர்
குறியார வண்டினங்கள் தேன்மிழற்றுங் குடவாயில்
நெறியாருங் கோயிலே கோயிலாக நிகழ்ந்தீரே. ௪

இழையார்ந்த கோவணமுங் கீளும்எழிலார் உடையாகப்
பிழையாத சூலம்பெய் தாடல்பாடல் பேணினீர்
குழையாரும் பைம்பொழிலும் வயலுஞ்சூழ்ந்த குடவாயில்
விழவார்ந்த கோயிலே கோயிலாக மிக்கீரே. ௫

அரவார்ந்த திருமேனி யானவெண்ணீ றாடினீர்
இரவார்ந்த பெய்பலிகொண் டிமையோரேத்த நஞ்சுண்டீர்
குரவார்ந்த பூஞ்சோலை வாசம்வீசுங் குடவாயில்
திருவார்ந்த கோயிலே கோயிலாகத் திகழ்ந்தீரே. ௬

பாடலார் வாய்மொழியீர் பைங்கண்வெள்ளே றூர்தியீர்
ஆடலார் மாநடத்தீர் அரிவைபோற்றும் ஆற்றலீர்
கோடலார் தும்பிமுரன் றிசைமிழற்றுங் குடவாயில்
நீடலார் கோயிலே கோயிலாக நிகழ்ந்தீரே. ௭

கொங்கார்ந்த பைங்கமலத் தயனுங்குறளாய் நிமிர்ந்தானும்
அங்காந்து தள்ளாட அழலாய்நிமிர்ந்தீர் இலங்கைக்கோன்
தங்காதல் மாமுடியுந் தாளும்அடர்த்தீர் குடவாயில்
பங்கார்ந்த கோயிலே கோயிலாகப் பரிந்தீரே. ௮, ௯

தூசார்ந்த சாக்கியருந் தூய்மையில்லாச் சமணரும்
ஏசார்ந்த புன்மொழிநீத் தெழில்கொள்மாடக் குடவாயில்
ஆசாரஞ் செய்மறையோர் அளவிற்குன்றா தடிபோற்றத்
தேசார்ந்த கோயிலே கோயிலாகச் சேர்ந்தீரே. ௧௦

நளிர்பூந் திரைமல்கு காழிஞான சம்பந்தன்
குளிர்பூங் குடவாயிற் கோயில்மேய கோமானை
ஒளிர்பூந் தமிழ்மாலை உரைத்தபாடல் இவைவல்லார்
தளர்வான தானொழியத் தகுசீர்வானத் திருப்பாரே. ௧௧

திருச்சிற்றம்பலம்

சீகாழி - பண் - காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

நலங்கொள் முத்தும் மணியும் அணியுந் திரளோதங்
கலங்கள் தன்னிற் கொண்டு கரைசேர் கலிக்காழி
வலங்கொள் மழுவொன் றுடையாய் விடையா யெனவேத்தி
அலங்கல் சூட்ட வல்லார்க் கடையா அருநோயே. க

ஊரார் உவரிச் சங்கம் வங்கங் கொடுவந்து
காரார் ஓதங் கரைமேல் உயர்த்துங் கலிக்காழி
நீரார் சடையாய் நெற்றிக் கண்ணா என்றென்று
பேரா யிரமும் பிதற்றத் தீரும் பிணிதானே. உ

வடிகொள் பொழிலின் மழலை வரிவண் டிசைசெய்யக்
கடிகொள் போதில் தென்றல் அணையுங் கலிக்காழி
முடிகொள் சடையாய் முதல்வா என்று முயன்றேத்தி
அடிகை தொழுவார்க் கில்லை அல்லல் அவலமே. ங

மனைக்கே யேற வளஞ்செய் பவளம் வளர்முத்தங்
கனைக்குங் கடலுள் ஓதம் ஏறுங் கலிக்காழிப்
பனைக்கைப் பகட்டீர் உரியாய் பெரியா யெனப்பேணி
நினைக்க வல்ல அடியார் நெஞ்சில் நல்லாரே. ச

பரிதி யியங்கும் பாரிற் சீரார் பணியாலே
கருதி விண்ணோர் மண்ணோர் விரும்புங் கலிக்காழிச்
சுருதி மறைநான் கான செம்மை தருவானைக்
கருதி யெழுமின் வழுவா வண்ணந் துயர்போமே. ரு

மந்தம் மருவும் பொழிலில் எழிலார் மதுவுண்டு
கந்தம் மருவ வரிவண் டிசைசெய் கலிக்காழிப்
பந்தம் நீக்க அருளும் பரனே யெனவேத்திச்
சிந்தை செய்வார் செம்மை நீங்கா திருப்பாரே. சு

புயலார் பூமி நாமம் ஓதிப் புகழ்மல்கக்
கயலார் கண்ணார் பண்ணார் ஒலிசெய் கலிக்காழிப்
பயில்வான் தன்னைப் பத்தி யாரத் தொழுதேத்த
முயல்வார் தம்மேல் வெம்மைக் கூற்றம் முடுகாதே. எ

அரக்கன் முடிதோள் நெரிய அடர்த்தான் அடியார்க்குக்
காக்க கில்லா தருள்செய் பெருமான் கலிக்காழிப்
பாக்கும் புகழான் தன்னை யேத்திப் பணிவார்மேல்
பெருக்கும் இன்பந் துன்ப மான பிணிபோமே. அ

மாணா யுலகங் கொண்ட மாலும் மலரோனுங்
காணா வண்ணம் எரியாய் நிமிர்ந்தான் கலிக்காழிப்
பூணார் முலையாள் பங்கத் தானைப் புகழ்ந்தேத்திக்
கோணா நெஞ்சம் உடையார்க் கில்லைக் குற்றமே. ௯

அஞ்சி யல்லல் மொழிந்து திரிவார் அமண்ஆதர்
கஞ்சி காலை யுண்பார்க் கரியான் கலிக்காழித்
தஞ்ச மாய தலைவன் தன்னை நினைவார்கள்
துஞ்ச லில்லா நல்ல வுலகம் பெறுவாரே. ௧௦

ஊழி யாய பாரில் ஓங்கும் உயர்செல்வக்
காழி யீசன் கழலே பேணுஞ் சம்பந்தன்
தாழும் மனத்தால் உரைத்த தமிழ்கள் இவைவல்லார்
வாழி நீங்கா வானோ ருலகில் மகிழ்வாரே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருப்பாசூர் - பண் - காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

சிந்தை யிடையார் தலையின் மிசையார் செஞ்சொல்லார்
வந்து மாலை வைகும் போழ்தென் மனத்துள்ளார்
மைந்தர் மணாள ரென்ன மகிழ்வா ரூர்போலும்
பைந்தண் மாதவி சோலை சூழ்ந்த பாசூரே. ௧

பேரும் பொழுதும் பெயரும் பொழுதும் பெம்மானென்
றாருந் தனையும் அடியா ரேத்த அருள்செய்வார்
ஊரும் அரவம் உடையார் வாழும் ஊர்போலும்
பாரின் மிசையார் பாட லோவாப் பாசூரே. ௨

கையால் தொழுது தலைசாய்த் துள்ளங் கசிவார்கள்
மெய்யார் குறையுந் துயருந் தீர்க்கும் விமலனார்

நெய்யா டுதலஞ் சுடையார் நிலாவும் ஊர்போலும்
பைவாய் நாகங் கோட லீனும் பாசூரே. ௩

பொங்கா டரவும் புனலுஞ் சடைமேற் பொலிவெய்தக்
கொங்கார் கொன்றை சூடியென் னுள்ளங் குளிர்வித்தார்
தங்கா தலியுந் தாமும் வாழும் ஊர்போலும்
பைங்கான் முல்லை பல்லரும் பீனும் பாசூரே. ௪

ஆடற் புரியும் ஐவா யரவொன் றரைச்சாத்தும்
சேடச் செல்வர் சிந்தையு ளென்றும் பிரியாதார்
வாடல் தலையிற் பலிதேர் கையார் ஊர்போலும்
பாடற் குயில்கள் பயில்பூஞ் சோலைப் பாசூரே. ௫

கானின் றதிரக் கனல்வாய் நாகங் கச்சாகத்
தோலொன் றுடையார் விடையார் தம்மைத் தொழுவார்கள்
மாலொன் டோட மையல் தீர்ப்பார் ஊர்போலும்
பால்வெண் மதிதோய் மாடஞ் சூழ்ந்த பாசூரே. ௬

கண்ணின் அயலே கண்ணொன் றுடையார் கழலுன்னி
எண்ணுந் தனையும் அடியா ரேத்த அருள்செய்வார்
உண்ணின் றுருக உவகை தருவார் ஊர்போலும்
பண்ணின் மொழியார் பாட லோவாப் பாசூரே. ௭

தேசு குன்றாத் தெண்ணீ ரிலங்கைக் கோமானைக்
கூச அடர்த்துக் கூர்வாள் கொடுப்பார் தம்மையே
பேசிப் பிதற்றப் பெருமை தருவார் ஊர்போலும்
பாசித் தடமும் வயலுஞ் சூழ்ந்த பாசூரே. ௮

நகுவாய் மலர்மேல் அயனும் நாகத் தணையானும்
புகுவா யறியார் புறநின் றோரார் போற்றோவார்
செகுவா யுகுபல் தலைசேர் கையார் ஊர்போலும்
பகுவாய் நாரை ஆரல் வாரும் பாசூரே. ௯

தூய வெயில்நின் றுழல்வார் துவர்தோய் ஆடையார்
நாவில் வெய்ய சொல்லித் திரிவார் நயமில்லார்
காவல் வேவக் கணையொன் றெய்தார் ஊர்போலும்
பாவைக் குரவம் பயில்பூஞ் சோலைப் பாசூரே. ௧௦

ஞானம் உணர்வான் காழி ஞான சம்பந்தன்
தேனும் வண்டும் இன்னிசை பாடுந் திருப்பாசூர்க்
கானம் முறைவார் கழல்சேர் பாடல் இவைவல்லார்
ஊனம் இலராய் உம்பர் வானத் துறைவாரே. கக

திருச்சிற்றம்பலம்

திருவெண்காடு - பண் - காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

உண்டாய் நஞ்சை உமையோர் பங்கா என்றுள்கித்
தொண்டாய்த் திரியும் அடியார் தங்கள் துயரங்கள்
அண்டா வண்ணம் அறுப்பான் எந்தை ஊர்போலும்
வெண்தா மரைமேற் கருவண் டியாழ்செய் வெண்காடே. க

நாதன் நம்மை ஆள்வா னென்று நவின்றேத்திப்
பாதம் பன்னாள் பணியும் அடியார் தங்கள்மேல்
ஏதந் தீர இருந்தான் வாழும் ஊர்போலும்
வேதத் தொலியாற் கிளிசொற் பயிலும் வெண்காடே. உ

தண்முத் தரும்பத் தடமூன் றுடையான் றனையுன்னிக்
கண்முத் தரும்பக் கழற்சே வடிகை தொழுவார்கள்
உண்முத் தரும்ப வுவகை தருவான் ஊர்போலும்
வெண்முத் தருவிப் புனல்வந் தலைக்கும் வெண்காடே. ௩

நரையார் வந்து நாளுங் குறுகி நணுகாமுன்
உரையால் வேறா வுள்கு வார்கள் உள்ளத்தே
கரையா வண்ணங் கண்டான் மேவும் ஊர்போலும்
விரையார் கமலத் தன்னம் மருவும் வெண்காடே. ௪

பிள்ளைப் பிறையும் புனலுஞ் சூடும் பெம்மானென்
றுள்ளத் துள்ளித் தொழுவார் தங்கள் உறுநோய்கள்
தள்ளிப் போக அருளுந் தலைவன் ஊர்போலும்
வெள்ளைச் சுரிசங் குலவித் திரியும் வெண்காடே. ௫

ஒளிகொள் மேனி யுடையாய் உம்ப ராளீயென்
றளிய ராகி யழுதுற் றூறும் அடியார்கட்

கெளியான் அமரர்க் கரியான் வாழும் ஊர்போலும்
வெளிய வுருவத் தானை வணங்கும் வெண்காடே. ௬

கோள்வித் தனைய கூற்றந் தன்னைக் குறிப்பினால்
மாள்வித் தவனை மகிழ்ந்தங் கேத்த மாணிக்காய்
ஆள்வித் தமரர் உலகம் அளிப்பான் ஊர்போலும்
வேள்விப் புகையால் வானம் இருள்கூர் வெண்காடே. ௭

வளையார் முன்கை மலையாள் வெருவ வரையூன்றி
முளையார் மதியஞ் சூடி யென்று முப்போதும்
இளையா தேத்த இருந்தான் எந்தை ஊர்போலும்
விளையார் கழனிப் பழனஞ் சூழ்ந்த வெண்காடே. ௮

கரியா னோடு கமல மலரான் காணாமை
எரியாய் நிமிர்ந்த எங்கள் பெருமான் என்பார்கட்
குரியான் அமரர்க் கரியான் வாழும் ஊர்போலும்
விரியார் பொழிலின் வண்டு பாடும் வெண்காடே. ௯

பாடும் அடியார் பலருங் கூடிப் பரிந்தேத்த
ஆடும் அரவம் அசைத்த பெருமான் அறிவின்றி
மூடம் உடைய சமண்சாக் கியர்கள் உணராத
வேடம் உடைய பெருமான் பதியாம் வெண்காடே. ௰

விடையார் கொடியான் மேவி யுறையும் வெண்காட்டைக்
கடையார் மாடங் கலந்து தோன்றுங் காழியான்
நடையா ரின்சொல் ஞானசம் பந்தன் தமிழ்வல்லார்க்
கடையா வினைகள் அமர லோகம் ஆள்வாரே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருமீயச்சூர் - பண் - காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

காயச் செவ்விக் காமற் காய்ந்து கங்கையைப்
பாயப் படர்புன் சடையிற் பதித்த பரமேட்டி
மாயச் சூர்அன் றறுத்த மைந்தன் தாதைதன்
மீயச் சூரே தொழுது வினையை வீட்டுமே. ௧

பூவார் சடையின் முடிமேற் புனலர் அனல்கொள்வர்
நாவார் மறையர் பிறையர் நறவெண் தலையேந்தி
ஏவார் மலையே சிலையாக் கழியம் பெரிவாங்கி
மேவார் புரமூன் றெரித்தார் மீயச் சூராரே. ௨

பொன்னேர் கொன்றை மாலை புரளும் அகலத்தான்
மின்னேர் சடைக ளுடையான் மீயச் சூரானைத்
தன்னேர் பிறரில் லானைத் தலையால் வணங்குவார்
அந்நே ரிமையோர் உலகம் எய்தல் அரிதன்றே. ௩

வேக மதநல் லியானை வெருவ வுரிபோர்த்துப்
பாகம் உமையோ டாகப் படிதம் பலபாட
நாகம் அரைமே லசைத்து நடமா டியநம்பன்
மேகம் உரிஞ்சும் பொழில்சூழ் மீயச் சூரானே. ௪

விடையார் கொடியார் சடைமேல் விளங்கும் பிறைவேடம்
படையார் பூதஞ் சூழப் பாட லாடலார்
பெடையார் வரிவண் டணையும் பிணைசேர் கொன்றையார்
விடையார் நடையொன் றுடையார் மீயச் சூராரே. ௫

குளிருஞ் சடைகொள் முடிமேற் கோலம் ஆர்கொன்றை
ஒளிரும் பிறையொன் றுடையா னொருவன் கைகோடி
நளிரும் மணிசூழ் மாலை நட்டம் நவில்நம்பன்
மிளிரும் அரவம் உடையான் மீயச் சூரானே. ௬

நீலவடிவர் மிடறு நெடியர் நிகரில்லார்
கோல வடிவு தமதாங் கொள்கை யறிவொண்ணார்
காலர் கழலர் கரியின் உரியர் மழுவாளர்
மேலர் மதியர் விதியர் மீயச் சூராரே. ௭

புலியின் உரிதோ லாடை பூசும் பொடிநீற்றர்
ஒலிகொள் புனலோர் சடைமேற் கரந்தார் உமையஞ்ச
வலிய திரள்தோள் வன்கண் அரக்கர் கோன்தன்னை
மெலிய வரைக்கீழ் அடர்த்தார் மீயச் சூராரே. ௮

காதின் மிளிருங் குழையர் கரிய கண்டத்தார்
போதி லவனும் மாலுந் தொழப்பொங் கெரியானார்

கோதி வரிவண் டறைபூம் பொய்கைப் புனல்மூழ்கி
மேதி படியும் வயல்சூழ் மீயச் சூராரே. ௯

கண்டார் நாணும் படியார் கலிங்க முடைபட்டைக்
கொண்டார் சொல்லைக் குறுகா ருயர்ந்த கொள்கையார்
பெண்தான் பாக முடையார் பெரிய வரைவில்லால்
விண்டார் புரமூன் றெரித்தார் மீயச் சூராரே. ௧0

வேட முடைய பெருமா னுறையும் மீயச்சூர்
நாடும் புகழார் புகலி ஞானசம் பந்தன்
பாட லாய தமிழீ ரைந்தும் மொழிந்துள்கி
ஆடும் அடியார் அகல்வா னுலகம் அடைவாரே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருஅரிசிற்கரைப்புத்தூர் - பண் - காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

மின்னுஞ் சடைமேல் இளவெண் திங்கள் விளங்கவே
துன்னுங் கடல்நஞ் சிருள்தோய் கண்டர் தொன்மூதூர்
அன்னம் படியும் புனலார் அரிசில் அலைகொண்டு
பொன்னும் மணியும் பொருதென் கரைமேற் புத்தூரே. ௧

மேவா அசுரர் மேவெயில் வேவ மலைவில்லால்
ஏவார் எரிவெங் கணையா லெய்தான் எய்துமூர்
நாவால் நாதன் நாமம் ஓதி நாள்தோறும்
பூவால் நீரால் பூசுரர் போற்றும் புத்தூரே. ௨

பல்லார் தலைசேர் மாலை சூடிப் பாம்புபூண்
டெல்லா விடமும் வெண்ணீ றணிந்தோ ரேறேறிக்
கல்லார் மங்கை பங்க ரேனுங் காணுங்கால்
பொல்லா ரல்லர் அழகியர் புத்தூர்ப் புனிதரே. ௩

வரியேர் வளையாள் அரிவை யஞ்ச வருகின்ற
கரியேர் உரிவை போர்த்த கடவுள் கருதுமூர்
அரியேர் கழனிப் பழனஞ் சூழ்ந்தங் கழகாய
பொரியேர் புன்கு சொரிபூஞ் சோலைப் புத்தூரே. ௪

என்போ டரவம் ஏனத் தெயிறோ டெழிலாமை
மின்போற் புரிநூல் விரவிப் பூண்ட மணிமார்பர்
அன்போ டுருகும் அடியார்க் கன்பர் அமருமூர்
பொன்போ தலர்கோங் கோங்கு சோலைப் புத்தூரே. ௫

வள்ளி முலைதோய் குமரன் தாதை வான்தோயும்
வெள்ளி மலைபோல் விடையொன் றுடையான் மேவுமூர்
தெள்ளி வருநீர் அரிசில் தென்பாற் சிறைவண்டும்
புள்ளும் மலிபூம் பொய்கை சூழ்ந்த புத்தூரே. ௬

நிலந்தண் ணீரோ டனல்கால் விசும்பின் நீர்மையான்
சிலந்தி செங்கட் சோழ னாகச் செய்தானூர்
அலந்த அடியான் அற்றைக் கன்றோர் காசெய்திப்
புலர்ந்த காலை மாலை போற்றும் புத்தூரே. ௭

இத்தேர் ஏக இம்மலை பேர்ப்பன் என்றேந்தும்
பத்தோர் வாயான் வரைக்கீழ் அலறப் பாதந்தான்
வைத்தா ரருள்செய் வரதன் மருவும் ஊரான
புத்தூர் காணப் புகுவார் வினைகள் போகுமே. ௮

முள்ளார் கமலத் தயன்மால் முடியோ டடிதேட
ஒள்ளா ரெரியா யுணர்தற் கரியான் ஊர்போலும்
கள்ளார் நெய்தல் கழுநீ ராம்பல் கமலங்கள்
புள்ளார் பொய்கைப் பூப்பல தோன்றும் புத்தூரே. ௯

கையார் சோறு கவர்குண் டர்களுந் துவருண்ட
மெய்யார் போர்வை மண்டையர் சொல்லும் மெய்யல்ல
பொய்யா மொழியா லந்தணர் போற்றும் புத்தூரில்
ஐயா என்பார்க் கையுற வின்றி யழகாமே. ௧௦

நறவங் கமழ்பூங் காழி ஞான சம்பந்தன்
பொறிகொள் அரவம் பூண்டான் ஆண்ட புத்தூர்மேல்
செறிவண் தமிழ்செய் மாலை செப்ப வல்லார்கள்
அறவன் கழல்சேர்ந் தன்போ டின்பம் அடைவாரே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருமுதுகுன்றம் - பண் - காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

தேவா சிறியோம் பிழையைப் பொறுப்பாய் பெரியோனே
ஆவா வென்றங் கடியார் தங்கட் கருள்செய்வாய்
ஓவா உவரி கொள்ள உயர்ந்தா யென்றேத்தி
மூவா முனிவர் வணங்குங் கோயில் முதுகுன்றே. ௧

எந்தை யிவனென் றிரவி முதலா இறைஞ்சுவார்
சிந்தை யுள்ளே கோயி லாகத் திகழ்வானை
மந்தி யேறி யினமா மலர்கள் பலகொண்டு
முந்தித் தொழுது வணங்குங் கோயில் முதுகுன்றே. ௨

நீடு மலரும் புனலுங் கொண்டு நிரந்தரம்
தேடும் அடியார் சிந்தை யுள்ளே திகழ்வானைப்
பாடுங் குயிலின் அயலே கிள்ளை பயின்றேத்த
மூடுஞ் சோலை முகில்தோய் கோயில் முதுகுன்றே. ௩

தெரிந்த அடியார் சிவனே யென்று திசைதோறும்
குருந்த மலருங் குரவின் அலருங் கொண்டேந்தி
இருந்து நின்றும் இரவும் பகலும் எத்துஞ்சீர்
முரிந்து மேகந் தவழுஞ் சோலை முதுகுன்றே. ௪

வைத்த நிதியே மணியே யென்று வருந்தித்தம்
சித்தம் நைந்து சிவனே யென்பார் சிந்தையார்
கொத்தார் சந்துங் குரவும் வாரிக் கொணர்ந்துந்தும்
முத்தா றுடைய முதல்வர் கோயில் முதுகுன்றே. ௫

வம்பார் கொன்றை வன்னி மத்தம் மலர்தூவி
நம்பா வென்ன நல்கும் பெருமான் உறைகோயில்
கொம்பார் குரவு கொகுடி முல்லை குவிந்தெங்கும்
மொய்ம்பார் சோலை வண்டு பாடும் முதுகுன்றே. ௬, ௭

வாசங் கமழும் பொழில்சூழ் இலங்கை வாழ்வேந்தை
நாசஞ் செய்த நங்கள் பெருமான் அமர்கோயில்
பூசை செய்த அடியார் நின்று புகழ்ந்தேத்த
மூசி வண்டு பாடுஞ் சோலை முதுகுன்றே. ௮

அல்லி மலர்மேல் அயனும் அரவின் அணையானும்
சொல்லிப் பரவித் தொடர வொண்ணாச் சோதியூர்
கொல்லை வேடர் கூடி நின்று கும்பிட
முல்லை யயலே முறுவல் செய்யும் முதுகுன்றே. ௯

கருகும் உடலார் கஞ்சி யுண்டு கடுவேதின்
றுருகு சிந்தை யில்லார்க் கயலான் உறைகோயில்
திருகல் வேய்கள் சிறிதே வளையச் சிறுமந்தி
முருகின் பணைமே லிருந்து நடஞ்செய் முதுகுன்றே. ௧௦

அறையார் கடல்சூழ் அந்தண் காழிச் சம்பந்தன்
முறையால் முனிவர் வணங்குங் கோயில் முதுகுன்றைக்
குறையாப் பனுவல் கூடிப் பாட வல்லார்கள்
பிறையார் சடையெம் பெருமான் கழல்கள் பிரியாரே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருப்பிரமபுரம் - பண் - காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

கறையணி வேலிலர் போலுங் கபாலந் தரித்திலர் போலும்
மறையும் நவின்றிலர் போலும் மாசுணம் ஆர்த்திலர் போலும்
பறையுங் கரத்திலர் போலும் பாசம் பிடித்திலர் போலும்
பிறையுஞ் சடைக்கிலர் போலும் பிரம புரம்அமர்ந் தாரே. ௧

கூரம் பதிவிலர் போலுங் கொக்கின் இறகிலர் போலும்
ஆரமும் பூண்டிலர் போலும் ஆமை அணிந்திலர் போலுந்
தாருஞ் சடைக்கிலர் போலுஞ் சண்டிக் கருளிலர் போலும்
பேரும் பலவிலர் போலும் பிரம புரம்அமர்ந் தாரே. ௨

சித்த வடிவிலர் போலுந் தேசந் திரிந்திலர் போலுங்
கத்தி வருங்கடுங் காளி கதங்கள் தவிர்த்திலர் போலும்
மெய்த்த நயனம் இடந்தார்க் காழி யளித்திலர் போலும்
பித்த வடிவிலர் போலும் பிரம புரம்அமர்ந் தாரே. ௩

நச்சர வாட்டிலர் போலும் நஞ்சம் மிடற்றிலர் போலுங்
கச்சுத் தரித்திலர் போலுங் கங்கை தரித்திலர் போலும்

மொய்ச்சவன் பேயிலர் போலும் முப்புரம் எய்திலர் போலும்
பிச்சை யிரந்திலர் போலும் பிரம புரம்அமர்ந் தாரே. ௪

தோடு செவிக்கிலர் போலுஞ் சூலம் பிடித்திலர் போலும்
ஆடு தடக்கை வலிய ஆனை உரித்திலர் போலும்
ஓடு கரத்திலர் போலும் ஒள்ளழல் கையிலர் போலும்
பீடு மிகுத்தெழு செல்வப் பிரம புரம்அமர்ந் தாரே. ௫

விண்ணவர் கண்டிலர் போலும் வேள்வி யழித்திலர் போலும்
அண்ணல் அயன்தலை வீழ அன்று மறுத்திலர் போலும்
வண்ண எலும்பினொ டக்கு வடங்கள் தரித்திலர் போலும்
பெண்ணினம் மொய்த்தெழு செல்வப் பிரம புரம்அமர்ந் தாரே. ௬

பன்றியின் கொம்பிலர் போலும் பார்த்தற் கருளிலர் போலுங்
கன்றிய காலனை வீழக் கால்கொடு பாய்ந்திலர் போலுந்
தன்று பிணஞ்சுடு காட்டி லாடித் திதைந்திலர் போலும்
பின்றியும் பீடும் பெருகும் பிரம புரம்அமர்ந் தாரே. ௭

பாசு தரித்திலர் போலும் படுதலை பூண்டிலர் போலும்
அரசன் இலங்கையர் கோனை அன்றும் அடர்த்திலர் போலும்
புரைசெய் புனத்திள மானும் புலியின் அதளிலர் போலும்
பிரச மலர்ப்பொழில் சூழ்ந்த பிரம புரம்அமர்ந் தாரே. ௮

அடிமுடி மாலயன் தேட அன்றும் அளப்பிலர் போலுங்
கடிமலர் ஐங்கணை வேளைக் கனல விழித்திலர் போலும்
படிமலர்ப் பாலனுக் காகப் பாற்கடல் ஈந்திலர் போலும்
பிடிநடை மாதர் பெருகும் பிரம புரம்அமர்ந் தாரே. ௯

வெற்றரைச் சீவரத் தார்க்கு வெளிப்பட நின்றிலர் போலும்
அற்றவர் ஆல்நிழல் நால்வர்க் கறங்கள் உரைத்திலர் போலும்
உற்றவ ரென்றிலர் போலும் ஓடு முடிக்கிலர் போலும்
பெற்றமும் ஊர்ந்திலர் போலும் பிரம புரம்அமர்ந் தாரே. ௧௦

பெண்ணுரு ஆணுரு அல்லாப் பிரம புரநகர் மேய
அண்ணல்செய் யாதன வெல்லாம் அறிந்து வகைவகை யாலே
நண்ணிய ஞானசம் பந்தன் நவின்றன பத்தும்வல் லார்கள்
விண்ணவ ரோடினி தாக வீற்றிருப் பாரவர் தாமே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருஆலவாய் - திருநீற்றுப்பதிகம். பண் - காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருஆல வாயான் திருநீறே. க

வேதத்தி லுள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு உண்மையி லுள்ளது நீறு
சீதப் புனல்வயல் சூழ்ந்த திருஆல வாயான் திருநீறே. உ

முத்தி தருவது நீறு முனிவ ரணிவது நீறு
சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பாவ இனியது நீறு
சித்தி தருவது நீறு திருஆல வாயான் திருநீறே. ங

காண இனியது நீறு கவினைத் தருவது நீறு
பேணி அணிபவர்க் கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு
மாணந் தகைவது நீறு மதியைத் தருவது நீறு
சேணந் தருவது நீறு திருஆல வாயான் திருநீறே. ச

பூச இனியது நீறு புண்ணிய மாவது நீறு
பேச இனியது நீறு பெருந்தவத் தோர்களுக் கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு அந்தம தாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திருஆல வாயான் திருநீறே. ரு

அருத்தம தாவது நீறு அவலம் அறுப்பது நீறு
வருத்தந் தணிப்பது நீறு வானம் அளிப்பது நீறு
பொருத்தம தாவது நீறு புண்ணியர் பூசும்வெண் ணீறு
திருத்தகு மாளிகை சூழ்ந்த திருஆல வாயான் திருநீறே. சா

எயிலது அட்டது நீறு இருமைக்கும் உள்ளது நீறு
பயிலப் படுவது நீறு பாக்கிய மாவது நீறு
துயிலைத் தடுப்பது நீறு சுத்தம தாவது நீறு
அயிலைப் பொலிதரு சூலத் தால வாயான் திருநீறே. எ

இராவணன் மேலது நீறு எண்ணத் தகுவது நீறு
பராவண மாவது நீறு பாவம் அறுப்பது நீறு
தராவண மாவது நீறு தத்துவ மாவது நீறு
அராவணங் குந்திரு மேனி ஆல வாயான் திருநீறே. ௮

மாலொ டயனறி யாத வண்ணமு முள்ளது நீறு
மேலுறை தேவர்கள் தங்கள் மெய்யது வெண்பொடி நீறு
ஏல உடம்பிடர் தீர்க்கும் இன்பந் தருவது நீறு
ஆலம துண்ட மிடற்றெம் ஆல வாயான் திருநீறே. ௯

குண்டிகைக் கையர்க ளோடு சாக்கியர் கூட்டமுங் கூடக்
கண்டிகைப் பிப்பது நீறு கருத இனியது நீறு
எண்டிசைப் பட்ட பொருளார் ஏத்துந் தகையது நீறு
அண்டத் தவர்பணிந் தேத்தும் ஆல வாயான் திருநீறே. ௧௦

ஆற்றல் அடல்விடை யேறும் ஆலவா யான்திரு நீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞானசம் பந்தன்
தேற்றித் தென்ன னுடலுற்ற தீப்பிணி யாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருப்பெரும்புலியூர் - பண் - காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

மண்ணுமோர் பாகம் உடையார் மாலுமோர் பாகம் உடையார்
விண்ணுமோர் பாகம் உடையார் வேதம் உடைய விமலர்
கண்ணுமோர் பாகம் உடையார் கங்கை சடையிற் கரந்தார்
பெண்ணுமோர் பாகம் உடையார் பெரும்புலி யூர்பிரி யாரே. ௧

துன்னு கடற்பவ ளஞ்சேர் தூயன நீண்ட திண்தோள்கள்
மின்னு சுடர்க்கொடி போலும் மேனியி னொளொரு கங்கைக்
கன்னி களின்புனை யோடு கலைமதி மாலை கலந்த
பின்னு சடைப்பெரு மானூர் பெரும்புலி யூர்பிரி யாரே. ௨

கள்ள மதித்த கபாலங் கைதனி லேமிக ஏந்தித்
துள்ள மிதித்துநின் றாடுந் தொழிலர் எழில்மிகு செல்வர்

வெள்ள நகுதலை மாலை விரிசடை மேல்மிளிர் கின்ற
பிள்ளை மதிப்பெரு மானார் பெரும்புலி யூர்பிரி யாரே. ௩

ஆட லிலையம் உடையார் அருமறை தாங்கிஆ றங்கம்
பாட லிலையம் உடையார் பன்மை யொருமைசெய் தஞ்சம்
ஊட லிலையம் உடையார் யோகெனும் பேரொளி தாங்கிப்
பீட லிலையம் உடையார் பெரும்புலி யூர்பிரி யாரே. ௪

தோடுடை யார்குழைக் காதிற் சுடுபொடி யாரன லாடக்
காடுடை யாரெரி வீசுங் கையுடை யார்கடல் சூழ்ந்த
நாடுடை யார்பொரு ளின்ப நல்லவை நாலு நயந்த
பீடுடை யார்பெரு மானார் பெரும்புலி யூர்பிரி யாரே. ௫

கற்ற துறப்பணி செய்து காண்டுமென் பாரவர் தங்கள்
முற்றி தறிதுமென் பார்கள் முதலியர் வேதபு ராணர்
மற்றி தறிதுமென் பார்கள் மனத்திடை யார்பணி செய்யப்
பெற்றி பெரிதும் உகப்பார் பெரும்புலி யூர்பிரி யாரே. ௬

மறையுடை யாரொலி பாடல் மாமலர்ச் சேவடி சேர்வார்
குறையுடை யார்குறை தீர்ப்பார் குழகர் அழகர்நம் செல்வர்
கறையுடை யார்திகழ் கண்டங் கங்கை சடையிற் கரந்தார்
பிறையுடை யார்சென்னி தன்மேற் பெரும்புலி யூர்பிரி யாரே. ௭

உறவியும் இன்புறு சீரும் ஓங்குதல் வீடெளி தாகித்
துறவியுங் கூட்டமுங் காட்டித் துன்பமும் இன்பமுந் தோற்றி
மறவியென் சிந்தனை மாற்றி வாழவல் லார்தமக் கென்றும்
பிறவி யறுக்கும் பிரானார் பெரும்புலி யூர்பிரி யாரே. ௮

சீருடை யாரடி யார்கள் சேடரொப் பார்சடை சேரும்
நீருடை யார்பொடிப் பூசும் நினைப்புடை யார்விரி கொன்றைத்
தாருடை யார்விடை யூர்வார் தலைவரைந் நூற்றுப்பத் தாய
பேருடை யார்பெரு மானார் பெரும்புலி யூர்பிரி யாரே. ௯

உரிமை யுடையடி யார்கள் உள்ளுற வுள்கவல் லார்கட்
கருமை யுடையன காட்டி அருள்செயும் ஆதி முதல்வர்
கருமை யுடைநெடு மாலுங் கடிமல ரண்ணலுங் காணாப்
பெருமை யுடைப்பெரு மானார் பெரும்புலி யூர்பிரி யாரே. ௧௦

பிறைவள ரும்முடிச் சென்னிப் பெரும்புலி யூர்ப்பெரு மானை
நறைவள ரும்பொழிற் காழி நற்றமிழ் ஞானசம் பந்தன்
மறைவள ருந்தமிழ் மாலை வல்லவர் தந்துயர் நீங்கி
நிறைவளர் நெஞ்சின ராகி நீடுல கத்திருப் பாரே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருக்கடம்பூர் - பண் - காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

வானமர் திங்களும் நீரும் மருவிய வார்சடை யானைத்
தேனமர் கொன்றையி னானைத் தேவர் தொழப்படு வானைக்
கானம ரும்பிணை புல்கிக் கலைபயி லுங்கடம் பூரில்
தானமர் கொள்கையி னானைத் தாள்தொழ வீடெளி தாமே. ௧

அரவினொ டாமையும் பூண்டு அந்துகில் வேங்கை யதளும்
விரவுந் திருமுடி தன்மேல் வெண்திங்கள் சூடி விரும்பிப்
பரவுந் தனிக்கடம் பூரிற் பைங்கண்வெள் ளேற்றண்ணல் பாதம்
இரவும் பகலும் பணிய இன்பம் நமக்கது வாமே. ௨

இளிபடும் இன்சொலி னார்கள் இருங்குழல் மேலிசைந் தேறத்
தெளிபடு கொள்கை கலந்த தீத்தொழி லார்கடம் பூரில்
ஒளிதரு வெண்பிறை சூடி யொண்ணுத லோடுட னாகிப்
புலியத ளாடை புனைந்தான் பொற்கழல் போற்றுதும் நாமே. ௩

பறையொடு சங்கம் இயம்பப் பல்கொடி சேர்நெடு மாடம்
கறையுடை வேல்வரிக் கண்ணார் கலையொலி சேர்கடம் பூரில்
மறையொலி கூடிய பாடல் மருவினின் றாடல் மகிழும்
பிறையுடை வார்சடை யானைப் பேணவல் லார்பெரி யோரே. ௪

தீவிரி யக்கழ லார்ப்பச் சேயெரி கொண்டிடு காட்டில்
நாவிரி கூந்தல்நற் பேய்கள் நகைசெய்ய நட்டம் நவின்றோன்
காவிரி கொன்றை கலந்த கண்ணுத லான்கடம் பூரில்
பாவிரி பாடல் பயில்வார் பழியொடு பாவ மிலாரே. ௫

தண்புனல் நீள்வயல் தோறுந் தாமரை மேலன்னம் வைகக்
கண்புணர் காவில்வண் டேறக் கள்ளவி ழுங்கடம் பூரில்

பெண்புனை கூறுடை யானைப் பின்னு சடைப்பெரு மானைப்
பண்புனை பாடல் பயில்வார் பாவமி லாதவர் தாமே. ௬

பலிகெழு செம்மலர் சாரப் பாடலொ டாட லறாத
கலிகெழு வீதி கலந்த கார்வயல் சூழ்கடம் பூரில்
ஒலிதிகழ் கங்கை கரந்தான் ஒண்ணுத லாள்உமை கேள்வன்
புலியத ளாடையி னான்றன் புனைகழல் போற்றல் பொருளே. ௭

பூம்படு கிற்கயல் பாயப் புள்ளிரி யப்புறங் காட்டில்
காம்படு தோளியர் நாளுங் கண்கவ ருங்கடம் பூரில்
மேம்படு தேவியொர் பாகம் மேவியெம் மானென வாழ்த்தித்
தேம்படு மாமலர் தூவித் திசைதொழத் தீய கெடுமே. ௮

திருமரு மார்பி லவனுந் திகழ்தரு மாமல ரோனும்
இருவரு மாயறி வொண்ணா எரியுரு வாகிய ஈசன்
கருவரை காலில் அடர்த்த கண்ணுத லான்கடம் பூரில்
மருவிய பாடல் பயில்வார் வானுல கம்பெறு வாரே. ௯

ஆடை தவிர்த்தறங் காட்டு மவர்களும் அந்துவ ராடைச்
சோடைகள் நன்னெறி சொல்லார் சொல்லினுஞ் சொல்லல கண்டீர்
வேடம் பலபல காட்டும் விகிர்தன்நம் வேதமு தல்வன்
காடத னில்நட மாடுங் கண்ணுத லான்கடம் பூரே. ௧௦

விடைநவி லுங்கொடி யானை வெண்கொடி சேர்நெடு மாடம்
கடைநவி லுங்கடம் பூரிற் காதல னைக்கடற் காழி
நடைநவில் ஞானசம் பந்தன் நன்மையா லேத்திய பத்தும்
படைநவில் பாடல்ப யில்வார் பழியொடு பாவமி லாரே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருப்பாண்டிக்கொடுமுடி - பண் - காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

பெண்ணமர் மேனியி னாரும் பிறைபுல்கு செஞ்சடை யாருங்
கண்ணமர் நெற்றியி னாருங் காதம ருங்குழை யாரும்
எண்ணம ருங்குணத் தாரும் இமையவ ரேத்தநின் றாரும்
பண்ணமர் பாடலி னாரும் பாண்டிக் கொடுமுடி யாரே. ௧

தனைக்கணி மாமலர் கொண்டு தாள்தொழு வாரவர் தங்கள்
வினைப்பகை யாயின தீர்க்கும் விண்ணவர் விஞ்சையர் நெஞ்சில்
நினைத்தெழு வார்துயர் தீர்ப்பார் திரைவளை மங்கை நடுக்கப்
பனைக்கைப் பகட்டுரி போர்த்தார் பாண்டிக் கொடுமுடி யாரே. உ

சடையமர் கொன்றையி னாருஞ் சாந்தவெண் ணீறணிந் தாரும்
புடையமர் பூதத்தி னாரும் பொறிகிளர் பாம்பசைத் தாரும்
விடையம ருங்கொடி யாரும் வெண்மழு மூவிலைச் சூலப்
படையமர் கொள்கையி னாரும் பாண்டிக் கொடுமுடி யாரே. ௩

நறைவளர் கொன்றையி னாரும் ஞாலமெல் லாந்தொழு தேத்தக்
கறைவளர் மாமிடற் றாருங் காடரங் காக்கன லேந்தி
மறைவளர் பாடலி னோடு மண்முழ வங்குழல் மொந்தை
பறைவளர் பாடலி னாரும் பாண்டிக் கொடுமுடி யாரே. ௪

போகமும் இன்பமு மாகிப் போற்றியென் பாரவர் தங்கள்
ஆகமும் உறைவிட மாக அமர்ந்தவர் கொன்றையி னோடும்
நாகமுந் திங்களுஞ் சூடி நன்னுதல் மங்கைதன் மேனிப்
பாகம் உகந்தவர் தாமும் பாண்டிக் கொடுமுடி யாரே. ரு

கடிபடு கூவிளம் மத்தங் கமழ்சடை மேலுடை யாரும்
பொடிபட முப்புரஞ் செற்ற பொருசிலை யொன்றுடை யாரும்
வடிவுடை மங்கைதன் னோடு மணம்படு கொள்கையி னாரும்
படிபடு கோலத்தி னாரும் பாண்டிக் கொடுமுடி யாரே. ௬

ஊனமர் வெண்டலை யேந்தி உண்பலிக் கென்றுழல் வாரும்
தேனம ரும்மொழி மாது சேர்திரு மேனியி னாரும்
கானமர் மஞ்ஞைக ளாலுங் காவிரிக் கோலக் கரைமேல்
பால்நல நீறணி வாரும் பாண்டிக் கொடுமுடி யாரே. எ

புரந்தரன் தன்னொடு வானோர் போற்றியென் றேத்தநின் றாரும்
பெருந்திறல் வாளரக் கன்னைப் பேரிடர் செய்துகந் தாரும்
கருந்திரை மாமிடற் றாருங் காரகில் பன்மணி யுந்திப்
பரந்திழி காவிரிப் பாங்கர்ப் பாண்டிக் கொடுமுடி யாரே. அ

திருமகன் காதலி னானுந் திகழ்தரு மாமலர் மேலைப்
பெருமக னும்மவர் காணாப் பேரழ லாகிய பெம்மான்

மருமலி மென்மலர்ச் சந்து வந்திழி காவிரி மாடே
பருமணி நீர்த்துறை யாரும் பாண்டிக் கொடுமுடி யாரே. ௯

புத்தரும் புந்தியி லாத சமணரும் பொய்ம்மொழி யல்லால்
மெய்த்தவம் பேசிட மாட்டார் வேடம் பலபல வற்றால்
சித்தருந் தேவருங் கூடிச் செழுமலர் நல்லன கொண்டு
பத்தர்கள் தாம்பணிந் தேத்தும் பாண்டிக் கொடுமுடி யாரே. ௧௦

கலம்மல்கு தண்கடல் சூழ்ந்த காழியுள் ஞானசம் பந்தன்
பலமல்கு வெண்டலை யேந்திப் பாண்டிக் கொடுமுடி தன்னைச்
சொலமல்கு பாடல்கள் பத்துஞ் சொல்லவல் லார்துயர் தீர்ந்து
நலம்மல்கு சிந்தைய ராகி நன்னெறி யெய்துவர் தாமே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருப்பிரமபுரம் - பண் காந்தாரம்

திருச்சக்கரமாற்று

திருச்சிற்றம்பலம்

பிரமனூர் வேணுபுரம் புகலி வெங்குருப் பெருநீர்த் தோணி
புரம்மன்னு பூந்தராய் பொன்னஞ் சிரபுரம் புறவஞ் சண்பை
அரன்மன்னு தண்காழி கொச்சைவய முள்ளிட்டங் காதி யாய
பரமனூர் பன்னிரண்டாய் நின்றதிருக் கழுமலம்நாம் பரவு மூரே. ௧

வேணுபுரம் பிரமனூர் புகலிபெரு வெங்குரு வெள்ளத் தோங்குந்
தோணிபுரம் பூந்தராய் தூநீர்ச் சிரபுரம் புறவங் காழி
கோணிய கோட்டாற்றுக் கொச்சை வயஞ்சண்பை கூருஞ் செல்வங்
காணிய வையகத்தோ ரேத்துங் கழுமலம்நாங் கருது மூரே. ௨

புகலி சிரபுரம் வேணுபுரஞ் சண்பை புறவங் காழி
நிகரில் பிரமபுரங் கொச்சை வயம்நீர்மேல் நின்ற மூதூர்
அகலிய வெங்குருவோ டந்தண் டராய்அமரர் பெருமாற் கின்பம்
பகரு நகர்நல்ல கழுமலம்நாங் கைதொழுது பாடு மூரே. ௩

வெங்குருத் தண்புகலி வேணுபுரஞ் சண்பை வெள்ளங் கொள்ளத்
தொங்கிய தோணிபுரம் பூந்தராய் தொகுபிரம புரந்தொல் காழி

தங்கு பொழிற்புறவங் கொச்சை வயந்தலைபண் டாண்ட மூதூர்
கங்கை சடைமுடிமே லேற்றான் கழுமலம்நாங் கருது மூரே. ௪

தொன்னீரில் தோணிபுரம் புகலி வெங்குருத் துயர்தீர் காழி
இன்னீர வேணுபுரம் பூந்தராய் பிரமனூர் எழிலார் சண்பை
நன்னீர பூம்புறவங் கொச்சை வயஞ்சிலம்ப னகராம் நல்ல
பொன்னீர புன்சடையான் பூந்தண் கழுமலம்நாம் புகழு மூரே. ௫

தண்ணந் தராய்புகலி தாமரையான் ஊர்சண்பை தலைமுன் ஆண்ட
அண்ணல்நகர் கொச்சை வயந்தண் புறவஞ்சீர் அணியார் காழி
விண்ணியல்சீர் வெங்குருநல் வேணுபுரந் தோணிபுரம் மேலா ரேத்து
கண்ணுதலான் மேவியநற் கழுமலம்நாங் கைதொழுது கருது மூரே. ௬

சீரார் சிரபுரமுங் கொச்சைவயஞ் சண்பையொடு புறவம் நல்ல
ஆராத் தராய்பிரம னூர்புகலி வெங்குருவோ டந்தண் காழி
ஏரார் கழுமலமும் வேணுபுரந் தோணிபுர மென்றென் றுள்கிப்
போரால் நெடியவனும் நான்முகனுங் காண்பரிய பெருமா னூரே. ௭

புறவஞ் சிரபுரமுந் தோணிபுரஞ் சண்பைமிகு புகலி காழி
நறவம் மிகுசோலைக் கொச்சை வயந்தராய் நான்முகன் றனூர்
விறலாய வெங்குருவும் வேணுபுரம் விசயன் மேலம் பெய்து
திறலால் அரக்கனைச் செற்றான்றன் கழுமலம்நாஞ் சேரு மூரே. ௮

சண்பை பிரமபுரந் தண்புகலி வெங்குரு நற்காழி சாயாப்
பண்பார் சிரபுரமுங் கொச்சை வயந்தராய் புறவம் பார்மேல்
நண்பார் கழுமலஞ்சீர் வேணுபுரந் தோணிபுரம் நாணி லாத
வெண்பற் சமணரொடு சாக்கியரை வியப்பழித்த விமல னூரே. ௯

செழுமலிய பூங்காழி புறவஞ் சிரபுரஞ்சீர்ப் புகலி செய்ய
கொழுமலரான் நன்னகரந் தோணிபுரங் கொச்சைவயஞ் சண்பை யாய
விழுமியசீர் வெங்குருவோ டோங்குதராய் வேணுபுரம் மிகுநன் மாடக்
கழுமலமென் றின்னபெயர் பன்னிரண்டுங்கண்ணுதலான்கருதுமூரே. ௰

கொச்சை வயம்பிரம னூர்புகலி வெங்குருப் புறவங் காழி
நிச்சல் விழவோவா நீடார் சிரபுரம்நீள் சண்பை மூதூர்
நச்சினிய பூந்தராய் வேணுபுரந் தோணிபுர மாகி நம்மேல்
அச்சங்கள் தீர்த்தருளும் அம்மான் கழுமலம்நாம் அமரு மூரே. ௧௧

காவி மலர்புரையுங் கண்ணார் கழுமலத்தின் பெயரை நாளும்
பாவியசீர்ப் பன்னிரண்டு நன்னூலாப் பத்திமையாற் பனுவல் மாலை
நாவின் நலம்புகழ்சீர் நான்மறையான் ஞானசம் பந்தன் சொன்ன
மேவியிசை மொழிவார் விண்ணவரில் எண்ணுதலை விருப்பு ளாரே.

திருச்சிற்றம்பலம்

திருக்குறும்பலா - பண் - காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

திருந்த மதிசூடித் தெண்ணீர் சடைக்கரந்து தேவிபாகம்
பொருந்திப் பொருந்தாத வேடத்தாற் காடுறைதல் புரிந்தசெல்வர்
இருந்த இடம்வினவில் ஏலங்கமழ் சோலையின வண்டியாழ்செய்
குருந்த மணம்நாறுங் குன்றிடஞ்சூழ் தண்சாரற் குறும்பலாவே. ௧

நாட்பலவுஞ் சேர்மதியஞ் சூடிப் பொடியணிந்த நம்பானம்மை
ஆட்பலவுந் தானுடைய அம்மா னிடம்போலும் அந்தண்சாரல்
கீட்பலவுங் கீண்டுகிளை கிளையன் மந்திபாய்ந் தண்டுவிண்ட
கோட்பலவின் தீங்கனியை மாக்கடுவன் உண்டுகளுங் குறும்பலாவே.

வாடல் தலைமாலை சூடிப் புலித்தோல் வலித்துவீக்கி
ஆட லரவசைத்த அம்மா னிடம்போலும் அந்தண்சாரல்
பாடற் பெடைவண்டு போதலர்த்தத் தாதவிழ்ந்து பசும்பொனுந்திக்
கோடன் மணங்கமழுங் குன்றிடஞ்சூழ் தண்சாரற் குறும்பலாவே. ௩

பால்வெண் மதிசூடிப் பாகத்தோர் பெண்கலந்து பாடியாடிக்
கால னுடல்கிழியக் காய்ந்தா ரிடம்போலுங் கல்சூழ்வெற்பில்
நீல மலர்க்குவளை கண்திறக்க வண்டாற்றும் நெடுந்தண்சாரல்
கோல மடமஞ்ஞை பேடையொ டாட்டயருங் குறும்பலாவே. ௪

தலைவாண் மதியங் கதிர்விரியத் தண்புனலைத் தாங்கித்தேவி
முலைபாகங் காதலித்த மூர்த்தி யிடம்போலும் முதுவேய்சூழ்ந்த
மலைவாய் அசும்பு பசும்பொன் கொழித்திழியும் மல்குசாரல்
குலைவாழைத் தீங்கனியும் மாங்கனியுந் தேன்பிலிற்றுங் குறும்பலாவே.

நீற்றே துதைந்திலங்கு வெண்ணூலர் தண்மதியர் நெற்றிக்கண்ணர்
கூற்றேர் சிதையக் கடிந்தா ரிடம்போலுங் குளிர்சூழ்வெற்பில்

ஏற்றேனம் ஏன மிவையோ டவைவிரவி யிழிபூஞ்சாரல்
கோற்றேன் இசைமுரலக் கேளாக் குயில்பயிலுங் குறும்பலாவே. ௬

பொன்ருேத்த கொன்றையும் பிள்ளை மதியும் புனலுஞ்சூடிப்
பின்ருேத்த வார்சடையெம் பெம்மா னிடம்போலும் பிலயந்தாங்கி
மன்றத்து மண்முழவம் ஓங்கி மணிகொழித்து வயிரம்உந்திக்
குன்றத் தருவி யயலே புனல்ததும்புங் குறும்பலாவே. எ

எந்து திணிதிண்டோள் இராவணனை மால்வரைக்கீழ் அடரவூன்றிச்
சாந்தமென நீறணிந்த சைவ ரிடம்போலுஞ் சாரற்சாரல்
பூந்தண் நறுவேங்கைக் கொத்திறுத்து மத்தகத்திற் பொலியவேந்திக்
கூந்தற் பிடியுங் களிறு முடன்வணங்குங் குறும்பலாவே. அ

அரவின் அணையானும் நான்முகனுங் காண்பரிய அண்ணல்சென்னி
விரவி மதியணிந்த விகிர்தர்க் கிடம்போலும் விரிபூஞ்சாரல்
மரவம் இருகரையும் மல்லிகையுஞ் சண்பகமும் மலர்ந்துமாந்தக்
குரவம் முறுவல்செய்யுங் குன்றிடஞ்சூழ் தண்சாரற் குறும்பலாவே. ௯

மூடிய சீவரத்தர் முன்கூறுண் டேறுதலும் பின்கூறுண்டு
காடி தொடுசமணைக் காய்ந்தா ரிடம்போலுங் கல்சூழ்வெற்பில்
நீடுயர் வேய்குனியப் பாய்கடுவன் நீள்கழைமேல் நிருத்தஞ்செய்யக்
கூடிய வேடுவர்கள் கூய்விளியாக் கைமறிக்குங் குறும்பலாவே. ௧௦

கொம்பார் பூஞ்சோலைக் குறும்பலா மேவிய கொல்லேற்றண்ணல்
நம்பான் அடிபரவும் நான்மறையான் ஞானசம் பந்தன்சொன்ன
இன்பாய பாடலிவைபத்தும் வல்லார் விரும்பிக்கேட்பார்
தம்பால தீவினைகள் போயகலும் நல்வினைகள் தளராவன்றே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருநணா - பண் - காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

பந்தார் விரல்மடவாள் பாகமா நாகம்பூண் டேறதேறி
அந்தார் அரவணிந்த அம்மா னிடம்போலும் அந்தண்சாரல்
வந்தார் மடமந்தி கூத்தாட வார்பொழிலில் வண்டுபாடச்
செந்தேன் தெளியொளிரத் தேமாக் கனியுதிர்க்குந் திருநணாவே. ௧

நாட்டம் பொலிந்திலங்கு நெற்றியினன் மற்றொருகை வீணையேந்தி
ஈட்டுந் துயரறுக்கும் எம்மான் இடம்போலும் இலைசூழ்கானில்
ஓட்டந் தரும்அருவி வீழும் விசைகாட்ட முந்தூழோசைச்
சேட்டார் மணிகள் அணியுந் திரைசேர்க்குந் திருநணாவே. ௨

நன்றாங் கிசைமொழிந்த நன்னுதலாள் பாகமாய் ஞாலமேத்த
மின்தாங்கு செஞ்சடையெம் விகிர்தர்க் கிடம்போலும் விரைசூழ்வெற்
குன்றோங்கி வன்றிரைகள் மோத மயிலாலுஞ் சாரற்செவ்வி [பில்
சென்றோங்கி வானவர்க ளேத்தி யடிபணியுந் திருநணாவே. ௩

கையில் மழுவேந்திக் காலிற் சிலம்பணிந்து கரித்தோல்கொண்டு
மெய்யில் முழுதணிந்த விகிர்தர்க் கிடம்போலும் மிடைந்துவானோர்
ஐய அரனே பெருமான் அருளென்றென் றாதரிக்கச்
செய்ய கமலம் பொழில்தேன் அளித்தியலுந் திருநணாவே. ௪

முத்தேர் நகையாள் இடமாகத் தம்மார்பில் வெண்ணூல் பூண்டு
தொத்தேர் மலர்சடையில் வைத்தா ரிடம்போலுஞ் சோலைசூழ்ந்த
அத்தேன் அளியுண் களியா லிசைமுரல ஆலத்தும்பி
தெத்தே யெனமுரலக் கேட்டார் வினைகெடுக்குந் திருநணாவே. ௫

வில்லார் வரையாக மாநாகம் நாணாக வேடங்கொண்டு
புல்லார் புரமூன் றெரித்தார்க் கிடம்போலும் புலியுமானும்
அல்லாத சாதிகளும் அங்கழல்மேற் கைகூப்ப அடியார்கூடிச்
செல்லா வருநெறிக்கே செல்ல அருள்புரியுந் திருநணாவே. ௬

கானார் களிற்றுரிவை மேல்மூடி யாடரவொன் றரைமேற்சாத்தி
ஊனார் தலையோட்டில் ஊணுகந்தான் தானுகந்த கோயிலெங்கும்
நானா விதத்தால் விரதிகள் நல்நாமமே யேத்திவாழ்த்தத்
தேனார் மலர்கொண் டடியார் அடிவணங்குந் திருநணாவே. ௭

மன்னீர் இலங்கையர்தங் கோமான் வலிதொலைய விரலாலூன்றி
முந்நீர்க் கடல்நஞ்சை யுண்டார்க் கிடம்போலும் முனைசேரியம்
அன்னீர் மைகுன்றி யழலால் வலிகுறைய வழியுமுன்றிற்
செந்நீர் பரப்பச் சிறந்து கரியொளிக்குந் திருநணாவே. ௮

மையார் மணிமிடறன் மங்கையோர் பங்குடையான் மனைகள்தோறும்
கையார் பலியேற்ற கள்வன் இடம்போலுங் கழல்கள்தேடிப்

பொய்யா மறையானும் பூமி யளந்தானும் போற்றமன்னிச்
செய்யார் எரியாம் உருவ முறவணங்குந் திருநணாவே. ௯

ஆடை யொழித்தங் கமணே திரிந்துண்பார் அல்லல்பேசி
மூடுருவம் உகந்தார் உரை யகற்றும் மூர்த்திகோயில்
ஓடு நதிசேரும் நித்திலமும் மொய்த்தகிலுங் கரையிற்சாரச்
சேடர் சிறந்தேத்தத் தோன்றி யொளிபெருகுந் திருநணாவே. ௧௦

கல்வித் தகத்தால் திரைசூழ் கடற்காழிக் கவுணிசீரார்
நல்வித் தகத்தால் இனிதுணரும் ஞானசம் பந்தனெண்ணும்
சொல்வித் தகத்தால் இறைவன் திருநணா வேத்துபாடல்
வல்வித் தகத்தான் மொழிவார் பழியிலரிம் மண்ணின்மேலே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருப்பிரமபுரம் - பண் - காந்தாரம்

திருச்சக்கரமாற்று

திருச்சிற்றம்பலம்

விளங்கியசீர்ப் பிரமனூர் வேணுபுரம் புகலிவெங் குருமேற்
சோலை, வளங்கவருந் தோணிபுரம் பூந்தராய் சிரபுரம்வண் புறவம்மண்
மேல், களங்கமிலூர் சண்பைகமழ் காழிவயங் கொச்சைகழு மலமெ
னநின்ன, இளங்குமரன் றன்னைப்பெற் றிமையவர்தம் பகையெறி
வித் திறைவனூரே. ௧

திருவளருங் கழுமலமே கொச்சை தேவேந்திரனூர் அயனூர்
தெய்வத், தருவளரும் பொழிற்புறவஞ் சிலம்பனூர் காழிதகு சண்பை
யொண்பா, வருவளர்வெங் குருப்புகலி யோங்குதராய் தோணிபுரம்
உயர்ந்ததேவர், வெருவவளர் கடல்விடம துண்டணிகொள் கண்டத்
தோன் விரும்புமூரே. ௨

வாய்ந்தபுகழ் மறைவளருந் தோணிபுரம் பூந்தராய் சிலம்பன்வாழூர்
ஏய்ந்தபுற வந்திகழுஞ் சண்பையெழிற் காழியிறை கொச்சையம்பொன்
வேய்ந்தமதிற் கழுமலம்விண் ணோர்பணிய மிக்கயனூர் அமரர்கோனூர்
ஆய்ந்தகலை யார்புகலி வெங்குருவ தான்நாளும் அமருமூரே. ௩

மாமலையாள் கணவன்மகிழ் வெங்குருமாப் புகலிதாய் தோணி புரம்வான், சேமமதில் புடைதிகழுங் கழுமலமே கொச்சைதேவேந் திரனூர்சீர்ப், பூமகனூர் பொலிவுடைய புறவம்விறற் சிலம்பனூர் காழி சண்பை, பாமருவு கலையெட்டெட் டுணர்ந்தவற்றின் பயன்நுகர்வோர் பரவுமூரே. ௪

தரைத்தேவர் பணிசண்பை தமிழ்க்காழி வயங்கொச்சை தயங்கு பூமேல், விரைச்சேருங் கழுமலம்மெய் யுணர்ந்தயனூர் விண்ணவர்தங் கோனூர்வென்றித், திரைச்சேரும் புனற்புகலி வெங்குருச் செல்வம் பெருகு தோணிபுரஞ்சீர், உரைச்சேர்பூந் தராய்சிலம்ப னூர்புறவம் உலகத்தில் உயர்ந்தவூரே. ௫

புண்டரிகத் தார்வயல்சூழ் புறவம்மிகு சிரபுரம்பூங் காழிசண்பை, எண்டிசையோர் இறைஞ்சியவெங் குருப்புகலி பூந்தராய் தோணிபுரஞ் சீர், வண்டமரும் பொழில்மல்கு கழுமலம்நற் கொச்சைவா னவர்தங் கோனூர், அண்டயனூ ரிவையென்பர் அருங்கூற்றை யுதைத்துகந்த அப்பனூரே. ௬

வண்மைவளர் வாத்தயனூர் வானவர்தங் கோனூர்வண் புகலி யிஞ்சி, வெண்மதிசேர் வெங்குருமிக் கோரிறைஞ்சு சண்பைவியன் காழிகொச்சை, கண்மகிழுங் கழுமலங்கற் றோர்புகழுந் தோணிபுரம் பூந்தராய்சீர்ப், பண்மலியுஞ் சிரபுரம்பார் புகழ்புறவம் பால்வண்ணன் பயிலுமூரே. ௭

மோடிபுறங் காக்குமூர் புறவஞ்சீர்ச் சிலம்பனூர் காழிமூதூர்
நீடியலுஞ் சண்பைகழு மலங்கொச்சை வேணுபுரங் கமலநீடு
கூடியய னூர்வளர்வெங் குருப்புகலி தராய்தோணி புரங்கூடப்போர்
தேடியுழல் அவுணர்பயில் திரிபுரங்கள் செற்றமலைச் சிலையனூரே. ௮

இரக்கமுடை யிறையவனூர் தோணிபுரம் பூந்தராய் சிலம்பன்தன்னூர்
நிரக்கவரு புனற்புறவம் நின்றதவத் தயனூர்சீர்த் தேவர்கோனூர்
வரக்கரவாப் புகலிவெங் குருமாசி லாச்சண்பை காழிகொச்சை
அரக்கன்விறல் அழித்தருளி கழுமலமந் தணர்வேத மருதவூரே. ௯

மேலோதுங் கழுமலம்மெய்த் தவம்வளருங் கொச்சையிந் திரனூர் மெய்ம்மை, நாலோதும் அயன்றனூர் நண்ணறிவார் குருப்புகலி

தாய்தூநீர்மேல், சேலோடு தோணிபுரந் திகழ்புறவஞ் சிலம்பனூர் செருச்செய்தன்று, மாலோடும் அயனறியான் வண்காழி சண்பை மண்ணோர் வாழ்த்துமூரே. ௧௦

ஆக்கமர்சி ரூர்சண்பை காழியமர் கொச்சைகழு மலமன்பானூர்
ஒக்கமுடைத் தோணிபுரம் பூந்தராய் சிரபுரமொண் புறவநண்பார்
பூக்கமலத் தோன்மகிழூர் புரந்தரனூர் புகலிவெங் குருவுமென்பர்
சாக்கியரோ டமண்கையர் தாமறியா வகைநின்றான் தங்குமூரே. ௧௧

அக்காஞ்சேர் தருமனூர் புகலிதராய் தோணிபுரம் அணிநீர்ப் பொய்கை, புக்காஞ்சேர் புறவஞ்சீர்ச் சிலம்பனூர் புகழ்க்காழி சண்பை தொல்லூர், மிக்காஞ்சீர்க் கழுமலமே கொச்சைவயம் வேணுபுரம் அய னூர்மேலிச், சக்காஞ்சீர்த் தமிழ்விரகன் தான்சொன்ன தமிழ்தரிப் போர் தவஞ்செய்தோரே. ௧௨

திருச்சிற்றம்பலம்

திருப்பிரமபுரம் - பண் - காந்தாரம்

திருக்கோமூத்திரி

திருச்சிற்றம்பலம்

பூமகனூர் புத்தேளுக் கிறைவனூர் குறைவிலாப் புகலிபூமேல்
மாமகளூர் வெங்குருநல் தோணிபுரம் பூந்தராய் வாய்ந்தஇஞ்சிச்
சேமமது சிரபுரஞ்சீர்ப் புறவம்நிறை புகழ்ச்சண்பை காழிகொச்சை
காமனைமுன் காய்ந்தநுதற் கண்ணவனூர் கழுமலநாங் கருதுமூரே. ௧

கருத்துடைய மறையவர்சேர் கழுமலம்மெய்த் தோணிபுரங் கனக மாட, உருத்திகழ்வெங் குருப்புகலி யோங்குதரா யுலகாருங் கொச்சை காழி, திருத்திகழுஞ் சிரபுரந்தே வேந்திரனூர் செங்கமலத் தயனூர் தெய்வத், தருத்திகழும் பொழிற்புறவஞ் சண்பைசடை முடியண்ணல் தங்குமூரே. ௨

ஊர்மதியைக் கதுவுயர் மதிற்சண்பை யொளிமருவு காழி கொச்சை, கார்மலியும் பொழில்புடைசூழ் கழுமலமெய்த் தோணிபுரங் கற்றோரேத்துஞ், சீர்மருவு பூந்தராய் சிரபுரம்மெய்ப் புறவம்அய னூர்

பூங்கற்பத், தார்மருவும் இந்திரனூர் புகலிவெங் குருக்கங்கை தரித்தோ
னூரே. ௩

தரித்தமறை யாளர்மிகு வெங்குருச்சீர்த் தோணிபுரந் தரியாரிஞ்சி,
எரித்தவன்சேர் கழுமலமே கொச்சைபூந் தராய்புகலி யிமையோர்கோ
னூர், தெரித்தபுகழ்ச் சிரபுரஞ்சீர் திகழ்காழி சண்பைசெழு மறைக
ளெல்லாம், விரித்தபுகழ்ப் புறவம்விரைக் கமலத்தோ னூருலகில்
விளங்குமூரே. ௪

விளங்கயனூர் பூந்தராய் மிகுசண்பை வேணுபுரம் மேகமேய்க்
கும், இளங்கமுகம் பொழில்தோணி புரங்காழி யெழிற்புகலி புறவம்
ஏரார், வளங்கவரும் வயற்கொச்சை வெங்குருமாச் சிரபுரம்வன் நஞ்ச
முண்டு, களங்கம்மலி களத்தவன்சீர்க் கழுமலங்கா மன்னுடலங் காய்ந்
தோனூரே. ௫

காய்ந்துவரு காலனையன் றுதைத்தவனூர் கழுமலமாத் தோணி
புரஞ்சீர், ஏய்ந்தவெங் குருப்புகலி யிந்திரனூர் இருங்கமலத் தயனூர்
இன்பம், வாய்ந்தபுற வந்திகழுஞ் சிரபுரம்பூந் தராய்கொச்சை காழி
சண்பை, சேந்தனைமுன் பயந்துலகில் தேவர்கள்தம் பகைகெடுத்
தோன் திகழுமூரே. ௬

திகழ்மாடம் மலிசண்பை பூந்தராய் பிரமனூர் காழிதேசார், மிகு
தோணி புரந்திகழும் வேணுபுரம் வயங்கொச்சை புறவம்விண்ணோர்,
புகழ்புகலி கழுமலஞ்சீர்ச் சிரபுரம்வெங் குருவெம்போர் மகிடற்செற்று,
நிகழ்நீலி நின்மலன்றன் அடியிணைகள் பணிந்துலகில் நின்றவூரே. ௭

நின்றமதில் சூழ்தருவெங் குருத்தோணி புரநிகழும் வேணுமன்
றில், ஒன்றுகழு மலங்கொச்சை உயர்காழி சண்பைவளர் புறவம்ஒடி,
சென்றுபுறங் காக்குமூர் சிரபுரம்பூந் தராய்புகலி தேவர்கோனூர்,
வென்றிமலி பிரமபுரம் பூதங்கள் தாங்காக்க மிக்கவூரே. ௮

மிக்ககம லத்தயனூர் விளங்குபுற வஞ்சண்பை காழிகொச்சை,
தொக்கபொழிற் கழுமலந்தூத் தோணிபுரம் பூந்தராய் சிலம்பன்சேரூர்,
மைக்கொள்பொழில் வேணுபுரம் மதிற்புகலி வெங்குருவல் அரக்கன்
திண்தோள், ஒக்கஇரு பதுமுடிகள் ஒருபதுமீ டழித்துகந்த எம்மா
னூரே. ௯

எம்மான்சேர் வெங்குருச்சீர்ச் சிலம்பனூர் கழுமலநற் புகலியென் றம், பொய்ம்மாண்பி லோர்புறவங் கொச்சைபுரந் தானூர்நல் தோணி புரம்போர்க், கைம்மாவை யுரிசெய்தோன் காழியய னூர்தாய் சண் பைகாரின், மெய்ம்மால்பூ மகனுணரா வகைதழலாய் விளங்கியஎம் இறைவனூரே. ௧௦

இறைவனமர் சண்பையெழிற் புறவம்அய னூர்இமையோர்க் கதி பன்சேரூர், குறைவில்புகழ்ப் புகலிவெங் குருத்தோணி புரங்குணமார் பூந்தராய்சீர்ச், சிறைமலிநற் சிரபுரஞ்சீர்க் காழிவளர் கொச்சைகழு மலந்தேசின்றிப், பறிதலையோ டமண்கையர் சாக்கியர்கள் பரிசறியா அம்மானூரே. ௧௧

அம்மான்சேர் கழுமலமாச் சிரபுரம்வெங் குருக்கொச்சை புறவ மஞ்சீர், மெய்ம்மானத் தொண்புகலி மிகுகாழி தோணிபுரந் தேவர் கோனூர், அம்மான்மன் னுயர்சண்பை தாய்அயனூர் வழிமுடக்கு மாவின்பாச்சல், தம்மானென் றியஞான சம்பந்தன் தமிழ்கற்போர் தக்கோர்தாமே. ௧௨

திருச்சிற்றம்பலம்

சீகாழி - பண் - காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

விண்ணியங்கு மதிக்கண்ணி யான்விரி யுஞ்சடைப்
பெண்ணயங்கொள் திருமேனி யான்பெரு மான்அனற்
கண்ணயங்கொள் திருநெற்றி யான்கலிக் காழியுள்
மண்ணயங்கொள் மறையாளர் ஏத்துமலர்ப் பாதனே. ௧

வலிய காலனுயிர் வீட்டினான்மட வாளொடும்
பலிவி ரும்பியதோர் கையினான்பர மேட்டியான்
கலியை வென்றமறை யாளர்தங்கலிக் காழியுள்
நலிய வந்தவினை தீர்த்துகந்தஎம் நம்பனே. ௨

சுற்ற லாநற்புலித் தோலசைத்தயன் வெண்டலைத்
துற்ற லாயதொரு கொள்கையான்சுடு நீற்றினான்

கற்றல் கேட்டலுடை யார்கள்வாழ்கலிக் காழியுள்
மற்ற யங்குதிரள் தோளெம்மைந்தனவன் நல்லனே. ௩

பல்ல யங்குதலை யேந்தினான்படு கானிடை
மல்ல யங்குதிரள் தோள்களாரநட மாடியுங்
கல்ல யங்குதிரை சூழ்நீள்கலிக் காழியுள்
தொல்ல யங்குபுகழ் பேணநின்றசுடர் வண்ணனே. ௪

தூந யங்கொள்திரு மேனியிற்பொடிப் பூசிப்போய்
நாந யங்கொள்மறை யோதிமாதொரு பாகமாக்
கான யங்கொள்புனல் வாசமார்கலிக் காழியுள்
தேன யங்கொள்முடி ஆனைந்தாடிய செல்வனே. ௫

சுழியி லங்கும்புனற் கங்கையாள்சடை யாகவே
மொழியி லங்கும்மட மங்கைபாகம் உகந்தவன்
கழியி லங்குங்கடல் சூழுந்தண்கலிக் காழியுள்
பழியி லங்குந்துய ரொன்றிலாப்பர மேட்டியே. ௬

முடியி லங்கும்உயர் சிந்தையான்முனி வர்தொழ
அடியி லங்குங்கழ லார்க்கவேயன லேந்தியுங்
கடியி லங்கும்பொழில் சூழுந்தண்கலிக் காழியுள்
கொடியி லங்கும்இடை யாளொடுங்குடி கொண்டதே. ௭

வல்ல ரக்கன்வரை பேர்க்கவந்தவன் தோள்முடி
கல்ல ரக்கிவ்விறல் வாட்டினான்கலிக் காழியுள்
நல்லொ ருக்கியதொர் சிந்தையார்மலர் தூவவே
தொல்லி ருக்கும்மறை யேத்துகந்துடன் வாழுமே. ௮

மருவும் நான்மறை யோனும்மாமணி வண்ணனும்
இருவர் கூடியிசைந் தேத்தவேயெரி யான்றனூர்
வெருவ நின்றதிரை யோதம்வாரவியன் முத்தவை
கருவை யார்வயற் சங்குசேர்கலிக் காழியே. ௯

நன்றி யொன்றுமுண ராதவன்சமண் சாக்கியர்
அன்றி யங்கவர் சொன்னசொல்லவை கொள்கிலான்
கன்று மேதியிளங் கானல்வாழ்கலிக் காழியுள்
வென்றி சேர்வியன் கோயில்கொண்டவிடை யாளனே. ௧0

கன்றும் மூன்றமுடை யாதிவாழ்கலிக் காழியுள்
அண்ண லந்தண்ணருள் பேணிஞானசம் பந்தன்சொல்
வண்ணம் மூன்றுந்தமி ழில்தெரிந்திசை பாடுவார்
விண்ணும் மண்ணும்விரி கின்றதொல்புக ழாளரே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருஅகத்தியான்பள்ளி - பண் - காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

வாடிய வெண்தலை மாலைசூடி மயங்கிருள்
நீடெரி கொள்ளி விளக்குமாக நிவந்தெரி
ஆடிய எம்பெரு மான்அகத்தியான் பள்ளியைப்
பாடிய சிந்தையி னார்கட்கில்லையாம் பாவமே. ௧

துன்னங்கொண்ட வுடையான் துதைந்தவெண் ணீற்றினன்
மன்னுங்கொன்றை மதமத்தஞ் சூடினன் மாநகர்
அன்னந்தங்கும் பொழில்சூழ் அகத்தியான் பள்ளியை
உன்னஞ்செய்த மனத்தார்கள் தம்வினை யோடுமே. ௨

உடுத்ததுவும் புலித்தோல் பலிதிரிந் துண்பதுங்
கடுத்துவந்த கழற்காலன் தன்னையுங் காலினால்
அடுத்ததுவும் பொழில்சூழ் அகத்தியான் பள்ளியான்
தொடுத்தது வுஞ்சரம் முப்புரந் துகளாகவே. ௩

காய்ந்ததுவும் அன்றுகாமனை நெற்றிக் கண்ணினால்
பாய்ந்ததுவுங் கழற்காலனைப் பண்ணி னான்மறை
ஆய்ந்ததுவும் பொழில்சூழ் அகத்தியான் பள்ளியான்
ஏய்ந்ததுவும் இமவான் மகளொரு பாகமே. ௪

போர்த்ததுவுங் கரியின் உரிபுலித் தோலுடை
கூர்த்ததோர் வெண்மழு வேந்திக்கோளர வம்அரைக்
கார்த்ததுவும் பொழில்சூழ் அகத்தியான் பள்ளியான்
பார்த்ததுவும் அரணம் படஎரி மூழ்கவே. ௫

தெரிந்ததுவுங் கணையொன்று முப்புரஞ் சென்றுடன்
எரிந்ததுவும் முன்னெழிலார் மலருறை வான்தலை

அரிந்ததுவும் பொழில்சூழ் அகத்தியான் பள்ளியான்
புரிந்ததுவும் உமையாளோர் பாகம் புனைதலே. ௬

ஓதியெல்லாம் உலகுக்கோர் ஒண்பொரு ளாகிமெய்ச்
சோதியென்று தொழுவார் அவர்துயர் தீர்த்திடும்
ஆதியெங்கள் பெருமான் அகத்தியான் பள்ளியை
நீதியால் தொழுவார் அவர்வினை நீங்குமே. ௭

செறுத்ததுவுந் தக்கன் வேள்வியைத்திருந் தார்புரம்
ஒறுத்ததுவும் ஒளிமா மலருறை வான்சிரம்
அறுத்ததுவும் பொழில்சூழ் அகத்தியான் பள்ளியான்
இறுத்ததுவும் அரக்கன்றன் தோள்கள் இருபதே. ௮

சிரமும்நல்ல மதிமத்த முந்திகழ் கொன்றையும்
அரவம்மல்குஞ் சடையான் அகத்தியான் பள்ளியைப்
பிரமனோடு திருமாலுந் தேடிய பெற்றிமை
பாரவல்லார் அவர்தங்கள் மேல்வினை பாறுமே. ௯

செந்துவ ராடையினாரும் வெற்றரை யேதிரி
புந்தியி லார்களும் பேசும்பேச்சவை பொய்ம்மொழி
அந்தணன் எங்கள்பிரான் அகத்தியான் பள்ளியைச்
சிந்திமின் நும்வினை யானவைசிதைந் தோடுமே. ௧௦

ஞாலம் மல்குந்தமிழ் ஞானசம்பந்தன் மாமயில்
ஆலுஞ்சோலை புடைசூழ் அகத்தியான் பள்ளியுள்
சூல நல்லபடையான் அடிதொழு தேத்திய
மாலைவல்லா ரவர்தங்கள் மேல்வினை மாயுமே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருஅறையணிநல்லூர் - பண் - காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

பீடினாற்பெரி யோர்களும் பேதைமைகெடத் தீதிலா
வீடினாலுயர்ந் தார்களும் வீடிலாரிள வெண்மதி
சூடினார்மறை பாடினார் சுடலைநீறணிந் தாரழல்
ஆடினார்அறை யணிநல்லூர் அங்கையால்தொழு வார்களே. ௧

இலையினார்சூலம் ஏறுகந் தேறியேயிமை யோர்தொழ
நிலையினாலொரு காலுறச் சிலையினால்மதி லெய்தவன்
அலையினார்புனல் சூடிய அண்ணலார்அறை யணிநல்லூர்
தலையினால்தொழு தோங்குவார் நீங்குவார்தடு மாற்றமே. ௨

என்பினார்கனல் சூலத்தார் இலங்குமாமதி யுச்சியான்
பின்பினாற்பிறங் குஞ்சடைப் பிஞ்ஞகன்பிறப் பிலியென்று
முன்பினார்மூவர் தாந்தொழு முக்கண்மூர்த்திதன் தாள்களுக்
கன்பினார்அறை யணிநல்லூர் அங்கையால்தொழு வார்களே. ௩

விரவுநீறுபொன் மார்பினில் விளங்கப்பூசிய வேதியன்
உரவுநஞ்சமு தாகவுண் டுறுதிபேணுவ தன்றியும்
அரவுநின்சடைக் கண்ணியார் அண்ணலார்அறை யணிநல்லூர்
பரவுவார்பழி நீங்கிடப் பறையுந்தாஞ்செய்த பாவமே. ௪

தீயினார்திகழ் மேனியாய் தேவர்தாந்தொழு தேவன்நீ
ஆயினாய்கொன்றை யாய்அன லங்கையாய்அறை யணிநல்லூர்
மேயினார்தம தொல்வினை வீட்டினாய்வெய்ய காலனைப்
பாயினாயதிர் கழலினாய் பரமனேயடி பணிவனே. ௫

விரையினார்கொன்றை சூடியும் வேகநாகமும் வீக்கிய
அரையினார்அறை யணிநல்லூர் அண்ணலார்அழ காயதோர்
நரையினார்விடை யூர்தியார் நக்கனார்நறும் போதுசேர்
உரையினாலுயர்ந் தார்களும் உரையினாலுயர்ந் தார்களே. ௬

வீரமாகிய வேதியர் வேகமாகளி யானையின்
ஈரமாகிய வுரிவைபோர்த் தரிவைமேற்சென்ற எம்இறை
ஆரமாகிய பாம்பினார் அண்ணலாரறை யணிநல்லூர்
வாரமாய்நினைப் பார்கள்தம் வல்வினையவை மாயுமே. ௭

தக்கனார்பெரு வேள்வியைத் தகர்த்துகந்தவன் தாழ்சடை
முக்கணான்மறை பாடிய முறைமையான்முனி வர்தொழ
அக்கினோடெழில் ஆமைபூண் அண்ணலார்அறை யணிநல்லூர்
நக்கனாரவர் சார்வலால் நல்குசார்விலோம் நாங்களே. ௮

வெய்யநோயிலர் தீதிலர் வெறியராய்ப்பிறர் பின்செலார்
செய்வதேயலங் காரமாம் இவையிவைதேறி யின்புறில்

ஐயமேற்றுணுந் தொழிலராம் அண்ணலார்அறை யணிநல்லூர்ச்
சைவனாவர் சார்வலால் யாதுஞ்சார்விலோம் நாங்களே. ௯

வாக்கியஞ்சொல்லி யாரொடும் வகையலாவகை செய்யன்மின்
சாக்கியஞ்சம ணென்றிவை சாரேலும்மர ணம்பொடி
ஆக்கியம்மழு வாட்படை யண்ணலாரறை யணிநல்லூர்ப்
பாக்கியங்குறை யுடையீரேற் பறையுமாஞ்செய்த பாவமே. ௧0

கழியுலாங்கடற் கானல்சூழ் கழுமலம்அமர் தொல்பதிப்
பழியிலாமறை ஞானசம் பந்தன்நல்லதோர் பண்பினார்
மொழியினால்அறை யணிநல்லூர் முக்கண்மூர்த்திதன் தாள்தொழக்
கெழுவினாரவர் தம்மொடுங் கேடில்வாழ்பதி பெறுவரே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருவிளநகர் - பண் - காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

ஒளிரிளம்பிறை சென்னிமேல் உடையர்கோவண ஆடையர்
குளிரிளம்மழை தவழ்பொழிற் கோலநீர்மல்கு காவிரி
நளிரிளம்புனல் வார்துறை நங்கைகங்கையை நண்ணினார்
மிளிரிளம்பொறி அரவினார் மேயதுவிள நகரதே. ௧

அக்கரவ்வணி கலனென அதனொடார்த்ததோர் ஆமைபூண்
டுக்கவர்சுடு நீறணிந் தொளிமல்குபுனற் காவிரிப்
புக்கவர்துயர் கெடுகெனப் பூசுவெண்பொடி மேவிய
மிக்கவர்வழி பாடுசெய் விளநகரவர் மேயதே. ௨

வாளிசேரடங் கார்மதி தொலையநூறிய வம்பின்வேய்த்
தோளிபாகம் அமர்ந்தவர் உயர்ந்ததொல்கடல் நஞ்சுடன்
காளமல்கிய கண்டத்தர் கதிர்விரிசுடர் முடியினர்
மீளியேறுகந் தேறினார் மேயதுவிள நகரதே. ௩

கால்விளங்கெரி கழலினார் கையிலங்கிய வேலினார்
நூல்விளங்கிய மார்பினார் நோயிலார்பிறப் பும்மிலார்
மால்விளங்கொளி மல்கிய மாசிலாமணி மிடறினார்
மேல்விளங்குவெண் பிறையினார் மேயதுவிள நகரதே. ௪

பன்னினூர்மறை பாடினூர் பாயசீர்ப்பழங் காவிரித்
தென்னூதண்டுறை முன்னினூர் தூநெறிபெறு வாரெனச்
சென்னிதிங்களைப் பொங்காராக் கங்கையோடுடன் சேர்த்தினூர்
மின்னூபொன்புரி நூலினூர் மேயதுவிள நகரதே. ரு

தேவரும்அம ரர்களுந் திசைநள்மேலுள தெய்வமும்
யாவரும்அறி யாததோர் அமைதியால்தழ லுருவினூர்
மூவரும்இவ ரென்னவும் முதல்வரும்இவ ரென்னவும்
மேவரும்பொரு ளாயினூர் மேயதுவிள நகரதே. சு

சொற்றரும்மறை பாடினூர் சுடர்விடுஞ்சடை முடியினூர்
கற்றருவ்வடங் கையினூர் காவிரித்துறை காட்டினூர்
மற்றருந்திரள் தோளினூர் மாசில்வெண்பொடிப் பூசினூர்
விற்றரும்மணி மிடறினூர் மேயதுவிள நகரதே. எ

படர்தருஞ்சடை முடியினூர் பைங்கழல்அடி பரவுவார்
அடர்தரும்பிணி கெடுகென அருளுவார்அர வரையினூர்
விடர்தரும்மணி மிடறினூர் மின்னூபொன்புரி நூலினூர்
மிடறரும்படை மழுவினூர் மேயதுவிள நகரதே. அ

கையிலங்கிய வேலினூர் தோலினூர்கரி காலினூர்
பையிலங்கர வல்குலாள் பாகமாகிய பரமனூர்
மையிலங்கொளி மல்கிய மாசிலாமணி மிடறினூர்
மெய்யிலங்குவெண் ணீற்றினூர் மேயதுவிள நகரதே. கூ

உள்ளதன்றனைக் காண்பன்கீ ழென்றமாமணி வண்ணனும்
உள்ளதன்றனைக் காண்பன்மே லென்றமாமலர் அண்ணலும்
உள்ளதன்றனைக் கண்டிலார் ஒளியார்தருஞ்சடை முடியின்மேல்
உள்ளதன்றனைக் கண்டிலா வொளியார்விளநகர் மேயதே. கo

மென்சிறைவண் டியாழ்முரல் விளநகர்த்துறை மேவிய
நன்பிறைநுதல் அண்ணலைச் சண்பைஞானசம் பந்தன்சீர்
இன்புறுந்தமி ழாற்சொன்ன வத்துவார்வினை நீங்கிப்போய்த்
தன்புறுந்துய ரம்மிலாத் தூநெறிபெறு வார்களே. கக

திருச்சிற்றம்பலம்

திருவாரூர் - பண் - காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

பவனமாய்ச் சோடையாய் நாவெழாப் பஞ்சுதோய்ச் சட்ட வுண்டு
சிவனதாள் சிந்தியாப் பேதைமார் போலநீ வெள்கி னாயே
கவனமாய்ப் பாய்வதோர் ஏறுகந் தேறிய காள கண்டன்
அவனதா ரூர்தொழு துய்யலாம் மையல்கொண் டஞ்சல் நெஞ்சே. க

தந்தையார் போயினார் தாயரும் போயினார் தாமும் போவார்
கொந்தவேல் கொண்டொரு கூற்றத்தார் பார்க்கின்றார் கொண்டுபோ
எந்தநாள் வாழ்வதற் கேமனம் வைத்தியால் ஏழை நெஞ்சே [வார்
அந்தணா ரூர்தொழு துய்யலாம் மையல்கொண் டஞ்சல் நெஞ்சே. உ

நிணங்குடர் தோல்நரம் பென்புசேர் ஆக்கைதான் நிலாய தன்றால்
குணங்களார்க் கல்லது குற்றநீங் காதெனக் குலுங்கி னாயே
வணங்குவார் வானவர் தானவர் வைகலும் மனங்கொ டேத்தும்
அணங்கனா ரூர்தொழு துய்யலாம் மையல்கொண் டஞ்சல் நெஞ்சே. ௩

நீதியால் வாழ்கிலை நாள்செலா நின்றன நித்த நோய்கள்
வாதியா ஆதலால் நாளும்நாள் இன்பமே மருவி னாயே
சாதியார் கின்னரர் தருமனும் வருணனும் ஏத்தும் முக்கண்
ஆதியா ரூர்தொழு துய்யலாம் மையல்கொண் டஞ்சல் நெஞ்சே. ச

பிறவியால் வருவன கேடுள ஆதலாற் பெரிய இன்பத்
துறவியார்க் கல்லது துன்பநீங் காதெனத் தூங்கி னாயே
மறவல்நீ மார்க்கமே நண்ணினாய் தீர்த்தநீர் மல்கு சென்னி
அறவனா ரூர்தொழு துய்யலாம் மையல்கொண் டஞ்சல் நெஞ்சே. ரு

செடிகொள்நோ யாக்கையம் பாம்பின்வாய்த் தேரைவாய்ச் சிறுபறவை
கடிகொள்பூந் தேன்சுவைத் தின்புற லாமென்று கருதி னாயே
முடிகளால் வானவர் முன்பணிந் தன்பரா யேத்தும் முக்கண்
அடிகளா ரூர்தொழு துய்யலாம் மையல்கொண்டஞ்சல் நெஞ்சே. சு

ஏறுமால் யானையே சிவிகையந் தளகமீச் சோப்பி வட்டில்
மாறிவா ழுடம்பினார் படுவதோர் நடலைக்கு மயங்கி னாயே
மாறிலா வனமுலை மங்கையோர் பங்கினர் மதியம் வைத்த
ஆறனா ரூர்தொழு துய்யலாம் மையல்கொண் டஞ்சல் நெஞ்சே. எ

என்பிஞற் கழிநிரைத் திறைச்சிமண் சுவரெறிந் திதுநம் இல்லம்
புன்புலால் நாறுதோல் போர்த்துப்பொல் லாமையான் முகடு கொண்டு
முன்பெலாம் ஒன்பது வாய்தலார் குரம்பையின் மூழ்கிடாதே
அன்பனா ரூர்தொழு துய்யலாம் மையல்கொண் டஞ்சல் நெஞ்சே. ௯

தந்தைதாய் தன்னுடன் தோன்றினார் புத்திரர் தாரமென்னும்
பந்தம்நீங் காதவர்க் குய்ந்துபோக் கில்லெனப் பற்றி னாயே
வெந்தநீ றாடியார் ஆதியார் சோதியார் வேதகீதர்
எந்தையா ரூர்தொழு துய்யலாம் மையல்கொண் டஞ்சல் நெஞ்சே. ௯

நெடியமால் பிரமனும் நீண்டுமண் ணிடந்தின்னம் நேடிக் காணாப்
படியனார் பவளம்போல் உருவனார் பனிவளர் மலையாள் பாக
வடிவனார் மதிபொதி சடையனார் மணியணி கண்டத் தெண்டோள்
அடிகளா ரூர்தொழு துய்யலாம் மையல்கொண் டஞ்சல் நெஞ்சே. ௧௦

பல்லிதழ் மாதவி அல்லிவண் டியாழ்செயுங் காழி யூரன்
நல்லவே நல்லவே சொல்லிய ஞானசம் பந்தன் ஆரூர்
எல்லியம் போதெரி யாடும்எம் ஈசனை யேத்து பாடல்
சொல்லவே வல்லவர் தீதிலர் ஓதநீர் வைய கத்தே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருக்கடவூர்மயானம் - பண் - காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

வரியமறையார் பிறையார் மலையோர்சிலையா வணக்கி
எரியமதில்கள் எய்தார் எறியும்முசலம் உடையார்
கரியமிடறும் உடையார் கடவூர்மயானம் அமர்ந்தார்
பெரியவிடைமேல் வருவா ரவரெம்பெருமான் அடிகளே. ௧

மங்கைமணந்த மார்பர் மழுவாள்வலனொன் றேந்திக்
கங்கைசடையிற் கரந்தார் கடவூர்மயானம் அமர்ந்தார்
செங்கண்வெள்ளே றேறிச் செல்வஞ்செய்யா வருவார்
அங்கையேறிய மறியார் அவரெம்பெருமான் அடிகளே. ௨

ஈடல்இடபம் இசைய ஏறிமழுவொன் றேந்திக்
காடதிடமா வுடையார் கடவூர்மயானம் அமர்ந்தார்

பாடலிசைகொள் கருவி படுதம்பலவும் பயில்வார்
ஆடல்அரவம் உடையார் அவரெம்பெருமான் அடிகளே. ௩

இறைநின்றிலங்கு வளையாள் இளையாளொருபா லுடையார்
மறைநின்றிலங்கு மொழியார் மலையார்மனத்தின் மிசையார்
கறைநின்றிலங்கு பொழில்சூழ் கடவூர்மயானம் அமர்ந்தார்
பிறைநின்றிலங்கு சடையார் அவரெம்பெருமான் அடிகளே. ௪

வெள்ளையெருத்தின் மிசையார் விரிதோடொருகா திலங்கத்
துள்ளும்இளமான் மறியார் சுடர்பொற்சடைகள் துலங்கக்
கள்ளநகுவெண் தலையார் கடவூர்மயானம் அமர்ந்தார்
பிள்ளைமதியம் உடையார் அவரெம்பெருமான் அடிகளே. ௫

பொன்னுந்திரு மணங்கொள் புனைபூங்கொன்றை புனைந்தார்
ஒன்றுவெள்ளே றுயர்த்த துடையாரதுவே யூர்வார்
கன்றுவினஞ்சூழ் புறவிற் கடவூர்மயானம் அமர்ந்தார்
பின்தாழ்சடையார் ஒருவர் அவரெம்பெருமான் அடிகளே. ௬

பாசமான களைவார் பரிவார்க்கமுதம் அனையார்
ஆசைதீரக் கொடுப்பார் அலங்கல்விடைமேல் வருவார்
காசைமலர்போல் மிடற்றார் கடவூர்மயானம் அமர்ந்தார்
பேசவருவார் ஒருவர் அவரெம்பெருமான் அடிகளே. ௭

செற்றஅரக்கன் அலறத் திகழ்சேவடிமெல் விரலாற்
கற்குன்றடர்த்த பெருமான் கடவூர்மயானம் அமர்ந்தார்
மற்றொன் றிணையில் வலிய மாசில்வெள்ளி மலைபோல்
பெற்றொன்றேறி வருவார் அவரெம்பெருமான் அடிகளே. ௮

வருமாகரியின் உரியார் வளர்புன்சடையார் விடையார்
கருமான்உரிதோல் உடையார் கடவூர்மயானம் அமர்ந்தார்
திருமாலொடுநான் முகனுந் தேர்ந்துங்காண முன்னொண்ணுப்
பெருமானெனவும் வருவார் அவரெம்பெருமான் அடிகளே. ௯

தூயவிடைமேல் வருவார் துன்னாருடைய மதில்கள்
காயவேவச் செற்றார் கடவூர்மயானம் அமர்ந்தார்
தீயகருமஞ் சொல்லுஞ் சிறுபுன்தேரர் அமணர்
பேய்பேயென்ன வருவார் அவரெம்பெருமான் அடிகளே. ௧௦

மாவம்பொழில்சூழ் கடவூர் மன்னும்மயானம் அமர்ந்த
அரவம்அசைத்த பெருமான் அகலம்அறிய லாகப்
பாவும்முறையே பயிலும் பந்தன்செஞ்சொல் மாலை
இரவும்பகலும் பரவி நினைவார்வினைகள் இலரே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருவேணுபுரம் - பண் - காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

பூதத்தின் படையினீர் பூங்கொன்றைத் தாரினீர்
ஓதத்தின் ஒலியோடும் உம்பர்வா னவர்புகுந்து
வேதத்தின் இசைபாடி விரைமலர்கள் சொரிந்தேத்தும்
பாதத்ீர் வேணுபுரம் பதியாகக் கொண்டீரே. ௧

சுடுகாடு மேவினீர் துன்னம்பெய் கோவணந்தோல்
உடையாடை யதுகொண்டீர் உமையாளை யொருபாகம்
அடையாளம் அதுகொண்டீர் அங்கையினிற் பரசுஎனும்
படையாள்வீர் வேணுபுரம் பதியாகக் கொண்டீரே. ௨

கங்கைசேர் சடைமுடியீர் காலனைமுன் செற்றுகந்தீர்
திங்களோ டிளஅரவந் திகழ்சென்னி வைத்துகந்தீர்
மங்கையோர் கூறுடையீர் மறையோர்கள் நிறைந்தேத்தப்
பங்கயஞ்சேர் வேணுபுரம் பதியாகக் கொண்டீரே. ௩

நீர்கொண்ட சடைமுடிமேல் நீள்மதியம் பாம்பினொடும்
ஏர்கொண்ட கொன்றையினோ டெழில்மத்தம் இலங்கவே
சீர்கொண்ட மாளிகைமேற் சேயிழையார் வாழ்த்துரைப்பக்
கார்கொண்ட வேணுபுரம் பதியாகக் கலந்தீரே. ௪

ஆலைசேர் தண்கழனி யழகாக நறவுண்டு
சோலைசேர் வண்டினங்கள் இசைபாடத் தூமொழியார்
காலையே புகுந்திறைஞ்சிக் கைதொழமெய் மாதினொடும்
பாலையாழ் வேணுபுரம் பதியாகக் கொண்டீரே. ௫

மணிமல்கு மால்வரைமேல் மாதினொடு மகிழ்ந்திருந்தீர்
துணிமல்கு கோவணத்தீர் சுடுகாட்டில் ஆட்டுகந்தீர்

பணிமல்கு மறையோர்கள் பரிந்திறைஞ்ச வேணுபுரத்
தணிமல்கு கோயிலே கோயிலாக அமர்ந்தீரே. ௬

நீலஞ்சேர் மிடற்றினீர் நீண்டசெஞ் சடையினீர்
கோலஞ்சேர் விடையினீர் கொடுங்காலன் றனைச்செற்றீர்
ஆலஞ்சேர் கழனி யழகார்வேணு புரம்அமருங்
கோலஞ்சேர் கோயிலே கோயிலாக் கொண்டீரே. ௭

இரைமண்டிச் சங்கேறுங் கடல்சூழ்தென் இலங்கையர்கோன்
விரைமண்டு முடிநெரிய விரல்வைத்தீர் வரைதன்னிற்
கரைமண்டிப் பேரோதங் கலந்தெற்றுங் கடற்கவினார்
விரைமண்டு வேணுபுர மேயமர்ந்து மிக்கீரே. ௮

தீயோம்பும் மறைவாணர்க் காதியாம் திசைமுகன்மால்
போயோங்கி யிழிந்தாரும் போற்றரிய திருவடியீர்
பாயோங்கு மரக்கலங்கள் படுதிரையால் மொத்துண்டு
சேயோங்கு வேணுபுரஞ் செழும்பதியாத் திகழ்ந்தீரே. ௯

நிலையார்ந்த வுண்டியினர் நெடுங்குண்டர் சாக்கியர்கள்
புலையானார் அறவுரையைப் போற்றாதுன் பொன்னடியே
நிலையாகப் பேணிநீ சரணென்றார் தமையென்றும்
விலையாக ஆட்கொண்டு வேணுபுரம் விரும்பினையே. ௰, ௧௧

திருச்சிற்றம்பலம்

திருத்தேவூர் - பண் - காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

பண்ணி லாவிய மொழியுமை பங்கனெம் பெருமான்
விண்ணில் வானவர் கோன்விம லன்விடை யூர்தி
தெண்ணி லாமதி தவழ்தரு மாளிகைத் தேவூர்
அண்ணல் சேவடி யடைந்தனம் அல்லலொன் றிலமே. ௧

ஓதி மண்டலத் தோர்முழு தய்யவெற் பேறு
சோதி வானவன் துதிசெய மகிழ்ந்தவன் தூநீர்த்
தீதில் பங்கயந் தெரிவையர் முகம்மலர் தேவூர்
ஆதி சேவடி யடைந்தனம் அல்லலொன் றிலமே. ௨

மறைக ளால்மிக வழிபடு மாணியைக் கொல்வான்
கறுவு கொண்டவக் காலனைக் காய்ந்தவெங் கடவுள்
செறுவில் வாளைகள் சேலவை பொருவயல் தேவூர்
அறவன் சேவடி யடைந்தனம் அல்லலொன் றிலமே. ௩

முத்தன் சில்பலிக் கூர்தொறும் முறைமுறை திரியும்
பித்தன் செஞ்சடைப் பிஞ்ஞகன் தன்னடி யார்கள்
சித்தன் மாளிகை செழுமதி தவழ்பொழில் தேவூர்
அத்தன் சேவடி யடைந்தனம் அல்லலொன் றிலமே. ௪

பாடு வாரிசை பல்பொருட் பயன்உகந் தன்பால்
கூடு வார்துணைக் கொண்டதம் பற்றறப் பற்றித்
தேடு வார்பொரு ளானவன் செறிபொழில் தேவூர்
ஆடு வானடி யடைந்தனம் அல்லலொன் றிலமே. ௫

பொங்கு பூண்முலைப் புரிகுழல் வரிவளைப் பொருப்பின்
மங்கை பங்கினன் கங்கையை வளர்சடை வைத்தான்
திங்கள் சூடிய தீநிறக் கடவுள்தென் தேவூர்
அங்க ணன்றனை யடைந்தனம் அல்லலொன் றிலமே. ௬

வன்பு யத்தவத் தானவர் புரங்களை யெரியத்
தன்பு யத்துறத் தடவரை வளைத்தவன் தக்க
தென்த மிழ்க்கலை தெரிந்தவர் பொருந்திய தேவூர்
அன்பன் சேவடி யடைந்தனம் அல்லலொன் றிலமே. ௭

தருவு யர்ந்தவெற் பெடுத்தஅத் தசமுகன் நெரிந்து
வெருவ வூன்றிய திருவிரல் நெகிழ்த்துவாள் பணித்தான்
தெருவு தோறும்நல் தென்றல்வந் துலவிய தேவூர்
அரவு சூடியை அடைந்தனம் அல்லலொன் றிலமே. ௮

முந்திக் கண்ணனும் நான்முக னும்அவர் காணா
எந்தை திண்டிறல் இருங்களி றுரித்தஎம் பெருமான்
செந்தி னத்திசை யறுபதம் முரல்திருத் தேவூர்
அந்தி வண்ணனை யடைந்தனம் அல்லலொன் றிலமே. ௯

பாறு புத்தரும் தவமணி சமணரும் பலநாள்
கூறி வைத்ததோர் குறியினைப் பிழையெனக் கொண்டு

தேறி மிக்கநஞ் செஞ்சடைக் கடவுள்தென் தேவூர்
ஆறு சூடியை யடைந்தனம் அல்லலொன் றிலமே. ௧௦

அல்ல லின்றிவிண் ணாள்வர்கள் காழியர்க் கதிபன்
நல்ல செந்தமிழ் வல்லவன் ஞானசம் பந்தன்
எல்லை யில்புகழ் மல்கிய எழில்வளர் தேவூர்த்
தொல்லை நம்பனைச் சொல்லிய பத்தும்வல் லாரே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருக்கோச்சைவயம் - பண் - பியந்தைக்காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

நீலநன் மாமிடற்றன் இறைவன் சினத்த நெடுமா வுரித்த நிகரில், சேலன கண்ணிவண்ணம் ஒருகூ றுருக்கொள் திகழ்தேவன் மேவு பதிதான், வேலன கண்ணிமார்கள் விளையாடு மோசை விழ வோசை வேத வொலியின், சாலநல் வேலையோசை தருமாட வீதி கொடியாடு கொச்சை வயமே. ௧

விடையுடை யப்பனொப்பில் நடமாட வல்ல விகிர்தத் துருக் கொள் விமலன், சடையிடை வெள்ளெருக்க மலர்கங்கை திங்கள் தக வைத்த சோதி பதிதான், மடையிடை யன்னமெங்கும் நிறையப் பரந்து கமலத்து வைகும் வயல்சூழ், கொடையுடை வண்கையாளர் மறையோர்க ளென்றும் வளர்கின்ற கொச்சை வயமே. ௨

படஅர வாடுமுன்கை யுடையா னிடும்பை களைவிக்கும் எங்கள் பரமன், இடமுடை வெண் தலைக்கை பலிகொள்ளும் இன்பன் இட மாய வேர்கொள் பதிதான், நடமிட மஞ்ஞை வண்டு மதுவுண்டு பாடு நளிர்சோலை கோலு கனகக், குடமிடு கூடமேறி வளர்பூவை நல்ல மறையோது கொச்சை வயமே. ௩

எண்டிசை பாலரெங்கும் இகலிப் புகுந்து முயல்வித்த சிந்தை முடுகிப், பண்டொளி தீபமாலை யிடுதூப மோடு பணிவுற்ற பாதர் பதி தான், மண்டிய வண்டன்மிண்டி வருநீர பொன்னி வயல்பாய வாளை குழுமிக், குண்டகழ் பாயுமோசை படைநீட தென்ன வளர்கின்ற கொச்சை வயமே. ௪

பனிவளர் மாமலைக்கு மருகன் குபேர ளெடுதோழ மைக்கொள் பகவன், இனியன அல்லவற்றை யினிதாக நல்கும் இறைவன் இடங் கொள் பதிதான், முனிவர்கள்தொக்குமிக்க மறையோர்க ளோமம் வளர் தூம மோடி யணவிக், குனிமதி மூடிநீடும் உயர்வான் மறைத்து நிறை கின்ற கொச்சை வயமே. ரு

புலியதள் கோவணங்கள் உடையாடை யாக வுடையான் நினைக்கு மளவில், நலிதரு முப்புரங்கள் எரிசெய்த நாதன் நலமா இருந்த நகர் தான், கலிகெட அந்தணாளர் கலைமேவு சிந்தை யுடையார் நிறைந்து வளரப், பொலிதரு மண்டபங்கள் உயர்மாட நீடு வரைமேவு கொச்சை வயமே. ௬, எ

மழைமுகில் போலும்மேனி யடல்வா ளரக்கன் முடியோடு தோள் கள் நெரியப், பிழைகெட மாமலர்ப்பொன் அடிவைத்த பேயொ டுட னுடி மேய பதிதான், இழைவள ரல்குல்மாதர் இசைபாடி யாட விடுமூச லன்ன கமுகின், குழைதரு கண்ணிவிண்ணில் வருவார்கள் தங்கள் அடிதேடு கொச்சை வயமே. அ

வண்டமர் பங்கயத்து வளர்வானும் வையம் முழுதுண்ட மாலும் இவலிக், கண்டிட வொண்ணுமென்று கிளறிப் பறந்தும் அறியாத சோதி பதிதான், நண்டுண நாரைசெங்கெல் நடுவே யிருந்து விரை தோ மோது மதுவிற், புண்டரி கங்களோடு குமுதம் மலர்ந்து வயல் மேவு கொச்சை வயமே. ௯

கையினி லுண்டுமேனி யுதிர்மாசர் குண்டர் இடுசீவ ரத்தினுடை யார், மெய்யுரை யாதவண்ணம் விளையாட வல்ல விகிர்தத் திருக்கொள் விமலன், பையுடை நாகவாயில் எயிறூர மிக்க குரவம் பயின்று மல ரச், செய்யினில் நீலமொட்டு விரியக் கமழ்ந்து மணம்நாறு கொச்சை வயமே. ௧௰

இறைவனை ஒப்பிலாத ஒளிமேனி யானை உலகங்க ளேழுமுடனே, மறைதரு வெள்ளமேறி வளர்கோயில் மன்னி இனிதா இருந்த மணியைக், குறைவில ஞானமேவு குளிர்பந்தன் வைத்த தமிழ்மாலை பாடுமவர்போய், அறைகழ லீசனாளும் நகர்மேவி யென்றும் அழகா இருப்ப தறிவே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருநனிபள்ளி - பண் - பியந்தைக்காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

காரைகள் கூகைமுல்லை களவாகை யீகைபடர்தொ டரிகள்ளிகவினிச்
சூரைகள் பம்மிவிம்மு சுடுகா டமர்ந்த சிவன்மேய சோலை நகர்தான்
தேரைக ளாரைசாய மிதிகொள்ள வாளை குதிகொள்ள வள்ளை துவள
நாரைக ளாரல்வாரி வயன்மேதி வைகும் நனிபள்ளி போலும் நமர்காள்.

சடையிடை புக்கொடுங்கி யுளதங்கு வெள்ளம் வளர்திங்கள் கண்ணி அயலே, இடையிடை வைத்ததொக்கு மலர்தொத்து மாலை யிறைவன் இடங்கொள் பதிதான், மடையிடை வாளைபாய முகிழ்வாய் நெரிந்து மணம்நாறும் நீலம் மலரும், நடையுடை யன்னம்வைகு புனலம் படப்பை நனிபள்ளி போலும் நமர்காள். உ

பெறுமலர் கொண்டுதொண்டர் வழிபாடு செய்யல் ஒழிபா டிலாத பெருமான், கறுமலர் கண்டமாக விடமுண்ட காளை யிடமாய காதல் நகர்தான், வெறுமலர் தொட்டுவிட்ட விசைபோன கொம்பின் விடுபோ தலர்ந்த விரைசூழ், நறுமல ரல்லிபுல்லி யொலிவண் டுறங்கு நனிபள்ளி போலும் நமர்காள். ௩

குளிர்தரு கங்கைதங்கு சடைமா டிலங்கு தலைமாலை யோடு குலவி, ஒளிர்தரு திங்கள்சூடி உமைபாக மாக வுடையா னுகந்த நகர்தான், குளிர்தரு கொம்மலோடு குயில்பாடல் கேட்ட பெடைவண்டு தானும் முரல, நளிர்தரு சோலைமாலை நரைகுருகு வைகு நனிபள்ளி போலும் நமர்காள். ௪

தோடொரு காதனுகி யொருகா திலங்கு சுரிசங்கு நின்று புரளக்
காடிட மாகநின்று கனலாடும் எந்தை யிடமாய காதல் நகர்தான் [ல்
வீடுடன் எய்துவார்கள் விதியென்று சென்று வெறிநீர்தெளிப்ப விரலா
நாடுடனாடுசெம்மை யொலிவெள்ள மாரு நனிபள்ளி போலும்நமர்காள்.

மேகமொ டோடுதிங்கள் மலரா அணிந்து மலையான் மடந்தை மணிபொன், ஆகமொர் பாகமாக அனலாடும் எந்தை பெருமான் அமர்ந்த நகர்தான், ஊகமொ டாடுமந்தி யுகளுஞ் சிலம்ப அகிலுந்தி யொண்பொன் இடறி, நாகமொ டாரம்வாரு புனல்வந் தலைக்கும் நனி பள்ளி போலும் நமர்காள். ௬

நகைமலி தண்டுருவம் அனலுமிழு நாகங் கொடுகொட்டி வீணை முரல, வகைமலி வன்னிகொன்றை மதமத்தம் வைத்த பெருமான் உகந்த நகர்தான், புகைமலி கந்தமாலை புனைவார்கள் பூசல் பணிவார்கள் பாடல் பெருகி, நகைமலி முத்திலங்கு மணல்சூழ் கிடக்கை நனி பள்ளி போலும் நமர்காள். எ

வலம்மிகு வாளன்வேலன் வளைவா ளெயிற்று மதியா அரக்கன் வலியோ, டுலம்மிகு தோள்கள்ஒல்க விரலா லடர்த்த பெருமான் உகந்த நகர்தான், நிலமிகு கீழும்மேலும் நிகராது மில்லை யெனநின்ற நீதி யதனை, நலம்மிகு தொண்டர்நாளும் அடிபரவல் செய்யும் நனிபள்ளி போலும் நமர்காள். அ

கிறவுரு வொன்றுதோன்றி யெரியொன்றி நின்ற தொருநீர்மை சீர்மை நினையார், அறவுரு வேதநாவன் அயனோடு மாலும் அறியாத அண்ணல் நகர்தான், புறவிரி முல்லைமௌவல் குளிர்பிண்டி புன்னை புனைகொன்றை துன்று பொதுளி, நறவுரி போதுதாது புதுவாசம் நாறும் நனிபள்ளி போலும் நமர்காள். கூ

அனமிகு செல்குசோறு கொணர்கென்று கையில் இடவுண்டு பட்ட அமணும், மனமிகு கஞ்சிமண்டை யதிலுண்டு தொண்டர் குண மின்றி நின்ற வடிவும், வினைமிகு வேதநான்கும் விரிவித்த நாவின் விடையான் உகந்த நகர்தான், நனமிகு தொண்டர்நாளும் அடிபரவல் செய்யும் நனிபள்ளி போலும் நமர்காள். ௧௦

கடல்வரை யோதம்மல்கு கழிகானல் பானல் கமழ்காழி யென்று கருதப், படுபொரு ளாறுநாலும் உளதாக வைத்த பதியான ஞான முனிவன், இடுபறை யொன்றஅத்தர் பியன்மே லிருந்தின் இசையா லுரைத்த பனுவல், நடுவிரு ளாடுமெந்தை நனிபள்ளி யுள்க வினை கெடுத லாணை நமதே. ௧௧

திருச்சிற்றம்பலம்

பொது - பண் - பியந்தைக்காந்தாரம்

கோளறு திருப்பதிகம்

திருச்சிற்றம்பலம்

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன் மிகநல்ல வீணை தடவி, மாசறு திங்கள்கங்கை முடிமே லணிந்தென் உளமே புகுந்த அதனால், ஞாயிறு திங்கள்செவ்வாய் புதன்வியாழன் வெள்ளி சனிபாம் பிரண்டு முடனே, ஆசறு நல்லநல்ல அவைநல்ல நல்ல அடியா ரவர்க்கு மிகவே. க

என்பொடு கொம்பொடாமை யிவைமார் பிலங்க எருதேறி யேழை யுடனே, பொன்பொதி மத்தமாலை புனல்சூடி வந்தென் உளமே புகுந்த அதனால், ஒன்பதொ டொன்றொடேழு பதினெட் டொடாறும் உடனாய நாள்க ளவைதாம், அன்பொடு நல்லநல்ல அவை நல்ல நல்ல அடியா ரவர்க்கு மிகவே. உ

உருவளர் பவளமேனி ஒளிநீ றணிந்து உமையோடும் வெள்ளை விடைமேல், முருகலர் கொன்றைதிங்கள் முடிமே லணிந்தென் உளமே புகுந்த அதனால், திருமகள் கலையதூர்தி செயமாது பூமி திசைதெய்வ மான பலவும், அருநெதி நல்லநல்ல அவைநல்ல நல்ல அடியா ரவர்க்கு மிகவே. ௩

மதிநுதல் மங்கையோடு வடபா லிருந்து மறையோதும் எங்கள் பரமன், நதியொடு கொன்றைமாலை முடிமே லணிந்தென் உளமே புகுந்த அதனால், கொதியுறு காலனங்கி நமனோடு தூதர் கொடுநோய்க ளான பலவும். அதிகுணம் நல்லநல்ல அவைநல்ல நல்ல அடியா ரவர்க்கு மிகவே. ௪

நஞ்சணி கண்டன்எந்தை மடவாள்த னோடும் விடையேறு நங்கள் பரமன், துஞ்சிருள் வன்னிகொன்றை முடிமே லணிந்தென் உளமே புகுந்த அதனால், வெஞ்சின அவுணரோடும் உருமிடியும் மின்னும் மிகையான பூத மவையும், அஞ்சிடும் நல்லநல்ல அவைநல்ல நல்ல அடியா ரவர்க்கு மிகவே. ௫

வாள்வரிய தளதாடை வரிகோ வணத்தர் மடவாள் தனோடும் உட னாய், நாண்மலர் வன்னிகொன்றை நதிசூடி வந்தென் உளமே புகுந்த

அதனால், கோளரி யுழுவையோடு கொலை யானை கேழல் கொடுநாக மோடு கரடி, ஆளரி நல்லநல்ல அவைநல்ல நல்ல அடியா ரவர்க்கு மிகவே. ௬

செப்பிள முலைநன்மங்கை யொருபாக மாக விடையேறு செல்வ னடைவார், ஒப்பிள மதியும் அப்பும் முடிமே லணிந்தென் உளமே புகுந்த அதனால்,வெப்பொடு குளிரும்வாதம் மிகையான பித்தும் வினை யான வந்து நலியா, அப்படி நல்லநல்ல அவைநல்ல நல்ல அடியா ரவர்க்கு மிகவே. ௭

வேள்பட விழிசெய்தன்று விடைமே லிருந்து மடவாள் தனோடும் உடனாய், வாண்மதி வன்னிகொன்றை மலர்சூடி வந்தென் உளமே புகுந்த அதனால், ஏழ்கடல் சூழிலங்கை அரையன்ற னோடும் இடரான வந்து நலியா, ஆழ்கடல் நல்ல நல்ல அவைநல்ல நல்ல அடியா ரவர்க்கு மிகவே. ௮

பலபல வேடமாகும் பரனாரி பாகன் பசுவேறும் எங்கள் பரமன்
சலமக ளோடெருக்கும் முடிமே லணிந்தென் உளமே புகுந்த அதனால்
மலர்மிசை யோனும்மாலும் மறையோடு தேவர் வருகால மானபலவும்
அலைகடல் மேருநல்ல அவைநல்ல நல்ல அடியா ரவர்க்கு மிகவே. ௯

கொத்தலர் குழலியோடு விசையற்கு நல்கு குணமாய வேட விகிர்தன்
மத்தமு மதியுநாகம் முடிமே லணிந்தென் உளமே புகுந்த அதனால்[மே
புத்தரொ டமணைவாதில் அழிவிக்கும் அண்ணல்திருநீறுசெம்மைதிட
அத்தகு நல்லநல்ல அவைநல்ல நல்ல அடியா ரவர்க்கு மிகவே. ௰

தேனமர் பொழில்கொளாலை விளைசெந்நெல் துன்னி வளர்செம் பொன் எங்கும் நிகழ, நான்முகன் ஆதியாய பிரமா புரத்து மறைஞான ஞான முனிவன், தானுறு கோளும்நாளும் அடியாரை வந்து நலியாத வண்ணம் உரைசெய், ஆனசொல் மாலையோதும் அடியார்கள் வானில் அரசாள்வர் ஆணை நமதே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருநாரையூர் - பண் - பியந்தைக்காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

உரையினில் வந்தபாவம் உணர்நோய்க ளும்மசெயல்தீங்கு குற்ற முலகில், வரையினி லாமைசெய்த அவைதீரும் வண்ணம் மிகவேத்தி நித்தம் நினைமின், வரைசிலை யாகஅன்று மதில்மூன் றெரித்து வளர் கங்குல் நங்கை வெருவத், திரையொலி நஞ்சமுண்ட சிவன்மேய செல்வத் திருநாரை யூர்கை தொழவே. க

ஊனடை கின்றகுற்றம் முதலாகி யுற்ற பிணிநோ யொருங்கும் உயரும், வானடை கின்றவெள்ளை மதிசூடு சென்னி விதியான வேத விகிர்தன், கானிடை யாடிபூதப் படையான் இயங்கு விடையான் இலங்கு முடிமேல், தேனடை வண்டுபாடு சடையண்ணல் நண்ணு திருநாரை யூர்கை தொழவே. உ

ஊரிடை நின்றுவாழும் உயிர்செற்ற காலன் துயருற்ற தீங்கு விரவிப், பாரிடை மெள்ளவந்து பழியுற்ற வார்த்தை யொழிவுற்ற வண்ண மகலும், போரிடை யன்றுமூன்று மதிலெய்த ஞான்று புகழ் வானு ளோர்கள் புணரும், தேரிடை நின்ற எந்தை பெருமா னிருந்த திருநாரை யூர்கை தொழவே. ங

தீயுற வாயஆக்கை யதுபற்றி வாழும் வினைசெற்ற வுற்ற வுல கின், தாயுறு தன்மையாய தலைவன்றன் நாமம் நிலையாக நின்று மருவும், பேயுற வாயகானில் நடமாடி கோல விடமுண்ட கண்டன் முடிமேல், தேய்பிறை வைத்துகந்த சிவன்மேய செல்வத்திருநாரை யூர் கைதொழவே. ச

வசையப ராதமாய வுவரோதம் நீங்குந் தவமாய தன்மை வரும் வான், மிசையவ ராதியாய திருமார் பிலங்கு விரிநூலர் விண்ணும் நில னும், இசையவ ராசிசொல்ல இமையோர்க ளேத்தி யமையாத காத லொடுசேர், திசையவர் போற்றநின்ற சிவன்மேய செல்வத் திரு நாரை யூர்கை தொழவே. ரு

உறைவள ரூன்நிலாய வுயிர்நிற்கும் வண்ணம் உணர்வாக்கும் உண்மை யுலகில், குறைவுள வாகிநின்ற குறைதீர்க்கு நெஞ்சில் நிறை வாற்று நேசம் வளரும், மறைவளர் நாவன்மாவின் உரிபோர்த்த மெய்

யன் அரவார்த்த அண்ணல் கழலே, திறைவளர் தேவர் தொண்டின் அருள்பேண நின்ற திருநாரை யூர்கை தொழவே. ௬

தனம்வரும் நன்மையாகுந் தகுதிக் குழந்து வருதிக் குழன்ற வுடலின், இனம்வள ரைவர்செய்யும் வினயங்கள் செற்று நினைவொன்று சிந்தை பெருகும், முனமொரு காலம்மூன்று புரம்வெந்து மங்கச் சரமுன் றெரிந்த அவுணர், சினமொரு காலழித்த சிவன்மேய செல்வத் திருநாரை யூர்கை தொழவே. ௭

உருவரை கின்றநாளில் உயிர்கொள்ளுங் கூற்றம் நனியஞ்சு மாதவுறநீர், மருமலர் தூவியென்றும் வழிபாடு செய்ம்மின் இழிபா டிலாத கடலின், அருவரை சூழிலங்கை யரையன்றன் வீரம் அழியத் தடக்கை முடிகள், திருவிரல் வைத்துகந்த சிவன்மேய செல்வத் திருநாரை யூர்கை தொழவே. ௮

வேறுயர் வாழ்வுதன்மை வினைதுக்கம் மிக்க பகைதீர்க்கு மேய வுடலில், தேறிய சிந்தைவாய்மை தெளிவிக்க நின்ற கரவைக் கரந்து திகழும், சேறுயர் பூவின்மேய பெருமானும் மற்றைத் திருமாலும் நேட எரியாய்ச், சிறிய செம்மையாகுஞ் சிவன்மேய செல்வத் திருநாரை யூர்கை தொழவே. ௯

மிடைபடு துன்பம்இன்பம் உளதாக்கும் உள்ளம் வெளியாக்கு முன்னி புணரும், படையொரு கையிலேந்திப் பலிகொள்ளும் வண்ணம் ஒலிபாடி யாடி பெருமை, உடையினை விட்டுளோரும் உடல்போர்த்து ளோரும் உரைமாயும் வண்ணம் அழியச், செடிபட வைத்துகந்த சிவன்மேய செல்வத் திருநாரை யூர்கை தொழவே. ௧௦

எரியொரு வண்ணமாய வுருவானை யெந்தை பெருமானை யுள்கி நினையார், திரிபுர மன்றுசெற்ற சிவன்மேய செல்வத் திருநாரை யூர்கை தொழுவான், பொருபுனல் சூழ்ந்தகாழி மறைஞான பந்தன் உரைமாலை பத்தும் மொழிவார், திருவளர் செம்மையாகி யருள்பேறு மிக்க துளதென்பர் செம்மை யினரே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருநறையூர்ச்சித்தீச்சரம் - பண் - பியந்தைக்காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

நேரிய னாகுமல்ல னொருபாலு மேனி யரியான்மு னாய வொளியான்
நீரியல் காலுமாகி நிறைவானு மாகி யுறுதியு மாய நிமலன்
ஊரியல் பிச்சைபேணி யுலகங்க ளேத்த நல்குண்டு பண்டு சுடலை
நாரியொர் பாகமாக நடமாட வல்ல நறையூ ரின்நம்ப னவனே. க

இடமயி லன்னசாயல் மடமங்கை தன்கை யெதிர்நாணி பூண அரையில், கடம்அயி லம்புகோத்து எயில்செற் றுகந்து அமரர்க் களித்த தலைவன், மடமயில் ஊர்திதாதை யெனநின்று தொண்டர் மனநின்ற மைந்தன் மருவும், நடம்மயி லாலநீடு குயில்கூவு சோலை நறையூரின் நம்ப னவனே. உ

சூடக முன்கைமங்கை யொருபாக மாக அருள்கார ணங்கள் வருவான்
ஈடக மானநோக்கி யிடுபிச்சை கொண்டு படுபிச்ச னென்று பரவத்
தோடக மாயொர்காதும் ஒருகா திலங்கு குழைதாய வேழ வுரியன்
நாடக மாகவாடி மடவார்கள்பாடும் நறையூரின் நம்பனவனே. ங

சாயல்நன் மாதொர்பாகன் விதியாய சோதி கதியாக நின்ற கடவுள், ஆயக மென்னுள்வந்த அருளாய செல்வன் இருளாய கண்டன் அவனித், தாயென நின்றுகந்த தலைவன் விரும்பு மலையின்கண் வந்து தொழுவார், நாயக னென்றிறைஞ்சி மறையோர்கள் பேணும் நறையூரின் நம்ப னவனே. ச

நெதிபடு மெய்யெம்ஐயன் நிறைசோலை சுற்றி நிகழம் பலத்தின் நடுவே, அதிர்பட ஆடவல்ல அமரர்க் கொருத்தன் எமர்சுற்ற மாய இறைவன், மதிபடு சென்னிமன்னு சடைதாழ வந்து விடையேறி யில்பலி கொள்வான், நதிபட வுந்திவந்து வயல்வாளை பாயும் நறையூரின் நம்ப னவனே. ரு

கணிகையொர் சென்னிமன்னு மதுவன்னி கொன்றை மலர்துன்று செஞ்சடை யினன், பணிகையின் முன்னிலங்க வருவேட மன்னு பலவாகி நின்ற பரமன், அணுகிய வேதவோசை யகலங்கம் ஆறின் பொருளான ஆதி யருளான், நணுகிய தொண்டர்கூடி மலர்தூவி யேத்து நறையூரின் நம்ப னவனே. சு

ஒளிர்தரு கின்றமேனி யுருவெங்கு மங்க மவையார ஆட லரவம், மிளிர்தரு கையிலங்க அனலேந்தி யாடும் விகிர்தன் விடங்கொள் மிடறன், துளிதரு சோலையாலை தொழில்மேவ வேதம் எழிலார வென்றி யருளும், நளிர்மதி சேருமாடம் மடவார்க ளாரும் நறையூரின் நம்ப னவனே. ௭

அடலெரு தேறுகந்த அதிருங்கழற்கள் எதிருஞ் சிலம்பொ டிசையக், கடலிடை நஞ்சமுண்டு கனிவுற்ற கண்டன் முனிவுற் றிலங்கை யரையன், உடலொடு தோளனைத்து முடிபத் திறுத்தும் இசைகேட் டிரங்கி யொருவாள், நடலைகள் தீர்த்து நல்கி நமையாள வல்ல நறையூரின் நம்ப னவனே. ௮

குலமலர் மேவினானும் மிகுமாய னாலும் எதிர்கூடி நேடி நினைவுற், றிலபல எய்தொணாமை யெரியா யுயர்ந்த பெரியா னிலங்கு சடையன், சிலபல தொண்டர்நின்று பெருமைக்கள் பேச வருமைத் திகழ்ந்த பொழிலின், நலமலர் சிந்தவாச மணநாறு வீதி நறையூரின் நம்ப னவனே. ௯

துவருறு கின்றஆடை யுடல்போர்த் துழன்ற வவர்தாமும் அல்ல சமணும், கவருறு சிந்தையாள ருரைநீத் துகந்த பெருமான் பிறங்கு சடையன், தவமலி பத்தர் சித்தர் மறையாளர் பேண முறைமாதர் பாடி மருவும், நவமணி துன்றுகோயில் ஒளிபொன்செய் மாட நறையூரின் நம்ப னவனே. ௧௦

கான லுலாவியோதம் எதிர்மல்கு காழி மிகுபந்தன் முந்தியுணரா
ஞான முலாவுசிந்தை யடிவைத் துகந்த நறையூரின்நம்ப னவனை
ஈனமி லாதவண்ணம் இசையா லுரைத்த தமிழ்மாலை பத்தும் நினைவார்
வானம் நிலாவவல்லர் நிலமெங்கு நின்று வழிபாடு செய்யு மிகவே. ௧௧

திருச்சிற்றம்பலம்

தென்திருமுல்லைவாயில் - பண் - பியந்தைக்காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

துளிமண்டி யுண்டு நிறம்வந்த கண்டன் நடமன்னு துன்னு
சுடரோன், ஒளிமண்டி யும்பருலகங் கடந்த உமைபங்கன் எங்க ளர
னூர், களிமண்டு சோலை கழனிக் கலந்த கமலங்கள்தங்குமதுவில்,
தெளிமண்டி யுண்டு சிறைவண்டு பாடுந் திருமுல்லை வாயி லிதுவே. க

பருவத்தில் வந்து பயனுற்ற பண்பன் அயனைப் படைத்த பரமன்
அரவத் தொடங்க மவைகட்டி யெங்கு மரவிக்க நின்ற அரனூர் [த்
உருவத்தின் மிக்க வொளிர்சங்கொ டிப்பி யவையோத மோத வெருவி
தெருவத்தில் வந்து செழுமுத் தலைக்கொள் திருமுல்லை வாயிலிதுவே.

வாராத நாடன் வருவார்தம் வில்லின் உருமெல்கி நாளும் உருகில்
ஆராத இன்பன் அகலாத அன்பன் அருள்மேவி நின்ற அரனூர்
பேராத சோதி பிரியாத மார்பின் அலர்மேவு பேதை பிரியாள்
தீராத காத னெதிநேர நீடு திருமுல்லை வாயி லிதுவே. ௩

ஒன்றொன்றொ டொன்றும் ஒருநான்கொ டைந்தும் இரு
மூன்றொ டேழு முடனாய், அன்றின்றொ டென்றும் அறிவானவர்க்
கும் அறியாமை நின்ற அரனூர், குன்றொன்றொ டொன்று குலை
யொன்றொ டொன்று கொடியொன்றொ டொன்று குழுமிச், சென்
றொன்றொ டொன்று செறிவால் நிறைந்த திருமுல்லை வாயி லிதுவே.

கொம்பன்ன மின்னின் இடையாளொர் கூறன் விடைநாளும்
ஏறு குழகன், நம்பன்னெம் அன்பன் மறைநாவன் வானின் மதியேறு
சென்னி யரனூர், அம்பன்ன வொண்க ணவரா டரங்கின் அணிகோ
புரங்க ளழகார், செம்பொன்ன செவ்வி தருமாடம் நீடு திருமுல்லை
வாயிலி துவே. ௫

ஊனேறு வேலின் உருவேறு கண்ணி யொளியேறு கொண்ட
வொருவன், ஆனேற தேறி யழகேறு நீறன் அரவேறு பூணும் அர
னூர், மானேறு கொல்லை மயிலேறி வந்து குயிலேறு சோலை மருவித்,
தேனேறு மாவின் வளமேறி யாடு திருமுல்லை வாயி லிதுவே. ௬

நெஞ்சார நீடு நினைவாரை மூடு வினைதேய நின்ற நிமலன்
அஞ்சாடு சென்னி அரவாடு கையன் அனலாடு மேனி அரனூர்

மஞ்சாரு மாடம் மனைதோறும் ஐயம் உளதென்று வைகி வரினுஞ்
செஞ்சாலி நெல்லின் வளர்சோ றளிக்கொள் திருமுல்லை வாயி லிதுவே.

வரைவந் தெடுத்த வலிவா ளரக்கன் முடிபத்து மிற்று நெரிய
உரைவந்த பொன்னின் உருவந்த மேனி உமைபங்கன் எங்க ளரனூர்
வரைவந்த சந்தொ டகிலுந்தி வந்து மிளிர்கின்ற பொன்னி வடபால்
திரைவந்து வந்து செறிதேற லாடு திருமுல்லை வாயி லிதுவே. அ

மேலோடி நீடு விளையாடல் மேவு விரிநூலன் வேத முதல்வன்
பாலாடு மேனி கரியானு முன்னி யவர்தேட நின்ற பரனூர்
காலாடு நீல மலர்துன்றி நின்ற கதிரேறு செந்நெல் வயலிற்
சேலோடு வாளை குதிகொள்ள மல்கு திருமுல்லை வாயி லிதுவே. கூ

பனைமல்கு திண்கை மதம்மா வுரித்த பரமன்ன நம்பன் அடியே
நினைவன்ன சிந்தை யடையாத தேரர் அமண்மாய நின்ற அரனூர்
வனம்மல்கு கைதை வகுளங்க ளெங்கு முகுளங்க ளெங்கு நெரியச்
சினைமல்கு புன்னை திகழ்வாசம் நாறு திருமுல்லை வாயி லிதுவே. க0

அணிகொண்ட கோதை யவள்நன்று மேத்த அருள்செய்த எந்தை மருவார், திணிகொண்ட மூன்று புரமெய்த வில்லி திருமுல்லை வாயி லிதன்மேல், தணிகொண்ட சிந்தை யவர்காழி ஞான மிகுபந்தன் ஒண்த மிழ்களின், அணிகொண்ட பத்தும் இசைபாடு பத்தர் அகல் வானம் ஆள்வர் மிகவே. கக

திருச்சிற்றம்பலம்

திருக்கோச்சைவயம் - பண் - பியந்தைக்காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

அறையும் பூம்புன லோடும் ஆடர வச்சடை தன்மேற்
பிறையுஞ் சூடுவர் மார்பிற் பெண்ணொரு பாகம் அமர்ந்தார்
மறையின் ஒல்லொலி யோவா மந்திர வேள்வி யறாத
குறைவில் அந்தணர் வாழுங் கொச்சை வயம்அமர்ந் தாரே. க

சுண்ணத் தர்தோ லொடு நூல்சேர் மார்பினர் துன்னிய பூதக்
கண்ணத் தர்வெங்கன லேந்திக் கங்குல்நின் றாடுவர் கேடில்

எண்ணத்தர் கேள்விநல் வேள்வி யருதவர் மாலெரி யோம்பும்
வண்ணத்த அந்தணர் வாழுங் கொச்சை வயம்அமர்ந் தாரே. ௨

பாலை யன்னவெண் ணீறு பூசுவர் பல்சடை தாழ
மாலை யாடுவர் கீதம் மாமறை பாடுதல் மகிழ்வர்
வேலை மால்கடல் ஓதம் வெண்திரை கரைமிசை விளங்குங்
கோல மாமணி சிந்துங் கொச்சை வயம்அமர்ந் தாரே. ௩

கடிகொள் கூவிளம் மத்தங் கமழ்சடை நெடுமுடிக் கணிவர்
பொடிகள் பூசிய மார்பிற் புனைவர்நன் மங்கையோர் பங்கர்
கடிகொள் நீடொலி சங்கின் ஒலியொடு கலையொலி துதைந்து
கொடிகள் ஓங்கிய மாடக் கொச்சை வயம்அமர்ந் தாரே. ௪

ஆடன் மாமதி யுடையா ராயின பாரிடஞ் சூழ
வாடல் வெண்தலை யேந்தி வையகம் இடுபலிக் குழல்வார்
ஆடல் மாமட மஞ்ஞை அணிதிகழ் பேடையோ டாடிக்
கூடு தண்பொழில் சூழ்ந்த கொச்சை வயம்அமர்ந் தாரே. ௫

மண்டு கங்கையும் அரவும் மல்கிய வளர்சடை தன்மேல்
துண்ட வெண்பிறை யணிவர் தொல்வரை வில்லது வாக
விண்ட தானவர் அரணம் வெவ்வழல் எரிகொள விடைமேல்
கொண்ட கோலம துடையார் கொச்சை வயம்அமர்ந் தாரே. ௬, ௭

அன்றவ் ஆல்நிழல் அமர்ந்து அறவுரை நால்வர்க் கருளிப்
பொன்றி னார்தலை யோட்டில் உண்பது பொருகடல் இலங்கை
வென்றி வேந்தனை யொல்க வூன்றிய விரலினர் வான்தோய்
குன்ற மன்னபொன் மாடக் கொச்சை வயம்அமர்ந் தாரே. ௮

சீர்கொள் மாமல ரானுஞ் செங்கண்மால் என்றிவ ரேத்த
ஏர்கொள் வெவ்வழ லாகி யெங்கும் உறநிமிர்ந் தாரும்
பார்கொள் விண்ணழல் கால்நீர்ப் பண்பினர் பால்மொழி யோடுங்
கூர்கொள் வேல்வலன் ஏந்திக் கொச்சை வயம்அமர்ந் தாரே. ௯

குண்டர் வண்துவ ராடை போர்த்ததோர் கொள்கையி னார்கள்
மிண்டர் பேசிய பேச்சு மெய்யல மையணி கண்டன்
பண்டை நம்வினை தீர்க்கும் பண்பின ரொண்கொடி யோடுங்
கொண்டல் சேர்மணி மாடக் கொச்சை வயம்அமர்ந் தாரே. ௧0

கொந்த ணிபொழில் சூழ்ந்த கொச்சை வயநகர் மேய
அந்த ணன்அடி யேத்தும் அருமறை ஞானசம் பந்தன்
சந்த மார்ந்தழ காய தண்தமிழ் மாலைவல் லோர்போய்
முந்தி வானவ ரோடும் புகவலர் முனைகெட வினையே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருநெல்வாயிலரத்துறை - பண் - பியந்தைக்காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

எந்தை யீசனெம் பெருமான் ஏறமர் கடவுளென் றேத்திச்
சிந்தை செய்பவர்க் கல்லாற் சென்றுகை கூடுவ தன்றால்
கந்த மாமல ருந்திக் கடும்புனல் நிவாமல்கு கரைமேல்
அந்தண் சோலைநெல் வாயில் அரத்துறை யடிகள்தம் அருளே. ௧

ஈர வார்சடை தன்மேல் இளம்பிறை யணிந்தஎம் பெருமான்
சீருஞ் செல்வமும் ஏத்தாச் சிதடர்கள் தொழச்செல்வ தன்றால்
வாரி மாமல ருந்தி வருபுனல் நிவாமல்கு கரைமேல்
ஆருஞ் சோலைநெல் வாயில் அரத்துறை யடிகள்தம் அருளே. ௨

பிணி கலந்தபுன் சடைமேற் பிறையணி சிவனெனப் பேணிப்
பணி கலந்துசெய் யாத பாவிகள் தொழச்செல்வ தன்றால்
மணி கலந்துபொன் னுந்தி வருபுனல் நிவாமல்கு கரைமேல்
அணி கலந்தநெல் வாயில் அரத்துறை யடிகள்தம் அருளே. ௩

துன்ன ஆடையொன் றுடுத்துத் தூயவெண் ணீற்றின ராகி
உன்னி நைபவர்க் கல்லால் ஒன்றுங்கை கூடுவ தன்றால்
பொன்னும் மாமணி யுந்திப் பொருபுனல் நிவாமல்கு கரைமேல்
அன்ன மாருநெல் வாயில் அரத்துறை யடிகள்தம் அருளே. ௪

வெருகு ரிஞ்சுவெங் காட்டில் ஆடிய விமலனென் றுள்கி
உருகி நைபவர்க் கல்லால் ஒன்றுங்கை கூடுவ தன்றால்
முருகு ரிஞ்சுபூஞ் சோலை மொய்ம்மலர் சுமந்திழி நிவாவந்
தருகு ரிஞ்சுநெல் வாயில் அரத்துறை யடிகள்தம் அருளே. ௫

உரவு நீர்ச்சடைக் கரந்த வொருவனென் றுள்குளிர்ந் தேத்திப்
பரவி நைபவர்க் கல்லாற் பரிந்துகை கூடுவ தன்றால்

குரவம் நீடுயர் சோலைக் குளிர்புனல் நிவாமல்கு கரைமேல்
அரவ மாரு நெல்வாயில் அரத்துறை யடிகள்தம் அருளே. ௬

நீல மாமணி மிடற்று நீறணி சிவனெனப் பேணும்
சீல மாந்தர்கட் கல்லாற் சென்றுகை கூடுவ தன்றால்
கோல மாமல ருந்திக் குளிர்புனல் நிவாமல்கு கரைமேல்
ஆலுஞ் சோலை நெல்வாயில் அரத்துறை யடிகள்தம் அருளே. ௭

செழுந்தண் மால்வரை யெடுத்த செருவலி இராவணன் அலற
அழுந்த வூன்றிய விரலான் போற்றியென் பார்க்கல்ல தருளான்
கொழுங்க னிசுமந் துந்திக் குளிர்புனல் நிவாமல்கு கரைமேல்
அழுந்துஞ் சோலை நெல்வாயில் அரத்துறை யடிகள்தம் அருளே. ௮

நுணங்கு நூலயன் மாலும் இருவரும் நோக்கரி யானை
வணங்கி நைபவர்க் கல்லால் வந்துகை கூடுவ தன்றால்
மணங்க மழ்ந்துபொன் னுந்தி வருபுனல் நிவாமல்கு கரைமேல்
அணங்குஞ் சோலை நெல்வாயில் அரத்துறை யடிகள்தம் அருளே. ௯

சாக்கி யப்படு வாருஞ் சமண்படு வார்களும் மற்றும்
பாக்கி யப்பட கில்லாப் பாவிகள் தொழச்செல்வ தன்றால்
பூக்க மழ்ந்துபொன் னுந்திப் பொருபுனல் நிவாமல்கு கரைமேல்
ஆர்க்குஞ் சோலை நெல்வாயில் அரத்துறை யடிகள்தம் அருளே. ௧0

கறையி னார்பொழில் சூழ்ந்த காழியுள் ஞானசம் பந்தன்
அறையும் பூம்புனல் பரந்த அரத்துறை யடிகள்தம் அருளை
முறைமை யாற்சொன்ன பாடல் மொழியும் மாந்தர்தம் வினைபோய்ப்
பறையும் ஐயுற வில்லைப் பாட்டிவை பத்தும் வல்லார்க்கே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருமறைக்காடு - பண் - பியந்தைக்காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

பொங்கு வெண்மணற் கானற் பொருகடல் திரைதவழ் முத்தம்
கங்கு லாரிருள் போழுங் கலிமறைக் காடமர்ந் தார்தாம்
திங்கள் சூடின ரேனுந் திரிபுரம் எரித்தன ரேனும்
எங்கும் எங்கள் பிரானார் புகழல திகழ்பழி யிலரே. ௧

கூனி ளம்பிறை சூடிக் கொடுவரித் தோலுடை யாடை
ஆனி லங்கிள ரைந்தும் ஆடுவர் பூண்பதும் அரவம்
கான லங்கழி யோதங் கரையொடு கதிர்மணி ததும்பத்
தேன்ந லங்கமழ் சோலைத் திருமறைக் காடமர்ந் தாரே. ௨

நுண்ணி தாய்வெளி தாகி நூல்கிடந் திலங்குபொன் மார்பில்
பண்ணி யாழென முரலும் பணிமொழி யுமையொரு பாகன்
தண்ணி தாயவெள் ளருவி சலசல நுரைமணி ததும்பக்
கண்ணி தானுமோர் பிறையார் கலிமறைக் காடமர்ந் தாரே. ௩

ஏழை வெண்குரு கயலே யிளம்பெடை தனதெனக் கருதித்
தாழை வெண்மடற் புல்குந் தண்மறைக் காடமர்ந் தார்தாம்
மாழை யங்கய லொண்கண் மலைமகள் கணவன தடியின்
நீழ லேசர ணாக நினைபவர் வினைநலி விலரே. ௪

அரவம் வீக்கிய அரையும் அதிர்கழல் தழுவிய அடியும்
பரவ நாஞ்செய்த பாவம் பறைதர அருள்பவர் பதிதான்
மரவ நீடுயர் சோலை மழலைவண் டியாழ்செயும் மறைக்காட்
டிரவும் எல்லியும் பகலும் ஏத்துதல் குணமென லாமே. ௫

பல்லி லோடுகை யேந்திப் பாடியும் ஆடியும் பலிதேர்
அல்லல் வாழ்க்கைய ரேனும் அழகிய தறிவரோம் அடிகள்
புல்லம் ஏறுவர் பூதம் புடைசெல வுழிதர்வர்க் கிடமாம்
மல்கு வெண்டிரை யோத மாமறைக் காடது தானே. ௬

நாகந் தான்கயி றாக வரைவரை யதற்குமத் தாகப்
பாகந் தேவரொ டசுரர் படுகடல் அளறெழக் கடைய
வேக நஞ்செழ ஆங்கே வெருவொடும் இரிந்தெங்கும் ஓட
ஆகந் தன்னில்வைத் தமிர்தம் ஆக்குவித் தான்மறைக் காடே. ௭

தக்கன் வேள்வியைத் தகர்த்தோன் தனதொரு பெருமையை ஓரான்
மிக்கு மேற்சென்று மலையை யெடுத்தலும் மலைமகள் நடுங்க
நக்குத் தன்திரு விரலால் ஊன்றலும் நடுநடுத் தரக்கன்
பக்க வாயும்விட் டலறப் பரிந்தவன் பதிமறைக் காடே. ௮

விண்ட மாமல ரோனும் விளங்கொளி யரவணை யானும்
பண்டுங் காண்பரி தாய பரிசினன் அவனுறை பதிதான்

கண்ட லங்கழி யோதங் கரையொடு கதிர்மணி ததும்ப
வண்ட லங்கமழ் சோலை மாமறைக் காடது தானே. ௯

பெரிய வாகிய குடையும் பீலியும் அவைவெயிற் கரவாக்
கரிய மண்டைகை யேந்திக் கல்லென வுழிதருங் கழுக்கள்
அரிய வாகவுண் டோதும் அவர்திறம் ஒழிந்துநம் அடிகள்
பெரிய சீர்மறைக் காடே பேணுமின் மனமுடை யீரே. ௧௦

மையு லாம்பொழில் சூழ்ந்த மாமறைக் காடமர்ந் தாரைக்
கையி னால்தொழு தெழுவான் காழியுள் ஞானசம் பந்தன்
செய்த செந்தமிழ் பத்துஞ் சிந்தையுட் சேர்க்கவல் லார்போய்ப்
பொய்யில் வானவ ரோடும் புகவலர் கொளவலர் புகழே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருப்புகலூர்வர்த்தமானீச்சரம் - பண் - பியந்தைக்காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

பட்டம் பால்நிற மதியம் படர்சடைச் சுடர்விடு பாணி
நட்டம் நள்ளிருள் ஆடும் நாதனார் நவின்றுறை கோயில்
புட்டன் பேடையொ டாடும் பூம்புக லூர்த்தொண்டர் போற்றி
வட்டஞ் சூழ்ந்தடி பரவும் வர்த்தமா னீச்சரத் தாரே. ௧

முயல்வ ளாவிய திங்கள் வாண்முகத் தரிவையில் தெரிவை
இயல்வ ளாவிய துடைய இன்னமிர் தெந்தையெம் பெருமான்
கயல்வ ளாவிய கழனிக் கருநிறக் குவளைகள் மலரும்
வயல்வ ளாவிய புகலூர் வர்த்தமா னீச்சரத் தாரே. ௨

தொண்டர் தண்கயம் மூழ்கித் துணையலுஞ் சாந்தமும் புகையும்
கொண்டு கொண்டடி பரவிக் குறிப்பறி முருகன்செய் கோலம்
கண்டு கண்டுகண் குளிரக் களிபரந் தொளிமல்கு கள்ளார்
வண்டு பண்செயும் புகலூர் வர்த்தமா னீச்சரத் தாரே. ௩

பண்ண வண்ணத்த ராகிப் பாடலொ டாடல றாத
விண்ண வண்ணத்த ராய விரிபுக லூரரொர் பாகம்
பெண்ண வண்ணத்த ராகும் பெற்றியொ டாணிணை பிணைந்த
வண்ண வண்ணத்தெம் பெருமான் வர்த்தமா னீச்சரத் தாரே. ௪

ஈசன் ஏறமர் கடவுள் இன்னமு தெந்தையெம் பெருமான்
பூசு மாசில்வெண் ணீற்றர் பொலிவுடைப் பூம்புக லூரில்
மூசு வண்டறை கொன்றை முருகன்முப் போதுஞ்செய் முடிமேல்
வாச மாமல ருடையார் வர்த்தமா னீச்சரத் தாரே. ௫

தளிரி ளங்கொடி வளரத் தண்கயம் இரியவண் டேறிக்
கிளரி ளம்முழை நுழையக் கிழிதரு பொழிற்புக லூரில்
உளரி ளஞ்சுனை மலரும் ஒளிதரு சடைமுடி யதன்மேல்
வளரி ளம்பிறை யுடையார் வர்த்தமா னீச்சரத் தாரே. ௬

தென்சொல் விஞ்சமர் வடசொல் திசைமொழி யெழில்நரம் பெடுத்துத்
துஞ்சு நெஞ்சிருள் நீங்கத் தொழுதெழு தொல்புக லூரில்
அஞ்ச னம்பிதிர்ந் தனைய அலைகடல் கடையஅன் றெழுந்த
வஞ்ச நஞ்சணி கண்டர் வர்த்தமா னீச்சரத் தாரே. ௭

சாம வேதமோர் கீதம் ஓதிஅத் தசமுகன் பரவும்
நாம தேயம தடையார் நன்குணர்ந் தடிகளென் றேத்தக்
காம தேவனை வேவக் கனலெரி கொளுவிய கண்ணார்
வாம தேவர்தண் புகலூர் வர்த்தமா னீச்சரத் தாரே. ௮

சீர ணங்குற நின்ற செருவுறு திசைமுக னோடு
நார ணன்கருத் தழிய நகைசெய்த சடைமுடி நம்பர்
ஆர ணங்குறும் உமையை அஞ்சுவித் தருளுதல் பொருட்டால்
வார ணத்துரி போர்த்தார் வர்த்தமா னீச்சரத் தாரே. ௯

கையி லுண்டுழல் வாருங் கமழ்துவ ராடையி னுடம்பை
மெய்யைப் போர்த்துழல் வாரும் உரைப்பன மெய்யென விரும்பேல்
செய்யில் வாளைக ளோடு செங்கயல் குதிகொளும் புகலூர்
மைகொள் கண்டத்தெம் பெருமான் வர்த்தமா னீச்சரத் தாரே. ௧௦

பொங்கு தண்புனல் சூழ்ந்து போதணி பொழிற்புக லூரில்
மங்குல் மாமதி தவழும் வர்த்தமா னீச்சரத் தாரைத்
தங்கு சீர்திகழ் ஞான சம்பந்தன் தண்டமிழ் பத்தும்
எங்கும் ஏத்தவல் லார்கள் எய்துவர் இமையவ ருலகே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருத்தேங்கூர் - பண் - பியந்தைக்காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

புரைசெய் வல்வினை தீர்க்கும் புண்ணியர் விண்ணவர் போற்றக்
கரைசெய் மால்கடல் நஞ்சை உண்டவர் கருதலர் புரங்கள்
இரைசெய் தாரழ லூட்டி யுழல்பவர் இடுபலிக் கெழில்சேர்
விரைசெய் பூம்பொழில் தெங்கூர் வெள்ளியங் குன்றமர்ந் தாரே. க

சித்தந் தன்னடி நினைவார் செடிபடு கொடுவினை தீர்க்கும்
கொத்தின் தாழ்சடை முடிமேற் கோளெயிற் றரவொடு பிறையன்
பத்தர் தாம்பணிந் தேத்தும் பரம்பரன் பைம்புனல் பதித்த
வித்தன் தாழ்பொழில் தெங்கூர் வெள்ளியங் குன்றமர்ந் தாரே. உ

அடையும் வல்வினை யகல அருள்பவர் அனலுடை மழுவாட்
படையர் பாய்புலித் தோலர் பைம்புனற் கொன்றையர் படர்புன்
சடையில் வெண்பிறை சூடித் தார்மணி யணிதரு தறுகண்
விடையர் வீங்கெழில் தெங்கூர் வெள்ளியங் குன்றமர்ந் தாரே. ங

பண்டு நான்செய்த வினைகள் பறையவோர் நெறியருள் பயப்பார்
கொண்டல் வான்மதி சூடிக் குரைகடல் விடமணி கண்டர்
வண்டு மாமல ரூதி மதுவுண இதழ்மறி வெய்தி
விண்ட வார்பொழில் தெங்கூர் வெள்ளியங் குன்றமர்ந் தாரே. ச

சுழித்த வார்புனற் கங்கை சூடியோர் காலனைக் காலால்
தெழித்து வானவர் நடுங்கச் செற்றவர் சிறையணி பறவை
கழித்த வெண்தலை யேந்திக் காமன தடல்பொடி யாக
விழித்த வர்திருத் தெங்கூர் வெள்ளியங் குன்றமர்ந் தாரே. ரு

தொல்லை வல்வினை தீர்ப்பார் சுடலைவெண் பொடியணி சுவண்டர்
எல்லி சூடிநின் றாடும் இறையவர் இமையவ ரேத்தச்
சில்லை மால்விடை யேறித் திரிபுரந் தீயெழச் செற்ற
வில்லி னார்திருத் தெங்கூர் வெள்ளியங் குன்றமர்ந் தாரே. சு

நெறிகொள் சிந்தைய ராகி நினைபவர் வினைகெட நின்றார்
முறிகொள் மேனிமுக் கண்ணர் முளைமதி நடுநடுத் திலங்கப்
பொறிகொள் வாளர வணிந்த புண்ணியர் வெண்பொடிப் பூசி
வெறிகொள் பூம்பொழில் தெங்கூர் வெள்ளியங் குன்றமர்ந் தாரே. எ

எண்ணி லாவிறல் அரக்கன் எழில்திகழ் மால்வரை யெடுக்கக்
கண்ணெ லாம்பொடிந் தலறக் கால்விர லூன்றிய கருத்தர்
தண்ணு லாம்புனல் கன்னி தயங்கிய சடைமுடிச் சதுரர்
விண்ணு லாம்பொழில் தெங்கூர் வெள்ளியங் குன்றமர்ந் தாரே. அ

தேடித் தானயன் மாலுந் திருமுடி யடியிணை காணார்
பாடத் தான்பல பூதப் படையினர் சுடலையிற் பலகால்
ஆடத் தான்மிக வல்லர் அருச்சுனற் கருள்செயக் கருதும்
வேடத் தார்திருத் தெங்கூர் வெள்ளியங் குன்றமர்ந் தாரே. ௯

சடங்கொள் சீவரப் போர்வைச் சாக்கியர் சமணர்சொல் தவிர
இடங்கொள் வல்வினை தீர்க்கும் எத்தமின் இருமருப் பொருகைக்
கடங்கொள் மால்களிற் றுரியர் கடல்கடைந் திடக்கனன் றெழுந்த
விடங்கொள் கண்டத்தர் தெங்கூர் வெள்ளியங் குன்றமர்ந் தாரே. ௧0

வெந்த நீற்றினர் தெங்கூர் வெள்ளியங் குன்றமர்ந் தாரைக்
கந்த மார்பொழில் சூழ்ந்த காழியுள் ஞானசம் பந்தன்
சந்த மாயின பாடல் தண்டமிழ் பத்தும்வல் லார்மேல்
பந்த மாயின பாவம் பாறுதல் தேறுதல் பயனே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருவாழ்கொளிபுத்தூர் - பண் - பியந்தைக்காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

சாகை யாயிர முடையார் சாமமும் ஓதுவ துடையார்
ஈகை யார்கடை நோக்கி யிரப்பதும் பலபல வுடையார்
தோகை மாமயி லனைய துடியிடை பாகமும் உடையார்
வாகை நுண்துளி வீசும் வாழ்கொளி புத்தூ ருளாரே. ௧

எண்ணில் ஈரமும் உடையார் எத்தனை யோரிவர் அறங்கள்
கண்ணும் ஆயிரம் உடையார் கையுமொ ராயிரம் உடையார்
பெண்ணும் ஆயிரம் உடையார் பெருமையோ ராயிரம் உடையார்
வண்ணம் ஆயிரம் உடையார் வாழ்கொளி புத்தூ ருளாரே. ௨

கொடியோ ராயிரம் உடையார் நண்ணிய ராமவர் நோக்கும்
வடிவும் ஆயிரம் உடையார் வண்ணமும் ஆயிரம் உடையார்

முடியும் ஆயிரம் உடையார் மொய்குழ லாளையும் உடையார்
வடிவும் ஆயிரம் உடையார் வாழ்கொளி புத்தூ ருளாரே. ௩

பஞ்சி நுண்துகி லன்ன பைங்கழற் சேவடி யுடையார்
குஞ்சி மேகலை யுடையார் கொந்தணி வேல்வல னுடையார்
அஞ்சும் வென்றவர்க் கணியார் ஆனையின் ஈருரி யுடையார்
வஞ்சி நுண்ணிடை யுடையார் வாழ்கொளி புத்தூ ருளாரே. ௪

பரவு வாரையும் உடையார் பழித்திகழ் வாரையும் உடையார்
விரவு வாரையும் உடையார் வெண்தலைப் பலிகொள்வ துடையார்
அரவம் பூண்பதும் உடையார் ஆயிரம் பேர்மிக வுடையார்
வரமும் ஆயிரம் உடையார் வாழ்கொளி புத்தூ ருளாரே. ௫

தண்டுந் தாளமுங் குழலுந் தண்ணுமைக் கருவியும் புறவில்
கொண்ட பூதமும் உடையார் கோலமும் பலபல வுடையார்
கண்டு கோடலும் அரியார் காட்சியும் அரியதோர் காந்தை
வண்டு வாழ்பதி யுடையார் வாழ்கொளி புத்தூ ருளாரே. ௬

மான வாழ்க்கைய துடையார் மலைந்தவர் மதிற்பரி சறுத்தார்
தான வாழ்க்கைய துடையார் தவத்தொடு நாம்புகழ்ந் தேத்த
ஞான வாழ்க்கைய துடையார் நள்ளிருள் மகளிர்நின் றேத்த
வான வாழ்க்கைய துடையார் வாழ்கொளி புத்தூ ருளாரே. ௭

ஏழும் மூன்றுமோர் தலைகள் உடையவன் இடர்பட அடர்த்து
வேழ்வி செற்றதும் விரும்பி விருப்பவர் பலபல வுடையார்
கேழல் வெண்பிறை யன்ன கெழுமணி மிடறுநின் றிலங்க
வாழி சாந்தமும் உடையார் வாழ்கொளி புத்தூ ருளாரே. ௮

வென்றி மாமல ரோனும் விரிகடல் துயின்றவன் தானும்
என்றும் ஏத்துகை யுடையார் இமையவர் துதிசெய விரும்பி
முன்றில் மாமலர் வாசம் முதுமதி தவழ்பொழில் தில்லை
மன்றி லாடல துடையார் வாழ்கொளி புத்தூ ருளாரே. ௯

மண்டை கொண்டுழல் தேரர் மாசுடை மேனிவன் சமணர்
குண்டர் பேசிய பேச்சுக் கொள்ளன்மின் திகழொளி நல்ல
துண்ட வெண்பிறை சூடிச் சுண்ணவெண் பொடியணிந் தெங்கும்
வண்டு வாழ்பொழில் சூழ்ந்த வாழ்கொளி புத்தூ ருளாரே. ௧0

நலங்கொள் பூம்பொழிற் காழி நற்றமிழ் ஞானசம் பந்தன்
வலங்கொள் வெண்மழு வாளன் வாழ்கொளி புத்தூ ருளானை
இலங்கு வெண்பிறை யானை யேத்திய தமிழிவை வல்லார்
நலங்கொள் சிந்தைய ராகி நன்னெறி யெய்துவர் தாமே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருஅரசிலி - பண் - பியந்தைக்காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

பாடல் வண்டறை கொன்றை பால்மதி பாய்புனற் கங்கை
கோடல் கூவிள மாலை மத்தமுஞ் செஞ்சடைக் குலாவி
வாடல் வெண்தலை மாலை மருவிட வல்லியம் தோள்மேல்
ஆடல் மாசுணம் அசைத்த அடிகளுக் கிடம்அர சிலியே. ௧

ஏறு பேணிய தேறி யிளமதக் களிற்றினை யெற்றி
வேறு செய்ததன் உரிவை வெண்புலால் கலக்கமெய் போர்த்த
ஊறு தேனவன் உம்பர்க் கொருவன்நல் லொளிகொளொண் சுடராம்
ஆறு சேர்தரு சென்னி யடிகளுக் கிடம்அர சிலியே. ௨

கங்கை நீர்சடை மேலே கதம்மிகக் கதிரிள வனமென்
கொங்கை யாளொரு பாகம் மருவிய கொல்லைவெள் ளேற்றன்
சங்கை யாய்த்திரி யாமே தன்னடியார்க் கருள் செய்து
அங்கை யாலனல் லேந்தும் அடிகளுக் கிடம் அரசிலியே. ௩

மிக்க காலனை வீட்டி மெய்கெடக் காமனை விழித்துப்
புக்க வூரிடு பிச்சை யுண்பது பொன்திகழ் கொன்றை
தக்க நூல்திகழ் மார்பில் தவளவெண் ணீறணிந் தாமை
அக்கின் ஆரமும் பூண்ட அடிகளுக் கிடம்அர சிலியே. ௪

மானஞ் சும்மட நோக்கி மலைமகள் பாகமும் மருவித்
தானஞ் சாவரண் மூன்றுந் தழலெழச் சரமது துரந்து
வானஞ் சும்பெரு விடத்தை யுண்டவன் மாமறை யோதி
ஆனஞ் சாடிய சென்னி யடிகளுக் கிடம்அர சிலியே. ௫

பரிய மாசுணங் கயிறாப் பருப்பத மதற்குமத் தாகப்
பெரிய வேலையைக் கலங்கப் பேணிய வானவர் கடையக்

கரிய நஞ்சது தோன்றக் கலங்கிய அவர்தமைக் கண்டு
அரிய ஆரமு தாக்கும் அடிகளுக் கிடம்அர சிலியே. ௬,௭

வண்ண மால்வரை தன்னை மறித்திட லுற்றவல் அரக்கன்
கண்ணுந் தோளும்நல் வாயும் நெரிதரக் கால்விர லூன்றிப்
பண்ணின் பாடல்கைந் நரம்பாற் பாடிய பாடலைக் கேட்டு
அண்ண லாயருள் செய்த அடிகளுக் கிடம்அர சிலியே. ௮

குறிய மாணுரு வாகிக் குவலயம் அளந்தவன் தானும்
வெறிகொள் தாமரை மேலே விரும்பிய மெய்த்தவத் தோனும்
செறிவொ ணாவகை யெங்குந் தேடியுந் திருவடி காண
அறிவொ ணாவுரு வத்தெம் அடிகளுக் கிடம்அர சிலியே. ௯

குருளை யெய்திய மடவார் நிற்பவே குஞ்சியைப் பறித்துத்
திரளை கையிலுண் பவருந் தேரருஞ் சொல்லிய தேறேல்
பொருளைப் பொய்யிலி மெய்யெம் நாதனைப் பொன்னடி வணங்கும்
அருளை ஆர்தர நல்கும் அடிகளுக் கிடம்அர சிலியே. ௧0

அல்லி நீள்வயல் சூழ்ந்த அரசிலி யடிகளைக் காழி
நல்ல ஞானசம் பந்தன் நற்றமிழ் பத்திவை நாளும்
சொல்ல வல்லவர் தம்மைச் சூழ்ந்தம ரர்தொழு தேத்த
வல்ல வானுல கெய்தி வைகலும் மகிழ்ந்திருப் பாரே. ௧௧

திருச்சிற்றம்பலம்

சீகாழி - பண் - பியந்தைக்காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

பொங்கு வெண்புரி வளரும் பொற்புடை மார்பன்எம் பெருமான்
செங்கண் ஆடர வாட்டுஞ் செல்வனெம் சிவனுறை கோயில்
பங்க மில்பல மறைகள் வல்லவர் பத்தர்கள் பரவுந்
தங்கு வெண்திரைக் கானல் தண்வயற் காழிநன் னகரே. ௧

தேவர் தானவர் பரந்து திண்வரை மால்கடல் நிறுவி
நாவ தாலமிர் துண்ண நயந்தவர் இரிந்திடக் கண்டு
ஆவ வென்றரு நஞ்சம் உண்டவன் அமர்தரும் மூதூர்
காவ லார்மதில் சூழ்ந்த கடிபொழிற் காழிநன் னகரே. ௨

கரியின் மாமுக முடைய கணபதி தாதைபல் பூதந்
திரிய இல்பலிக் கேகுஞ் செழுஞ்சுடர் சேர்தரும் மூதூர்
சரியின் முன்கைநன் மாதர் சதிபட மாநட மாடி
உரிய நாமங்கள் ஏத்தும் ஒலிபுனற் காழிநன் னகரே. ௩

சங்க வெண்குழைச் செவியன் தண்மதி சூடிய சென்னி
அங்கம் பூணென வுடைய அப்பனுக் கழகிய வூராந்
தங்க மாளிகை புயர்ந்த தொகுகொடி வானிடை மிடைந்து
வங்க வான்மதி தடவு மணிபொழிற் காழிநன் னகரே. ௪

மங்கை கூறமர் மெய்யான் மான்மறி யேந்திய கையான்
எங்க ளீசனென் றெழுவார் இடர்வினை கெடுப்பவற் கூராஞ்
சங்கை யின்றிநல் லியமந் தாஞ்செய்து தகுதியின் மிக்க
கங்கை நாடுயர் கீர்த்தி மறையவர் காழிநன் னகரே. ௫

நாறு கூவிள மத்தம் நாகமுஞ் சூடிய நம்பன்
ஏறும் ஏறிய ஈசன் இருந்தினி தமர்தரும் மூதூர்
நீறு பூசிய வுருவர் நெஞ்சினுள் வஞ்சமொன் றின்றித்
தேறு வார்கள்சென் றேத்துஞ் சீர்திகழ் காழிநன் னகரே. ௬

நடம தாடிய நாதன் நந்திதன் முழவிடைக் காட்டில்
விடம மர்ந்தொரு காலம் விரித்தறம் உரைத்தவற் கூராம்
இடம தாமறை பயில்வார் இருந்தவர் திருந்தியம் போதிற்
குடம தார்மணி மாடங் குலாவிய காழிநன் னகரே. ௭

கார்கொள் மேனியவ் வரக்கன் றன்கடுந் திறலினைக் கருதி
ஏர்கொள் மங்கையும் அஞ்ச எழில்மலை யெடுத்தவன் நெரியச்
சீர்கொள் பாதத்தோர் விரலாற் செறுத்தவெம் சிவனுறை கோயில்
தார்கொள் வண்டினஞ் சூழ்ந்த தண்வயற் காழிநன் னகரே. ௮

மாலும் மாமல ரானும் மருவிநின் றிகலிய மனத்தாற்
பாலுங் காண்பரி தாய பாஞ்சுடர் தன்பதி யாகுஞ்
சேலும் வாளையுங் கயலுஞ் செறிந்துதன் கிளையொடு மேய
ஆலுஞ் சாலிநற் கதிர்கள் அணிவயற் காழிநன் னகரே. ௯

புத்தர் பொய்மிகு சமணர் பொலிகழல் அடியிணை காணுஞ்
சித்த மற்றவர்க் கிலாமைத் திகழ்ந்தநற் செழுஞ்சுடர்க் கூராஞ்

சித்த ரோடுநல் லமரர் செறிந்தநன் மாமலர் கொண்டு
முத்த னேயரு ளென்று முறைமைசெய் காழிநன் னகரே. ௧௦

ஊழி யானவை பலவும் ஒழித்திடுங் காலத்தி லோங்கு
* * * * ௧௧

திருச்சிற்றம்பலம்

சீகாழி - திருவிராகம். பண் - நட்டராகம்

திருச்சிற்றம்பலம்

நம்பொருள் நம்மக்களென்று நச்சிஇச்சை செய்துநீர்
அம்பரம் அடைந்துசால அல்லலுய்ப்ப தன்முனம்
உம்பர்நாதன் உத்தமன் ஒளிமிகுத்த செஞ்சடை
நம்பன்மேவு நன்னகர் நலங்கொள்காழி சேர்மினே. ௧

பாவம்மேவும் உள்ளமோடு பத்தியின்றி நித்தலும்
ஏவமான செய்துசாவ தன்முனம்மி சைந்துநீர்
தீபம்மாலை தூபமுஞ் செறிந்தகைய ராகிநம்
தேவதேவன் மன்னுமூர் திருந்துகாழி சேர்மினே. ௨

சோறுகூறை யின்றியே துவண்டுதூர மாய்நுமக்
கேறுசுற்றம் எள்கவே யிடுக்கணுய்ப்ப தன்முனம்
ஆறுமோர் சடையினான் ஆதியானை செற்றவன்
நாறுதேன் மலர்ப்பொழில் நலங்கொள்காழி சேர்மினே. ௩

நச்சிநீர் பிறன்கடை நடந்துசெல்ல நாளையும்
உச்சிவம் மெனும்உரை யுணர்ந்துகேட்ப தன்முனம்
பிச்சர்நச் சரவரைப் பெரியசோதி பேணுவார்
இச்சைசெய்யும் எம்பிரான் எழில்கொள்காழி சேர்மினே. ௪

கண்கள்காண் பொழிந்துமேனி கன்றியொன்ற லாதநோய்
உண்கிலாமை செய்துநும்மை யுய்த்தழிப்ப தன்முனம்
விண்குலாவு தேவருய்ய வேலைநஞ் சமுதுசெய்
கண்கள்மூன் றுடையவெம் கருத்தர்காழி சேர்மினே. ௫

அல்லல்வாழ்க்கை யுய்ப்பதற் கவத்தமே பிறந்துநீர்
எல்லையில் பிணக்கினிற் கிடந்திடா தெழும்மினோ

பல்வில்வெண் தலையினிற் பலிக்கியங்கு பான்மையான்
கொல்லையேற தேறுவான் கோலக்காழி சேர்மினே. ௬, ௭

பொய்மிகுத்த வாயராய்ப் பொறுமையோடு செல்லுநீர்
ஐமிகுத்த கண்டரா யடுத்திரைப்ப தன்முனம்
மைமிகுத்த மேனிவாள் அரக்கனைநெ ரித்தவன்
பைமிகுத்த பாம்பரைப் பரமர்காழி சேர்மினே. ௮

காலினோடு கைகளுந் தளர்ந்துகாம நோய்தனால்
ஏலவார் குழலினார் இகழ்ந்துரைப்ப தன்முனம்
மாலினோடு நான்முகன் மதித்தவர்கள் காண்கிலா
நீலமேவு கண்டனார் நிகழ்ந்தகாழி சேர்மினே. ௯

நிலைவெறுத்த நெஞ்சமோடு நேசமில் புதல்வர்கள்
முலைவெறுத்த பேர்தொடங்கி யேமுனிவ தன்முனந்
தலைபறித்த கையர்தேரர் தாந்தரிப் பரியவன்
சிலைபிடித் தெயிலெய்தான் திருந்துகாழி சேர்மினே. ௧௦

தக்கனார் தலையரிந்த சங்கரன் றனதரை
அக்கினோ டரவசைத்த அந்திவண்ணர் காழியை
ஒக்கஞா னசம்பந்தன் உரைத்தபாடல் வல்லவர்
மிக்கஇன்ப மெய்திவீற் றிருந்துவாழ்தல் மெய்ம்மையே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருத்துருத்தி - திருவிராகம். பண் - நட்டராகம்

திருச்சிற்றம்பலம்

வரைத்தலைப் பசும்பொனோ டருங்கலன்கள் உந்திவந்
திரைத்தலைச் சுமந்துகொண் டெறிந்திலங்கு காவிரிக்
கரைத்தலைத் துருத்திபுக் கிருப்பதே கருத்தினாய்
உரைத்தலைப் பொலிந்துனக் குணர்த்துமாறு வல்லமே. ௧

அடுத்தடுத்த கத்தியோடு வன்னிகொன்றை கூவிளம்
தொடுத்துடன் சடைப்பெய்தாய் துருத்தியாயோர் காலனைக்
கடுத்தடிப் புறத்தினா லிறத்துதைத்த காரணம்
எடுத்தெடுத் துரைக்குமாறு வல்லமாகின் நல்லமே. ௨

கங்குல்கொண்ட திங்களோடு கங்கைதங்கு செஞ்சடைச்
சங்கிலங்கு வெண்குழை சரிந்திலங்கு காதினுய்
பொங்கிலங்கு பூணநூல் உருத்திரா துருத்திபுக்
கெங்குமின் இடங்களா அடங்கிவாழ்வ தென்கொலோ. ௩

சருத்தினுலோர் காணியில் விருத்தியில்லை தொண்டர்தம்
அருத்தியால்தம் மல்லல்சொல்லி ஐயமேற்ப தன்றியும்
ஒருத்திபால் பொருத்திவைத் துடம்புவிட்டு யோகியாய்
இருத்திநீ துருத்திபுக் கிதென்னமாயம் என்பதே. ௪

துறக்குமா சொலப்படாய் துருத்தியாய் திருந்தடி
மறக்குமா றிலாதஎன்னை மையல்செய்திம் மண்ணின்மேல்
பிறக்குமாறு காட்டினுய் பிணிப்படும் உடம்புவிட்
டிறக்குமாறு காட்டினுய்க் கிழுக்குகின்ற தென்னையே. ரு

வெயிற்கெதிர்ந் திடங்கொடா தகங்குளிர்ந்த பைம்பொழில்
துயிற்கெதிர்ந்த புள்ளினங்கள் மல்குதண் துருத்தியாய்
மயிற்கெதிர்ந் தணங்குசாயல் மாதொர்பாக மாகமூ
எயிற்கெதிர்ந் தோரம்பினுய் எரித்தவில்லி யல்லையே. சா

கணிச்சியம்ப டைச்செல்வர் கழிந்தவர்க் கொழிந்தசீர்
துணிச்சிரக் கிரந்தையாய் கரந்தையாய் துருத்தியாய்
அணிப்படுந் தனிப்பிறைப் பனிக்கதிர்க் கவாவுநல்
மணிப்படும்பை நாகம்நீ மகிழ்ந்தஅண்ணல் அல்லையே. எ

சுடப்பொடிந் துடம்பிழந் தநங்கனுய மன்மதன்
இடர்ப்படக் கடந்திடந் துருத்தியாக எண்ணினுய்
கடற்படை யுடையஅக் கடல்இலங்கை மன்னனை
அடற்பட அடுக்கலில் அடர்த்தஅண்ணல் அல்லையே. அ

களங்குளிர்ந் திலங்குபோது காதலானும் மாலுமாய்
வளங்கிளம்பொ னங்கழல் வணங்கிவந்து காண்கிலார்
துளங்கிளம்பி றைச்சென்னித் துருத்தியாய் திருந்தடி
உளங்குளிர்ந்த போதெலாம் உகந்துகந் துரைப்பனே. கூ

புத்தர்தத் துவமிலாச் சமணுரைத்த பொய்தனை
உத்தம மெனக்கொளா துகந்தெழுந்து வண்டினம்

தத்தநின்று பண்செயுஞ் சூழ்பொழில் தருத்தியெம்
பித்தர்பித்த னைத்தொழப் பிறப்பறுத்தல் பெற்றியே. ௧௦

கற்றுமுற்றி னார்தொழுங் கழுமலத் தருந்தமிழ்
சுற்றுமுற்று மாயினான் அவன்பகர்ந்த சொற்களால்
பெற்றமொன் றுயர்த்தவன் பெருந்திருத்தி பேணவே
குற்றமுற்று மின்மையிற் குணங்கள்வந்து கூடுமே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருக்கோடிகா - பண் - நட்டராகம்

திருச்சிற்றம்பலம்

இன்றுநன்று நாளைநன் றென்றுநின்ற இச்சையால்
பொன்றுகின்ற வாழ்க்கையைப் போகவிட்டுப் போதுமின்
மின்தயங்கு சோதியான் வெண்மதி விரிபுனல்
கொன்றைதுன்று சென்னியான் கோடிகாவு சேர்மினே. ௧

அல்லல்மிக்க வாழ்க்கையை ஆதரித் திராதுநீர்
நல்லதோர் நெறியினை நாடுதும் நடம்மினோ
வில்லையன்ன வாள்நுதல் வெள்வளையோர் பாகமாம்
கொல்லைவெள்ளை யேற்றினான் கோடிகாவு சேர்மினே. ௨

துக்கமிக்க வாழ்க்கையின் சோர்வினைத் துறந்துநீர்
தக்கதோர் நெறியினைச் சார்தல்செய்யப் போதுமின்
அக்கணிந் தரைமிசை யாறணிந்த சென்னிமேல்
கொக்கிற கணிந்தவன் கோடிகாவு சேர்மினே. ௩

பண்டுசெய்த வல்வினை பற்றறக் கெடும்வகை
உண்டுமக் குரைப்பன்நான் ஒல்லைநீர் எழுமினோ
மண்டுகங்கை செஞ்சடை வைத்துமாதோர் பாகமாக்
கொண்டுகந்த மார்பினான் கோடிகாவு சேர்மினே. ௪

முன்னைநீர்செய் பாவத்தால் மூர்த்திபாதஞ் சிந்தியா
தின்னம்நீரி டும்பையில் மூழ்கிநீர் எழும்மினோ
பொன்னைவென்ற கொன்றையான் பூதம்பாட ஆடலான்
கொன்னவிலும் வேலினான் கோடிகாவு சேர்மினே. ௫

ஏவம்மிக்க சிந்தையோ டின்பமெய்த லாமெனப்
பாவமெத் தனையும்நீர் செய்தொரு பயனிலைக்
காவல்மிக்க மாநகர் காய்ந்துவெங் கனல்படக்
கோவம்மிக்க நெற்றியான் கோடிகாவு சேர்மினே. ௬

ஏணழிந்த வாழ்க்கையை யின்பமென் றிருந்துநீர்
மாணழிந்த மூப்பினால் வருந்தன்முன்னம் வம்மினோ
பூணல்வெள் ளெலும்பினான் பொன்திகழ் சடைமுடிக்
கோணல்வெண் பிறையினான் கோடிகாவு சேர்மினே. ௭

மற்றிவ்வாழ்க்கை மெய்யெனும் மனத்தினைத் தவிர்ந்துநீர்
பற்றிவாழ்மின் சேவடி பணிந்துவந் தெழுமினோ
வெற்றிகொள் தசமுகன் விறல்கெட இருந்ததோர்
குற்றமில் வரையினான் கோடிகாவு சேர்மினே. ௮

மங்குநோய் உறும்பிணி மாயும்வண்ணஞ் சொல்லுவன்
செங்கண்மால் திசைமுகன் சென்றளந்துங் காண்கிலா
வெங்கண்மால் விடையுடை வேதியன் விரும்பும்ஊர்
கொங்குலாம் வளம்பொழிற் கோடிகாவு சேர்மினே. ௯

தட்டொடு தழைமயிற் பீலிகொள் சமணரும்
பட்டுடை விரிதுகிலி னார்கள்சொற் பயனில
விட்டபுன் சடையினான் மேதகும் முழவொடும்
கொட்டமைந்த ஆடலான் கோடிகாவு சேர்மினே. ௧௦

கொந்தணி குளிர்பொழிற் கோடிகாவு மேவிய
செந்தழ லுருவனைச் சீர்மிகு திறலுடை
அந்தணர் புகலியு ளாயகேள்வி ஞானசம்
பந்தன தமிழ்வல்லார் பாவமான பாறுமே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருக்கோவலூர்வீரட்டம் - திருவிராகம். பண் - நட்டராகம்

திருச்சிற்றம்பலம்

படைகொள்கூற்றம் வந்துமெய்ப் பாசம்விட்ட போதின்கண்
இடைகொள்வா ரெமக்கிலை யெழுகபோது நெஞ்சமே
குடைகொள்வேந்தன் மூதாதை குழகன்கோவ லூர்தனுள்
விடையதேறுங் கொடியினான் வீரட்டானஞ் சேர்துமே. க

காவலாளர் தம்மினக் கடைகள்தோறுங் கால்நிமிர்த்
திரவலாழி நெஞ்சமே யினியதெய்த வேண்டில்நீ
குரவமேறி வண்டினங் குழலொடியாழ்செய் கோவலூர்
விரவிநாறு கொன்றையான் வீரட்டானஞ் சேர்துமே. உ

உள்ளத்தீரே போதமின் உறுதியாவ தறிதிரேல்
அள்ளற்சேற்றிற் காலிட்டிங் கவலத்துள் அழுந்தாதே
கொள்ளப்பாடு கீதத்தான் குழகன்கோவ லூர்தனுள்
வெள்ளந்தாங்கு சடையினான் வீரட்டானஞ் சேர்துமே. ங

கனைகொள்இருமல் சூலைநோய் கம்பதாளி குன்மமும்
இனையபலவும் மூப்பினோ டெய்திவந்து நலியாமுன்
பனைகளுலவு பைம்பொழிற் பழனஞ்சூழ்ந்த கோவலூர்
வினையைவென்ற வேடத்தான் வீரட்டானஞ் சேர்துமே. ச

உளங்கொள்போகம் உய்த்திடார் உடம்பிழந்த போதின்கண்
துளங்கிநின்று நாள்தொறுந் துயரலாழி நெஞ்சமே
வளங்கொள்பெண்ணை வந்துலா வயல்கள்சூழ்ந்த கோவலூர்
விளங்குகோவ ணத்தினான் வீரட்டானஞ் சேர்துமே. ரு

கேடுமூப்புச் சாக்காடு கெழுமிவந்து நாள்தொறும்
ஆடுபோல நரைகளாய் யாக்கைபோக்க தன்றியும்
கூடிநின்று பைம்பொழிற் குழகன்கோவ லூர்தனுள்
வீடுகாட்டு நெறியினான் வீரட்டானஞ் சேர்துமே. சு

உரையும்பாட்டுந் தளர்வெய்தி உடம்புமூத்த போதின்கண்
நரையுந்திரையுங் கண்டெள்கி நகுவர்நமர்கள் ஆதலால்
வரைகொள்பெண்ணை வந்துலா வயல்கள்சூழ்ந்த கோவலூர்
விரைகொள்சீர்வெண் ணீற்றினான் வீரட்டானஞ் சேர்துமே. எ

ஏதம்மிக்க மூப்பினோ டிருமலீளை யென்றிவை
ஊதல்ஆக்கை ஓம்புவீர் உறுதியாவ தறிதிரேல்
போதில்வண்டு பண்செயும் பூந்தண்கோவ லூர்தனுள்
வேதமோதும் நெறியினான் வீரட்டானஞ் சேர்துமே. ௮

ஆறுபட்ட புன்சடை அழகன்ஆயி ழைக்கொரு
கூறுபட்ட மேனியான் குழகன்கோவ லூர்தனுள்
நீறுபட்ட கோலத்தான் நீலகண்டன் இருவர்க்கும்
வேறுபட்ட சிந்தையான் வீரட்டானஞ் சேர்துமே. ௯

குறிகொளாழி நெஞ்சமே கூறைதுவரிட் டார்களும்
அறிவிலாத அமணர்சொல் அவத்தமாவ தறிதியேல்
பொறிகொள்வண்டு பண்செயும் பூந்தண்கோவ லூர்தனுள்
வெறிகொள்கங்கை தாங்கினான் வீரட்டானஞ் சேர்துமே. ௧0

கழியொடுலவு கானல்சூழ் காழிஞான சம்பந்தன்
பழிகள்தீரச் சொன்னசொல் பாவநாச மாதலால்
அழிவிலீர்கொண் டேத்துமின் அந்தண்கோவ லூர்தனுள்
விழிகொள்பூதப் படையினான் வீரட்டானஞ் சேர்துமே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருஆரூர் - திருவிராகம். பண் - நட்டராகம்

திருச்சிற்றம்பலம்

பருக்கையானை மத்தகத் தரிக்குலத் துகிர்ப்புக
நெருக்கிவாய நித்திலந் நிரக்குநீள் பொருப்பனூர்
கருக்கொள்சோலை சூழநீடு மாடமாளி கைக்கொடி
அருக்கன்மண்ட லத்தணவும் அந்தணாரு ரென்பதே. ௧

விண்டவெள் ளெருக்கலர்ந்த வன்னிகொன்றை மத்தமும்
இண்டைகொண்ட செஞ்சடை முடிச்சிவ னிருந்தவூர்
கெண்டைகொண் டலர்ந்தகண்ணி னார்கள்கீத வோசைபோய்
அண்டரண்டம் ஊடறுக்கும் அந்தணாரு ரென்பதே. ௨

கறுத்தநஞ்சம் உண்டிருண்ட கண்டர்காலன் இன்னுயிர்
மறுத்துமாணி தன்றன்ஆகம் வண்மைசெய்த மைந்தனூர்

வெறித்துமேதி யோடிமூசு வள்ளை வெள்ளை நீள்கொடி
அறுத்துமண்டி யாவிபாயும் அந்தணாரு ரென்பதே. ௫

அஞ்சுமொன்றி ஆறுவீசி நீறுபூசி மேனியில்
குஞ்சியார வந்திசெய்ய அஞ்சலென்னி மன்னுமூர்
பஞ்சியாரு மெல்லடிப் பணைத்தகொங்கை நுண்ணிடை
அஞ்சொலார் அரங்கெடுக்கும் அந்தணாரு ரென்பதே. ௬

சங்குலாவு திங்கள்சூடி தன்னையுன்னு வார்மனத்
தங்குலாவி நின்றஎங்க ளாதிதேவன் மன்னுமூர்
தெங்குலாவு சோலைநீடு தேனுலாவு செண்பகம்
அங்குலாவி யண்டநாறும் அந்தணாரு ரென்பதே. ௭

கள்ளநெஞ்ச வஞ்சகக் கருத்தைவிட் டருத்தியோ
டுள்ளமொன்றி யுள்குவார் உளத்துளான் உகந்தவூர்
துள்ளிவாளை பாய்வயற் சுரும்புலாவு நெய்தல்வாய்
அள்ளல்நாரை ஆரல்வாரும் அந்தணாரு ரென்பதே. ௮

கங்கைபொங்கு செஞ்சடைக் கரந்தகண்டர் காமனை
மங்கவெங்க ணால்விழித்த மங்கைபங்கன் மன்னுமூர்
தெங்கினூடு போகிவாழை கொத்திறுத்து மாவின்மேல்
அங்கண்மந்தி முந்தியேறும் அந்தணாரு ரென்பதே. ௭

வரைத்தலம் எடுத்தவன் முடித்தலம் உரத்தொடும்
நெரித்தவன் புரத்தைமுன் எரித்தவன் இருந்தவூர்
நிரைத்தமாளி கைத்திருவின் நேரனார்கள் வெண்ணகை
அரத்தவாய் மடந்தைமார்கள் ஆடுமாரு ரென்பதே. ௮

இருந்தவன் கிடந்தவன் இடந்துவிண் பறந்துமெய்
வருந்தியும் அளப்பொணாத வானவன் மகிழ்ந்தவூர்
செருந்திஞாழல் புன்னைவன்னி செண்பகஞ் செழுங்குரா
அரும்புசோலை வாசம்நாறும் அந்தணாரு ரென்பதே. ௯

பறித்தவெண் டலைக்கடுப் படுத்தமேனி யார்தவம்
வெறித்தவேடன் வேலைநஞ்சம் உண்டகண்டன் மேவுமூர்
மறித்துமண்டு வண்டல்வாரி மிண்டுநீர் வயற்செந்நெல்
அறுத்தவா யசும்புபாயு மந்தணாரு ரென்பதே. ௧0

வல்லிசோலை சூதம்நீடு மன்னுவீதி பொன்னுலா
அல்லிமா தமர்ந்திருந்த அந்தணாரூ ராதியை
நல்லசொல்லும் ஞானசம் பந்தன்நாவின் இன்னுரை
வல்லதொண்டர் வானமாள வல்லர்வாய்மை யாகவே. கக

திருச்சிற்றம்பலம்

திருச்சிரபுரம் - பண் - நட்டராகம்

திருச்சிற்றம்பலம்

அன்னம் மென்னடை அரிவையொ டினிதுறை அமரர்தம் பெருமானார், மின்னு செஞ்சடை வெள்ளெருக் கம்மலர் வைத்தவர் வேதந்தாம், பன்னும் நன்பொருள் பயந்தவர் பருமதிற் சிரபுரத் தார் சீரார், பொன்னின் மாமலர் அடிதொழும் அடியவர் வினையொடும் பொருந்தாரே. க

கோல மாகரி உரித்தவர் அரவொடும் ஏனக்கொம் பிளஆமை
சாலப் பூண்டுதண் மதியது சூடிய சங்கரா னார்தம்மைப்
போலத் தம்மடி யார்க்குமின் பளிப்பவர் பொருகடல் விடமுண்ட
நீலத் தார்மிடற் றண்ணலார் சிரபுரந் தொழவினை நில்லாவே. உ

மானத் திண்புய வரிசிலைப் பார்த்தனைத் தவங்கெட மதித்தன்று
கானத் தேதிரி வேடனா யமர்செயக் கண்டருள் புரிந்தார்பூந்
தேனைத் தேர்ந்துசேர் வண்டுகள் திரிதருஞ் சிரபுரத் துறையெங்கள்
கோனைக் கும்பிடும் அடியரைக் கொடுவினை குற்றங்கள் குறுகாவே. ௩

மாணி தன்னுயிர் மதித்துண வந்தஅக் காலனை உதைசெய்தார்
பேணியுள்கும்மெய் யடியவர் பெருந்துயர்ப் பிணக்கறுத் தருள்செய்வார்
வேணி வெண்பிறை யுடையவர் வியன்புகழ்ச் சிரபுரத் தமர்கின்ற
ஆணிப் பொன்னினை அடிதொழும் அடியவர்க் கருவினை யடையாவே.

பாரும் நீரொடு பல்கதிர் இரவியும் பனிமதி ஆகாசம்
ஓரும் வாயுவும் ஒண்கனல் வேள்வியில் தலைவனு மாய்நின்றார்
சேருஞ் சந்தனம் அகிலொடு வந்திழி செழும்புனற் கோட்டாறு
வாருந் தண்புனல் சூழ்சிர புரந்தொழும் அடியவர் வருந்தாரே. ரு

ஊழி யந்தத்தில் ஒலிகடல் ஓட்டந்திவ் வுலகங்க ளவைமூட
ஆழி யெந்தையென் றமரர்கள் சரண்புக அந்தரத் துயர்ந்தார்தாம்
யாழின் நேர்மொழி யேழையோ டினிதுறை யின்பன் எம்பெருமானார்
வாழி மாநகர்ச் சிரபுரந் தொழுதெழ வல்வினை அடையாவே. ௬

பேய்கள் பாடப்பல் பூதங்கள் துதிசெயப் பிணமிடு சுடுகாட்டில்
வேய்கொள் தோளிதான் வெள்கிட மாநடம் ஆடும்வித் தகனார்ஒண்
சாய்கள் தான்மிக வுடையதண் மறையவர் தகுசிர புரத்தார்தாந்
தாய்க ளாயினார் பல்லுயிர்க் குந்தமைத் தொழுமவர் தளராரே. ௭

இலங்கு பூண்வரை மார்புடை யிராவணன் எழில்கொள்வெற்
பெடுத்தன்று, கலங்கச் செய்தலுங் கண்டுதங் கழலடி நெரியவைத்
தருள்செய்தார், புலங்கள் செங்கழு நீர்மலர்த் தென்றல்மன் றதனி
டைப் புகுந்தாருங், குலங்கொள் மாமறை யவர்சிர புரந்தொழு தெழ
வினை குறுகாவே. ௮

வண்டு சென்றணை மலர்மிசை நான்முகன் மாயனென் றிவரன்று
கண்டு கொள்ளவோர் ஏனமோ டன்னமாய்க் கிளறியும் பறந்துந்தாம்
பண்டு கண்டது காணவே நீண்டஎம் பசுபதி பரமேட்டி
கொண்ட செல்வத்துச் சிரபுரந் தொழுதெழ வினையவை கூடாவே.

பறித்த புன்தலைக் குண்டிகைச் சமணரும் பார்மிசைத் துவர்தோய்ந்த
செறித்த சீவரத் தேரருந் தேர்கிலாத் தேவர்கள் பெருமானார்
முறித்து மேதிகள் கரும்புதின் றாவியின் மூழ்கிட இளவாளை
வெறித்துப் பாய்வயற் சிரபுரந் தொழவினை விட்டிடும் மிகத்தானே. ௧௦

பரசு பாணியைப் பத்தர்கள் அத்தனைப் பையர வோடக்கு
நிரைசெய் பூண்திரு மார்புடை நிமலனை நித்திலப் பெருந்தொத்தை
விரைசெய் பூம்பொழிற் சிரபுரத் தண்ணலை விண்ணவர் பெருமானைப்
பரவு சம்பந்தன் செந்தமிழ் வல்லவர் பரமனைப் பணிவாரே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருஅம்பர்மாகாளம் - பண் - நட்டராகம்

திருச்சிற்றம்பலம்

புல்கு பொன்னிறம் புரிசடை நெடுமுடிப் போழிள மதிசூடிப்
பில்கு தேனுடை நறுமலர்க் கொன்றையும் பிணையல்செய் தவர்மேய
மல்கு தண்டுறை யரிசிலின் வடகரை வருபுனல் மாகாளம்
அல்லும் நன்பக லுந்தொழும் அடியவர்க் கருவினை அடையாவே. க

அரவம் ஆட்டுவர் அந்துகில் புலியதள் அங்கையில் அனலேந்தி
இரவும் ஆடுவர் இவையிவர் சரிதைக ளிசைவன பலபூதம்
மரவந் தோய்பொழில் அரிசிலின் வடகரை வருபுனல் மாகாளம்
பரவி யும்பணிந் தேத்தவல் லாரவர் பயன்தலைப் படுவாரே. உ

குணங்கள் கூறியுங் குற்றங்கள் பரவியுங் குரைகழ லடிசேரக்
கணங்கள் பாடவுங் கண்டவர் பரவவுங் கருத்தறிந் தவர்மேய
மணங்கொள் பூம்பொழில் அரிசிலின் வடகரை வருபுனல் மாகாளம்
வணங்கும் உள்ளமோ டணையவல் லார்களை வல்வினை யடையாவே. ௩

எங்கு மேதுமோர் பிணியிலர் கேடிலர் இழைவளர் நறுங்கொன்றை
தங்கு தொங்கலுந் தாமமுங் கண்ணியுந் தாமகிழ்ந் தவர்மேய
மங்குல் தோய்பொழில் அரிசிலின் வடகரை வருபுனல் மாகாளம்
கங்கு லும்பக லுந்தொழும் அடியவர் காதன்மை யுடையாரே. ௪

நெதியம் என்னுள போகமற் றென்னுள நிலமிசை நலமாய
கதியம் என்னுள வானவர் என்னுளர் கருதிய பொருள்கூடில்
மதியந் தோய்பொழில் அரிசிலின் வடகரை வருபுனல் மாகாளம்
புதிய பூவொடு சாந்தமும் புகையுங்கொண் டேத்துதல் புரிந்தோர்க்கே.

கண்ணு லாவிய கதிரொளி முடிமிசைக் கனல்விடு சுடர்நாகம்
தெண்ணி லாவொடு திலதமும் நகுதலை திகழவைத் தவர்மேய
மண்ணு லாம்பொழில் அரிசிலின் வடகரை வருபுனல் மாகாளம்
உண்ணி லாநினைப் புடையவர் யாவரிவ் வுலகினில் உயர்வாரே. ௬

தூசு தானரைத் தோலுடைக் கண்ணியஞ் சுடர்விடு நறுங்கொன்றை
பூசு வெண்பொடிப் பூசுவ தன்றியும் புகழ்புரிந் தவர்மேய
மாசு லாம்பொழில் அரிசிலின் வடகரை வருபுனல் மாகாளம்
பேசும் நீர்மையர் யாவரிவ் வுலகினிற் பெருமையைப் பெறுவாரே. எ

பவ்வ மார்கடல் இலங்கையர் கோன்றனைப் பருவரைக் கீழூன்றி
எவ்வந் தீரஅன் றிமையவர்க் கருள்செய்த இறையவன் உறைகோயில்
மவ்வந் தோய்பொழில் அரிசிலின் வடகரை வருபுனல் மாகாளம்
கவ்வை யால்தொழும் அடியவர் மேல்வினை கனலிடைச் செதிளன்றே.

உய்யுங் காரணம் உண்டென்று கருதுமின் ஒளிகிளர் மலரோனும்
பையகோள் பாம்பணைப் பள்ளிகொள் அண்ணலும் பரவநின் றவர்மேய
மையுலாம்பொழில் அரிசிலின் வடகரை வருபுனல் மாகாளம்
கையி னால்தொழு தவலமும் பிணியுந்தம் கவலையுங் களைவாரே. ௯

பிண்டி பாலரும் மண்டைகொள் தேரும் பீலிகொண் டுழல்வாரும்
கண்ட நூலருங் கடுந்தொழி லாளருங் கழறநின் றவர்மேய
வண்டு லாம்பொழில் அரிசிலின் வடகரை வருபுனல் மாகாளம்
பண்டு நாம்செய்த பாவங்கள் பற்றறப் பரவுதல் செய்வோமே. ௧௦

மாறு தன்னொடு மண்மிசை யில்லது வருபுனல் மாகாளத்
தீறும் ஆதியு மாகிய சோதியை யேறமர் பெருமானை
நாறு பூம்பொழிற் காழியுள் ஞானசம் பந்தன தமிழ்மாலை
கூறு வாரையுங் கேட்கவல் லாரையுங் குற்றங்கள் குறுகாவே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருக்கடிக்குளம் - பண் - நட்டராகம்

திருச்சிற்றம்பலம்

பொடிகொள் மேனிவெண் ணூலினர் தோலினர் புலியுரி யதளாடை, கொடிகொள் ஏற்றினர் மணிகிணின் எனவரு குரைகழல் சிலம்பார்க்கக், கடிகொள் பூம்பொழில் சூழ்தரு கடிக்குளத் துறையுங் கற் பகத்தைத்தம், முடிகள் சாய்த்தடி வீழ்தரும் அடியரை முன் வினை மூடாவே. ௧

விண்க ளார்தொழும் விளக்கினைத் துளக்கிலா விகிர்தனை விழவாரும்
மண்க ளார்துதித் தன்பரா யின்புறும் வள்ளலை மருவித்தம்
கண்க ளார்தரக் கண்டுநங் கடிக்குளத் துறைதரு கற்பகத்தைப்
பண்க ளார்தரப் பாடுவார் கேடிலர் பழியிலர் புகழாமே. ௨

பொங்கு நற்கரி யுரியது போர்ப்பது புலியதள் அழல்நாகம்
தங்க மங்கையைப் பாகம துடையவர் தழல்புரை திருமேனிக்
கங்கை சேர்தரு சடையினர் கடிக்குளத் துறைதரு கற்பகத்தை
எங்கு மேத்திநின் றின்புறும் அடியரை யிடும்பைவந் தடையாவே. ௩

நீர்கொள் நீள்சடை முடியனை நித்திலத் தொத்தினை நிகரில்லாப் பார்கொள் பாரிடத் தவர்தொழும் பவளத்தைப் பசும்பொனை விசும் பாரும், கார்கொள் பூம்பொழில் சூழ்தரு கடிக்குளத் துறையுங்கற் பகந் தன்னைச், சீர்கொள் செல்வங்க ளேத்தவல் லார்வினை தேய்வது திண்ணமே. ௪

சுரும்பு சேர்சடை முடியினன் மதியொடு துன்னிய தழல்நாகம்
அரும்பு தாதவிழ்ந் தலர்ந்தன மலர்பல கொண்டடி யவர்போற்றக்
கரும்பு கார்மலி கொடிமிடை கடிக்குளத் துறைதரு கற்பகத்தை
விரும்பு வேட்கையோ டுளமகிழ்ந் துரைப்பவர் விதியுடை யவர்தாமே.

மாதி லங்கிய பாகத்தன் மதியமொ டலைபுனல் அழல்நாகம்
போதி லங்கிய கொன்றையும் மத்தமும் புரிசடைக் கழகாகக்
காதி லங்கிய குழையினன் கடிக்குளத் துறைதரு கற்பகத்தின்
பாதங் கைதொழு தேத்தவல் லார்வினை பற்றறக் கெடுமன்றே. ௬

குலவு கோலத்த கொடிநெடு மாடங்கள் குழாம்பல குளிர்பொய்கை
உலவு புள்ளினம் அன்னங்கள் ஆலிடும் பூவைசே ருங்கூந்தல்
கலவை சேர்தரு கண்ணியன் கடிக்குளத் துறையுங்கற் பகத்தைச்சீர்
நிலவி நின்றுநின் றேத்துவார் மேல்வினை நிற்ககில் லாதானே. ௭

மடுத்த வாளரக் கன்னவன் மலைதன்மேல் மதியிலா மையிலோடி
எடுத்த லும்முடி தோள்கரம் நெரிந்திற இறையவன் விரலூன்றக்
கடுத்து வாயொடு கையெடுத் தலறிடக் கடிக்குளந் தனில்மேவிக்
கொடுத்த பேரருட் கூத்தனை யேத்துவார் குணமுடை யவர்தாமே. ௮

நீரி னார்கடல் துயின்றவன் அயனொடு நிகழடி முடிகாணார்
பாரி னார்விசும் புறப்பரந் தெழுந்ததோர் பவளத்தின் படியாகிக்
காரி னார்பொழில் சூழ்தரு கடிக்குளத் துறையுங்கற் பகத்தின்றன்
சீரி னார்கழல் ஏத்தவல் லார்களைத் தீவினை யடையாவே. ௯

குண்டர் தம்மொடு சாக்கியர் சமணருங் குறியினில்நெறிநில்லா [ண்ட
மிண்டர் மிண்டுரை கேட்டவை மெய்யெனக் கொள்ளன்மின் விடமு
கண்டர் முண்டநன் மேனியர் கடிக்குளத் துறைதரும் எம்மீசர் [மே.
தொண்டர் தொண்டரைத் தொழுதடி பணிமின்கள் தூநெறி யெளிதா

தனமலி புகழ்தயங் குபூந்த ராயவர் மன்னன்நற் சம்பந்தன்
மனமலி புகழ்வண் தமிழ்மா லைகள் மாலதாய் மகிழ்வோடும்
கனம விகட லோதம்வந் துலவிய கடிக்குளத் தமர்வானை
இனம விந்திசை பாடவல் லார்கள்போ யிறைவனோ டுறைவாரே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருக்கீழ்வேளூர் - பண் - நட்டராகம்

திருச்சிற்றம்பலம்

மின்னு லாவிய சடையினர் விடையினர் மிளிர்தரும் அரவோடும்
பன்னு லாவிய மறையொலி நாவினர் கறையணி கண்டத்தர்
பொன்னு லாவிய கொன்றையந் தாரினர் புகழ்மிகு கீழ்வேளூர்
உன்னு லாவிய சிந்தையர் மேல்வினை யோடிட வீடாமே. ௧

நீரு லாவிய சடையிடை யரவொடு மதிசிர நிரைமாலை
வாரு லாவிய வனமுலை யவளொடு மணிசிலம் பவையார்க்க
ஏரு லாவிய இறைவன துறைவிடம் எழில்திகழ் கீழ்வேளூர்
சீரு லாவிய சிந்தைசெய் தணைபவர் பிணியொடு வினைபோமே. ௨

வெண்ணி லாமிகு விரிசடை யரவொடு வெள்ளெருக் கலர்மத்தம்
பண்ணி லாவிய பாடலோ டாடலர் பயில்வுறு கீழ்வேளூர்ப்
பெண்ணி லாவிய பாகனைப் பெருந்திருக் கோயிலெம் பெருமானை
உண்ணி லாவிநின் றுன்கிய சிந்தையார் உலகினில் உள்ளாரே. ௩

சேடு லாவிய கங்கையைச் சடையிடைத் தொங்கவைத் தழகாக
நாடு லாவிய பலிகொளும் நாதனூர் நலமிகு கீழ்வேளூர்ப்
பீடு லாவிய பெருமையர் பெருந்திருக் கோயிலுட் பிரியாது
நீடு லாவிய நிமலனைப் பணிபவர் நிலமிகப் பெறுவாரே. ௪

துன்று வார்சடைச் சுடர்மதி நகுதலை வடமணி சிரமாலை
மன்று லாவிய மாதவர் இனிதியல் மணமிகு கீழ்வேளூர்

நின்று நீடிய பெருந்திருக் கோயிலின் நிமலனை நினைவோடும்
சென்று லாவிநின் றேத்தவல் லார்வினை தேய்வது திணமாமே. ௫.

கொத்து லாவிய குழல்திகழ் சடையனைக் கூத்தனை மகிழ்ந்துள்கித்
தொத்து லாவிய நூலணி மார்பினர் தொழுதெழு கீழ்வேளூர்ப்
பித்து லாவிய பத்தர்கள் பேணிய பெருந்திருக் கோயில்மன்னும்
முத்து லாவிய வித்தினை யேத்துமின் முடுகிய இடர்போமே. ௬

பிறை நிலாவிய சடையிடைப் பின்னலும் வன்னியுந் துன்னும்
கறை நிலாவிய கண்டர்எண் தோளினர் காதல்செய் கீழ்வேளூர்
மறை நிலாவிய அந்தணர் மலிதரு பெருந்திருக் கோயில்மன்னும்
நிறை நிலாவிய ஈசனை நேசத்தால் நினைபவர் வினைபோமே. ௭

மலை நிலாவிய மைந்தன்அம் மலையினை யெடுத்தலும் அரக்கன்றன்
தலை யெலாம்நெரிந் தலறிட வூன்றினன் உறைதரு கீழ்வேளூர்க்
கலை நிலாவிய நாவினர் காதல்செய் பெருந்திருக் கோயிலுள்
நிலை நிலாவிய ஈசனை நேசத்தால் நினையவல் வினைபோமே. ௮

மஞ்சு லாவிய கடற்கிடந் தவனொடு மலரவன் காண்பொண்ணுப்
பஞ்சு லாவிய மெல்லடிப் பார்ப்பதி பாகனைப் பரிவோடும்
செஞ்சொ லார்பலர் பரவிய தொல்புகழ் மல்கிய கீழ்வேளூர்
நஞ்சு லாவிய கண்டனை நணுகுமின் நடலைகள் நணுகாவே. ௯.

சேறு லாவிய தலையினர் நிலையிலா அமணர்கள் சீவரத்தார்
வீறி லாதவெஞ் சொற்பல விரும்பன்மின் சுரும்பமர் கீழ்வேளூர்
ஏறு லாவிய கொடியனை யேதமில் பெருந்திருக் கோயில்மன்னு
பேறு லாவிய பெருமையன் திருவடி பேணுமின் தவமாமே. ௧0

குருண்ட வார்குழற் சடையுடைக் குழகனை அழகமர் கீழ்வேளூர்த்
திரண்ட மாமறை யவர்தொழும் பெருந்திருக் கோயிலெம் பெருமானை
இருண்ட மேதியின் இனம்மிகு வயல்மல்கு புகலிமன் சம்பந்தன்
தெருண்ட பாடல்வல் லாரவர் சிவகதி பெறுவது திடமாமே. ௧௧.

திருச்சிற்றம்பலம்

திருவலஞ்சுழி - பண் - நட்டராகம்

திருச்சிற்றம்பலம்

என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே யிருங்கடல் வையத்து
முன்னம் நீபுரி நல்வினைப் பயனிடை முழுமணித் தரளங்கள்
மன்னு காவிரி சூழ்திரு வலஞ்சுழி வாணனை வாயாரப்
பன்னி யாதரித் தேத்தியும் பாடியும் வழிபடும் அதனாலே. ௧

விண்டொ ழிந்தன நம்முடை வல்வினை விரிகடல் வருநஞ்சம்
உண்டி றைஞ்சுவா னவர்தமைத் தாங்கிய இறைவனை உலகத்தில்
வண்டு வாழ்குழல் மங்கையோர் பங்கனை வலஞ்சுழி யிடமாகக் [யாலே.
கொண்ட நாதன்மெய்த் தொழில்புரி தொண்டரோ டினிதிருந் தமை

திருந்த லார்புரந் தீயெழச் செறுவன விறலின்கண் அடியாரைப்
பரிந்து காப்பன பத்தியில் வருவன மத்தமாம் பிணிநோய்க்கு
மருந்து மாவன மந்திர மாவன வலஞ்சுழி யிடமாக
இருந்த நாயகன் இமையவ ரேத்திய இணையடித் தலந்தானே. ௩

கறைகொள் கண்டத்தர் காய்கதிர் நிறத்தினர் அறத்திற முனிவர்க்கன்
றிறைவ ராலிடை நீழலி லிருந்துகந் தினிதருள் பெருமானார்
மறைக ளோதுவர் வருபுனல் வலஞ்சுழி யிடம்மகிழ்ந் தருங்கானத்
தறைக ழல்சிலம் பார்க்கநின் றாடிய அற்புதம் அறியோமே. ௪

மண்ணர் நீர்விண் காற்றின ராற்றலாம் எரியுரு வொருபாகம்
பெண்ண ராணெனத் தெரிவரு வடிவினர் பெருங்கடற் பவளம்போல்
வண்ண ராகிலும் வலஞ்சுழி பிரிகிலார் பரிபவர் மனம்புக்க
எண்ண ராகிலும் எனைப்பல இயம்புவர் இணையடி தொழுவாரே. ௫

ஒருவ ராலுவ மிப்பதை யரியதோர் மேனியர் மடமாதர்
இருவ ராதரிப் பார்பல பூதமும் பேய்களும் அடையாளம்
அருவ ராததோர் வெண்டலை கைப்பிடித் தகந்தொறும் பலிக்கென்று
வருவ ரேலவர் வலஞ்சுழி யடிகளே வரிவளை கவர்ந்தாரே. ௬

குன்றி யூர்குட மூக்கிடம் வலம்புரங் குலவிய நெய்த்தானம்
என்றிவ் வூர்களி லோமென்றும் இயம்புவர் இமையவர் பணிகேட்பார்
அன்றி யூர்தமக் குள்ளன அறிகிலோம் வலஞ்சுழி யானார்பால்
சென்ற வூர்தனில் தலைப்பட லாமென்று சேயிழை தளர்வாமே. ௭

குயிலின் நேர்மொழிக் கொடியிடை வெருவுறக் குலவரைப் பரப்பாய
கயிலை யைப்பிடித் தெடுத்தவன் கதிர்முடி தோளிரு பதுமூன்றி
மயிலின் நேரன சாயலோ டமர்ந்தவன் வலஞ்சுழி யெம்மானைப்
பயில வல்லவர் பரகதி காண்பவர் அல்லவர் காணாரே. ௮

அழலை யோம்பிய அலர்மிசை அண்ணலும் அரவணைத் துயின்றானும்
கழலுஞ் சென்னியுங் காண்பரி தாயவர் மாண்பமர் தடக்கையில்
மழலை வீணையர் மகிழ்திரு வலஞ்சுழி வலங்கொடு பாதத்தால்
சுழலு மாந்தர்கள் தொல்வினை யதனொடு துன்பங்கள் களைவாரே. ௯

அறிவி லாதவன் சமணர்கள் சாக்கியர் தவம்புரிந் தவஞ்செய்வார்
நெறிய லாதன கூறுவர் மற்றவை தேறன்மின் மாறாநீர்
மறியு லாந்திரைக் காவிரி வலஞ்சுழி மருவிய பெருமானைப்
பிறிவி லாதவர் பெறுகதி பேசிடில் அளவறுப் பொண்ணாதே. ௧௦

மாதொர் கூறனை வலஞ்சுழி மருவிய மருந்தினை வயற்காழி
நாதன் வேதியன் ஞானசம் பந்தன்வாய் நவிற்றிய தமிழ்மாலை
ஆதரித்திசை கற்றுவல் லார்சொலக் கேட்டுகந் தவர் தம்மை
வாதி யாவினை மறுமைக்கும் இம்மைக்கும் வருத்தம்வந் தடையாவே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருக்கேதீச்சரம் - பண் - நட்டராகம்

திருச்சிற்றம்பலம்

விருது குன்றம்மா மேருவில் நாணர வாஅனல் எரிஅம்பாப்
பொருது மூவெயில் செற்றவன் பற்றிநின் றுறைபதி யெந்நாளும்
கருது கின்றவூர் கனைகடற் கடிகமழ் பொழிலணி மாதோட்டம்
கருத நின்றகே தீச்சரங் கைதொழக் கடுவினை யடையாவே. ௧

பாடல் வீணையர் பலபல சரிதையர் எருதுகைத் தருநட்டம்
ஆடல் பேணுவர் அமரர்கள் வேண்டநஞ் சுண்டிருள் கண்டத்தர்
ஈட மாவது இருங்கடற் கரையினில் எழில்திகழ் மாதோட்டம்
கேடி லாதகே தீச்சரந் தொழுதெழக் கெடுமிடர் வினைதானே. ௨

பெண்ணொர் பாகத்தர் பிறைதவழ் சடையினர் அறைகழல் சிலம்பார்க்
சுண்ண மாதரித் தாடுவர் பாடுவர் அகந்தொறும் இடுபிச்சைக் [கச்

குன்ண லாவதோர் இச்சையி னுழல்பவர் உயர்தரு மாதோட்டத்
தன்னல் னன்னுகே தீச்சரம் அடைபவர்க் கருவினை யடையாவே.

பொடிகொள் மேனியர் புலியத ளரையினர் விரிதரு காத்தேந்தும்
வடிகொள் மூவில வேலினர் நூலினர் மறிகடல் மாதோட்டத்
தடிக ளாதரித் திருந்தகே தீச்சரம் பரிந்தசிந் தையராகி [மே.
முடிகள் சாய்த்தடி பேணவல் லார்தம்மேல் மொய்த்தெழும் வினைபோ

நல்ல ராற்றவும் ஞானநன் குடையர்தம் மடைந்தவர்க் கருளீய
வல்லர் பார்மிசை வான்பிறப் பிறப்பிலர் மலிகடல் மாதோட்டத்
தெல்லையில்புக ழெந்தைகே தீச்சரம் இராப்பகல் நினைந்தேத்தி
அல்லல் ஆசறுத் தானடி யிணைதொழும் அன்பராம் அடியாரே. ரு

பேழை வார்சடைப் பெருந்திரு மகள்தனைப் பொருந்தவைத் தொருபாகம், மாழை யங்கயற் கண்ணிபா லருளிய பொருளினர் குடி வாழ்க்கை, வாளை யம்பொழில் மந்திகள் களிப்புற மருவிய மாதோட் டக், கேழல் வெண்மருப் பணிந்தநீள் மார்பர்கே தீச்சரம் பிரியாரே.

பண்டு நால்வருக் கறமுரைத் தருளிப்பல் லுலகினில் உயிர்வாழ்க்கை
கண்ட நாதனுர் கடலிடங் கைதொழக் காதலித் துறைகோயில்
வண்டு பண்செயு மாமலர்ப் பொழில்மஞ்ஞை நடமிடு மாதோட்டம்
தொண்டர் நாள்தொறுந் துதிசெயஅருள் செய்கே தீச்சர மதுதானே.

தென்னி லங்கையர் குலபதி மலைநலிந் தெடுத்தவன் முடிதிண்தோள்
தன்ன லங்கெட அடர்த்தவற் கருள்செய்த தலைவனுர் கடல்வாயப்
பொன்னி லங்கிய முத்துமா மணிகளும் பொருந்திய மாதோட்டத்
துன்னி யன்பொடும் அடியவ ரிறைஞ்சுகே தீச்சரத் துள்ளாரே. அ

பூவு ளானுமப் பொருகடல் வண்ணனும் புவியிடந் தெழுந்தோடி
மேவி நாடிநின் அடியிணை காண்கிலா வித்தக மென்னுகும்
மாவும் பூகமுங் கதலியும் நெருங்குமா தோட்டநன் னகர்மன்னித்
தேவி தன்னெடுந் திருந்துகே தீச்சரத் திருந்தஎம் பெருமானே. கூ

புத்த ராய்ச்சில புனைதுகி லுடையவர் புறனுரைச் சமண்ஆதர்
எத்த ராகிநின் றுண்பவ ரியம்பிய ஏழைமை கேளேன்மின்
மத்த யானையை மறுகிட உரிசெய்து போர்த்தவர் மாதோட்டத்
தத்தர் மன்னுபா லாவியின் கரையிற்கே தீச்சரம் அடைமின்னே. க0

மாடெ லாம்மண முரசெனக் கடலின தொலிகவர் மாதோட்டத்
தாட லேறுடை அண்ணல்கே தீச்சரத் தடிகளை யணிகாழி
நாடு ளார்க்கிறை ஞானசம் பந்தன்சொல் நவின்றெழு பாமாலைப்
பாட லாயின பாடுமின் பத்தர்கள் பரகதி பெறலாமே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருவிற்குடிவீரட்டம் - பண் - நட்டராகம்

திருச்சிற்றம்பலம்

வடிகொள் மேனியர் வானமா மதியினர் நதியினர் மதுவார்ந்த [ப்பர்
கடிகொள் கொன்றையஞ் சடையினர் கொடியினர் உடைபுலி யதளார்
விடைய தேறும்எம் மானமர்ந் தினிதுறை விற்குடி வீரட்டம்
அடிய ராகிநின் றேத்தவல் லார்தமை அருவினை யடையாவே. ௧

களங்கொள் கொன்றையுங் கதிர்விரி மதியமுங் கடிகமழ் சடைக்கேற்றி
உளங்கொள் பத்தர்பால் அருளிய பெருமையர் பொருகரி யுரிபோர்த்து
விளங்கும் மேனியர் எம்பெரு மானுறை விற்குடி வீரட்டம்
வளங்கொள் மாமல ரால்நினைந் தேத்துவார் வருத்தம தறியாரே. ௨

கரிய கண்டத்தர் வெளியவெண் பொடியணி மார்பினர் வலங்கையில்
எரியர் புன்சடை யிடம்பெறக் காட்டகத் தாடிய வேடத்தர்
விரியும் மாமலர்ப் பொய்கைசூழ் மதுமலி விற்குடி வீரட்டம்
பிரிவி லாதவர் பெருந்தவத் தோரெனப் பேணுவ ருலகத்தே. ௩

பூதஞ் சேர்ந்திசை பாடலர் ஆடலர் பொலிதர நலமார்ந்த
பாதஞ் சேரிணைச் சிலம்பினர் கலம்பெறு கடலெழு விடமுண்டார்
வேதம் ஓதிய நாவுடை யானிடம் விற்குடி வீரட்டம்
சேரும் நெஞ்சினர்க் கல்லதுண் டோபிணி தீவினை கெடுமாறே. ௪

கடிய ஏற்றினர் கனலன மேனியர் அனலெழ வூர்மூன்றும்
இடிய மால்வரை கால்வளைத் தான்றன தடியவர் மேலுள்ள
வெடிய வல்வினை வீட்டுவிப் பானுறை விற்குடி வீரட்டம்
படிய தாகவே பரவுமின் பரவினாற் பற்றறும் அருநோயே. ௫

பெண்ணொர் கூறினர் பெருமையர் சிறுமறிக் கையினர் மெய்யார்ந்த
அண்ணலன் புசெய் வாரவர்க் கெளியவர் அரியவர் அல்லார்க்கு

விண்ணி லார்பொழில் மல்கிய மலர்விரி விற்குடி வீரட்டம்
எண்ணி லாவிய சிந்தையி னார்தமக் கிடர்கள்வந் தடையாவே. ௬, ௭

இடங்கொள் மாகடல் இலங்கையர் கோன்தனை யிகலழி தரவூன்று
திடங்கொள் மால்வரை யானுரை யார்தரு பொருளினன் இருளார்ந்த
விடங்கொள் மாமிட றுடையவ னுறைபதி விற்குடி வீரட்டம்
தொடங்கு மாறிசை பாடிநின் றார்தமைத் துன்பம்நோ யடையாவே. ௮

செங்கண் மாலொடு நான்முகன் தேடியுந் திருவடி யறியாமை
எங்கு மாரெரி யாகிய இறைவனை யறைபுனல் முடியார்ந்த
வெங்கண் மால்வரைக் கரியுரித் துகந்தவன் விற்குடி வீரட்டம்
தங்கை யால்தொழு தேத்தவல் லாரவர் தவம்மல்கு குணத்தாரே. ௯

பிண்ட முண்டுழல் வார்களும் பிரிதுவ ராடைய ரவர்வார்த்தை
பண்டு மின்றுமோர் பொருளெனக் கருதன்மின் பரிவுறு வீர்கேண்மின்
விண்ட மாமலர்ச் சடையவ னிடமெனில் விற்குடி வீரட்டம்
கண்டு கொண்டடி காதல்செய் வாரவர் கருத்துறுங் குணத்தாரே. ௧0

விலங்க லேசிலை யிடமென வுடையவன் விற்குடி வீரட்டத்
திலங்கு சோதியை யெம்பெரு மான்றனை யெழில்திகழ் கழல்பேணி
நலங்கொள் வாழ்பொழிற் காழியுள் ஞானசம் பந்தனற் றமிழ்மாலை
வலங்கொ டேயிசை மொழியுமின் மொழிந்தக்கால் மற்றது வரமாமே.

திருச்சிற்றம்பலம்

திருக்கோட்டூர் - பண் - நட்டராகம்

திருச்சிற்றம்பலம்

நீல மார்தரு கண்டனே நெற்றியோர் கண்ணனே யொற்றைவிடைச்
சூல மார்தரு கையனே துன்றுபைம் பொழில்கள் சூழ்ந்தழகாய
கோல மாமலர் மணங்கமழ் கோட்டூர்நற் கொழுந்தேயென் றெழுவார்கள்
கால னீன்தல மதனிடைப் புகழ்மிகத் தாங்குவர் பாங்காலே. ௧

பங்க யம்மலர்ச் சீறடிப் பஞ்சுறு மெல்விர லரவல்குல், மங்கை
மார்பலர் மயில்குயில் கிளியென மிழற்றிய மொழியார்மென், கொங்கை
யார்குழாங் குணலைசெய் கோட்டூர்நற் கொழுந்தேயென் றெழுவார்கள்,
சங்கை யொன்றில ராகிச்சங் கான்திரு அருள்பெறல் எளிதாமே. ௨

நம்ப னூர்நல மலர்கொடு தொழுதெழும் அடியவர் தமக்கெல்லாம்
செம்பொ னூர்தரும் எழில்திகழ் முலையவர் செல்வம்மல் கியநல்ல [கள்
கொம்ப னூர்தொழு தாடிய கோட்டூர்நற் கொழுந்தேயென் றெழுவார்
அம்பொ னூர்தரு முலகினில் அமரரோ டமர்ந்தினி திருப்பாரே. ௩

பலவு நீள்பொழில் தீங்கனி தேன்பலா மாங்கனி பயில்வாய
கலவ மஞ்ஞைகள் நிலவுசொற் கிள்ளைகள் அன்னஞ்சேர்ந் தழகாய
குலவும் நீள்வயற் கயலுகள் கோட்டூர்நற் கொழுந்தேயென் றெழுவார்கள்
நிலவு செல்வத்த ராகிநீள் நிலத்திடை நீடிய புகழாரே. ௪

உருகு வாருள்ளத் தொண்சுடர் தனக்கென்றும் அன்பராம் அடியார்கள்
பருகும் ஆரமு தெனநின்று பரிவொடு பத்திசெய் தெத்திசையும்
குருகு வாழ்வயல் சூழ்தரு கோட்டூர்நற் கொழுந்தேயென் றெழுவார்கள்
அருகு சேர்தரு வினைகளும் அகலும்போய் அவனருள் பெறலாமே.

துன்று வார்சடைத் தூமதி மத்தமுந் துன்னெருக் கார்வன்னி
பொன்றி னூர்தலைக் கலனொடு பரிகலம் புலியுரி யுடையாடை [வாரை
கொன்றை பொன்னென மலர்தரு கோட்டூர்நற் கொழுந்தேயென்றெழு
என்று மேத்துவார்க் கிடரிலை கேடிலை ஏதம்வந் தடையாவே. ௬

மாட மாளிகை கோபுரங் கூடங்கள் மணியரங் கணிசாலை
பாடு சூழ்மதிற் பைம்பொன்செய் மண்டபம் பரிசொடு பயில்வாய
கூடு பூம்பொழில் சூழ்தரு கோட்டூர்நற் கொழுந்தேயென் றெழுவார்கள்
கேட தொன்றில ராகிநல் லுலகினிற் கெழுவுவர் புகழாலே. ௭

ஒளிகொள் வாளெயிற் றரக்கனவ் வுயர்வரை யெடுத்தலும் உமை யஞ்சிச், சுளிய ஊன்றலுஞ் சோர்ந்திட வாளொடு நாளவற் கருள் செய்த, குளிர்கொள் பூம்பொழில் சூழ்தரு கோட்டூர்நற் கொழுந்தினைத் தொழுவார்கள், தளிர்கொள் தாமரைப் பாதங்கள் அருள்பெறுந் தவ முடை யவர்தாமே. ௮

பாடி யாடும்மெய்ப் பத்தர்கட் கருள்செயும் முத்தினைப் பவளத்தைத்
தேடி மாலயன் காணவொண் ணாதஅத் திருவினைத் தெரிவைமார்
கூடி ஆடவர் கைதொழு கோட்டூர்நற் கொழுந்தேயென் றெழுவார்கள்
நீடு செல்வத்த ராகியிவ் வுலகினில் நிகழ்தரு புகழாரே. ௯

கோணல் வெண்பிறைச் சடையனைக் கோட்டூர்நற் கொழுந்தி னைச் செழுந்திரளைப், பூணல்செய்தடி போற்றுமின் பொய்யிலா மெய் யன்நல் லருளென்றும்,காண லொன்றிலாக் காரமண் தேரர்குண் டாக் கர்சொற் கருதாதே, பேணல் செய்தா னைத்தொழும் அடியவர் பெரு மையைப் பெறுவாரே. ௧௦

பந்த லாவிரற் பவளவாய்த் தேன்மொழிப் பாவையோ டுரு வாரும், கொந்த லாமலர் விரிபொழிற் கோட்டூர்நற் கொழுந்தினைச் செழும்பவளம், வந்த லாவிய காழியுள் ஞானசம் பந்தன்வாய்ந் துரை செய்த, சந்த லாந்தமிழ் மாலைகள் வல்லவர் தாங்குவர் புகழாலே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருமாந்துறை - பண் - நட்டராகம்

திருச்சிற்றம்பலம்

செம்பொ ஞர்தரு வேங்கையும் ஞாழலுஞ் செருந்திசெண் பகம்ஆனைக்
கொம்பும் ஆரமும் மாதவி சுரபுனை குருந்தலர் பரந்துந்தி
அம்பொன் நேர்வரு காவிரி வடகரை மாந்துறை யுறைகின்ற
எம்பி ரானிமை யோர்தொழு பைங்கழல் ஏத்துதல் செய்வோமே. ௧

விளவு தேனொடு சாதியின் பலங்களும் வேய்மணி நிரந்துந்தி
அளவி நீர்வரு காவிரி வடகரை மாந்துறை யுறைவானத்
தளவ மான்மக னைக்கனைக் காமனைச் சுடவிழித் தவனெற்றி
அளக வாறுதல் அரிவைதன் பங்கனை யன்றிமற் றறியோமே. ௨

கோடு தேன்சொரி குன்றிடைப் பூகமுங் கூந்தலின் குலைவாரி
ஓடு நீர்வரு காவிரி வடகரை மாந்துறை யுறைநம்பன்
வாடி ஞர்தலை யிற்பலி கொள்பவன் வானவர் மகிழ்ந்தேத்தும்
கேடி லாமணி யைத்தொழல் அல்லது கெழுமுதல் அறியோமே. ௩

இலவ ஞாழலும் ஈஞ்சொடு சுரபுன்னை யிளமரு திலவங்கம்
கலவி நீர்வரு காவிரி வடகரை மாந்துறை யுறைகண்டன்
அலைகொள் வார்புனல் அம்புலி மத்தமும் ஆடர வுடன்வைத்த
மலையை வானவர் கொழுந்தினை யல்லது வணங்குதல் அறியோமே. ௪

கோங்கு செண்பகங் குருந்தொடு பாதிரி குரவிடை மலருந்தி
ஓங்கி நீர்வரு காவிரி வடகரை மாந்துறை யுறைவானைப்
பாங்கி னாலிடுந் தூபமுந் தீபமும் பாட்டவி மலர்சேர்த்தித்
தாங்கு வாரவர் நாமங்கள் நாவினில் தலைப்படுந் தவத்தோரே. ரு

பெருகு சந்தனங் காரகில் பீலியும் பெருமரம் நிமிர்ந்துந்திப்
பொருது காவிரி வடகரை மாந்துறைப் புனிதனெம் பெருமானைப்
பரிவி னாலிருந் திரவியும் மதியமும் பார்மன்னர் பணிந்தேத்த
மருத வானவர் வழிபடு மலரடி வணங்குதல் செய்வோமே. ௬

நறவம் மல்லிகை முல்லையும் மௌவலும் நாண்மல ரவைவாரி
இறவில் வந்தெறி காவிரி வடகரை மாந்துறை யிறைஅன்றங்
கறவ னாகிய கூற்றினைச் சாடிய அந்தணன் வரைவில்லால்
நிறைய வாங்கி வலித்தெயி லெய்தவன் நிரைகழல் பணிவோமே. எ

மந்த மார்பொழில் மாங்கனி மாந்திட மந்திகள் மாணிக்கம்
உந்தி நீர்வரு காவிரி வடகரை மாந்துறை யுறைவானை
நிந்தி யாஎடுத் தார்த்தவல் லரக்கனை நெரித்திடு விரலானைச்
சிந்தி யாமனத் தாரவர் சேர்வது தீநெறி யதுதானே. அ

நீல மாமணி நித்திலத் தொத்தொடு நிரைமலர் நிரந்துந்தி
ஆலி யாவரு காவிரி வடகரை மாந்துறை யமர்வானை
மாலும் நான்முகன் தேடியுங் காண்கிலா மலரடி யிணைநாளுங்
கோல மேத்திநின் றாடுமின் பாடுமின் கூற்றுவன் நலியானே. ௯

நின்று ணுஞ்சமண் தேரும் நிலையிலர் நெடுங்கழை நறவேலம்
நன்று மாங்கனி கதலியின் பலங்களும் நாணலின் நுரைவாரி
ஒன்றி நேர்வரு காவிரி வடகரை மாந்துறை யொருகாலம்
அன்றி யுள்ளழிந் தெழும்பரி சழகிது அதுவவர்க் கிடமாமே. க0

வரைவ ளங்கவர் காவிரி வடகரை மாந்துறை யுறைவானைச்
சிரபு ரம்பதி யுடையவன் கவுணியன் செழுமறை நிறைநாவன்
அரவெ னும்பணி வல்லவன் ஞானசம் பந்தன்அன் புறுமாலை
பரவி டுந்தொழில் வல்லவர் அல்லலும் பாவமும் இலர்தாமே. கக

திருச்சிற்றம்பலம்

திருவாய்மூர் - பண் - நட்டராகம்

திருச்சிற்றம்பலம்

தளரிள வளரொளி உமைபாடத் தாளம் மிடவோர் கழல்வீசிக்
கிளரிள மணியர வரையார்த் தாடும் வேடக் கிறிமையார் [மேல்
விளரிள முலையவர்க் கருள்நல்கி வெண்ணீ றணிந்தோர் சென்னியின்
வளரிள மதியமொ டிவராணீர் வாய்மூ ரடிகள் வருவாரே. க

வெந்தழல் வடிவினர் பொடிப்பூசி விரிதரு கோவண வுடைமே
லோர், பந்தஞ்செய் தரவசைத் தொலிபாடிப் பலபல கடைதொறும்
பலிதேர்வார், சிந்தனை புகுந்தெனக் கருள்நல்கிச் செஞ்சுடர் வண்ணர்
தம் அடிபரவ, வந்தனை பலசெய இவராணீர் வாய்மூ ரடிகள் வருவாரே.

பண்ணிற் பொலிந்த வீணையர் பதினெண் கணமு முணராநஞ்
சுண்ணப் பொலிந்த மிடற்றினர் உள்ளமுருகி லுடனுவார்
சுண்ணப் பொடிநீ றணிமார்பர் சுடர்பொற் சடைமேல் திகழ்கின்ற
வண்ணப் பிறையோ டிவராணீர் வாய்மூ ரடிகள் வருவாரே. ங

எரிகிளர் மதியமொ டெழில்நுதன்மேல் எறிபொறி யாவினொ
டாறு மூழ்க,விரிகிளர் சடையினர் விடையேறி வெருவவந்திடர்செய்த
விகிர்தனர், புரிகிளர் பொடியணி திருவகலம் பொன்செய்த வாய்மை
யர் பொன்மிளிரும், வரியர வரைக்கசைத் திவராணீர் வாய்மூ ரடிகள்
வருவாரே. ச

அஞ்சன மணிவணம் எழில்நிறமா வகமிட றணிகொள வுடல்திமில
நஞ்சினை யமரர்கள் அமுதமென நண்ணிய நறுநுதல் உமைநடுங்க
வெஞ்சின மால்களி யானையின்தோல் வெருவுறப் போர்த்ததன்நிறமு
வஞ்சனை வடிவினொ டிவராணீர் வாய்மூரடிகள் வருவாரே. [மஃதே

அல்லிய மலர்புல்கு விரிகுழலார் கழலிணை யடிநிழலவைபரவ, எல்
லியம் போதுகொண் டெரியேந்தி யெழிலொடு தொழிலவை யிசைய
வல்லார், சொல்லிய அருமறை யிசைபாடிச் சூடிளமதியினர் தோடு
பெய்து, வல்லியந் தோலுடுத் திவராணீர் வாய்மூ ரடிகள் வருவாரே. சு

கடிபடு கொன்றைநன் மலர்திகழுங் கண்ணியர் விண்ணவர் கண
மணிசேர், முடியில்கும் இறையவர் மறுகின்நல்லார் முறைமுறை பலி

பெய முறுவல்செய்வார், பொடியணி வடிவொடு திருவகலம் பொன்
னென மிளிர்வதோர் அரவினொடும், வடிநுனை மழுவினொ டிவராணீர்
வாய்மூ ரடிகள் வருவாரே. ௭

கட்டிணை புதுமலர்க் கமழ்கொன்றைக் கண்ணியர் வீணையர் தாமு
மஃதே,எட்டிணை சாந்தமொ டுமைதுணையா இறைவனு ருறைவதோர்
இடம்வினவில், பட்டிணை யகலல்குல் விரிகுழலார் பாவையர் பலி
யெதிர் கொணர்ந்துபெய்ய, வட்டணை யாடலொ டிவராணீர் வாய்மூ
ரடிகள் வருவாரே. ௮

ஏன மருப்பினொ டெழிலாமை யிசையப் பூண்டோ ரேறேறிக்
கான மதிடமா வுறைகின்ற கள்வர் கனவில் துயர்செய்து
தேனு ணமலர்கள் உந்திவிம்மித் திகழ்பொற் சடைமேல் திகழ்கின்ற
வானநன் மதியினொ டிவராணீர் வாய்மூ ரடிகள் வருவாரே. ௯

சூடல்வெண் பிறையினர் சுடர்முடியர் சுண்ணவெண் ணீற்றினர்
சுடர்மழுவர், பாடல்வண் டிசைமுரல் கொன்றையந்தார் பாம்பொடு
நூலவை பசைந்திலங்கக், கோடனன் முகிழ்விரல் கூப்பிநல்லார் குறை
யுறு பலியெதிர் கொணர்ந்துபெய்ய, வாடல்வெண் தலைபிடித் திவரா
ணீர் வாய்மூ ரடிகள் வருவாரே. ௧0

திங்களொ டருவரைப் பொழிற்சோலைத் தேனலங் கானலந்
திருவாய்மூர், அங்கமொ டருமறை யொலிபாடல் அழல்நிற வண்ணர்
தம் அடிபரவி, நங்கள்தம் வினைகெட மொழியவல்ல ஞானசம் பந்தன்
தமிழ்மாலை, தங்கிய மனத்தினுல் தொழுதெழுவார் தமர்நெறி யுலகுக்
கோர் தவநெறியே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருஆடானை - பண் - நட்டராகம்

திருச்சிற்றம்பலம்

மாதோர்கூறுகந் தேறதேறிய
ஆதியானுறை யாடானை
போதினுற்புனைந் தேத்துவார்தமை
வாதியாவினை மாயுமே.

வாடல்வெண்டலை அங்கையேந்திநின்
றாடலானுறை யாடானை
தோடுலாமலர் தூவிக்கைதொழ
வீடும் நுங்கள் வினைகளே. ௨

மங்கைகூறினன் மான்மறியுடை
அங்கையானுறை யாடானை
தங்கையால் தொழு தேத்தவல்லவர்
மங்குநோய்பிணி மாயுமே. ௩

சுண்ணநீறணி மார்பில்தோல்புனை
அண்ணலானுறை யாடானை
வண்ணமாமலர் தூவிக்கைதொழ
எண்ணுவாரிடர் ஏகுமே. ௪

கொய்யணிம்மலர்க் கொன்றைசூடிய
ஐயன்மேவிய ஆடானை
கையணிம்மல ரால்வணங்கிட
வெய்யவல்வினை வீடுமே. ௫

வானிளம்மதி மல்குவார்சடை
ஆனஞ்சாடலன் ஆடானை
தேனணிம்மலர் சேர்த்தமுன்செய்த
ஊனமுள்ள வொழியுமே. ௬

துலங்குவெண்மழு வேந்திச்சூழ்சடை
அலங்கலானுறை யாடானை
நலங்கொள்மாமலர் தூவிநாள்தொறும்
வலங்கொள்வார்வினை மாயுமே. ௭

வெந்தநீறணி மார்பில்தோல்புனை
அந்தமில்லவன் ஆடானை
கந்தமாமலர் தூவிக்கைதொழும்
சிந்தையார்வினை தேயுமே. ௮

மறைவல்லாரொடு வானவர்தொழு
தறையுந்தண்புனல் ஆடானை

உறையும் ஈசனை யேத்தத் தீவினை
பறையும்நல்வினை பற்றுமே. ௯

மாயனும்மல ரானுங்கைதொழ
ஆயஅந்தணன் ஆடானை
தூயமாமலர் தூவிக்கைதொழத்
தீயவல்வினை தீருமே. ௧0

வீடினார்மலி வெங்கடத்துநின்
றாடலானுறை யாடானை
நாடிஞானசம் பந்தன்செந்தமிழ்
பாடநோய்பிணி பாறுமே. ௧௧

திருச்சிற்றம்பலம்

சீகாழி - பண் - செவ்வழி

திருச்சிற்றம்பலம்

பொடியிலங்குந் திருமேனி யாளர் புலியதளினர்
அடியிலங்குங் கழலார்க்க ஆடும் அடிகள்ளிடம்
இடியிலங்குங் குரலோதம் மல்கவ் வெறிவார்திரைக்
கடியிலங்கும் புனல்முத் தலைக்குங்கடற் காழியே. ௧

மயலிலங்குந் துயர்மா சறுப்பானருந் தொண்டர்கள்
அயலிலங்கப் பணிசெய்ய நின்றவ் அடிகள்ளிடம்
புயலிலங்குங் கொடையாளர் வேதத்தொலி பொலியவே
கயலிலங்கும் வயற்கழனி சூழுங்கடற் காழியே. ௨

கூர்விலங்குந் திரிசூல வேலர்குழைக் காதினர்
மார்விலங்கும் புரிநூலு கந்தம்மண வாளனார்
நேர்விலங்கல் லனதிரை கள்மோதந் நெடுந்தாரைவாய்க்
கார்விலங்கல் லெனக்கலந் தொழுகுங்கடற் காழியே. ௩

குற்றமில்லார் குறைபாடு செய்வார் பழிதீர்ப்பவர்
பெற்றநல்ல கொடிமுன் னுயர்த்த பெருமானிடம்
மற்றுநல்லார் மனத்தா லினியார் மறைகலையெலாங்
கற்றுநல்லார் பிழைதெரிந் தளிக்குங்கடற் காழியே. ௪

விருதிலங்குஞ் சரிதைத் தொழிலார் விரிசடையினார்
எருதிலங்கப் பொலிந்தேறும் எந்தைக் கிடமாவது
பெரிதிலங்கும் மறைகிளைஞர் ஓதப் பிழைகேட்டலாற்
கருதுகிள்ளைக் குலந்தெரிந்து தீர்க்குங்கடற் காழியே. ரு

தோடிலங்குங் குழைக்காதர் வேதர்சுரும் பார்மலர்ப்
பீடிலங்குஞ் சடைப்பெருமை யாளர்க் கிடமாவது
கோடிலங்கும் பெரும்பொழில் கள்மல்கப் பெருஞ்செந்நெலின்
காடிலங்கும் வயல்பயிலும் அந்தண்கடற் காழியே. சு

மலையிலங்குஞ் சிலையாக வேகம்மதில் மூன்றெரித்
தலையிலங்கும் புனற்கங்கை வைத்தவ்வடி கட்கிடம்
இலையிலங்கும் மலர்க்கைதை கண்டல்வெறி விரவலால்
சலையிலங்குங் கணத்தினம் பொலியுங்கடற் காழியே. எ

முழுதிலங்கும் பெரும்பாருள் வாழும்முரண் இலங்கைக்கோன்
அழுதிரங்கச் சிரமுர மொடுங்கவ் வடர்த்தாங்கவன்
தொழுதிரங்கத் துயர்தீர்த் துகந்தார்க் கிடமாவது
கழுதும்புள்ளும் மதிற்புறம தாருங்கடற் காழியே. அ

பூவினானும் விரிபோதின் மல்குந்திரு மகள்தனை
மேவினானும் வியந்தேத்த நீண்டா ரழலாய்நிறைந்
தோவியங்கே யவர்க்கருள் புரிந்தவ் வொருவர்க்கிடங்
காவியங்கண் மடமங்கையர் சேர்கடற் காழியே. கூ

உடைநவின் றாருடைவிட் டுழல்வார் இருந்தவத்தார்
முடைநவின் றம்மொழி யொழித்துகந்தம் முதல்வன்னிடம்
மடைநவின்ற புனற்கெண்டை பாயும்வயல் மலிதரக்
கடைநவின் றந் நெடுமாடம் ஓங்குங்கடற் காழியே. க0

கருகமுந்நீர் திரையோத மாருங்கடற் காழியுள்
உரகமாருஞ் சடையடி கள்தம்பா லுணர்ந்துறுதலாற்
பெருகமல்கும் புகழ்பேறுந் தொண்டர்க்கிசை யார்தமிழ்
விரகன்சொன்ன இவைபாடி யாடக்கெடும் வினைகளே. கக

திருச்சிற்றம்பலம்

திருக்கேதாரம் - பண் - செவ்வழி

திருச்சிற்றம்பலம்

தொண்டரஞ்சு களிறும் மடக்கிச் சுரும்பார்மலர்
இண்டைகட்டி வழிபாடு செய்யு மிடமென்பரால்
வண்டுபாட மயிலால மான்கன்று துள்ளவரிக்
கெண்டைபாயச் சுனைநீல மொட்டலருங் கேதாரமே. க

பாதம்விண்ணோர் பலரும் பரவிப் பணிந்தேத்தவே
வேதநான்கும் பதினெட்டொ டாறும் விரித்தார்க்கிடம்
தாதுவிண்ட மதுவுண்டு மிண்டிவரு வண்டினம்
கீதம்பாட மடமந்தி கேட்டுகளுங் கேதாரமே. உ

முந்திவந்து புரோதாய மூழ்கி முனிகள்பலர்
எந்தைபெம்மா னெனநின்றி றைஞ்சும் இடமென்பரால்
மந்திபாயச் சரேலச் சொரிந்தும் முரிந்துக்கபூக்
கெந்தம்நாறக் கிளருஞ் சடையெந்தை கேதாரமே. ங

உள்ளமிக்கார் குதிரைம் முகத்தார் ஒருகாலர்கள்
எள்கலில்லா இமையோர்கள் சேரும் இடமென்பரால்
பிள்ளைதுள்ளிக் கிளைபயில்வ கேட்டுப் பிரியாதுபோய்க்
கிள்ளையேனற் கதிர்கொணர்ந்து வாய்ப்பெய்யுங் கேதாரமே. ச

ஊழியூழி யுணர்வார்கள் வேதத்தினொண் பொருள்களால்
வாழியெந்தை யெனவந்தி றைஞ்சும் இடமென்பரால்
மேழிதாங்கி யுழுவார்கள் போலவ்விரை தேரிய
கேழல்பூழ்தி கிளைக்க மணிசிந்துங் கேதாரமே. ரு

நீறுபூசி நிலத்துண்டு நீர்மூழ்கி நீள்வரைதன்மேல்
தேறுசிந்தை யுடையார்கள் சேரும் இடமென்பரால்
ஏறிமாவின் கனியும்பலா வின்இருஞ் சுளைகளும்
கீறிநாளும் முசுக்கிளையொ டுண்டுகளுங் கேதாரமே. சு

மடந்தைபாகத் தடக்கிம் மறையோதி வானோர்தொழத்
தொடர்ந்தநம்மேல் வினைதீர்க்க நின்றார்க் கிடமென்பரால்
உடைந்தகாற்றுக் குயர்வேங்கை பூத்துதிரக்கல் லறைகள்மேல்
கிடந்தவேங்கை சினமாமுகஞ் செய்யுங் கேதாரமே. எ

அரவமுந்நீர் அணியிலங்கைக் கோனையரு வரைதனால்
வெருவவூன்றி விரலா லடர்த்தார்க் கிடமென்பரால்
குரவங்கோங்கங் குளிர்பிண்டி ஞாழல்சுர புன்னைமேல்
கிரமமாக வரிவண்டு பண்செய்யுங் கேதாரமே. ௮

ஆழ்ந்துகாணா ருயர்ந்தெய்த கில்லார் அலமந்தவர்
தாழ்ந்துதந்தம் முடிசாய நின்றார்க் கிடமென்பரால்
வீழ்ந்துசெற்று நிழற்கிறங்கும் வேழத்தின்வெண் மருப்பினைக்
கீழ்ந்துசிங்கங் குருகுண்ண முத்துதிருங் கேதாரமே. ௯

கடுக்கள்தின்று கழிமீன் கவர்வார்கள் மாசுடம்பினர்
இடுக்கணுய்ப்பா ரவரெய்த வொண்ணா இடமென்பரால்
அடுக்கநின்றவ் வறவுரைகள் கேட்டாங் கவர்வினைகளைக்
கெடுக்கநின்ற பெருமான் உறைகின்ற கேதாரமே. ௧௦

வாய்ந்தசெந்நெல் விளைகழனி மல்கும்வயற் காழியான்
ஏய்ந்தநீர்க்கோட் டிமையோ ருறைகின்ற கேதாரத்தை
ஆய்ந்துசொன்ன அருந்தமிழ்கள் பத்தும்மிசை வல்லவர்
வேந்தராகி யுலகாண்டு வீடுகதி பெறுவரே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருப்புகலூர் - பண் - செவ்வழி

திருச்சிற்றம்பலம்

வெங்கள்விம்மு குழலிளைய ராடவ்வெறி விரவுநீர்ப்
பொங்குசெங்கட் கருங்கயல்கள் பாயும்புக லூர்தனுள்
திங்கள்சூடித் திரிபுரமொ ரம்பாலெரி யூட்டிய
எங்கள்பெம்மான் அடிபரவ நாளும்இடர் கழியுமே. ௧

வாழ்ந்தநாளும் இனிவாழு நாளும்இவை யறிதிரேல்
வீழ்ந்தநாளெம் பெருமானை யேத்தாவிதி யில்லிர்காள்
போழ்ந்ததிங்கட் புரிசடையி னான்றன் புகலூரையே
சூழ்ந்தவுள்ளம் உடையீர்கள் உங்கள்துயர் தீருமே. ௨

மடையின்நெய்தல் கருங்குவளை செய்யமலர்த் தாமரை
புடைகொள்செந்நெல் விளைகழனி மல்கும்புக லூர்தனுள்

தொடைகொள்கொன்றை புனைந்தானோர் பாகம்மதி சூடியை
அடையவல்லார் அமருலகம் ஆளப்பெறு வார்களே. ௩

பூவும்நீரும் பலியுஞ் சுமந்து புகலூரையே
நாவினாலே நவின்றேத்த லோவார்செவித் துளைகளால்
யாவுங்கேளார் அவன்பெருமை யல்லால்அடி யார்கள்தாம்
ஓவுநாளும் உணர்வொழிந்த நாளென் றுள்ளங்கொள்ளவே. ௪

அன்னங்கன்னிப் பெடைபுல்கி யொல்கியணி நடையவாய்ப்
பொன்னங்காஞ்சி மலர்ச்சின்ன மாலும்புக லூர்தனுள்
முன்னம்மூன்று மதிலெரித்த மூர்த்திதிறங் கருதுங்கால்
இன்னரென்னப் பெரிதரியர் ஏத்தச்சிறி தெளியரே. ௫

குலவராகக் குலம்இலரு மாகக்குணம் புகழுங்கால்
உலகில்நல்ல கதிபெறுவ ரேனும்மலர் ஊறுதேன்
புலவமெல்லாம் வெறிகமழும் அந்தண் புகலூர்தனுள்
நிலவமல்கு சடையடிகள் பாதம் நினைவார்களே. ௬

ஆணும்பெண்ணும் மெனநிற்ப ரேனும்அர வாரமாப்
பூணுமேனும் புகலூர்தனக் கோர்பொரு ளாயினான்
ஊணும்ஊரார் இடுபிச்சை யேற்றுண்டுடை கோவணம்
பேணுமேனும் பிரானென்ப ரால்எம்பெரு மானையே. ௭

உய்யவேண்டில் எழுபோத நெஞ்சேயுயர் இலங்கைக்கோன்
கைகளொல்கக் கருவரை யெடுத்தானை யோர்விரலினால்
செய்கைதோன்றச் சிதைத்தருள வல்லசிவன் மேயபூம்
பொய்கைசூழ்ந்த புகலூர் புகழப் பொருளாகுமே. ௮

நேமியானும் முகநான் குடையந்நெறி யண்ணலும்
ஆமிதென்று தகைந்தேத்தப் போயாரழ லாயினான்
சாமிதாதை சரணாகு மென்றுதலை சாய்மினோ
பூமியெல்லாம் புகழ்செல்வம் மல்கும் புகலூரையே. ௯

வேர்த்தமெய்யர் உருவத் துடைவிட் டுழல்வார்களும்
போர்த்தகூறைப் போதிநீழ லாரும் புகலூர்தனுள்
தீர்த்தமெல்லாஞ் சடைக்கரந்த தேவன்திறங் கருதுங்கால்
ஓர்த்துமெய்யென் றுணராது பாதந்தொழு துய்ம்மினே. ௧௦

புந்தியார்ந்த பெரியோர்கள் ஏத்தும் புகலூர்தனுள்
வெந்தசாம்பற் பொடிப்பூச வல்லவிடை யூர்தியை
அந்தமில்லா அனலாட லானையணி ஞானசம்
பந்தன்சொன்ன தமிழ்பாடி யாடக்கெடும் பாவமே. கக

திருச்சிற்றம்பலம்

திருநாகைக்காரோணம் - பண் - செவ்வழி

திருச்சிற்றம்பலம்

கூனல்திங்கட் குறுங்கண்ணி கான்றநெடு வெண்ணிலா
ஏனற்பூத்தம் மராங்கோதை யோடும்விரா வுஞ்சடை
வானநாடன் அமரர்பெரு மாற்கிட மாவது
கானல்வேலி கழிசூழ் கடல்நாகைக் காரோணமே. க

விலங்கலொன்று சிலையாமதில் மூன்றுடன் வீட்டினான்
இலங்குகண்டத் தெழிலாமை பூண்டாற் கிடமாவது
மலங்கியோங்கிவ் வருவெண்டிரை மல்கிய மால்கடல்
கலங்கலோதங் கழிசூழ் கடல்நாகைக் காரோணமே. உ

வெறிகொளாருங் கடற்கைதை நெய்தல்விரி பூம்பொழில்
முறிகொண்ஞாழல் முடப்புன்னை முல்லைம்முகை வெண்மலர்
நறைகொள்கொன்றைந் நயந்தோங்கும் நாதற் கிடமாவது
கறைகொளோதங் கழிசூழ் கடல்நாகைக் காரோணமே. ங

வண்டுபாடவ் வளர்கொன்றை மாலைம்மதி யோடுடன்
கொண்டகோலங் குளிர்கங்கை தங்குங்குருள் குஞ்சியுள்
உண்டுபோலும் மெனவைத் துகந்தவ்வொரு வற்கிடம்
கண்டல்வேலி கழிசூழ் கடல்நாகைக் காரோணமே ச

வார்கொள்கோலம் முலைமங்கை நல்லார்மகிழ்ந் தேத்தவே
நீர்கொள்கோலச் சடைநெடு வெண்திங்கள் திகழ்வெய்தவே
போர்கொள்சூலப் படைபுல்கு கையார்க் கிடமாவது
கார்கொளோதங் கழிசூழ் கடல்நாகைக் காரோணமே. ரு

விடையதேறிவ் விடவர வசைத்தவ் விகிர்தரவர்
படைகொள்பூதம் பலபாட ஆடும்பர மாயவர்

உடைகொள் வேங்கை யுரிதோ லுடையார்க் கிடமாவது
கடைகொள்செல்வங் கழிசூழ் கடல்நாகைக் காரோணமே. சு

பொய்துவாழ்வார் மனம்பாழ் படுக்கும் மலர்ப்பூசனை
செய்துவாழ்வார் சிவன்சேவடிக்கே செலுஞ் சிந்தையார்
எய்தவாழ்வார் எழில்நக்க ரெம்மாற் கிடமாவது
கைதல்வேலி கழிசூழ் கடல்நாகைக் காரோணமே. எ

பத்திரட்டி திரள்தோ ளுடையான் முடிபத்திற
அத்திரட்டி விரலால் அடர்த்தார்க் கிடமாவது
மைத்திரட்டிவ் வருவெண்டிரை மல்கிய மாகடல்
கைத்திரட்டுங் கழிசூழ் கடல்நாகைக் காரோணமே. அ

நல்லபோதில் உறைவானும் மாலுந்நடுக் கத்தினால்
அல்லராவ ரெனநின்ற பெம்மாற் கிடமாவது
மல்லலோங்கிவ் வருவெண்டிரை மல்கிய மாகடல்
கல்லலோதங் கழிசூழ் கடல்நாகைக் காரோணமே. கூ

உயர்ந்தபோதின் னுருவத் துடைவிட் டுழல்வார்களும்
பெயர்ந்தமண்டை யிடுபிண்ட மாவுண் டுழல்வார்களும்
நயந்துகாணா வகைநின்ற நாதர்க் கிடமாவது
கயங்கொளோதங் கழிசூழ் கடல்நாகைக் காரோணமே. கo

மல்குதண்பூம் புனல்வாய்ந் தொழுகும்வயற் காழியான்
நல்லகேள்வித் தமிழ்ஞான சம்பந்தன்நல் லார்கள்முன்
வல்லவாறே புனைந்தேத் துங் காரோணத்து வண்தமிழ்
சொல்லுவார்க்கும் இவைகேட்ப வர்க்குந்துய ரில்லையே. கக

திருச்சிற்றம்பலம்

திருஇரும்பைமாகாளம் - பண் - செவ்வழி

திருச்சிற்றம்பலம்

மண்டுகங்கை சடையிற் கரந்தும் மதிசூடிமான்
கொண்டகையாற் புரம்மூன் றெரித்த குழகன்னிடம்
எண்டிசையும் புகழ்போய் விளங்கும் இரும்பைதனுள்
வண்டுகீதம் முரல்பொழில் சுலாய்நின்ற மாகாளமே. க

வேதவித்தாய் வெள்ளைநீறு பூசி வினையாயின
கோதவித்தா நீறெழக் கொடிமா மதிலாயின
ஏதவித்தா யினதீர்க் கும்மிடம் இரும்பைதனுள்
மாதவத்தோர் மறையோர் தொழநின்ற மாகாளமே. உ

வெந்தநீறும் எலும்பும் அணிந்த விடையூர்தியான்
எந்தைபெம்மா னிடம்எழில் கொள்சோலை யிரும்பைதனுள்
கந்தமாய பலவின் கனிகள் கமழும்பொழில்
மந்தியேறிக் கொணர்ந்துண் டுகள்கின்ற மாகாளமே. ந

நஞ்சுகண்டத் தடக்கி நடுங்கும் மலையான்மகள்
அஞ்சவேழம் உரித்த பெருமான் அமரும் இடம்
எஞ்சவில்லாப் புகழ்போய் விளங்கும் இரும்பைதனுள்
மஞ்சிலோங்கும் பொழில்சூழ்ந் தழகாய மாகாளமே. ச

பூசுமாசில் பொடியான் விடையான் பொருப்பன்மகள்
கூசஆனை யுரித்தபெரு மான்குறை வெண்மதி
ஈசனெங்கள் இறைவன் இடம்போல் இரும்பைதனுள்
மாசிலோர்கள் மலர்கொண் டணிகின்ற மாகாளமே. ரு

குறைவதாய குளிர்திங்கள் சூடிக் குனித்தான்வினை
பறைவதாக்கும் பரமன் பகவன் பரந்தசடை
இறைவன்எங்கள் பெருமான் இடம்போல் இரும்பைதனுள்
மறைகள்வல்லார் வணங்கித் தொழுகின்ற மாகாளமே. சு

பொங்குசெங்கண் அரவும் மதியும் புரிபுன்சடைத்
தங்கவைத்த பெருமானென நின்றவர் தாழ்விடம்
எங்குமிச்சை யமர்ந்தான் இடம்போல் இரும்பைதனுள்
மங்குல்தோயும் பொழில்சூழ்ந் தழகாய மாகாளமே. எ

நட்டத்தோடு நரியாடு கானத்தெரி யாடுவான்
அட்டமூர்த்தி யழல்போ லுருவன் அழகாகவே
இட்டமாக இருக்கும் இடம்போல் இரும்பைதனுள்
வட்டஞ்சூழ்ந்து பணிவார் பிணிதீர்க்கும் மாகாளமே. அ

அட்டகாலன் றனைவவ் வினான்அவ் வரக்கன்முடி
எட்டுமற்றும் இருபத்திரண் டும்இற வூன்றினான்

இட்டமாக விருப்பா னவன்போல் இரும்பைதனுள்
மட்டுவார்ந்த பொழில்சூழ்ந் தெழிலாரும் மாகாளமே. கூ

அரவமார்த்தன் றனலங்கை யேந்தி யடியும்முடி
பிரமன்மாலும் அறியாமை நின்ற பெரியோனிடம்
குரவமாரும் பொழிற்குயில்கள் சேரும் இரும்பைதனுள்
மருவிவானோர் மறையோர் தொழுகின்ற மாகாளமே. கo

எந்தைபெம்மான் இடம்எழில் கொள்சோலை யிரும்பைதனுள்
மந்தமாய பொழில்சூழ்ந் தழகாரும் மாகாளத்தில்
அந்தமில்லா அனலாடு வானையணி ஞானசம்
பந்தன்சொன்ன தமிழ்பாட வல்லார்பழி போகுமே. கக

திருச்சிற்றம்பலம்

திருத்திலதைப்பதி - பண் - செவ்வழி

திருச்சிற்றம்பலம்

பொடிகள்பூசிப் பலதொண்டர் கூடிப் புலர்காலையே
அடிகளாரத் தொழுதேத்த நின்றவ் அழகன்னிடம்
கொடிகளோங்கிக் குலவும் விழவார் திலதைப்பதி
வடிகொள்சோலைம் மலர் மணங்கமழும் மதிமுத்தமே. க

தொண்டர்மிண்டிப் புகைவிம்மு சாந்துங்கமழ் துணையலும்
கொண்டுகண்டார் குறிப்புணர நின்ற குழகன்னிடம்
தெண்டிரைப்பூம் புனலரிசில் சூழ்ந்த திலதைப்பதி
வண்டுகெண்டுற் றிசைபயிலுஞ் சோலைம் மதிமுத்தமே. உ

அடலுளேறுய்த் துகந்தான் அடியார் அமரர்தொழக்
கடலுள்நஞ்சம் அமுதாக வுண்ட கடவுள்ளிடம்
திடலடங்கச் செழுங்கழனி சூழ்ந்த திலதைப்பதி
மடலுள்வாழைக் கனிதேன் பிலிற்றும் மதிமுத்தமே. ங

கங்கைதிங்கள் வன்னிதுன் எருக்கினொடு கூவிளம்
வெங்கண்நாகம் விரிசடையில் வைத்த விகிர்தன்னிடம்
செங்கயல்பாய் புனலரிசில் சூழ்ந்த திலதைப்பதி
மங்குல்தோயும் பொழில்சூழ்ந் தழகார் மதிமுத்தமே. ச

புரவியேழும் மணிபூண் டியங்குங்கொடித் தேரினன்
பரவிநின்று வழிபாடு செய்யும்பர மேட்டியூர்
விரவிஞாழல் விரிகோங்கு வேங்கைசுர புன்னைகள்
மரவமவ்வல் மலருந் திலதைம் மதிமுத்தமே. ௫

விண்ணர்வேதம் விரித்தோத வல்லார் ஒருபாகமும்
பெண்ணர்எண்ணார் எயில் செற்றுகந்த பெருமானிடம்
தெண்ணிலாவின் ஒளிதீண்டு சோலைத் திலதைப்பதி
மண்ணுளார்வந் தருள்பேணி நின்றம் மதிமுத்தமே. ௬

ஆறுசூடி யடையார்புரஞ் செற்றவர் பொற்றொடி
கூறுசேரும் உருவர்க் கிடமாவது கூறுங்கால்
தேறலாரும் பொழில் சூழ்ந்தழகார் திலதைப்பதி
மாறிலாவண் புனலரிசில் சூழ்ந்தம் மதிமுத்தமே. ௭

கடுத்துவந்த கனல்மேனி யினன்கரு வரைதனை
எடுத்தவன்றன் முடிதோள் அடர்த்தார்க் கிடமாவது
புடைக்கொள்பூகத் திளம்பாளை புல்கும் மதுப்பாயவாய்
மடுத்துமந்தி யுகளுந் திலதைம் மதிமுத்தமே. ௮

படங்கொள்நாகத் தணையானும் பைந்தா மரையின்மிசை
இடங்கொள்நால்வே தனுமேத்த நின்ற இறைவன்னிடம்
திடங்கொள்நாவின் இசைதொண்டர் பாடுந் திலதைப்பதி
மடங்கல்வந்து வழிபாடு செய்யும் மதிமுத்தமே. ௯

புத்தர்தேரர் பொறியில் சமணர்கரு வீறிலாப்
பித்தர்சொன்னம் மொழிகேட்கி லாத பெருமானிடம்
பத்தர்சித்தர் பணிவுற் றிறைஞ்சுந் திலதைப்பதி
மத்தயானை வழிபாடு செய்யும் மதிமுத்தமே. ௧௦

மந்தமாரும் பொழில் சூழ்திலதைம் மதிமுத்தர்மேல்
கந்தமாருங் கடற்காழி யுள்ளான் தமிழ்ஞானசம்
பந்தன்மாலை பழிதீர நின்றேத்த வல்லார்கள்போய்ச்
சிந்தைசெய்வார் சிவன்சேவடி சேர்வது திண்ணமே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருநாகேச்சரம் - பண் - செவ்வழி

திருச்சிற்றம்பலம்

தழைகொள்சந் தம்அகிலும் மயிற்பீலி யுஞ்சாதியின்
பழமும் உந்திப் புனல்பாய் பழங்காவிரித் தென்கரை
நழுவில்வானோர் தொழநல்கு சீர்மல்கு நாகேச்சரத்
தழகர்பாதந் தொழுதேத்த வல்லார்க் கழகாகுமே. க

பெண்ணொர்பாகம் அடையச் சடையிற் புனல்பேணிய
வண்ணமான பெருமான் மருவும் இடம்மண்ணுளார்
நண்ணிநாளுந் தொழுதேத்தி நன்கெய்து நாகேச்சரம்
கண்ணினாற் காணவல்லா ரவர்கண் ணுடையார்களே. உ

குறவர்கொல்லைப் புனங்கொள்ளை கொண்டும் மணிகுலவுநீர்
பறவையாலப் பரக்கும் பழங்காவிரித் தென்கரை
நறவநாறும் பொழில்சூழ்ந் தழகாய நாகேச்சரத்
திறைவர்பாதந் தொழுதேத்த வல்லார்க் கிடரில்லையே. ந

கூசநோக்காதுமுன் சொன்ன பொய்கொடு வினைகுற்றமும்
நாசமாக்கும் மனத்தார்கள் வந்தாடு நாகேச்சரம்
தேசமாக்குந் திருக்கோயி லாக்கொண்ட செல்வன்கழல்
நேசமாக்குந் திறத்தார் அறத்தார் நெறிப்பாலரே. ச

வம்புநாறும் மலரும்மலைப் பண்டமுங் கொண்டுநீர்
பைம்பொன்வாரிக் கொழிக்கும் பழங்காவிரித் தென்கரை
நம்பன்நாளும் அமர்கின்ற நாகேச்சரம் நண்ணுவார்
உம்பர்வானோர் தொழச் சென்றுடனாவதும் உண்மையே. ரு

காளமேகந் நிறக்கால னோடந்தகன் கருடனும்
நீளமாய்நின் றெய்தகாமனும் பட்டன நினைவுறின்
நாளும்நாதன் அமர்கின்ற நாகேச்சரம் நண்ணுவார்
கோளுநாளுந் தீயவேனும் நன்காங் குறிக்கொண்மினே. சு

வேயுதிர்முத் தொடுமத்த யானை மருப்பும்விராய்ப்
பாய்புனல்வந் தலைக்கும் பழங்காவிரித் தென்கரை

ஞாயிறுந்திங் களுங்கூடி வந்தாடு நாகேச்சரம்
மேயவன்றன் அடிபோற்றி யென்பார் வினைவீடுமே. எ

இலங்கைவேந்தன் சிரம்பத்தி ரட்டியெழில் தோள்களும்
மலங்கிவீழம் மலையால் அடர்த்தா னிடம்மல்கிய
நலங்கொள்சிந்தை யவர்நாள்தொறும் நண்ணும் நாகேச்சரம்
வலங்கொள்சிந்தை யுடையார் இடராயின மாயுமே. அ

கரியமாலும் அயனும் அடியும்முடி காண்பொணா
எரியதாகி நிமிர்ந்தான் அமரும்இட மீண்டுகா
விரியின்நீர்வந் தலைக்குங் கரைமேவு நாகேச்சரம்
பிரிவிலாதவ் வடியார்கள் வானிற் பிரியார்களே. கூ

தட்டிடுக்கி யுறிதூக்கி யகையினர் சாக்கியர்
கட்டுரைக்கும் மொழிகொள்ள லும்வெள்ளி லங்காட்டிடை
நட்டிருட்கண் நடமாடிய நாதன் நாகேச்சரம்
மட்டிருக்கும் மலரிட் டடிவீழ்வது வாய்மையே. ௧0

சந்தம்நாறும் புனற்காவிரித் தென்கரைக் கண்ணுதல்
நந்திசேருந் திருநாகேச் சரத்தின் மேன்ஞான சம்
பந்தன்நாவிற் பனுவல் லிவைபத்தும் வல்லார்கள்போய்
எந்தையீசன் இருக்கும் உலகெய்த வல்லார்களே. கக

திருச்சிற்றம்பலம்

திருமுக்கீச்சரம் - பண் - செவ்வழி

திருச்சிற்றம்பலம்

சாந்தம்வெண்ணீ றெனப்பூசி வெள்ளஞ்சடை வைத்தவர்
காந்தளாரும் விரலேழை யோடாடிய காரணம்
ஆய்ந்துகொண்டாங் கறியந் நிறைந்தாரவ ரார்கொலோ
வேந்தன்மூக்கீச் சரத்தடிகள் செய்கின்றதோர் மெய்ம்மையே. க

வெண்டலையோர் கலனாப் பலிதேர்ந்து விரிசடைக்
கொண்டலாரும் புனல்சேர்த் துமையாளொடுங் கூட்டமா
விண்டவர்தம் மதிலெய்த பின்வேனில் வேள்வெந்தெழக்
கண்டவர்மூக் கீச்சரத்தெம் அடிகள் செய்கன்மமே. உ

மருவலார்தம் மதிலெய்த துவும்மான் மதலையை
உருவிலாரவ் வெரியூட்டி யதும்உல குண்டதால்
செருவிலாரும் புலிசெங் கயலானை யினன்செய்த
பொருவின்மூக் கீச்சரத்தெம் அடிகள் செயும்பூசலே. ௫

அன்னமன்னந் நடைச்சாய லாளோ டழகெய்தவே
மின்னையன்ன சடைக்கங்கை யாள்மேவிய காரணம்
தென்னன்கோழி யெழில்வஞ்சியும் ஒக்கு செங்கோலினன்
மன்னன்மூக்கீச் சரத்தடிகள் செய்கின்ற தோர்மாயமே. ௬

விடமுனாவ் வழல்வாய தோர்பாம்பரை வீக்கியே
நடமுனாவ் வழலாடுவர் பேயொடு நள்ளிருள்
வடமன்நீடு புகழ்ப்பூழி யன்தென்ன வன்கோழிமன்
அடல்மன்மூக்கீச் சரத்தடிகள் செய்கின்ற தோரச்சமே. ௭

வெந்தநீறு மெய்யிற் பூசுவராடுவர் வீங்கிருள்
வந்தெனாவ் வளைகொள்வதும் இங்கொரு மாயமாம்
அந்தண்மா மானதன்னேரியன் செம்பிய னாக்கிய
எந்தைமூக்கீச் சரத்தடிகள் செய்கின்ற தோரேதமே. ௬

அரையிலாருங் கலையில்ல வனாமேனொடு பெண்ணுமாய்
உரையிலாரவ் வழலாடு வரொன்றலர் காண்மினோ
விரவலார்தம் மதில்மூன் றுடன்வெவ்வழ லாக்கினன்
அரையன்மூக்கீச் சரத்தடிகள் செய்கின்ற தோரச்சமே. ௭

ஈர்க்கும்நீர்செஞ் சடைக்கேற் றதுங்கூற்றை யுதைத்ததும்
கூர்க்குநன்மூ விலைவேல்வல னேந்திய கொள்கையும்
ஆர்க்கும்வாயான் அரக்கன் னுரத்தைந் நெரித்தவ்வடல்
மூர்க்கன்மூக்கீச் சரத்தடிகள் செய்யாநின்ற மொய்ம்பதே. ௮

நீருளாரும் மலர்மேல் உறைவான் நெடுமாலுமாய்ச்
சீருளாருங் கழல்தேட மெய்த்தீத் திரளாயினன்
சீரினாலங் கொளிர்தென்ன வன்செம்பி யன்வில்லவன்
சேருமூக்கீச் சரத்தடிகள் செய்கின்ற தோர்செம்மையே. ௯

வெண்புலான்மார் பிடுதகிலினர் வெற்றரை யுழல்பவர்
உண்பினாலே யுரைப்பார் மொழி யூனமதாக்கினான்
ஒண்புலால்வேல் மிகவல்லவ னோங்கெழிற் கிள்ளிசேர்
பண்பின்மூக்கீச் சரத்தடிகள் செய்கின்ற தோர்பச்சையே. க௦

மல்லையார்மும் முடிமன்னர் மூக்கீச்சரத் தடிகளைச்
செல்வராக நினையும்படி சேர்த்திய செந்தமிழ்
நல்லராய்வாழ் பவர்காழி யுள்ஞான சம்பந்தன
சொல்லவல்லா ரவர்வானுல காளவும் வல்லரே. கக

திருச்சிற்றம்பலம்

திருப்பாதிரிப்புலியூர் - பண் - செவ்வழி

திருச்சிற்றம்பலம்

முன்னம்நின்ற முடக்கால் முயற்கருள் செய்துநீள்
புன்னைநின்று கமழ்பா திரிப்புலி யூருளான்
தன்னைநின்று வணங்குந் தனைத்தவ மில்லிகள்
பின்னைநின்ற பிணியாக் கையைப்பெறு வார்களே. க

கொள்ளிநக்க பகுவாய பேய்கள் குழைந்தாடவே
முள்ளிலவம் முதுகாட் டுறையும் முதல்வன்இடம்
புள்ளினங்கள் பயிலும் பாதிரிப் புலியூர்தனை
உள்ள நம்மேல் வினையாயின ஒழியுங்களே. உ

மருளினல்லார் வழிபாடு செய்யும் மழுவாளர்மேல்
பொருளினல்லார் பயில் பாதிரிப் புலியூருளான்
வெருளின்மானின் பிணை நோக்கல்செய்து வெறிசெய்தபின்
அருளிஆகத் திடைவைத் ததுவும் அழகாகவே. ௩

போதினாலும் புகையாலும் உய்த்தே அடியார்கள்தாம்
போதினாலே வழிபாடு செய்யப் புலியூர்தனுள்
ஆதினாலும் அவலம் மிலாதஅடி கள்மறை
ஓதினாலும் இடும்பிச்சை யேற்றுண் டுணப்பாலதே. ச

ஆகநல்லார் அமுதாக்க வுண்டான் அழலைந்தலை
நாகம்நல்லார் பரவந்நயந் தங்கரை யார்த்தவன்
போகம்நல்லார் பயிலும் பாதிரிப் புலியூர்தனுள்
பாகம்நல்லா ளொடுந்நின்ற எம்பர மேட்டியே. ரு

மதியம்மொய்த்த கதிர்போ லொளிம்மணற் கானல்வாய்ப்
புதியமுத்தந் திகழ் பாதிரிப் புலியூரெனும்
பதியில்வைக்கப் படுமெந்தை தன்பழந் தொண்டர்கள்
குதியுங்கொள்வர் விதியுஞ் செய்வர் குழகாகவே. சு

கொங்காவப் படுவண் டறைகுளிர் கானல்வாய்ச்
சங்காவப் பறையின் ஒலியவை சார்ந்தெழப்
பொங்காவம் உயர் பாதிரிப் புலியூர்தனுள்
அங்காவம் அரையில் அசைத்தானை அடைமினே. எ

வீக்கமெழும் இலங்கைக் கிறை விலங்கல்லிடை
ஊக்கமொழிந் தலறவ் விரலாலிறை யூன்றினன்
பூக்கமழும் புனற் பாதிரிப் புலியூர்தனை
நோக்கமெலிந் தணுகா வினை நுணுகுங்களே. அ

அன்னந்தாவும் அணியார் பொழில் மணியார்புன்னை
பொன்னந்தாது சொரி பாதிரிப் புலியூர்தனுள்
முன்னந்தாவி அடிமூன் றளந்தவன் நான்முகன்
தன்னந்தாளுற் றுணராத தோர் தவநீதியே. க

உரிந்தகூறை யுருவத் தொடுதெருவத் திடைத்
திரிந்துதின்னுஞ் சிறுநோன் பரும்பெருந் தோரும்
எரிந்துசொன்னவ் வுரைகொள் ளாதேயெடுத் தேத்துமின்
புரிந்தவெண்ணீற் றண்ணல் பாதிரிப் புலியூரையே. க0

அந்தண்நல்லா ரகன் காழியுள் ஞானசம்
பந்தன்நல்லார் பயில் பாதிரிப் புலியூர்தனுள்
சந்தமாலைத் தமிழ்பத்தி வைதரித் தார்கள்மேல்
வந்துதீயவ் வடையாமை யால்வினை மாயுமே. கக

திருச்சிற்றம்பலம்

திருப்புகலி - பண் - செவ்வழி

திருச்சிற்றம்பலம்

விடையதேறி வெறிஅக் கரவார்த்த விமலனார்
படையதாகப் பரசு தரித்தார்க் கிடமாவது
கொடையிலோவார் குலமும் உயர்ந்தம் மறையோர்கள்தாம்
புடைகொள்வேள்விப் புகையும்பர் உலாவும் புகலியே. க

வேலைதன்னில் மிகுநஞ்சினை யுண்டிருள் கண்டனார்
ஞாலமெங்கும் பலிகொண் டுழல்வார் நகராவது
சாலநல்லார் பயிலும் மறைகேட்டுப் பதங்களைச்
சோலைமேவுங் கிளித்தான் சொற்பயிலும் புகலியே. உ

வண்டுவாழுங் குழல்மங்கை யோர்கூ றுகந்தார்மதித்
துண்டம்மேவுஞ் சுடர்த்தொல் சடையார்க் கிடமாவது
கெண்டைபாய மடுவில் லுயர்கேதகை மாதவி
புண்டரீக மலர்ப்பொய்கை நிலாவும் புகலியே. ங

திரியும்மூன்று புரமும் எரித்துத் திகழ்வானவர்க்
கரியபெம்மான் அரவக் குழையார்க் கிடமாவது
பெரியமாடத் துயருங் கொடியின் மிடைவால்வெயிற்
புரிவிலாத தடம்பூம் பொழில்சூழ் தண்புகலியே. ச

ஏவிலாருஞ் சிலைப்பார்த் தனுக்கின் னருள்செய்தவர்
நாவினாள்மூக் கரிவித்த நம்பர்க் கிடமாவது
மாவிலாருங் கனிவார் கிடங்கில் விழவாளைபோய்
பூவிலாரும் புனற்பொய்கை யில்வைகும் புகலியே. ரு

தக்கன்வேள்வி தகர்த்த தலைவன் தையலாளொடும்
ஒக்கவேயெம் உரவோ னுறையும் இடமாவது
கொக்குவாழை பலவின் கொழுந்தண் கனிகொன்றைகள்
புக்கவாசப் புன்னை பொன்திரள் காட்டும் புகலியே. சு, எ

தொலைவிலாத அரக்கன் உரத்தைத் தொலைவித்தவன்
தலையுந்தோளும் நெரித்த சதுரர்க் கிடமாவது

கலையின்மேவும் மனத்தோர் இரப்போர்க் குக்கரப்பிலார்
பொலியும்அந்தண் பொழில் சூழ்ந்தழ காரும் புகலியே. அ

மீண்டுபுக்கார் பறந்தார் அயர்ந்தார் கேழலன்னமாய்க்
காண்டுமென்றார் கழல்பணிய நின்றார்க் கிடமாவது
நீண்டநாரை யிரையாரல் வாரவிறை செறுவினிற்
பூண்டுமிக்கவ் வயல்காட்டும் அந்தண் புகலியே. கூ

தடுக்குடுத்துத் தலையைப் பறிப்பா ரொடுசாக்கியர்
இடுக்கணுய்ப்பார் இறைஞ்சாத எம்மாற் கிடமாவது
மடுப்படுக்குஞ் சுருதிப் பொருள்வல் லவர்வானுளோர்
அடுத்தடுத்துப் புகுந்தீண்டும் அந்தண் புகலியே. கO

எய்தவொண்ணா இறைவன் உறைகின்ற புகலியைக்
கைதவமில்லாக் கவுணியன் ஞான சம்பந்தன்சீர்
செய்தபத்தும் இவைசெப்ப வல்லார் சிவலோகத்தில்
எய்திநல்ல இமையோர்க ளேத்த இருப்பார்களே. கக

திருச்சிற்றம்பலம்

இ ர ண் டா ம் தி ரு மு றை

ஆ பதிகங்கள் - உருஅ

உ

திருச்சிற்றம்பலம்

திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள்

அருளிச்செய்த

தேவாரப் பதிகங்கள்

மூன்றாந் திருமுறை

கோயில் - பண் - காந்தாரபஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

ஆடிணய்நறு நெய்யொடுபால்தயிர்
அந்தணர்பிரி யாதசிற்றம்பலம்
நாடிணயிடமா நறுங்கொன்றை நயந்தவனே
பாடிணய்மறை யோடுபல்கீதமும்
பல்சடைப்பனி கால்கதிர் வெண்திங்கள்
சூடிணயருளாய் சுருக்களம் தொல்வினையே. க

கொட்டமேகம ழுங்குழலாளொடு
கூடிணயெரு தேறிணய்நுதற்
பட்டமேபுனைவா யிசைபாடுவ பாரிடமா
நட்டமேநவில்வாய் மறையோர்தில்லை
நல்லவர்பிரி யாதசிற்றம்பலம்
இட்டமாவுறைவா யிவைமேவிய தென்னைகொலோ. உ

நீலத்தார்கரிய மிடற்றார்நல்ல
நெற்றிமேலுற்ற கண்ணினர்பற்று
சூலத்தார் சுடலைப்பொடிநீறணி வார்சடையார்
சீலத்தார்தொழு தேத்துசிற்றம்பலஞ்
சேர்தலாற்கழற் சேவடிகைதொழக்
கோலத்தாயரு ளாயுன காரணங் கூறுதுமே. ௩

கொம்பலைத்தழ கெய்திய நுண்ணிடைக்
கோலவாண்மதி போலமுகத்திரண்
டம்பலைத்தகண் ணாள் முலைமேவிய வார்சடையான்
கம்பலைத்தெழு காமுறுகாளையர்
காதலாற்கழற் சேவடிகைதொழ
அம்பலத்துறை வானடியார்க் கடையாவினையே. ச

தொல்லையாரமு துண்ணநஞ்சுண்டதோர்
தூமணிமிட றாபகுவாயதோர்
பல்லையார்தலை யிற்பலியேற்றுழல் பண்டாரங்கா
தில்லையார்தொழு தேத்துசிற்றம்பலஞ்
சேர்தலாற்கழற் சேவடிகைதொழ
இல்லையாம்வினை தானெரியம்மதி லெய்தவனே. ரு

ஆகந்தோயணி கொன்றையாயனல்
அங்கையாய்அம ரர்க்கமராஉமை
பாகந்தோய்பகவா பலியேற்றுழல் பண்டாரங்கா
மாகந்தோய்பொழில் மல்குசிற்றம்பலம்
மன்னினாய்மழு வாளினாயழல்
நாகந்தோயரையாய் அடியாரை நண்ணாவினையே. சு

சாதியார்பளிங் கின்னொடுவெள்ளிய
சங்கவார்குழை யாய்திகழப்படும்
வேதியாவிகிர்தா விழவாரணி தில்லைதன்னுள்
ஆதியாய்க்கிட மாயசிற்றம்பலம்
அங்கையால்தொழ வல்லடியார்களை
வாதியாதகலும் நலியாமலி தீவினையே. எ

வேயினார்பணைத் தோளியொடாடலை
வேண்டினாய்விகிர் தாவுயிர்கட்கமு
தாயினாய்இடு காட்டெரி யாடலமர்ந்தவனே
தீயினார்கணை யாற்புரமூன்றெய்த
செம்மையாய்திகழ் கின்றசிற்றம்பலம்
மேயினாய்கழ லேதொழு தெய்துதம்மேலுலகே. அ

தாரினார்விரி கொன்றையாய்மதி
தாங்குநீள்சடை யாய்தலைவாநல்ல
தேரினார்மறுகில் திருவாரணி தில்லைதன்னுட்
சீரினால்வழிபா டொழியாததோர்
செம்மையாலழ காயசிற்றம்பலம்
ஏரினாலமர்ந்தா யுனசீரடி யேத்துதுமே. க

வெற்றரையுழல்வார் துவராடைய
வேடத்தாரவர்கள் உரைகொள்ளன்மின்
மற்றவருலகின் அவலம்அவை மாற்றகில்லார்
கற்றவர்தொழு தேத்துசிற்றம்பலங்
காதலாற்கழற் சேவடிகைதொழ
உற்றவருலகின் உறுதிகொள வல்லவரே. க0

நாறுபூம்பொழில் நண்ணியகாழியுள்
நான்மறைவல்ல ஞானசம்பந்தன்
ஊறும்இன்தமிழா லுயர்ந்தாருறை தில்லைதன்னுள்
ஏறுதொல்புக ழேந்துசிற்றம்பலத்
தீசனையிசையாற் சொன்னபத்திவை
கூறுமாறுவல்லார் உயர்ந்தாரொடுங் கூடுவரே. கக

திருச்சிற்றம்பலம்

திருப்பூந்தராய் - பண் - காந்தாரபஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

பந்துசேர்விரலாள் பவளத்துவர்
வாயினாள்பனி மாமதிபோல்முகத்
தந்தமில்புக ழாள்மலைமாதொடும் ஆதிப்பிரான்
வந்துசேர்விடம் வானவரெத்திசையுந்
நிறைந்துவலஞ் செய்துமாமலர்
புந்திசெய் திறைஞ்சிப் பொழிபூந்தராய் போற்றுதுமே. க

காவியங்கருங் கண்ணினள்கனித்
தொண்டைவாய்க்கதிர் முத்தநல்வெண்ணகைத்
தூவியம்பெடை யன்னநடைச்சுரி மென்குழலாள்
தேவியுந்திரு மேனியோர்பாகமாய்
ஒன்றிரண்டொரு மூன்றொடுசேர்பதி
பூவிலந்தணன் ஒப்பவர்பூந்தராய் போற்றுதுமே. உ

பையராவரும் அல்குல்மெல்லியல்
பஞ்சின்நோடி வஞ்சிகொள் நுண்ணிடைத்
தையலாளொரு பாலுடையெம்மிறை சாருமிடஞ்
செய்யெலாங்கழு நீர்கமலம்மலர்த்
தேறலூறலிற் சேறுலராதநற்
பொய்யிலாமறை யோர்பயில்பூந்தராய் போற்றுதுமே. ௩

முள்ளிநாண்முகை மொட்டியல்கோங்கின்
அரும்புதேன்கொள் குரும்பைமூவாமருந்
துள்ளியன்றபைம்பொற் கலசத்திய லொத்தமுலை
வெள்ளிமால்வரை யன்னதோர்மேனியின்
மேவினார்பதி வீமருதண்பொழிற்
புள்ளினந்துயில் மல்கியபூந்தராய் போற்றுதுமே. ச

பண்ணியன்றெழு மென்மொழியாள்பகர்
கோதையேர்திகழ் பைந்தளிர்மேனியோர்
பெண்ணியன்றமொய்ம்பிற் பெருமாற்கிடம் பெய்வளையார்
கண்ணியன்றெழு காவிச்செழுங்கரு
நீலம்மல்கிய காமருவாவிநற்
புண்ணியருறையும் பதிபூந்தராய் போற்றுதுமே. ரு

வான்நிலாமதி போல்நுதலாள்மட
மாழையொண்கணாள் வண்தரளந்நகை
பாண்நிலாவிய இன்னிசையார்மொழிப் பாவையொடுஞ்
சேண்நிலாத்திகழ் செஞ்சடையெம்மண்ணல்
சேர்வதுசிகரப் பெருங்கோயில்சூழ்
போணிலாநுழையும் பொழிற்பூந்தராய் போற்றுதுமே. சு

காருலாவிய வார்குழலாள்கயற்
கண்ணினாள்புயற் காலொளிமின்னிடை
வாருலாவிய மென்முலையாள்மலை மாதுடனாய்
நீருலாவிய சென்னியன்மன்னி
நிகருநாமம் முந்நான்குநிகழ்பதி
போருலாவெயில் சூழ்பொழிற்பூந்தராய் போற்றுதுமே. எ

காசைசேர்குழலாள் கயலேர்தடங்
கண்ணிகாம்பன தோட்கதிர்மென்முலைத்
தேசுசேர்மலை மாதமருந்திரு மார்பகலத்
தீசன்மேவும் இருங்கயிலையெடுத்தானை
அன்றடர்த்தான் இணைச்சேவடி
பூசைசெய்பவர் சேர்பொழிற்பூந்தராய் போற்றுதுமே. அ

கொங்குசேர்குழ லாள்நிழல்வெண்ணகைக்
கொவ்வைவாய்க்கொடி யேரிடையாளுமை
பங்குசேர்திரு மார்புடையார்படர் தீயுருவாய்
மங்குல்வண்ணனும் மாமலரோனும்
மயங்கநீண்டவர் வான்மிசைவந்தெழு
பொங்குநீரின் மிதந்தநற்பூந்தராய் போற்றுதுமே. கூ

கலவமாமயி லார்இயலாள்கரும்
பன்னமென்மொழி யாள்கதிர்வாள்நுதற்
குலவுபூங்குழ லாளுமைகூறனை வேறுரையால்
அலவைசொல்லுவார் தேரமண்ஆதர்கள்
ஆக்கினான்றனை நண்ணலுநல்குநற்
புலவர்தாம்புகழ் பொற்பதிபூந்தராய் போற்றுதுமே. கo

தேம்பல்நுண்ணிடை யாள்செழுஞ்சேலன
கண்ணியோடண்ணல் சேர்விடந்தேன்அமர்
பூம்பொழில்திகழ் பொற்பதிபூந்தராய் போற்றுதுமென்
றோம்புதன்மையன் முத்தமிழ்நான்மறை
ஞானசம்பந்தன் ஒண்தமிழ்மாலைகொண்
டாம்படியிவை யேத்தவல்லார்க்கடை யாவினையே. கக

திருச்சிற்றம்பலம்

திருப்புகலி - நாலடிமேல்வைப்பு. பண் - காந்தாரபஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

இயலிசை யெனும்பொரு ளின்திறமாம்
புயலன மிடறுடைப் புண்ணியனே
கயலன அரிநெடுங் கண்ணியொடும்
அயலுல கடிதொழ அமர்ந்தவனே
கலனாவது வெண்டலை கடிபொழிற் புகலிதன்னுள்
நிலனாள்தொறும் இன்புற நிறைமதி யருளினனே. க

நிலையுறும் இடர்நிலை யாதவண்ணம்
இலையுறு மலர்கள்கொண் டேத்துதும்யாம்
மலையினில் அரிவையை வெருவவன்றோல்
அலைவரு மதகரி யுரித்தவனே
இமையோர்கள்நின் தாள்தொழ எழில்திகழ் பொழிற்புகலி
உமையாளொடு மன்னினை உயர்திரு வடியிணையே. உ

பாடினை அருமறை வரன்முறையால்
ஆடினை காணமுன் அருவனத்திற்
சாடினை காலனைத் தயங்கொளிசேர்
நீடுவெண் பிறைமுடி நின்மலனே
நினையேயடி யார்தொழ நெடுமதிற் புகலிந்நகர்
தனையேயிட மேவினை தவநெறி அருளெமக்கே. ங

நிழல்திகழ் மழுவினை யானையின்தோல்
அழல்திகழ் மேனியில் அணிந்தவனே
கழல்திகழ் சிலம்பொலி யலம்பநல்ல
முழவொடும் அருநட முயற்றினனே
முடிமேல்மதி சூடினை முருகமர் பொழிற்புகலி
அடியாரவ ரேத்துற அழகொடும் இருந்தவனே. ச

கருமையின் ஒளிர்கடல் நஞ்சமுண்ட
உரிமையின் உலகுயிர் அளித்தநின்றன்
பெருமையை நிலத்தவர் பேசினல்லால்
அருமையில் அளப்பரி தாயவனே
அரவேரிடை யாளொடும் அலைகடல் மலிபுகலிப்
பொருள்சேர்தர நாள்தொறும் புவிமிசைப் பொலிந்தவனே.

அடையரி மாவொடு வேங்கையின்தோல்
புடைபட அரைமிசைப் புனைந்தவனே
படையுடை நெடுமதிற் பரிசழித்த
விடையுடைக் கொடிமல்கு வேதியனே
விகிர்தாபரமா நின்னை விண்ணவர் தொழப்புகலித்
தகுவாய்மட மாதொடுந் தாள்பணிந் தவர்தமக்கே. ௬

அடியவர் தொழுதெழ அமரரேத்தச்
செடியவல் வினைபல தீர்ப்பவனே
துடியிடை அகலல்குல் தூமொழியைப்
பொடியணி மார்புறப் புல்கினனே
புண்ணியா புனிதா புகரேற்றினை புகலிந்நகர்
நண்ணினாய் கழலேத்திட நண்ணகிலா வினையே. ௭

இரவொடு பகலதாம் எம்மானுன்னைப்
பரவுதல் ஒழிகிலேன் வழியடியேன்
குரவிரி நறுங்கொன்றை கொண்டணிந்த
அரவிரி சடைமுடி யாண்டகையே
அனமென்னடை யாளொடும் அதிர்கடல் இலங்கைமன்னை
இனமார்தரு தோளடர்த் திருந்தனை புகலியுளே. ௮

உருகிட வுவகைதந் துடலினுள்ளால்
பருகிடும் அமுதன பண்பினனே
பொருகடல் வண்ணனும் பூவுளானும்
பெருகிடும் அருளெனப் பிறங்கெரியாய்
உயர்ந்தாயினி நீயெனை ஒண்மலரடி யிணைக்கீழ்
வயந்தாங் குறநல்கிடு வளர்மதிற் புகலிமனே. ௯

கையினி லுண்பவர் கணிகைநோன்பர்
செய்வன தவமலாச் செதுமதியார்
பொய்யவ ருரைகளைப் பொருளெனாத
மெய்யவ ரடிதொழ விரும்பினனே
வியந்தாய்வெள் ளேற்றினை விண்ணவர் தொழுபுகலி
உயர்ந்தார்பெருங் கோயிலுள் ஒருங்குடன் இருந்தவனே.

புண்ணியர் தொழுதெழு புகலிந்நகர்
விண்ணவ ரடிதொழ விளங்கினானை
நண்ணிய ஞானசம் பந்தன்வாய்மை
பண்ணிய அருந்தமிழ்ப் பத்தும்வல்லார்
நடலையவை யின்றிப்போய் நண்ணுவர் சிவனுலகம்
இடராயின இன்றித்தாம் எய்துவர் தவநெறியே. கக

திருச்சிற்றம்பலம்

திருவாவடுதுறை - நாலடிமேல்வைப்பு. பண் - காந்தாரபஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

இடரினுந் தளரினும் எனதுறுநோய்
தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோஎமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுன தின் னருள்ஆவடுதுறை யரனே. க

வாழினுஞ் சாவினும் வருந்தினும்போய்
வீழினும் உனகழல் விடுவேனல்லேன்
தாழிளந் தடம்புனல் தயங்குசென்னிப்
போழிள மதிவைத்த புண்ணியனே
இதுவோஎமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுன தின் னருள்ஆவடுதுறை யரனே. உ

நனவினுங் கனவினும் நம்பாவுன்னை
மனவினும் வழிபடல் மறவேன்அம்மான்
புனல்விரி நறுங்கொன்றைப் போதணிந்த
கனலெரி யனல்புல்கு கையவனே
இதுவோஎமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுன தின் னருள்ஆவடுதுறை யரனே. ௩

தும்மலோ டருந்துயர் தோன்றிடினும்
அம்மலர் அடியலால் அரற்றாதென்னாக்
கைம்மல்கு வரிசிலைக் கணையொன்றினால்
மும்மதில் எரியெழ முனிந்தவனே
இதுவோஎமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருள்ஆவடுதுறை யரனே. ௪

கையது வீழினுங் கழிவுறினும்
செய்கழல் அடியலால் சிந்தைசெய்யேன்
கொய்யணி நறுமலர் குலாயசென்னி
மையணி மிடறுடை மறையவனே
இதுவோஎமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருள்ஆவடுதுறை யரனே. ௫

வெந்துயர் தோன்றியோர் வெருவுறினும்
எந்தாயுன் அடியலால் ஏத்தாதென்னா
ஐந்தலை யரவுகொண் டரைக்கசைத்த
சந்தவெண் பொடியணி சங்கரனே
இதுவோஎமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருள்ஆவடுதுறை யரனே. ௬

வெப்பொடு விரவியோர் வினைவரினும்
அப்பாவுன் னடியலால் அரற்றாதென்னா
ஒப்புடை யொருவனை யுருவழிய
அப்படி யழலெழ விழித்தவனே
இதுவோஎமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருள்ஆவடுதுறை யரனே. ௭

பேரிடர் பெருகியோர் பிணிவரினுஞ்
சீருடைக் கழல்அலாற் சிந்தைசெய்யேன்
ஏருடை மணிமுடி இராவணனை
ஆரிடர் படவரை யடர்த்தவனே
இதுவோஎமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருள்ஆவடுதுறை யரனே. ௮

உண்ணினும் பசிப்பினும் உறங்கினும்நின்
ஒண்மல ரடியலால் உரையாதென்நாக்
கண்ணனுங் கடிகமழ் தாமரைமேல்
அண்ணலும் அளப்பரி தாயவனே
இதுவோஎமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருள் ஆவடுதுறை யரனே. கூ

பித்தொடு மயங்கியோர் பிணிவரினும்
அத்தாவுன் அடியலால் அரற்றாதென்நாப்
புத்தருஞ் சமணரும் புறனுரைக்கப்
பத்தர்கட் கருள்செய்து பயின்றவனே
இதுவோஎமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருள்ஆவடுதுறை யரனே. க0

அலைபுனல் ஆவடு துறையமர்ந்த
இலைநுனை வேற்படை யெம்இறையை
நலம்மிகு ஞானசம் பந்தன்சொன்ன
விலையுடை யருந்தமிழ் மாலைவல்லார்
வினையாயினநீங் கிப்போய் விண்ணவர் வியனுலகம்
நிலையாகமுன் னேறுவர்நிலமிசை நிலையிலரே. கக

திருச்சிற்றம்பலம்

திருப்பூந்தராய் - ஈரடிமேல்வைப்பு. பண் - காந்தாரபஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

தக்கன் வேள்வி தகர்த்தவன் பூந்தராய்
மிக்க செம்மை விமலன் வியன்கழல்
சென்று சிந்தையில் வைக்க மெய்க்கதி
நன்ற தாகிய நம்பன் தானே. க

புள்ளி னம்புகழ் போற்றிய பூந்தராய்
வெள்ளந் தாங்கு விகிர்தன் அடிதொழ
ஞாலத் தில்லுயர் வாருள்கு நன்னெறி
மூல மாய முதல்வன் தானே. உ

வேந்த ராயுல காள விருப்புறிற்
பூந்த ராய்நகர் மேயவன் பொற்கழல்
நீதி யால்நினைந் தேத்தி யுள்கிடச்
சாதி யாவினை யான தானே. ௩

பூசு ரர்தொழு தேத்திய பூந்தராய்
ஈசன் சேவடி யேத்தி யிறைஞ்சிடச்
சிந்தை நோயவை தீர நல்கிடும்
இந்து வார்சடை யெம் இறையே. ௪

பொலிந்த என்பணி மேனியன் பூந்தராய்
மலிந்த புந்திய ராகி வணங்கிட
நுந்தம் மேல்வினை யோட வீடுசெய்
எந்தை யாயஎம் ஈசன் தானே. ௫

பூதஞ் சூழப் பொலிந்தவன் பூந்தராய்
நாதன் சேவடி நாளும் நவின்றிட
நல்கு நாள்தொறும் இன்ப நளிர்புனல்
பில்கு வார்சடைப் பிஞ்ஞ கனே. ௬

புற்றில் நாகம் அணிந்தவன் பூந்தராய்
பற்றி வாழும் பரமனைப் பாடிடப்
பாவ மாயின தீரப் பணித்திடுஞ்
சேவ தேறிய செல்வன் தானே. ௭

போத கத்துரி போர்த்தவன் பூந்தராய்
காத லித்தான் கழல்விரல் ஒன்றினால்
அரக்கன் ஆற்றல் அழித்தவ னுக்கருள்
பெருக்கி நின்றஎம் பிஞ்ஞ கனே. ௮

மத்த மான இருவர் மருவொணா
அத்த னானவன் மேவிய பூந்தராய்
ஆள தாக அடைந்துய்ம்மின் நும்வினை
மாளு மாறருள் செய்யுந் தானே. ௯

பொருத்த மில்சமண் சாக்கியப் பொய்கடிந்
திருத்தல் செய்தபி ரான்இமை யோர்தொழப்
பூந்த ராய்நகர் கோயில் கொண்டுகை
ஏந்து மான்மறி யெம்மி றையே. ௧௦

புந்தி யால்மிக நல்லவர் பூந்தராய்
அந்த மில்லெம் அடிகளை ஞானசம்
பந்தன் மாலைகொண் டேத்தி வாழும்நம்
பந்த மார்வினை பாறி டுமே. கக

திருச்சிற்றம்பலம்

திருக்கொள்ளம்பூதூர்

ஈரடிமேல்வைப்பு. பண் - காந்தாரபஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

கொட்ட மேகமழுங் கொள்ளம் பூதூர்
நட்டம் ஆடிய நம்பனை யுள்கச்
செல்ல வுந்துக சிந்தை யார்தொழ
நல்கு மாறருள் நம்பனே. க

கோட்ட கக்கழனிக் கொள்ளம் பூதூர்
நாட்ட கத்துறை நம்பனை யுள்கச்
செல்ல வுந்துக சிந்தை யார்தொழ
நல்கு மாறருள் நம்பனே. உ

குலையினூர் தெங்குசூழ் கொள்ளம் பூதூர்
விலையி லாட்கொண்ட விகிர்தனை யுள்கச்
செல்ல வுந்துக சிந்தை யார்தொழ
நல்கு மாறருள் நம்பனே. ங

குவளை கண்மலருங் கொள்ளம் பூதூர்த்
தவள நீறணி தலைவனை யுள்கச்
செல்ல வுந்துக சிந்தை யார்தொழ
நல்கு மாறருள் நம்பனே. ச

கொன்றைபொன் சொரியுங் கொள்ளம் பூதூர்
நின்ற புன்சடை நிமலனை யுள்கச்
செல்ல வுந்துக சிந்தை யார்தொழ
நல்கு மாறருள் நம்பனே. ரு

ஓடம்வந் தணையுங் கொள்ளம் பூதூர்
ஆடல் பேணிய அடிகளை யுள்கச்
செல்ல வுந்துக சிந்தை யார்தொழ
நல்கு மாறருள் நம்பனே. ௬

ஆறுவந் தணையுங் கொள்ளம் பூதூர்
ஏறு தாங்கிய இறைவனை யுள்கச்
செல்ல வுந்துக சிந்தை யார்தொழ
நல்கு மாறருள் நம்பனே. ௭

குரக்கினம் பயிலுங் கொள்ளம் பூதூர்
அரக்கனைச் செற்ற ஆதியை யுள்கச்
செல்ல வுந்துக சிந்தை யார்தொழ
நல்கு மாறருள் நம்பனே. ௮

பருவரால் உகளுங் கொள்ளம் பூதூர்
இருவர் காண்பரி யான்கழ லுள்கச்
செல்ல வுந்துக சிந்தை யார்தொழ
நல்கு மாறருள் நம்பனே. ௯

நீரகக் கழனிக் கொள்ளம் பூதூர்த்
தேரமண் செற்ற செல்வனை யுள்கச்
செல்ல வுந்துக சிந்தை யார்தொழ
நல்கு மாறருள் நம்பனே. ௧0

கொன்றைசேர் சடையான் கொள்ளம் பூதூர்
நன்று காழியுள் ஞானசம் பந்தன்
இன்றுசொன் மாலைகொண் டேத்தவல் லார்போய்
என்றும் வானவ ரோடிருப் பாரே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருப்புகலி - பண் - காந்தாரபஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

கண்ணுத லானும்வெண் ணீற்றி னானுங்கழ லார்க்கவே
பண்ணிசை பாடநின் றாடி னானும்பரஞ் சோதியும்
புண்ணிய நான்மறை யோர்களேத் தும்புக லிந்நகர்ப்
பெண்ணின்நல் லாளொடும் வீற்றிருந் தபெரு மானன்றே. ௧

சாம்பலோ டுந்தழ லாடி னானுஞ்சடை யின்மிசைப்
பாம்பினோ டும்மதி சூடி னானும்பசு வேறியும்
பூம்படு கல்லிள வாளைபா யும்புக லிந்நகர்க்
காம்பன தோளியொ டும்மிருந் தகட வுளன்றே. ௨

கருப்புநல் வார்சிலைக் காமன்வே வக்கடைக் கண்டானும்
மருப்புநல் லானையின் ஈருரி போர்த்தம ணாளனும்
பொருப்பன மாமணி மாடமோங் கும்புக லிந்நகர்
விருப்பின்நல் லாளொடும் வீற்றிருந் தவிம லனன்றே. ௩

அங்கையில் அங்கழல் ஏந்தி னானும்அழ காகவே
கங்கையைச் செஞ்சடை சூடி னானுங்கட லின்னிடைப்
பொங்கிய நஞ்சமு துண்டவ னும்புக லிந்நகர்
மங்கைநல் லாளொடும் வீற்றிருந் தமண வாளனே. ௪

சாமநல் வேதனுந் தக்கன்றன் வேள்வித கர்த்தானும்
நாமநூ றாயிரஞ் சொல்லிவா னோர்தொழு நாதனும்
பூமல்கு தண்பொழில் மன்னுமந் தண்புக லிந்நகர்க்
கோமள மாதொடும் வீற்றிருந் தகுழ கனன்றே. ௫

இரவிடை யொள்ளெரி யாடி னானும்இமை யோர்தொழச்
செருவிடை முப்புரந் தீயெரித் தசிவ லோகனும்
பொருவிடை யொன்றுகந் தேறி னானும்புக லிந்நகர்
அரவிடை மாதொடும் வீற்றிருந் தஅழ கனன்றே. ௬

சேர்ப்பது திண்சிலை மேவி னானுந்திகழ் பாலன்மேல்
வேர்ப்பது செய்தவெங் கூற்றுதைத் தானும்வேள் விப்புகை
போர்ப்பது செய்தணி மாடமோங் கும்புக லிந்நகர்ப்
பார்ப்பதி யோடுடன் வீற்றிருந் தபர மனன்றே. ௭

கன்னெடு மால்வரைக் கீழாக் கன்இடர் கண்டானும்
வின்னெடும் போர்விறல் வேடனு கிவிச யற்கொரு
பொன்னெடுங் கோல்கொடுத் தானுமந் தண்புக லிந்நகர்
அன்னமன் னந்நடை மங்கையொ டும்அமர்ந் தானன்றே. அ

பொன்னிற நான்முகன் பச்சையான் என்றிவர் புக்குழித்
தன்னையின் னனெனக் காண்பரி யதழற் சோதியும்
புன்னைபொன் தாதுதிர் மல்குமந் தண்புக லிந்நகர்
மின்னிடை மாதொடும் வீற்றிருந் தவிம லனன்றே. கூ

பிண்டியும் போதியும் பேணுவார் பேச்சினைப் பேணாதோர்
தொண்டருங் காதல்செய் சோதியா யசுடர்ச் சோதியான்
புண்டரீ கம்மலர்ப் பொய்கைசூழ்ந் தபுக லிந்நகர்
வண்டமர் கோதையோ டும்மிருந் தமண வாளனே. க0

பூங்கமழ் கோதையோ டும்மிருந் தான்புக லிந்நகர்ப்
பாங்கனை ஞானசம் பந்தன்சொன் னதமிழ் பத்திவை
ஆங்கமர் வெய்திய ஆதியா கஇசை வல்லவர்
ஓங்கம ராமவதி யோர்தொழச் செல்வதும் உண்மையே. கக

திருச்சிற்றம்பலம்

திருக்கடவூர்வீரட்டம் - பண் - காந்தாரபஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

சடையுடை யானும்நெய் யாடலா னுஞ்சரி கோவண
உடையுடை யானும்மை ஆர்ந்தவொண் கண்உமைகேள்வனும்
கடையுடை நன்னெடு மாடமோங் குங்கட வூர்தனுள்
விடையுடை யண்ணலும் வீரட்டா னத்தான் அல்லனே. க

எரிதரு வார்சடை யானும்வெள் ளையெரு தேறியும்
புரிதரு மாமலர்க் கொன்றைமா லைபுனைந் தேத்தவே
கரிதரு காலனைச் சாடினா னுங்கட வூர்தனுள்
விரிதரு தொல்புகழ் வீரட்டா னத்தான் அல்லனே. உ

நாதனும் நள்ளிரு ளாடினா னுந்நளிர் போதின்கண்
பாதனும் பாய்புலித் தோலினா னும்பசு வேறியும்

காதலர் தண்கட வூரினு னுங்கலந் தேத்தவே
வேதம தோதியும் வீரட்டா னத்தான் அல்லனே. ௩

மழுவமர் செல்வனும் மாசிலா தபல பூதமுன்
முழவொலி யாழ்குழல் மொந்தைகொட் டமுது காட்டிடைக்
கழல்வளர் கால்குஞ்சித் தாடினு னுங்கட வூர்தனுள்
விழவொலி மல்கிய வீரட்டா னத்தான் அல்லனே. ௪

சுடர்மணிச் சுண்ணவெண் ணீற்றினு னுஞ்சுழல் வாயதோர்
படமணி நாகம் அரைக்கசைத் தபர மேட்டியும்
கடமணி மாவுரித் தோலினு னுங்கட வூர்தனுள்
விடமணி கண்டனும் வீரட்டா னத்தான் அல்லனே. ௫

பண்பொலி நான்மறை பாடியா டிப்பல வூர்கள்போய்
உண்பலி கொண்டுழல் வானும்வா னின்னொளி மல்கிய
கண்பொலி நெற்றிவெண் திங்களா னுங்கட வூர்தனுள்
வெண்பொடிப் பூசியும் வீரட்டா னத்தான் அல்லனே. ௬

செவ்வழ லாய்நில னாகிநின் றசிவ மூர்த்தியும்
முவ்வழல் நான்மறை யைந்துமா யமுனி கேள்வனும்
கவ்வழல் வாய்க்கத நாகமார்த் தான்கட வூர்தனுள்
வெவ்வழ லேந்துகை வீரட்டா னத்தான் அல்லனே. ௭

அடியிரண் டோருடம் பைஞ்ஞான்கி ருபது தோள்தச
முடியுடை வேந்தனை மூர்க்கழித் தமுதல் மூர்த்தியும்
கடிகம ழும்பொழில் சூழுமந் தண்கட வூர்தனுள்
வெடிதலை யேந்தியும் வீரட்டா னத்தான் அல்லனே. ௮

வரைகுடை யாமழை தாங்கினு னும்வளர் போதின்கண்
புரைகடிந் தோங்கிய நான்முகத் தான்புரிந் தேத்தவே
கரைகடல் சூழ்வையங் காக்கின்றா னுங்கட வூர்தனுள்
விரைகமழ் பூம்பொழில் வீரட்டா னத்தான் அல்லனே. ௯

தேரும் மாசுகொள் மேனியா ருந்தெளி யாததோர்
ஆருஞ் சொற்பொரு ளாகிநின் றஎம தாதியான்
காரிளக் கொன்றைவெண் திங்களா னுங்கட வூர்தனுள்
வீரமுஞ் சேர்கழல் வீரட்டா னத்தான் அல்லனே. ௧௦

வெந்தவெண் ணீறணி வீரட்டா னத்துறை வேந்தனை
அந்தணர் தங்கட வூருளா னையணி காழியான்
சந்தமெல் லாமடிச் சாத்தவல் லமறை ஞானசம்
பந்தன செந்தமிழ் பாடியா டக்கெடும் பாவமே. கக

திருச்சிற்றம்பலம்

திருவீழிமிழலை - பண் - காந்தாரபஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

கேள்வியர் நாள்தொறும் ஓதும்நல் வேதத்தர் கேடிலா
வேள்விசெய் அந்தணர் வேதியர் வீழிமி ழலையார்
வாழியர் தோற்றமுங் கேடும்வைப் பாருயிர் கட்கெலாம்
ஆழியர் தம்மடி போற்றியென் பார்கட்க ணியரே. க

கல்லின்நற் பாவையோர் பாகத்தர் காதலித் தேத்திய
மெல்லினத் தார்பக்கல் மேவினர் வீழிமி ழலையார்
நல்லினத் தார்செய்த வேள்விசெ குத்தெழு ஞாயிற்றின்
பல்லினைத் துந்தகர்த் தாரடி யார்பாவ நாசரே. உ

நஞ்சினை யுண்டிருள் கண்டர்பண் டந்தக னைச்செற்ற
வெஞ்சின மூவிலைச் சூலத்தர் வீழிமி ழலையார்
அஞ்சனக் கண்ணுமை பங்கினர் கங்கையங் காடிய
மஞ்சனச் செஞ்சடை யாரென வல்வினை மாயுமே. ங

கலையிலங் கும்மழு கட்டங்கங் கண்டிகை குண்டலம்
விலையிலங் கும்மணி மாடத்தர் வீழிமி ழலையார்
தலையிலங் கும்பிறை தாழ்வடஞ் சூலந்த மருகம்
அலையிலங் கும்புன லேற்றவர்க் கும்அடி யார்க்குமே. ச

பிறையுறு செஞ்சடை யார்விடை யார்பிச்சை நச்சியே
வெறியுறு நாட்பலி தேர்ந்துழல் வீழிமி ழலையார்
முறைமுறை யாலிசை பாடுவா ராடிமுன் தொண்டர்கள்
இறையுறை வாஞ்சியம் அல்லதெப் போதுமென் உள்ளமே. ரு

வசையறு மாதவங் கண்டுவ ரிசிலை வேடனாய்
விசையனுக் கன்றருள் செய்தவர் வீழிமி ழலையார்

இசைவா விட்டியல் கேட்பித்துக் கல்லவ டமிட்டுத்
திசைதொழு தாடியும் பாடுவார் சிந்தையுட் சேர்வரே. சு

சேடர்விண் ணோர்கட்குத் தேவர்நன் மூவிரு தொன்னூலர்
வீடர்முத் தீயர்நால் வேதத்தர் வீழிமி ழலையார்
காடரங் காவுமை காணஅண் டத்திமை யோர்தொழ
நாடக மாடியை யேத்தவல் லார்வினை நாசமே. எ

எடுத்தவன் மாமலைக் கீழவி ராவணன் வீழ்தர
விடுத்தருள் செய்திசை கேட்டவர் வீழிமி ழலையார்
படுத்துவெங் காலனைப் பால்வழி பாடுசெய் பாலற்குக்
கொடுத்தனர் இன்பங்கொ டுப்பர் தொழக்குறை வில்லையே. அ

திக்கமர் நான்முகன் மாலண்டம் மண்டலந் தேடிட
மிக்கமர் தீத்திர ளாயவர் வீழிமி ழலையார்
சொக்கம தாடியும் பாடியும் பாரிடஞ் சூழ்தரும்
நக்கர்தந் நாமம்ந மச்சிவா யவ்வென்பார் நல்லரே. கூ

துற்றரை யார்துவ ராடையர் துப்புர வொன்றிலா
வெற்றரை யார்அறி யாநெறி வீழிமி ழலையார்
சொற்றெரி யாப்பொருள் சோதிக்கப் பால்நின்ற சோதிதான்
மற்றறி யாவடி யார்கள்தஞ் சிந்தையுள் மன்னுமே. க0

வேதியர் கைதொழு வீழிமி ழலைவி ரும்பிய
ஆதியை வாழ்பொழிற் காழியுள் ஞானசம் பந்தனுய்ந்
தோதிய வொண்டமிழ் பத்திவை யுற்றுரை செய்பவர்
மாதியல் பங்கன் மலரடி சேரவும் வல்லரே. கக

திருச்சிற்றம்பலம்

திருஇராமேச்சுரம் - பண் - காந்தாரபஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

அலைவளர் தண்மதி யோடய லேயடக் கியுமை
முலைவளர் பாகமு யங்கவல் லமுதல் வன்முனி
இலைவளர் தாழைகள் விம்முகா னல்இரா மேச்சுரம்
தலைவளர்கோலநன் மாலையன் தானிருந் தாட்சியே. க

தேவியை வவ்விய தென்னிலங் கைத்தச மாமுகன்
பூவிய லும்முடி பொன்றுவித் தபழி போயற
ஏவிய லுஞ்சிலை யண்ணல்செய் தஇரா மேச்சுரம்
மேவிய சிந்தையி னார்கள்தம் மேல்வினை வீடுமே. உ

மான்அன நோக்கியை தேவிதன் னையொரு மாயையால்
கானதில் வவ்விய காரக் கன்னுயிர் செற்றவன்
ஈனமி லாப்புக ழண்ணல்செய் தஇரா மேச்சுரம்
ஞானமும் நன்பொரு ளாகிநின் றதொரு நன்மையே. ங

உரையுண ராதவன் காமமென் னும்முறு வேட்கையால்
வரைபொரு தோளிறச் செற்றவில் லிமகிழ்ந் தேத்திய
விரைமரு வுங்கட லோதம்மல் கும்இரா மேச்சுரத்
தரையா வாடநின் றாடல்பே ணும்அம்மான் அல்லனே. ச

ஊறுடை வெண்தலை கையிலேந் திப்பல வூர்தொறும்
வீறுடை மங்கையர் ஐயம்பெய் யவிற லார்ந்ததோர்
ஏறுடை வெல்கொடி யெந்தைமே யஇரா மேச்சுரம்
பேறுடை யான்பெய ரேத்தும்மாந் தர்பிணி பேருமே. ரு

அணையலை சூழ்கடல் அன்றடைத் துவழி செய்தவன்
பணையிலங் கும்முடி பத்திறுத் தபழி போக்கிய
இணையிலி யென்றுமி ருந்தகோ யில்இரா மேச்சுரம்
துணையிலி தூமலர்ப் பாதமேத் தத்துயர் நீங்குமே. சு

சனிபுதன் ஞாயிறு வெள்ளிதிங் கட்பல தீயன
முனிவது செய்துகந் தானைவென் றவ்வினை மூடிட
இனியருள் நல்கிடென் றண்ணல்செய் தஇரா மேச்சுரம்
பனிமதி சூடிநின் றாடவல் லபரமேட்டியே. எ

பெருவரை யன்றெடுத் தேந்தினான் தன்பெயர் சாய்கெட
அருவரை யாலடர்த் தன்றுநல் கியயன் மாலெனும்
இருவரும் நாடிநின் றேத்துகோ யில்இரா மேச்சுரத்
தொருவனு மேபல வாகிநின் றதொரு வண்ணமே. அ, கூ

சாக்கியர் வன்சமண் கையர்மெய் யில்தடு மாற்றத்தார்
வாக்கிய லும்உரை பற்றுவிட் டுமதி யொண்மையால்

எக்கிய லுஞ்சிலை யண்ணல்செய் தஇரா மேச்சுரம்
ஆக்கிய செல்வனை யேத்திவாழ் மின்அரு ளாகவே. ௧0

பகலவன் மீதியங் காமைக்காத் தபதி யோன்றனை
இகலழி வித்தவன் எத்துகோ யில்இரா மேச்சுரம்
புகலியுள் ஞானசம் பந்தன்சொன் னதமிழ் புந்தியால்
அகலிட மெங்குநின் றேத்தவல் லார்க்கில்லை அல்லலே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருப்புனவாயில் - பண் - காந்தாரபஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

மின்னியல் செஞ்சடை வெண்பிறை யன்விரி நூலினன்
பன்னிய நான்மறை பாடியா டிப்பல வூர்கள்போய்
அன்னம்அன் னந்நடை யாளொ டும்அம ரும்இடம்
புன்னைநன் மாமலர் பொன்னுதிர்க் கும்புன வாயிலே. ௧

விண்டவர் தம்புரம் மூன்றெரித் துவிடை யேறிப்போய்
வண்ட மருங்குழல் மங்கையொ டும்மகிழ்ந் தானிடம்
கண்டலும் ஞாழலும் நின்றுபெ ருங்கடற் கானல்வாய்ப்
புண்டரீ கம்மலர்ப் பொய்கைசூழ்ந் தபுன வாயிலே. ௨

விடையுடை வெல்கொடி யேந்தினு னும்விறற் பாரிடம்
புடைபட வாடிய வேடத்தா னும்புன வாயிலில்
தொடைநவில் கொன்றையந் தாரினா னுஞ்சுடர் வெண்மழுப்
படைவலன் ஏந்திய பால்நெய்யா டும்பர மனன்றே. ௩

சங்கவெண் தோடணி காதினா னுஞ்சடை தாழவே
அங்கையி லங்கழ லேந்தினா னும்அழ காகவே
பொங்கா வம்மணி மார்பினா னும்புன வாயிலில்
பைங்கண்வெள் ளேற்றண்ண லாகிநின் றபர மேட்டியே. ௪

கலிபடு தண்கடல் நஞ்சமுண் டகறைக் கண்டனும்
புலியதள் பாம்பரைச் சுற்றினா னும்புன வாயிலில்
ஒலிதரு தண்புன லோடெருக் கும்மத மத்தமும்
மெலிதரு வெண்பிறை சூடிநின் றவிடை யூர்தியே. ௫

வாருறு மென்முலை மங்கைபா டநட மாடிப்போய்க்
காருறு கொன்றைவெண் திங்களா னுங்கனல் வாயதோர்
போருறு வெண்மழு வேந்தினா னும்புன வாயிலில்
சீருறு செல்வம்மல் கவ்விருந் தசிவ லோகனே. சு

பெருங்கடல் நஞ்சமு துண்டுகந் துபெருங் காட்டிடைத்
திருந்திள மென்முலைத் தேவிபா டநட மாடிப்போய்ப்
பொருந்தலர் தம்புரம் மூன்றுமெய் துபுன வாயிலில்
இருந்தவன் தன்கழ லேத்துவார் கட்கிட ரில்லையே. எ

மனமிகு வேலனவ் வாளரக் கன்வலி யொல்கிட
வனமிகு மால்வரை யாலடர்த் தானிட மன்னிய
இனமிகு தொல்புகழ் பாடலா டல்லெழின் மல்கிய
புனமிகு கொன்றையந் தென்றலார்ந் தபுன வாயிலே. அ

திருவளர் தாமரை மேவினா னுந்திகழ் பாற்கடற்
கருநிற வண்ணனுங் காண்பரி யகட வுள்ளிடம்
நால்சுரி சங்கொடும் இப்பியுந் திக்கலம் மல்கிய
பொருகடல் வெண்டிரை வந்தெறி யும்புன வாயிலே. கூ

போதியெ னப்பெய ராயினா ரும்பொறி யில்சமண்
சாதியு ரைப்பன கொண்டயர்ந் துதளர் வெய்தன்மின்
போதவிழ் தண்பொழில் மல்குமந் தண்புன வாயிலில்
வேதனை நாள்தொறும் ஏத்துவார் மேல்வினை வீடுமே. க0

பொற்றொடி யாளுமை பங்கன்மே வும்புன வாயிலைக்
கற்றவர் தாந்தொழு தேத்தநின் றகடற் காழியான்
நற்றமிழ் ஞானசம் பந்தன்சொன் னதமிழ் நன்மையால்
அற்றமில் பாடல்பத் தேத்தவல் லாருள் சேர்வரே. கக

திருச்சிற்றம்பலம்

திருக்கோட்டாறு - பண் - காந்தாரபஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

வேதியன் விண்ணவ ரேத்தநின் றான்விளங் கும்மறை
ஓதிய வொண்பொரு ளாகிநின் றானொளி யார்கிளி
கோதிய தண்பொழில் சூழ்ந்தழ கார்திருக் கோட்டாற்றுள்
ஆதியை யேநினைந் தேத்தவல் லார்க்கல்லல் இல்லையே. ௧

ஏலம லர்க்குழல் மங்கைநல் லாளிம வான்மகள்
பாலம ருந்திரு மேனியெங் கள்பர மேட்டியும்
கோலம லர்ப்பொழில் சூழ்ந்தெழி லார்திருக் கோட்டாற்றுள்
ஆலநீ ழற்கீழ் இருந்தறஞ் சொன்னஅ ழகனே. ௨

இலைமல்கு சூலமொன் றேந்தின னும்இமை யோர்தொழ
மலைமல்கு மங்கையோர் பங்கனு யம்மணி கண்டனும்
குலைமல்கு தண்பொழில் சூழ்ந்தழ கார்திருக் கோட்டாற்றுள்
அலைமல்கு வார்சடை யேற்றுகந் தஅழ கனன்றே. ௩

ஊனம ரும்முட லுள்ளிருந் தவ்வுமை பங்கனும்
வானம ரும்மதி சென்னிவைத் தமறை யோதியும்
தேனம ரும்மலர்ச் சோலைசூழ்ந் ததிருக் கோட்டாற்றுள்
தானம ரும்விடை யானும்எங் கள்தலை வனன்றே. ௪

வம்பல ரும்மலர்க் கோதைபா கம்மகிழ் மைந்தனும்
செம்பவ ளத்திரு மேனிவெண் ணீறணி செல்வனும்
கொம்பம ரும்மலர் வண்டுகெண் டுந்திருக் கோட்டாற்றுள்
நம்பனெ னப்பணி வார்க்கருள் செய்யெங்கள் நாதனே. ௫

பந்தம ரும்விரல் மங்கைநல் லாளொரு பாகமா
வெந்தம ரும்பொடிப் பூசவல் லவிகிர் தன்மிகும்
கொந்தம ரும்மலர்ச் சோலைசூழ்ந் ததிருக் கோட்டாற்றுள்
அந்தண னைநினைந் தேத்தவல் லார்க்கில்லை அல்லலே. ௬

துண்டம ரும்பிறை சூடிநீ டுசுடர் வண்ணனும்
வண்டம ருங்குழல் மங்கைநல் லாளொரு பங்கனும்
தெண்டிரை நீர்வயல் சூழ்ந்தழ கார்திருக் கோட்டாற்றுள்
அண்டமும் எண்டிசை யாகிநின் றஅழ கனன்றே. ௭

இரவம ருங்கிறம் பெற்றுடை யஇலங் கைக்கிறை
கரவம ரக்கயி லேயெடுத் தான்வலி செற்றவன்
குரவம ரும்மலர்ச் சோலைசூழ்ந் ததிருக் கோட்டாற்றுள்
அரவம ருஞ்சடை யான்அடி யார்க்கருள் செய்யுமே. அ

ஓங்கிய நாரணன் நான்முக னும்உண ராவகை
நீங்கிய தீயுரு வாகிநின் றசிம லன்நிழற்
கோங்கம ரும்பொழில் சூழ்ந்தெழி லார்திருக் கோட்டாற்றுள்
ஆங்கம ரும்பெரு மான்அம ரர்க்கம ரனன்றே. க

கடுக்கொடுத் ததுவ ராடையர் காட்சியில் லாததோர்
தடுக்கிடுக் கிச்சம ணைதிரி வார்கட்குத் தன்னருள்
கொடுக்ககில் லாக்குழ கன்அம ருந்திருக் கோட்டாற்றுள்
இடுக்கணின் றித்தொழு வார்அம ரர்க்கிறை யாவரே. க0

கொடியுயர் மால்விடை யூர்தியி னன்திருக் கோட்டாற்றுள்
அடிகழ லார்க்கநின் றாடவல் லஅரு ளாளனைக்
கடிகம ழும்பொழிற் காழியுள் ஞானசம் பந்தன்சொல்
படியிவை பாடிநின் றாடவல் லார்க்கில்லை பாவமே. கக

திருச்சிற்றம்பலம்

திருப்பூந்தராய் - பண் - காந்தாரபஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

மின்னன எயிறுடை விரவ லோர்கள்தந்
துன்னிய புரம்உகச் சுளிந்த தொன்மையர்
புன்னையம் பொழிலணி பூந்த ராய்நகர்
அன்னமன் னந்நடை அரிவை பங்கரே. க

மூதணி முப்புரத் தெண்ணி லோர்களை
வேதணி சரத்தினால் வீட்டி னாரவர்
போதணி பொழிலமர் பூந்த ராய்நகர்த்
தாதணி குழலுமை தலைவர் காண்மினே. உ

தருக்கிய திரிபுரத் தவர்கள் தாம்உகப்
பெருக்கிய சிலைதனைப் பிடித்த பெற்றியர்

பொருக்கடல் புடைதரு பூந்த ராய்நகர்க்
கருக்கிய குழலுமை கணவர் காண்மினே. ௩

நாகமும் வரையுமே நாணும் வில்லுமா
மாகமார் புரங்களை மறித்த மாண்பினர்
பூகமார் பொழிலணி பூந்த ராய்நகர்ப்
பாகமர் மொழியுமை பங்கர் காண்மினே. ௪

வெள்ளெயி றுடையவவ் விரவ லார்களூர்
ஒள்ளெரி யூட்டிய வொருவ னாரொளிர்
புள்ளணி புறவினிற் பூந்த ராய்நகர்க்
கள்ளணி குழலுமை கணவர் காண்மினே. ௫

தங்கியல் தானவர் தோற்ற மாநகர்
அங்கியில் வீழ்தர வாய்ந்த வம்பினர்
பொங்கிய கடலணி பூந்த ராய்நகர்
அங்கய லனகண்ணி அரிவை பங்கரே. ௬

அண்டர்க ளுய்ந்திட அவுணர் மாய்தரக்
கண்டவர் கடல்விட முண்ட கண்டனார்
புண்டரீ கவ்வயற் பூந்த ராய்நகர்
வண்டமர் குழலிதன் மணாளர் காண்மினே. ௭

மாசின அரக்கனை வரையின் வாட்டிய
காய்சின வெயில்களைக் கறுத்த கண்டனார்
பூசரர் பொலிதரு பூந்த ராய்நகர்க்
காசைசெய் குழலுமை கணவர் காண்மினே. ௮

தாமுக மாக்கிய அசுரர் தம்பதி
வேமுக மாக்கிய விகிர்தர் கண்ணனும்
பூமகன் அறிகிலாப் பூந்த ராய்நகர்க்
கோமகன் எழில்பெறும் அரிவை கூறரே. ௯

முத்தா அசுரர்கள் மொய்த்த முப்புரம்
அத்தரும் அழலிடை வீட்டினார்அமண்
புத்தரும் அறிவொணாப் பூந்த ராய்நகர்க்
கொத்தணி குழலுமை கூறர் காண்மினே. ௰

புரமெரி செய்தவர் பூந்த ராய்நகர்ப்
பாமலி குழலுமை நங்கை பங்கரைப்
பாவிய பந்தன்மெய்ப் பாடல் வல்லவர்
சிரமலி சிவகதி சேர்தல் திண்ணமே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருப்பைஞ்ஞீலி - பண் - காந்தாரபஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

ஆரிடம் பாடிலர் அடிகள் காடலால்
ஓரிடங் குறைவிலர் உடையர் கோவணம்
நீரிடஞ் சடைவிடை யூர்தி நித்தலும்
பாரிடம் பணிசெயும் பயில்பைஞ் ஞீலியே. ௧

மருவிலார் திரிபுரம் எரிய மால்வரை
பருவிலாக் குனித்தபைஞ் ஞீலி மேவலான்
உருவிலான் பெருமையை யுளங்கொ ளாதவத்
திருவிலார் அவர்களைத் தெருட்ட லாகுமே. ௨

அஞ்சுரும் பணிமலர் அமுதம் மாந்தித்தேன்
பஞ்சரம் பயிற்றுபைஞ் ஞீலி மேவலான்
வெஞ்சுரந் தனிலுமை வெருவ வந்ததோர்
குஞ்சரம் படவுரி போர்த்த கொள்கையே. ௩

கோடல்கள் புறவணி கொல்லை முல்லைமேல்
பாடல்வண் டிசைமுரல் பயில்பைஞ் ஞீலியார்
பேடலர் ஆணலர் பெண்ணும் அல்லதோர்
ஆடலை யுகந்தஎம் அடிகள் அல்லரே. ௪

விழியிலா நகுதலை விளங்கி ளம்பிறை
சுழியிலார் வருபுனற் சூழல் தாங்கினன்
பழியிலார் பரவுபைஞ் ஞீலி பாடலான்
கிழியிலார் கேண்மையைக் கெடுக்க லாகுமே. ௫

விடையுடைக் கொடிவல னேந்தி வெண்மழுப்
படையுடைக் கடவுள்பைஞ் ஞீலி மேவலான்

துடியிடைக் கலையல்கு லாளோர் பாகமாச்
சடையிடைப் புனல்வைத்த சதுரன் அல்லனே. சு

தூயவன் தூயவெண் ணீறு மேனிமேல்
பாயவன் பாயபைஞ் ஞீலி கோயிலா
மேயவன் வேய்புரை தோளி பாகமா
ஏயவன் எனைச்செயுந் தன்மை யென்கொலோ. எ

தொத்தின தோள்முடி யுடைய வன்தலை
பத்தினை நெரித்தபைஞ் ஞீலி மேவலான்
முத்தினை முறுவல்செய் தாளோர் பாகமாப்
பொத்தினன் திருந்தடி பொருந்தி வாழ்மினே. அ

நீருடைப் போதுறை வானும் மாலுமாய்ச்
சீருடைக் கழலடி சென்னி காண்கிலர்
பாருடைக் கடவுள்பைஞ் ஞீலி மேவிய
தாருடைக் கொன்றையந் தலைவர் தன்மையே. கூ

பீலியார் பெருமையும் பிடகர் நூன்மையும்
சாலியா தவர்களைச் சாதி யாததோர்
கோலியா வருவரை கூட்டி யெய்தபைஞ்
ஞீலியான் கழலடி நினைந்து வாழ்மினே. கo

கண்புனல் விளைவயற் காழிக் கற்பகம்
நண்புணர் அருமறை ஞானசம் பந்தன்
பண்பினர் பரவுபைஞ் ஞீலி பாடுவார்
உண்பின வுலகினி லோங்கி வாழ்வரே. கக

திருச்சிற்றம்பலம்

திருவெண்காடு - பண் - காந்தாரபஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

மந்திரம் மறையவை வானவரொடும்
இந்திரன் வழிபட நின்ற எம்மிறை
வெந்தவெண் ணீற்றர்வெண் காடு மேவிய
அந்தமும் முதலுடை அடிக ளல்லரே. க

படையுடை மழுவினர் பாய்புலித் தோலின்
உடைவிரி கோவணம் உகந்த கொள்கையர்
விடையுடைக் கொடியர்வெண் காடு மேவிய
சடையிடைப் புனல்வைத்த சதுர ரல்லரே. உ

பாலொடு நெய்தயிர் பலவு மாடுவர்
தோலொடு நூலிழை துதைந்த மார்பினர்
மேலவர் பரவுவெண் காடு மேவிய
ஆலம தமர்ந்தஎம் அடிக ளல்லரே. ௩

ஞாழலுஞ் செருந்தியும் நறுமலர்ப் புன்னையுந்
தாழைவெண் குருகயல் தயங்கு கானலில்
வேழம துரித்தவெண் காடு மேவிய
யாழின திசையுடை யிறைவ ரல்லரே. ௪

பூதங்கள் பலவுடைப் புனிதர் புண்ணியர்
ஏதங்கள் பலஇடர் தீர்க்கும் எம்மிறை
வேதங்கள் முதல்வர்வெ஻் காடு மேவிய
பாதங்கள் தொழநின்ற பரம ரல்லரே. ரு

மண்ணவர் விண்ணவர் வணங்க வைகலும்
எண்ணிய தேவர்கள் இறைஞ்சும் எம்மிறை
விண்ணமர் பொழில்கொள்வெண் காடு மேவிய
அண்ணலை அடிதொழ அல்ல லில்லையே. ௬

நயந்தவர்க் கருள்பல நல்கி யிந்திரன்
கயந்திரம் வழிபட நின்ற கண்ணுதல்
வியந்தவர் பரவுவெண் காடு மேவிய
பயந்தரு மழுவுடைப் பரம ரல்லரே. ௭

மலையுடன் எடுத்தவல் லரக்கன் நீள்முடி
தலையுடன் நெரித்தருள் செய்த சங்கரர்
விலையுடை நீற்றர்வெண் காடு மேவிய
அலையுடைப் புனல்வைத்த அடிக ளல்லரே. ௮

ஏடவிழ் நறுமலர் அயனும் மாலுமாய்த்
தேடவுந் தெரிந்தவர் தேர கிற்கிலார்

வேடம துடையவெண் காடு மேவிய
ஆடலை யமர்ந்தஎம் அடிக ளல்லரே. ௯

போதியர் பிண்டியர் பொருத்த மில்லிகள்
நீதிகள் சொல்லியும் நினைய கிற்கிலார்
வேதியர் பரவுவெண் காடு மேவிய
ஆதியை யடிதொழ அல்ல லில்லையே. ௧௦

நல்லவர் புகலியுள் ஞானசம் பந்தன்
செல்வன்எஞ் சிவனுறை திருவெண் காட்டின்மேற்
சொல்லிய அருந்தமிழ் பத்தும் வல்லவர்
அல்லலோ டருவினை யறுத லாணையே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருக்கோள்ளிக்காடு - பண் - காந்தாரபஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

நிணம்படு சுடலையின் நீறு பூசிநின்
றிணங்குவர் பேய்களோ டிடுவர் மாநடம்
உணங்கல்வெண் தலைதனில் உண்ப ராயினும்
குணம்பெரி துடையர்நங் கொள்ளிக் காடரே. ௧

ஆற்றநல் அடியிணை யலர்கொண் டேத்துவான்
சாற்றிய அந்தணன் தகுதி கண்டநாள்
மாற்றல னாகிமுன் அடர்த்து வந்தணை
கூற்றினை யுதைத்தனர் கொள்ளிக் காடரே. ௨

அத்தகு வானவர்க் காக மால்விடம்
வைத்தவர் மணிபுரை கண்டத் தின்னுளே
மத்தமும் வன்னியும் மலிந்த சென்னிமேல்
கொத்தலர் கொன்றையர் கொள்ளிக் காடரே. ௩

பாவணம் மேவுசொல் மாலை யிற்பல
நாவணங் கொள்கையில் நவின்ற செய்கையர்
ஆவணங் கொண்டெமை யாள்வ ராயினும்
கோவணக் கொள்கையர் கொள்ளிக் காடரே. ௪

வாரணி வனமுலை மங்கை யாளொடும்
சீரணி திருவுருத் திகழ்ந்த சென்னியர்
நாரணி சிலைதனல் நணுக லார்எயில்
கூரெரி கொளுவினர் கொள்ளிக் காடரே. ரு

பஞ்சுதோய் மெல்லடிப் பாவை யாளொடும்
மஞ்சுதோய் கயிலையுள் மகிழ்வர் நாள்தொறும்
வெஞ்சின மருப்பொடு விரைய வந்தடை
குஞ்சரம் உரித்தனர் கொள்ளிக் காடரே. சு

இறையுறு வரிவளை யிசைகள் பாடிட
அறையுறு கழலடி ஆர்க்க ஆடுவர்
சிறையுறு விரிபுனல் சென்னி யின்மிசைக்
குறையுறு மதியினர் கொள்ளிக் காடரே. எ

எடுத்தனன் கயிலையை யியல் வலியினால்
அடர்த்தனர் திருவிர லால் அலறிடப்
படுத்தன ரென்றவன் பாடல் பாடலும்
கொடுத்தனர் கொற்றவாள் கொள்ளிக் காடரே. அ

தேடினா ரயன்முடி மாலுஞ் சேவடி
நாடினா ரவரென்று நணுக கிற்றிலர்
பாடினார் பரிவொடு பத்தர் சித்தமும்
கூடினார்க் கருள்செய்வர் கொள்ளிக் காடரே. கூ

நாடிநின் றறிவில்நா ணிலிகள் சாக்கியர்
ஓடிமுன் ஓதிய வுரைகள் மெய்யல
பாடுவர் நான்மறை பயின்ற மாதொடும்
கூடுவர் திருவுருக் கொள்ளிக் காடரே. க0

நற்றவர் காழியுள் ஞானசம் பந்தன்
குற்றமில் பெரும்புகழ்க் கொள்ளிக் காடரைச்
சொற்றமிழ் இன்னிசை மாலை சோர்வின்றிக்
கற்றவர் கழலடி காண வல்லரே. கக

திருச்சிற்றம்பலம்

திருவிசயமங்கை - பண் - காந்தாரபஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

மருவமர் குழலுமை பங்கர் வார்சடை
அரவமர் கொள்கையெம் அடிகள் கோயிலாம்
குரவமர் சுரபுன்னை கோங்கு வேங்கைகள்
விரவிய பொழிலணி விசய மங்கையே. க

கீதமுன் இசைதரக் கிளரும் வீணையர்
பூதமுன் இயல்புடைப் புனிதர் பொன்னகர்
கோதனம் வழிபடக் குலவு நான்மறை
வேதியர் தொழுதெழு விசய மங்கையே. உ

அக்கர வரையினர் அரிவை பாகமாத்
தொக்கநல் விடையுடைச் சோதி தொன்னகர்
தக்கநல் வானவர் தலைவர் நாள்தொறும்
மிக்கவர் தொழுதெழு விசய மங்கையே. ௩

தொடைமலி யிதழியுந் துன்எ ருக்கொடு
புடைமலி சடைமுடி யடிகள் பொன்னகர்
படைமலி மழுவினர் பைங்கண் மூரிவெள்
விடைமலி கொடியண்ணல் விசய மங்கையே. ௪

தோடமர் காதினன் துதைந்த நீற்றினன்
ஏடமர் கோதையோ டினித மர்விடம்
காடமர் மாகரி கதறப் போர்த்ததோர்
வேடம தடையண்ணல் விசய மங்கையே. ரு

மைப்புரை கண்ணுமை பங்கன் வண்டழல்
ஒப்புரை மேனியெம் முடைய வன்னகர்
அப்பொடு மலர்கொடங் கிறைஞ்சி வானவர்
மெய்ப்பட அருள்புரி விசய மங்கையே. சு

இரும்பொனின் மலைவில்லின் எரிச ரத்தினால்
வரும்புரங் களைப்பொடி செய்த மைந்தனூர்
சுரும்பமர் கொன்றையுந் தூய மத்தமும்
விரும்பிய சடையண்ணல் விசய மங்கையே. எ

உளங்கைய இருபதோ டொருபதுங் கொடாங்
களந்தரும் வரையெடுத் திடும் அரக்கனைத்
தளர்ந்துடல் நெரிதர அடர்த்த தன்மையன்
விளங்கிழை யொடும்புகும் விசய மங்கையே. அ

மண்ணினை யுண்டவன் மலரின் மேலுறை
அண்ணல்கள் தமக்களப் பரிய அத்தனூர்
தண்ணறுஞ் சாந்தமும் பூவும் நீர்கொடு
விண்ணவர் தொழுதெழு விசய மங்கையே. கூ

கஞ்சியுங் கவளமுண் கவணர் கட்டுரை
நஞ்சினுங் கொடியன நமர்கள் தேர்கிலார்
செஞ்சடை முடியுடைத் தேவன் நன்னகர்
விஞ்சையர் தொழுதெழு விசய மங்கையே. க0

விண்ணவர் தொழுதெழு விசய மங்கையை
நண்ணிய புகலியுள் ஞான சம்பந்தன்
பண்ணிய செந்தமிழ் பத்தும் வல்லவர்
புண்ணியர் சிவகதி புகுதல் திண்ணமே. கக

திருச்சிற்றம்பலம்

திருவைகல்மாடக்கோயில் - பண் - காந்தாரபஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

துளமதி யுடைமறி தோன்று கையினர்
இளமதி யணிசடை யெந்தை யாரிடம்
உளமதி யுடையவர் வைக லோங்கிய
வளமதி தடவிய மாடக் கோயிலே. க

மெய்யகம் மிளிரும்வெண் ணூலர் வேதியர்
மையகண் மலைமக ளோடும் வைகிடம்
வையகம் மகிழ்தர வைகல் மேற்றிசைச்
செய்யகண் வளவன்முன் செய்த கோயிலே. உ

கணியணி மலர்கொடு காலை மாலையும்
பணியணி பவர்க்கருள் செய்த பான்மையர்

தணியணி புமையொடு தாமுந் தங்கிடம்
மணியணி கிளர்வைகல் மாடக் கோயிலே. ௩

கொம்பியல் கோதைமுன் அஞ்சக் குஞ்சரத்
தும்பிய துரிசெய்த துங்கர் தங்கிடம்
வம்பியல் சோலைசூழ் வைகல் மேற்றிசைச்
செம்பியன் கோச்செங்க ணான்செய் கோயிலே. ௪

விடம்அடை மிடற்றினர் வேத நாவினர்
மடமொழி மலைமக ளோடும் வைகிடம்
மடவன்னம் நடைபயில் வைகல் மாநகர்க்
குடதிசை நிலவிய மாடக் கோயிலே. ௫

நிறைபுனல் பிறையொடு நிலவு நீள்சடை
இறையவ ருறைவிடம் இலங்கு மூவெரி
மறையொடு வளர்வுசெய் வாணர் வைகலில்
திறையுடை நிறைசெல்வன் செய்த கோயிலே. ௬

எரிசரம் வரிசிலை வளைய ஏவிமுன்
திரிபுரம் எரிசெய்த செல்வர் சேர்விடம்
வரிவளை யவர்பயில் வைகல் மேற்றிசை
வருமுகி லணவிய மாடக் கோயிலே. ௭

மலையன்ன இருபது தோளி னான்வலி
தொலைவுசெய் தருள்செய்த சோதி யாரிடம்
மலர்மலி பொழிலணி வைகல் வாழ்வர்கள்
வலம்வரு மலையன மாடக் கோயிலே. ௮

மாலவன் மலரவன் நேடி மால்கொள
மாலெரி யாகிய வரதர் வைகிடம்
மாலைகொ டணிமறை வாணர் வைகலில்
மாலன மணியணி மாடக் கோயிலே. ௯

கடுவுடை வாயினர் கஞ்சி வாயினர்
பிடகுரை பேணிலார் பேணு கோயிலாம்
மடமுடை யவர்பயில் வைகல் மாநகர்
வடமலை யனையநன் மாடக் கோயிலே. ௧0

மைந்தன திடம்வைகல் மாடக் கோயிலைச்
சந்தமர் பொழிலணி சண்பை ஞானசம்
பந்தன தமிழ்கெழு பாடல் பத்திவை
சிந்தைசெய் பவர்சிவ லோகஞ் சேர்வரே. கக

திருச்சிற்றம்பலம்

திருஅம்பர்ப்பெருந்திருக்கோயில் - பண் - காந்தாரபஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

எரிதா அனல்கையில் ஏந்தி எல்லியில்
நரிதிரி கானிடை நட்டம் ஆடுவர்
அரிசிலம் பொருபுனல் அம்பர் மாநகர்க்
குரிசில்செங் கண்ணவன் கோயில் சேர்வரே. க

மையகண் மலைமகள் பாக மாயிருள்
கையதோர் கனலெரி கனல ஆடுவர்
ஐயநன் பொருபுனல் அம்பர்ச் செம்பியர்
செய்யகண் ணிறைசெய்த கோயில் சேர்வரே. உ

மறைபுனை பாடலர் சுடர்கை மல்கவோர்
பிறைபுனை சடைமுடி பெயர ஆடுவர்
அறைபுனல் நிறைவயல் அம்பர் மாநகர்
இறைபுனை யெழில்வளர் இடம தென்பரே. ௩

இரவுமல் கிளமதி சூடி யீடுயர்
பரவமல் கருமறை பாடி யாடுவர்
அரவமோ டியர்செம்மல் அம்பர்க் கொம்பலர்
மரவமல் கெழில்நகர் மருவி வாழ்வரே. ௪

சங்கணி குழையினர் சாமம் பாடுவர்
வெங்கனல் கனல்தர வீசி யாடுவர்
அங்கணி விழவமர் அம்பர் மாநகர்ச்
செங்கண்நல் இறைசெய்த கோயில் சேர்வரே. ௫

கழல்வளர் காலினர் சுடர்கை மல்கவோர்
சுழல்வளர் குளிர்புனல் சூடி யாடுவர்

அழல்வளர் மறையவர் அம்பர்ப் பைம்பொழில்
நிழல்வளர் நெடுநகர் இடம தென்பரே. ௬

இகலுறு சுடரெரி யிலங்க வீசியே
பகலிடம் பலிகொளப் பாடி யாடுவர்
அகலிடம் மலிபுகழ் அம்பர் வம்பவிழ்
புகலிடம் நெடுநகர் புகுவர் போலுமே. ௭

எரியன மணிமுடி யிலங்கைக் கோன்றன
கரியன தடக்கைகள் அடர்த்த காலினர்
அரியவர் வளநகர் அம்பர் இன்பொடு
புரியவர் பிரிவிலாப் பூதஞ் சூழவே. ௮

வெறிகிளர் மலர்மிசை யவனும் வெங்தொழிற்
பொறிகிளர் அரவணைப் புல்கு செல்வனும்
அறிகில அரியவர் அம்பர்ச் செம்பியர்
செறிகழல் இறைசெய்த கோயில் சேர்வரே. ௯

வழிதலை பறிதலை யவர்கள் கட்டிய
மொழிதலைப் பயனென மொழியல் வம்மினோ
அழிதலை பொருபுனல் அம்பர் மாநகர்
உழிதலை யொழிந்தனர் உமையுந் தாமுமே. ௧௦

அழகரை யடிகளை யம்பர் மேவிய
நிழல்திகழ் சடைமுடி நீல கண்டரை
உமிழ்திரை யுலகினில் ஓதுவீர் கொள்மின்
தமிழ்கெழு விரகினன் தமிழ்செய் மாலையே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருப்பூவணம் - பண் - காந்தாரபஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

மாதமர் மேனிய னாகி வண்டொடு
போதமர் பொழிலணி பூவ ணத்துறை
வேதனை விரவலர் அரணம் மூன்றெய்த
நாதனை யடிதொழ நன்மை யாகுமே. ௧

வானணி மதிபுல்கு சென்னி வண்டொடு
தேனணி பொழில்திருப் பூவ ணத்துறை
ஆனநல் அருமறை யங்கம் ஓதிய
ஞானனை யடிதொழ நன்மை யாகுமே. உ

வெந்துய ருறுபிணி வினைகள் தீர்வதோர்
புந்தியர் தொழுதெழு பூவ ணத்துறை
அந்திவெண் பிறையினோ டாறு சூடிய
நந்தியை யடிதொழ நன்மை யாகுமே. ௩

வாசநன் மலர்மலி மார்பில் வெண்பொடிப்
பூசனைப் பொழில்திகழ் பூவ ணத்துறை
ஈசனை மலர்புனைந் தேத்து வார்வினை
நாசனை யடிதொழ நன்மை யாகுமே. ௪

குருந்தொடு மாதவி கோங்கு மல்லிகை
பொருந்திய பொழில்திருப் பூவ ணத்துறை
அருந்திறல் அவுணர்தம் அரணம் மூன்றெய்த
பெருந்தகை யடிதொழப் பீடை யில்லையே. ௫

வெறிகமழ் புன்னைபொன் ஞாழல் விம்மிய
பொறியர வணிபொழிற் பூவ ணத்துறை
கிறிபடு முடையினன் கேடில் கொள்கையன்
நறுமலர் அடிதொழ நன்மை யாகுமே. ௬

பறைமல்கு முழவொடு பாடல் ஆடலன்
பொறைமல்கு பொழிலணி பூவ ணத்துறை
மறைமல்கு பாடலன் மாதொர் கூறினன்
அறைமல்கு கழல்தொழ அல்லல் இல்லையே. ௭

வரைதனை யெடுத்தவல் அரக்கன் நீள்முடி
விரல்தனில் அடர்த்தவன் வெள்ளை நீற்றினன்
பொருபுனல் புடையணி பூவ ணந்தனைப்
பரவிய அடியவர்க் கில்லை பாவமே. ௮

நீர்மல்கு மலருறை வானும் மாலுமாய்ச்
சீர்மல்கு திருந்தடி சேர கிற்கிலர்

போர்மல்கு மழுவினன் மேய பூவணம்
ஏர்மல்கு மலர்புனைந் தேத்தல் இன்பமே. க

மண்டைகொண் டுழிதரு மதியில் தேரும்
குண்டருங் குணமல பேசுங் கோலத்தர்
வண்டமர் வளர்பொழில் மல்கு பூவணம்
கண்டவர் அடிதொழு தேத்தல் கன்மமே. க0

புண்ணியர் தொழுதெழு பூவ ணத்துறை
அண்ணலை யடிதொழு தந்தண் காழியுள்
நண்ணிய அருமறை ஞானசம் பந்தன்
பண்ணிய தமிழ்சொலப் பறையும் பாவமே. கக

திருச்சிற்றம்பலம்

திருக்கருக்குடி - பண் - காந்தாரபஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

நனவிலுங் கனவிலும் நாளுந் தன்னொளி
நினைவிலும் எனக்குவந் தெய்தும் நின்மலன்
கனைகடல் வையகந் தொழுக ருக்குடி
அனலெரி யாடுமெம் அடிகள் காண்மினே. க

வேதியன் விடையுடை விமலன் ஒன்னலர்
மூதெயில் எரியெழ முனிந்த முக்கணன்
காதியல் குழையினன் கருக்கு டியமர்
ஆதியை அடிதொழ அல்லல் இல்லையே. உ

மஞ்சுறு பொழில்வளம் மலிக ருக்குடி
நஞ்சுறு திருமிட றுடைய நாதனார்
அஞ்சுரும் பார்குழல் அரிவை யஞ்சவே
வெஞ்சுரந் தனில்விளை யாட லென்கொலோ. ௩

ஊனுடைப் பிறவியை அறுக்க வுன்னுவீர்
கானிடை யாடலான் பயில்க ருக்குடிக்
கோனுயர் கோயிலை வணங்கி வைகலும்
வானவர் தொழுகழல் வாழ்த்தி வாழ்மினே. ௪

சூடுவர் சடையிடைக் கங்கை நங்கையைக்
கூடுவ ருலகிடை யையங் கொண்டொலி
பாடுவர் இசைபறை கொட்ட நட்டிருள்
ஆடுவர் கருக்குடி யண்ணல் வண்ணமே. ரு

இன்புடை யாரிசை வீணை பூணரா
என்புடை யாரெழில் மேனி மேலெரி
முன்புடை யார்முத லேத்தும் அன்பருக்
கன்புடை யார்கருக் குடியெம் அண்ணலே. சு

காலமும் ஞாயிறுந் தீயு மாயவர்
கோலமும் முடியர வணிந்த கொள்கையர்
சீலமும் உடையவர் திருக்க ருக்குடிச்
சாலவும் இனிதவ ருடைய தன்மையே. எ

எறிகடல் புடைதழு இலங்கை மன்னனை
முறிபட வரையிடை யடர்த்த மூர்த்தியார்
கறைபடு பொழில்மதி தவழ்க ருக்குடி
அறிவொடு தொழுமவர் ஆள்வர் நன்மையே. அ

பூமனுந் திசைமுகன் தானும் பொற்பமர்
வாமனன் அறிகிலா வண்ண மோங்கெரி
ஆமென வுயர்ந்தவன் அணிக ருக்குடி
நாமன னினில்வர நினைதல் நன்மையே. கூ

சாக்கியர் சமண்படு கையர் பொய்ம்மொழி
ஆக்கிய வுரைகொளேல் அருந்தி ருந்நமக்
காக்கிய அரனுறை யணிக ருக்குடிப்
பூக்கமழ் கோயிலே புடைபட் டுய்ம்மினே. க0

கானலில் விரைமலர் விம்மு காழியான்
வானவன் கருக்குடி மைந்தன் தன்னொளி
ஆனமெய்ஞ் ஞானசம் பந்தன் சொல்லிய
ஊனமில் மொழிவலார்க் குயரும் இன்பமே. கக

திருச்சிற்றம்பலம்

பொது - பண் - காந்தாரபஞ்சமம்

பஞ்சாக்கரத் திருப்பதிகம்

திருச்சிற்றம்பலம்

துஞ்சலுந் துஞ்சலி லாத போழ்தினும்
நெஞ்சகம் நைந்து நினைமின் நாள்தொறும்
வஞ்சகம் அற்றடி வாழ்த்த வந்தகூற்
றஞ்சவு தைத்தன அஞ்செ ழுத்துமே. க

மந்திரம் நான்மறை யாகி வானவர்
சிந்தையுள் நின்றவர் தம்மை யாள்வன
செந்தழல் ஓம்பிய செம்மை வேதியர்க்
கந்தியுள் மந்திரம் அஞ்செ ழுத்துமே. உ

ஊனிலு யிர்ப்பை ஒடுக்கி ஒண்சுடர்
ஞானவி ளக்கினை யேற்றி நன்புலத்
தேனைவ ழிதிறந் தேத்து வார்க்கிடர்
ஆனகெ டுப்பன அஞ்செ ழுத்துமே. ௩

நல்லவர் தீயரெ னாது நச்சினர்
செல்லல்கெ டச்சிவ முத்தி காட்டுவ
கொல்லநமன் தமர் கொண்டு போமிடத்
தல்லல்கெ டுப்பன அஞ்செ ழுத்துமே. ௪

கொங்கலர் வன்மதன் வாளி யைந்தகத்
தங்குள பூதமும் அஞ்ச ஐம்பொழில்
தங்கர வின்படம் அஞ்சுந் தம்முடை
அங்கையில் ஐவிரல் அஞ்செ ழுத்துமே. ௫

தும்மல் இருமல் தொடர்ந்த போழ்தினும்
வெம்மை நரகம் விளைந்த போழ்தினும்
இம்மை வினையடர்த் தெய்தும் போழ்தினும்
அம்மையி னுந்துணை அஞ்செ ழுத்துமே. ௬

வீடுபி றப்பை யறுத்து மெச்சினர்
பீடைகெ டுப்பன பின்னை நாள்தொறும்
மாடுகொ டுப்பன மன்னும் மாநடம்
ஆடியு கப்பன அஞ்செ ழுத்துமே. எ

வண்டம ரோதி மடந்தை பேணின
பண்டையி ராவணன் பாடி யுய்ந்தன
தொண்டர்கள் கொண்டு துதித்த பின்னவர்க்
கண்டம் அளிப்பன அஞ்செ ழுத்துமே. அ

கார்வணன் நான்முகன் காணு தற்கொணுச்
சீர்வணச் சேவடி செவ்வி நாள்தொறும்
பேர்வணம் பேசிப் பிதற்றும் பித்தர்கட்
கார்வண மாவன அஞ்செ ழுத்துமே. க

புத்தர்ச மண்கழுக் கையர் பொய்கொளாச்
சித்தத் தவர்கள் தெளிந்து தேறின
வித்தக நீறணி வார்வி னைப்பகைக்
கத்திர மாவன அஞ்செ ழுத்துமே. கo

நற்றமிழ் ஞானசம் பந்தன் நான்மறை
கற்றவன் காழியர் மன்னன் உன்னிய
அற்றமில் மாலையீ ரைந்தும் அஞ்செழுத்
துற்றன வல்லவர் உம்ப ராவரே. கக

திருச்சிற்றம்பலம்

திருவிற்கோலம் - பண் - காந்தாரபஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

உருவினுர் உமையொடும் ஒன்றி நின்றதோர்
திருவினுன் வளர்சடைத் திங்கள் கங்கையான்
வெருவிவா னவர்தொழ வெகுண்டு நோக்கிய
செருவினுன் உறைவிடந் திருவிற் கோலமே.

சிற்றிடை யுமையொரு பங்கன் அங்கையில்
உற்றதோர் எரியினன் ஒருச ரத்தினுல்
வெற்றிகொள் அவுணர்கள் புரங்கள் வெந்தறச்
செற்றவன் உறைவிடந் திருவிற் கோலமே. உ

ஐயன்நல் அதிசயன் அயன்விண் ணோர்தொழும்
மையணி கண்டனுர் வண்ணம் வண்ணவான்

பையர வல்குலாள் பாக மாகவும்
செய்யவன் உறைவிடந் திருவிற் கோலமே. ௩

விதைத்தவன் முனிவருக் கறமுன் காலனை
உதைத்தவன் உயிரிழந் துருண்டு வீழ்தரப்
புதைத்தவன் நெடுநகர்ப் புரங்கள் மூன்றையும்
சிதைத்தவன் உறைவிடந் திருவிற் கோலமே. ௪

மூந்தினான் மூவருள் முதல்வ னாயினான்
கொந்தலா மலர்ப்பொழிற் கூகம் மேவினான்
அந்திவான் பிறையினான் அடியர் மேல்வினை
சிந்துவான் உறைவிடந் திருவிற் கோலமே. ௫

தொகுத்தவன் அருமறை யங்கம் ஆகமம்
வகுத்தவன் வளர்பொழிற் கூகம் மேவினான்
மிகுத்தவன் மிகுத்தவர் புரங்கள் வெந்தறச்
செகுத்தவன் உறைவிடந் திருவிற் கோலமே. ௬

விரித்தவன் அருமறை விரிச டைவெள்ளம்
தரித்தவன் தரியலர் புரங்கள் ஆசற
எரித்தவன் இலங்கையர் கோனை டர்படச்
சிரித்தவன் உறைவிடந் திருவிற் கோலமே. ௭, ௮

திரிதரு புரமெரி செய்த சேவகன்
வரியரா வொடுமதி சடையில் வைத்தவன்
அரியொடு பிரமனு தாற்ற லால்உருத்
தெரியலன் உறைவிடந் திருவிற் கோலமே. ௯

சீர்மையில் சமணொடு சீவ ரக்கையர்
நீர்மையில் உரைகள்கொள் ளாத நேசர்க்குப்
பார்மலி பெருஞ்செல்வம் பரிந்து நல்கிடும்
சீர்மையி னானிடந் திருவிற் கோலமே. ௧௦

கோடல்வெண் பிறையனைக் கூகம் மேவிய
சேடனை செழுமதில் திருவிற் கோலத்தை
நாடவல் லதமிழ் ஞான சம்பந்தன
பாடல்வல் லார்களுக் கில்லை பாவமே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருக்கழுமலம் - பண் - கோல்லி

திருச்சிற்றம்பலம்

மண்ணில்நல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில்நல் லகதிக்கு யாதுமோர் குறைவிலைக்
கண்ணினல் லஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணில்நல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே. க

போதையார் பொற்கிண்ணத் தடிசில்பொல் லாதெனத்
தாதையார் முனிவுறத் தானெனை யாண்டவன்
காதையார் குழையினன் கழுமல வளநகர்ப்
பேதையா ளவளொடும் பெருந்தகை யிருந்ததே. உ

தொண்டணை செய்தொழில் துயரறுத் துய்யலாம்
வண்டணை கொன்றையான் மதுமலர்ச் சடைமுடிக்
கண்துணை நெற்றியான் கழுமல வளநகர்ப்
பெண்துணை யாகவோர் பெருந்தகை யிருந்ததே. ௩

அயர்வுளோம் என்றுநீ அசைவொழி நெஞ்சமே
நியர்வளை முன்கையாள் நேரிழை யவளொடுங்
கயல்வயல் குதிகொளுங் கழுமல வளநகர்ப்
பெயர்பல துதிசெயப் பெருந்தகை யிருந்ததே. ௪

அடைவிலோம் என்றுநீ அயர்வொழி நெஞ்சமே
விடையமர் கொடியினன் விண்ணவர் தொழுதெழுங்
கடையுயர் மாடமார் கழுமல வளநகர்ப்
பெடைநடை யவளொடும் பெருந்தகை யிருந்ததே. ரு

மற்றொரு பற்றிலை நெஞ்சமே மறைபல
கற்றநல் வேதியர் கழுமல வளநகர்ச்
சிற்றிடைப் பேரல்குல் திருந்திழை யவளொடும்
பெற்றெனை யாளுடைப் பெருந்தகை யிருந்ததே. ௬

குறைவளை வதுமொழி குறைவொழி நெஞ்சமே
நிறைவளை முன்கையாள் நேரிழை யவளொடுங்
கறைவளர் பொழிலணி கழுமல வளநகர்ப்
பிறைவளர் சடைமுடிப் பெருந்தகை யிருந்ததே. எ

அரக்கனா் அருவரை யெடுத்தவன் அலறிட
நெருக்கினா் விரலினல் நீடியாழ் பாடவே
கருக்குவாள் அருள்செய்தான் கழுமல வளநகர்ப்
பெருக்குநீ ரவளொடும் பெருந்தகை யிருந்ததே. அ

நெடியவன் பிரமனும் நினைப்பரி தாயவர்
அடியொடு முடியறி யாஅழல் உருவினன்
கடிகமழ் பொழிலணி கழுமல வளநகர்ப்
பிடிநடை யவளொடும் பெருந்தகை யிருந்ததே. கூ

தாருறு தட்டுடைச் சமணர்சாக் கியர்கள்தம்
ஆருறு சொற்களைந் தடியிணை யடைந்துய்ம்மின்
காருறு பொழில்வளர் கழுமல வளநகர்ப்
பேரறத் தாளொடும் பெருந்தகை யிருந்ததே. கO

கருந்தடந் தேன்மல்கு கழுமல வளநகர்ப்
பெருந்தடங் கொங்கையோ டிருந்தஎம் பிரான்றனை
அருந்தமிழ் ஞானசம் பந்தன செந்தமிழ்
விரும்புவா ரவர்கள்போய் விண்ணுல காள்வரே. கக

திருச்சிற்றம்பலம்

திருந்துதேவன்குடி - பண் - கொல்லி

திருச்சிற்றம்பலம்

மருந்துவேண் டில்இவை மந்திரங் கள்இவை
புரிந்துகேட் கப்படும் புண்ணியங் கள்இவை
திருந்துதே வன்குடித் தேவர்தே வெய்திய
அருந்தவத் தோர்தொழும் அடிகள்வே டங்களே. க

வீதிபோக் காவன வினையைவீட் டுவ்வன
ஓதியோர்க் கப்படாப் பொருளையோர் விப்பன
தீதில்தே வன்குடித் தேவர்தே வெய்திய
ஆதியந் தம்மிலா அடிகள்வே டங்களே. உ

மானமாக் குவ்வன மாசுநீக் குவ்வன
வானையுள் கச்செலும் வழிகள்காட் டுவ்வன

தேனும்வண் டும்இசை பாடுந்தே வன்குடி
ஆன்அஞ்சா டும்முடி யடிகள்வே டங்களே. ௫

செவிகளார் விப்பன சிந்தையுட் சேர்வன
கவிகள்பா டுவ்வன கண்குளிர் விப்பன
புவிகள்பொங் கப்புனல் பாயுந்தே வன்குடி
அவிகளுய்க் கப்படும் அடிகள்வே டங்களே. ௪

விண்ணுலா வுந்நெறி வீடுகாட் டுந்நெறி
மண்ணுலா வுந்நெறி மயக்கந்தீர்க் குந்நெறி
தெண்ணிலா வெண்மதி தீண்டுதே வன்குடி
அண்ணலான் ஏறுடை யடிகள்வே டங்களே. ௫

பங்கமென் னப்படர் பழிகளென் னப்படா
புங்கமென் னப்படர் புகழ்களென் னப்படும்
திங்கள்தோ யும்பொழில் தீண்டுதே வன்குடி
அங்கமா றுஞ்சொன்ன அடிகள்வே டங்களே. ௬

கரைதலொன் றும்மிலை கருதவல் லார்தமக்
குரையிலூ னம்மிலை உலகினின் மன்னுவர்
திரைகள்பொங் கப்புனல் பாயுந்தே வன்குடி
அரையில்வெண் கோவணத் தடிகள்வே டங்களே. ௭

உலகமுட் குந்திறல் லுடையாக் கன்வலி
விலகுபூ தக்கணம் வெருட்டும்வே டத்தின
திலகமா ரும்பொழில் சூழ்ந்ததே வன்குடி
அலர்தயங் கும்முடி யடிகள்வே டங்களே. ௮

துளக்கமில் லாதன தூயதோற் றத்தன
விளக்கமாக் குவ்வன வெறிவண்டா ரும்பொழில்
திளைக்குந்தே வன்குடித் திசைமுக னேடுமால்
அளக்கவொண் ணுவண்ணத் தடிகள்வே டங்களே. ௯

செருமரு தண்துவர்த் தேர்அமண் ஆதர்கள்
உருமரு வப்படாத் தொழும்பர்தம் உரைகொளேல்
திருமரு வும்பொய்கை'சூழ்ந்ததே வன்குடி
அருமருந் தாவன அடிகள்வே டங்களே. ௧0

சேடர்தே வன்குடித் தேவர்தே வன்றனை
மாடமோங் கும்பொழில் மல்குதண் காழியான்
நாடவல் லதமிழ் ஞானசம் பந்தன
பாடல்பத் தும்வல்லார்க் கில்லையாம் பாவமே. கக

திருச்சிற்றம்பலம்

திருக்கானப்பேர் - பண் - கொல்லி

திருச்சிற்றம்பலம்

பிடியெலாம் பின்செலப் பெருங்கைமா மலர்தழீஇ
விடியலே தடமூழ்கி விதியினால் வழிபடும்
கடியுலாம் பூம்பொழிற் கானப்பேர் அண்ணல்நின்
அடியலால் அடைசரண் உடையரோ அடியரே. க

நுண்ணிடைப் பேரல்குல் நூபுரம் மெல்லடிப்
பெண்ணின்நல் லாளையோர் பாகமாப் பேணினான்
கண்ணுடை நெற்றியான் கருதிய கானப்பேர்
விண்ணிடை வேட்கையார் விரும்புதல் கருமமே. உ

வாவிவாய்த் தங்கிய நுண்சிறை வண்டினம்
காவிவாய்ப் பண்செயுங் கானப்பேர் அண்ணலை
நாவிவாய்ச் சாந்துளும் பூவுளும் ஞானநீர்
தூவிவாய்ப் பெய்துநின் றூட்டுவார் தொண்டரே. ந

நிறையுடை நெஞ்சுளும் நீருளும் பூவுளும்
பறையுடை முழவுளும் பலியுளும் பாட்டுளும்
கறையுடை மிடற்றண்ணல் கருதிய கானப்பேர்
குறையுடை யவர்க்கலாற் களைகிலார் குற்றமே. ச

ஏனப்பூண் மார்பின்மேல் என்புபூண் டீறிலா
ஞானப்பே ராயிரம் பேரினான் நண்ணிய
கானப்பே ரூர்தொழுங் காதலார் தீதிலர்
வானப்பே ரூர்புகும் வண்ணமும் வல்லரே. ரு

பள்ளமே படர்சடைப் பாற்படப் பாய்ந்தநீர்
வெள்ளமே தாங்கினான் வெண்மதி சூடினான்

கள்ளமே செய்கிலார் கருதிய கானப்பேர்
உள்ளமே கோயிலா உள்குமென் உள்ளமே. ௬

மானமா மடப்பிடி வன்கையால் அலகிடக்
கானமார் கடகரி வழிபடுங் கானப்பேர்
ஊனமாம் உடம்பினில் உறுபிணி கெடஎண்ணில்
ஞானமா மலர்கொடு நணுகுதல் நன்மையே. ௭

வாளினன் வேலினன் மால்வரை யெடுத்ததிண்
தோளினன் நெடுமுடி தொலையவே யூன்றிய
தாளினன் கானப்பேர் தலையினால் வணங்குவார்
நாளும்நாள் உயர்வதோர் நன்மையைப் பெறுவரே. ௮

சிலையினால் முப்புரந் தீயெழச் செற்றவன்
நிலையிலா இருவரை நிலைமைகண் டோங்கினன்
கலையினார் புறவில்தேன் கமழ்தரு கானப்பேர்
தலையினால் வணங்குவார் தவமுடை யார்களே. ௯

உறித்தலைச் சுரையொடு குண்டிகை பிடித்துச்சி
பறித்தலும் போர்த்தலும் பயனிலை பாவிகாள்
மறித்தலை மடப்பிடி வளரிளங் கொழுங்கொடி
கறித்தெழு கானப்பேர் கைதொழல் கருமமே. ௧௦

காட்டகத் தாடலான் கருதிய கானப்பேர்
கோட்டகத் திளவரால் குதிகொளுங் காழியான்
நாட்டகத் தோங்குசீர் ஞானசம் பந்தன
பாட்டகத் திவைவலார்க் கில்லையாம் பாவமே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருச்சக்கரப்பள்ளி - பண் - கொல்லி

திருச்சிற்றம்பலம்

படையினார் வெண்மழுப் பாய்புலித் தோலரை
உடையினார் உமையொரு கூறனார் ஊர்வதோர்
விடையினார் வெண்பொடிப் பூசியார் விரிபுனல்
சடையினார் உறைவிடஞ் சக்கரப் பள்ளியே. ௧

பாடினார் அருமறை பனிமதி சடைமிசைச்
சூடினார் படுதலை துன்னெருக் கதனொடும்
நாடினார் இடுபலி நண்ணியோர் காலனைச்
சாடினார் வளநகர் சக்கரப் பள்ளியே. உ

மின்னினார் சடைமிசை விரிகதிர் மதியமும்
பொன்னினார் கொன்றையும் பொறிகிளர் அரவமும்
துன்னினார் உலகெலாந் தொழுதெழ நான்மறை
தன்னினார் வளநகர் சக்கரப் பள்ளியே. ௩

நலம்மலி கொள்கையார் நான்மறை பாடலார்
வலம்மலி மழுவினார் மகிழுமூர் வண்டறை
மலர்மலி சலமொடு வந்திழி காவிரி
சலசல மணிகொழி சக்கரப் பள்ளியே. ௪

வெந்தவெண் பொடியணி வேதியர் விரிபுனல்
அந்தமில் அணிமலை மங்கையோ டமருமூர்
கந்தமார் மலரொடு காரகில் பன்மணி
சந்தினோ டணைபுனற் சக்கரப் பள்ளியே. ரு

பாங்கினால் முப்புரம் பாழ்பட வெஞ்சிலை
வாங்கினார் வானவர் தானவர் வணங்கிட
ஓங்கினார் உமையொரு கூறொடும் ஒலிபுனல்
தாங்கினார் உறைவிடஞ் சக்கரப் பள்ளியே. சு

பாரினார் தொழுதெழு பரவுபல் லாயிரம்
பேரினார் பெண்ணொரு கூறனார் பேரொலி
நீரினார் சடைமுடி நிரைமலர்க் கொன்றையம்
தாரினார் வளநகர் சக்கரப் பள்ளியே. எ

முதிரிலா வெண்பிறை சூடினார் முன்னநாள்
எதிரிலா முப்புரம் எரிசெய்தார் வரைதனால்
அதிரிலா வல்லரக் கன்வலி வாட்டிய
சதிரினார் வளநகர் சக்கரப் பள்ளியே. அ

துணிபடு கோவணஞ் சுண்ணவெண் பொடியினர்
பணிபடு மார்பினர் பனிமதிச் சடையினர்

மணிவண னவனொடு மலர்மிசை யானையும்
தணிவினர் வளநகர் சக்கரப் பள்ளியே. க

உடம்புபோர் சீவரர் ஊண்தொழிற் சமணர்கள்
விடம்படும் உரையவை மெய்யல விரிபுனல்
வடம்படு மலர்கொடு வணங்குமின் வைகலும்
தடம்புனல் சூழ்தரு சக்கரப் பள்ளியே. க௦

தண்வயல் புடையணி சக்கரப் பள்ளியெம்
கண்ணுதல் அவனடிக் கழுமல வளநகர்
நண்ணிய செந்தமிழ் ஞானசம் பந்தன்சொல்
பண்ணிய இவைசொலப் பறையுமெய்ப் பாவமே. கக

திருச்சிற்றம்பலம்

திருமழபாடி - பண் - கோல்லி

திருச்சிற்றம்பலம்

காலையார் வண்டினங் கிண்டிய காருறும்
சோலையார் பைங்கிளி சொற்பொருள் பயிலவே
வேலையார் விடமணி வேதியன் விரும்பிடம்
மாலையார் மதிதவழ் மாமழ பாடியே. க

கறையணி மிடறுடைக் கண்ணுதல் நண்ணிய
பிறையணி செஞ்சடைப் பிஞ்ஞகன் பேணுமூர்
துறையணி குருகினந் தூமலர் துதையவே
மறையணி நாவினன் மாமழ பாடியே. உ

அந்தணர் வேள்வியும் அருமறைத் துழனியும்
செந்தமிழ்க் கீதமுஞ் சீரினல் வளர்தரப்
பந்தணை மெல்விர லாளொடும் பயில்விடம்
மந்தம்வந் துலவுசீர் மாமழ பாடியே. ௩

அத்தியின் உரிதனை யழகுறப் போர்த்தவன்
முத்தியாய் மூவரின் முதல்வனாய் நின்றவன்
பத்தியாற் பாடிடப் பரிந்தவர்க் கருள்செயும்
அத்தனார் உறைவிடம் அணிமழ பாடியே. ௪

கங்கையார் சடையிடைக் கதிர்மதி யணிந்தவன்
வெங்கண்வா ளரவுடை வேதியன் தீதிலாச்
செங்கயற் கண்ணுமை யாளொடுஞ் சேர்விடம்
மங்கைமார் நடம்பயில் மாமழ பாடியே. ரு

பாலனா ராருயிர் பாங்கினல் உணவரும்
காலனார் உயிர்செகக் காலினாற் சாடினான்
சேலினார் கண்ணினாள் தன்னொடுஞ் சேர்விடம்
மாலினார் வழிபடு மாமழ பாடியே. ௬

விண்ணிலார் இமையவர் மெய்ம்மகிழ்ந் தேத்தவே
எண்ணிலார் முப்புரம் எரியுண நகைசெய்தார்
கண்ணினாற் காமனைக் கனலெழக் காய்ந்தஎம்
அண்ணலார் உறைவிடம் அணிமழ பாடியே. ௭

காத்திரற் கயிலையை யெடுத்தகார் அரக்கன
சிரத்தினை யூன்றலுஞ் சிவனடி சரணெனா
இரத்தினாற் கைந்நரம் பெடுத்திசை பாடலும்
வரத்ினான் மருவிடம் மாமழ பாடியே. அ

ஏடுலா மலர்மிசை அயனெழில் மாலுமாய்
நாடினார்க் கரியசீர் நாதனார் உறைவிடம்
பாடெலாம் பெண்ணையின் பழம்விழப் பைம்பொழில்
மாடெலாம் மல்குசீர் மாமழ பாடியே. ௯

உறிபிடித் தூத்தைவாய்ச் சமணொடு சாக்கியர்
நெறிபிடித் தறிவிலா நீசர்சொற் கொள்ளன்மின்
பொறிபிடித் தரவினம் பூணெனக் கொண்டுமான்
மறிபிடித் தானிடம் மாமழ பாடியே. ௧௦

ஞாலத்தார் ஆதிரை நாளினான் நாள்தொறும்
சீலத்தான் மேவிய திருமழ பாடியை
ஞாலத்தான் மிக்கசீர் ஞானசம் பந்தன்சொல்
கோலத்தாற் பாடுவார் குற்றமற் றார்களே. ௧௧

திருச்சிற்றம்பலம்

மேலைத்திருக்காட்டுப்பள்ளி - பண் - கொல்லி

திருச்சிற்றம்பலம்

வாருமன் னும்முலை மங்கையோர் பங்கினன்
ஊருமன் னும்பலி யுண்பதும் வெண்தலை
காருமன் னும்பொழில் சூழ்ந்தகாட் டுப்பள்ளி
நீருமன் னுஞ்சடை நிமலர்தந் நீர்மையே. க

நிருத்தனார் நீள்சடை மதியொடு பாம்பணி
கருத்தனார் கடிபொழில் சூழ்ந்தகாட் டுப்பள்ளி
அருத்தனார் அழகமர் மங்கையோர் பாகமாப்
பொருத்தனார் கழலிணை போற்றுதல் பொருளதே. உ

பண்ணினார் அருமறை பாடினார் நெற்றியோர்
கண்ணினார் கடிபொழில் சூழ்ந்தகாட் டுப்பள்ளி
விண்ணினார் விரிபுனல் மேவினார் சடைமுடி
அண்ணலார் எம்மையா ளுடையஎம் அடிகளே. ௩

பணங்கொள்நா கம்மரைக் கார்ப்பது பல்பலி
உணங்கலோ டுண்கலன் உறைவது காட்டிடைக்
கணங்கள்கூ டித்தொழு தேத்துகாட் டுப்பள்ளி
நிணங்கொள்சூ லப்படை நிமலர்தந் நீர்மையே. ச

வரையுலாஞ் சந்தொடு வந்திழி காவிரிக்
கரையுலாம் இடுமணல் சூழ்ந்தகாட் டுப்பள்ளித்
திரையுலாங் கங்கையுந் திங்களுஞ் சூடியங்
கரையுலாங் கோவணத் தடிகள்வே டங்களே. ரு

வேதனார் வெண்மழு ஏந்தினார் அங்கமுன்
ஓதினார் உமையொரு கூறனார் ஒண்குழைக்
காதினார் கடிபொழில் சூழ்ந்தகாட் டுப்பள்ளி
நாதனார் திருவடி நாளுநின் றேத்துமே. சா

மையினார் மிடறனார் மான்மழு வேந்திய
கையினார் கடிபொழில் சூழ்ந்தகாட் டுப்பள்ளித்
தையலோர் பாகமாத் தண்மதி சூடிய
ஐயனார் அடிதொழ அல்லலொன் றில்லையே. எ

சிலைதனால் முப்புரஞ் செற்றவன் சீரினார்
மலைதனால் வல்லரக் கன்வலி வாட்டினான்
கலைதனார் புறவணி மல்குகாட் டுப்பள்ளி
தலைதனால் வணங்கிடத் தவமது ஆகுமே. அ

செங்கண்மால் திகழ்தரு மலருறை திசைமுகன்
தங்கையால் தொழுதெழத் தழலுரு வாயினான்
கங்கையார் சடையினான் கருதுகாட் டுப்பள்ளி
அங்கையால் தொழுமவர்க் கல்லலொன் றில்லையே. கூ

போதியார் பிண்டியா ரென்றஅப் பொய்யர்கள்
வாதினால் உரையவை மெய்யல வைகலும்
காரினார் கடிபொழில் சூழ்ந்தகாட் டுப்பள்ளி
ஏரினால் தொழுதெழ இன்பம்வந் தெய்துமே. க0

பொருபுனல் புடையணி புறவநன் னகர்மன்னன்
அருமறை யவைவல்ல அணிகொள்சம் பந்தன்சொல்
கருமணி மிடற்றினன் கருதுகாட் டுப்பள்ளி
பரவிய தமிழ்சொல்லப் பறையும்மெய்ப் பாவமே. கக

திருச்சிற்றம்பலம்

திருஅரதைப்பெரும்பாழி - பண் - கொல்லி

திருச்சிற்றம்பலம்

பைத்தபாம் போடரைக் கோவணம் பாய்புலி
மொய்த்தபேய் கண்முழக் கம்முது காட்டிடை
நித்தமா கந்நட மாடிவெண் ணீறணி
பித்தர்கோ யில்அர தைப்பெரும் பாழியே. க

கயலசே லகருங் கண்ணியர் நாள்தொறும்
பயலைகொள் ளப்பலி தேர்ந்துழல் பான்மையார்
இயலைவா னோர்நினைந் தோர்களுக் கெண்ணரும்
பெயரர்கோ யில்அர தைப்பெரும் பாழியே. உ

கோடல்சா லவ்வுடை யார்கொலை யானையின்
மூடல்சா லவ்வுடை யார்முளி கானிடை

ஆடல்சா லவ்வுடை யாரழ காகிய
பீடர்கோ யில்அர தைப்பெரும் பாழியே. ௩

மண்ணார்நீ ரார்அழ லார்மலி காலினர்
விண்ணர்வே தம்விரித் தோதுவார் மெய்ப்பொருள்
பண்ணர்பா டலுடை யாரொரு பாகமும்
பெண்ணர்கோ யில்அர தைப்பெரும் பாழியே. ௪

மறைவர்வா யின்மொழி மானொடு வெண்மழுக்
கறைகொள்சூ லம்முடைக் கையர்கா ரார்தரும்
நறைகொள்கொன் றைநயந் தார்தருஞ் சென்னிமேல்
பிறையர்கோ யில்அர தைப்பெரும் பாழியே. ௫

புற்றா வம்புலித் தோலரைக் கோவணம்
தற்றா வில்நட மாடுவர் தாழ்தரு
சுற்றமர் பாரிடந் தொல்கொடி யின்மிசைப்
பெற்றர்கோ யில்அர தைப்பெரும் பாழியே. ௬

துணையிறுத் தஞ்சுரி சங்கமர் வெண்பொடி
இணையிலேற் றையுகந் தேறுவ ரும்மெரி
கணையினல் முப்புரஞ் செற்றவர் கையினில்
பிணையர்கோ யில்அர தைப்பெரும் பாழியே. ௭

சரிவிலா வல்லரக் கன்தடந் தோள்தலை
நெரிவிலா ரவ்வடர்த் தார்நெறி மென்குழல்
அரிவைபா கம்அமர்ந் தாரடி யாரொடும்
பிரிவில்கோ யில்அர தைப்பெரும் பாழியே. ௮

வரியரா என்பணி மார்பினர் நீர்மல்கும்
எரியரா வுஞ்சடை மேற்பிறை யேற்றவர்
கரியமா லோடயன் காண்பரி தாகிய
பெரியர்கோ யில்அர தைப்பெரும் பாழியே. ௯

நாணிலா தசமண் சாக்கியர் நாள்தொறும்
ஏணிலா தம்மொழி யவ்வெழி லாயவர்
சேணுலா மும்மதில் தீயெழச் செற்றவர்
பேணுகோ யில்லர தைப்பெரும் பாழியே. ௧௦

நீரினார் புன்சடை நிமலனுக் கிடமெனப்
பாரினார் பரவுரா தைப்பெரும் பாழியைச்
சீரினார் காழியுள் ஞானசம் பந்தன்செய்
ஏரினார் தமிழ்வல்லார்க் கில்லையாம் பாவமே. கக

திருச்சிற்றம்பலம்

திருமயேந்திரப்பள்ளி - பண் - கொல்லி

திருச்சிற்றம்பலம்

திரைதரு பவளமுஞ் சீர்திகழ் வயிரமுங்
கரைதரும் அகிலொடு கனவளை புகுதரும்
வரைவிலால் எயிலெய்த மயேந்திரப் பள்ளியுள்
அரவரை அழகனை அடியிணை பணிமினே. க

கொண்டல்சேர் கோபுரங் கோலமார் மாளிகை
கண்டலுங் கைதையுங் கமலமார் வாவியும்
வண்டுலாம் பொழிலணி மயேந்திரப் பள்ளியிற்
செண்டுசேர் விடையினான் திருந்தடி பணிமினே. உ

கோங்கிள வேங்கையுங் கொழுமலர்ப் புன்னையுந்
தாங்குதேன் கொன்றையுந் தகுமலர்க் குரவமு
மாங்கரும் பும்வயன் மயேந்திரப் பள்ளியுள்
ஆங்கிருந் தவன்கழ லடியிணை பணிமினே. ங

வங்கமார் சேணுயர் வருகுறி யான்மிகு
சங்கமார் ஒலியகில் தருபுகை கமழ்தரும்
மங்கையோர் பங்கினன் மயேந்திரப் பள்ளியுள்
எங்கள்நா யகன்றன திணையடி பணிமினே. ச

நித்திலத் தொகைபல நிரைதரு மலரெனச்
சித்திரப் புணரிசேர்த் திடத்திகழ்ந் திருந்தவன்
மைத்திகழ் கண்டன்நன் மயேந்திரப் பள்ளியுள்
கைத்தல மழுவனைக் கண்டடி பணிமினே. ரு

சந்திரன் கதிரவன் தகுபுகழ் அயனொடும்
இந்திரன் வழிபட இருந்தஎம் இறையவன்

மந்திர மறைவளர் மயேந்திரப் பள்ளியுள்
அந்தமில் அழகனை அடிபணிந் துய்ம்மினே. ௬

சடைமுடி முனிவர்கள் சமைவொடும் வழிபட
நடம்நவில் புரிவினன் நறவணி மலரொடு
படர்சடை மதியினன் மயேந்திரப் பள்ளியுள்
அடல்விடை யுடையவன் அடிபணிந் துய்ம்மினே. ௭

சிரமொரு பதுமுடைச் செருவலி யரக்கனைக்
கரமிரு பதுமிறக் கனவரை யடர்த்தவன்
மரவமர் பூம்பொழில் மயேந்திரப் பள்ளியுள்
அரவமர் சடையனை அடிபணிந் துய்ம்மினே. ௮

நாகணைத் துயில்பவன் நலமிகு மலரவன்
ஆகணைந் தவர்கழல் அணையவும் பெறுகிலர்
மாகணைந் தலர்பொழில் மயேந்திரப் பள்ளியுள்
யோகணைந் தவன்கழல் உணர்ந்திருந் துய்ம்மினே. ௯

உடைதுறந் தவர்களும் உடைதுவர் உடையரும்
படுபழி யுடையவர் பகர்வன விடுமின்நீர்
மடைவளர் வயலணி மயேந்திரப் பள்ளியுள்
இடமுடை யீசனை யிணையடி பணிமினே. ௧0

வம்புலாம் பொழிலணி மயேந்திரப் பள்ளியுள்
நம்பனுர் கழலடி ஞானசம் பந்தன்சொல்
நம்பர மிதுவென நாவினல் நவில்பவர்
உம்பரார் எதிர்கொள உயர்பதி அணைவரே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருஏடகம் - பண் - கொல்லி

திருச்சிற்றம்பலம்

வன்னியும் மத்தமும் மதிபொதி சடையினன்
பொன்னியல் திருவடி புதுமல ரவைகொடு
மன்னிய மறையவர் வழிபட அடியவர்
இன்னிசை பாடலார் ஏடகத் தொருவனே. ௧

கொடிநெடு மாளிகை கோபுரங் குளிர்மதி
வடிவுற அமைதர மருவிய ஏடகத்
தடிகளை யடிபணிந் தாற்றுமின் அன்பினால்
இடிபடும் வினைகள்போய் இல்லைய தாகுமே. உ

குண்டலந் திகழ்தரு காதுடைக் குழகனை
வண்டலம் பும்மலர்க் கொன்றைவான் மதியணி
செண்டலம் பும்விடைச் சேடனூர் ஏடகம்
கண்டுகை தொழுதலுங் கவலைநோய் கழலுமே. ங

ஏலமார் தருகுழல் ஏழையோ டெழில்பெறும்
கோலமார் தருவிடைக் குழகனார் உறைவிடம்
சாலமா தவிகளுஞ் சந்தனஞ் சண்பகம்
சீலமார் ஏடகஞ் சேர்தலாஞ் செல்வமே. ௪

வரியணி நயனிநன் மலைமகள் மறுகிடக்
கரியினை யுரிசெய்த கறையணி மிடறினன்
பெரியவன் பெண்ணினோ டாணலி யாகிய
எரியவன் உறைவிடம் ஏடகக் கோயிலே. ரு

பொய்கையின் பொழிலுறு புதுமலர்த் தென்றலார்
வைகையின் வடகரை மருவிய ஏடகத்
தையனை யடிபணிந் தாற்றுமின் அடர்தரும்
வெய்யவன் பிணிகெட வீடெளி தாகுமே. சு, எ

தடவரை யெடுத்தவன் தருக்கிறத் தோளடர்
படவிரல் ஊன்றியே பரிந்தவற் கருள்செய்தான்
மடவரல் எருக்கொடு வன்னியும் மத்தமும்
இடமுடைச் சடையினன் ஏடகத் திறைவனே. அ

பொன்னுமா மணிகளும் பொருதிரைச் சந்தகில்
தன்னுளார் வைகையின் கரைதனிற் சமைவுற
அன்னமாம் அயனும்மா லடிமுடி தேடியும்
இன்னவா றெனவொணான் ஏடகத் தொருவனே. கூ

குண்டிகைக் கையினர் குணமிலாத் தேரர்கள்
பண்டியைப் பெருக்கிடும் பளகர்கள் பணிகிலர்

வண்டிரைக் கும்மலர்க் கொன்றையும் வன்னியும்
இண்டைசேர்க் குஞ்சடை ஏடகத் தெந்தையே. க0

கோடுசந் தனமகில் கொண்டிழி வைகைநீர்
ஏடுசென் றணைதரும் ஏடகத் தொருவனை
நாடுதென் புகலியுள் ஞானசம் பந்தன
பாடல்பத் திவைவல்லார்க் கில்லையாம் பாவமே. கக

திருச்சிற்றம்பலம்

திருவுசாத்தானம் - பண் - கொல்லி

திருச்சிற்றம்பலம்

நீரிடைத் துயின்றவன் தம்பிநீள் சாம்புவான்
போருடைச் சுக்கிரீ வன்அநு மான்தொழக்
காருடை நஞ்சுண்டு காத்தருள் செய்தஎம்
சீருடைச் சேடர்வாழ் திருவுசாத் தானமே. க

கொல்லையே றுடையவன் கோவண ஆடையன்
பல்லையார் படுதலைப் பலிகொளும் பரமனார்
முல்லையார் புறவணி முதுபதி நறைகமழ்
தில்லையான் உறைவிடம் திருவுசாத் தானமே. உ

தாமலார் போலவே தக்கனார் வேள்வியை
ஊமனார் தங்கனா வாக்கினான் ஒருநொடிக்
காமனா ருடல்கெடக் காய்ந்தஎங் கண்ணுதல்
சேமமா உறைவிடம் திருவுசாத் தானமே. ங

மறிதரு கரத்தினான் மால்விடை யேறியான்
குறிதரு கோலநற் குணத்தினார் அடிதொழ
நெறிதரு வேதியர் நித்தலும் நியமஞ்செய்
செறிதரு பொழிலணி திருவுசாத் தானமே. ச, ரு, சு

பண்டிரைத் தயனும்மா லும்பல பத்தர்கள்
தொண்டிரைத் தும்மலர் தூவித்தோத் திரஞ்சொலக்
கொண்டிரைக் கொடியொடுங் குருகினின் நல்லினம்
தெண்டிரைக் கழனிசூழ் திருவுசாத் தானமே. எ

மடவரல் பங்கினன் மலைதனை மதியாது
சடசட எடுத்தவன் தலைபத்தும் நெரிதர
அடர்தர வூன்றியங் கேயவற் கருள்செய்தான்
இடமென வுறைவிடந் திருவுசாத் தானமே. அ

ஆணலார் பெண்ணலார் அயனொடு மாலுக்கும்
காணொணா வண்ணத்தான் கருதுவார் மனத்துளான்
பேணுவார் பிணியொடும் பிறப்பறுப் பானிடம்
சேணுலா மாளிகைத் திருவுசாத் தானமே. கூ

கானமார் வாழ்க்கையான் காரமண் தேரர்சொல்
ஊனமாக் கொண்டுநீர் உரைமின்உய் யவெனில்
வானமார் மதிலணி மாளிகை வளர்பொழில்
தேனமா மதியந்தோய் திருவுசாத் தானமே. க௦

வரைதிரிந் திழியுநீர் வளவயற் புகலிமன்
திரைதிரிந் தெறிகடல் திருவுசாத் தானரை
உரைதெரிந் துணருஞ்சம் பந்தனொண் தமிழ்வல்லார்
நரைதிரை யின்றியே நன்னெறி சேர்வரே. கக

திருச்சிற்றம்பலம்

திருமுதுகுன்றம் - பண் - கொல்லி

திருச்சிற்றம்பலம்

வண்ணமா மலர்கொடு வானவர் வழிபட
அண்ணலார் ஆயிழை யாளொடும் அமர்விடம்
விண்ணின்மா மழைபொழிந் திழியவெள் ளருவிசேர்
திண்ணிலார் புறவணி திருமுது குன்றமே. க

வெறியுலாங் கொன்றையந் தாரினன் மேதகு
பொறியுலாம் அரவசைத் தாடியோர் புண்ணியன்
மறியுலாங் கையினன் மங்கையோ டமர்விடம்
செறியுளார் புறவணி திருமுது குன்றமே. உ

ஏறினார் விடைமிசை யிமையவர் தொழவுமை
கூறனார் கொல்புலித் தோலினார் மேனிமேல்

நீறனார் நிறைபுனற் சடையனார் நிகழ்விடம்
தேறலார் பொழிலணி திருமுது குன்றமே. ௩

உரையினார் உறுபொரு ளாயினான் உமையொடும்
விரையினார் கொன்றைசேர் சடையினார் மேவிடம்
உரையினார் ஒலியென வோங்குமுத் தாறுமெய்த்
திரையினார் எறிபுனல் திருமுது குன்றமே. ௪

கடியவா யினகுரற் களிற்றினைப் பிளிறவோர்
இடியவெங் குரலினோ டாளிசென் றிடுநெறி
வடியவாய் மழுவினன் மங்கையோ டமர்விடம்
செடியதார் புறவணி திருமுது குன்றமே. ௫

கானமார் கரியின்ஈர் உரிவையார் பெரியதோர்
வானமார் மதியினோ டரவர்தாம் மருவிடம்
ஊனமா யினபிணி யவைகெடுத் துமையொடும்
தேனமார் பொழிலணி திருமுது குன்றமே. ௬

மஞ்சர்தாம் மலர்கொடு வானவர் வணங்கிட
வெஞ்சொலார் வேடரோ டாடவர் விரும்பவே
அஞ்சொலாள் உமையொடும் அமர்விட மணிகலைச்
செஞ்சொலார் பயில்தருந் திருமுது குன்றமே. ௭

காரினார் அமர்தருங் கயிலைநன் மலையினை
ஏரினார் முடியிரா வணனெடுத் தானிற
வாரினார் முலையொடும் மன்னினார் மருவிடம்
சீரினார் திகழ்தருந் திருமுது குன்றமே. ௮

ஆடினார் கானகத் தருமறை யின்பொருள்
பாடினார் பலபுகழ்ப் பரமனார் இணையடி
ஏடினார் மலர்மிசை அயனும்மால் இருவரும்
தேடினார் அறிவொணார் திருமுது குன்றமே. ௯

மாசுமெய் தூசுகொண் டுழல்சமண் சாக்கியர்
பேசுமெய் யுளவல்ல பேணுவீர் காணுமின்
வாசமார் தருபொழில் வண்டினம் இசைசெயத்
தேசமார் புகழ்மிகுந் திருமுது குன்றமே. ௧௦

திண்ணார் புறவணி திருமுது குன்றரை
நண்ணினான் காழியுள் ஞானசம் பந்தன்சொல்
எண்ணினால் ஈரைந்து மாலையும் இயலுமாப்
பண்ணினாற் பாடுவார்க் கில்லையாம் பாவமே. கக

திருச்சிற்றம்பலம்

திருத்தேன்குடித்திட்டை - பண் - கோல்லி

திருச்சிற்றம்பலம்

முன்னைநான் மறையவை முறைமுறை குறையொடும்
தன்னதாள் தொழுதெழ நின்றவன் தன்னிடம்
மன்னுமா காவிரி வந்தடி வருடநல்
செந்நெலார் வளவயல் தென்குடித் திட்டையே. க

மகரமா டுங்கொடி மன்மத வேள்தனை
நிகரலா காநெருப் பெழவிழித் தானிடம்
பகரபா ணித்திலம் பன்மக ரத்தொடும்
சிகரமா ளிகைதொகுந் தென்குடித் திட்டையே. உ

கருவினா லன்றியே கருவெலா மாயவன்
உருவினா லன்றியே உருவுசெய் தானிடம்
பருவநாள் விழவொடும் பாடலோ டாடலும்
திருவினால் மிகுபுகழ்த் தென்குடித் திட்டையே. ௩

உண்ணிலா வாவியா யோங்குதன் தன்மையை
விண்ணிலார் அறிகிலா வேதவே தாந்தனூர்
எண்ணிலார் எழில்மணிக் கனகமா ளிகையிளந்
தெண்ணிலா விரிதருந் தென்குடித் திட்டையே. ௪

வருந்திவா னோர்கள்வந் தடையமா நஞ்சுதான்
அருந்திஆர் அமுதவர்க் கருள்செய்தான் அமருமூர்
செருந்திபூ மாதவிப் பந்தர்வண் செண்பகம்
திருந்துநீள் வளர்பொழில் தென்குடித் திட்டையே. ரு

ஊறினார் ஓசையுள் ஒன்றினார் ஒன்றிமால்
கூறினார் அமர்தரும் குமரவேள் தாதையூர்

ஆறினார் பொய்யகத் தையுணர் வெய்திமெய்
தேறினார் வழிபடுந் தென்குடித் திட்டையே. சு

கானலைக் கும்மவன் கண்ணிடந் தப்பநீள்
வானலைக் குந்தவத் தேவுவைத் தானிடம்
தானலைத் தெள்ளமூர் தாமரைத் தண்டுறை
தேனலைக் கும்வயல் தென்குடித் திட்டையே. எ

மாலொடும் பொருதிறல் வாளரக் கன்னெரிந்
தோலிடும் படிவிர லொன்றுவைத் தானிடம்
காலொடுங் கனகமூக் குடன்வரக் கயல்வரால்
சேலொடும் பாய்வயல் தென்குடித் திட்டையே. அ

நாரணன் றன்னொடு நான்முகன் றானுமாய்க்
காரணன் அடிமுடி காணவொண் ணானிடம்
ஆரணங் கொண்டுபூ சுரர்கள்வந் தடிதொழச்
சீரணங் கும்புகழ்த் தென்குடித் திட்டையே. க

குண்டிகைக் கையுடைக் குண்டரும் புத்தரும்
பண்டுரைத் தேயிடும் பற்றுவிட் டீர்தொழும்
வண்டிரைக் கும்பொழில் தண்டலைக் கொண்டலார்
தெண்டிரைத் தண்புனல் தென்குடித் திட்டையே. கய

தேனலார் சோலைசூழ் தென்குடித் திட்டையைக்
கானலார் கடிபொழில் சூழ்தருங் காழியுள்
ஞானமார் ஞானசம் பந்தன செந்தமிழ்
பானலார் மொழிவலார்க் கில்லையாம் பாவமே. கக

திருச்சிற்றம்பலம்

திருக்காளத்தி - பண் - கொல்லி

திருச்சிற்றம்பலம்

சந்தமார் அகிலொடு சாதிதேக் கம்மரம்
உந்துமா முகலியின் கரையினில் உமையொடும்
மந்தமார் பொழில்வளர் மல்குவண் காளத்தி
எந்தையார் இணையடி யென்மனத் துள்ளவே. க

ஆலமா மரவமோ டமைந்தசீர்ச் சந்தனம்
சாலமா பீலியுஞ் சண்பக முந்தியே
காலமார் முகலிவந் தணைதரு காளத்தி
நீலமார் கண்டனை நினையுமா நினைவதே. ௨

கோங்கமே குரவமே கொன்றையம் பாதிரி
மூங்கில்வந் தணைதரு முகலியின் கரையினில்
ஆங்கமர் காளத்தி யடிகளை அடிதொழ
வீங்குவெந் துயர்கெடும் வீடெளி தாகுமே. ௩

கரும்புதேன் கட்டியுங் கதலியின் கனிகளும்
அரும்புநீர் முகலியின் கரையினி லணிமதி
ஒருங்குவார் சடையினன் காளத்தி யொருவனை
விரும்புவார் அவர்கள்தாம் விண்ணுல காள்வரே. ௪

வரைதரும் அகிலொடு மாமுத்தம் உந்தியே
திரைதரு முகலியின் கரையினிற் றேமலர்
விரைதரு சடைமுடிக் காளத்தி விண்ணவன்
நிரைதரு கழலிணை நித்தலும் நினைமினே. ௫, ௬, ௭

முத்தும்மா மணிகளும் முழுமலர்த் திரள்களும்
எத்துமா முகலியின் கரையினில் எழில்பெறக்
கத்திட அரக்கனைக் கால்விரல் ஊன்றிய
அத்தன்றன் காளத்தி அணைவது கருமமே. ௮

மண்ணுமா வேங்கையும் மருதுகள் பீழ்ந்துந்தி
நண்ணுமா முகலியின் கரையினில் நன்மைசேர்
வண்ணமா மலரவன் மாலவன் காண்கிலா
அண்ணலார் காளத்தி ஆங்கணைந் துய்ம்மினே. ௯

வீங்கிய வுடலினர் விரிதரு துவருடைப்
பாங்கிலார் சொலைவிடும் பரனடி பணியுமின்
ஓங்குவண் காளத்தி யுள்ளமோ டுணர்தர
வாங்கிடும் வினைகளை வானவர்க் கொருவனே. ௧௦

அட்டமா சித்திகள் அணைதரு காலத்து
வட்டவார் சடையனை வயலணி காழியான்
சிட்டநான் மறைவல ஞானசம் பந்தன்சொல்
இட்டமாப் பாடுவார்க் கில்லையாம் பாவமே. கக

திருச்சிற்றம்பலம்

திருப்பிரமபுரம் - பண் - கொல்லி

திருச்சிற்றம்பலம்

காமுனம்மல ராற்புனல்மலர் தூவியேகலந் தேத்துமின்
பாமனூர்பல பேரினாற்பொலி பத்தர்சித்தர்கள் தாம்பயில்
வாமுன்னவ்வருள் செய்யவல்லஎம் ஐயன்நாள்தொறும் மேயசீர்ப்
பிரமனூர்பிர மாபுரத்துறை பிஞ்ஞகன்அருள் பேணியே. க

விண்ணிலார்மதி சூடினான்விரும் பும்மறையவன் தன்தலை
உண்ணநன்பலி பேணினான்உல கத்துளூனுயி ரான்மலைப்
பெண்ணினார்திரு மேனியான்பிர மாபுரத்துறை கோயிலுள்
அண்ணலாரரு ளாளனாயமர் கின்றஎம்முடை யாதியே. உ

எல்லையில்புக ழாளனும்இமை யோர்கணத்துடன் கூடியும்
பல்லையார்தலை யிற்பலியது கொண்டுகந்த படிறனுந்
தொல்லைவையகத் தேறுதொண்டர்கள் தூமலர்சொரிந் தேத்தவே
மல்லையம்பொழில் தேன்பில்கும்பிர மாபுரத்துறை மைந்தனே. ௩

அடையலார்புரஞ் சீறியந்தணர் ஏத்தமாமட மாதொடும்
பெடையெலாங்கடற் கானல்புல்கும்பிர மாபுரத்துறை கோயிலான்
தொடையலார்நறுங் கொன்றையான்தொழி லேபரவிநின் றேத்தினால்
இடையிலார்சிவ லோகம்எய்துதற் கீதுகாரணங் காண்மினே. ௪

வாயிடைம்மறை யோதிமங்கையர் வந்திடப்பலி கொண்டுபோய்ப்
போயிடம்எரி கானிடைப்புரி நாடகம்இனி தாடினான்
பேயொடுங்குடி வாழ்வினான்பிர மாபுரத்துறை பிஞ்ஞகன்
தாயிடைப்பொருள் தந்தையாகுமென் றோதுவார்க்கருள் தன்மையே.

ஊடினாலினி யாவதென்னுயர் நெஞ்சமேயுறு வல்வினைக்
கோடிநீயுழல் கின்றதென்னழ லன்றுதன்கையி லேந்தினான்

பிடநேர்ந்தது கொள்கையான்பிர மாபுரத்துறை வேதியன்
எடநேர்மதி யோடராவணி யெந்தையென்றுநின் றேத்திடே. ௬

செய்யன்வெள்ளியன் ஒள்ளியார்சில ரென்றுமேத்தி நினைந்திட
ஐயன்ஆண்தகை அந்தணன்அரு மாமறைப்பொரு ளாயினான்
பெய்யுமாமழை யானவன்பிர மாபுரம்இடம் பேணிய
வெய்யவெண்மழு ஏந்தியைந்நினைந் தேத்துமின்வினை வீடவே. ௭

கன்றொருக்கையில் ஏந்திநல்வின வின்கனிபட நூறியுஞ்
சென்றொருக்கிய மாமறைப்பொருள் தேர்ந்தசெம்மல ரோனுமாய்
அன்றரக்கனைச் செற்றவன் அடி யும்முடியவை காண்கிலார்
பின்தருக்கிய தண்பொழிற்பிர மாபுரத்தரன் பெற்றியே. ௮

உண்டுடுக்கைவிட் டார்களும்உயர் கஞ்சிமண்டைகொள் தேரரும்
பண்டடக்குசொற் பேசுமப்பரி வொன்றிலார்கள்சொற்கொள்ளன்மின்
தண்டொடக்குவன் சூலமுந்தழல் மாமழுப்படை தன்கையிற்
கொண்டொடுக்கிய மைந்தன்எம்பிர மாபுரத்துறை கூத்தனே. ௯

பித்தனைப்பிர மாபுரத்துறை பிஞ்ஞகன்கழல் பேணியே
மெய்த்தவத்துநின் றோர்களுக்குரை செய்துநன்பொருள் மேவிட
வைத்தசிந்தையுள் ஞானசம்பந்தன் வாய்நவின்றெழு மாலைகள் [ரே.
பொய்த்தவம்பொறி நீங்கஇன்னிசை போற்றிசெய்யுமெய்ம் மாந்த

திருச்சிற்றம்பலம்

திருக்கண்டியூர்வீரட்டம் - பண் - கொல்லி

வினவுரை

திருச்சிற்றம்பலம்

வினவினேன்அறி யாமையில்லுரை செய்ம்மினீரருள் வேண்டுவீர்
கனைவிலார் புனற் காவிரிக்கரை மேயகண்டியூர் வீரட்டன்
தனமுனேதனக் கின்மையோதம ராயினாரண்ட மாளத்தான்
வனனில்வாழ்க்கைகொண் டாடிப்பாடியிவ் வையமாப்பலி தேர்ந்ததே. ௧

உள்ளவாறெனக் குரைசெய்மின்னுயர் வாயமாதவம் பேணுவீர்
கள்ளவிழ்பொழில் சூழுங்கண்டியூர் வீரட்டத்துறை காதலான்
பிள்ளைவான்பிறை செஞ்சடைம்மிசை வைத்ததும்பெரு நீரொலி
வெள்ளந்தாங்கிய தென்கொலோமிகு மங்கையாளுட னாகவே. ௨

அடியராயினீர் சொல்லுமின்அறி கின்றிலேன்அரன் செய்கையைப்
படியெலாந்தொழு தேத்துகண்டியூர் வீரட்டத்துறை பான்மையான்
முடிவுமாய்முத லாயிவ்வைய முழுதுமாயழ காயதோர்
பொடியதார்திரு மார்பினிற்புரி நூலும்பூண்டெழு பொற்பதே. ங

பழையதொண்டர்கள் பகருமின்பல வாயவேதியன் பான்மையைக்
கழையுலாம்புனல் மல்குகாவிரி மன்னுகண்டியூர் வீரட்டன்
குழையொர்காதினிற் பெய்துகந்தொரு குன்றின்மங்கை வெருவுறப்
புழைநெடுங்கைநன் மாவுரித்தது போர்த்துகந்தபொலிவதே. ச

விரவிலாதுமைக் கேட்கின்றேனடி விரும்பியாட்செய்வீர் விளம்புமின்
கரையெலாந்திரை மண்டுகாவிரிக் கண்டியூருறை வீரட்டன்
முரவமொந்தை முழாவொலிக்க முழங்குபேயொடுங் கூடிப்போய்ப்
பரவுவானவர்க் காகவார்கடல் நஞ்சமுண்ட பரிசதே. ரு

இயலுமாறெனக் கியம்புமின்இறை வன்னுமாய்நிறை செய்கையைக்
கயல்நெடுங்கண்ணி னார்கள்தாம்பொலி கண்டியூருறை வீரட்டன்
புயல்பொழிந்திழி வானுளோர்களுக் காகவன்றயன் பொய்ச்சிரம்
அயனகவ்வ தரிந்துமற்றதில் ஊனுகந்த அருத்தியே. சு

திருந்துதொண்டர்கள் செப்புமின்மிகச் செல்வன்றன்னது திறமெலா
கருந்தடங்கண்ணி னார்கள்தாந்தொழு கண்டியூருறை வீரட்டன் [ம்
இருந்துநால்வரொ டால்நிழல்அறம் உரைத்ததும்மிகு வெம்மையார்
வருந்தவன்சிலை யால்அம்மாமதில் மூன்றும்மாட்டிய வண்ணமே. எ

நாவிரித்தரன் தொல்புகழ்பல பேணுவீரிறை நல்குமின்
காவிரித்தடம் புனல்செய்கண்டியூர் வீரட்டத்துறை கண்ணுதல்
கோவிரிப்பயன் ஆன்அஞ்சாடிய கொள்கையுங்கொடி வரைபெற
மாவரைத்தலத் தாலரக்கனை வலியைவாட்டிய மாண்பதே. அ

பெருமையேசா ருகவாழ்வுறு மாந்தர்காளிறை பேசுமின்
கருமையார்பொழில் சூழுந்தண்வயற் கண்டியூருறை வீரட்டன்
ஒருமையாலுயர் மாலும்மற்றை மலரவன் உணர்ந் தேத்தவே
அருமையாலவ ருக்குயர்ந்தெரி யாகிநின்றஅத் தன்மையே. கூ

நமரெழுபிறப் பறுக்கும்மாந்தர்காள் நவிலுமின்உமைக் கேட்கின்றேன்
கமாழிவயல் சூழுந்தண்புனற் கண்டியூருறை வீரட்டன்

தமாழிந்தெழு சாக்கியச்சமண் ஆதரோதும் அதுகொளா
தமரர்ஆனவ ரேத்தஅந்தகன் தன்னைச்சூலத்தி லாய்ந்ததே. ௧௦

கருத்தனைப்பொழில் சூழுங்கண்டியூர் வீரட்டத்துறை கள்வனை
அருத்தனைத்திறம் அடியர்பால்மிகக் கேட்டுகந்த வினாவுரை
திருத்தமாந்திகழ் காழிஞானசம் பந்தன்செப்பிய செந்தமிழ்
ஒருத்தராகிலும் பலர்களாகிலும் உரைசெய்வாருயர்ந் தார்களே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருஆலவாய் - பண் - கொல்லி

திருச்சிற்றம்பலம்

மானினேர்விழி மாதராய்வழு திக்குமாபெருந் தேவிகேள்
பால்நல்வாயொரு பாலன்ஈங்கிவன் என்றுநீபரி வெய்திடேல்
ஆனை மாமலை யாதியாய இடங்களிற்பல அல்லல்சேர்
ஈனர்கட்கெளி யேனலேன்திரு ஆலவாயரன் நிற்கவே. ௧

ஆகமத்தொடு மந்திரங்க ளமைந்தசங்கத பங்கமாப்
பாகதத்தொ டிரைத்துரைத்த சனங்கள்வெட்குறு பக்கமா
மாகதக்கரி போல்திரிந்து புரிந்துநின்றுணும் மாசுசேர்
ஆகதர்க்கெளி யேனலேன்திரு ஆலவாயரன் நிற்கவே. ௨

அத்தகுபொருள் உண்டுமில்லையு மென்றுநின்றவர்க் கச்சமா
ஒத்தொவ்வாமை மொழிந்துவாதி லழிந்தெழுந்த கவிப்பெயர்ச்
சத்திரத்தின் மடிந்தொடிந்து சனங்கள்வெட்குற நக்கமே
சித்திரர்க்கெளி யேனலேன்திரு ஆலவாயரன் நிற்கவே. ௩

சந்துசேனனும் இந்துசேனனுந் தருமசேனனுங் கருமைசேர்
கந்துசேனனுங் கனகசேனனும் முதலதாகிய பெயர்கொளா
மந்திபோல்திரிந் தாரியத்தொடு செந்தமிழ்ப்பயன் அறிகிலா
அந்தகர்க்கெளி யேனலேன்திரு ஆலவாயரன் நிற்கவே. ௪

கூட்டினார்கிளி யின்விருத்தம் உரைத்ததோரொலி யின்தொழிற்
பாட்டுமெய்சொலிப் பக்கமேசெலும் எக்கர்தங்களைப் பல்லறம்
காட்டியேவரு மாடெலாங்கவர் கையரைக்கசி வொன்றிலாச்
சேட்டைகட்கெளி யேனலேன்திரு ஆலவாயரன் நிற்கவே. ௫

கனகநந்தியும் புட்பநந்தியும் பவணநந்தியுங் குமணமா
சுனகநந்தியுங் குனகநந்தியுந் திவணநந்தியும் மொழிகொளா
அனகநந்தியர் மதுவொழிந்தவ மேதவம்புரி வோமெனும்
சினகருக்கெளி யேனலேன்திரு ஆலவாயான் நிற்கவே. ௬

பந்தணம்மவை யொன்றிலம்பரி வொன்றிலம்மென வாசக
மந்தணம்பல பேசிமாசறு சீர்மையின்றிய நாயமே
அந்தணம்மரு கந்தணம்மது புத்தணம்மது சித்தணச்
சிந்தணர்க்கெளி யேனலேன்திரு ஆலவாயரன் நிற்கவே. ௭

மேலெனக்கெதி ரில்லையென்ற அரக்கனார்மிகை செற்றதீப்
போலியைப்பணி யக்கிலாதொரு பொய்த்தவங்கொடு குண்டிகை
பீலிகைக்கொடு பாயிடுக்கி நடுக்கியேபிறர் பின்செலும்
சீலிகட்கெளி யேனலேன்திரு ஆலவாயான் நிற்கவே. ௮

பூமகற்கும் அரிக்குமோர்வரு புண்ணியன்அடி போற்றிலார்
சாமவத்தையி னார்கள்போல்தலை யைப்பறித்தொரு பொய்த்தவம்
வேமவத்தைசெ லுத்திமெய்ப்பொடி யட்டிவாய் சகதிக்குநேர்
ஆமவர்க்கெளி யேனலேன்திரு ஆலவாயரன் நிற்கவே. ௯

தங்களுக்குமச் சாக்கியர்க்குந் தரிப்பொணாதநற் சேவடி
எங்கள்நாயகன் ஏத்தொழிந்திடக் கேமடுத்தொரு பொய்த்தவம்
பொங்குநூல்வழி யன்றியேபுல வோர்களைப்பழிக் கும்பொலா
அங்கதர்க்கெளி யேனலேன்திரு ஆலவாயரன் நிற்கவே. ௧௦

எக்காரம்அமண் கையருக்கெளி யேனலேன்திரு ஆலவாய்ச்
சொக்கனென்னு ளிருக்கவேதுளங் கும்முடித்தென்னன் முன்னிவை
தக்கசீர்ப்புக லிக்குமன்தமிழ் நாதன்ஞானசம் பந்தன்வாய்
ஒக்கவேயுரை செய்தபத்தும் உரைப்பவர்க்கிடர் இல்லையே. ௧௧

திருச்சிற்றம்பலம்

பொது - பண் - கொல்லி

தனித் திருவிருக்குக்குறள்

திருச்சிற்றம்பலம்

கல்லால்நீழல், அல்லாத்தேவை
நல்லார்பேணார், அல்லோம்நாமே. க

கொன்றைசூடி, நின்றதேவை
அன்றியொன்று, நன்றிலோமே. உ

கல்லாநெஞ்சின், நில்லான்ஈசன்
சொல்லாதாரோ, டல்லோம்நாமே. ங

கூற்றுதைத்த, நீற்றினானைப்
போற்றுவார்கள், தோற்றினாரே. ச

காட்டுளாடும், பாட்டுளானை
நாட்டுளாரும், தேட்டுளாரே. ரு

தக்கன்வேள்விப், பொக்கந்தீர்த்த
மிக்கதேவர், பக்கத்தோமே. சு

பெண்ணாணாய, விண்ணோர்கோவை
நண்ணாதாரை, எண்ணோம்நாமே. எ

தூர்த்தன்வீரம், தீர்த்தகோவை
ஆர்த்தமாக, ஏத்தினோமே. அ

பூவினானும், தாவினானும்
நாவினாலும், நோவினாரே. கூ

மொட்டமணர், கட்டர்தேரர்
பிட்டர்சொல்லை, விட்டுளோமே. க0

அந்தண்காழிப், பந்தன்சொல்லைச்
சிந்தைசெய்வோர், உய்ந்துளோரே. கக

திருச்சிற்றம்பலம்

திருக்கச்சியேகம்பம் - பண் - கோல்லி

திருவிருக்குக்குறள்

திருச்சிற்றம்பலம்

கருவார்கச்சித், திருவேகம்பத்
தொருவாவென்ன, மருவாவினையே. க

மதியார்கச்சி, நதியேகம்பம்
விதியாலேத்தப், பதியாவாரே. உ

கலியார்கச்சி, மலியேகம்பம்
பலியாற்போற்ற, நலியாவினையே. ங

வரமார்கச்சிப், புரமேகம்பம்
பரவாஏத்த, விரவாவினையே. ச

படமார்கச்சி, இடமேகம்பத்
துடையாயென்ன, அடையாவினையே. ரு

நலமார்கச்சி, நிலவேகம்பம்
குலவாவேத்தக், கலவாவினையே. சு

கரியின்உரியன், திருவேகம்பன்
பெரியபுரமூன், றெரிசெய்தானே. எ

இலங்கையரசைத், துலங்கவூன்றும்
நலங்கொள்கம்பன், இலங்குசரணே. அ

மறையோன்அரியும், அறியாஅனலன்
நெறியேகம்பம், குறியால்தொழுமே. கூ

பறியாத்தேரர், நெறியில்கச்சிச்
செறிகொள்கம்பம், குறுகுவோமே. க0

கொச்சைவேந்தன், கச்சிக்கம்பம்
மெச்சுஞ்சொல்லை, நச்சும்புகழே. கக

திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றேமம் - பண் - கொல்லிக்கௌவாணம்

திருச்சிற்றம்பலம்

நிறைவெண்டிங்கள் வாண்முக மாதர்பாட நீள்சடைக்
குறைவெண்டிங்கள் சூடியோர் ஆடல்மேய கொள்கையான்
சிறைவண்டியாழ்செய் பைம்பொழிற் பழனஞ்சூழ்சிற் றேமத்தான்
இறைவனென்றே யுலகெலாம் ஏத்தநின்ற பெருமானே. க

மாகத்திங்கள் வாண்முக மாதர்பாட வார்சடைப்
பாகத்திங்கள் சூடியோ ராடல்மேய பண்டங்கன்
மேகத்தாடு சோலைசூழ் மிடைசிற்றேமம் மேவினான்
ஆகத்தோர்கொள் ஆமையைப் பூண்டஅண்ணல் அல்லனே. உ

நெடுவெண்டிங்கள் வாண்முக மாதர்பாட நீள்சடைக்
கொடுவெண்டிங்கள் சூடியோ ராடல்மேய கொள்கையான்
படுவண்டியாழ்செய் பைம்பொழிற் பழனஞ்சூழ்சிற் றேமத்தான்
கடுவெங்கூற்றைக் காலினாற் காய்ந்தகடவுள் அல்லனே. ௩

கதிரார்திங்கள் வாண்முக மாதர்பாடக் கண்ணுதல்
முதிரார்திங்கள் சூடியோ ராடல்மேய முக்கணன்
எதிரார்புனலம் புன்சடை யெழிலாருஞ்சிற் றேமத்தான்
அதிரார்பைங்கண் ஏறுடை யாதிமூர்த்தி யல்லனே. ௪

வானார்திங்கள் வாண்முக மாதர்பாட வார்சடைக்
கூனார்திங்கள் சூடியோ ராடல்மேய கொள்கையான்
தேனார்வண்டு பண்செயுந் திருவாருஞ்சிற் றேமத்தான்
மானார்விழிநன் மாதொடும் மகிழ்ந்தமைந்தன் அல்லனே. ௫

பனிவெண்டிங்கள் வாண்முக மாதர்பாடப் பல்சடைக்
குனிவெண்டிங்கள் சூடியோ ராடல்மேய கொள்கையான்
தனிவெள்விடையன் புள்ளினத் தாமஞ்சூழ்சிற் றேமத்தான்
முனிவும்மூப்பும் நீக்கிய முக்கண்மூர்த்தி யல்லனே. ௬

கிளருந்திங்கள் வாண்முக மாதர்பாடக் கேடிலா
வளருந்திங்கள் சூடியோ ராடல்மேய மாதவன்
தளிருங்கொம்பும் மதுவுமார் தாமஞ்சூழ்சிற் றேமத்தான்
ஒளிரும்வெண்ணூல் மார்பனென் உள்ளத்துள்ளான் அல்லனே. எ

சூழ்ந்ததிங்கள் வாண்முக மாதர்பாடச் சூழ்சடைப்
போழ்ந்ததிங்கள் சூடியோ ராடல்மேய புண்ணியன்
தாழ்ந்தவயற்சிற் றேமத்தான் தடவரையைத்தன் தாளினல்
ஆழ்ந்தஅரக்கன் ஒல்கஅன் றடர்த்தஅண்ணல் அல்லனே. அ

தனிவெண்திங்கள் வாண்முக மாதர்பாடத் தாழ்சடைத்
துணிவெண்திங்கள் சூடியோ ராடல்மேய தொன்மையான்
அணிவண்ணச்சிற் றேமத்தான் அலர்மேலந்த ணாளனும்
மணிவண்ணனுமுன் காண்கிலா மழுவாட்செல்வன் அல்லனே. க

வெள்ளைத்திங்கள் வாண்முக மாதர்பாட வீழ்சடைப்
பிள்ளைத்திங்கள் சூடியோ ராடல்மேய பிஞ்ஞகன்
உள்ளத்தார்சிற் றேமத்தான் உருவார்புத்தர் ஒப்பிலாக்
கள்ளத்தாரைத் தானுக்கியுட் கரந்துவைத்தான் அல்லனே. கO

கல்லிலோதம் மல்குதண் கானல்சூழ்ந்த காழியான்
நல்லவாய வின்தமிழ் நவிலும்ஞான சம்பந்தன்
செல்வனூர்சிற் றேமத்தைப் பாடல்சீரார் நாவினல்
வல்லராகி வாழ்த்துவார் அல்லலின்றி வாழ்வரே. கக

திருச்சிற்றம்பலம்

சீகாழி - பண் - கௌசிகம்

திருச்சிற்றம்பலம்

சந்த மார்முலை யாள்தன கூறனர்
வெந்த வெண்பொடி யாடிய மெய்யனர்
கந்த மார்பொழில் சூழ்தரு காழியுள்
எந்தை யாரடி யென்மனத் துள்ளவே. க

மானி டம்முடை யார்வளர் செஞ்சடைத்
தேனி டங்கொளுங் கொன்றையந் தாரினர்
கானி டங்கொளுந் தண்வயற் காழியார்
ஊனி டங்கொண்டென் உச்சியில் நிற்பரே. உ

மைகொள் கண்டத்தர் வான்மதிச் சென்னியர்
பைகொள் வாளர வாட்டும் படிறனர்

கைகொள் மான்மறி யார்கடற் காழியுள்
ஐயன் அந்தணர் போற்ற இருக்குமே. ௩

புற்றில் நாகமும் பூளையும் வன்னியுங்
கற்றை வார்சடை வைத்தவர் காழியுட்
பொற்றொ டியொ டிருந்தவர் பொற்கழல்
உற்ற போதுடன் ஏத்தி யுணருமே. ௪

நலியுங் குற்றமும் நம்முட னோய்வினை
மெலியு மாறது வேண்டுதி ரேல்வெய்ய
கலிக டிந்தகை யார்கடற் காழியுள்
அலைகொள் செஞ்சடை யாரடி போற்றுமே. ௫

பெண்ணோர் கூறினர் பேயுடன் ஆடுவர்
பண்ணும் ஏத்திசை பாடிய வேடத்தர்
கண்ணும் மூன்றுடை யார்கடற் காழியுள்
அண்ணலாய அடிகள் சரிதையே. ௬

பற்றும் மானும் மழுவும் அழகுற
முற்று மூர்திரிந் துபலி முன்னுவர்
கற்ற மாநன் மறையவர் காழியுட்
பெற்றம் ஏற துகந்தார் பெருமையே. ௭

எடுத்த வல்லரக் கன்முடி தோளிற
அடர்த்து கந்தருள் செய்தவர் காழியுட்
கொடித்த யங்குநற் கோயிலுள் இன்புற
இடத்து மாதொடு தாமும் இருப்பரே. ௮

காலன் தன்னுயிர் வீட்டு கழலடி
மாலும் நான்முகன் தானும் வனப்புற
ஓல மிட்டுமுன் தேடி யுணர்கிலாச்
சீலங் கொண்டவ னூர்திகழ் காழியே. ௯

உருவ நீத்தவர் தாமும் உறுதுவர்
தருவ லாடையி னாருந் தகவிலர்
கருமம் வேண்டுதி ரேற்கடற் காழியுள்
ஒருவன் சேவடி யேயடைந் துய்ம்மினே. ௧௦

கானல் வந்துல வுங்கடற் காழியுள்
ஈன மில்லி இணையடி யேத்திடும்
ஞான சம்பந்தன் சொல்லிய நற்றமிழ்
மான மாக்கும் மகிழ்ந்துரை செய்யவே. கக

திருச்சிற்றம்பலம்

திருக்கழிப்பாலை - பண் - கௌசிகம்

திருச்சிற்றம்பலம்

வெந்த குங்கி லியப்புகை விம்மவே
கந்தம் நின்றுல வுங்கழிப் பாலையார்
அந்த மும்மள வும்மறி யாததோர்
சந்த மாலவர் மேவிய சாந்தமே. க

வான்இ லங்க விளங்கும் இளம்பிறை
தான்அ லங்கல் உகந்த தலைவனார்
கான்இ லங்க வருங்கழிப் பாலையார்
மான்ந லம்மட நோக்குடை யாளொடே. உ

கொடிகொள் ஏற்றினர் கூற்றை யுதைத்தனர்
பொடிகொள் மார்பினிற் பூண்டதொ ராமையர்
கடிகொள் பூம்பொழில் சூழ்கழிப் பாலையுள்
அடிகள் செய்வன ஆர்க்கறி வொண்ணுமே. ங

பண்ந லம்பட வண்டறை கொன்றையின்
தண்அ லங்கல் உகந்த தலைவனார்
கண்ந லங்க வருங்கழிப் பாலையுள்
அண்ண லெங்கட வுள்ளவன் அல்லனே. ச

எரி ஞருல கத்திமை யோரொடும்
பாரி னருட னேபர வப்படுங்
காரி னார்பொழில் சூழ்கழிப் பாலையெம்
சீரி னார்கழ லேசிந்தை செய்ம்மினே. ரு

துள்ளும் மான்மறி யங்கையி லேந்தியூர்
கொள்வ னாரிடு வெண்தலை யிற்பலி

கள்வ ஞுருறை யுங்கழிப் பாலயை
உள்ளு வார்வினை யாயின வோயுமே. சு

மண்ணி ஞர்மலி செல்வமும் வானமும்
எண்ணி நீரினி தேத்துமின் பாகமும்
பெண்ணி ஞர்பிறை நெற்றியொ டுற்றமுக்
கண்ணி ஞுருறை யுங்கழிப் பாலயே. எ

இலங்கை மன்னனை யீரைந் திரட்டிதோள்
தலங்க வூன்றிய தூமழு வாளிஞர்
கலங்கள் வந்தல வுங்கழிப் பாலயை
வலங்கொள் வார்வினை யாயின மாயுமே. அ

ஆட்சி யால்அல ராஞெடு மாலுமாய்த்
தாட்சி யாலறி யாது தளர்ந்தனர்
காட்சி யாலறி யான்கழிப் பாலயை
மாட்சி யால்தொழு வார்வினை மாயுமே. கூ

செய்ய நுண்துவ ராடையி ஞரொடு
மெய்யின் மாசு பிறக்கிய வீறிலாக்
கையர் கேண்மையெ ஞேகழிப் பாலயெம்
ஐயன் சேவடி யேயடைந் துய்ம்மினே. க0

அந்தண் காழி யருமறை ஞானசம்
பந்தன் பாய்புனல் சூழ்கழிப் பாலயைச்
சிந்தை யாற்சொன்ன செந்தமிழ் வல்லவர்
முந்தி வானுல காடன் முறைமையே. கக

திருச்சிற்றம்பலம்

திருஆரூர் - பண் - கௌசிகம்

திருச்சிற்றம்பலம்

அந்த மாயுல காதியு மாயினன்
வெந்த வெண்பொடிப் பூசிய வேதியன்
சிந்தை யேபுகுந் தான்திரு வாரூரெம்
எந்தை தானெனை யேன்றுகொ ளுங்கொலோ. க

கருத்த னேகரு தார்புரம் மூன்றெய்த
ஒருத்த னேயுமை யாளொரு கூறனே
திருத்த னேதிரு ஆரூரெந் தீவண்ண
அருத்த வென்னெனை யஞ்சலென் னாததே. ௨

மறையன் மாமுனி வன்மரு வார்புரம்
இறையின் மாத்திரை யில்லெரி யூட்டினன்
சிறைவண் டார்பொழில் சூழ்திரு ஆரூரெம்
இறைவன் தானெனை யேன்றுகொ ளுங்கொலோ. ௩

பல்லில் ஓடுகை யேந்திப் பலிதிரிந்
தெல்லி வந்திடு காட்டெரி யாடுவான்
செல்வம் மல்கிய தென்திரு ஆரூரான்
அல்லல் தீர்த்தெனை யஞ்சலெ னுங்கொலோ. ௪

குருந்த மேறிக் கொடிவிடு மாதவி
விரிந்த லர்ந்த விரைகமழ் தேன்கொன்றை
திருந்து மாடங்கள் சூழ்திரு ஆரூரான்
வருந்தும் போதெனை வாடலெ னுங்கொலோ. ௫

வார்கொள் மென்முலை யாளொரு பாகமா
ஊர்க ளாரிடு பிச்சைகொள் உத்தமன்
சீர்கொள் மாடங்கள் சூழ்திரு ஆரூரான்
ஆர்க ளாவெனை யஞ்சலெ னாததே. ௬

வளைக்கை மங்கைநல் லாளையோர் பாகமாத்
துளைக்கை யானை துயர்படப் போர்த்தவன்
திளைக்குந் தண்புனல் சூழ்திரு ஆரூரான்
இளைக்கும் போதெனை யேன்றுகொ ளுங்கொலோ. ௭

இலங்கை மன்னன் இருபது தோளிறக்
கலங்கக் கால்விர லாற்கடைக் கண்டவன்
வலங்கொள் மாமதில் சூழ்திரு ஆரூரான்
அலங்கல் தந்தெனை யஞ்சலெ னுங்கொலோ. ௮

நெடிய மாலும் பிரமனும் நேர்கிலாப்
படிய வன்பனி மாமதிச் சென்னியான்

செடிகள் நீக்கிய தென்திரு ஆரூரெம்
அடிகள் தானெனை யஞ்சலெ னுங்கொலோ. ௯

மாசு மெய்யினர் வண்துவ ராடைகொள்
காசை போர்க்குங் கலதிகள் சொற்கொளேல்
தேசம் மல்கிய தென்திரு ஆரூரெம்
ஈசன் தானெனை யேன்றுகொ ளுங்கொலோ. ௧௦

வன்னி கொன்றை மதியொடு கூவிளம்
சென்னி வைத்த பிரான்திரு ஆரூரை
மன்னு காழியுள் ஞானசம் பந்தன்வாய்ப்
பன்னு பாடல்வல் லார்க்கில்லை பாவமே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருக்கருகாவூர் - பண் - கௌசிகம்

திருச்சிற்றம்பலம்

முத்தி லங்குமுறு வல்லுமை யஞ்சவே
மத்த யானைமறு கவ்வுரி வாங்கியக்
கத்தை போர்த்தகட வுள்கரு காவூரெம்
அத்தர் வண்ணம்அழ லும்அழல் வண்ணமே. ௧

விமுத வல்லசடை யான்வினை யுள்குவார்க்
கமுத நீழலக லாததோர் செல்வமாம்
கமுத முல்லை கமழ்கின்ற கருகாவூர்
அமுதர் வண்ணம்அழ லும்அழல் வண்ணமே. ௨

பழக வல்லசிறுத் தொண்டர்பா வின்னிசைக்
குழக ரென்றுகுழை யாவழை யாவரும்
கழல்கொள் பாடலுடை யார்கரு காவூரெம்
அழகர் வண்ணம்அழ லும்அழல் வண்ணமே. ௩

பொடிமெய் பூசிமலர் கொய்துபு ணர்ந்துடன்
செடிய ரல்லாவுள்ளம் நல்கிய செல்வத்தர்
கடிகொள் முல்லைகம ழுங்கரு காவூரெம்
அடிகள் வண்ணம்அழ லும்அழல் வண்ணமே. ௪

மைய லின்றிமலர் கொய்துவ ணங்கிடச்
செய்ய வுள்ளம்மிக நல்கிய செல்வத்தர்
கைதன் முல்லைகம ழுங்கரு காவூரெம்
ஐயர் வண்ணம்அழ லும்அழல் வண்ணமே. ரு

மாசில் தொண்டர்மலர் கொண்டு வணங்கிட
ஆசை யாரஅருள் நல்கிய செல்வத்தர்
காய்சி னத்தவிடை யார்கரு காவூரெம்
ஈசர் வண்ணம்எரி யும்எரி வண்ணமே. சா

வெந்த நீறுமெய் பூசிய வேதியன்
சிந்தை நின்றருள் நல்கிய செல்வத்தன்
கந்த மௌவல்கம ழுங்கரு காவூரெம்
எந்தை வண்ணம்எரி யும்எரி வண்ணமே. எ, அ

பண்ணின் நேர்மொழி யாளையோர் பாகனூர்
மண்ணு கோலம்முடை யம்மல ரானொடும்
கண்ணன் நேடஅரி யார்கரு காவூரெம்
அண்ணல் வண்ணம்அழ லும்அழல் வண்ணமே. கூ

போர்த்த மெய்யினர் போதுழல் வார்கள்சொல்
தீர்த்த மென்றுதெளி வீர்தெளி யேன்மின்
கார்த்தண் முல்லைகம ழுங்கரு காவூரெம்
ஆத்தர் வண்ணம்மழ லும்மழல் வண்ணமே. க0

கலவ மஞ்ஞையுல வுங்கரு காவூர்
நிலவு பாடலுடை யான்றன நீள்கழல்
குலவு ஞானசம் பந்தன செந்தமிழ்
சொலவ லாரவர் தொல்வினை தீருமே. கக

திருச்சிற்றம்பலம்

திருஆலவாய் - பண் - கௌசிகம்

திருச்சிற்றம்பலம்

காட்டு மாவ துரித்துரி போர்த்துடல்
நாட்ட மூன்றுடை யாயுரை செய்வனுன்
வேட்டு வேள்விசெய் யாஅமண் கையரை
ஓட்டி வாதுசெ யத்திரு வுள்ளமே. க

மத்த யானையின் ஈருரி மூடிய
அத்த னேயணி ஆலவா யாய்பணி
பொய்த்த வன்தவ வேடத்த ராஞ்சமண்
சித்த ரையழிக் கத்திரு வுள்ளமே. உ

மண்ண கத்திலும் வானிலும் எங்குமாம்
திண்ண கத்திரு ஆலவா யாயருள்
பெண்ண கத்தெழிற் சாக்கியப் பேயமண்
தெண்ணர் கற்பழிக் கத்திரு வுள்ளமே. ௩

ஓதி யோத்தறி யாஅமண் ஆதரை
வாதில் வென்றழிக் கத்திரு வுள்ளமே
ஆதி யேதிரு ஆலவா யண்ணலே
நீதி யாக நினைந்தருள் செய்திடே. ௪

வைய மார்புக ழாயடி யார்தொழும்
செய்கை யார்திரு ஆலவா யாய்செப்பாய்
கையி லுண்டுழ லும்அமண் கையரைப்
பைய வாதுசெ யத்திரு வுள்ளமே. ரு

நாறு சேர்வயல் தண்டலை மிண்டிய
தேற லார்திரு ஆலவா யாய்செப்பாய்
வீறி லாத்தவ மோட்டமண் வேடரைச்
சீறி வாதுசெ யத்திரு வுள்ளமே. சு

பண்ட டித்தவத் தார்பயில் வார்தொழும்
தொண்ட ருக்கெளி யாய்திரு ஆலவாய்
அண்ட னேயமண் கையரை வாதினில்
செண்ட டித்துள றத்திரு வுள்ளமே. எ

அரக்கன் ஞன்கிரி யேற்றவன் தன்முடிச்
செருக்கி னைத்தவிர்த் தாய்திரு ஆலவாய்ப்
பரக்கும் மாண்புடை யாயமண் பாவரைக்
காக்க வாதுசெ யத்திரு வுள்ளமே. அ

மாலும் நான்முக னும்அறி யாநெறி
ஆல வாயுறை யும்அண்ண லேபணி
மேலை வீடுண ராவெற்ற ரையரைச்
சால வாதுசெ யத்திரு வுள்ளமே. கூ

கழிக்க ரைப்படு மீன்கவர் வாரமண்
அழிப்ப ரையழிக் கத்திரு வுள்ளமே
தெழிக்கும் பூம்புனல் சூழ்திரு ஆலவாய்
மழுப்ப டையுடை மைந்தனே நல்கிடே. கo

செந்தெ ஞமுரா லுந்திரு ஆலவாய்
மைந்த னேயென் று வல்லம ஞசறச்
சந்த மார்தமிழ் கேட்டமெய்ஞ் ஞானசம்
பந்தன் சொற்பக ரும்பழி நீங்கவே. கக

திருச்சிற்றம்பலம்

திருமழபாடி - பண் - கௌசிகம்

திருச்சிற்றம்பலம்

அங்கை யாழ லன்அழ கார்சடைக்
கங்கை யான்கட வுள்ளிடம் மேவிய
மங்கை யானுறை யும்மழ பாடியைத்
தங்கை யால்தொழு வார்தக வாளரே. க

விதியு மாம்விளை வாமொளி யார்ந்ததோர்
கதியு மாங்கசி வாம்வசி யாற்றமா
மதியு மாம்வலி யாம்மழ பாடியுள்
நதியந் தோய்சடை நாதன்நற் பாதமே. உ

முழவி னுன்முது காடுறை பேய்க்கணக்
குழுவி னுன்குல வுங்கையி லேந்திய

மழுவி னானுறை யும்மழ பாடியைத்
தொழுமின் நுந்தய ரானவை தீரவே. ௩

கலையி னன்மறை யான்கதி யாகிய
மலையி னன்மரு வார்புர மூன்றெய்த
சிலையி னன்சேர் திருமழ பாடியைத்
தலையி னால்வணங் கத்தவ மாகுமே. ௪

நல்வி னைப்பயன் நான்மறை யின்பொருள்
கல்வி யாயக ருத்தன் உருத்திரன்
செல்வன் மேய திருமழ பாடியைப்
புல்கி யேத்தும் அதுபுக ழாகுமே. ௫

நீடி னாருல குக்குயி ராய்நின்றான்
ஆடி னானெரி கானிடை மாநடம்
பாடி னாரிசை மாமழ பாடியை
நாடி னார்க்கில்லை நல்குர வானவே. ௬

மின்னி னாரிடை யாளொரு பாகமாய்
மன்னி னானுறை மாமழ பாடியைப்
பன்னி னாரிசை யால்வழி பாடுசெய்
தன்னி னார்வினை யாயின வோயுமே. ௭

தென்னி லங்கையர் மன்னன் செழுவரை
தன்னி லங்கஅ டர்த்தருள் செய்தவன்
மன்னி லங்கிய மாமழ பாடியை
உன்னி லங்க வுறுபிணி யில்லையே. ௮

திருவின் நாயக னுஞ்செழுந் தாமரை
மருவி னானுந் தொழத்தழல் மாண்பமர்
உருவி னானுறை யும்மழ பாடியைப்
பரவி னார்வினைப் பற்றறுப் பார்களே. ௯

நலியும் நன்றறி யாச்சமண் சாக்கியர்
வலிய சொல்லினும் மாமழ பாடியுள்
ஒலிசெய் வார்கழ லான்திறம் உன்கவே
மெலியும் நம்முடன் மேல்வினை யானவே. ௧௦

மந்தம் உந்து பொழில்மழ பாடியுள்
எந்தை சந்தம் இனிதுகந் தேத்துவான்
கந்த மார்கடற் காழியுள் ஞானசம்
பந்தன் மாலைவல் லார்க்கில்லை பாவமே. கக

திருச்சிற்றம்பலம்

பொது - பண் - கௌசிகம்

நமச்சிவாயத் திருப்பதிகம்

திருச்சிற்றம்பலம்

காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொரு ளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே. க

நம்பு வாரவர் நாவி னவிற்றினால்
வம்பு நாண்மலர் வார்மது வொப்பது
செம்பொ னார்தில கம்முல குக்கெலாம்
நம்பன் நாமம் நமச்சி வாயவே. உ

நெக்கு ளார்வ மிகப்பெரு கிந்நினைந்
தக்கு மாலைகொ டங்கையில் எண்ணுவார்
தக்க வானவ ராத்தகு விப்பது
நக்கன் நாமம் நமச்சி வாயவே. ங

இயமன் தூதரும் அஞ்சுவர் இன்சொலால்
நயம்வந் தோதவல் லார்தமை நண்ணினால்
நியமந் தான்நினை வார்க்கினி யான்நெற்றி
நயனன் நாமம் நமச்சி வாயவே. ச

கொல்வா ரேனுங் குணம்பல நன்மைகள்
இல்லா ரேனும் இயம்புவ ராயிடின்
எல்லாத் தீங்கையும் நீங்குவ ரென்பரால்
நல்லார் நாமம் நமச்சி வாயவே. ரு

மந்த ரம்அன்ன பாவங்கள் மேவிய
பந்த னையவர் தாமும் பகர்வரேல்
சிந்தும் வல்வினை செல்வமும் மல்குமால்
நந்தி நாமம் நமச்சி வாயவே. சு

நரக மேழ்புக நாடின ராயினும்
உரைசெய் வாயினர் ஆயின் உருத்திரர்
விரவி யேபுகு வித்திடு மென்பரால்
வரதன் நாமம் நமச்சி வாயவே. எ

இலங்கை மன்னன் எடுத்த அடுக்கல்மேல்
தலங்கொள் கால்விரல் சங்கரன் ஊன்றலும்
மலங்கி வாய்மொழி செய்தவன் உய்வகை
நலங்கொள் நாமம் நமச்சி வாயவே. அ

போதன் போதன கண்ணனும் அண்ணல்தன்
பாதந் தான்முடி நேடிய பண்பராய்
யாதுங் காண்பரி தாகி அலந்தவர்
ஓதும் நாமம் நமச்சி வாயவே. கூ

கஞ்சி மண்டையர் கையிலுண் கையர்கள்
வெஞ்சொல் மிண்டர் விரவில ரென்பரால்
விஞ்சை யண்டர்கள் வேண்ட அமுதுசெய்
நஞ்சுண் கண்டன் நமச்சி வாயவே. கO

நந்தி நாமம் நமச்சிவா யவெனும்
சந்தை யால்தமிழ் ஞானசம் பந்தன்சொல்
சிந்தை யால்மகிழ்ந் தேத்தவல் லாரெலாம்
பந்த பாசம் அறுக்கவல் லார்களே. கக

திருச்சிற்றம்பலம்

திருத்தண்டலைநீணெறி - பண் - கௌசிகம்

திருச்சிற்றம்பலம்

விரும்புந் திங்களுங் கங்கையும் விம்மவே
சுரும்புந் தும்பியுஞ் சூழ்சடை யார்க்கிடம்
கரும்புஞ் செந்நெலுங் காய்கமு கின்வளம்
நெருங்குந் தண்டலை நீணெறி காண்மினே. க

இகழுங் காலன் இதயத்தும் என்னுளும்
திகழுஞ் சேவடி யான்திருந் தும்மிடம்
புகழும் பூமக ளும்புணர் பூசுரர்
நிகழுந் தண்டலை நீணெறி காண்மினே. உ

பரந்த நீலப் படரெரி வல்விடம்
கரந்த கண்டத்தி னன்கரு தும்மிடம்
சுரந்த மேதி துறைபடிந் தோடையில்
நிரந்த தண்டலை நீணெறி காண்மினே. ங

தவந்த என்புந் தவளப் பொடியுமே
உவந்த மேனியி னன்உறை யும்மிடம்
சிவந்த பொன்னுஞ் செழுந்தா ளங்களும்
நிவந்த தண்டலை நீணெறி காண்மினே. ச, ரு, சு, எ

இலங்கை வேந்தன் இருபது தோளிற
விலங்க வில்லடர்த் தான்விரும் பும்மிடம்
சலங்கொள் இப்பி தாளமுஞ் சங்கமும்
நிலங்கொள் தண்டலை நீணெறி காண்மினே. அ

கருவர் உந்தியின் நான்முகன் கண்ணனென்
றிருவ ருந்தெரி யாவொரு வன்னிடம்
செருவ ருந்திய செம்பியன் கோச்செங்கண்
திருபர் தண்டலை நீணெறி காண்மினே. கூ

கலவு சீவரத் தார்கையில் உண்பவர்
குலவ மாட்டாக் குழகன் உறைவிடம்
சுலவு மாமதி லுஞ்சுதை மாடமும்
நிலவு தண்டலை நீணெறி காண்மினே. கo

நீற்றர் தண்டலை நீணெறி நாதனைத்
தோற்று மேன்மையர் தோணி புரத்திறை
சாற்று ஞானசம் பந்தன் தமிழ்வல்லார்
மாற்றில் செல்வர் மறப்பர் பிறப்பையே. கக

திருச்சிற்றம்பலம்

திருஆலவாய் - பண் - கௌசிகம்

திருச்சிற்றம்பலம்

செய்ய னேதிரு ஆலவாய் மேவிய
ஐய னேஅஞ்ச லென்றருள் செய்யெனைப்
பொய்ய ராம்அம ணர்கொளு வுஞ்சுடர்
பைய வேசென்று பாண்டியற் காகவே. க

சித்த னேதிரு ஆலவாய் மேவிய
அத்த னேயஞ்ச லென்றருள் செய்யெனை
எத்த ராம்அம ணர்கொளு வுஞ்சுடர்
பத்திமன் தென்னன் பாண்டியற் காகவே. உ

தக்கன் வேள்வி தகர்த்தருள் ஆலவாய்ச்
சொக்க னேயஞ்ச லென்றருள் செய்யெனை
எக்க ராம்அம ணர்கொளு வுஞ்சுடர்
பக்க மேசென்று பாண்டியற் காகவே. ௩

சிட்ட னேதிரு ஆலவாய் மேவிய
அட்ட மூர்த்திய னேயஞ்ச லென்றருள்
துட்ட ராம்அம ணர்கொளு வுஞ்சுடர்
பட்டி மன்தென்னன் பாண்டியற் காகவே. ச

நண்ண லார்புரம் மூன்றெரி ஆலவாய்
அண்ண லேயஞ்ச லென்றருள் செய்யெனை
எண்ணி லாஅம ணர்கொளு வுஞ்சுடர்
பண்ணி யல்தமிழ்ப் பாண்டியற் காகவே. ரு

தஞ்ச மென்றுன் சரண்புகுந் தேனையும்
அஞ்ச லென்றருள் ஆலவா யண்ணலே

வஞ்சஞ் செய்தம ணர்கொளு வுஞ்சுடர்
பஞ்ச வன்தென்னன் பாண்டியற் காகவே. சு

செங்கண் வெள்விடை யாய்திரு ஆலவாய்
அங்க ணாஅஞ்ச லென்றருள் செய்யெனக்
கங்கு லார்அமண் கைய ரிடுங்கனல்
பங்கமில் தென்னன் பாண்டியற் காகவே. எ

தூர்த்தன் வீரந் தொலைத்தருள் ஆலவாய்
ஆத்த னேயஞ்ச லென்றருள் செய்யெனை
ஏத்தி லாஅம ணர்கொளு வுஞ்சுடர்
பார்த்தி வன்தென்னன் பாண்டியற் காகவே. அ

தாவி னான்அயன் தானறி யாவகை
மேவி னாய்திரு ஆலவா யாயருள்
தூவி லாஅம ணர்கொளு வுஞ்சுடர்
பாவி னான்தென்னன் பாண்டியற் காகவே. கூ

எண்டி சைக்கெழில் ஆலவாய் மேவிய
அண்ட னேயஞ்ச லென்றருள் செய்யெனக்
குண்ட ராம்அம ணர்கொளு வுஞ்சுடர்
பண்டிமன் தென்னன் பாண்டியற் காகவே. கO

அப்பன் ஆலவா யாதி யருளினால்
வெப்பந் தென்னவன் மேலுற மேதினிக்
கொப்ப ஞானசம் பந்தன் உரைபத்தும்
செப்ப வல்லவர் தீதிலாச் செல்வரே. கக

திருச்சிற்றம்பலம்

திருஆலவாய் - திருவிராகம். பண் - கௌசிகம்

திருச்சிற்றம்பலம்

வீடலால வாயிலாய் விழுமியார்கள் நின்கழல்
பாடலால வாயிலாய் பரவநின்ற பண்பனே
காடலால வாயிலாய் கபாலிநீள்க டிம்மதில்
கூடலால வாயிலாய் குலாயதென்ன கொள்கையே. க

பட்டிசைந்த அல்குலாள் பாவையாளோர் பாகமா
ஒட்டிசைந்த தன்றியும் உச்சியாளொ ருத்தியாக்
கொட்டிசைந்த ஆடலாய் கூடல்ஆல வாயிலாய்
எட்டிசைந்த மூர்த்தியா யிருந்தவாறி தென்னையே. உ

குற்றம்நீ குணங்கள்நீ கூடல்ஆல வாயிலாய்
சுற்றம்நீ பிரானும்நீ தொடர்ந்திலங்கு சோதிநீ
கற்றநூற் கருத்தும்நீ யருத்தமின்ப மென்றிவை
முற்றும்நீ புகழ்ந்துமுன் உரைப்பதென்மு கம்மனே. ௩

முதிரும்நீர்ச் சடைமுடி முதல்வன்நீ முழங்கழல்
அதிரவீசி யாடுவாய் அழகன்நீ புயங்கன்நீ
மதுரன்நீ மணாளன்நீ மதுரையால வாயிலாய்
சதுரன்நீ சதுர்முகன் கபாலம்வந்து சம்புவே. ௪

கோலமாய நீள்மதிற் கூடல்ஆல வாயிலாய்
பாலனாய தொண்டுசெய்து பண்டுமின்றும் உன்னையே
நீலமாய கண்டனே நின்னையன்றி நித்தலும்
சீலமாய சிந்தையில் தேர்வதில்லை தேவரே. ரு

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய் பிஞ்ஞகா பிறப்பிலீ
கொன்றையம் முடியினாய் கூடல்ஆல வாயிலாய்
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. ௬

ஆதியந்த மாயினாய் ஆலவாயில் அண்ணலே
சோதியந்த மாயினாய் சோதியுள்ளொர் சோதியாய்
கேதம்வந்த வாய்மையால் கிளர்தருக்கி னார்க்கலால்
ஓதிவந்த வாய்மையால் உணர்ந்துரைக்க லாகுமே. எ

கறையிலங்கு கண்டனே கருத்திலாக் கருங்கடல்
துறையிலங்கை மன்னனைத் தோளடா வூன்றினாய்
மறையிலங்கு பாடலாய் மதுரையால வாயிலாய்
நிறையிலங்கு நெஞ்சினால் நினைப்பதே நியமமே. அ

நாவணவ் விடையினாய் தலைமையாக நாள்தொறும்
கோவணவ் வுடையினாய் கூடல்ஆல வாயிலாய்

தீவணம் மலர்மிசைத் திசைமுகனும் மாலும்நின்
தூவணம் அளக்கிலார் துளக்கமெய்து வார்களே. சு.

தேற்றமில் வினைத்தொழில் தேரருஞ் சமணரும்
போற்றிசைத்து நின்கழற் புகழ்ந்துபுண் ணியங்கொளார்
கூற்றுதைத்த தாளினாய் கூடல்ஆல வாயிலாய்
நாற்றிசைக்கும் மூர்த்தியாகி நின்றதென்ன நன்மையே. கO

போயநீர் வளங்கொளும் பொருபுனற் புகலியான்
பாயகேள்வி ஞானசம் பந்தன்நல்ல பண்பினால்
ஆயசொல்லின் மாலைகொண் டாலவாயில் அண்ணலைத்
தீயதீர எண்ணுவார்கள் சிந்தையாவர் தேவரே. கக

திருச்சிற்றம்பலம்

திருஆனைக்கா - திருவிராகம். பண் - கௌசிகம்

திருச்சிற்றம்பலம்

வானைக்காவில் வெண்மதி மல்குபுல்கு வார்சடைத்
தேனைக்காவில் இன்மொழித் தேவிபாக மாயினான்
ஆனைக்காவில் அண்ணலை அபயமாக வாழ்பவர்
ஏனைக்காவல் வேண்டுவார்க்கேதும் ஏதம் இல்லையே. க

சேறுபட்ட தண்வயல் சென்றுசென்று சேணுலா
வாறுபட்ட நுண்டுறை யானைக்காவில் அண்ணலார்
நீறுபட்ட மேனியார் நிகரில்பாதம் ஏத்துவார்
வேறுபட்ட சிந்தையார் விண்ணிலெண்ண வல்லரே. உ

தாரமாய மாதராள் தானோர்பாக மாயினான்
ஈரமாய புன்சடை யேற்றதிங்கள் சூடினான்
ஆரமாய மார்புடை யானைக்காவில் அண்ணலை
வாரமாய் வணங்குவார் வல்வினைகள் மாயுமே. ந

விண்ணினண்ணு புல்கிய வீரமாய மால்விடைச்
சுண்ணவெண்ணீ றாடினான் சூலமேந்து கையினான்
அண்ணல்கண்ணோர் மூன்றினான் ஆனைக்காவு கைதொழ
எண்ணும்வண்ணம் வல்லவர்க் கேதமொன்றும் இல்லையே. ச

வெய்யபாவங் கைவிட வேண்டுவீர்கள் ஆண்டசீர்
மைகொள்கண்டன் வெய்யதீ மாலையாடு காதலான்
கொய்யவிண்ட நாண்மலர்க் கொன்றைதுன்று சென்னியெம்
ஐயன்மேய பொய்கைசூழ் ஆனைக்காவு சேர்மினே. ரு

நாணுமோர்வு சார்வுமுன் நகையுமுட்கு நன்மையும்
பேணுறாத செல்வமும் பேசநின்ற பெற்றியான்
ஆணும்பெண்ணு மாகிய ஆனைக்காவில் அண்ணலார்
காணுங்கண்ணும் மூன்றுடைக் கறைகொள்மிடறன் அல்லனே. சு

கூருமாலை நண்பகல் கூடிவல்ல தொண்டர்கள்
பேருமூருஞ் செல்வமும் பேசநின்ற பெற்றியான்
பாரும்விண்ணுங் கைதொழப் பாயுங்கங்கை செஞ்சடை
ஆரநீரோ டேந்தினான் ஆனைக்காவு சேர்மினே. எ

பொன்னமல்கு தாமரைப் போதுதாது வண்டினம்
அன்னமல்கு தண்டுறை ஆனைக்காவில் அண்ணலைப்
பன்னவல்ல நான்மறை பாடவல்ல தன்மையோர்
முன்னவல்லர் மொய்கழல் துன்னவல்லர் விண்ணையே. அ

ஊனொடுண்டல் நன்றெனா வூனொடுண்டல் தீதென
ஆனதொண்டர் அன்பினால் பேசநின்ற தன்மையான்
வானொடொன்று சூடினான் வாய்மையாக மன்னிநின்
றானொடஞ்சும் ஆடினான் ஆனைக்காவு சேர்மினே. கூ

கையிலுண்ணுங் கையருங் கடுக்கடின் கழுக்களும்
மெய்யைப்போர்க்கும் பொய்யரும் வேதநெறியை யறிகிலார்
தையல்பாக மாயினான் தழலதுருவத் தானெங்கள்
ஐயன்மேய பொய்கைசூழ் ஆனைக்காவு சேர்மினே. கО

ஊழியூழி வையகத் துயிர்கள்தோற்றும் வானொடும்
ஆழியானுங் காண்கிலா ஆனைக்காவில் அண்ணலைக்
காழிஞான சம்பந்தன் கருதிச்சொன்ன பத்திவை
வாழியாகக் கற்பவர் வல்வினைகள் மாயுமே. கக

திருச்சிற்றம்பலம்

பொது - பண் - கௌசிகம்

திருப்பாசுரம்

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல் லாம்அரன் நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே. க

அரிய காட்சிய ராய்த்தம தங்கைசேர்
எரியர் ஏறுகந் தேறுவர் கண்டமும்
கரியர் காடுறை வாழ்க்கைய ராயினும்
பெரிய ராரறி வாரவர் பெற்றியே. உ

வெந்த சாம்பல் விரையெனப் பூசியே
தந்தை யாரொடு தாயிலர் தம்மையே
சிந்தி யாஎழு வார்வினை தீர்ப்பரால்
எந்தை யாரவர் எவ்வகை யார்கொலோ. ந

ஆட்பா லவர்க்கருளும் வண்ணமும் ஆதி மாண்பும்
கேட்பான் புகில்அள வில்லை கிளக்க வேண்டா
கோட்பா லனவும் வினையுங் குறுகாமை யெந்தை
தாட்பால் வணங்கித் தலைநின் றிவைகேட்க தக்கார். ச

ஏதுக்க ளாலும் எடுத்த மொழியாலும் மிக்குச்
சோதிக்க வேண்டா சுடர்விட்டுளன் எங்கள் சோதி
மாதுக்கம் நீங்க லுறுவீர் மனம்பற்றி வாழ்மின்
சாதுக்கள் மிக்கீர் இறையே வந்து சார்மின்களே. ரு

ஆடும் எனவும் அருங்கூற்றம் உதைத்து வேதம்
பாடும் எனவும் புகழல்லது பாவம் நீங்கக்
கேடும் பிறப்பும் அறுக்கும் மெனக்கேட் டிராகில்
நாடுந் திறத்தார்க் கருளல்லது நாட்ட லாமே. சா

கடிசேர்ந்த போது மலரான கைக்கொண்டு நல்ல
படிசேர்ந்த பால்கொண்டங் காட்டிடத் தாதை பண்டு

முடிசேர்ந்த காலையற வெட்டிட முக்கண் மூர்த்தி
அடிசேர்ந்த வண்ணம் அறிவார் சொலக் கேட்டுமன்றே. எ

வேத முதல்வன் முதலாக விளங்கி வையம்
ஏதப் படாமை யுலகத்தவர் ஏத்தல் செய்யப்
பூத முதல்வன் முதலே முதலாப் பொலிந்த
சூதன் ஒலிமாலை யென்றே கலிக்கோவை சொல்லே. அ

பாராழி வட்டம் பகையால் நலிந்தாட்ட ஆடிப்
பேராழி யானதிடர் கண்டருள் செய்தல்பேணி
நீராழி விட்டேறி நெஞ்சிடங் கொண்டவர்க்குப்
போராழி யீந்த புகழும் புகழுற்ற தன்றே. கூ

மாலா யவனும் மறைவல்ல நான்முகனும்
பாலாய தேவர்பக ரில்லமு தூட்டல் பேணிக்
காலாய முந்நீர் கடைந்தார்க் கரிதா யெழுந்த
ஆலாலம் உண்டங்கம ரர்க்கருள் செய்த தாமே. க0

அற்றன்றி யந்தண் மதுரைத் தொகை யாக்கினானும்
தெற்றென்று தெய்வந் தெளியார் கரைக்கோலை தெண்ணீர்ப்
பற்றின்றிப் பாங்கெதிர் வினூரவும் பண்பு நோக்கில்
பெற்றொன் றுயர்த்த பெருமான் பெருமானு மன்றே. கக

நல்லார்கள் சேர்புகலி ஞானசம் பந்தன் நல்ல
எல்லார் களும்பரவும் ஈசனை யேத்து பாடல்
பல்லார் களும்மதிக்கப் பாசுரஞ் சொன்ன பத்தும்
வல்லார்கள் வானோ ருலகாளவும் வல்ல ரன்றே. கஉ

திருச்சிற்றம்பலம்

திருவான்மியூர் - பண் - கௌசிகம்

திருச்சிற்றம்பலம்

விரையார் கொன்றையினாய் விடமுண்ட மிடற்றினனே
உரையார் பல்புகழாய் உமைநங்கையொர் பங்குடையாய்
திரையார் தெண்கடல்சூழ் திருவான்மி யூருறையும்
அரையா வுன்னையல்லால் அடையாதென தாதரவே. க

இடியார் ஏறுடையாய் இமையோர்தம் மணிமுடியாய்
கொடியார் மாமதியோ டரவம்மலர்க் கொன்றையினாய்
செடியார் மாதவிசூழ் திருவான்மி யூருறையும்
அடிகேள் உன்னையல்லால் அடையாதென தாதரவே. உ

கையார் வெண்மழுவா கனல்போல்திரு மேனியனே
மையார் ஒண்கண்நல்லாள் உமையாள்வளர் மார்பினனே
செய்யார் செங்கயல்பாய் திருவான்மி யூருறையும்
ஐயா வுன்னையல்லால் அடையாதென தாதரவே. ரு

பொன்போ லுஞ்சடைமேற் புனல்தாங்கிய புண்ணியனே
மின்போ லும்புரிநூல் விடையேறிய வேதியனே
தென்பால் வையமெலாந் திகழுந்திரு வான்மிதன்னில்
அன்பா வுன்னையல்லால் அடையாதென தாதரவே. ச

கண்ணா ரும்நுதலாய் கதிர்சூழொளி மேனியின்மேல்
எண்ணார் வெண்பொடிநீ றணிவாயெழில் வார்பொழில்சூழ்
திண்ணார் வண்புரிசைத் திருவான்மி யூருறையும்
அண்ணா வுன்னையல்லால் அடையாதென தாதரவே. ரு

நீதீ நின்னையல்லால் நெறியாதும் நினைந்தறியேன்
ஓதீ நான்மறைகள் மறையோன்தலை யொன்றினையும்
சேதீ சேதமில்லாத் திருவான்மி யூருறையும்
ஆதீ யுன்னையல்லால் அடையாதென தாதரவே. சு

வானார் மாமதிசேர் சடையாய்வரை போலவரும்
கானார் ஆனையின்தோல் உரித்தாய்கறை மாமிடற்றாய்
தேனார் சோலைகள்சூழ் திருவான்மி யூருறையும்
ஆனா யுன்னையல்லால் அடையாதென தாதரவே. எ, அ

பொறிவாய் நாகணையா னொடுபூமிசை மேயவனும்
நெறியார் நீள்கழல்மேல் முடிகாண்பரி தாயவனே
செறிவார் மாமதில்சூழ் திருவான்மி யூருறையும்
அறிவே யுன்னையல்லால் அடையாதென தாதரவே. கூ

குண்டா டுஞ்சமணர் கொடுஞ்சாக்கிய ரென்றிவர்கள்
கண்டார் காரணங்கள் கருதாதவர் பேசநின்றாய்

திண்டேர் வீதியதார் திருவான்மி யூருறையும்
அண்டா வுன்னையல்லால் அடையாதென தாதரவே. ௧0

கன்று ருங்கமுகின் வயல்சூழ்தரு காழிதனில்
நன்று னபுகழால் மிகுஞானசம் பந்தனுரை
சென்றூர் தம்மிடர்தீர் திருவான்மி யூரதன்மேல்
குன்று தேத்தவல்லார் கொடுவல்வினை போயறுமே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருப்பிரமபுரம் - பண் - பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

இறையவன் ஈசன்எந்தை யிமை யோர்தொழு தேத்தநின்ற
கறையணி கண்டன்வெண்தோ டணி காதினன் காலத்தன்று
மறைமொழி வாய்மையினான் மலை யாளொடு மன்னுசென்னிப்
பிறையணி செஞ்சடையான் பிர மாபுரம் பேணுமினே. ௧

சடையினன் சாமவேதன் சரி கோவண வன்மழுவாட்
படையினன் பாய்புலித்தோ லுடை யான்மறை பல்கலைநூல்
உடையவன் ஊனமில்லி யுட னாயுமை நங்கையென்னும்
பெடையொடும் பேணுமிடம் பிர மாபுரம் பேணுமினே. ௨

மாணியை நாடுகாலன் உயிர் மாய்தரச் செற்றுக்காளி
காணிய ஆடல்கொண்டான் கலந் தூர்வழி சென்றுபிச்சை
ஊணியல் பாகக்கொண்டங் குட னேயுமை நங்கையொடும்
பேணிய கோயில்மன்னும் பிர மாபுரம் பேணுமினே. ௩

பாரிடம் விண்ணுமெங்கும் பயில்நஞ்சுப ரந்துமிண்டப்
பேரிடர்த் தேவர்கணம் பெருமானிது காஎனலும்
ஓரிடத் தேகரந்தங் குமை நங்கையொ டும்முடனே
பேரிட மாகக்கொண்ட பிர மாபுரம் பேணுமினே. ௪

நச்சர வச்சடைமேல் நளிர் திங்களு மொன்றவைத்தங்
கச்சமெ ழவிடைமேல் அழகார்மழு வேந்திநல்ல
இச்சைப கர்ந்துமிக இடு மின்பலி யென்றுநாளும்
பிச்சைகொள் அண்ணல்நண்ணும் பிர மாபுரம் பேணுமினே. ௫

பெற்றவன் முப்புரங்கள் பிழை யாவண்ணம் வாளியினாற்
செற்றவன் செஞ்சடையில் திகழ் கங்கை தனைத்தரித்திட்
டொற்றை விடையினனாய் உமை நங்கையொ டும்முடனே
பெற்றிமை யாலிருந்தான் பிர மாபுரம் பேணுமினே. சு

வேதம்ம லிந்தவொலி விழ வின்னொலி வீணையொலி
கீதம்ம லிந்துடனே கிள ரத்திகழ் பௌவமறை
ஓதம்ம லிந்துயர்வான் முக டேறவொண் மால்வரையான்
பேதையொ டும்மிருந்தான் பிர மாபுரம் பேணுமினே. எ

இமையவர் அஞ்சியோட எதிர் வாரவர் தம்மையின்றி
அமைதரு வல்லரக்கன் அடர்த் தும்மலை யன்றெடுப்பக்
குமையது செய்துபாடக் கொற்ற வாளொடு நாள்கொடுத்திட்
டுமையொ டிருந்தபிரான் பிர மாபுரம் உன்னுமினே. அ

ஞாலம் அளித்தவனும் அரி யும்அடி யோடுமுடி
காலம் பலசெலவுங் கண்டி லாமையி னாற்கதறி
ஓல மிடஅருளி உமை நங்கையொ டும்முடனாய்
ஏல இருந்தபிரான் பிர மாபுரம் ஏத்துமினே. கூ

துவருறும் ஆடையினர் தொக்க பீலியர் நக்கரையர்
அவரவர் தன்மைகள்கண் டணு கேன்மின்ன ருள்பெறுவீர்
கவருறு சிந்தையொன்றிக் கழி காலமெல் லாம்படைத்த
இவரவர் என்றிறைஞ்சிப் பிர மாபுரம் ஏத்துமினே. ௧௦

உரைதரும் நான்மறையோர் புகழ்ந் தேத்தவொண் மாதினொடும்
வரையென வீற்றிருந்தான் மலி கின்றபிரம புரத்
தரசினை யேத்தவல்ல அணி சம்பந்தன் பத்தும்வல்லார்
விரைதரு விண்ணுலகம் எதிர் கொள்ள விரும்புவரே. ௧௧

திருவோற்றியூர் - பண் - பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

விடையவன் விண்ணுமண்ணுந் தொழநின்றவன் வெண்மழுவாட்
படையவன் பாய்புலித்தோல் உடை கோவணம் பல்காந்தைச்
சடையவன் சாமவேதன் சசி தங்கிய சங்கவெண்தோ
டுடையவன் ஊனமில்லி யுறை யும்மிடம் ஒற்றியூரே. ௧

பாரிடம் பாணிசெய்யப் பறைக் கட்செறு பல்கணப்பேய்
சீரொடும் பாடலாடல் இல யஞ்சிதை யாதகொள்கைத்
தாரிடும் போர்விடையன் தலை வன்தலை யேகலனா
ஊரிடும் பிச்சைகொள்வான் உறை யும்மிடம் ஒற்றியூரே. ௨

விளிதரு நீரும்மண்ணும் விசும் போடனல் காலுமாகி
அளிதரு பேருளான் அர னாகிய ஆதிமூர்த்தி
களிதரு வண்டுபண்செய் கமழ் கொன்றையி னோடணிந்த
ஒளிதரு வெண்பிறையான் உறை யும்மிடம் ஒற்றியூரே. ௩

அரவமே கச்சதாக அசைத் தானலர் கொன்றையந்தார்
விரவிவெண் ணூல்கிடந்த விரை யார்வரை மார்பன்எந்தை
பரவுவார் பாவமெல்லாம் பறைத் துப்படர் புன்சடைமேல்
உரவுநீ ரேற்றபெம்மான் உறை யும்மிடம் ஒற்றியூரே. ௪

விலகினார் வெய்யபாவம் விதி யாலருள் செய்துநல்ல
பலகினார் மொந்தைதாளந் தகு ணிச்சமும் பாணியாலே
அலகினால் வீசிநீர்கொண் டடி மேல்அல ரிட்டுமுட்டா
தலகினா ரேத்தநின்றான் உறை யும்மிடம் ஒற்றியூரே. ௫

கமையொடு நின்றசீரான் கழ லுஞ்சிலம் பும்ஒலிப்பச்
சுமையொடு மேலும்வைத்தான் விரி கொன்றையுஞ் சோமனையும்
அமையொடு நீண்டதிண்தோள் அழ காயபொற் றோடிலங்க
உமையொடுக் கூடிநின்றான் உறை யும்மிடம் ஒற்றியூரே. ௬

நன்றியால் வாழ்வதுள்ளம் உல குக்கொரு நன்மையாலே
கன்றினார் மும்மதிலுங் கரு மால்வரை யேசிலையாப்
பொன்றினார் வார்சுடலைப் பொடி நீறணிந் தாரழல்அம்
பொன்றினால் எய்தபெம்மான் உறை யும்மிடம் ஒற்றியூரே. ௭

பெற்றியாற் பித்தனெப்பான் பெரு மான்கரு மானுரிதோல்
சுற்றியான் சுத்திசூலஞ் சுடர்க் கண்ணுதல் மேல்விளங்கத்
தெற்றியாற் செற்றரக்கன் உட லைச்செழு மால்வரைக்கீழ்
ஒற்றியான் முற்றுமாள்வான் உறை யும்மிடம் ஒற்றியூரே. அ

திருவினர் போதினானுந் திரு மாலுமோர் தெய்வமுன்னித்
தெரிவினாற் காணமாட்டார் திகழ் சேவடி சிந்தைசெய்து
பரவினர் பாவமெல்லாம் பறை யப்படர் பேரொளியோ
டொருவனாய் நின்றபெம்மான் உறை யும்மிடம் ஒற்றியூரே. கூ

தோகையம் பீலிகொள்வார் தவர்க் கூறைகள் போர்த்துழல்வார்
ஆகம செல்வனாரை அலர் தூற்றுதல் காரணமாக்
கூகையம் மாக்கள்சொல்லைக் குறிக் கொள்ளன்மின் ஏழுலகும்
ஓகைதந் தாளவல்லான் உறை யும்மிடம் ஒற்றியூரே. கo

ஒண்பிறை மல்குசென்னி யிறை வன்னுறை யொற்றியூரைச்
சண்பையர் தந்தலைவன் தமிழ் ஞானசம் பந்தன்சொன்ன
பண்புனை பாடல்பத்தும் பா விப்பணிந் தேத்தவல்லார்
விண்புனை மேலுலகம் விருப் பெய்துவர் வீடெளிதே. கக

திருச்சிற்றம்பலம்

திருச்சாத்தமங்கை - பண் - பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

திருமலர்க் கொன்றைமாலை திளைக் கும்மதி சென்னிவைத்தீர்
இருமலர்க் கண்ணிதன்னோ டுடனாவது மேற்பதொன்றே
பெருமலர்ச் சோலைமேகம் உரிஞ் சும்பெருஞ் சாத்தமங்கை
அருமல ராதிமூர்த்தீ அய வந்திய மர்ந்தவனே. க

பொடிதனைப் பூசுமார்பிற் புரி நூலொரு பாற்பொருந்தக்
கொடியன சாயலாளோ டுட னாவதுங் கூடுவதே
கடிமணம் மல்கிநாளுங் கம ழும்பொழிற் சாத்தமங்கை
அடிகள்நக் கன்பரவ அய வந்திய மர்ந்தவனே. உ

நூல்நலந் தங்குமார்பில் நுகர் நீறணிந் தேறதேறி
மானன நோக்கிதன்னோ டுட னாவது மாண்பதுவே

தானலங் கொண்டுமேகந் தவ ழும்பொழிற் சாத்தமங்கை
ஆனலந் தோய்ந்தஎம்மான் அய வந்திய மர்ந்தவனே. ரு

மற்றவின் மால்வரையா மதி லெய்துவெண் ணீறுபூசிப்
புற்றா வல்குலாளோ டுட னுவதும் பொற்பதுவே
கற்றவர் சாத்தமங்கை நகர் கைதொழச் செய்தபாவம்
அற்றவர் நாளுமேத்த அய வந்திய மர்ந்தவனே. சு

வெந்தவெண் ணீறுபூசி விடை யேறிய வேதகீதன்
பந்தண வும்விரலாள் உட னுவதும் பாங்கதுவே
சந்தமா றங்கம்வேதந் தரித் தார்தொழுஞ் சாத்தமங்கை
அந்தமாய் ஆதியாகி அய வந்திய மர்ந்தவனே. ரு

வேதமாய் வேள்வியாகி விளங் கும்பொருள் வீடதாகிச்
சோதியாய் மங்கைபாகந் நிலை தான்சொல்ல லாவதொன்றே
சாதியால் மிக்கசீரால் தகு வார்தொழுஞ் சாத்தமங்கை
ஆதியாய் நின்றபெம்மான் அய வந்திய மர்ந்தவனே. சு

இமயமெல் லாம்இரிய மதி லெய்துவெண் ணீறுபூசி
உமையையோர் பாகம்வைத்த நிலை தானுன்ன லாவதொன்றே
சமயமா றங்கம்வேதந் தரித் தார்தொழுஞ் சாத்தமங்கை
அமையவே றோங்குசீரான் அய வந்திய மர்ந்தவனே. எ

பண்ணுலாம் பாடல்வீணை பயில் வானோர்ப ரமயோகி
விண்ணுலா மால்வரையான் மகள் பாகமும் வேண்டினையே
தண்ணிலா வெண்மதியந் தவ ழும்பொழிற் சாத்தமங்கை
அண்ணலாய் நின்றஎம்மான் அய வந்திய மர்ந்தவனே. அ

பேரெழில் தோளரக்கன் வலி செற்றதும் பெண்ணோர்பாகம்
ஈரெழிற் கோலமாகி யுட னாவதும் ஏற்பதொன்றே
காரெழில் வண்ணனோடு கன கம்மனை யானுங்காணா
ஆரழல் வண்ணமங்கை அய வந்திய மர்ந்தவனே. கூ

கங்கையோர் வார்சடைமேல் அடை யப்புடை யேகமழும்
மங்கையோ டொன்றிநின்றம் மதி தான்சொல்ல லாவதொன்றே
சங்கையில் லாமறையோர் அவர் தாந்தொழு சாத்தமங்கை
அங்கையிற் சென்னிவைத்தாய் அய வந்திய மர்ந்தவனே. கo

மறையினோர் மல்குகாழித் தமிழ் ஞானசம் பந்தன்மன்னும்
நிறையினோர் நீலநக்கன் நெடு மாநக ரென்று தொண்டர்
அறையுமூர் சாத்தமங்கை அய வந்திமே லாய்ந்தபத்தும்
முறைமையா லேத்தவல்லார் இமை யோரிலும் முந்துவரே. கக

திருச்சிற்றம்பலம்

திருக்குடமூக்கு - பண் - பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

அரவிரி கோடனீட லணி காவிரி யாற்றயலே
மரவிரி போதுமௌவல் மண மல்லிகை கள்ளவிழும்
குரவிரி சோலைசூழ்ந்த குழகன்குட மூக்கிடமா
இரவிரி திங்கள்சூடி யிருந் தானவன் எம்மிறையே. க

ஓத்தா வங்களோடும் ஒலி காவிரி யார்த்தயலே
பூத்தா வங்களோடும் புகை கொண்டடி போற்றிநல்ல
கூத்தா வங்களோவாக் குழ கன்குட மூக்கிடமா
ஏத்தா வங்கள்செய்ய இருந் தானவன் எம்மிறையே. உ

மயில்பெடை புல்கியால மணல் மேல்மட அன்னம்மல்கும்
பயில்பெடை வண்டுபண்செய் பழங் காவிரிப்பைம் பொழில்வாய்க்
குயில்பெடை யோடுபாட லுடை யான்குட மூக்கிடமா
இயலொடு வானமேத்த இருந் தானவன் எம்மிறையே. ங

மிக்கரை தாழவேங்கை யுரி யார்த்துமை யாள்வெருவ
அக்கர வாமையேன மருப் போடவை பூண்டழகார்
கொக்கரை யோடுபாட லுடை யான்குட மூக்கிடமா
எக்கரை யாருமேத்த இருந் தானவன் எம்மிறையே. ச

வடிவுடை வாள்தடங்கண் உமை யஞ்சவோர் வாரணத்தைப்
பொடியணி மேனிமூட வுரி கொண்டவன் புன்சடையான்
கொடிநெடு மாடமோங்குங் குழ கன்குட மூக்கிடமா
இடிபடு வானமேத்த இருந் தானவன் எம்மிறையே. ரு

கழைவளர் கவ்வைமுத்தங் கமழ் காவிரி யாற்றயலே
தழைவளர் மாவின்நல்ல பல வின்கனி கள்தயங்கும்

குழைவளர் சோலைசூழ்ந்த குழ கன்குட மூக்கிடமா
இழைவளர் மங்கையொடும் இருந் தானவன் எம்மிறையே. ௬

மலைமலி மங்கைபாகம் மகிழ்ந் தானெழில் வையமுய்யச்
சிலைமலி வெங்கணையாற் சிதைத் தான்புர மூன்றினையும்
குலைமலி தண்பலவின் பழம் வீழ்குட மூக்கிடமா
இலைமலி சூலமேந்தி யிருந் தானவன் எம்மிறையே. ௭

நெடுமுடி பத்துடைய நிகழ் வாளரக் கன்னுடலைப்
படுமிடர் கண்டயரப் பரு மால்வரைக் கீழடர்த்தான்
கொடுமடல் தங்குதெங்கு பழம் வீழ்குட மூக்கிடமா
இடுமணல் எக்கர்சூழ இருந் தானவன் எம்மிறையே. ௮

ஆரெரி ஆழியானும் மல ரானும் அளப்பரிய
நீரிரி புன்சடைமேல் நிரம் பாமதி சூடிநல்ல
கூரெரி யாகிநீண்ட குழ கன்குட மூக்கிடமா
ஈரிரு கோவணத்தோ டிருந் தானவன் எம்மிறையே. ௯

மூடிய சீவரத்தார் முது மட்டையர் மோட்டமணர்
நாடிய தேவரெல்லாம் நயந் தேத்திய நன்னலத்தான்
கூடிய குன்றமெல்லா முடை யான்குட மூக்கிடமா
ஏடலர் கொன்றைசூடி யிருந் தானவன் எம்மிறையே. ௰

வெண்கொடி மாடமோங்கு விறல் வெங்குரு நன்னகரான்
நண்பொடு நின்றசீரான் தமிழ் ஞானசம் பந்தனல்ல
தண்குட மூக்கமர்ந்தான் அடி சேர்தமிழ் பத்தும்வல்லார்
விண்புடை மேலுலகம் வியப் பெய்துவர் வீடெளிதே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருவக்கரை - பண் - பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

கறையணி மாமிடற்றான் கரி காடரங் காவுடையான்
பிறையணி கொன்றையினான் ஒரு பாகமும் பெண்ணமர்ந்தான்
மறையவன் தன்தலையிற் பலி கொள்பவன் வக்கரையில்
உறைபவன் எங்கள்பிரான் ஒலி யார்கழல் உள்குதுமே. ௧

பாய்ந்தவன் காலனைமுன் பணைத் தோளியோர் பாகமதா
ஏய்ந்தவன் எண்ணிறந்தவ் விமை யோர்கள்தொ ழுதிறைஞ்ச
வாய்ந்தவன் முப்புரங்கள் எரி செய்தவன் வக்கரையில்
தேய்ந்திள வெண்பிறைசேர் சடையானடி செப்புதுமே. உ

சந்திர சேகரனே யரு ளாயென்று தண்விசும்பில்
இந்திர னும்முதலா இமை யோர்கள் தொழுதிறைஞ்ச
அந்தர மூவெயிலும் அன லாய்விழ ஓரம்பினால்
மந்தர மேருவில்லா வளைத் தானிடம் வக்கரையே. ௩

நெய்யணி சூலமொடு நிறை வெண்மழு வும்அரவும்
கையணி கொள்கையினன் கனல் மேவிய ஆடலினன்
மெய்யணி வெண்பொடியான் விரி கோவண ஆடையின்மேல்
மையணி மாமிடற்றான் உறை யும்மிடம் வக்கரையே. ச

ஏனவெண் கொம்பினொடும் இள ஆமையும் பூண்டுகந்து
கூனிள வெண்பிறையுங் குளிர் மத்தமுஞ் சூடிநல்ல
மானன மென்விழியா ளொடும் வக்கரை மேவியவன்
தானவர் முப்புரங்கள் எரி செய்த தலைமகனே. ரு

கார்மலி கொன்றையொடுங் கதிர் மத்தமும் வாளரவும்
நீர்மலி யுஞ்சடைமேல் நிரம் பாமதி சூடிநல்ல
வார்மலி மென்முலையா ளொடும் வக்கரை மேவியவன்
பார்மலி வெண்தலையிற் பலி கொண்டுழல் பான்மையனே. சு

கானண வும்மறிமான் ஒரு கையதோர் கைமழுவாள்
தேனண வுங்குழலாள் உமை சேர்திரு மேனியினன்
வானண வும்பொழில்சூழ் திரு வக்கரை மேவியவன்
ஊனண வுந்தலையிற் பலி கொண்டுழல் உத்தமனே. எ

இலங்கையர் மன்னனாகி யெழில் பெற்றஇ ராவணனைக்
கலங்கவோர் கால்விரலாற் கதிர் பொன்முடி பத்தலற
நலங்கெழு சிந்தையனாய் அருள் பெற்றலு நன்களித்த
வலங்கெழு மூவிலைவேல் உடை யானிடம் வக்கரையே. அ

காமனை யீடழித்திட் டவன் காதலி சென்றிரப்பச்
சேமமே யுன்றனக்கென் றருள் செய்தவன் தேவர்பிரான்

சாமவெண் தாமரைமேல் அய னுந்தா ணியளந்த
வாமன னும்அறியா வகை யானிடம் வக்கரையே. க

மூடிய சீவரத்தர் முதிர் பிண்டிய ரென்றிவர்கள்
தேடிய தேவர்தம்மா லிறைஞ் சப்படுந் தேவர்பிரான்
பாடிய நான்மறையன் பலிக் கென்றுபல் வீதிதொறும்
வாடிய வெண்டலைகொண் டுழல் வானிடம் வக்கரையே. ௰

தண்புன லும்அரவுஞ் சடை மேலுடை யான்பிறைதோய்
வண்பொழில் சூழ்ந்தழகார் இறை வன்னுறை வக்கரையைச்
சண்பையர் தந்தலைவன் தமிழ் ஞானசம் பந்தன்சொன்ன
பண்புனை பாடல்வல்லா ரவர் தம்வினை பற்றறுமே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருவெண்டுறை - பண் - பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

ஆதியன் ஆதிரையன் அனல் ஆடிய ஆரழகன்
பாதியோர் மாதினொடும் பயி லும்பர மாபரமன்
போதிய லும்முடிமேற் புன லோடர வம்புனைந்த
வேதியன் மாதிமையால் விரும் பும்மிடம் வெண்டுறையே. க.

காலனை யோருதையில் உயிர் வீடுசெய் வார்கழலான்
பாலொடு நெய்தயிரும் பயின் றாடிய பண்டரங்கன்
மாலம தியொடுகீர் அர வம்புனை வார்சடையான்
வேலன கண்ணியொடும் விரும் பும்மிடம் வெண்டுறையே. உ

படைநவில் வெண்மழுவான் பல பூதப்ப டையுடையான்
கடைநவில் மும்மதிலும் எரி யூட்டிய கண்ணுதலான்
உடைநவி லும்புலித்தோல் உடை யாடையி னன்கடிய
விடைநவி லுங்கொடியான் விரும் பும்மிடம் வெண்டுறையே. ௩.

பண்ணமர் வீணையினன் பர விப்பணி தொண்டர்கள்தம்
எண்ணமர் சிந்தையினன் இமை யோர்க்கும் அறிவரியான்
பெண்ணமர் கூறுடையான் பிர மன்தலை யிற்பலியான்
விண்ணவர் தம்பெருமான் விரும் பும்மிடம் வெண்டுறையே. ௪.

பாரிய லும்பலியான் படி யார்க்கும் அறிவரியான்
சீரிய லும்மலையாள் ஒரு பாகமுஞ் சேரவைத்தான்
போரிய லும்புரமூன் றுடன் பொன்மலை யேசிலையா
வீரிய நின்றுசெய்தான் விரும் பும்மிடம் வெண்டுறையே. ரு

ஊழிக ளாயுலகா யொரு வர்க்கும் உணர்வரியான்
போழிள வெண்மதியும் புன லும்மணி புன்சடையான்
யாழின் மொழியுமையாள் வெரு வவ்வெழில் வெண்மருப்பின்
வேழம் உரித்தபிரான் விரும் பும்மிடம் வெண்டுறையே. சு

கன்றிய காலனையும் உரு ளக்கனல் வாயலறிப்
பொன்றமுன் னின்றபிரான் பொடி யாடிய மேனியினன்
சென்றிமை யோர்பரவுந் திகழ் சேவடி யான்புலன்கள்
வென்றவன் எம்மிறைவன் விரும் பும்மிடம் வெண்டுறையே. எ

காமிரு பத்தினலுங் கடு வன்சின மாயெடுத்த
சிரமொரு பத்துமுடை அரக் கன்வலி செற்றுகந்தான்
பாவவல் லார்வினைகள் அறுப் பானொரு பாகமும்பெண்
விரவிய வேடத்தினன் விரும் பும்மிடம் வெண்டுறையே. அ

கோல மலரயனுங் குளிர் கொண்டல் நிறத்தவனும்
சீலம் அறிவரிதாய்த் திகழ்ந் தோங்கிய செந்தழலான்
மூல மதாகிநின்றான் முதிர் புன்சடை வெண்பிறையான்
வேலை விடமிடற்றான் விரும் பும்மிடம் வெண்டுறையே. கூ

நக்குரு வாயவருந் துவ ராடைந யந்துடையாம்
பொக்கர்கள் தம்முரைகள் அவை பொய்யென எம்மிறைவன்
திக்கு நிறைபுகழார் தரு தேவர்பி ரான்கனகம்
மிக்குயர் சோதியவன் விரும் பும்மிடம் வெண்டுறையே. கய

திண்ணம ரும்புரிசைத் திரு வெண்டுறை மேயவனைத்
தண்ணம ரும்பொழில்சூழ் தரு சண்பையர் தந்தலைவன்
எண்ணமர் பல்கலையான் இசை ஞானசம் பந்தன்சொன்ன
பண்ணமர் பாடல்வல்லார் வினை யாயின பற்றறுமே. கக

திருச்சிற்றம்பலம்

திருப்பனந்தாள் - பண் - பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

கண்பொலி நெற்றியினான் திகழ் கையிலோர் வெண்மழுவான்
பெண்புணர் கூறுடையான் மிகு பீடுடை மால்விடையான்
விண்பொலி மாமதிசேர் தரு செஞ்சடை வேதியனூர்
தண்பொழில் சூழ்பனந்தாள் திருத் தாடகை யீச்சரமே. ௧

விரித்தவன் நான்மறையை மிக்க விண்ணவர் வந்திறைஞ்ச
எரித்தவன் முப்புரங்கள் இய லேழுல கில்லுயிரும்
பிரித்தவன் செஞ்சடைமேல் நிறை பேரொலி வெள்ளந்தன்னைத்
தரித்தவன் ஊர்பனந்தாள் திருத் தாடகை யீச்சரமே. ௨

உடுத்தவன் மானுரிதோல் கழ லுள்கவல் லார்வினைகள்
கெடுத்தருள் செய்யவல்லான் கிளர் கீதமோர் நான்மறையான்
மடுத்தவன் நஞ்சமுதா மிக்க மாதவர் வேள்வியைமுன்
தடுத்தவன் ஊர்பனந்தாள் திருத் தாடகை யீச்சரமே. ௩

சூழ்தரு வல்வினையும் உடல் தோன்றிய பல்பிணியும்
பாழ்பட வேண்டுதிரேல் மிக ஏத்துமின் பாய்புனலும்
போழிள வெண்மதியும் அனல் பொங்கர வும்புனைந்த
தாழ்சடை யான்பனந்தாள் திருத் தாடகை யீச்சரமே. ௪

விடம்படு கண்டத்தினான் இருள் வெள்வளை மங்கையொடும்
நடம்புரி கொள்கையினான் அவன் எம்மிறை சேருமிடம்
படம்புரி நாகமொடு திரை பன்மணி யுங்கொணரும்
தடம்புனல் சூழ்பனந்தாள் திருத் தாடகை யீச்சரமே. ௫

விடையுயர் வெல்கொடியான் அடி விண்ணொடு மண்ணுமெல்லாம்
புடைபட ஆடவல்லான் மிகு பூதமார் பல்படையான்
தொடைநவில் கொன்றையொடு வன்னி துன்னெருக் கும்அணிந்த
சடையவன் ஊர்பனந்தாள் திருத் தாடகை யீச்சரமே. ௬

மலையவன் முன்பயந்த மட மாதையோர் கூறுடையான்
சிலைமலி வெங்கணையாற் புரம் மூன்றவை செற்றுகந்தான்
அலைமலி தண்புனலும் மதி ஆடர வும்அணிந்த
தலையவன் ஊர்பனந்தாள் திருத் தாடகை யீச்சரமே. ௭

செற்றரக் கன்வலியைத் திரு மெல்விர லால்அடர்த்து
முற்றும்வெண் ணீறணிந்த திரு மேனியன் மும்மையினன்
புற்றா வம்புலியின் உரி தோலொடு கோவணமும்
தற்றவன் ஊர்பனந்தாள் திருத் தாடகை யீச்சரமே. அ

வின்மலை நாணரவம் மிகு வெங்கனல் அம்பதனல்
புன்மைசெய் தானவர்தம் புரம் பொன்றுவித் தான்புனிதன்
நன்மலர் மேலயனும் நண்ணும் நாரண னும்அறியாத்
தன்மையன் ஊர்பனந்தாள் திருத் தாடகை யீச்சரமே. கூ

ஆதர் சமணரொடும் மடை யைந்துகில் போர்த்துழலும்
நீதர் உரைக்கும்மொழி யவை கொள்ளன்மின் நின்மலனூர்
போதவிழ் பொய்கைதனுள் திகழ் புள்ளிரி யப்பொழில்வாய்த்
தாதவி ழும்பனந்தாள் திருத் தாடகை யீச்சரமே. க0

தண்வயல் சூழ்பனந்தாள் திருத் தாடகை யீச்சரத்துக்
சண்ணய லேபிறையான் அவன் றன்னைமுன் காழியர்கோன்
நண்ணிய செந்தமிழால் மிகு ஞானசம் பந்தன்நல்ல
பண்ணியல் பாடல்வல்லார் அவர் தம்வினை பற்றறுமே. கக

திருச்சிற்றம்பலம்

திருச்செங்காட்டங்குடி - பண் - பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

பைங்கோட்டு மலர்ப்புன்னைப் பறவைகாள் பயப்பூரச்
சங்காட்டந் தவிர்த்தென்னைத் தவிராநோய் தந்தானே
செங்காட்டங் குடிமேய சிறுத்தொண்டன் பணிசெய்ய
வெங்காட்டுள் அனலேந்தி விளையாடும் பெருமானே. க

பொன்னம்பூங் கழிக்கானற் புணர்துணையோ டுடன்வாழும்
அன்னங்காள் அன்றில்காள் அகன்றும்போய் வருவீர்காள்
கன்னவில் தோள் சிறுத்தொண்டன் கணபதீச் சரம்மேய
இன்னமுதன் இணையடிக்கீழ் எனதல்லல் உரையீரே. உ

குட்டத்துங் குழிக்கரையுங் குளிர்பொய்கைத் தடத்தகத்தும்
இட்டத்தால் இரைதேரும் இருஞ்சிறகின் மடநாராய்

சிட்டன்சீர்ச் சிறுத்தொண்டன் செங்காட்டங் குடிமேய
வட்டவார் சடையார்க்கென் வருத்தஞ்சென் றுரையாயே. ங

கானருகும் வயலருகுங் கழியருகுங் கடலருகும்
மீனிரிய வருபுனலில் இரைதேர்வெண் மடநாராய்
தேனமர்தார்ச் சிறுத்தொண்டன் செங்காட்டங் குடிமேய
வானமருஞ் சடையார்க்கென் வருத்தஞ்சென் றுரையாயே. ச

ஆரலாஞ் சுறவமேய்ந் தகன்கழனிச் சிறகுலர்த்தும்
பாரல்வாய்ச் சிறுகுருகே பயில்தூவி மடநாராய்
சீருலாஞ் சிறுத்தொண்டன் செங்காட்டங் குடிமேய
நீருலாஞ் சடையார்க்கென் நிலைமைசென் றுரையீரே. ரு

குறைக்கொண்டார் இடர்தீர்த்தல் கடனன்றே குளிர்பொய்கைத்
துறைக்கெண்டை கவர்குருகே துணைபிரியா மடநாராய்
கறைக்கண்டன் பிறைச்சென்னிக் கணபதீச் சரம்மேய
சிறுத்தொண்டன் பெருமான்சீர் அருளொருநாட் பெறலாமே. சு

கருவடிய பசுங்கால்வெண் குருகேயொண் கழிநாராய்
ஒருஅடியாள் இரந்தாளென் றொருநாட்சென் றுரையீரே
செருவடிதோட் சிறுத்தொண்டன் செங்காட்டங் குடிமேய
திருவடிதன் திருவருளே பெறலாமோ திறத்தவர்க்கே. எ

கூரால் இரைதேர்ந்து குளமுலவி வயல்வாழும்
தாராவே மடநாராய் தமியேற்கொன் றுரையீரே
சீராளன் சிறுத்தொண்டன் செங்காட்டங் குடிமேய
பேராளன் பெருமான்றன் அருளொருநாட் பெறலாமே. அ

நறப்பொலிபூங் கழிக்கானல் நவில்குருகே புலமெல்லாம்
அறப்பலிதேர்ந் தழல்வார்க்கென் அலர்கோடல் அழகியதே
சிறப்புலவன் சிறுத்தொண்டன் செங்காட்டங் குடிமேய
பிறப்பிலிபேர் பிதற்றிநின் றிழக்கோவெம் பெருநலமே. கூ, கO

செந்தண்பூம் புனல்பரந்த செங்காட்டங் குடிமேய
வெந்தநீ றணிமார்பன் சிறுத்தொண்ட னவன்வேண்ட
அந்தண்பூங் கலிக்காழி அடிகளையே அடிபரவும்
சந்தங்கொள் சம்பந்தன் தமிழுரைப்போர் தக்கோரே. கக

திருச்சிற்றம்பலம்

திருப்பெருவேளூர் - பண் - பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

அண்ணாவுங் கழுக்குன்றும் ஆயமலை யவைவாழ்வார்
விண்ணோரும் மண்ணோரும் வியந்தேத்த அருள்செய்வார்
கண்ணாவார் உலகுக்குக் கருத்தானார் புரமெரித்த
பெண்ணாணும் பெருமானார் பெருவேளூர் பிரியாரே. க

கருமானின் உரியுடையர் கரிகாடர் இமவானார்
மருமானார் இவரென்றும் மடவாளோ டுடனாவர்
பொருமான விடையூர்வ துடையார்வெண் பொடிப்பூசும்
பெருமானார் பிஞ்ஞகனார் பெருவேளூர் பிரியாரே. உ

குணக்குந்தென் திசைக்கண்ணுங் குடபாலும் வடபாலும்
கணக்கென்ன அருள்செய்வார் கழிந்தோர்க்கு மொழிந்தோர்க்கும்
வணக்கஞ்செய் மனத்தராய் வணங்காதார் தமக்கென்றும்
பிணக்கஞ்செய் பெருமானார் பெருவேளூர் பிரியாரே. ௩

இறைக்கொண்ட வளையாளோ டிருகூறா யொருகூறு
மறைக்கண்டத் திறைநாவர் மதிலெய்த சிலைவலவர்
கறைக்கொண்ட மிடறுடையர் கனல்கிளருஞ் சடைமுடிமேல்
பிறைக்கொண்ட பெருமானார் பெருவேளூர் பிரியாரே. ௪

விழையாதார் விழைவார்போல் விகிர்தங்கள் பலபேசிக்
குழையாதார் குழைவார்போற் குணம்நல்ல பலகூறி
அழையாவும் அரற்றாவும் அடிவீழ்வார் தமக்கென்றும்
பிழையாத பெருமானார் பெருவேளூர் பிரியாரே. ௫

விரித்தார்நான் மறைப்பொருளை உமையஞ்ச விறல்வேழம்
உரித்தாராம் உரிபோர்த்து மதில்மூன்றும் ஒருகணையால்
எரித்தாராம் இமைப்பளவில் இமையோர்கள் தொழுதிறைஞ்சப்
பெருத்தாரெம் பெருமானார் பெருவேளூர் பிரியாரே. ௬

மறப்பிலா அடிமைக்கண் மனம்வைப்பார் தமக்கெல்லாம்
சிறப்பிலார் மதிலெய்த சிலைவல்லார் ஒருகணையால்
இறப்பிலார் பிணியில்லார் தமக்கென்றுங் கேடிலார்
பிறப்பிலாப் பெருமானார் பெருவேளூர் பிரியாரே. எ

எரியார்வேற் கடற்றானை யிலங்கைக்கோன் தனைவீழ
முரியார்ந்த தடந்தோள்கள் அடர்த்துகந்த முதலாளர்
வரியார்வெஞ் சிலைபிடித்து மடவாளை யொருபாகம்
பிரியாத பெருமானார் பெருவேளூர் பிரியாரே. அ

சேணியலும் நெடுமாலுந் திசைமுகனுஞ் செருவெய்திக்
காணியல்பை யறிவிலராய்க் கனல்வண்ணர் அடியிணைக்கீழ்
நாணியவர் தொழுதேத்த நாணுமே யருள்செய்து
பேணியஎம் பெருமானார் பெருவேளூர் பிரியாரே. கூ

புற்றேறி யுணங்குவார் புகையார்ந்த துகில்போர்ப்பார்
சொற்றேற வேண்டாம்நீர் தொழுமின்கள் சுடர்வண்ணம்
மற்றேறும் பரிமாவும் மதகளிறும் இவையொழியப்
பெற்றேறும் பெருமானார் பெருவேளூர் பிரியாரே. க0

பைம்பொன்சீர் மணிவாரிப் பலவுஞ்சேர் கனியுந்தி
அம்பொன்செய் மடவரலார் அணிமல்கு பெருவேளூர்
நம்பன்றன் கழல்பாவி நவில்கின்ற மறைஞான
சம்பந்தன் தமிழ்வல்லார்க் கருவினைநோய் சாராவே. கக

திருச்சிற்றம்பலம்

திருக்கச்சிநெறிக்காரைக்காடு - பண் - பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

வாரணவு முலைமங்கை பங்கினராய் அங்கையினில்
போரணவு மழுவொன்றங் கேந்திவெண் பொடியணிவர்
காரணவு மணிமாடங் கடைநவின்ற கலிக்கச்சி
நீரணவு மலர்ப்பொய்கை நெறிக்காரைக் காட்டாரே. க

காருரும் மணிமிடற்றார் கரிகாடர் உடைதலைகொண்
றோரன் பலிக்குழல்வார் உழைமானின் உரியதளர்
தேருரும் நெடுவீதிச் செழுங்கச்சி மாநகர்வாய்
நீருரும் மலர்ப்பொய்கை நெறிக்காரைக் காட்டாரே. உ

கூறணிந்தார் கொடியிடையைக் குளிர்சடைமேல் இளமதியோ
டாறணிந்தார் ஆடரவம் பூண்டுகந்தார் ஆன்வெள்ளை

ஏறணிந்தார் கொடியதன்மேல் என்பணிந்தார் வரைமார்பில்
நீறணிந்தார் கலிக்கச்சி நெறிக்காரைக் காட்டாரே. ரு

பிறைநவின்ற செஞ்சடைகள் பின்தாழப் பூதங்கள்
மறைநவின்ற பாடலோ டாடலாய் மழுவேந்திச்
சிறைநவின்ற வண்டினங்கள் தீங்கனிவாய்த் தேன்கதுவும்
நிறைநவின்ற கலிக்கச்சி நெறிக்காரைக் காட்டாரே. சு

அன்றாலின் கீழிருந்தங் கறம்புரிந்த அருளாளர்
குன்றாத வெஞ்சிலையிற் கோளரவ நாண்கொளுவி
ஒன்றாதார் புரம்மூன்றும் ஓங்கெரியில் வெந்தவிய
நின்றாருங் கலிக்கச்சி நெறிக்காரைக் காட்டாரே. ௭

பன்மலர்கள் கொண்டடிக்கீழ் வானோர்கள் பணிந்திறைஞ்ச
நன்மையிலா வல்லவுணர் நகர்மூன்றும் ஒருநொடியில்
வின்மலையின் நாண்கொளுவி வெங்கணையா லெய்தழித்த
நின்மலனார் கலிக்கச்சி நெறிக்காரைக் காட்டாரே. சு

புற்றிடைவாள் அரவினொடு புனைகொன்றை மதமத்தம்
எற்றொழியா அலைபுனலோ டிளமதியம் ஏந்துசடைப்
பெற்றுடையார் ஒருபாகம் பெண்ணுடையார் கண்ணமரும்
நெற்றியினார் கலிக்கச்சி நெறிக்காரைக் காட்டாரே. எ

ஏழ்கடல்சூழ் தென்னிலங்கைக் கோமானை யெழில்வரைவாய்த்
தாழ்விரலால் ஊன்றியதோர் தன்மையினார் நன்மையினார்
ஆழ்கிடங்குஞ் சூழ்வயலு மதில்புல்கி யழகமரும்
நீள்மறுகிற் கலிக்கச்சி நெறிக்காரைக் காட்டாரே. அ

ஊண்தானும் ஒலிகடல்நஞ் சுடைதலையிற் பலிகொள்வர்
மாண்டார்தம் எலும்பணிவர் வரியரவோ டெழிலாமை
பூண்டாரும் ஓரிருவர் அறியாமைப் பொங்கெரியாய்
நீண்டாருங் கலிக்கச்சி நெறிக்காரைக் காட்டாரே. கூ

குண்டாடிச் சமண்படுவார் கூறைதனை மெய்போர்த்து
மிண்டாடித் திரிதருவார் உரைப்பனகள் மெய்யல்ல
வண்டாருங் குழலாளை வரையாகத் தொருபாகம்
கண்டாருங் கலிக்கச்சி நெறிக்காரைக் காட்டாரே. ௧0

கண்ணாருங் கலிக்கச்சி நெறிக்காரைக் காட்டுறையும்
பெண்ணாருந் திருமேனிப் பெருமான தடிவாழ்த்தித்
தண்ணாரும் பொழிற்காழித் தமிழ்ஞான சம்பந்தன்
பண்ணாருந் தமிழ்வல்லார் பாலோகத் திருப்பாரே. கக

திருச்சிற்றம்பலம்

திருவேட்டக்குடி - பண் - பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

வண்டிரைக்கும் மலர்க்கொன்றை விரிசடைமேல் வரியரவம்
கண்டிரைக்கும் பிறைச்சென்னிக் காபாலி கழல்கள்
தொண்டிரைத்துத் தொழுதிறைஞ்சத் துளங்கொளிநீர்ச் சுடர்ப்பவளம்
தெண்டிரைகள் கொணர்ந்தெறியுந் திருவேட்டக் குடியாரே. க

பாய்திமிலர் வலையோடு மீன்வாரிப் பயின்றெங்கும்
காசினியிற் கொணர்ந்தட்டுங் கைதல்சூழ் கழிக்கானல்
போயிரவிற் பேயோடும் புறங்காட்டிற் புரிந்தழகார்
தீயெரிகை மகிழ்ந்தாருந் திருவேட்டக் குடியாரே. உ

தோத்திரமா மணலிலிங்கந் தொடங்கியஆன் நிரையிற்பால்
பாத்திரமா ஆட்டுதலும் பரஞ்சோதி பரிந்தருளி
ஆத்தமென மறைநால்வர்க் கறம்புரிநூ லன்றுரைத்த
தீர்த்தம்மல்கு சடையாருந் திருவேட்டக் குடியாரே. ங

கலவஞ்சேர் கழிக்கானல் கதிர்முத்தங் கலந்தெங்கும்
அலவஞ்சே ரணைவாரிக் கொணர்ந்தெறியும் அகன்றுறைவாய்
நிலவஞ்சேர் நுண்ணிடைய நேரிழையா ளவளோடும்
திலகஞ்சேர் நெற்றியினார் திருவேட்டக் குடியாரே. ச

பங்கமார் கடலலறப் பருவரையோ டரவுழலச்
செங்கண்மால் கடையஎழு நஞ்சருந்துஞ் சிவமூர்த்தி
அங்கம்நான் மறைநால்வர்க் கறம்பொருளின் பயனளித்த
திங்கள்சேர் சடையாருந் திருவேட்டக் குடியாரே. ரு

நாவாய பிறைச்சென்னி நலந்திகழு மிலங்கிப்பி
கோவாத நித்திலங்கள் கொணர்ந்தெறியுங் குளிர்கானல்

ஏவாரும் வெஞ்சிலையால் எயின்மூன்றும் எரிசெய்த
தேவாதி தேவனூர் திருவேட்டக் குடியாரே. சு

பானிலவும் பங்கயத்துப் பைங்கானல் வெண்குருகு
கானிலவு மலர்ப்பொய்கைக் கைதல்சூழ் கழிக்கானல்
மானின்விழி மலைமகளோ டொருபாகம் பிரிவரியார்
தேனிலவு மலர்ச்சோலைத் திருவேட்டக் குடியாரே. எ

துறையுலவு கடலோதஞ் சுரிசங்க மிடறிப்போய்
நறையுலவும் பொழிற்புன்னை நன்னீழற் கீழமரும்
இறைபயிலும் இராவணன்றன் தலைபத்தும் இருபதுதோள்
திறலழிய அடர்த்தாருந் திருவேட்டக் குடியாரே. அ

அருமறைநான் முகத்தானும் அகலிடம்நீ ரேற்றானும்
இருவருமாய் அளப்பரிய எரியுருவாய் நீண்டபிரான்
வருபுனலின் மணியுந்தி மறிதிரையார் சுடர்ப்பவளத்
திருவுருவில் வெண்ணீற்றார் திருவேட்டக் குடியாரே. கூ

இகழ்ந்துரைக்குஞ் சமணர்களும் இடும்போர்வைச் சாக்கியரும்
புகழ்ந்துரையாப் பாவிகள்சொற் கொள்ளேன்மின் பொருளென்ன
நிகழ்ந்திலங்கு வெண்மணலில் நிறைத்துண்டப் பிறைக்கற்றை
திகழ்ந்திலங்கு செஞ்சடையார் திருவேட்டக் குடியாரே. கய

தெண்டிரைசேர் வயலுடுத்த திருவேட்டக் குடியாரைத்
தண்டலைசூழ் கலிக்காழித் தமிழ்ஞான சம்பந்தன்
ஒண்டமிழ்நூல் இவைபத்தும் உணர்ந்தேத்த வல்லார்போய்
உண்டுடுப்பில் வானவரோ டுயர்வானத் திருப்பாரே. கக

திருச்சிற்றம்பலம்

திருப்பிரமபுரம் - பண் - சாதாரி

வழிமொழித்திருவிராகம்

திருச்சிற்றம்பலம்

சுரருலகு நரர்கள்பயில் தரணிதலம் முரணழிய அரணமதில்முப்
புரமெரிய விரவுவகை சரவிசைகொள் கரமுடைய பரமனிடமாம்
வரமருள வரன்முறையி னிரைநிறைகொள் வருசுருதி சிரவுரையினாற்
பிரமனுயர் அரனெழில்கொள் சரணவிணை பரவவளர் பிரமபுரமே. க

தாணுமிகு வாணிசைகொள் தாணுவியர் பேணுமது காணுமளவிற்
கோணுநுதல் நீள்நயனி கோணில்பிடி மாணிமது நாணும்வகையே
ஏணுகரி பூணழிய வாணியல்கொள் மாணிபதி சேணமரர்கோன்
வேணுவினை யேணிநகர் காணிறிவி காணநடு வேணுபுரமே. உ

பகலொளிசெய் நகமணியை முகைமலரை நிகழ்சரண வகவுமுனிவர்க்
ககலமலி சகலகலை மிகவுரைசெய் முகமுடைய பகவனிடமாம் [யோர்
பகைகளையும் வகையில்அறு முகஇறையை மிகஅருள நிகரிலிமை
புகவுலகு புகழஎழில் திகழநிக ழலர்பெருகு புகலிநகரே. ௩

அங்கண்மதி கங்கைநதி வெங்கண்அர வங்களெழில் தங்குமிதழித்
துங்கமலர் தங்குசடை யங்கிநிகர் எங்களிறை தங்குமிடமாம்
வெங்கதிர்வி ளங்குலகம் எங்குமெதிர் பொங்கெரிபு லன்கள்களைவோர்
வெங்குருவி ளங்கியுமை பங்கர்சர ணங்கள்பணி வெங்குருவதே. ௪

ஆணியல்பு காணவன வாணவியல் பேணியெதிர் பாணமழைசேர்
தூணியற நாணியற வேணுசிலை பேணியற நாணிவிசயன்
பாணியமர் பூணவருள் மாணுபிர மாணியிட மேணிமுறையிற்
பாணியுல காளமிக வாணின்மலி தோணிநிகர் தோணிபுரமே. ௫

நிராமய பராபர புராதன பராவுசிவ ராகவருளென்
றிராவுமெ திராயது பராநினை புராணனம ராதிபதியாம்
அராமிசை யிராதெழில் தராயர பராயண வராகவுருவா
தராயனை விராயெரி பராய்மிகு தராய்மொழி விராயபதியே. ௬

அரணையுறு முரணர்பலர் மரணம்வர விரணமதி லரமலிபடைக்
கரம்விசிறு விரகனமர் கரணனுயர் பரனெறிகொள் கரனதிடமாம்
பரவமுது விரவவிடல் புரளமுறு மரவையரி சிரமரியவச்
சிரமான சரணமவை பரவிரு சிரகமமர் சிரபுரமதே. எ

அறமழிவு பெறவுலகு தெறுபுயவன் விறலழிய நிறுவிவிரன்மா, மறைநெறி முறைமூல்செய் பிறையெயிற னுறஅருளும் இறைவனிடமாம், குறைவின்மிக நிறைதையுழி மறையமரர் நிறையருள முறையொடுவரும், புறவனெதிர் நிறைநிலவு பொறையனுடல் பெறவருளு புறவமதுவே. அ

விண்பயில மண்பகிரி வண்பிரமன் எண்பெரிய பண்படை
கொண்மால், கண்பரியு மொண்பொழிய நுண்பொருள்கள் தண்புகழ்
கொள் கண்டனிடமாம், மண்பரியு மொண்பொழிய நுண்புசகர் புண்
பயில விண்படாவச், சண்பைமொழி பண்பமுனி கண்பழிசெய் பண்பு
களை சண்பைநகரே. ௯

பாழியுறை வேழம்நிகர் பாழமணர் சூழுமுட லாளருணரா
ஏழினிசை யாழின்மொழி யேழையவள் வாழுமிறை தாழுமிடமாங்
கேழிசைகொள் மேலுலகில் வாழரசு சூழரசு வாழவரனுக்
காழியசில் காழிசெய வேழுலகில் ஊழிவளர் காழிநகரே. க௦

நச்சரவு கச்செனவ சைச்சுமதி யுச்சியின்மி லைச்சொருகையான்
மெய்ச்சிர மணைச்சுலகி னிச்சமிடு பிச்சையமர் பிச்சனிடமாம்
மச்சமத நச்சிமத மச்சிறுமி யைச்செய்தவ வச்சவிரதக்
கொச்சைமுர வச்சர்பணி யச்சுரர்கள் நச்சிமிடை கொச்சைநகரே. கக

ஒழுகலரி தழிகலியில் உழியுலகு பழிபெருகு வழியைநினையா,
முழுதுடலில் எழுமயிர்கள் தழுவுமுனி குழுவினொடு கெழுவுசிவனைத்,
தொழுதுலகில் இழுகுமலம் அழியும்வகை கழுவுமுரை கழுமலநகர்ப்,
பழுதிலிறை யெழுதுமொழி தமிழ்விரகன் வழிமொழிகள் மொழி
தகையவே. கஉ

திருச்சிற்றம்பலம்

திருக்கயிலாயம் - திருவிராகம். பண் - சாதாரி

திருச்சிற்றம்பலம்

வாளவரி கோளபுலி கீளதுரி தாளின்மிசை நாளும்மகிழ்வர்
ஆளுமவர் வேளநகர் போளயில கோளகளி றாளிவரவில்
தோளமரர் தாளமதர் கூளியெழ மீளிமிளிர் தூளிவளர்பொன்
காளமுகில் மூளுமிருள் கீளவிரி தாளகயி லாயமலையே. க

புற்றரவு பற்றியகை நெற்றியது மற்றொருகண் ஒற்றைவிடையன்
செற்றதெயில் உற்றதுமை யற்றவர்கள் நற்றுணைவன் உற்றநகர்தான்
சுற்றுமணி பெற்றதொளி செற்றமொடு குற்றமில தெற்றெனவினாய்க்
கற்றவர்கள் சொற்றொகையின் முற்றுமொளி பெற்றகயி லாயமலையே.

சிங்கவரை மங்கையர்கள் தங்களன செங்கைநிறை கொங்குமலர்தூய்
எங்கள்வினை சங்கையவை இங்ககல வங்கமொழி யெங்குமுளவாய்த்
திங்களிருள் நொங்கவொளி விங்கிமிளிர் தொங்கலொடு தங்கவயலே
கங்கையொடு பொங்குசடை யெங்களிறை தங்குகயி லாயமலையே. ௩

முடியசடை பிடியதொரு வடியமழு வுடையர்செடி யுடையதலையில்
வெடியவினை கொடியர்கெட விடுசில்பலி நொடியமகிழ் அடிகளிடமாம்
கொடியகுர லுடையவிடை கடியதடி யடியினொடு மிடியினதிரக்
கடியகுரல் நெடியமுகில் மடியவத ரடிகொள்கயி லாயமலையே. ௪

குடங்கையி னுடங்கெரி தொடர்ந்தெழ விடங்கிளர் படங்கொளரவம்
மடங்கொளி படர்ந்திட நடந்தரு விடங்கன திடந்தண் முகில்போய்த்
தடங்கடல் தொடர்ந்தட னுடங்குவ விடங்கொளமி டைந்தகுரலால்
கடுங்கலின் முடங்களை நடங்கர வொடுங்குகயி லாயமலையே. ௫

ஏதமில பூதமொடு கோதைதுணை யாதிமுதல் வேதவிகிர்தன்
கீதமொடு நீதிபல வோதிமற வாதுபயில் நாதன்நகர்தான்
தாதுபொதி போதவிட வூதுசிறை மீதுதுளி கூதல்நலியக்
காதல்மிகு சோதிகிளர் மாதுபயில் கோதுகயி லாயமலையே. ௬

சென்றுபல வென்றுலவு புன்தலையர் துன்றலொடும் ஒன்றியுடனே
நின்றமரர் என்றுமிறை வன்றனடி சென்றுபணி கின்றநகர்தான்
துன்றுமலர் பொன்திகழ்செய் கொன்றைவிரை தென்றலொடு சென்று
கன்றுபிடி துன்றுகளி றென்றிவைமுன் நின்றகயி லாயமலையே. [கமழக்

மருப்பிடை நெருப்பெழு தருக்கொடு செருச்செய்த பருத்தகளிறின்
பொருப்பிடை விருப்புற விருக்கையை யொருக்குடன் அரக்கனுணரா
தொருத்தியை வெருக்குற வெருட்டலும் நெருக்கென நிருத்தவிரலால்
கருத்தில வொருத்தனை யெருத்திற நெரித்தகயி லாயமலையே. ௮

பரியதிரை பெரியபுனல் வரியபுலி யுரியதுடை பரிசையுடையான்
வரியவளை யரியகணி யுருவினொடு புரிவினவர் பிரிவில்நகர்தான்
பெரியஎரி யுருவமது தெரியவுரு பரிவுதரும் அருமையதனால்
கரியவனும் அரியமறை புரியவனும் மருவுகயி லாயமலையே. ௯

அண்டர்தொழு சண்டிபணி கண்டடிமை கொண்டவிறை துண்ட
மதியோ, டிண்டைபுனை வண்டசடை முண்டதர சண்டஇருள் கண்ட

ரிடமாம், குண்டமண வண்டாவர் மண்டைகையில் உண்டுளறி மிண்டு சமயம், கண்டவர்கள் கொண்டவர்கள் பண்டுமறி யாதகயி லாயமலேயே.

அந்தண்வரை வந்தபுனல் தந்ததிரை சந்தனமொ டுந்தியகிலும்
கந்தமலர் கொந்திெனுடு மந்திபல சிந்துகயி லாயமலேமேல்
எந்தையடி வந்தணுகு சந்தமொடு செந்தமிழ் இசைந்தபுகலிப்
பந்தனுரை சிந்தைசெய வந்தவினை நைந்துபா லோகமெளிதே. கக

திருச்சிற்றம்பலம்

திருக்காளத்தி - திருவிராகம். பண் - சாதாரி

திருச்சிற்றம்பலம்

வானவர்கள் தானவர்கள் வாதைபட வந்ததொரு மாகடல்விடம்
தானமுது செய்தருள் புரிந்தசிவன் மேவும்மலே தன்னைவினவில்
ஏனம்இனம் மானினெடு கிள்ளைதினை கொள்ளஎழி லார்கவணினல்
கானவர்தம் மாமகளிர் கனகமணி விலகுகா ளத்திமலேயே. க

முதுசினவில் அவுணர்புரம் மூன்றுமொரு நொடிவரையின் மூள எரிசெய், சதுர்மதி பொதிசடையர் சங்கர்வி ரும்புமலே தன்னை வினவில், எதிரெதிர வெதிர்பிணைய எழுபொறிகள் சிதறஎழி லேன முழுத, கதிர்மணியின் வளரொளிகள் இருளகல நிலவுகா ளத்தி மலேயே. உ

வல்லேவரு காளியைவ குத்துவலி யாகிமிகு தாரகனை நீ
கொல்லென விடுத்தருள் புரிந்தசிவன் மேவுமலே கூறிவினவில்
பல்பல இருங்கனி பருங்கிமிக வுண்டவை நெருங்கியினமாய்க்
கல்லதிர நின்றுகரு மந்திவிளே யாடுகா ளத்திமலேயே. ங

வேயனைய தோளுமையொர் பாகமது வாகவிடை யேறிசடைமேல்
தூயமதி சூடிசுடு காடில்நட மாடிமலே தன்னைவினவில்
வாய்கலச மாகவழி பாடுசெயும் வேடன்மல ராகுநயனம்
காய்கணை யினுவிடந் தீசனடி கூடுகா ளத்திமலேயே. ச

மலேயின்மிசை தனில்முகில்போல் வருவதொரு மதகரியை மழைபோலலறக், கொலேசெய்துமை யஞ்சவுரி போர்த்தசிவன் மேவு மலே கூறிவினவில், அலேகொள்புனல் அருவிபல சுனேகள்வழி யிழிய

வயல் நிலவுமுதுவேய், கலகலென வொளிகொள்கதிர் முத்தமவை
சிந்துகா ளத்திமலையே. ரு

பாரகம் விளங்கிய பகீரதன் அருந்தவம் முயன்றபணிகண்
டாரருள் புரிந்தலைகொள் கங்கைசடை யேற்றஅரன் மலையைவினவில்
வாரதர் இருங்குறவர் சேவலின் மடுத்தவர் எரித்தவிறகில்
காரகில் இரும்புகை விசும்புகமழ் கின்றகா ளத்திமலையே. சு

ஆருமெதி ராதவலி யாகியச லந்தரனை ஆழியதனால்
ஈரும்வகை செய்தருள் புரிந்தவன் இருந்தமலை தன்னைவினவில்
ஊரும்அர வம்மொளிகொள் மாமணியு மிழ்ந்தவையு லாவிவரலால்
காரிருள் கடிந்தகன கம்மெனவி ளங்குகா ளத்திமலையே. எ

எரியனைய சுரிமயிர் இராவணனை யீடழிய எழில்கொள்விரலால்
பெரியவரை யூன்றியருள் செய்தசிவன் மேவுமலை பெற்றிவினவில்
வரியசிலை வேடுவர்கள் ஆடவர்கள் நீடுவரை யூடுவரலால்
கரியினொடு வரியுழுவை அரியினமும் வெருவுகா ளத்திமலையே. அ

இனதளவி லவனடி யிணையும்முடி யறிதுமென இகலுமிருவர்
தனதுருவம் அறிவரிய சகலசிவன் மேவுமலை தன்னைவினவில்
புனவர்புன மயிலனைய மாதரொடு மைந்தரும்ம ணம்புணரும்நாள்
கனகமென மலர்களணி வேங்கைகள் நிலாவுகா ளத்திமலையே. கூ

நின்றுகவ ளம்பலகொள் கையரொடு மெய்யிலிடு போர்வையவரும்
நன்றியறி யாதவகை நின்றசிவன் மேவுமலை நாடிவினவில்
குன்றில்மலி துன்றுபொழில் நின்றகுளிர் சந்தின்முறி தின்றுகுலவிக்
கன்றினொடு சென்றபிடி நின்றுவிளை யாடுகா ளத்திமலையே. ௧௦

காடதிட மாகநட மாடுசிவன் மேவுகா ளத்திமலையை
மாடமொடு மாளிகைகள் நீடுவளர் கொச்சைவயம் மன்னுதலைவன்
நாடுபல நீடுபுகழ் ஞானசம் பந்தனுரை நல்லதமிழின்
பாடலொடு பாடிசை வல்லவர்கள் நல்லர்பர லோகமெளிதே. கக

திருச்சிற்றம்பலம்

திருமயிலாடுதுறை - திருவிராகம். பண் - சாதாரி

திருச்சிற்றம்பலம்

ஏனவெயி றாடரவொ டென்புவரி யாமையிவை பூண்டிளைஞராய்க்
கானவரி நீடுழுவை யதளுடைய படர்சடையர் காணியெனலாம்
ஆனபுகழ் வேதியர்கள் ஆகுதியின் மீதுபுகை போகியழகார்
வானமுறு சோலைமிசை மாசுபட மூசுமயி லாடுதுறையே. க

அந்தண்மதி செஞ்சடையர் அங்கணெழில் கொன்றையொ டணிந்தழக
எந்தம்அடி கட்கினிய தானமது வேண்டில்எழி லார்பதியதாம் [ராம்
கந்தம்மலி சந்திெனொடு காரகிலும் வாரிவரு காவிரியுளால்
வந்ததிரை யுந்தியெதிர் மந்திமலர் சிந்துமயி லாடுதுறையே. உ

தோளின்மிசை வரியரவம் நஞ்சழல வீக்கிமிகு நோக்கரியராய்
மூளைபடு வெண்தலையி லுண்டுமுது காடுறையும் முதல்வரிடமாம்
பாளைபடு பைங்கமுகு செங்கனி யுதிர்த்திட நிரந்துகமழ்பூ
வாளைகுதி கொள்ளமடல் விரியமணம் நாறுமயி லாடுதுறையே. ௩

ஏதமிலர் அரியமறை மலையர்மக ளாகியஇ லங்குநுதலொண்
பேதைதட மார்பதிட மாகவுறை கின்றபெரு மானதிடமாம்
காதல்மிகு கவ்வையொடு மவ்வலவை கூடிவரு காவிரியுளால்
மாதர்மறி திரைகள்புக வெறியவெறி கமழுமயி லாடுதுறையே. ௪

பூவிரி கதுப்பின்மட மங்கையர கந்தொறும் நடந்துபலிதேர்
பாவிரி யிசைக்குரிய பாடல்பயி லும்பரமர் பழமையெனலாம்
காவிரி நுரைத்திரு கரைக்குமணி சிந்தவரி வண்டுகவரா
மாவிரி மதுக்கிழிய மந்திகுதி கொள்ளுமயி லாடுதுறையே. ௫

கடந்திகழ் கருங்களி றுரித்துமையும் அஞ்சமிக நோக்கரியராய், விடந்திகழும் மூவிலைநல் வேலுடைய வேதியர் விரும்புமிடமாம், தொடர்ந்தொளிர் கிடந்ததொரு சோதிமிகு தொண்டையெழில் கொண் டதுவர்வாய், மடந்தையர் குடைந்தபுனல் வாசம்மிக நாறுமயி லாடு துறையே. ௬

அவ்வதிசை யாரும்அடி யாருமுள ராகஅருள் செய்தவர்கள்மேல்
எவ்வமற வைகலும் இரங்கியெரி யாடும்எம தீசனிடமாம்

கவ்வையொடு காவிரிக லந்துவரு தென்கரை நிரந்துகமழ்பூ
மவ்வலொடு மாதவிம யங்கிமணம் நாறுமயி லாடுதுறையே. எ

இலங்கைநகர் மன்னன்முடி யொருபதினொ டிருபதுதோள் நெரியவிரலால், விலங்கலி லடர்த்தருள் புரிந்தவ ரிருந்தவிடம் வின வுதிர்களேல், கலங்கல்நுரை யுந்தியெதிர் வந்தகயம் மூழ்கிமலர் கொண்டு மகிழா, மலங்கிவரு காவிரிநி ரந்துபொழி கின்றமயி லாடுதுறையே. அ

ஒண்திறலின் நான்முகனும் மாலுமிக நேடியுண ராதவகையால்
அண்டமுற அங்கியுரு வாகிமிக நீண்டஅர னாரிடமாம்
கெண்டையிரை கொண்டுகெளி றுருடனி ருந்துகிளர் வாயறுதல்சேர்
வண்டல்மணல் கெண்டிமட நாரைவிளை யாடுமயி லாடுதுறையே.

மிண்டுதிறல் அமணரொடு சாக்கியரும் அலர்தூற்ற மிக்கதிறலோன்
இண்டைகுடி கொண்டசடை யெங்கள்பெரு மானதிட மென்பரொழி
தெண்டிரைப ரந்தொழுகு காவிரிய தென்கரை நிரந்துகமழ்பூ [லார்
வண்டவை திளைக்கமது வந்தொழுகு சோலைமயி லாடுதுறையே. கo

நிணந்தரும யானநில வானமதி யாததொரு சூலமொடுபேய்க், கணந்தொழுக பாவிசழ லேத்திமிக வாய்த்ததொரு காதன்மையினால், மணந்தண்மலி காழிமறை ஞானசம் பந்தன்மயி லாடுதுறையைப், புணர்ந்ததமிழ் பத்துமிசை யாலுரைசெய் வார்பெறுவர் பொன் னுலகமே. கக

திருச்சிற்றம்பலம்

திருவைகாவூர் - திருவிராகம். பண் - சாதாரி

திருச்சிற்றம்பலம்

கோழைமிட றாககவி கோளுமில வாகஇசை கூடும்வகையால்
ஏழையடி யாரவர்கள் யாவைசொன சொல்மகிழும் ஈசனிடமாம்
தாழையிள நீர்முதிய காய்கமுகின் வீழநிரை தாறுசிதறி
வாழையுதிர் வீழ்கனிகள் ஊறிவயல் சேறுசெயும் வைகாவிலே. க

அண்டமுறு மேருவரை யங்கிகணை நாணரவ தாகஎழிலார்
விண்டவர்தம் முப்புரமெ ரித்தவிகிர் தன்னவன்வி ரும்புமிடமாம்
புண்டரிக மாமலர்கள் புக்குவிளை யாடுவயல் சூழ்தடமெலாம்
வண்டினிசை பாடஅழ கார்குயில்மி ழற்றுபொழில் வைகாவிலே. உ

ஊனமில ராகியுயர் நற்றவமெய் கற்றவையு ணர்ந்தஅடியார்
ஞானம்மிக நின்றுதொழ நாளுமருள் செய்யவல நாதனிடமாம்
ஆனவயல் சூழ்தருமல் சூழியரு கேபொழில்கள் தோறும்அழகார்
வானமதி யோடுமழை நீள்முகில்கள் வந்தணவும் வைகாவிலே. ங

இன்னவுரு இன்னநிறம் என்றறிவ தேலரிது நீதிபலவும்
தன்னவுரு வாமெனமி குத்ததவன் நீதியொடு தானமர்விடம்
முன்னைவினை போம்வகையி னால்முழு துணர்ந்துமுயல் கின்றமுனிவர்
மன்னஇரு போதுமரு வித்தொழுது சேரும்வயல் வைகாவிலே. ச

வேதமொடு வேள்விபல வாயினமி குத்துவிதி யாறுசமயம்
ஓதியுமு ணர்ந்துமுள தேவர்தொழ நின்றருள்செ யொருவனிடமாம்
மேதகைய கேதகைகள் புன்னையொடு ஞாழலவை மிக்கஅழகால்
மாதவிம ணங்கமழ வண்டுபல பாடுபொழில் வைகாவிலே. ரு

நஞ்சமுது செய்தமணி கண்டன்நமை யாளுடைய ஞானமுதல்வன்
செஞ்சடையி டைப்புனல்க ரந்தசிவ லோகன்அமர் கின்றஇடமாம்
அஞ்சுடரொ டாறுபத மேழின்இசை யெண்ணரிய வண்ணமுளவாய்
மைஞ்சரொடு மாதர்பல ருந்தொழுது சேரும்வயல் வைகாவிலே. சு

நாளும்மிகு பாடலொடு ஞானம்மிகு நல்லமலர் வல்லவகையால்
தோளினொடு கைகுளிர வேதொழும வர்க்கருள்செய் சோதியிடமாம்
நீளவளர் சோலைதொறும் நாளிபல துன்றுகனி நின்றதுதிர
வாளைகுதி கொள்ளமது நாறமலர் விரியும்வயல் வைகாவிலே. எ

கையிருப தோடுமெய்க லங்கிடவி லங்கலையெ டுத்தகடியோன்
ஐயிருசி ரங்களையொ ருங்குடன்நெ ரித்தஅழ கன்றனிடமாம்
கையின்மலர் கொண்டுநல காலையொடு மாலைகரு திப்பலவிதம்
வையகமெ லாமருவி நின்றுதொழு தேத்துமெழில் வைகாவிலே. அ

அந்தமுதல் ஆதிபெரு மானமரர் கோனையயன் மாலுமிவர்கள் [மாம்
எந்தைபெரு மான்இறைவன் என்றுதொழ நின்றருள்செ யீசனிட
சிந்தைசெய்து பாடும்அடி யார்பொடிமெய் பூசியெழு தொண்டரவர்கள்
வந்துபல சந்தமலர் முந்தியணை யும்பதிநல் வைகாவிலே. கூ

ஈசனெமை யாளுடைய எந்தைபெரு மான்இறைவ னென்றுதனையே
பேசுதல்செ யாஅமணர் புத்தரவர் சித்தமணை யாஅவனிடம்

தேசமதெ லாமருவி நின்றுபர வித்திகழ நின்றபுகழோன்
வாசமல ரானபல தூவியணை யும்பதிநல் வைகாவிலே. ௧௦

முற்றும்நமை யாளுடைய முக்கண்முதல் வன்திருவை காவிலதனைச்
செற்றமலி னார்சிரபு ரத்தலைவன் ஞானசம் பந்தன்உரைசெய்
உற்றதமிழ் மாலையீ ரைந்துமிவை வல்லவர் உருத்திரரெனப்
பெற்றமர லோகமிக வாழ்வர்பிரி யாரவர்பெ ரும்புகழொடே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருமாகறல் - திருவிராகம். பண் - சாதாரி

திருச்சிற்றம்பலம்

விங்குவிளை கழனிமிகு கடைசியர்கள் பாடல்விளை யாடல்அரவம்
மங்குலொடு நீள்கொடிகள் மாடம்மலி நீடுபொழில் மாகறலுளான் [னான்
கொங்குவிரி கொன்றையொடு கங்கைவளர் திங்களணி செஞ்சடையி
செங்கண்விடை யண்ணலடி சேர்பவர்கள் தீவினைகள் தீருமுடனே. ௧

கலையினொலி மங்கையர்கள் பாடலொலி யாடல்கவின் எய்தியழகார்
மலையினிகர் மாடமுயர் நீள்கொடிகள் வீசுமலி மாகறலுளான்
இலையின்மலி வேல்நுனைய சூலம்வலன் ஏந்தியெரி புன்சடையினுள்
அலைகொள்புன லேந்துபெரு மானடியை யேத்தவினை யகலுமிகவே.

காலையொடு துந்துபிகள் சங்குகுழல் யாழ்முழவு காமருவுசீர்
மாலைவழி பாடுசெய்து மாதவர்கள் ஏத்திமகிழ் மாகறலுளான்
தோலையுடை பேணியதன் மேலொர்சுடர் நாகமசை யாஅழகிதாப்
பாலையன நீறுபுனை வானடியை யேத்தவினை பறையுமுடனே. ௩

இங்குகதிர் முத்தினொடு பொன்மணிகள் உந்தியெழில் மெய்யுளுடனே
மங்கையரும் மைந்தர்களும் மன்னுபுன லாடிமகிழ் மாகறலுளான்
கொங்குவளர்கொன்றைகுளிர்திங்களணிசெஞ்சடையினானடியையே
நுங்கள்வினை தீரமிக வேத்திவழி பாடுநுக ராஎழுமினே. ௪

துஞ்சுநறு நீலமிருள் நீக்கவொளி தோன்றுமது வார்கழனிவாய்
மஞ்சுமலி பூம்பொழிலின் மயில்கள்நட மாடல்மலி மாகறலுளான்
வஞ்சமத யானையுரி போர்த்துமகிழ் வானொர்மழு வாளன்வளரும்
நஞ்சமிருள் கண்டமுடை நாதனடி யாரைநலி யாவினைகளே. ௫

மன்னுமறை யோர்களொடு பல்படிம மாதவர்கள் கூடியுடனாய்
இன்னவகை யாலினிதி றைஞ்சியிமை யோரிலெழு மாகறலுளான்
மின்னைவிரி புன்சடையின் மேல்மலர்கள் கங்கையொடு திங்களென
உன்னுமவர் தொல்வினைகள் ஒல்கவுயர் வானுலகம் ஏறலெளிதே. [வே

வெய்யவினை நெறிகள்செல வந்தணையும் மேல்வினைகள் வீட்டலுறு
மைகொள்விரி கானல்மது வார்கழனி மாகறலு ளான்எழிலதார் [வீர்
கையகரி கால்வரையின் மேலதுரி தோலுடைய மேனியழகார்
ஐயனடி சேர்பவரை அஞ்சியடை யாவினைகள் அகலுமிகவே. ௭

தூசுதுகில் நீள்கொடிகள் மேகமொடு தோய்வனபொன் மாடமிசை
மாசுபடு செய்கைமிக மாதவர்கள் ஓதிமலி மாகறலுளான் [யே
பாசுபத விச்சைவரி நச்சரவு கச்சையுடை பேணியழகார்
பூசுபொடி யீசனென ஏத்தவினை நிற்றலில போகுமுடனே. ௮

தூயவிரி தாமரைகள் நெய்தல்கழு நீர்குவளை தோன்றமதுவுண்
பாயவரி வண்டுபல பண்முரலும் ஓசைபயில் மாகறலுளான்
சாயவிர லூன்றியஇ ராவணன தன்மைகெட நின்றபெருமான்
ஆயபுக ழேத்தும்அடி யார்கள்வினை யாயினவும் அகல்வதெளிதே. ௯

காவினல பைங்கழல்கள் நீள்முடியின் மேலுணர்வு காமுறவினார்
மாலும்மல ராலும்அறி யாமையெரி யாகியுயர் மாகறலுளான்
நாலுமெரி தோலுமுரி மாமணிய நாகமொடு கூடியுடனாய்
ஆலும்விடை யூர்தியுடை யடிகளடி யாரையடை யாவினைகளே. ௧௦

கடைகொள்நெடு மாடமிக வோங்குகமழ் வீதிமலி காழியவர்கோன்
அடையும்வகை யாற்பரவி யரனையடி கூடுசம் பந்தன்உரையால்
மடைகொள்புன லோடுவயல் கூடுபொழில் மாகறலு ளான்அடியையே
உடையதமிழ் பத்துமுணர் வாரவர்கள் தொல்வினைகள் ஒல்குமுடனே.

திருச்சிற்றம்பலம்

திருப்பட்டீச்சரம் - திருவிராகம். பண் - சாதாரி

திருச்சிற்றம்பலம்

பாடல்மறை சூடல்மதி பல்வளையொர் பாகம்மதில் மூன்றோர்
கணையால், கூடஎரி யூட்டியெழில் காட்டிநிழல் கூட்டுபொழில் சூழ்
பழசையுள், மாடமழ பாடியுறை பட்டிசரம் மேயகடி கட்டரவினார்,
வேடநிலை கொண்டவரை வீடுநெறி காட்டிவினை வீடுமவரே. ௧

நீரின்மலி புன்சடையர் நீளரவு கச்சையது நச்சிலையதோர்
கூரின்மலி சூலமது எந்தியுடை கோவணமும் மானின்உரிதோல்
காரின்மலி கொன்றைவிரி தார்கடவுள் காதல்செய்து மேயநகர்தான்
பாரின்மலி சீர்பழசை பட்டிசர மேத்தவினை பற்றழியுமே. ௨

காலமட வார்கள்புன லாடுவது கௌவைகடி யார்மறுகெலாம்
மாலைமணம் நாறுபழை யாறைமழ பாடியழ காயமலிசீர்ப்
பாலையன நீறுபுனை மார்பனுறை பட்டிசர மேபரவுவார்
மேலையொரு மால்கடல்கள் போல்பெருகி விண்ணுலகம் ஆளுமவரே.

கண்ணின்மிசை நண்ணியிழி விப்பமுக மேத்துகமழ் செஞ்சடையி
பண்ணின்மிசை நின்றுபல பாணிபட ஆடவல பான்மதியினான் [னான்
மண்ணின்மிசை நேரின்மழ பாடிமலி பட்டிசர மேமருவுவார்
விண்ணின்மிசை வாழும்இமை யோரொடுட னாதலது மேவலெளிதே.

மருவமுழ வதிரமழ பாடிமலி மத்தவிழ வார்க்கஅரையார்
பருவமழை பண்கவர்செய் பட்டிசர மேயபடர் புன்சடையினான்
வெருவமத யானையுரி போர்த்துமையை அஞ்சவரு வெள்விடையினான்
உருவமெரி கழல்கள்தொழ வுள்ளமுடை யாரையடை யாவினைகளே.

மறையினொலி கீதமொடு பாடுவன பூதமடி மருவிவிரவார், பறையி
னொலி பெருகநிகழ் நட்டம்அமர் பட்டிசர மேயபணிகூர், பிறையி
னொடு மருவியதொர் சடையினிடை யேற்றபுனல் தோற்றநிலையாம்,
இறைவனடி முறைமுறையின் எத்துமவர் தீத்தொழில்கள் இல்லர்
மிகவே. ௬

பிறவிபிணி மூப்பினொடு நீங்கியிமை யோருலகு பேணலுறுவார்
துறவியெனும் உள்ளமுடை யார்கள்கொடி வீதியழ காயதொகுசீர்
இறைவனுறை பட்டிசர மேத்தியெழு வார்கள்வினை யேதுமிலவாய்
நறவவிரை யாலும்மொழி யாலும்வழி பாடுமற வாதவவரே. ௭

நேசமிகு தோள்வலவ னாகியிறை வன்மலையை நீக்கியிடலும்
ஈசன்விறல் வாட்டிவரை யுற்றதுண ராதநிரம் பாமதியினான்
ஈசனுறை பட்டிசர மேத்தியெழு வார்கள்வினை யேதுமிலவாய்
நாசமற வேண்டுதலின் நண்ணலெளி தாம்அமரர் விண்ணுலகமே. அ

தூயமல ரானும்நெடி யானும்அறி யாரவன தோற்றநிலையின்
ஏயவகை யானதனை யாரதறி வாரணிகொள் மார்பினகலம்
பாயநல நீறதணி வானுமைத னோடுமுறை பட்டிசரமே
மேயவன தீரடியு மேத்தஎளி தாகுநல மேலுலகமே. கூ

தடுக்கினையி டுக்கிமட வார்களிடு பிண்டமது வுண்டுழல்தரும்
கடுப்பொடியு டற்கவசர் கத்துமொழி காதல்செய்தி டாதுகமழ்சேர்
மடைக்கயல்வ யற்கொள்மழ பாடிநகர் நீடுபழை யாறையதனுள்
படைக்கொருக ரத்தன்மிகு பட்டிசர மேத்தவினை பற்றறுதலே. கo

மந்தமலி சோலைமழ பாடிநகர் நீடுபழை யாறையதனுள்
பந்தமுயர் வீடுநல பட்டிசர மேயபடர் புன்சடையனை
அந்தண்மறை யோரினிது வாழ்புகலி ஞானசம் பந்தன்அணியார்
செந்தமிழ்கள் கொண்டினிது செப்பவல தொண்டர்வினை திற்பதிலவே.

திருச்சிற்றம்பலம்

திருத்தேவூர் - திருவிராகம். பண் - சாதாரி

திருச்சிற்றம்பலம்

காடுபயில் வீடுமுடை யோடுகலன் மூடுமுடை யாடைபுலிதோல்
தேடுபலி யூணதுடை வேடமிகு வேதியர்தி ருந்துபதிதான்
நாடகம தாடமஞ்ஞை பாடவரி கோடல்கைம றிப்பநலமார்
சேடுமிகு பேடையனம் ஊடிமகிழ் மாடமிடை தேவூரதுவே. க

கோளரவு கொன்றைநகு வெண்தலையெ ருக்குவன்னி கொக்கிறகொடும்
வாளரவு தண்சலம கட்குலவு செஞ்சடைவ ரத்திறைவனூர்
வேளரவு கொங்கையிள மங்கையர்கள் குங்குமம்வி ரைக்குமணமார்
தேளரவு தென்றல்தெரு வெங்குநிறை வொன்றிவரு தேவூரதுவே.

பண்தடவு சொல்லின்மலை வல்லியுமை பங்கன்எமை யாளும்இறைவன்
எண்தடவு வானவரி றைஞ்சுகழ லோன்இனிதி ருந்தஇடமாம்

விண்டடவு வார்பொழிலு குத்தநற வாடிமலர் சூடிவிரையார்
சென்றடவு மாளிகைசெ றிந்ததிரு வொன்றிவளர் தேவூரதுவே. ௩

மாசில்மன நேசர்தம தாசைவளர் சூலதரன் மேலையிமையோர்
ஈசன்மறை யோதியெரி யாடிமிகு பாசுபதன் மேவுபதிதான்
வாசமலர் கோதுகுயில் வாசகமும் மாதரவர் பூவைமொழியும்
தேசவொலி வீணையொடு கீதமது வீதிநிறை தேவூரதுவே. ௪

கானமுறு மான்மறியன் ஆனையுரி போர்வைகன லாடல்புரிவோன்
ஏனஎயி றாமையிள நாகம்வளர் மார்பினிமை யோர்தலைவனூர்
வானணவு சூதமிள வாழைமகிழ் மாதவிப லாநிலவிவார்
தேனமுது உண்டுவரி வண்டுமருள் பாடிவரு தேவூரதுவே. ௫

ஆறினொடு கீறுமதி யேறுசடை யேறன்அடை யார்நகர்கள்தான்
சீறுமவை வேறுபட நூறுசெய்த நீறன்நமை யாளும்அரனூர்
வீறுமல ரூறுமது வேறிவளர் வாயவிளை கின்றகழனிச்
சேறுபடு செங்கயல்வி ளிப்பஇள வாளைவரு தேவூரதுவே. ௬

கன்றியெழ வென்றிநிகழ் துன்றுபுரம் அன்றவிய நின்றுநகைசெய்
என்றனது சென்றுநிலையெந்தைதன தந்தையமர் இன்பநகர்தான்
முன்றின்மிசை நின்றபல வின்கனிகள் தின்றுகற வைக்குருளைகள்
சென்றிசைய நின்றுதுளி யொன்றவிளை யாடிவளர் தேவூரதுவே. ௭

ஓதம்மலி கின்றதென் இலங்கையரை யன்மலிபு யங்கள்நெரியப்
பாதமலி கின்றவிர லொன்றினில டர்த்தபர மன்தனதிடம்
போதமலி கின்றமட வார்கள்நட மாடலொடு பொங்குமுரவம்
சேதமலி கின்றகரம் வென்றிதொழி லாளர்புரி தேவூரதுவே. ௮

வண்ணமுகி லன்னஎழில் அண்ணலொடு சுண்ணமலி வண்ண மலர்மேல், நண்ணவனும் எண்ணரிய விண்ணவர்கள் கண்ணவன் நலங் கொள்பதிதான், வண்ணவன நுண்ணிடையின் எண்ணரிய அன்ன நடை யின்மொழியினர், திண்ணவண மாளிகைசெ றிந்தஇசை யாழ் மருவு தேவூரதுவே. ௯

பொச்சமமர் பிச்சைபயில் அச்சமணு மெச்சமறு போதியருமா
மொச்சைபயி லிச்சைகடி பிச்சன்மிகு நச்சரவன் மொச்சநகர்தான்
மைச்சின்முகில் வைச்சபொழில் * *
• • • • ௧௦

துங்கமிகு பொங்கரவு தங்குசடை நங்களிறை துன்றுகுழலார்
செங்கயல்கள் மங்கையுமை நங்கையொரு பங்கனமர் தேவூரதன்மேல்
பைங்கமல மங்கணிகொள் திண்புகலி ஞானசம் பந்தனுரைசெய்
சங்கமலி செந்தமிழ்கள் பத்துமிவை வல்லவர்கள் சங்கையிலரே. கக

திருச்சிற்றம்பலம்

திருச்சண்பைநகர் - திருவிராகம். பண் - சாதாரி

திருச்சிற்றம்பலம்

எந்தமது சிந்தைபிரி யாதபெரு மானெனஇ றைஞ்சியிமையோர்
வந்துதுதி செய்யவளர் தூபமொடு தீபம்மலி வாய்மையதனுல்
அந்தியமர் சந்திபல அர்ச்சனைகள் செய்யஅமர் கின்றஅழகன்
சந்தம்மலி குந்தளநன் மாதினொடு மேவுபதி சண்பைநகரே. க

அங்கம்விரி துத்தியர வாமைவிர வாரம்அமர் மார்பிலழகன்
பங்கயமு கத்தரிவை யோடுபிரி யாதுபயில் கின்றபதிதான்
பொங்குபர வைத்திரைகொ ணர்ந்துபவ ளத்திரள்பொ லிந்தவயலே
சங்குபுரி யிப்பிதர ளத்திரள்பி றங்கொளிகொள் சண்பைநகரே. உ

போழும்மதி தாழும்நதி பொங்கரவு தங்குபுரி புன்சடையினன்
யாழின்மொழி மாழைவிழி யேழையிள மாதினொடி ருந்தபதிதான்
வாழைவளர் ஞாழல்மகிழ் மன்னுபுனை துன்னுபொழில் மாடமடலார்
தாழைமுகிழ் வேழமிகு தந்தமென உந்துதகு சண்பைநகரே. ங

கொட்டமுழ விட்டவடி வட்டணைகள் கட்டநட மாடிகுலவும்
பட்டநுதல் கட்டுமலர் மட்டுமலி பாவையொடு மேவுபதிதான்
வட்டமதி தட்டுபொழி லுள்தமது வாய்மைவழு வாதமொழியார்
சட்டகலை யெட்டுமரு வெட்டும்வளர் தத்தைபயில் சண்பைநகரே. ச

பணங்கெழுவு பாடலினொ டாடல்பிரி யாதபரமேட்டிபகவன்,
அணங்கெழுவு பாகமுடை ஆகமுடை யன்பர்பெரு மானதிடமாம்,
இணங்கெழுவி யாடுகொடி மாடமதில் நீடுவிரை யார்புறவெலாந்,
தணங்கெழுவி யேடலர்கொள் தாமரையில் அன்னம்வளர் சண்பை
நகரே. ரு

பாலனுயிர் மேலணவு காலனுயிர் பாறவுதை செய்தபரமன்
ஆலுமயில் போலியலி ஆயிழைத னோடும்அமர் வெய்தும்இடமாம்
ஏலமலி சோலையின வண்டுமலர் கிண்டிநறை வுண்டிசைசெயச்
சாலிவயல் கோலமலி சேலுகள நீலம்வளர் சண்பைநகரே. சு

விண்பொய்அத னல்மழைவி டாதொழியி னும்விளைவு தான்மிகவுடை
மண்பொய்அத னல்வளமி லாதொழியி னுந்தமது வண்மைவழுவார்
உண்பகர வாருலகி னூழிபல தோறும்நிலை யானபதிதான்
சண்பைநகர் ஈசனடி தாழுமடி யார்தமது தன்மையதுவே. எ

வரைக்குலம கட்கொரும றுக்கம்வரு வித்தமதி யில்வலியுடை
அரக்கனது ரக்கரசி ரத்துறவ டர்த்தருள்பு ரிந்தஅழகன்
இருக்கையத ருக்கன்முத லானஇமை யோர்குழுமி யேழ்விழவினில்
தருக்குலநெருக்குமலிதண்பொழில்கள்கொண்டல்அனசண்பைநகரே. அ

நீலவரை போலநிகழ் கேழலுரு நீள்பறவை நேருருவமாம்
மாலுமல ரானும்அறி யாமைவளர் தீயுருவ மானவர்தன்
சேலும்இன வேலும்அன கண்ணியொடு நண்ணுபதி சூழ்புறவெலாஞ்
சாலிமலி சோலைகுயில் புள்ளினொடு கிள்ளைபயில் சண்பைநகரே. கூ

போதியர்கள் பிண்டியர்கள் போதவழு வாதவகை யுண்டுபலபொய்
ஓதியவர் கொண்டுசெய்வ தொன்றுமிலை நன்றதுணர் வீருரைமினோ
ஆதியெமை யாளுடைய அரிவையொடு பிரிவிலி அமர்ந்தபதிதான் [ரே.
சாதிமணி தெண்திரைகொ ணர்ந்துவயல் புகஎறிகொள் சண்பைநக

வாரின்மலி கொங்கையுமை நங்கையொடு சங்கரன்ம கிழ்ந்தமருமூர்
சாரின்முரல் தெண்கடல்வி சும்புறமு ழங்கொலிகொள் சண்பைநகர்
பாரின்மலி கின்றபுகழ் நின்றதமிழ் ஞானசம் பந்தனுரைசெய் [மேல்
சீரின்மலி செந்தமிழ்கள் செப்புமவர் சேர்வர்சிவ லோகநெறியே.

திருச்சிற்றம்பலம்

திருவேதவனம் - திருவிராகம். பண் - சாதாரி

திருச்சிற்றம்பலம்

கற்பொலிசு ரத்தினெரி கானினிடை மாநடம தாடிமடவார்
இற்பலிகொ ளப்புகுதும் எந்தைபெரு மானதிடம் என்பர்புவிமேல்
மற்பொலிக லிக்கடன்ம லேக்குவடெ னத்திரைகொ ழித்தமணியை
விற்பொலிநு தற்கொடியி டைக்கணிகை மார்கவரும் வேதவனமே. க

பண்டிரைப வப்புணரி யிற்கனக மால்வரையை நட்டரவினைக்
கொண்டுகயி றிற்கடைய வந்தவிட முண்டகுழ கன்தனிடமாம்
வண்டிரைநி ழற்பொழிலின் மாதவியின் மீதணவு தென்றல்வெறியார்
வெண்திரைகள் செம்பவளம் உந்துகடல் வந்தமொழி வேதவனமே. உ

காரியன்மெல் லோதிநதி மாதைமுடி வார்சடையில் வைத்துமலையார்
நாரியொரு பால்மகிழு நம்பருறை வென்பர்நெடு மாடம்மறுகில்
தேரியல்வி ழாவினொலி திண்பணில மொண்படக நாளுமிசையால்
வேரிமலி வார்குழல்நன் மாதரிசை பாடலொலி வேதவனமே. ங

நீறுதிரு மேனியின்மி சைத்தொளிபெ றத்தடவி வந்திடபமே
ஏறியுல கங்கள்தொறும் பிச்சைநுகர் இச்சையர் இருந்தபதியாம்
ஊறுபொரு ளின்தமிழி யற்கிளவி தேரும்மட மாதருடனார்
வேறுதிசை யாடவர்கள் கூறஇசை தேருமெழில் வேதவனமே. ச

கத்திரிகை துத்திரிக றங்குதுடி தக்கையொடி டக்கைபடகம்
எத்தனையு லப்பில்கரு வித்திரள லம்பஇமை யோர்கள்பரச
ஒத்தறமி தித்துநட மிட்டவொரு வர்க்கிடம தென்பருலகில்
மெய்த்தகைய பத்தரொடு சித்தர்கள்மி டைந்துகளும் வேதவனமே. ரு

மாலைமதி வாளரவு கொன்றைமலர் துன்றுசடை நின்றுசுழலக்
காலையிலெ ழுந்தகதிர் தாரகைம டங்கஅன லாடும்அரனூர்
சோலையின்ம ரங்கள்தொறும் மிண்டியின வண்டுமது வுண்டிசைசெய
வேலையொலி சங்குதிரை வங்கசுற வங்கொணரும் வேதவனமே. சு

வஞ்சகம னத்தவுணர் வல்லரணம் அன்றவிய வார்சிலைவளைத்
தஞ்சகம வித்தஅம ரர்க்கமரு ரறுதிபெரு மானதிடமாம்
கிஞ்சுகஇ தழ்க்கனிகள் ஊறியசெவ் வாயவர்கள் பாடல்பயில
விஞ்சகஇ யக்கர்முனி வக்கணம்நி றைந்துமிடை வேதவனமே. எ

முடித்தலைகள் பத்துடைமு ருட்டுருஅ ரக்கனைநெ ருக்கிவிரலால்
அடித்தலம்முன் வைத்தலம ரக்கருணை வைத்தவனி டம்பலதுயர்
கெடுத்தலைநி னைத்தறவி யற்றுதல்கி ளர்ந்துபுல வாணர்வறுமை
விடுத்தலைம தித்துநிதி நல்குமவர் மல்குபதி வேதவனமே. ௮

வாசமலர் மேவியுறை வானும்நெடு மாலுமறி யாதநெறியைக்
கூசுதல்செ யாதஅம ணாதரொடு தேரர்குறு காதஅரனூர்
காசுமணி வார்கனகம் நீடுகட லோடுதிரை வார்துவலைமேல்
வீசுவலை வாணரவை வாரிவிலை பேசுமெழில் வேதவனமே. ௯, ௧௦

மந்தமுர வங்கடல்வ ளங்கெழுவு காழிபதி மன்னுகவுணி
வெந்தபொடி நீறணியும் வேதவனம் மேவுசிவன் இன்னருளினால்
சந்தமிவை தண்டமிழின் இன்னிசையெ னப்பரவு பாடலுலகில்
பந்தனுரை கொண்டுமொழி வார்கள்பயில் வார்களுயர் வானுலகமே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருமாணிகுழி - திருவிராகம். பண் - சாதாரி

திருச்சிற்றம்பலம்

பொன்னியல் பொருப்பரையன் மங்கையொரு பங்கர்புனல் தங்குசடைமேல், வன்னியொடு மத்தமலர் வைத்தவிறல் வித்தகர்மகிழ்ந்துறைவிடம், கன்னியிள வாளைகுதி கொள்ளவிள வள்ளைபடர் அள்ளல்வயல்வாய், மன்னியிள மேதிகள்ப டிந்துமனை சேருதவி மாணிகுழியே. ௧

சோதிமிகு நீறதுமெய் பூசியொரு தோலுடைபு னைந்துதெருவே
மாதர்மனை தோறும்இசை பாடிவசி பேசும்அர னார்மகிழ்விடம்
தாதுமலி தாமரைம ணங்கமழ வண்டுமுரல் தண்பழனமிக்
கோதுமலி வேலைபுடை சூழுலகில் நீடுதவி மாணிகுழியே. ௨

அம்பனைய கண்ணுமைம டந்தையவள் அஞ்சிவெரு வச்சினமுடைக்
கம்பமத யானையுரி செய்தஅர னார்கருது மேயவிடமாம்
வம்புமலி சோலைபுடை சூழமணி மாடமது நீடி யழகார்
உம்பரவர் கோன்நகர மென்னமிக மன்னுதவி மாணிகுழியே. ௩

சித்தரிய மத்தொழில னாகிநெடு மால்குறள னாகிமிகவும்
சித்தமதொ ருக்கிவழி பாடுசெய நின்றசிவ லோகனிடமாம்
கொத்தலர்ம லர்ப்பொழிலின் நீடுகுல மஞ்ஞைநடம் ஆடலதுகண்
டொத்தவரி வண்டுகளு லாவியிசை பாடுதவி மாணிகுழியே. ச

மாசில்மதி சூடுசடை மாமுடியர் வல்லசுரர் தொல்நகரமுன்
நாசமது செய்துநல வானவர்க ளுக்கருள்செய் நம்பனிடமாம்
வாசம்மலி மென்குழல்ம டந்தையர்கள் மாளிகையின் மன்னியழகார்
ஊசல்மிசை யேறியினி தாகஇசை பாடுதவி மாணிகுழியே. ரு

மந்தமலர் கொண்டுவழி பாடுசெயும் மாணியுயிர் வவ்வமனமாய்
வந்தவொரு காலனுயிர் மாளவுதை செய்தமணி கண்டனிடமாம்
சந்தினொடு காரகில்சு மந்துதட மாமலர்கள் கொண்டுகெடிலம்
உந்துபுனல் வந்துவயல் பாயும்மண மாருதவி மாணிகுழியே. சு

எண்பெரிய வானவர்கள் நின்றுதுதி செய்யஇறை யேகருணையாய்
உண்பரிய நஞ்சதனை உண்டுலகம் உய்யஅருள் உத்தமனிடம் [வாய்
பண்பயிலும் வண்டுபல கெண்டிமது வுண்டுநிறை பைம்பொழிலின்
ஒண்பலவின் இன்கனிசொ ரிந்துமணம் நாறுதவி மாணிகுழியே. எ

எண்ணம்அது வின்றியெழி லார்கைலை மாமலையெ டுத்ததிறலார்
திண்ணியஅ ரக்கனைநெ ரித்தருள்பு ரிந்தசிவ லோகனிடமாம்
பண்ணமரும் மென்மொழியி னார்பணைமு லைப்பவள வாயழகதார்
ஒண்ணுதல்ம டந்தையர்கு டைந்துபுன லாடுதவி மாணிகுழியே. அ

நேடும்அய னோடுதிரு மாலும்உண ராவகைநி மிர்ந்துமுடிமேல்
ஏடுலவு திங்கள்மத மத்தமித ழிச்சடையெம் ஈசனிடமாம்
மாடுலவு மல்லிகைகு ருந்துகொடி மாதவிசெ ருந்திகுரவின்
ஊடுலவு புன்னைவிரை தாதுமலி சேருதவி மாணிகுழியே. கூ

மொட்டையமண் ஆதர்முது தேரர்மதி யில்லிகள்மு யன்றனபடும்
முட்டைகள்மொ ழிந்தமொழி கொண்டருள்செய் யாதமுதல் வன்ற
மட்டைமலி தாழையிள நீர்முதிய வாழையில்வி ழுந்தஅதரில் [னிடமாம்
ஒட்டமலி பூகம்நிரை தாறுதிர வேறுதவி மாணிகுழியே. க0

உந்திவரு தண்கெடில மோடுபுனல் சூழுதவி மாணிகுழிமேல்
அந்திமதி சூடியஎம் மானையடி சேருமணி காழிநகரான்
சந்தம்நிறை தண்டமிழ்தெ ரிந்துணரு ஞானசம் பந்தனதுசொல்
முந்தியிசை செய்துமொழி வார்களுடை யார்கள்நெடு வானநிலனே.

திருச்சிற்றம்பலம்

திருவேதிகுடி - திருவிராகம். பண் - சாதாரி

திருச்சிற்றம்பலம்

நீறுவரி ஆடரவொ டாமைமன என்புநிரை பூண்பரிடபம்
ஏறுவரி யாவரும் இறைஞ்சுகழல் ஆதியர் இருந்தவிடமாம்
தாறுவிரி பூகமலி வாழைவிரை நாறவிணை வாளைமடுவில்
வேறுபிரி யாதுவிளை யாடவள மாரும்வயல் வேதிகுடியே. ௧

சொற்பிரிவி லாதமறை பாடிநட மாடுவர்தொ லானையுரிவை
மற்புரிபு யத்தினிது மேவுவரெந் நாளும்வளர் வானவர்தொழத்
துற்பரிய நஞ்சமுத மாகமுன் அயின்றவரி யன்றதொகுசீர்
வெற்பரையன் மங்கையொரு பங்கர்நக ரென்பர்திரு வேதிகுடியே. ௨

போழுமதி பூணரவு கொன்றைமலர் துன்றுசடை வென்றிபுகமேல்
வாழுநதி தாழுமரு ளாளரிரு ளார்மிடறர் மாதரிமையோர்
சூழுமிர வாளர்திரு மார்பில்விரி நூலர்வரி தோலருடைமேல்
வேழவுரி போர்வையினர் மேவுபதி யென்பர்திரு வேதிகுடியே. ௩

காடர்கரி காலர்கனல் கையரனல் மெய்யருடல் செய்யர்செவியில்
தோடர்தெரி கீளர்சரி கோவணவர் ஆவணவர் தொல்லைநகர்தான்
பாடலுடை யார்களடி யார்கள்மல ரோடுபுனல் கொண்டுபணிவார்
வேடமொளி யானபொடி பூசியிசை மேவுதிரு வேதிகுடியே. ௪

சொக்கர்துணை மிக்கஎயில் உக்கறமு னிந்துதொழு மூவர்மகிழத்
தக்கஅருள் பக்கமுற வைத்தஅர னிடமிகு தங்குநகர்தான்
கொக்கரவ முற்றபொழில் வெற்றிநிழல் பற்றிவரி வண்டிசைகுலாம்
மிக்கமரர் மெச்சியினி தச்சமிடர் போகநல்கு வேதிகுடியே. ௫

செய்யதிரு மேனிமிசை வெண்பொடிய ணிந்துகரு மானுரிவைபோர்த்
தையமிடு மென்றுமட மங்கையொட கந்திரியும் அண்ணலிடமாம்

வையம்விலை மாறிடினு மேறுபுகழ் மிக்கிழிவி லாதவகையார்
வெய்யமொழி தண்புலவ ருக்குரைசெ யாதஅவர் வேதிகுடியே. ௬

உன்னிஇரு போதும்அடி பேணும்அடி யார்தம்இடர் ஒல்கஅருளித்
துன்னியொரு நால்வருடன் ஆல்நிழலி ருந்ததுணை வன்தனிடமாம்
கன்னியரொ டாடவர்கள் மாமணம்வி ரும்பியரு மங்கலம்மிக
மின்னியலும் நுண்ணிடைநன் மங்கையரி யற்றுபதி வேதிகுடியே. ௭

உரக்கரநெ ருப்பெழநெ ருக்கிவரை பற்றியவொ ருத்தன்முடிதோள்
அரக்கனைய டர்த்தவன் இசைக்கினிது நல்கியருள் அங்கணன்இடம்
முருக்கிதழ்ம டக்கொடிம டந்தையரும் ஆடவரும் மொய்த்தகலவை
விரைக்குழல்மி கக்கமழ விண்ணிசையு லாவுதிரு வேதிகுடியே. ௮

பூவின்மிசை அந்தணனொ டாழிபொலி அங்கையனும் நேடஎரியாய்த்
தேவுமிவ ரல்லரினி யாவரென நின்றுதிகழ் கின்றவரிடம்
பாவலர்கள் ஓசையியல் கேள்வியத ரூதகொடை யாளர்பயில்வாம்
மேவரிய செல்வநெடு மாடம்வளர் வீதிநிகழ் வேதி குடியே. ௯

வஞ்சமணர் தேரர்மதி கேடர்தம்ம னத்தறிவி லாதவர்மொழி
தஞ்சமென என்றும்உண ராதஅடி யார்கருது சைவனிடமாம் [யால்
அஞ்சுபுலன் வென்றறுவ கைப்பொருள் தெரிந்தெழு இசைக்கிளவி
வெஞ்சினம் ஒழித்தவர்கள் மேவிநிகழ் கின்றதிரு வேதிகுடியே. ௧௦

கந்தம்மலி தண்பொழில்நல் மாடமிடை காழிவளர் ஞானமுணர்சம்
பந்தன்மலி செந்தமிழின் மாலைகொடு வேதிகுடி யாதிகழலே
சிந்தைசெய வல்லவர்கள் நல்லவர்க ளென்னநிகழ் வெய்தியிமையோர்
அந்தவுல கெய்திஅர சாளும்அது வேசரதம் ஆணைநமதே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருக்கோகரணம் - திருவிராகம். பண் - சாதாரி

திருச்சிற்றம்பலம்

என்றுமரி யானயல வர்க்கியலி சைப்பொருள்க ளாகியெனதுள்
நன்றுமொளி யானொளிசி றந்தபொன்மு டிக்கடவுள் நண்ணுமிடமாம்
ஒன்றியம னத்தடியர் கூடியிமை யோர்பரவு நீடரவமார்
குன்றுகள் நெருங்கிவிரி தண்டலைமி டைந்துவளர் கோகரணமே. ௧

பேதைமட மங்கையொரு பங்கிடமி குத்திடப மேறியமரர்
வாதைபட வண்கடலெ ழுந்தவிட முண்டசிவன் வாழுமிடமாம்
மாதரொடும் ஆடவர்கள் வந்தடியி றைஞ்சிநிறை மாமலர்கள் தூய்க்
கோதைவரி வண்டிசைகொள் கீதம்முரல் கின்றவளர் கோகரணமே. ௨

முறைத்திறம் உறப்பொருள் தெரிந்துமுனி வர்க்கருளி யாலநிழல்வாய்
மறைத்திறம றத்தொகுதி கண்டுசம யங்களைவ குத்தவனிடம்
துறைத்துறைமி குத்தருவி தூமலர்சு மந்துவரை யுந்திமதகைக்
குறைத்தறையி டக்கரிபு ரிந்திடறு சாரல்மலி கோகரணமே. ௩

இலைத்தலைமி குத்தபடை யெண்கரம்வி ளங்கஎரி வீசிமுடிமேல்
அலைத்தலைதொ குத்தபுனல்செஞ்சடையில்வைத்தஅழ கன்தனிடமாம்
மலைத்தலைவ குத்தமுழை தோறும்உழை வாளரிகள் கேழல்களிறு
கொலைத்தலைம டப்பிடிகள் கூடிவிளை யாடிநிகழ் கோகரணமே. ௪

தொடைத்தலைம லைத்திதழி துன்னியஎ ருக்கலரி வன்னிமுடியின்
சடைத்தலைமி லைச்சியத போதனன் எம்ஆதிபயில் கின்றபதியாம்
படைத்தலைபி டித்துமற வாளரொடு வேடர்கள் பயின்றுகுழுமிக்
குடைத்தலை நதிப்படிய நின்றுபழி தீரநல்கு கோகரணமே. ௫

நீறுதிரு மேனிமிசை யாடிநிறை வார்கழல்சி லம்பொலிசெய
ஏறுவிளை யாடவிசை கொண்டிடுப லிக்குவரும் ஈசனிடமாம்
ஆறுசம யங்களும்வி ரும்பியடி பேணியரன் ஆகமம்மிகக்
கூறுமனம் வேறிரதி வந்தடியர் கம்பம்வரு கோகரணமே. ௬

கல்வடம் மொந்தைகுழல் தாளம்மலி கொக்கரைய ரக்கரைமிசை
பல்லபட நாகம்விரி கோவணவர் ஆளுநக ரென்பரயலே
நல்லமட மாதர்அர னாமமும்ந விற்றியதி ருத்தமுழுகக்
கொல்லவிட நோயகல்த ரப்புகல்கொ டுத்தருளு கோகரணமே. ௭

வரைத்தலம்நெ ருக்கியமு ருட்டிருள்நி றத்தவன வாய்கள்அலற
விரல்தலையு கிர்ச்சிறிது வைத்தபெரு மான்இனிது மேவுமிடமாம்
புரைத்தலைகெ டுத்தமுனி வாணர்பொலி வாகிவினை தீரஅதன்மேல்
குரைத்தலைக ழற்பணிய ஓமம்விலி ரும்புகைசெய் கோகரணமே. ௮

வில்லிமையி னால்விறல் அரக்கனுயிர் செற்றவனும் வேதமுதலோன்
இல்லையுள தென்றிகலி நேடஎரி யாகியுயர் கின்றபரனூர்

எல்லையில் வரைத்தகடல் வட்டமும் இறைஞ்சிநிறை வாசமுருவக்
கொல்லையி விளங்குறவர் தம்மயிர் புலர்த்திவளர் கோகரணமே. ௯

நேசமில் மனச்சமணர் தேரர்கள் நிரந்தமொழி பொய்கள்அகல்வித்
தாசைகொள் மனத்தையடி யாரவர்த மக்கருளும் அங்கணனிடம்
பாசம தறுத்தவனி யிற்பெயர்கள் பத்துடைய மன்னன்அவனைக்
கூசவகை கண்டுபின் அவற்கருள்கள் நல்கவல கோகரணமே. ௧௦

கோடலர வீனும்விரி சாரல்முன் னெருங்கிவளர் கோகரணமே
ஈடமினி தாகவுறை வானடிகள் பேணியணி காழிநகரான்
நாடிய தமிழ்க்கிளவி யின்னிசைசெய் ஞானசம் பந்தன்மொழிகள்
பாடவல பத்தரவர் எத்திசையும் ஆள்வர்பர லோகமெளிதே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருவீழிமிழலை - திருவிராகம். பண் - சாதாரி

திருச்சிற்றம்பலம்

சீர்மருவு தேசினொடு தேசமலி செல்வமறை யோர்கள் பணியத்
தார்மருவு கொன்றையணி தாழ்சடையி னனமர்ச யங்கொள்பதிதான்
பார்மருவு பங்கயமு யர்ந்தவயல் சூழ்பழன நீடஅருகே
கார்மருவு வெண்கனக மாளிகை கவின்பெருகு வீழிநகரே. ௧

பட்டமுழ விட்டபணி லத்தினொடு பன்மறைகள் ஓதுபணிநல்
சிட்டர்கள்ச யத்துதிகள் செய்யவருள் செய்தழல்கொள் மேனியவனூர்
மட்டுலவு செங்கமல வேலிவயல் செந்நெல்வளர் மன்னுபொழில்வாய்
விட்டுலவு தென்றல்விரை நாறுபதி வேதியர்கள் வீழிநகரே. ௨

மண்ணிழிசு ரர்க்குவளம் மிக்கபதி மற்றுமுள மன்னுயிர்களுக்
கெண்ணிழிவில் இன்பநிகழ் வெய்தஎழி லார்பொழில் இலங்கறுபதம்
பண்ணிழிவி லாதவகை பாடமட மஞ்ஞைநட மாடஅழகார்
விண்ணிழிவி மானமுடை விண்ணவர்பி ரான்மருவு வீழிநகரே. ௩

செந்தமிழர் தெய்வமறை நாவர்செழு நற்கலை தெரிந்தஅவரோ
டந்தமில்கு ணத்தவர்கள் அர்ச்சனைகள் செய்யஅமர் கின்றஅரனூர்
கொந்தலர்பொ ழிற்பழன வேலிகுளிர் தண்புனல்வ ளம்பெருகவே
வெந்திறல்வி ளங்கிவளர் வேதியர்வி ரும்புபதி வீழிநகரே. ௪

பூதபதி யாகியபு ராணமுனி புண்ணியநன் மாதைமருவிப்
பேதமதி லாதவகை பாகம்மிக வைத்தபெரு மானதிடமாம்
மாதவர்க ளன்னமறை யாளர்கள்வ ளர்த்தமலி வேள்வியதனால்
ஏதமதி லாதவகை இன்பம்அமர் கின்றஎழில் வீழிநகரே. ரு

மண்ணின்மறை யோர்மருவு வைதிகமும் மாதவமும் மற்றுமுலகத், தெண்ணில்பொரு ளாயவை படைத்தஇமை யோர்கள்பெரு மானதிடமாம், நண்ணிவரு நாவலர்கள் நாள்தொறும்வ ளர்க்கநிகழ் கின்றபுகழ்சேர், விண்ணுலவு மாளிகைநெ ருங்கிவளர் நீள்புரிசை வீழிநகரே. சு

மந்திரநன் மாமறையி னோடுவளர் வேள்விமிசை மிக்கபுகைபோய்
அந்தரவி சும்பணவி அற்புதமெ னப்படரும் ஆழியிருள்வாய்
மந்தரம்நன் மாளிகைநி லாவுமணி நீடுகதிர் விட்டஒளிபோய்
வெந்தழல்வி ளக்கெனவி ரும்பினர்தி ருந்துபதி வீழிநகரே. எ

ஆனவலி யில்தசமு கன்தலைய ரங்கவணி யாழிவிரலால்
ஊனமரு யர்ந்தகுரு திப்புனலில் வீழ்தரவு ணர்ந்தபரனூர்
தேனமர்தி ருந்துபொழில் செங்கனக மாளிகைதி கழ்ந்தமதிளோ
டானதிரு வுற்றவளர் அந்தணர்நி றைந்தஅணி வீழிநகரே. அ

ஏனவுரு வாகிமண் இடந்தஇமை யோனும்எழி லன்னவுருவம்
ஆனவனும் ஆதியினொ டந்தமறி யாதஅழல் மேனியவனூர்
வானணவு மாமதில்ம ருங்கலர்நெ ருங்கியவ ளங்கொள்பொழில்வாய்
வேனலமர் வெய்திடவி ளங்கொளியின் மிக்கபுகழ் வீழிநகரே. கூ

குண்டமண ராகியொரு கோலம்மிகு பீலியொடு குண்டிகைபிடித்
தெண்டிசையு மில்லதொரு தெய்வமுள தென்பாது வென்னபொரு
பண்டையய னன்னவர்கள் பாவனைவி ரும்புபரன் மேவுபதிசீர் [ளாம்
வெண்தரள வாள்நகைநன் மாதர்கள்வி ளங்குமெழில் வீழிநகரே. க0

மத்தம்மலி கொன்றைவளர் வார்சடையில் வைத்தபரன் வீழிநகர்சேர்
வித்தகனை வெங்குருவில் வேதியன்வி ரும்புதமிழ் மாலைகள்வல்லார்
சித்திரவி மானம்அமர் செல்வம்மலி கின்றசிவ லோகம்மருவி
அத்தகுகு ணத்தவர்க ளாகியனு போகமொடியோ கம்மவரதே. கக

திருச்சிற்றம்பலம்

திருத்தோணிபுரம் - திருவிராகம். பண் - சாதாரி

திருச்சிற்றம்பலம்

சங்கமரு முன்கைமட மாதையொரு பாலுடன் விரும்பி
அங்கமுடல் மேலுறஅ ணிந்துபிணி தீரஅருள் செய்யும்
எங்கள்பெரு மானிடமெ னத்தகுமு னைக்கடலின் முத்தந்
துங்கமணி இப்பிகள்க ரைக்குவரு தோணிபுர மாமே. ௧

சல்லரியி யாழ்முழவம் மொந்தைகுழல் தாளமதி யம்பக்
கல்லரிய மாமலையர் பாவையொரு பாகநிலை செய்து
அல்லெரிகை யேந்திநட மாடுசடை யண்ணலிட மென்பர்
சொல்லரிய தொண்டர்துதி செய்யவளர் தோணிபுர மாமே. ௨

வண்டரவு கொன்றைவளர் புன்சடையின் மேல்மதியம் வைத்துப்
பண்டரவு தன்னரையி லார்த்தபர மேட்டிபழி தீரக்
கண்டரவ வொண்கடலில் நஞ்சம்அமு துண்டகட வுள்ளூர்
தொண்டரவர் மிண்டிவழி பாடுமல்கு தோணிபுர மாமே. ௩

கொல்லைவிடை யேறுடைய கோவணவன் நாவணவுமாலை
ஒல்லையுடை யான்அடைய லார்அரணம் ஒள்ளழல் விளைத்த
வில்லையுடை யான்மிக விரும்புபதி மேவிவளர் தொண்டர்
சொல்லையடை வாகஇடர் தீர்த்தருள்செய் தோணிபுர மாமே. ௪

தேயும்மதி யஞ்சடையி லங்கிடவி லங்கன்மலி கானிற்
காயுமடு திண்கரியின் ஈருரிவை போர்த்தவன் நினைப்பார்
தாயெனநி றைந்ததொரு தன்மையினர் நன்மையொடு வாழ்வு
தூயமறை யாளர்முறை யோதிநிறை தோணிபுர மாமே. ௫

பற்றலர்தம் முப்புரமெ ரித்தடிப ணிந்தவர்கள் மேலைக்
குற்றமதொ ழித்தருளு கொள்கையினன் வெள்ளின்முது கானிற்
பற்றவன்இ சைக்கிளவி பாரிடம தேத்தநட மாடுந்
துற்றசடை யத்தனுறை கின்றபதி தோணிபுர மாமே. ௬

பண்ணமரு நான்மறையர் நூன்முறைப யின்றதிரு மார்பிற்
பெண்ணமரும் மேனியினர் தம்பெருமை பேசும்அடி யார்மெய்த்
திண்ணமரும் வல்வினைகள் தீரஅருள் செய்தலுடை யானூர்
துண்ணெனவி ரும்புசரி யைத்தொழிலர் தோணிபுர மாமே. ௭

தென்றிசையி லங்கையரை யன்றிசைகள் வீரம்விளை வித்து
வென்றிசைபு யங்களைய டர்த்தருளும் வித்தகனி டஞ்சீர்
ஒன்றிசையி யற்கிளவி பாடமயி லாடவளர் சோலை
அன்றுசெய வண்டுமலி தும்பிமுரல் தோணிபுர மாமே. ௮

நாற்றம்மிகு மாமலரின் மேலயனும் நாரணனும் நாடி
ஆற்றலத னால்மிகஅ ளப்பரிய வண்ணம்எரி யாகி
ஊற்றம்மிகு கீழுலகும் மேலுலகும் ஓங்கியெழு தன்மைத்
தோற்றம்மிக நாளுமரி யானுறைவு தோணிபுர மாமே. ௯

மூடுதுவ ராடையினர் வேடநிலை காட்டும்அமண் ஆதர்
கேடுபல சொல்லிடுவ ரம்மொழிகெ டுத்தடைவி னனக்
காடுபதி யாகநட மாடிமட மாதொடிரு காதில்
தோடுகுழை பெய்தவர்த மக்குறைவு தோணிபுர மாமே. ௧௦

அஞ்சிருளின் நின்றுநட மாடிமிகு தோணிபுரம் மேய
மஞ்சனைவ ணங்குதிரு ஞானசம் பந்தனசொன் மாலை
தஞ்சமென நின்றிசைமொ ழிந்தஅடி யார்கள்தடு மாற்றம்
வஞ்சமிலர் நெஞ்சிருளும் நீங்கியருள் பெற்றுவளர் வாரே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருஅவளிவணல்லூர் - திருவிராகம். பண் - சாதாரி

திருச்சிற்றம்பலம்

கொம்பிரிய வண்டுலவு கொன்றைபுரி நூலொடுகு லாவித்
தம்பரிசி னொடுசுடு நீறுதட வந்திடப மேறிக்
கம்பரிய செம்பொன்நெடு மாடமதில் கல்வரைவில் லாக
அம்பெரிய வெய்தபெரு மானுறைவ தவளிவணல் லூரே. ௧

ஓமையன கள்ளியன வாகையன கூகைமுர லோசை
ஈமம்எரி சூழ்சுடலை வாசமுது காடுநட மாடித்
தூய்மையுடை அக்கொடர வம்விரவி மிக்கொளிது ளங்க
ஆமையொடு பூணும்அடி கள்ளுறைவ தவளிவணல் லூரே. ௨

நீறுடைய மார்பில்இம வான்மகளொர் பாகம்நிலை செய்து
கூறுடைய வேடமொடு கூடியழ காயதொரு கோலம்

ஏறுடைய ரேனுமிடு காடிரவில் நின்றுநட மாடும்
ஆறுடைய வார்சடையி னன்உறைவ தவளிவணல் லூரே. ௩

பிணியுமிலர் கேடுமிலர் தோற்றமில ரென்றுலகு பேணிப்
பணியும்அடி யார்களன பாவம்அற இன்னருள்ப யந்து
துணியுடைய தோலுமுடை கோவணமும் நாகமுடல் தொங்க
அணியுமழ காகவுடை யானுறைவ தவளிவணல் லூரே. ௪

குழலின்வரி வண்டுமுரல் மெல்லியன பொன்மலர்கள் கொண்டு
கழலின்மிசை யிண்டைபுனை வார்கடவு ளென்றமரர் கூடித்
தொழலும்வழி பாடுமுடை யார்துயரு நோயுமில ராவர்
அழலும்மழு வேந்துகையி னனுறைவ தவளிவணல் லூரே. ௫

துஞ்சலில ராயமரர் நின்றுதொழு தேத்தஅருள் செய்து
நஞ்சுமிட றுண்டுகரி தாயவெளி தாகியொரு நம்பன்
மஞ்சுறநி மிர்ந்துமைந டுங்கஅக லத்தொடுவ ளாவி
அஞ்சமத வேழவுரி யானுறைவ தவளிவணல் லூரே. ௬

கூடரவம் மொந்தைகுழல் யாழ்முழவி னோடும்இசை செய்யப்
பீடரவ மாகுபட ரம்புசெய்து பேரிடப மோடும்
காடரவம் ஆகுகனல் கொண்டிரவில் நின்றுநட மாடி
ஆடரவம் ஆர்த்தபெரு மானுறைவ தவளிவணல் லூரே. ௭

ஒருவரையும் மேல்வலிகொ டேனெனவெ ழுந்தவிற லோன்இப்
பெருவரையின் மேலோர்பெரு மானுமுள னோவெனவெ குண்ட
கருவரையும் ஆழ்கடலும் அன்னதிறல் கைகளுடை யோனை
அருவரையி லூன்றியடர்த் தானுறைவ தவளிவணல் லூரே. ௮

பொறிவரிய நாகமுயர் பொங்கணைய ணைந்தபுக ழோனும்
வெறிவரிய வண்டறைய விண்டமலர் மேல்விழுமி யோனும்
செறிவரிய தோற்றமொடு ஆற்றல்மிக நின்றுசிறி தேயும்
அறிவரிய னயபெரு மானுறைவ தவளிவணல் லூரே. ௯

கழியருகு பள்ளியிட மாகவடு மீன்கள்கவர் வாரும்
வழியருகு சாரவெயில் நின்றடிசி லுன்கிவரு வாரும்
பழியருகு னாரொழிக பான்மையொடு நின்றுதொழு தேத்தும்
அழியருவி தோய்ந்தபெரு மானுறைவ தவளிவணல் லூரே. ௧௦

ஆனமொழி யானதிற லோர்பரவும் அவளிவண லூர்மேல்
போனமொழி நன்மொழிக ளாயபுகழ் தோணிபுர வூரன்
ஞானமொழி மாலைநல நாடுபுகழ் ஞானசம் பந்தன்
தேனமொழி மாலைபுகழ் வார்துயர்கள் நீயதிலர் தாமே. கக

திருச்சிற்றம்பலம்

திருநல்லூர் - திருவிராகம். பண் - சாதாரி

திருச்சிற்றம்பலம்

வண்டிரிய விண்டமலர் மல்குசடை தாழவிடை யேறிப்
பண்டெரிகை கொண்டபர மன்பதிய தென்பாத னயலே
நண்டிரிய நாரையிரை தேரவரை மேலருவி முத்தம்
தெண்திரைகள் மோதவிரி போதுகம ழுந்திருநல் லூரே. க

பல்வளரு நாகம்அரை யார்த்துவரை மங்கையொரு பாகம்
மல்வளர்பு யத்திலணை வித்துமகி ழும்பரம னிடமாம்
சொல்வளரி சைக்கிளவி பாடிமட வார்நடம தாடச்
செல்வமறை யோர்கள்முறை யேத்தவள ருந்திருநல் லூரே. உ

நீடுவரை மேருவில்ல தாகவிகழ் நாகம்அழ லம்பால்
கூடலர்கள் மூவெயிலெ ரித்தகுழ கன்குலவு சடைமேல்
ஏடுலவு கொன்றைபுனல் நின்றுதிக ழுந்நிமல னிடமாம்
சேடுலவு தாமரைகள் நீடுவய லார்திருநல் லூரே. ௩.

கருகுபுரி மிடறர்கரி காடரெரி கைஅதனி லேந்தி
அருகுவரு கரியினுரி யதளர்பட அரவரிடம் வினவில்
முருகுவிரி பொழிலின்மணம் நாறமயி லாலமா மேறித்
திருகுசின மந்திகனி சிந்தமது வார்திருநல் லூரே. ௪

பொடிகொள்திரு மார்பர்புரி நூலர்புனல் பொங்கரவு தங்கும்
முடிகொள்சடை தாழவிடை யேறுமுத லாளரவ ரிடமாம்
இடிகொள்முழ வோசையெழி லார்செய்தொழி லாளர்விழ மல்கச்
செடிகொள்வினை யகலமனம் இனியவர்கள் சேர்திருநல் லூரே. ரு

புற்றரவர் நெற்றியொர்கண் ஒற்றைவிடை யூர்வரடை யாளம்
சுற்றமிருள் பற்றியபல் பூதம்இசை பாடநசை யாலே

கற்றமறை யுற்றுணர்வர் பற்றலர்கள் முற்றும்எயில் மாளச்
செற்றவர் இருப்பிடம்நெ ருக்குபுன லார்திருநல் லூரே. சு

பொங்கரவர் அங்கமுடன் மேலணிவர் ஞாலமிடு பிச்சை
தங்காவ மாகவுழி தந்துமெய்த லங்கியவெண் ணீற்றர்
கங்கையர வம்விரவு திங்கள்சடை யடிகளிடம் வினவில்
செங்கயல்வ திக்குதிகொ ளும்புனல தார்திருநல் லூரே. எ

ஏறுபுகழ் பெற்றதென் இலங்கையவர் கோனையரு வரையில்
சீறியவ னுக்கருளும் எங்கள்சிவ லோகனிட மாகும்
கூறும்அடி யார்களிசை பாடிவலம் வந்தயரும் அருவிச்
சேறுகம ரானவழி யத்திகழ்த ருந்திருநல் லூரே. அ

மாலும்மலர் மேலயனும் நேடியறி யாமையெரி யாய
கோலமுடை யானுணர்வு கோதில்புக ழானிடம தாகும்
நாலுமறை யங்கமுத லாறுமெரி மூன்றுதழ லோம்பும்
சீலமுடை யார்கள்நெடு மாடம்வள ருந்திருநல் லூரே. கூ

கீறுமுடை கோவணமி லாமையிலொ லோவியத வத்தர்
பாறுமுடன் மூடுதுவ ராடையர்கள் வேடமவை பாரேல்
ஏறுமட வாளொடினி தேறிமுனி ருந்தவிட மென்பர்
தேறுமன வாரமுடை யார்குடிசெ யுந்திருநல் லூரே. கO

திரைகளிரு கரையும்வரு பொன்னிநில வுந்திருநல் லூர்மேல்
பரசுதரு பாணியைந லந்திகழ்செய் தோணிபுர நாதன்
உரைசெய்தமிழ் ஞானசம் பந்தனிசை மாலைமொழி வார்போய்
விரைசெய்மலர் தூவவிதி பேணுகதி பேறுபெறு வாரே. கக

திருச்சிற்றம்பலம்

திருப்புறவம் - திருவிராகம். பண் - சாதாரி

திருச்சிற்றம்பலம்

பெண்ணிய லுருவினர் பெருகிய புனல்விர வியபிறைக்
கண்ணியர் கடுநடை விடையினர் கழல்தொழும் அடியவர்
நண்ணிய பிணிகெட அருள்புரி பவர்நணு குயர்பதி
புண்ணிய மறையவர் நிறைபுக ழொலிமலி புறவமே. க

கொக்குடை யிறகொடு பிறையொடு குளிர்சடை முடியினர்
அக்குடை வடமுமொர் அரவமு மலரரை மிசையினில்
திக்குடை மருவிய வுருவினர் திகழ்மலை மகளொடும்
புக்குட னுறைவது புதமலர் விரைகமழ் புறவமே. ௨

கொங்கியல் சுரிகுழல் வரிவளை யிளமுலை யுமையொரு
பங்கியல் திருவுரு வுடையவர் பரசுவொ டிரலைமெய்
தங்கிய காதல முடையவர் விடையவ ருறைபதி
பொங்கிய பொருகடல் கொளவதன் மிசையுயர் புறவமே. ௩

மாதவம் உடைமறை யவனுயிர் கொளவரும் மறலியை
மேதகு திருவடி யிறையுற வுயிரது விலகினர்
சாதக வுருவியல் கானிடை யுமைவெரு வுறவரு
போதக உரியதன் மருவினர் உறைபதி புறவமே. ௪

காமனை யழல்கொள விழிசெய்து கருதலர் கடிமதில்
தூமம துறவிறல் சுடர்கொளு வியஇறை தொகுபதி
ஓமமொ டுயர்மறை பிறவிய வகைதனொ டொளிகெழு
பூமகன் அலரொடு புனல்கொடு வழிபடு புறவமே. ௫

சொல்நய முடையவர் சுருதிகள் கருதிய தொழிலினர்
பின்னையர் நடுவுணர் பெருமையர் திருவடி பேணிட
முன்னைய முதல்வினை யறஅரு ளினருறை முதுபதி
புன்னையின் முகைநிதி பொதியவிழ் பொழிலணி புறவமே. ௬

வரிதரு புலியத ளுடையினர் மழுவெறி படையினர்
பிரிதரு நகுதலை வடமுடி மிசையணி பெருமையர்
எரிதரு முருவினர் இமையவர் தொழுவதொ ரியல்பினர்
புரிதரு குழலுமை யொடுமினி துறைபதி புறவமே. ௭

வசிதரு முருவொடு மலர்தலை யுலகினை வலிசெயும்
நிசிசர னுடலொடு நெடுமுடி யொருபது நெரிவுற
ஒசிதர வொருவிரல் நிறுவினர் ஒளிவளர் வெளிபொடி
பொசிதரு திருவுரு வுடையவர் உறைபதி புறவமே. ௮

தேனகம் மருவிய செறிதரு முளரிசெய் தவிசினில்
ஊனகம் மருவிய புலன்நுகர் வுணர்வுடை யொருவனும்

வானகம் வரையகம் மறிகடல் நிலனெனும் எழுவகைப்
போனகம் மருவினன் அறிவரி யவர்பதி புறவமே. க

கோசர நுகர்பவர் கொழுகிய துவரன துகிலினர்
பாசுர வினைதரு பளகர்கள் பழிதரு மொழியினர்
நீசரை விடுமினி நினைவுறு நிமலர்த முறைபதி
பூசுரர் மறைபயில் நிறைபுகழ் ஒலிமலி புறவமே. க0

போதியல் பொழிலணி புறவநன் னகருறை புனிதனை
வேதிய ரதிபதி மிகுதலை தமிழ்கெழு விரகினன்
ஓதிய வொருபது முரியதொ ரிசைகொள வுரைசெயும்
நீதிய ரவரிரு நிலனிடை நிகழ்தரு பிறவியே. கக

திருச்சிற்றம்பலம்

திருவீழிமிழலை - திருவிராகம். பண் - சாதாரி

திருச்சிற்றம்பலம்

மட்டொளி விரிதரு மலர்நிறை சுரிகுழல் மடவரல்
பட்டொளி மணியல்குல் உமையமை யுருவொரு பாகமாக்
கட்டொளிர் புனலொடு கடியர வுடனுறை முடிமிசை
விட்டொளி யுதிர்பிதிர் மதியவர் பதிவிழி மிழலையே. க

எண்ணிற வரிவளை நெறிகுழல் எழில்மொழி யிளமுலைப்
பெண்ணுறும் உடலினர் பெருகிய கடல்விடம் மிடறினர்
கண்ணுறு நுதலினர் கடியதொர் விடையினர் கனலினர்
விண்ணுறு பிறையணி சடையினர் பதிவிழி மிழலையே. உ

மைத்தகு மதர்விழி மலைமகள் உருவொரு பாகமா
வைத்தவர் மதகரி யுரிவைசெய் தவர்தமை மருவினர்
தெத்தென இசைமுரல் சரிதையர் திகழ்தரும் அரவினர்
வித்தக நகுதலை யுடையவர் இடம்விழி மிழலையே. ங

செவ்வழ லெனநனி பெருகிய வுருவினர் செறிதரு
கவ்வழல் அரவினர் கதிர்முதிர் மழுவினர் தொழுவிலா
மூவ்வழல் நிசிசரர் விறலவை யழிதர முதுமதிள்
வெவ்வழல் கொளநனி முனிபவர் பதிவிழி மிழலையே. ச

பைங்கண தோருபெரு மழலைவெ ளேற்றினர் பலியெனு
எங்கணும் உழிதர்வர் இமையவர் தொழுதெழும் இயல்பினர்
அங்கணர் அமரர்கள் அடியிணை தொழுதெழ ஆரமா
வெங்கண அரவினர் உறைதரு பதிவிழி மிழலையே. ரு

பொன்னன புரிதரு சடையினர் பொடியணி வடிவினர்
உன்னினர் வினையவை களைதலை மருவிய ஒருவனர்
தென்னென விசைமுரல் சரிதையர் திகழ்தரு மார்பினில்
மின்னென மிளிர்வதோர் அரவினர் பதிவிழி மிழலையே. சு

அக்கினொ டரவரை யணிதிகழ் ஒளியதொ ராமைபூண்
டிக்குக மலிதலை கலனென இடுபலி யேகுவர்
கொக்கரை குழல்முழ விழவொடு மிசைவதொர் சரிதையர்
மிக்கவர் உறைவது விரைகமழ் பொழில்விழி மிழலையே. எ

பாதமோர் விரலுற மலையடர் பலதலை நெரிதரப்
பூதமோ டடியவர் புனைகழல் தொழுதெழு புகழினர்
ஓதமொ டொலிதிரை படுகடல் விடமுடை மிடறினர்
வேதமொ டுறுதொழில் மதியவர் பதிவிழி மிழலையே. அ

நீரணி மலர்மிசை உறைபவன் நிறைகடல் உறுதுயில்
நாரண னெனஇவர் இருவரும் நறுமல ரடிமுடி
ஓருணர் வினர்செல வுறலரு முருவினொ டொளிதிகழ்
வீரணர் உறைவது வெறிகமழ் பொழில்விழி மிழலையே. கூ

இச்சைய ரினிதென இடுபலி படுதலை மகிழ்வதோர்
பிச்சையர் பெருமையை யிறைபொழு தறிவென வுணர்விலர்
மொச்சைய அமணரும் முடைபடு துகிலரும் அழிவதோர்
விச்சைய குறைவது விரைகமழ் பொழில்விழி மிழலையே. க0

உன்னிய அருமறை யொலியினை முறைமிகு பாடல்செய்
இன்னிசை யவருறை யெழில்திகழ் பொழில்விழி மிழலையை
மன்னிய புகலியுள் ஞானசம் பந்தன வண்தமிழ்
சொன்னவர் துயரிலர் வியனுல குறுகதி பெறுவரே. கக

திருச்சிற்றம்பலம்

திருச்சேறை - திருவிராகம். பண் - சாதாரி

திருச்சிற்றம்பலம்

முறியுறு நிறமல்கு முகிழ்முலை மலைமகள் வெருவமுன்
வெறியுறு மதகரி யதள்பட வுரிசெய்த விறலினர்
நறியுறும் இதழியின் மலரொடு நதிமதி நகுதலை
செறியுறு சடைமுடி யடிகள்தம் வளநகர் சேறையே. க

புனமுடை நறுமலர் பலகொடு தொழுவதொர் புரிவினர்
மனமுடை யடியவர் படுதுயர் களைவதொர் வாய்மையர்
இனமுடை மணியினொ டரசிலை யொளிபெற மிளிர்வதோர்
சினமுதிர் விடையுடை யடிகள்தம் வளநகர் சேறையே. உ

புரிதரு சடையினர் புலியதள் அரையினர் பொடிபுல்கும்
எரிதரும் உருவினர் இடபம தேறுவ ரீடுலா
வரிதரு வளையின ரவரவர் மகிழ்தர மனைதொறும்
திரிதரு சரிதையர் உறைதரு வளநகர் சேறையே. ௩

துடிபடும் இடையுடை மடவா ளுடனொரு பாகமா
இடிபடு குரலுடை விடையினர் படமுடை யரவினர்
பொடிபடும் உருவினர் புலியுரி பொலிதரும் அரையினர்
செடிபடு சடைமுடி யடிகள்தம் வளநகர் சேறையே. ௪

அந்தர முழிதரு திரிபுர மொருநொடி யளவினில்
மந்தர வரிசிலை யதனிடை யரவரி வாளியால்
வெந்தழி தரவெய்த விடலையர் விடமணி மிடறினர்
செந்தழல் நிறமுடை யடிகள்தம் வளநகர் சேறையே. ௫

மத்தர முறுதிறன் மறவர்தம் வடிவுகொ டுருவுடைப்
பத்தொரு பெயருடை விசயனை அசைவுசெய் பரிசினால்
அத்திரம் அருளும்நம் அடிகள தணிகிளர் மணியணி
சித்திர வளநகர் செறிபொழில் தழுவிய சேறையே. ௬

பாடினர் அருமறை முறைமுறை பொருளென அருநடம்
ஆடினர் உலகிடை அலர்கொடும் அடியவர் துதிசெய
வாடினர் படுதலை யிடுபலி யதுகொடு மகிழ்தரும்
சேடர்தம் வளநகர் செறிபொழில் தழுவிய சேறையே. எ

கட்டுர மதுகொடு கயிலைநன் மலைமலி காமுடை
கீட்டுரன் உடலொடு நெடுமுடி யொருபதும் நெரிசெய்தார்
மட்டுர மலரடி யடியவர் தொழுதெழ அருள்செயும்
சிட்டர்தம் வளநகர் செறிபொழில் தழுவிய சேறையே. அ

பன்றியர் பறவையர் பரிசுடை வடிவொடு படர்தர
அன்றிய அவரவர் அடியொடு முடியவை யறிகிலார்
நின்றிரு புடைபட நெடுவெரி நடுவெயோர் நிகழ்தரச்
சென்றுயர் வெளிபட அருளிய அவர்நகர் சேறையே. கூ

தடுடுறு விரிதுகில் உடையவர் அமணெனும் வடிவினர்
விகடம துறுசிறு மொழியவை நலமில வினவிடல்
முகிழ்தரும் இளமதி யரவொடும் அழகுற முதுநதி
திகழ்தரு சடைமுடி யடிகள்தம் வளநகர் சேறையே. க0

கற்றநன் மறைபயில் அடியவர் அடிதொழு கவினுறு
சிற்றிடை யவளொடு மிடமென வுறைவதோர் சேறைமேல்
குற்றமில் புகலியுள் இகலறு ஞானசம் பந்தன
சொற்றக வுறமொழி பவரழி விலர்துயர் தீருமே. கக

திருச்சிற்றம்பலம்

திருநள்ளாறு - திருவிராகம். பண் - சாதாரி

திருச்சிற்றம்பலம்

தளிரிள வளரொளி தனதெழில் தருதிகழ் மலைமகள்
குளிரிள வளரொளி வனமுலை யிணையவை குலவலின்
நளிரிள வளரொளி மருவுநள் ளாறர்தம் நாமமே
மிளிரிள வளரெரி யிடிலிவை பழுதிலை மெய்ம்மையே. க

போதமர் தருபுரி குழலெழில் மலைமகள் பூணணி
சீதம தணிதரு முகிழிள வனமுலை செறிதலின்
நாதம தெழிலுரு வனையநள் ளாறர்தந் நாமமே
மீதம தெரியினி லிடிலிவை பழுதிலை மெய்ம்மையே. உ

இட்டுறு மணியணி யிணர்புணர் வளரொளி யெழில்வடம்
கட்டுறு கதிரிள வனமுலை யிணையொடு கலவலின்

நட்டுறு செறிவயல் மருவுநள் ளாறர்தந் நாமமே
இட்டுறு மெரியினி லிடிலிவை பழுதிலை மெய்ம்மையே. ௩

மைச்சணி வரியரி நயனிதொன் மலைமகள் பயனுறு
கச்சணி கதிரிள வனமுலை யவையொடு கலவலின்
நச்சணி மிடறுடை யடிகள்நள் ளாறர்தந் நாமமே
மெச்சணி யெரியினி லிடிலிவை பழுதிலை மெய்ம்மையே. ௪

பண்ணியல் மலைமகள் கதிர்விடு பருமணி யணிநிறக்
கண்ணியல் கலசம தனமுலை யிணையொடு கலவலின்
நண்ணிய குளிர்புனல் புகுதுநள் ளாறர்தந் நாமமே
விண்ணியல் எரியினி லிடிலிவை பழுதிலை மெய்ம்மையே. ௫

போதுறு புரிகுழல் மலைமகள் இளவளர் பொன்னணி
சூதுறு தளிர்நிற வனமுலை யவையொடு துதைதலின்
தாதுறு நிறமுடை யடிகள்நள் ளாறர்தந் நாமமே
மீதுறும் எரியினி லிடிலிவை பழுதிலை மெய்ம்மையே. ௬

கார்மலி நெறிபுரி சுரிகுழல் மலைமகள் கவினுறு
சீர்மலி தருமணி யணிமுலை திகழ்வொடு செறிதலின்
தார்மலி நகுதலை யுடையநள் ளாறர்தந் நாமமே
ஏர்மலி யெரியினி லிடிலிவை பழுதிலை மெய்ம்மையே. ௭

மன்னிய வளரொளி மலைமகள் தளிர்நிறம் மதம்மிகு
பொன்னியல் மணியணி கலசம தனமுலை புணர்தலின்
தன்னியல் தசமுகன் நெரியநள் ளாறர்தந் நாமமே
மின்னிய லெரியினி லிடிலிவை பழுதிலை மெய்ம்மையே. ௮

கான்முக மயிலியல் மலைமகள் கதிர்விடு கனமிகு
பான்முக மியல்பணை யிணைமுலை துணையொடு பயிறலின்
நான்முகன் அரிஅறி வரியநள் ளாறர்தந் நாமமே
மேன்முக எரியினி லிடிலிவை பழுதிலை மெய்ம்மையே. ௯

அத்திர நயனிதொன் மலைமகள் பயனுறு மதிசயச்
சித்திர மணியணி திகழ்முலை யிணையொடு செறிதலின்
புத்தரொ டமணர்பொய் பெயருநள் ளாறர்தந் நாமமே
மெய்த்திரன் எரியினி லிடிலிவை பழுதிலை மெய்ம்மையே. ௧௰

சிற்றிடை அரிவைதன் வனமுலை யிணையொடு செறிதரும்
நற்றிற முறுகழு மலநகர் ஞானசம் பந்தன
சொற்றவன் எதிரிடை யெரியினி லிடஇவை கூறிய
சொற்றெரி யொருபதும் அறிபவர் துயரிலர் தூயரே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருவிளமர் - திருவிராகம். பண் - சாதாரி

திருச்சிற்றம்பலம்

மத்தக மணிபெற மலர்வதோர் மதிபுரை நுதல்கரம்
ஒத்தக நகமணி மிளிர்வதோர் அரவினர் ஒளிகிளர்
அத்தக அடிதொழ அருள்பெறு கண்ணொடும் உமையவள்
வித்தகர் உறைவது விரிபொழில் வளநகர் விளமரே. ௧

பட்டில கியமுலை அரிவையர் உலகினில் இடுபலி
ஒட்டில கிணைமர வடியினர் உமையுறு வடிவினர்
சிட்டில கழகிய பொடியினர் விடைமிசை சேர்வதோர்
விட்டில கழகொளி பெயரவர் உறைவது விளமரே. ௨

அங்கதிர் ஒளியினர் அரையிடை மிளிர்வதோர் அரவொடு
செங்கதி ரெனநிற மனையதோர் செழுமணி மார்பினர்
சங்கதிர் பறைகுழல் முழவினொ டிசைதரு சரிதையர்
வெங்கதி ருறமழு வுடையவ ரிடமெனில் விளமரே. ௩

மாடம தெனவளர் மதிலவை யெரிசெய்வர் விரவுசீர்ப்
பீடென வருமறை யுரைசெய்வர் பெரியபல் சரிதைகள்
பாடலர் ஆடிய சுடலையில் இடமுற நடம்நவில்
வேடம துடையவர் வியன்நக ரதுசொலில் விளமரே. ௪

பண்டலை மழலைசெ யாழென மொழியுமை பாகமாக்
கொண்டலை குரைகழ லடிதொழு மவர்வினை குறுகிலர்
விண்டலை யமரர்கள் துதிசெய அருள்புரி விறலினர்
வெண்டலை பலிகொளும் விமலர்தம் வளநகர் விளமரே. ௫

மனைகள்தொ றிடுபலி யதுகொள்வர் மதிபொதி சடையினர்
கனைகடல் அடுவிடம் அமுதுசெய் கறையணி மிடறினர்

முனைகெட வருமதில் எரிசெய்த அவர்கழல் பரவுவார்
வினைகெட அருள்புரி தொழிலினர் செழுநகர் விளமரே. சு

நெறிகமழ் தருமுரை யுணர்வினர் புணர்வுறு மடவரல்
செறிகமழ் தருமுரு வுடையவர் படைபல பயில்பவர்
பொறிகமழ் தருபட அரவினர் விரவிய சடைமிசை
வெறிகமழ் தருமலர் அடைபவர் இடமெனில் விளமரே. எ

தெண்கடல் புடையணி நெடுமதில் இலங்கையர் தலைவனைப்
பண்பட வரைதனில் அடர்செய்த பைங்கழல் வடிவினர்
திண்கட லடைபுனல் திகழ்சடை புகுவதொர் சேர்வினர்
விண்கடல் விடம்மலி யடிகள்தம் வளநகர் விளமரே. அ

தொண்டசை யுறவரு துயருறு காலனை மாள்வுற
அண்டல்செய் திருவரை வெருவுற ஆழ லாயினர்
கொண்டல்செய் தருதிரு மிடறின ரிடமெனில் அளியினம்
விண்டிசை யுறுமலர் நறுமது விரிபொழில் விளமரே. கூ

ஒள்ளியர் தொழுதெழ வுலகினில் உரைசெயும் மொழிபல
கொள்ளிய களவினர் குண்டிகை யவர்தவம் அறிகிலார்
பள்ளியை மெய்யெனக் கருதன்மின் பரிவொடு பேணுவீர்
வெள்ளிய பிறையணி சடையினர் வளநகர் விளமரே. க0

வெந்தவெண் பொடியணி யடிகளை விளமருள் விகிர்தரைச்
சிந்தையுள் இடைபெற வுரைசெய்த தமிழிவை செழுவிய
அந்தணர் புகலியுள் அழகமர் அருமறை ஞானசம்
பந்தன மொழியிவை உரைசெயு மவர்வினை பறையுமே. கக

திருச்சிற்றம்பலம்

திருக்கோச்சைவயம் - பண் - சாதாரி

திருச்சிற்றம்பலம்

திருந்துமா களிற்றிள மருப்பொடு திரண்மணிச் சந்தமுந்திக்
குருந்துமா குரவமுங் குடசமும் பீலியுஞ் சுமந்துகொண்டு
நிரந்துமா வயல்புகு நீடுகோட் டாறுசூழ் கொச்சைமேவிப்
பொருந்தினார் திருந்தடி போற்றிவாழ் நெஞ்சமே புகலதாமே. க

ஏலமார் இலவமோ டினமலர்த் தொகுதியா யெங்கும்நுந்திக்
கோலமா மிளகொடு கொழுங்கனி கொன்றையுங் கொண்டுகோட்டா
றாலியா வயல்புகு மணிதரு கொச்சையே நச்சிமேவும்
நீலமார் கண்டனை நினைமட நெஞ்சமே அஞ்சல்நீயே. உ

பொன்னுமா மணிகொழித் தெறிபுனற் கரைகள்வாய் நுரைகளுந்திக்
கன்னிமார் முலைநலங் கவரவந் தேறுகோட் டாறுசூழ
மன்னினார் மாதொடும் மருவிடங் கொச்சையே மருவில்நாளும்
முன்னைநோய் தொடருமா றில்லைகாண் நெஞ்சமே அஞ்சல்நீயே. ௩

கந்தமார் கேதகைச் சந்தனக் காடுசூழ் கதலிமாடே
வந்துமா வள்ளையின் பவரளிக் குவளையைச் சாடியோடக்
கொந்துவார் குழலினார் குதிகொள்கோட் டாறுசூழ் கொச்சைமேய
எந்தையார் அடிநினைந் துய்யலாம் நெஞ்சமே அஞ்சல்நீயே. ௪

மறைகொளுந் திறலினார் ஆகுதிப் புகைகள்வான் அண்டம்மிண்டிச்
சிறைகொளும் புனலணி செழும்பதி திகழ்மதிற் கொச்சைதன்பால்
உறைவிட மெனமன மதுகொளும் பிரமனார் சிரமறுத்த
இறைவன தடியிணை யிறைஞ்சிவாழ் நெஞ்சமே அஞ்சல்நீயே. ௫

சுற்றமும் மக்களுந் தொக்கஅத் தக்கனைச் சாடியன்றே
உற்றமால் வரையுமை நங்கையைப் பங்கமா உள்கினானோர்
குற்றமில் அடியவர் குழுமிய வீதிசூழ் கொச்சைமேவி
நற்றவம் அருள்புரி நம்பனை நம்பிடாய் நாளும்நெஞ்சே. ௬

கொண்டலார் வந்திடக் கோலவார் பொழில்களிற் கூடிமந்தி
கண்டவார் கழைபிடித் தேறிமா முகில்தனைக் கதுவுகொச்சை
அண்டவா னவர்களும் அமரரும் முனிவரும் பணியஆலம்
உண்டமா கண்டனார் தம்மையே உள்குநீ அஞ்சல்நெஞ்சே. ௭

அடலெயிற் றரக்கனார் நெருக்கிமா மலையெடுத் தார்த்தவாய்கள்
உடல்கெடத் திருவிரல் ஊன்றினார் உறைவிடம் ஒளிகொள்வெள்ளி
மடலிடைப் பவளமும் முத்தமுந் தொத்தவண் புன்னைமாடே
பெடையொடுங் குருகினம் பெருகுதண் கொச்சையே பேணுநெஞ்சே.

அரவினில் துயில்தரும் அரியும்நற் பிரமனும் அன்றயர்ந்து
குரைகழல் திருமுடி யளவிட அரியவர் கொங்குசெம்பொன்

விரிபொழி லிடைமிகு மலைமகள் மகிழ்தர வீற்றிருந்த
கரியநன் மிடறுடைக் கடவுளார் கொச்சையே கருதுநெஞ்சே. ௯

கடுமலி யுடலுடை அமணருங் கஞ்சியுண் சாக்கியரும்
இடுமற வுரைதனை யிகழ்பவர் கருதுநம் ஈசர்வானோர்
நடுவுறை நம்பனை நான்மறை யவர்பணிந் தேத்தஞாலம்
உடையவன் கொச்சையே யுள்கிவாழ் நெஞ்சமே அஞ்சல்நீயே. ௧௦

காய்ந்துதங் காலினாற் காலனைச் செற்றவர் கடிகொள்கொச்சை
ஆய்ந்துகொண் டிடமென இருந்தநல் அடிகளை ஆதரித்தே
ஏய்ந்ததொல் புகழ்மிகும் எழில்மறை ஞானசம் பந்தன்சொன்ன
வாய்ந்தஇம் மாலைகள் வல்லவர் நல்லவா னுலகின் மேலே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருத்துருத்தியும் திருவேள்விக்குடியும் - பண் - சாதாரி

திருச்சிற்றம்பலம்

ஓங்கிமேல் உழிதரும் ஒலிபுனற் கங்கையை ஒருசடைமேல்
தாங்கினார் இடுபலி தலைகல னாக்கொண்ட தம்மடிகள்
பாங்கினால் உமையொடும் பகலிடம் புகலிடம் பைம்பொழில்சூழ்
வீங்குநீர்த் துருத்தியார் இரவிடத் துறைவர்வேள் விக்குடியே. ௧

தூறுசேர் சுடலையிற் சுடரெரி யாடுவர் துளங்கொளிசேர்
நீறுசாந் தெனவுகந் தணிவர்வெண் பிறைபுல்கு சடைமுடியார்
நாறுசாந் திளமுலை யரிவையோ டொருபகல் அமர்ந்தபிரான்
வீறுசேர் துருத்தியார் இரவிடத் துறைவர்வேள் விக்குடியே. ௨

மழைவளர் இளமதி மலரொடு தலைபுல்கு வார்சடைமேல்
கழைவளர் புனல்புகக் கண்டவெங் கண்ணுதற் கபாலியார்தாம்
இழைவளர் துகிலல்குல் அரிவையோ டொருபகல் அமர்ந்தபிரான்
விழைவளர் துருத்தியார் இரவிடத் துறைவர்வேள் விக்குடியே. ௩

கரும்பன வரிசிலைப் பெருந்தகைக் காமனைக் கவினழித்த
சுரும்பொடு தேன்மல்கு தூமலர்க் கொன்றையஞ் சுடர்ச்சடையார்
அரும்பன வனமுலை அரிவையோ டொருபக லமர்ந்தபிரான்
விரும்பிடந் துருத்தியார் இரவிடத் துறைவர்வேள் விக்குடியே. ௪

வளங்கிளர் மதியமும் பொன்மலர்க் கொன்றையும் வாளரவும்
களங்கொளச் சடையிடை வைத்தஎங் கண்ணுதற் கபாலியார்தாம்
துளங்குநூல் மார்பினர் அரிவையோ டொருபகல் அமர்ந்தபிரான்
விளங்குநீர்த் துருத்தியார் இரவிடத் துறைவர்வேள் விக்குடியே. ௫

பொறியுலாம் அடுபுலி யுரிவையர் வரியராப் பூண்டிலங்கும்
நெறியுலாம் பலிகொளும் நீர்மையர் சீர்மையை நினைப்பரியார்
மறியுலாங் கையினர் மங்கையோ டொருபகல் அமர்ந்தபிரான்
வெறியுலாந் துருத்தியார் இரவிடத் துறைவர்வேள் விக்குடியே. ௬

புரிதரு சடையினர் புலியுரி யரையினர் பொடியணிந்து
திரிதரும் இயல்பினர் திரிபுரம் மூன்றையுந் தீவளைத்தார்
வரிதரு வனமுலை மங்கையோ டொருபகல் அமர்ந்தபிரான்
விரிதரு துருத்தியார் இரவிடத் துறைவர்வேள் விக்குடியே. ௭

நீண்டிலங் கவிரொளி நெடுமுடி யரக்கன்இந் நீள்வரையைக்
கீண்டிடந் திடுவனென் றெழுந்தவ னுள்வினை கீழ்ப்படுத்தார்
பூண்டநூல் மார்பினர் அரிவையோ டொருபகல் அமர்ந்தபிரான்
வேண்டிடந் துருத்தியார் இரவிடத் துறைவர்வேள் விக்குடியே. ௮

கரைகடல் அரவணைக் கடவுளுந் தாமரை நான்முகனும்
குரைகழ லடிதொழக் கூரெரி யெனநிறங் கொண்டபிரான்
வரைகெழு மகளொடும் பகலிடம் புகலிடம் வண்பொழில்சூழ்
விரைகமழ் துருத்தியார் இரவிடத் துறைவர்வேள் விக்குடியே. ௯

அயமுக வெயினிலை அமணருங் குண்டருஞ் சாக்கியரும்
நயமுக வுரையினர் நகுவன சரிதைகள் செய்துழல்வார்
கயலன அரிநெடுங் கண்ணியோ டொருபகல் அமர்ந்தபிரான்
வியன்நகர்த் துருத்தியார் இரவிடத் துறைவர்வேள் விக்குடியே. ௧௦

விண்ணுலாம் விரிபொழில் விரைமணல் துருத்திவேள் விக்குடியும்
ஒண்ணுலாம் ஒலிகழல் ஆடுவார் அரிவையோ டுறைபதியை
நண்ணுலாம் புகலியுள் அருமறை ஞானசம் பந்தன்சொன்ன
பண்ணுலாம் அருந்தமிழ் பாடுவார் ஆடுவார் பழியிலரே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருவடகுரங்காடுதுறை - பண் - சாதாரி

திருச்சிற்றம்பலம்

கோங்கமே குரவமே கொழுமலர்ப் புன்னையே கொகுடிமுல்லை
வேங்கையே ஞாழலே விம்முபா திரிகளே விரவியெங்கும்
ஓங்குமா காவிரி வடகரை யடைகுரங் காடுதுறை
வீங்குநீர்ச் சடைமுடி அடிகளா ரிடமென விரும்பினாரே. க

மந்தமா யிழிமதக் களிற்றிள மருப்பொடு பொருப்பின்நல்ல
சந்தமார் அகிலொடு சாதியின் பலங்களுந் தகையமோதி
உந்துமா காவிரி வடகரை யடைகுரங் காடுதுறை
எந்தையார் இணையடி யிமையவர் தொழுதெழும் இயல்பினாரே. உ

முத்துமா மணியொடு முழைவளர் ஆரமும் முகந்துநுந்தி
எத்துமா காவிரி வடகரை யடைகுரங் காடுதுறை
மத்தமா மலரொடு மதிபொதி சடைமுடி யடிகள்தம்மேல்
சித்தமாம் அடியவர் சிவகதி பெறுவது திண்ணமன்றே. ங

கறியுமா மிளகொடு கதலியின் பலங்களுங் கலந்துநுந்தி
எறியுமா காவிரி வடகரை யடைகுரங் காடுதுறை
மறியுலாங் கையினர் மலரடி தொழுதெழ மருவுமுள்ளக்
குறியினா ரவர்மிகக் கூடுவார் நீடுவா னுலகினூடே. ச

கோடிடைச் சொரிந்ததே னதனொடுங் கொண்டல்வாய் விண்டமுன்
காடுடைப் பீலியுங் கடறுடைப் பண்டமுங் கலந்துநுந்தி [னீர்
ஓடுடைக் காவிரி வடகரை யடைகுரங் காடுதுறை
பீடுடைச் சடைமுடி யடிகளா ரிடமெனப் பேணினாரே. ரு

கோலமா மலரொடு தூபமுஞ் சாந்தமுங் கொண்டுபோற்றி
வாலியார் வழிபடப் பொருந்தினார் திருந்துமாங் கனிகளுந்தி
ஆலுமா காவிரி வடகரை யடைகுரங் காடுதுறை
நீலமா மணிமிடற் றடிகளை நினையவல் வினைகள்வீடே. சு, எ

நீலமா மணிநிறத் தரக்கனை யிருபது கரத்தொடொல்க
வாலினாற் கட்டிய வாலியார் வழிபட மன்னுகோயில்
ஏலமோ டிலையில வங்கமே யிஞ்சியே மஞ்சளுந்தி
ஆலியா வருபுனல் வடகரை யடைகுரங் காடுதுறையே. அ

பொருந்திறல் பெருங்கைமா வுரித்துமை யஞ்சவே யொருங்கு நோக்
பெருந்திறத் தநங்கனை அநங்கமா விழித்ததும் பெருமைபோலும் [கிப்
வருந்திறற் காவிரி வடகரை யடைகுரங் காடுதுறை
அருந்திறத் திருவரை யல்லல்கண் டோங்கிய அடிகளாரே. ௯

கட்டமண் தேருங் கடுக்கடின் கழுக்களுங் கசிவொன்றில்லாப்
பிட்டர்தம் மறவுரை கொள்ளலும் பெருவரைப் பண்டமுந்தி
எட்டுமா காவிரி வடகரை யடைகுரங் காடுதுறைச்
சிட்டனா ரடிதொழச் சிவகதி பெறுவது திண்ணமாமே. ௧௦

தாழிளங் காவிரி வடகரை யடைகுரங் காடுதுறைப்
போழிள மதிபொதி புரிதரு சடைமுடிப் புண்ணியனைக்
காழியான் அருமறை ஞானசம் பந்தன கருதுபாடல்
கோழையா அழைப்பினுங் கூடுவார் நீடுவா னுலகினூடே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருநெல்வேலி - பண் - சாதாரி

திருச்சிற்றம்பலம்

மருந்தவை மந்திரம் மறுமைநன் னெறியவை மற்றுமெல்லாம்
அருந்துயர் கெடுமவர் நாமமே சிந்தைசெய் நன்னெஞ்சமே [பூம்
பொருந்துதண் புறவினிற் கொன்றைபொன் சொரிதரத் துன்றுபைம்
செருந்திசெம் பொன்மலர் திருநெல்வே லியுறை செல்வர் தாமே. ௧

என்றுமோ ரியல்பின ரெனநினை வரியவ ரேறதேறிச்
சென்றுதாஞ் செடிச்சியர் மனைதொறும் பலிகொளும் இயல்பதுவே
துன்றுதண் பொழில்நுழைந் தெழுவிய கேதகைப் போதளைந்து
தென்றல்வந் துலவிய திருநெல்வே லியுறை செல்வர் தாமே. ௨

பொறிகிளர் அரவமும் போழிள மதியமுங் கங்கையென்னும்
நெறிபடு குழலியைச் சடைமிசைச் சுலவிவெண் ணீறுபூசிக்
கிறிபட நடந்துநற் கிளிமொழி யவர்மனங் கவர்வர்போலும்
செறிபொழில் தழுவிய திருநெல்வே லியுறை செல்வர் தாமே. ௩

காண்டகு மலைமகள் கதிர்நிலா முறுவல்செய் தருளவேயும்
பூண்டநா கம்புறங் காடரங் காநட மாடல்பேணி

ஈண்டுமா மாடங்கள் மாளிகை மீதெழு கொடிமதியம்
தீண்டிவந் துலவிய திருநெல்வே லியுறை செல்வர் தாமே. ௪

ஏனவெண் கொம்பொடும் எழில்திகழ் மத்தமும் இளஅரவும்
கூனல்வெண் பிறைதவழ் சடையினர் கொல்புலித் தோலுடையார்
ஆனின்நல் லைந்துகந் தாடுவர் பாடுவர் அருமறைகள்
தேனில்வண் டமர்பொழில் திருநெல்வே லியுறை செல்வர்தாமே. ௫

வெடிதரு தலையினர் வேனல்வெள் ளேற்றினர் விரிசடையர்
பொடியணி மார்பினர் புலியதள் ஆடையர் பொங்கரவர்
வடிவுடை மங்கையோர் பங்கினர் மாதரை மையல்செய்வார்
செடிபடு பொழிலணி திருநெல்வே லியுறை செல்வர் தாமே. ௬

அக்குலாம் அரையினர் திரையுலாம் முடியினர் அடிகளன்று
தக்கனார் வேள்வியைச் சாடிய சதுரனார் கதிர்கொள்செம்மை
புக்கதோர் புரிவினர் வரிதரு வண்டுபண் முரலுஞ்சோலைத்
திக்கெலாம் புகழுறுந் திருநெல்வே லியுறை செல்வர் தாமே. ௭

முந்திமா விலங்கலன் றெடுத்தவன் முடிகள்தோள் நெரிதரவே
உந்திமா மலரடி யொருவிரல் உகிர்நுதி யாலடர்த்தார்
கந்தமார் தருபொழில் மந்திகள் பாய்தர மதுத்திவலை
சிந்துபூந் துறைகமழ் திருநெல்வே லியுறை செல்வர் தாமே. ௮

பைங்கண்வாள் அரவணை யவனொடு பனிமல ரோனுங்காணா
அங்கணா அருளென அவரவர் முறைமுறை யிறைஞ்சநின்றார்
சங்கநான் மறையவர் நிறைதர அரிவையர் ஆடல்பேணத்
திங்கள்நாள் விழமல்கு திருநெல்வே லியுறை செல்வர் தாமே. ௯

துவருறு விரிதுகில் ஆடையர் வேடமில் சமணரென்னும்
அவருறு சிறுசொலை யவமென நினையுமெம் அண்ணலார்தாம்
கவருறு கொடிமல்கு மாளிகைச் சூளிகை மயில்கள்ஆலத்
திவருறு மதிதவழ் திருநெல்வே லியுறை செல்வர் தாமே. ௧௦

பெருந்தண்மா மலர்மிசை அயனவன் அனையவர் பேணுகல்வித்
திருந்துமா மறையவர் திருநெல்வே லியுறை செல்வர் தம்மைப்
பொருந்துநீர்த் தடம்மல்கு புகலியுள் ஞானசம் பந்தன்சொன்ன
அருந்தமிழ் மாலைகள் பாடியா டக்கெடும் அருவினையே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருஅம்பர்மாகாளம் - பண் - சாதாரி

திருச்சிற்றம்பலம்

படியுளார் விடையினர் பாய்புலித் தோலினர் பாவநாசர்
பொடிகொள்மா மேனியர் பூதமார் படையினர் பூணநூலர்
கடிகொள்மா மலரிடும் அடியினர் பிடிநடை மங்கையோடும்
அடிகளார் அருள்புரிந் திருப்பிடம் அம்பர்மா காளந்தானே. க

கையின்மா மழுவினர் கடுவிடம் உண்டஎங் காளகண்டர்
செய்யமா மேனியர் ஊனமர் உடைதலைப் பலிதிரிவார்
வையமார் பொதுவினில் மறையவர் தொழுதெழ நடமதாடும்
ஐயன்மா தேவியோ டிருப்பிடம் அம்பர்மா காளந்தானே. உ

பரவின அடியவர் படுதுயர் கெடுப்பவர் பரிவிலார்பால்
கரவினர் கனலன வுருவினர் படுதலைப் பலிகொடேகும்
இரவினர் பகலெரி கானிடை யாடிய வேடர்பூணும்
அரவினர் அரிவையோ டிருப்பிடம் அம்பர்மா காளந்தானே. ௩

நீற்றினர் நீண்டவார் சடையினர் படையினர் நிமலர்வெள்ளை
ஏற்றினர் எரிபுரி கரத்தினர் புரத்துளார் உயிரைவவ்வும்
கூற்றினர் கொடியிடை முனிவுற நனிவருங் குலவுகங்கை
ஆற்றினர் அரிவையோ டிருப்பிடம் அம்பர்மா காளந்தானே. ௪

புறத்தினர் அகத்துளர் போற்றிநின் றழுதெழும் அன்பர் சிந்தைத்
திறத்தினர் அறிவிலாச் செறுமதித் தக்கன்றன் வேள்விசெற்ற
மறத்தினர் மாதவர் நால்வருக் காலின்கீழ் அருள்புரிந்த
அறத்தினர் அரிவையோ டிருப்பிடம் அம்பர்மா காளந்தானே. ௫

பழகமா மலர்பறித் திண்டைகொண் டிறைஞ்சுவார் பாற்செறிந்த
குழகனார் குணம்புகழ்ந் தேத்துவா ரவர்பலர் கூடநின்ற
கழகனார் கரியுரித் தாடகங் காளர்நங் காளியேத்தும்
அழகனார் அரிவையோ டிருப்பிடம் அம்பர்மா காளந்தானே. ௬

சங்கவார் குழையினர் தழலன வுருவினர் தமதருளே
எங்குமா யிருந்தவர் அருந்தவ முனிவருக் களித்துகந்தார்
பொங்குமா புனல்பரந் தரிசிலின் வடகரை திருத்தம்பேணி
அங்கமா றோதுவார் இருப்பிடம் அம்பர்மா காளந்தானே. ௭

பொருசிலை மதனனைப் பொடிபட விழித்தவர் பொழில்இலங்கைக்
குரிசிலைக் குலவரைக் கீழுற அடர்த்தவர் கோயில்கூறில்
பெருசிலை நலமணி பீலியோ டேலமும் பெருகநுந்தும்
அரிசிலின் வடகரை அழகமர் அம்பர்மா காளந்தானே. அ

வரியரா அதன்மிசைத் துயின்றவன் தானும்மா மலருளானும்
எரியராம் அணிகழ லேத்தவொண் ணுவகை யுயர்ந்துபின்னும்
பிரியராம் அடியவர்க் கணியராய்ப் பணிவிலா தவருக்கென்றும்
அரியராய் அரிவையோ டிருப்பிடம் அம்பர்மா காளந்தானே. க

சாக்கியக் கயவர்வன் தலைபறிக் கையரும் பொய்யினுல்நூல்
ஆக்கிய மொழியவை பிழையவை யாதலில் வழிபடுவீர்
வீக்கிய அரவுடைக் கச்சையா னிச்சையா னவர்கட்கெல்லாம்
ஆக்கிய அரனுறை அம்பர்மா காளமே யடைமின்நீரே. க0

செம்பொன்மா மணிகொழித் தெழுதிரை வருபுனல் அரிசில்சூழ்ந்த
அம்பர்மா காளமே கோயிலா அணங்கினே டிருந்தகோனைக்
கம்பினர் நெடுமதிற் காழியுள் ஞானசம் பந்தன்சொன்ன
நம்பிநாள் மொழிபவர்க் கில்லையாம் வினைநலம் பெறுவர்தாமே. கக

திருச்சிற்றம்பலம்

திருவெங்குரு - திருமுக்கால். பண் - சாதாரி

திருச்சிற்றம்பலம்

விண்ணவர் தொழுதெழு வெங்குரு மேவிய
சுண்ணவெண் பொடியணி வீரே
சுண்ணவெண் பொடியணி வீரும தொழுகழல்
எண்ணவல் லாரிட ரிலரே. க

வேதியர் தொழுதெழு வெங்குரு மேவிய
ஆதிய அருமறை யீரே
ஆதிய அருமறை யீருமை யலர்கொடு
ஓதிய ருணர்வுடை யோரே. உ

விளங்குதண் பொழிலணி வெங்குரு மேவிய
இளம்பிறை யணிசடை யீரே

இளம்பிறை யணிசடை யீரும திணையடி
உளங்கொள உறுபிணி யிலரே. ௫

விண்டலர் பொழிலணி வெங்குரு மேவிய
வண்டமர் வளர்சடை யீரே
வண்டமர் வளர்சடை யீருமை வாழ்த்துமத்
தொண்டர்கள் துயர்பிணி யிலரே. ௬

மிக்கவர் தொழுதெழு வெங்குரு மேவிய
அக்கினொ டாவசைத் தீரே
அக்கினொ டாவசைத் தீரும தடியிணை
தக்கவர் உறுவது தவமே. ௭

வெந்தவெண் பொடியணி வெங்குரு மேவிய
அந்தமில் பெருமை யினீரே
அந்தமில் பெருமையி னீருமை யலர்கொடு
சிந்தைசெய் வோர்வினை சிதைவே. ௮

விழமல்கு பொழிலணி வெங்குரு மேவிய
அழல்மல்கும் அங்கையி னீரே
அழல்மல்கும் அங்கையி னீருமை யலர்கொடு
தொழஅல்லல் கெடுவது துணிவே. ௯

வித்தக மறையவர் வெங்குரு மேவிய
மத்தநன் மலர்புனை வீரே
மத்தநன் மலர்புனை வீரும தடிதொழுஞ்
சித்தம துடையவர் திருவே. ௮

மேவலர் தொழுதெழு வெங்குரு மேவிய
ஆலநன் மணிமிடற் றீரே
ஆலநன் மணிமிடற் றீரும தடிதொழுஞ்
சீலம துடையவர் திருவே. ௯

விரைமல்கு பொழிலணி வெங்குரு மேவிய
அரைமல்கு புலியத ளீரே
அரைமல்கு புலியத ளீரும தடியிணை
உரைமல்கு புகழவர் உயர்வே. ௧0, ௧௧

திருச்சிற்றம்பலம்

திருஇன்னம்பர் - திருமுக்கால். பண் - சாதாரி

திருச்சிற்றம்பலம்

எண்டிசைக் கும்புகழ் இன்னம்பர் மேவிய
வண்டிசைக் குஞ்சடை யீரே
வண்டிசைக் குஞ்சடை யீருமை வாழ்த்துவார்
தொண்டிசைக் குந்தொழி லோரே. க

யாழ்நரம் பின்னிசை இன்னம்பர் மேவிய
தாழ்தரு சடைமுடி யீரே
தாழ்தரு சடைமுடி யீருமைச் சார்பவர்
ஆழ்துயர் அருவினை யிலரே. உ

இளமதி நுதலியோ டின்னம்பர் மேவிய
வளமதி வளர்சடை யீரே
வளமதி வளர்சடை யீருமை வாழ்த்துவார்
உளம்மதி மிகவுடை யோரே. ௩

இடிகுரல் இசைமுரல் இன்னம்பர் மேவிய
கடிகமழ் சடைமுடி யீரே
கடிகமழ் சடைமுடி யீரும கழல்தொழும்
அடியவர் அருவினை யிலரே. ௪

இமையவர் தொழுதெழும் இன்னம்பர் மேவிய
உமையொரு கூறுடை யீரே
உமையொரு கூறுடை யீருமை உள்குவார்
அமைதில ராகிலர் அன்பே. ரு

எண்ணரும் புகழுடை இன்னம்பர் மேவிய
தண்ணருஞ் சடைமுடி யீரே
தண்ணருஞ் சடைமுடி யீருமைச் சார்பவர்
விண்ணவர் அடைவுடை யோரே. சு

எழில்திக ழும்பொழில் இன்னம்பர் மேவிய
நிழல்திகழ் மேனியி னீரே
நிழல்திகழ் மேனியி னீருமை நினைபவர்
குழறிய கொடுவினை யிலரே. எ

எத்தரும் புகழணி இன்னம்பர் மேவிய
அத்தனைத் தொலைவுசெய் தீரே
அத்தனைத் தொலைவுசெய் தீருமைத் தொழுபவர்
சுத்தநற் குணமுடை யோரே. அ

இயலுளோர் தொழுதெழும் இன்னம்பர் மேவிய
அயனும்மால் அறிவரி யீரே
அயனும்மால் அறிவரி யீரும தடிதொழும்
இயலுளார் மறுபிறப் பிலரே. க

ஏரமர் பொழிலணி இன்னம்பர் மேவிய
தேரமண் சிதைவுசெய் தீரே
தேரமண் சிதைவுசெய் தீருமைச் சேர்பவர்
ஆர்துயர் அருவினை யிலரே. ௧0

ஏடமர் பொழிலணி இன்னம்பர் ஈசனை
நாடமர் ஞானசம் பந்தன்
நாடமர் ஞானசம் பந்தன நற்றமிழ்
பாடவல் லார்பழி யிலரே. கக

திருச்சிற்றம்பலம்

திருநெல்வெண்ணெய் - திருமுக்கால். பண் - சாதாரி

திருச்சிற்றம்பலம்

நல்வெணெய் விழுதுபெய் தாடுதிர் நாள்தொறும்
நெல்வெணெய் மேவிய நீரே
நெல்வெணெய் மேவிய நீருமை நாள்தொறும்
சொல்வணம் இடுவது சொல்லே. க

நிச்சலும் அடியவர் தொழுதெழு நெல்வெணெய்க்
கச்சிள அரவசைத் தீரே
கச்சிள அரவசைத் தீருமைக் காண்பவர்
அச்சமொ டருவினை யிலரே. உ

நிரைவிரி தொல்புகழ் நெல்வெணெய் மேவிய
அரைவிரி கோவணத் தீரே

அரைவிரி கோவணத் தீருமை யலர்கொடு
உரைவிரிப் போருயர்ந் தோரே. ரு

நீர்மல்கு தொல்புகழ் நெல்வெணெய் மேவிய
ஊர்மல்கி உறையவல் லீரே
ஊர்மல்கி உறையவல் லீருமை யுள்குதல்
பார்மல்கு புகழவர் பண்பே. ௬

நீடிளம் பொழிலணி நெல்வெணெய் மேவிய
ஆடிளம் பாப்பசைத் தீரே
ஆடிளம் பாப்பசைத் தீருமை அன்பொடு
பாடுளம் உடையவர் பண்பே. ௫

நெற்றியோர் கண்ணுடை நெல்வெணெய் மேவிய
பெற்றிகொள் பிறைநுத லீரே
பெற்றிகொள் பிறைநுத லீருமைப் பேணுதல்
கற்றறி வோர்கள்தங் கடனே. ௬

நிறையவர் தொழுதெழு நெல்வெணெய் மேவிய
கறையணி மிடறுடை யீரே
கறையணி மிடறுடை யீருமைக் காண்பவர்
உறைவதும் உம்மடிக் கீழே. ௭

நெருக்கிய பொழிலணி நெல்வெணெய் மேவியன்
றரக்கனை அசைவுசெய் தீரே
அரக்கனை யசைவுசெய் தீருமை அன்புசெய்
திருக்கவல் லாரிட ரிலரே. ௮

நிரைவிரி சடைமுடி நெல்வெணெய் மேவியன்
றிருவரை யிடர்கள் செய்தீரே
இருவரை யிடர்கள்செய் தீருமை யிசைவொடு
பரவவல் லார்பழி யிலரே. ௯

நீக்கிய புனலணி நெல்வெணெய் மேவிய
சாக்கியச் சமண்கெடுத் தீரே
சாக்கியச் சமண்கெடுத் தீருமைச் சார்வது
பாக்கியம் உடையவர் பண்பே. ௧0

நிலம்மல்கு தொல்புகழ் நெல்வெணெ யீசனை
நலம்மல்கு ஞானசம் பந்தன்
நலம்மல்கு ஞானசம் பந்தன செந்தமிழ்
சொலமல்கு வார்துய ரிலரே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருச்சிறுகுடி - திருமுக்கால். பண் - சாதாரி

திருச்சிற்றம்பலம்

திடம்மலி மதிலணி சிறுகுடி மேவிய
படம்மலி அரவுடை யீரே
படம்மலி அரவுடை யீருமைப் பணிபவர்
அடைவதும் அமருல கதுவே. ௧

சிற்றிடை யுடன்மகிழ் சிறுகுடி மேவிய
சுற்றிய சடைமுடி யீரே
சுற்றிய சடைமுடி யீரும தொழுகழல்
உற்றவர் உறுபிணி யிலரே. ௨

தெள்ளிய புனலணி சிறுகுடி மேவிய
துள்ளிய மானுடை யீரே
துள்ளிய மானுடை யீரும தொழுகழல்
உள்ளுதல் செயநலம் உறுமே. ௩

செந்நெல வயலணி சிறுகுடி மேவிய
ஒன்னலர் புரமெரித் தீரே
ஒன்னலர் புரமெரித் தீருமை உன்குவார்
சொல்நலம் உடையவர் தொண்டே. ௪

செற்றினின் மலிபுனற் சிறுகுடி மேவிய
பெற்றிகொள் பிறைமுடி யீரே
பெற்றிகொள் பிறைமுடி யீருமைப் பேணிநஞ்
சற்றவர் அருவினை யிலரே. ௫

செங்கயல் புனலணி சிறுகுடி மேவிய
மங்கையை இடமுடை யீரே

மங்கையை இடமுடை யீருமை வாழ்த்துவார்
சங்கைய திலர்நலர் தவமே. ௬

செறிபொழில் தழுவிய சிறுகுடி மேவிய
வெறிகமழ் சடைமுடி யீரே
வெறிகமழ் சடைமுடி யீருமை விரும்பிமெய்ந்
நெறியுணர் வோருயர்ந் தோரே. ௭

திசையவர் தொழுதெழு சிறுகுடி மேவிய
தசமுகன் உரநெரித் தீரே
தசமுகன் உரநெரித் தீருமைச் சார்பவர்
வசையறும் அதுவழி பாடே. ௮

செருவரை வயலமர் சிறுகுடி மேவிய
இருவரை அசைவுசெய் தீரே
இருவரை அசைவுசெய் தீருமை யேத்துவார்
அருவினை யொடுதுய ரிலரே. ௯

செய்த்தலை புனலணி சிறுகுடி மேவிய
புத்தரொ டமண்புறத் தீரே
புத்தரொ டமண்புறத் தீருமைப் போற்றுதல்
பத்தர்கள் தம்முடைப் பரிசே. ௧0

தேனமர் பொழிலணி சிறுகுடி மேவிய
மானமர் காமுடை யீரே
மானமர் காமுடை யீருமை வாழ்த்திய
ஞானசம் பந்தன தமிழே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருவீழிமிழலை - திருமுக்கால். பண் - சாதாரி

திருச்சிற்றம்பலம்

வெண்மதி தவழ்மதில் மிழலையு ளீர்சடை
ஒண்மதி அணியுடை யீரே
ஒண்மதி அணியுடை யீருமை உணர்பவர்
கண்மதி மிகுவது கடனே. ௧

விதிவழி மறையவர் மிழலையு ளீர்நடம்
சதிவழி வருவதோர் சதிரே
சதிவழி வருவதோர் சதிருடை யீருமை
அதிகுணர் புகழ்வதும் அழகே. ௨

விரைமலி பொழிலணி மிழலையு ளீரொரு
வரைமிசை உறைவதும் வலதே
வரைமிசை யுறைவதோர் வலதுடை யீருமை
உரைசெயும் அவைமறை யொலியே. ௩

விட்டெழில் பெறுபுகழ் மிழலையு ளீர்கையில்
இட்டெழில் பெறுகிற தெரியே
இட்டெழில் பெறுகிற தெரியுடை யீர்புரம்
அட்டது வரைசிலை யாலே. ௪

வேல்நிகர் கண்ணியர் மிழலையு ளீர்நல்ல
பால்நிகர் உருவுடை யீரே
பால்நிகர் உருவுடை யீரும தடனுமை
தான்மிக உறைவது தவமே. ௫

விரைமலி பொழிலணி மிழலையு ளீர்சென்னி
நிரையுற அணிவது நெறியே
நிரையுற அணிவதோர் நெறியுடை யீரும
தரையுற அணிவன அரவே. ௬

விசையுறு புனல்வயல் மிழலையு ளீர்அர
வசைவுற அணிவுடை யீரே
அசைவுற அணிவுடை யீருமை அறிபவர்
நசையுறு நாவினர் தாமே. ௭

விலங்கலொண் மதிலணி மிழலையு ளீரன்றவ்
இலங்கைமன் இடர்கெடுத் தீரே
இலங்கைமன் இடர்கெடுத் தீருமை யேத்துவார்
புலன்களை முனிவது பொருளே. ௮

வெற்பமர் பொழிலணி மிழலையு ளீருமை
அற்புதன் அயனறி யானே

அற்புதன் அயனறி யாவகை நின்றவன்
நற்பதம் அறிவது நயமே. கூ

வித்தக மறையவர் மிழலையு ளீரன்று
புத்தரொ டமணழித் தீரே
புத்தரொ டமணழித் தீருமைப் போற்றுவார்
பத்திசெய் மனமுடை யவரே. க0

விண்பயில் பொழிலணி மிழலையுள் ஈசனைச்
சண்பையுள் ஞானசம் பந்தன்
சண்பையுள் ஞானசம் பந்தன தமிழிவை
ஒண்பொருள் உணர்வதும் உணர்வே. கக

திருச்சிற்றம்பலம்

திருமுதுகுன்றம் - திருமுக்கால். பண் - சாதாரி

திருச்சிற்றம்பலம்

மூரசதிர்ந் தெழுதரு முதுகுன்றம் மேவிய
பாசமர் படையுடை யீரே
பாசமர் படையுடை யீருமைப் பரவுவார்
ஆசர்கள் உலகில்ஆ வாரே. க

மொய்குழ லாளொடு முதுகுன்றம் மேவிய
பையர வம்அசைத் தீரே
பையர வம்அசைத் தீருமைப் பாடுவார்
நைவிலர் நாள்தொறும் நலமே. உ

முழவமர் பொழிலணி முதுகுன்றம் மேவிய
மழவிடை யதுவுடை யீரே
மழவிடை யதுவுடை யீருமை வாழ்த்துவார்
பழியொடு பகையிலர் தாமே. ந

முருகமர் பொழிலணி முதுகுன்றம் மேவிய
உருவமர் சடைமுடி யீரே
உருவமர் சடைமுடி யீருமை யோதுவார்
திருவொடு தேசினர் தாமே. ச. ரு, சு, எ

முத்தி தரும்உயர் முதுகுன்றம் மேவிய
பத்த முடியடர்த் தீரே
பத்த முடியடர்த் தீருமைப் பாடுவார்
சித்தநல் லவ்வடி யாரே. அ

முயன்றவர் அருள்பெறு முதுகுன்றம் மேவியன்
றியன்றவ ரறிவரி யீரே
இயன்றவ ரறிவரி யீருமை யேத்துவார்
பயன்தலை நிற்பவர் தாமே. கூ

மொட்டலர் பொழிலணி முதுகுன்றம் மேவிய
கட்டமண் தேரைக்காய்ந் தீரே
கட்டமண் தேரைக்காய்ந் தீருமைக் கருதுவார்
சிட்டர்கள் சீர்பெறு வாரே. ௧0

மூடிய சோலைசூழ் முதுகுன்றத் தீசனை
நாடிய ஞானசம் பந்தன்
நாடிய ஞானசம் பந்தன செந்தமிழ்
பாடிய அவர்பழி யிலரே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருத்தோணிபுரம் - பண் - பழம்பஞ்சுரம்

திருச்சிற்றம்பலம்

கரும்பமர் வில்லியைக் காய்ந்து காதற் காரிகை மாட்டருளி
அரும்பமர் கொங்கை யோர்பால் மகிழ்ந்த அற்புதஞ் செப்பரிதால்
பெரும்பக லேவந்தென் பெண்மை கொண்டு பேர்த்தவர் சேர்ந்தஇடஞ்
சுரும்பமர் சோலைகள் சூழ்ந்த செம்மைத் தோணி புரந்தானே. ௧

கொங்கியல் பூங்குழற் கொவ்வைச் செவ்வாய்க் கோமள மாதுமையாள்
பங்கிய லுந்திரு மேனி யெங்கும் பால்வெள்ளை நீறணிந்து
சங்கியல் வெள்வளை சோர வந்தென் சாயல்கொண் டார்தமதூர்
துங்கியல் மாளிகை சூழ்ந்த செம்மைத் தோணி புரந்தானே. ௨

மத்தக் களிற்றுரி போர்க்கக் கண்டு மாதுமை பேதுறலுஞ்
சித்தந் தெளியநின் றாடி யேறூர் தீவண்ணர் சில்பலிக்கென்

ஔருத்தபடி வந்தென் னுள்ளங் கொண்ட ஒருவர்க் கிடம்போலுந்
துத்தநல் லின்னிசை வண்டு பாடுந் தோணி புரந்தானே. ங,ச,ரு,சு,எ

வள்ள லிருந்த மலையத னைவலஞ் செய்தல் வாய்மையென
உள்ளங் கொள்ளாது கொதித்தெ ழுந்தன் றெடுத்தோன் உரம்நெரிய
மெள்ள விரல்வைத்தென் உள்ளங் கொண்டார் மேவு மிடம்போலுந்
துள்ளொலி வெள்ளத்தின் மேல்மிதந்த தோணி புரந்தானே. அ

வெல்பற வைக்கொடி மாலும் மற்றை விரைமலர் மேலயனும்
பல்பற வைப்படி யாயுயர்ந்தும் பன்றிய தாய்ப்ப ணிந்துஞ்
செல்வற நீண்டெஞ் சிந்தை கொண்ட செல்வ ரிடம்போலுந்
தொல்பற வைசுமந்தோங்கு செம்மைத் தோணி புரந்தானே. கூ

குண்டிகை பீலிதட் டோடு நின்று கோசாங் கொள்ளியரும்
மண்டைகை யேந்தி மனங்கொள் கஞ்சி யூணரும் வாய்மடிய
இண்டை புனைந்தெரு தேறி வந்தென் எழில்கவர்ந் தாரிடமாந்
தொண்டிசை பாட லறாத தொன்மைத் தோணி புரந்தானே. க0

தூமரு மாளிகை மாடம் நீடு தோணி புரத்திறையை
மாமறை நான்கினொ டங்க மாறும் வல்லவன் வாய்மையினல்
நாமரு கேள்வி நலந்திகழும் ஞான சம்பந் தன்சொன்ன
பாமரு பாடல்கள் பத்தும் வல்லார் பார்முழு தாள்பவரே. கக

திருச்சிற்றம்பலம்

திருஇராமேச்சுரம் - பண் - பழம்பஞ்சுரம்

திருச்சிற்றம்பலம்

திரிதரு மாமணி நாகம்ஆடத் திளைத்தொரு தீயழல்வாய்
நரிகதிக்க எரியேந்தி யாடும் நலமே தெரிந்துணர்வார்
எரிகதிர் முத்தம் இலங்குகானல் இராமேச் சுரம்மேய
விரிகதிர் வெண்பிறை மல்குசென்னி விமலர் செயுஞ்செயலே. க

பொறிகிளர் பாம்பரை யார்த்தயலே புரிவோ டுமைபாடத்
தெறிகிள ரப்பெயர்ந் தெல்லியாடுந் திறமே தெரிந்துணர்வார்
எறிகிளர் வெண்டிரை வந்தபேரும் இராமேச் சுரம்மேய
மறிகிளர் மான்மழுப் புல்குகையெம் மணாளர் செயுஞ்செயலே. உ

அலைவளர் தண்புனல் வார்சடைமேல் அடக்கி யொருபாகம்
மலைவளர் காதலி பாடஆடி மயக்கா வருமாட்சி
இலைவளர் தாழை முகிழ்விரியும் இராமேச் சுரம்மேயார்
தலைவளர் கோலநன் மாலைசூடுந் தலைவர் செயுஞ்செயலே. ௩

மாதன நேரிழை யேர்தடங்கண் மலையான் மகள்பாடத்
தேதெரி அங்கையில் ஏந்தியாடுந் திறமே தெரிந்துணர்வார்
ஏதமி லார்தொழு தேத்திவாழ்த்தும் இராமேச் சுரம்மேயார்
போதுவெண் திங்கள்பைங் கொன்றைசூடும் புனிதர் செயுஞ்செயலே.

சூலமோ டொண்மழு நின்றிலங்கச் சுடுகா டிடமாகக்
கோலநன் மாதுடன் பாடஆடுங் குணமே குறித்துணர்வார்
ஏல நறும்பொழில் வண்டுபாடும் இராமேச் சுரம்மேய
நீலமார் கண்ட முடையவெங்கள் நிமலர் செயுஞ்செயலே. ௫

சணைபிணை வெஞ்சிலை கையிலேந்திக் காமனைக் காய்ந்தவர்தாம்
இணைபிணை நோக்கிநல் லாளொடாடும் இயல்பின ராகிநல்ல
இணைமலர் மேலன்னம் வைகுகானல் இராமேச் சுரம்மேயார்
அணைபிணை புல்கு கரந்தைசூடும் அடிகள் செயுஞ்செயலே. ௬

நீரினார் புன்சடை பின்புதாழ நெடுவெண் மதிசூடி
ஊரினார் அஞ்சிருள் பாடியாடும் உவகை தெரிந்துணர்வார்
ஏரினார் பைம்பொழில் வண்டுபாடும் இராமேச் சுரம்மேய
காரினார் கொன்றைவெண் திங்கள்சூடுங் கடவுள் செயுஞ்செயலே. ௭

பொன்றிகழ் சுண்ணவெண் ணீறுபூசிப் புலித்தோ லுடையாக
மின்றிகழ் சோதியர் பாடலாடல் மிக்கார் வருமாட்சி
என்றுநல் லோர்கள் பாவியேத்தும் இராமேச் சுரம்மேயார்
குன்றினா லன்றரக் கன்தடந்தோள் அடர்த்தார்கொளுங் கொள்கையே.

கோவலன் நான்முகன் நோக்கொணாத குழகன் அழகாய
மேவலன் ஒள்ளெரி யேந்தியாடும் இமையோர் இறைமெய்ம்மை
ஏவல னார்புகழ்த் தேத்திவாழ்த்தும் இராமேச் சுரம்மேய
சேவல வெல்கொடி யேந்துகொள்கை யெம்மிறைவர்செயுஞ்செயலே.

பின்னொடு முன்னிடு தட்டைச்சாத்திப் பிரட்டே திரிவாரும்
பொன்னெடுஞ் சீவரப் போர்வையார்கள் புறங்கூறல் கேளாதே

இன்னெடுஞ் சோலைவண் டியாழ்முரலும் இராமேச் சுரம்மேய
பன்னெடு வெண்தலை கொண்டுழலும் பரமர் செயுஞ்செயலே. கഠ

தேவியை வவ்விய தென்னிலங்கை யரையன் திறல்வாட்டி
ஏவியல் வெஞ்சிலை யண்ணல்நண் ணும் இராமேச் சுரத்தாரை
நாவியன் ஞானசம் பந்தன்நல்ல மொழியால் நவின்றேத்தும்
பாவியன் மாலைவல்லா ரவர்தம்வினை யாயின பற்றறுமே. கக

திருச்சிற்றம்பலம்

திருநாரையூர் - பண் - பழம்பஞ்சுரம்

திருச்சிற்றம்பலம்

காம்பினை வென்றமென் தோளி பாகங் கலந்தான் நலந்தாங்கு
தேம்புனல் சூழ்திகழ் மாமடு வில்திரு நாரை யூர்மேய
பூம்புனல் சேர்புரி புன்ச டையான் புலியின் உரிதோல்மேல்
பாம்பினை வீக்கிய பண்ட ரங்கன் பாதம் பணிவோமே. க

தீவினை யாயின தீர்க்க நின்றான் திருநாரை யூர்மேயான்
பூவினை மேவு சடைமுடி யான்புடை சூழப் பலபூதம்
ஆவினில் ஐந்துங்கொண் டாட்டு கந்தான் அடங்கார் மதில்மூன்றும்
ஏவினை யெய்த ழித்தான் கழலே பரவா எழுவோமே. உ

மாயவன் சேயவன் வெள்ளி யவன்வி டஞ்சேரும் மைமிடற்றன்
ஆயவ னாகியொ ரந்தர மும்மவ னென்று வரையாகம்
தீயவன் நீரவன் பூமி யவன்திரு நாரை யூர்தன்னில்
மேயவ னைத்தொழு வாரவர் மேல்வினை யாயின வீடுமே. ௩

அஞ்சிரு ளாடுவர் தூமு றுவல்து ளங்கும் உடம்பினராய்
அஞ்சுட ரார்எரி யாடு வர்ஆர்அழ லார்வி ழிக்கண்
நஞ்சுமிழ் நாகம் அரைக்கசைப் பர்நல னோங்கு நாரையூர்
எஞ்சிவ னார்க்கடி மைப்படு வார்க்கினி யில்லை யேதமே. ௪

பொங்கி ளங்கொன் றையினர் கடலில் விடமுண் டிமையோர்கள்
தங்களை ஆரிடர் தீர நின்ற தலைவர் சடைமேலோர்
திங்களை வைத்தனல் ஆடலி னார்திரு நாரை யூர்மேய
வெங்கனல் வெண்ணீ றணிய வல்லார் அவரே விழுமியரே. ரு

பாரு றுவாய் மையினர் பரவும் பரமேட்டி பைங்கொன்றைத்
தாரு றுமார் புடையான் மலையின் தலைவன் மலைமகளைச்
சீரு றுமா மறுகிற் சிறைவண் டறையுந் திருநாரை
ஊரு றையெம் மிறைவர்க் கிவையொன் றொடொன் றொவ்வாவே.

கள்ளி யிடுதலை யேந்துகை யர்கரி காடர் கண்ணுதலர்
வெள்ளிய கோவண ஆடை தன்மேன் மிளிரா டரவார்த்து
நள்ளிருள் நட்டம தாடுவர் நல்நலன் ஓங்கு நாரையூர்
உள்ளிய போழ்தி லெம்மேல் வருவல் வினையாயின வோடுமே. ௭

நாமமெ னப்பல வும்முடை யான்நலன் ஓங்கு நாரையூர்
தாமோம் மெனப்ப றையாழ் குழலு ளார்க ழல்பயில
ஈம விளக்கெரி சூழ்சு டலையி யம்பும் இடுகாட்டில்
சாமம் உரைக்கநின் றாடு வானுந் தழலாய சங்கரனே. அ

ஊனு டைவெண் டலைகொண் டுழல்வான் ஒளிர்புன் சடைமேலோர்
வானி டைவெண் மதிவைத் துகந்தான் வரிவண் டியாழ்முரலத்
தேனு டைமா மலரன்னம் வைகுந் திருநாரை யூர்மேய
ஆனி டையைந் துகந்தான் அடியே பரவா அடைவோமே. ௯

தூசு புனைதுவ ராடை மேவுந் தொழிலா ருடம்பினிலுள்
மாசு புனைந்துடை நீத்தவர் கன்மயல் நீர்மை கேளாதே
தேசுடை யீர்கள் தெளிந்த டைமின் திருநாரை யூர்தன்னில்
பூச பொடித்த லைவர் அடியார் அடியே பொருத்தமே. ௧௦

தண்ம திதாழ் பொழில்சூழ் புகலித் தமிழ்ஞான சம்பந்தன்
ஒண்ம திசேர் சடையான் உறையுந் திருநாரை யூர்தன்மேல்
பண்ம தியாற் சொன்ன பாடல் பத்தும் பயின்றார் வினைபோகி
மண்ம தியாதுபோய்வான் புகுவர் வானோர் எதிர்கொளவே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருவலம்புரம் - பண் - பழம்பஞ்சுரம்

திருச்சிற்றம்பலம்

கொடியுடை மும்மதி லூடுருவக் குனிவெஞ்சி லைதாங்கி
இடிபட எய்த அமரர்பிரான் அடியார் இசைந்தேத்தத்
துடியிடை யாளையோர் பாகமாகத் துதைந்தா ரிடம்போலும்
வடிவுடை மேதி வயல்படியும் வலம்புர நன்னகரே. ௧

கோத்தகல் லாடையுங் கோவணமுங் கொடுகொட்டி கொண்டொரு
தேய்த்தன் றநங்கனைத் தேசழித்துத் திசையார் தொழுதேத்தக் [கைத்
காய்த்தகல் லாலதன் கீழிருந்த கடவுள் இடம்போலும்
வாய்த்தமுத் தீத்தொழில் நான்மறையோர் வலம்புர நன்னகரே. ௨

நொய்யதோர் மான்மறி கைவிரலின் நுனைமேல் நிலையாக்கி
மெய்யெரி மேனிவெண் ணீறுபூசி விரிபுன் சடைதாழ
மையிருஞ் சோலை மணங்கமழ இருந்தா ரிடம்போலும்
வைகலும் மாமுழ வம்மதிரும் வலம்புர நன்னகரே. ௩

ஊனம ராக்கை யுடம்புதன்னை யுணரிற் பொருளன்று
தேனமர் கொன்றையி னானடிக்கே சிறுகாலை யேத்துமினோ
ஆனமர் ஐந்துங்கொண் டாட்டுகந்த அடிகள் இடம்போலும்
வானவர் நாள்தொறும் வந்திறைஞ்சும் வலம்புர நன்னகரே. ௪

செற்றெறியுந் திரையார் கலுழிச் செழுநீர்கிளர் செஞ்சடைமேல்
அற்றறியா தனலாடு நட்ட மணியார் தடங்கண்ணி
பெற்றறிவார் எருதேற வல்ல பெருமான் இடம்போலும்
வற்றறியாப் புனல்வாய்ப் புடைய வலம்புர நன்னகரே. ௫

உண்ணவண் ணத்தொளி நஞ்சமுண்டு வுமையோ டுடனாகிச்
சுண்ணவண் ணப்பொடி மேனிபூசிச் சுடர்ச்சோதி நின்றிலங்கப்
பண்ணவண் ணத்தன பாணிசெய்யப் பயின்றா ரிடம்போலும்
வண்ணவண் ணப்பறை பாணியறா வலம்புர நன்னகரே. ௬

புரிதரு புன்சடை பொன்தயங்கப் புரிநூல் புரண்டிலங்க
விரைதரு வேழத்தின் ஈருரிதோல் மேல்மூடி வேய்புரைதோள்
அரைதரு பூந்துகில் ஆரணங்கை யமர்ந்தா ரிடம்போலும்
வரைதரு தொல்புகழ் வாழ்க்கையறா வலம்புர நன்னகரே. ௭

தண்டணை தோளிரு பத்தினொடுந் தலைபத் துடையானை
ஒண்டணை மாதுமை தான்நடுங்க வொருகால் விரலூன்றி
மிண்டது தீர்த்தருள் செய்யவல்ல விகிர்தர்க் கிடம்போலும்
வண்டணை தன்னொடு வைகுபொழில் வலம்புர நன்னகரே. ௮

தாருறு தாமரை மேலயனுந் தரணி யளந்தானும்
தேர்வறி யாவகை யால்இகலித் திகைத்துத் திரிந்தேத்தப்
பேர்வறி யாவகை யால்நிமிர்ந்த பெருமான் இடம்போலும்
வாருறு சோலை மணங்கமழும் வலம்புர நன்னகரே. ௯

காவிய நல்துவ ராடையினர் கடுநோன்பு மேல்கொள்ளும்
பாவிகள் சொல்லைப் பயின்றறியாப் பழந்தொண்டர் உள்ளுருக
ஆவியுள் நின்றருள் செய்யவல்ல அழகர் இடம்போலும்
வாவியின் நீர்வயல் வாய்ப்புடைய வலம்புர நன்னகரே. ௧௦

நல்லியல் நான்மறை யோர்புகலித் தமிழ்ஞான சம்பந்தன்
வல்லியந் தோலுடை யாடையினான் வலம்புர நன்னகரைச்
சொல்லிய பாடல்கள் பத்துஞ்சொல்ல வல்லவர் தொல்வினைபோய்ச்
செல்வன சேவடி சென்றணுகிச் சிவலோகஞ் சேர்வாரே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருப்பரிதிநியமம் - பண் - பழம்பஞ்சுரம்

திருச்சிற்றம்பலம்

விண்கொண்ட தூமதி சூடிநீடு விரிபுன் சடைதாழப்
பெண்கொண்ட மார்பில்வெண் ணீறுபூசிப் பேணார் பலிதேர்ந்து
கண்கொண்ட சாயலோ டேர்கவர்ந்த கள்வர்க் கிடம்போலும்
பண்கொண்ட வண்டினம் பாடியாடும் பரிதிந் நியமமே. ௧

அரவொலி வில்லொலி அம்பினொலி அடங்கார் புரமூன்றும்
நிரவவல்லார் நிமிர்புன் சடைமேல் நிரம்பா மதிசூடி
இரவில் புகுந்தென் எழில்கவர்ந்த இறைவர்க் கிடம்போலும்
பரவவல் லார்வினை பாழ்படுக்கும் பரிதிந் நியமமே. ௨

வாண்முக வார்குழல் வாள்நெடுங்கண் வளைத்தோள் மாதஞ்ச
நீண்முக மாகிய பைங்களிற்றின் உரிமேல் நிகழ்வித்து

நான்முகங் காட்டி நலங்கவர்ந்த நாதர்க் கிடம்போலும்
பாண்முக வண்டினம் பாடியாடும் பரிதிந் நியமமே. ரு

வெஞ்சுரஞ் சேர்விளை யாடல்பேணி விரிபுன் சடைதாழத்
துஞ்சிருள் மாலையும் நண்பகலுந் துணையார் பலிதேர்ந்து
அஞ்சுரும் பார்குழல் சோரவுள்ளங் கவர்ந்தார்க் கிடம்போலும்
பஞ்சுரம் பாடிவண் டியாழ்முரலும் பரிதிந் நியமமே. சு

நீர்புல்கு புன்சடை நின்றிலங்க நெடுவெண் மதிசூடித்
தார்புல்கு மார்பில்வெண் ணீறணிந்து தலையார் பலிதேர்வார்
ஏர்புல்கு சாய லெழில்கவர்ந்த இறைவர்க் கிடம்போலும்
பார்புல்கு தொல்புக ழால்விளங்கும் பரிதிந் நியமமே. ரு

வெங்கடுங் காட்டகத் தாடல்பேணி விரிபுன் சடைதாழத்
திங்கள் திருமுடிமேல் விளங்கத் திசையார் பலிதேர்வார்
சங்கொடு சாயல் எழில்கவர்ந்த சைவர்க் கிடம்போலும்
பைங்கொடி முல்லை படர்புறவிற் பரிதிந் நியமமே. சு

பிறைவளர் செஞ்சடை பின்தயங்கப் பெரிய மழுவேந்தி
மறையொலி பாடிவெண் ணீறுபூசி மனைகள் பலிதேர்வார்
இறைவளை சோர எழில்கவர்ந்த இறைவர்க் கிடம்போலும்
பறையொலி சங்கொலி யால்விளங்கும் பரிதிந் நியமமே. எ

ஆசடை வானவர் தானவரோ டடியார் அமர்ந்தேத்த
மாசடை யாதவெண் ணீறுபூசி மனைகள் பலிதேர்வார்
காசடை மேகலை சோரவுள்ளங் கவர்ந்தார்க் கிடம்போலும்
பாசடைத் தாமரை வைகுபொய்கைப் பரிதிந் நியமமே. அ

நாடினர் காண்கிலர் நான்முகனுந் திருமால் நயந்தேத்தக்
கூடலர் ஆடல ராகிநாளுங் குழகர் பலிதேர்வார்
ஏடலர் சோர எழில்கவர்ந்த இறைவர்க் கிடம்போலும்
பாடலர் ஆடல ராய்வணங்கும் பரிதிந் நியமமே. க

கல்வளர் ஆடையர் கையிலுண்ணுங் கழுக்கள் இழுக்கான
சொல்வள மாக நினைக்க வேண்டா சுடுநீ றதுவாடி
நல்வளை சோர நலங்கவர்ந்த நாதர்க் கிடம்போலும்
பல்வளர் முல்லையங் கொல்லைவேலிப் பரிதிந் நியமமே. ௧0

பையர வம்விரி காந்தள்விம்மு பரிதிந் நியமத்துத்
தையலொர் பாகம் அமர்ந்தவனைத் தமிழ்ஞான சம்பந்தன்
பொய்யிலி மாலை புனைந்தபத்தும் பரவிப் புகழ்ந்தேத்த
ஐயுற வில்லை பிறப்பறுத்தல் அவலம் அடையாவே. கக

திருச்சிற்றம்பலம்

திருக்கலிக்காழூர் - பண் - பழம்பஞ்சுரம்

திருச்சிற்றம்பலம்

மடல்வரை யின்மது விம்முசோலை வயல்சூழ்ந் தழகாருங்
கடல்வரை யோதங் கலந்துமுத்தஞ் சொரியுங் கலிக்காழூர்
உடல்வரை யின்னுயிர் வாழ்க்கையாய வொருவன் கழலேத்த
இடர்தொட ராவினை யானசிந்தும் இறைவன் அருளாமே. க

மைவரை போல்திரை யோடுகூடிப் புடையே மலிந்தோதம்
கைவரை யால்வளர் சங்கமெங்கும் மிகுக்குங் கலிக்காழூர்
மெய்வரை யான்மகள் பாகன்தன்னை விரும்ப உடல்வாழும்
ஐவரை யாசறுத் தாளுமென்பர் அதுவுஞ் சரதமே. உ

தூவிய நீர்மல ரேந்திவையத் தவர்கள் தொழுதேத்தக்
காவியின் நேர்விழி மாதரென்றுங் கவினார் கலிக்காழூர்
மேவிய ஈசனை யெம்பிரானை விரும்பி வழிபட்டால்
ஆவியுள் நீங்கலன் ஆதிமூர்த்தி அமரர் பெருமானே. ௩

குன்றுகள் போல்திரை யுந்தியந்தண் மணியார் தாமேதி
கன்றுடன் புல்கியா யம்மனைசூழ் கவினார் கலிக்காழூர்
என்றுணர் ஊழியும் வாழுமெந்தை பெருமான் அடியேத்தி
நின்றுணர் வாரை நினையகில்லார் நீசர் நமன்தமரே. ௪

வானிடை வாண்மதி மாடந்தீண்ட மருங்கே கடலோதங்
கானிடை நீழலிற் கண்டல்வாழுங் கழிசூழ் கலிக்காழூர்
ஆனிடை யைந்துகந் தாடினானை அமரர் தொழுதேத்த
ஊனடை வாம்வணம் அன்புதந்த நலமே நினைவோமே. ரு

துறைவளர் கேதகை மீதுவாசம் சூழ்வான் மலிதென்றல்
கறைவள ருங்கட லோதமென்றுங் கலிக்குங் கலிக்காழூர்

மறைவள ரும்பொரு ளாயினானை மனத்தால் நினைந்தேத்த
நிறைவள ரும்புக ழெய்தும்வாதை நினையா வினைபோமே. ௬

கோலநன் மேனியின் மாதர்மைந்தர் கொணர்மங் கலியத்திற்
காலமும் பொய்க்கினுந் தாம்வழுவா தியற்றுங் கலிக்காமூர்
ஞாலமுந் தீவளி ஞாயிறாய நம்பன் கழலேத்தி
ஓலமி டாதவர் ஊழியென்றும் உணர்வைத் துறந்தாரே. ௭

ஊரா வந்தலை நீள்முடியான் ஒலிநீர் உலகாண்டு
காரா வக்கடல் சூழவாழும் பதியாங் கலிக்காமூர்
தோரா வல்குல்அம் பேதையஞ்சத் திருந்து வரைபேர்த்தான்
ஆரா வம்பட வைத்தபாதம் உடையான் இடமாமே. ௮

அருவரை யேந்திய மாலும்மற்றை அலர்மேல் உறைவானும்
இருவரும் அஞ்ச எரியுருவாய் எழுந்தான் கலிக்காமூர்
ஒருவரை யான்மகள் பாகன்தன்னை யுணர்வால் தொழுதேத்தத்
திருமரு வுஞ்சிதை வில்லைச்செம்மைத் தேசுண் டவர்பாலே. ௯

மாசு பிறக்கிய மேனியாரும் மருவுந் துவராடை
மீசு பிறக்கிய மெய்யினாரும் அறியார் அவர்தோற்றங்
காசினி நீர்த்திரள் மண்டியெங்கும் வளமார் கலிக்காமூர்
ஈசனை யெந்தைபி ரானையேத்தி நினைவார் வினைபோமே. ௧௦

ஆழியுள் நஞ்சமு தாரவுண்டன் றமரர்க் கமுதுண்ண
ஊழிதோ றும்முள ராஅளித்தான் உலகத் துயர்கின்ற
காழியுள் ஞானசம் பந்தன்சொன்ன தமிழாற் கலிக்காமூர்
வாழி யெம்மானை வணங்கியேத்த மருவா பிணிதானே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருவலஞ்சுழி - பண் - பழம்பஞ்சுரம்

திருச்சிற்றம்பலம்

பள்ளம தாய படர்சடைமேற் பயிலுந் திரைக்கங்கை
வெள்ளம தார விரும்பிநின்ற விகிர்தன் விடையேறும்
வள்ளல் வலஞ்சுழி வாணனென்று மருவி நினைந்தேத்தி
உள்ளம் உருக உணருமின்கள் உறுநோ யடையாவே. ௧

காரணி வெள்ளை மதியஞ்சூடிக் கமழ்புன் சடைதன்மேல்
தாரணி கொன்றையுந் தண்ணெருக்குந் தழைய நுழைவித்து
வாரணி கொங்கைநல் லாள்தன்னோடும் வலஞ்சுழி மேவியவர்
ஊரணி பெய்பலி கொண்டுகந்த உவகை அறியோமே. உ

பொன்னிய லுந்திரு மேனிதன்மேற் புரிநூல் பொலிவித்து
மின்னிய லுஞ்சடை தாழவேழ உரிபோர்த் தரவாட
மன்னிய மாமறை யோர்கள்போற்றும் வலஞ்சுழி வாணர்தம்மேல்
உன்னிய சிந்தையில் நீங்ககில்லார்க் குயர்வாம் பிணிபோமே. ௩

விடையொரு பாலொரு பால்விரும்பு மெல்லியல் புல்கியதோர்
சடையொரு பாலொரு பாலிடங்கொள் தாழ்குழல் போற்றிசைப்ப
நடையொரு பாலொரு பால்சிலம்பு நாளும் வலஞ்சுழிசேர்
அடையொரு பாலடை யாதசெய்யுஞ் செய்கை அறியோமே. ச

கையம ரும்மழு நாகம்வீணை கலைமான் மறியேந்தி
மெய்யம ரும்பொடிப் பூசிவீசுங் குழையார் தருதோடும்
பையம ரும்அர வாடஆடும் படர்சடை யார்க்கிடமாம்
மையம ரும்பொழில் சூழும்வேலி வலஞ்சுழி மாநகரே. ரு

தண்டொடு சூலந் தழையவேந்தித் தையலொருபாகம்
கண்டிடு பெய்பலி பேணினானார் கரியின் உரிதோலர்
வண்டிடு மொய்பொழில் சூழ்ந்தமாட வலஞ்சுழி மன்னியவர்
தொண்டொடு கூடித் துதைந்துநின்ற தொடர்பைத் தொடர்வோமே.

கல்லிய லும்மலை யங்கைநீங்க வளைத்து வளையாதார்
சொல்லிய லும்மதில் மூன்றுஞ்செற்ற சுடரான் இடர்நீங்க
மல்லிய லுந்திரள் தோளெம்மாதி வலஞ்சுழி மாநகரே
புல்கிய வேந்தனைப் புல்கியேத்தி யிருப்பவர் புண்ணியரே. எ

வெஞ்சின வாளரக்கன் வரையை விறலா லெடுத்தான்தோள்
அஞ்சமொ டாறிரு நான்குமொன் றுமடர்த்தா ரழகாய
நஞ்சிருள் கண்டத்து நாதரென்றும் நணுகும் இடம்போலும்
மஞ்சுல வும்பொழில் வண்டுகெண்டும் வலஞ்சுழி மாநகரே. அ

ஏடியல் நான்முகன் சீர்நெடுமா லெனநின் றவர்காணார்
கூடிய கூரெரி யாய்நிமிர்ந்த குழகர் உலகேத்த

வாடிய வெண்டலை கையிலேந்தி வலஞ்சுழி மேயஎம்மான்
பாடிய நான்மறை யாளர்செய்யுஞ் சரிதை பலபலவே. ௯

குண்டரும் புத்தருங் கூறையின்றிக் குழுவார் உரைநீத்துத்
தொண்டருந் தன்றொழில் பேணநின்ற கழலான் அழலாடி
வண்டம ரும்பொழில் மல்குபொன்னி வலஞ்சுழி வாணன்எம்மான்
பண்டொரு வேள்வி முனிந்துசெற்ற பரிசே பகர்வோமே. ௧0

வாழியெம் மானெனக் கெந்தைமேய வலஞ்சுழி மாநகர்மேல்
காழியுள் ஞானசம் பந்தன்சொன்ன கருத்தின் தமிழ்மாலை
ஆழியிவ் வையகத் தேத்தவல்லார் அவர்க்குந் தமருக்கும்
ஊழி யொருபெரும் இன்பமோக்கும் உருவும் உயர்வாமே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருநாரையூர் - பண் - பழம்பஞ்சுரம்

திருச்சிற்றம்பலம்

கடலிடை வெங்கடு நஞ்சமுண்ட கடவுள் விடையேறி
உடலிடை யிற்பொடிப் பூசவல்லான் உமையோ டொருபாகன்
அடலிடை யிற்சிலை தாங்கியெய்த அம்மான் அடியார்மேல்
நடலைவி னைத்தொகை தீர்த்துகந்தான் இடம்நாரை யூர்தானே. ௧

விண்ணின்மின் னேர்மதி துத்திநாகம் விரிபூ மலர்க்கொன்றை
பெண்ணின்முன் னேமிக வைத்துகந்த பெருமான் எரியாடி
நண்ணிய தன்னடி யார்களோடுந் திருநாரை யூரானென்
றெண்ணுமின் நும்வினை போகும்வண்ணம் இறைஞ்சும் நிறைவாமே.

தோடொரு காதொரு காதுசேர்ந்த குழையான் இழைதோன்றும்
பீடொரு கால்பிரி யாதுநின்ற பிறையான் மறையோதி
நாடொரு காலமுஞ் சேரநின்ற திருநாரை யூரானைப்
பாடுமின் நீர்பழி போகும்வண்ணம் பயிலும் உயர்வாமே. ௩

வெண்ணில வஞ்சடை சேரவைத்து விளங்குந் தலையேந்திப்
பெண்ணி லமர்ந்தொரு கூறதாய பெருமான் அருளார்ந்த
அண்ணல் மன்னியுறை கோயிலாகும் அணிநாரை யூர்தன்னை
நண்ணல மர்ந்துறை வாக்குமின்கள் நடலை கரிசறுமே. ௪

வானமர் தீவளி நீர்நிலனாய் வழங்கும் பழியாகும்
ஊனமர் இன்னுயிர் தீங்குகுற்ற முறைவால் பிறிதின்றி
நானம ரும்பொரு ளாகிநின்றான் திருநாரை யூரெந்தை
கோனவ னைக்குறு கக்குறுகா கொடுவல் வினைதானே. ௫

கொக்கிற குங்குளிர் சென்னிமத்தங் குலாய மலர்சூடி
அக்கர வோடரை யார்த்துகந்த அழகன் குழகாக
நக்கம ருந்திரு மேனியாளன் திருநாரை யூர்மேவிப்
புக்கம ரும்மனத் தோர்கள்தம்மைப் புணரும் புகல்தானே. ௬

ஊழியும் இன்பமுங் காலமாகி உயருந் தவமாகி
ஏழிசை யின்பொருள் வாழும்வாழ்க்கை வினையின் புணர்ப்பாகி
நாழிகை யும்பல ஞாயிறாகி நளிர்நாரை யூர்தன்னில்
வாழியர் மேதகு மைந்தர்செய்யும் வகையின் விளைவாமே. ௭

கூசமிலா தரக்கன் வரையைக் குலுங்க எடுத்தான்தோள்
நாசம தாகி இறஅடர்த்த விரலான் கரவாதார்
பேசவி யப்பொடு பேணநின்ற பெரியோன் இடம்போலும்
தேசமு றப்புகழ் செம்மைபெற்ற திருநாரை யூர்தானே. ௮

பூமக னும்அவ னைப்பயந்த புயலார் நிறத்தானும்
ஆமள வுந்திரிந் தேத்திக்காண்டல் அறிதற் கரியானூர்
பாமரு வுங்குணத் தோர்களீண்டிப் பலவும் பணிசெய்யும்
தேமரு வுந்திகழ் சோலைசூழ்ந்த திருநாரை யூர்தானே. ௯

வெற்றரை யாகிய வேடங்காட்டித் திரிவார் துவராடை
உற்றரை யோர்கள் உரைக்குஞ்சொல்லை உணரா தெழுமின்கள்
குற்றமி லாததோர் கொள்கையெம் மான்குழகன் தொழிலாரப்
பெற்றர வாட்டிவரும் பெருமான் திருநாரை யூர்சேர்வே. ௰

பாடிய லுந்திரை சூழ்புகலித் திருஞான சம்பந்தன்
சேடிய லும்புக ழோங்குசெம்மைத் திருநாரை யூரான்மேல்
பாடிய தண்டமிழ் மாலைபத்தும் பரவித் திரிந்தாக
வாடிய சிந்தையி னார்க்குநீக்கும் அவலக் கடல்தானே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருஆலவாய் - பண் - பழம்பஞ்சுரம்

நாலடிமேல்வைப்பு

திருச்சிற்றம்பலம்

வேத வேள்வியை நிந்தனை செய்துழல்
ஆத மில்லி அமணொடு தேரரை
வாதில் வென்றழிக் கத்திரு வுள்ளமே
பாதி மாதுட னாய பரமனே
ஞாலம் நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயில் உறையும்எம் ஆதியே. க

வைதி கத்தின் வழியொழு காதவக்
கைத வம்முடைக் காரமண் தேரரை
எய்தி வாதுசெ யத்திரு வுள்ளமே
மைதி கழ்தரு மாமணி கண்டனே
ஞாலம் நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயில் உறையும்எம் ஆதியே. உ

மறைவ ழக்கமி லாதமா பாவிகள்
பறித லைக்கையர் பாயுடுப் பார்களை
முறிய வாதுசெ யத்திரு வுள்ளமே
மறியு லாங்கையில் மாமழு வாளனே
ஞாலம் நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயில் உறையும்எம் ஆதியே. ௩

அறுத்த வங்கமா றாயின நீர்மையைக்
கறுத்த வாழமண் கையர்கள் தம்மொடும்
செறுத்து வாதுசெ யத்திரு வுள்ளமே
முறித்த வாண்மதிக் கண்ணி முதல்வனே
ஞாலம் நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயில் உறையும்எம் ஆதியே. ௪

அந்த ணாளர் புரியும் அருமறை
சிந்தை செய்யா அருகர் திறங்களைச்
சிந்த வாதுசெ யத்திரு வுள்ளமே
வெந்த நீற தணியும் விகிர்தனே
ஞாலம் நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயில் உறையும்எம் ஆதியே. ௫

வேட்டு வேள்விசெ யும்பொரு ளைவிளி
மூட்டு சிந்தை முருட்டமண் குண்டரை
ஓட்டி வாதுசெ யத்திரு வுள்ளமே
காட்டி லானை உரித்தஎங் கள்வனே
ஞாலம் நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயில் உறையும்எம் ஆதியே. ௬

அழல தோம்பும் அருமறை யோர்திறம்
விழல தென்னும் அருகர் திறத்திறம்
கழல வாதுசெ யத்திரு வுள்ளமே
தழல் இலங்கு திருவுருச் சைவனே
ஞாலம் நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயில் உறையும்எம் ஆதியே. ௭

நீற்று மேனிய ராயினர் மேலுற்ற
காற்றுக் கொள்ளவும் நில்லா அமணரைத்
தேற்றி வாதுசெ யத்திரு வுள்ளமே
ஆற்ற வான ரக்கற்கும் அருளினாய்
ஞாலம் நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயில் உறையும்எம் ஆதியே. ௮

நீல மேனி அமணர் திறத்துநின்
சீலம் வாதுசெ யத்திரு வுள்ளமே
மாலும் நான்முக னுங்காண் பரியதோர்
கோல மேனிய தாகிய குன்றமே
ஞாலம் நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயில் உறையும்எம் ஆதியே. ௯

அன்று முப்புரஞ் செற்ற அழகநின்
துன்று பொற்கழல் பேணு அருகரைத்
தென்ற வாதுசெ யத்திரு வுள்ளமே
கன்று சாக்கியர் காணுத் தலைவனே
ஞாலம் நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயில் உறையும்எம் ஆதியே. க0

கூடல் ஆலவாய்க் கோனை விடைகொண்டு
வாடல் மேனி அமணரை வாட்டிட
மாடக் காழிச்சம் பந்தன் மதித்தஇப்
பாடல் வல்லவர் பாக்கிய வாளரே. கக

திருச்சிற்றம்பலம்

திருக்கயிலாயமும் திருவானைக்காவும் திருமயேந்திரமும் திருவாரூரும் - பண் - பழம்பஞ்சுரம்

கூடற்சதுக்கம்

திருச்சிற்றம்பலம்

மண்ணது உண்டரி மலரோன்காணு
வெண்ணுவல் விரும்புமயேந்திரரும்
கண்ணது வோங்கிய கயிலையாரும்
அண்ணல்ஆ ரூராதி யானைக்காவே. க

வந்துமா லயனவர் காண்பரியார்
வெந்தவெண் ணீறணி மயேந்திரரும்
கந்தவார் சடையுடைக் கயிலையாரும்
அந்தண்ஆ ரூராதி யானைக்காவே. உ

மாலயன் தேடிய மயேந்திரரும்
காலனை உயிர்கொண்ட கயிலையாரும்
வேலைய தோங்கும்வெண் ணுவலாரும்
ஆலைஆ ரூராதி யானைக்காவே. ௩

கருடனை யேறரி அயனேர் காணுர்
வெருள்விடை யேறிய மயேந்திரரும்

கருடரு கண்டத்தெங் கயிலையாரும்
அருளன்ஆ ரூராதி யானைக்காவே. ௪

மதிஞுதனன் நான்முகன் வணங்கரியார்
மதியது சொல்லிய மயேந்திரரும்
கதிர்முலை புல்கிய கயிலையாரும்
அதியன்ஆ ரூராதி யானைக்காவே. ௫

சக்கரம் வேண்டுமால் பிரமன்காணு
மிக்கவர் கயிலை மயேந்திரரும்
தக்கனைத் தலையரி தழலுருவர்
அக்கணி யவராரூர் ஆனைக்காவே. ௬

கண்ணனும் நான்முகன் காண்பரியார்
வெண்ணுவல் விரும்பு மயேந்திரரும்
கண்ணப்பர்க் கருள்செய்த கயிலையெங்கள்
அண்ணல்ஆ ரூராதி யானைக்காவே. ௭

கடல்வண்ணன் நான்முகன் காண்பரியார்
தடவரை யரக்கனைத் தலைநெரித்தார்
விடமது வுண்டவெம் மயேந்திரரும்
அடல்விடையார்ஆ ரூராதி யானைக்காவே. ௮

ஆதிமால் அயனவர் காண்பரியார்
வேதங்கள் துதிசெயும் மயேந்திரரும்
காதிலோர் குழையுடைக் கயிலையாரும்
ஆதிஆ ரூரெந்தை யானைக்காவே. ௯

அறிவில் அமண்புத்தர் அறிவுகொள்ளேல்
வெறியமான் காத்தாரூர் மயேந்திரரும்
மறிகட லோன்அயன் தேடத்தானும்
அறிவரு கயிலையோன் ஆனைக்காவே. ௧0

ஏனமா லயனவர் காண்பரியார்
கானமார் கயிலைநன் மயேந்திரரும்
ஆனஆ ரூராதி யானைக்காவை
ஞானசம் பந்தன் தமிழ்சொல்லுமே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருப்பிரமபுரம் - ஈரடி. பண் - பழம்பஞ்சுரம்

திருச்சிற்றம்பலம்

வரமதேகொளா உரமதேசெயும் புரமெரித்தவன் பிரமநற்புரத்
தரன்நல்நாமமே பரவுவார்கள்சீர் விரவுநீள் புவியே. க

சேணுலாமதில் வேணுமண்ணுளோர் காணமன்றலார் வேணுநற்புரத்
தாணுவின்கழல் பேணுகின்றவ ராணியொத் தவரே. உ

அகலமார்தரைப் புகலும்நான்மறைக் கிகலியோர்கள்வாழ் புகலிமாநகர்ப்
பகல்செய்வோனெதிர்ச் சகலசேகரன் அகிலநா யகனே. ௩

துங்கமாகரி பங்கமாவடுஞ் செங்கையானிகழ் வெங்குருத்திகழ்
அங்கணன் அடி தங்கையால் தொழத் தங்குமோ வினையே. ச

காணியொண்பொருட்கற்றவர்க்கீகையுடைமையோரவர்காதல்செய்யு
ஞேணிவண்புரத் தாணியென்பவர் தூமதி யினரே. [நற்

ஏந்தராவெதிர்வாய்ந்தநுண்ணிடைப்பூந்தணோதியாள்சேர்ந்தபங்கினன்
பூந்தராய்தொழும் மாந்தர்மேனிமேற் சேர்ந்திரா வினையே. சு

சுரபுரத்தினைத் துயர்செய்தாரகன் துஞ்சவெஞ்சினக்காளியைத்தருஞ்
சிரபுரத்துளா னென்னவல்லவர் சித்திபெற் றவரே. எ

உறவுமாகியற் றவர்களுக்குமா நிதிகொடுத்துநீள் புவியிலங்குசீர்ப்
புறவமாநகர்க் கிறைவனேயெனத் தெறகிலா வினையே. அ

பண்புசேரிலங் கைக்குநாதனன் முடிகள்பத்தையுங் கெடநெரித்தவன்
சண்பையாதியைத் தொழுமவர்களைச் சாதியா வினையே. கூ

ஆழியங்கையிற் கொண்டமாலயன் அறிவொணாததோர்வடிவுகொண்ட
காழிமாநகர்க் கடவுள்நாமமே கற்றல்நற் றவமே. [வன்

விச்சையொன்றிலாச் சமணர்சாக்கியப்பிச்சர்தங்களைக் கரிசறுத்தவன்
கொச்சைமாநகர்க் கன்புசெய்பவர் குணங்கள் கூறுமினே. கக

கழுமலத்தினுட் கடவுள்பாதமே கருதுஞானசம் பந்தனின்தமிழ்
முழுதும்வல்லவர்க் கின்பமேதரும் முக்கணெம் மிறையே. கஉ

திருச்சிற்றம்பலம்

திருவீழிமிழலை - ஈரடி. பண் - பழம்பஞ்சுரம்

திருச்சிற்றம்பலம்

வேலின்நேர்தரு கண்ணினாளுமை பங்கன்அங்கணன் மிழலைமாநகர்
ஆலநீழலின் மேவினான்அடிக் கன்பர்துன் பிலரே. க

விளக்குநான்மறை வல்லவேதியர் மல்குசீர்வளர் மிழலையானடி
உளங்கொள்வார்தமை உளங்கொள்வார்வினை ஒல்லையா சறுமே. உ

விசையினோடெழு பசையுநஞ்சினை யசைவுசெய்தவன் மிழலைமாநகர்
இசையுமீசனை நசையின்மேவினான் மிசைசெயா வினையே. ங

வென்றிசேர்கொடி மூடுமாமதில் மிழலைமாநகர் மேவிநாள்தொறும்
நின்றவாதிதன் அடிநினைப்பவர் துன்பமொன் றிலரே. ச

போதகந்தனை யுரிசெய்தோன்புயல் நேர்வரும்பொழில் மிழலைமாநகர்
ஆதரஞ்செய்த அடிகள்பாதம லாலோர்பற் றிலமே. ரு

தக்கன்வேள்வியைச் சாடினார்மணி தொக்கமாளிகை மிழலைமேவிய
நக்கனாரடி தொழுவர்மேல்வினை நாள்தொறுங் கெடுமே. சு

போராணவுமுப் புரமெரித்தவன் பொழில்கள்சூழ்தரு மிழலைமாநகர்ச்
சேருமீசனைச் சிந்தைசெய்பவர் தீவினை கெடுமே. எ

இரக்கமில்தொழில் அரக்கனாருடல் நெருக்கினான்மிகு மிழலையானடி
சிரக்கொள்பூவென ஒருக்கினார்புகழ் பரக்கும்நீள் புவியே. அ

துன்றுபூமகன் பன்றியானவன் ஒன்றுமோர்கிலா மிழலையானடி
சென்றுபூம்புனல் நின்றுதூவினார் நன்றுசேர் பவரே. கூ

புத்தர்கைச்சமண் பித்தர்பொய்க்குவை வைத்தவித்தகன் மிழலைமாநகர்
சித்தம்வைத்தவர் இத்தலத்தினுள் மெய்த்தவத் தவரே. க0

சந்தமார்பொழில் மிழலையீசனைச் சண்பைஞானசம் பந்தன்வாய்நவில்
பந்தமார்தமிழ் பத்தும்வல்லவர் பத்தரா குவரே. கக

திருச்சிற்றம்பலம்

திருப்பல்லவனீச்சரம் - பண் - பழம்பஞ்சுரம்

ஈரடி

திருச்சிற்றம்பலம்

பரசுபாணியர் பாடல்வீணையர் பட்டினத்துறை பல்லவனீச்சரத்
தரசுபேணி நின்றார் இவர் தன்மை யறிவாரார். க

பட்டநெற்றியர் நட்டமாடுவர் பட்டினத்துறை பல்லவனீச்சரத்
திட்டமா யிருப்பார் இவர் தன்மை யறிவாரார். உ

பவளமேனியர் திகழும்நீற்றினர் பட்டினத்துறை பல்லவனீச்சரத்
தழகரா யிருப்பார் இவர்தன்மை யறிவாரார். ந

பண்ணில்யாழினர் பயிலும்மொந்தையர் பட்டினத்துறை பல்லவனீச்
தண்ணலா யிருப்பார் இவர்தன்மை யறிவாரார். [சரத்

பல்லிலோட்டினர் பலிகொண்டுண்பவர் பட்டினத்துறை பல்லவனீச்
தெல்லியாட் டுகந்தார் இவர்தன்மை யறிவாரார். [சரத்

பச்சைமேனியர் பிச்சைகொள்பவர் பட்டினத்துறை பல்லவனீச்சரத்
திச்சையா யிருப்பார் இவர்தன்மை யறிவாரார். சு

பைங்கண்ஏற்றினர் திங்கள்சூடுவர் பட்டினத்துறை பல்லவனீச்சரத்
தெங்குமா யிருப்பார் இவர்தன்மை யறிவாரார். எ

பாதங்கைதொழ வேதமோதுவர் பட்டினத்துறை பல்லவனீச்சரத்
தாதியா யிருப்பார் இவர்தன்மை யறிவாரார். அ

படிகொள்மேனியர் கடிகொள்கொன்றையர் பட்டினத்துறை பல்லவ
தடிகளா யிருப்பார் இவர்தன்மை யறிவாரார். [னீச்சரத்

பறைகொள்பாணியர் பிறைகொள்சென்னியர் பட்டினத்துறை பல்லவ
திறைவரா யிருப்பார் இவர்தன்மை யறிவாரார். [னீச்சரத்

வானமாள்வதற் கூனமொன்றிலை மாதர்பல்லவ னீச்சரத்தானை
ஞானசம்பந்தன் நற்றமிழ் சொல்லவல்லவர் நல்லவரே. கக

திருச்சிற்றம்பலம்

திருக்கழுமலம் - பண் - பழம்பஞ்சுரம்

திருவியமகம்

திருச்சிற்றம்பலம்

உற்றுமை சேர்வது மெய்யினையே உணர்வது நின்னருள் மெய்யினை
கற்றவர் காய்வது காமனையே கனல்விழி காய்வது காமனையே [யே
அற்றம் மறைப்பதும் உன்பணியே அமரர்கள் செய்வதும் உன்பணியே
பெற்றும் உகந்தது கந்தனையே பிரம புரத்தை உகந்தனையே. க

சதிமிக வந்த சலந்தரனே தடிசிர நேர்கொள் சலந்தரனே
அதிரொளி சேர்திகி ரிப்படையால் அமர்ந்தனர்உம்பர் துதிப்படையால்
மதிதவழ் வெற்பது கைச்சிலையே மருவிட மேற்பது கைச்சிலையே
விதியினி விட்டவி ரும்பரனே வேணு புரத்தைவி ரும்பரனே. உ

காதம ரத்திகழ் தோடினனே கானவ னாய்க்கடி தோடினனே
பாதம தாற்கூற் றுதைத்தனனே பார்த்தன் உடலம் புதைத்தனனே
தாதவிழ் கொன்றை தரித்தனனே சார்ந்தவி னையத ரித்தனனே
போதம் அமரும் உரைப்பொருளே புகலிய மர்ந்த பரம்பொருளே. ௩

மைத்திகழ் நஞ்சுமிழ் மாசுணமே மகிழ்ந்தரை சேர்வது மாசுணமே
மெய்த்துடல் பூசுவர் மேன்மதியே வேதம தோதுவர் மேன்மதியே
பொய்த்தலை யோடுறு மத்தமதே புரிசடை வைத்தது மத்தமதே
வித்தக ராகிய வெங்குருவே விரும்பிய மர்ந்தனர் வெங்குருவே. ச

உடன்பயில் கின்றனன் மாதவனே யுறுபொறி காய்ந்திசைமாதவனே
திடம்பட மாமறை கண்டனனே திரிகுண மேவிய கண்டனனே
படங்கொள் அரவரை செய்தனனே பகடுரி கொண்டரை செய்தனனே
தொடர்ந்த துயர்க்கொரு நஞ்சிவனே தோணிபு ரத்துறை நஞ்சிவனே.

திகழ்கைய அம்புகை தங்கழலே தேவர் தொழுவதும் தங்கழலே
இகழ்பவர் தாமொரு மானிடமே யிருந்தனு வோடெழில் மானிடமே
மிகவரு நீர்கொளு மஞ்சடையே மின்னிகர் கின்றது மஞ்சடையே
தகவிர தங்கொள்வர் சுந்தரரே தக்கத ராயுறை சுந்தரரே. சு

ஓர்வரு கண்கள் இணைக்கயலே உமையவள் கண்கள் இணைக்கயலே
ஏர்மரு வுங்கழ லுகமதே யெழில்கொளு தாசன லுகமதே

நீர்வருகொந்தள கங்கையதே நெடுஞ்சடை மேவிய கங்கையதே
சேர்வரு யோகதி யம்பகனே சிரபுர மேயதி யம்பகனே. ௭

ஈண்டு துயிலம ரப்பினனே யிருங்கணி டந்தடி யப்பினனே
தீண்டல ரும்பரி சக்கரமே திகழ்ந்தொளி சேர்வது சக்கரமே
வேண்டிவ ருந்தந கைத்தலையே மிகைத்தவ ரோடுந கைத்தலையே
பூண்டனர் சேரலு மாபதியே புறவம் அமர்ந்தவு மாபதியே. ௮

மின்மணி வாயது நீழலையே நேசம தானவர் நீழலையே
உன்னிம னத்தெழு சங்கமதே யொளியத னோடுறு சங்கமதே
கன்னிய ரைக்கவ ருங்களனே கடல்விட முண்டக ருங்களனே
மன்னிவ ரைப்பதி சண்பையதே வாரிவ யன்மலி சண்பையதே. ௯

இலங்கை யரக்கர் தமக்கிறையே யிடந்துகயிலை யெடுக்கிறையே
புலன்கள் கெடவுடன் பாடினனே பொறிகள் கெடவுடன் பாடினனே
இலங்கியமேனி யிராவணனே யெய்து பெயரும் இராவணனே
கலந்தருள் பெற்றது மாவசியே காழி யானடி மாவசியே. ௧௦

கண்ணிகழ் புண்டரி கத்தினனே கலந்திரி புண்டரி கத்தினனே
மண்ணிக ழும்பரி சேனமதே வானக மேய்வகை சேனமதே
நண்ணி யடிமுடி யெய்தலரே நளிர்மலி சோலையில் எய்தலரே
பண்ணியல் கொச்சை பசுபதியே பசுமிக வூர்வர் பசுபதியே. ௧௧

பருமதில் மதுரைமன் அவையெதிரேபதிகமதெழுதிலையவையெதிரே
வருநதி யிடைமிசை வருகரனே வசையொடு மலர்கெட வருகரனே
கருதலில் இசைமுரல் தருமருளே கழுமலம் அமரிறை தருமருளே
மருவிய தமிழ்விர கனமொழியே வல்லவர் தம்மிடர் திடமொழியே.

திருச்சிற்றம்பலம்

திருக்கச்சியேகம்பம் - திருவியமகம். பண் - பழம்பஞ்சுரம்

திருச்சிற்றம்பலம்

பாயுமால்விடை மேலொருபாகனேபாவைதன்னுருமேலொரு பாகனே, தூயவானவர் வேதத் துவனியே சோதிமாலெரி வேதத் துவனியே, ஆயுநன்பொருள் நண்பொரு ளாதியே ஆலநீழல் அரும்

பொரு ளாதியே, காயவின்மதன் பட்டது கம்பமே கண்ணுதற்பா மற்றிடங் கம்பமே. க

சடையணிந்ததும் வெண்டலை மாலையே தம்முடம்பிலும் வெண் டலை மாலையே, படையிலங்கையிற் சூலம தென்பதே பாரிலங்கை யிற் சூலம தென்பதே, புடைபரப்பன பூதகணங்களே போற்றிசைப் பன பூதக ணங்களே, கடைகள்தோறும் இரப்பது மிச்சையே கம்ப மேவி யிருப்பது மிச்சையே. உ

வெள்ளெருக்கொடு தும்பைமிலைச்சியே வேறுமுன்செலத் தும்பைமி
அள்ளிநீறது பூசுவ தாகமே யானமாசுண மூசுவ தாகமே [லைச்சியே
புள்ளியாடை யுடுப்ப தகத்துமே போனவூழி யுடுப்ப தகத்துமே
கள்ளுலாமலர்க் கம்பமிருப்பதே காஞ்சிமாநகர்க் கம்பமிருப்பதே. ௩

முற்றலாமை யணிந்த முதல்வரே மூரியாமை யணிந்த முதல்வரே
பற்றிவாளர வாட்டும் பரிசரே பாலுநெய்யுகந் தாட்டும் பரிசரே
வற்றலோடு கலம்பலி தேர்வதே வானிலோடு கலம்பலி தேர்வதே
கற்றிலாமனங் கம்ப மிருப்பதே காஞ்சிமாநகர்க் கம்ப மிருப்பதே. ௪

வேடனாகி விசையற் கருளியே வேலைநஞ்ச மிசையற் கருளியே
ஆடபாம்பரை யார்த்த துடையதே யஞ்சுபூதமு மார்த்த துடையதே
கோடுவான்மதிக் கண்ணி யழகிதே குற்றமின்மதிக் கண்ணி யழகிதே
காடுவாழ்பதி யாவது மும்மதே கம்பமாபதி யாவது மும்மதே. ௫

இரும்புகைக்கொடி தங்கழல் கையதே யிமயமாமகள் தங்கழல் கை யதே,அரும்புமொய்த்த மலர்ப்பொறை தாங்கியே ஆழியான்றன்மலர்ப் பொறை தாங்கியே, பெரும்பகல்நட மாடுதல் செய்துமே பேதைமார் மனம் வாடுதல் செய்துமே, கரும்புமொய்த்தெழு கம்ப மிருப்பதே காஞ்சிமாநகர்க் கம்ப மிருப்பதே. ௬

முதிரமங்கை தவஞ்செய்த காலமே முன்புமங்கை தவஞ்செய்த காலமே, வெதிர்களோடகில் சந்தமு ருட்டியே வேழமோடகில் சந்த முருட்டியே, அதிரவாறு வாத்தழு வத்தொடே ஆன்நெய்ஆடு வாத் தழு வத்தொடே, கதிர்கொள்பூண்முலைக் கம்பம் இருப்பதே காஞ்சி மாநகர்க் கம்பம் இருப்பதே. எ

பண்டாக்க னெடுத்த பலத்தையே பாய்ந்தாக்க னெடுத்த பலத்தையே
கொண்டாக்கிய துங்கால் விரலையே கோளரக்கிய துங்கால் விரலையே
உண்டுழன்றது முண்டத் தலையிலே யுடுபதிக்கிட முண்டத் தலையிலே
கண்டநஞ்சம் அடக்கினை கம்பமே கடவுள்நீயிடங் கொண்டதுகம்பமே.

தூணியான சுடர்விடு சோதியே சுத்தமான சுடர்விடு சோதியே
பேணியோடு பிரமப் பறவையே பித்தனான பிரமப் பறவையே
சேணினோடு கீழுழி திரிந்துமே சித்தமோடு கீழுழி திரிந்துமே
காணவின்றனர் உற்றது கம்பமே கடவுள்நீயிடம் உற்றது கம்பமே. ௬

ஒருடம்பினை யீருரு வாகவே யுன்பொருள்திற மீருரு வாகவே
ஆருமெய்தற் கரிது பெரிதுமே ஆற்றவெய்தற் கரிது பெரிதுமே
தோரும்மறி யாது திகைப்பரே சித்தமும்மறி யாது திகைப்பரே
கார்நிறத்தம ணர்க்கொரு கம்பமே கடவுள்நீயிடங் கொண்டது கம்பமே.

கந்தமார் பொழில் சூழ்தரு கம்பமே காதல்செய்பவர் தீர்த்திடு கம்பமே, புந்திசெய்து விரும்பிப் புகலியே பூசுரன்றன் விரும்பிப் புகலியே, அந்தமில்பொரு ளாயின கொண்டுமே அண்ணலின்பொரு ளாயின கொண்டுமே, பந்தன்இன்னியல் பாடிய பத்துமே பாடவல்லவ ராயின பத்துமே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருஆலவாய் - பண் - பழம்பஞ்சுரம்

திருவியமகம்

திருச்சிற்றம்பலம்

ஆலநீழ லுகந்த திருக்கையே யானபாட லுகந்த திருக்கையே
பாலின்நேர்மொழி யாளொரு பங்கனே பாதமோதலர் சேர்புர பங்கனே
கோலநீறணி மேதகு பூதனே கோதிலார்மனம் மேவிய பூதனே
ஆலநஞ்சமு துண்டக ளத்தனே ஆலவாயுறை அண்டர்கள் அத்தனே.

பாதியாயுடன் கொண்டது மாலையே பாம்புதார்மலர்க் கொன்றை நன் மாலையே, கோதில்நீறது பூசிடு மாகனே கொண்டநற்கையின் மானிட மாகனே, நாதன்நாள்தொறும் ஆடுவ தானையே நாடியன்றுரி செய்ததும் ஆனையே, வேதநூல்பயில் கின்றது வாயிலே விகிர்தனூர் திரு ஆலநல் வாயிலே. ௨

காடுநீட அறப்பல கத்தனே காதலால்நினை வார்தம் அகத்தனே
பாடுபேயொடு பூதம சிக்கவே பல்பிணத்தசை நாடிய சிக்கவே
நீடுமாநட மாடவி ருப்பனே நின்னடித்தொழ நாளும் இருப்பனே
ஆடல்நீள்சடை மேவிய அப்பனே ஆலவாயினின் மேவிய அப்பனே.

பண்டயன்தலை யொன்றும் அறுத்தியே பாதமோதினர் பாவம் அறுத்தியே, தண்டவெண்பிறை சென்னியி ருத்தியே தூயவெள்ளெரு தேறியி ருத்தியே, கண்டு காமனை வேவ விழித்தியே காதலில்லவர் தம்மை யிழித்தியே, அண்டநாயக னேமிகு கண்டனே ஆலவாயினின் மேவிய கண்டனே. ௪

சென்றதாதை யுகுத்தனன் பாலையே சிறியன்பு செகுத்தனன் பாலையே, வென்றிசேர்மழுக் கொண்டுமுன் காலையே வீடவெட்டிடக் கண்டுமுன் காலையே, நின்றமாணியை யோடின கங்கையால் நிலவமல்கி யுதித்தன கங்கையால், அன்றநின்னுரு வாகத் தடவியே ஆலவாயா னகத் தடவியே. ௫

நக்கமேகுவர் நாடுமோர் ஊருமே நாதன்மேனியின் மாசுணம் ஊருமே தக்கபூமனைச் சுற்றக் கருளொடே தாரமுய்த்தது பாணற் கருளொடே மிக்கதென்னவன் தேவிக் கணியையே மெல்லநல்கிய தொண்டர்க்கணி யையே அக்கினாமு அண்கல ளேடுமே ஆலவாயானருமையோடுமே.

வெய்யவன்பல் உகுத்தது குட்டியே வெங்கண்மாசுணங்கையது குட்டியே, ஐயனேயன லாடிய மெய்யனே அன்பினால்நினை வார்க்கருள் மெய்யனே, வையமுய்யஅன் றுண்டது காளமே வள்ளல்கையது மேவுகங் காளமே, ஐயமேற்பது ரைப்பது வீணையே ஆலவாயான் கையது வீணையே. ௭

தோள்கள்பத்தொடு பத்து மயக்கியே தொக்கதேவர் செருக்கை மயக்கியே, வாளரக்கன் நிலத்துக் களித்துமே வந்தமால்வரை கண்டு களித்துமே, நீள்பொருப்பை யெடுத்தவுன் மத்தனே நின்விரற்றலையான்மத மத்தனே, ஆளுமாதி முறித்தது மெய்கொலோ ஆலவாயா னுய்த்தது மெய்கொலோ. ௮

பங்கயத்துள நான்முகன் மாலொடே பாதம்நீண்முடி நேடிட மாலொடே, தங்கநற்றழ லின்உரு வாயுமே தூயபாடல் பயின்றது

வாயுமே, செங்கயற்கணி னாரிடு பிச்சையே சென்றுகொண்டுரை செய்வது பிச்சையே, அங்கியைத்திகழ் விப்ப திடக்கையே ஆலவா யா னா திடக்கையே. ௯

தோரோடம ணர்க்குநல் கானையே தேவர்நாள் தொறுஞ் சேர்வது கானையே, கோமட்டது புண்ட ரிகத்தையே கொண்டநீள்கழல்புண்ட ரிகத்தையே, நேரிலூர்கள் அழித்தது நாகமே நீள்சடைத்திகழ் கின்றது நாகமே, ஆரமாக வுகந்தது மென்பதே ஆலவாயா னாரிட மென் பதே. ௧௦

ஈனஞானிகள் தம்மொடு விரகனே யேறுபல்பொருள் முத்தமிழ் விரகனே, ஆனகாழியுள் ஞானசம் பந்தனே ஆலவாயினின் மேயசம் பந்தனே, ஆனவானவர் வாயினுள் அத்தனே அன்பரானவர் வாயினுள் அத்தனே, நானுரைத்தன செந்தமிழ் பத்துமே வல்லவர்க்கிவை நற் றமிழ் பத்துமே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருவீழிமிழலை - பண் - பழம்பஞ்சுரம்

திருவியமகம்

திருச்சிற்றம்பலம்

துன்று கொன்றைநஞ் சடையதே தூய கண்டம்நஞ் சடையதே
கன்றின் மானிடக் கையதே கல்லின் மானிடக் கையதே
என்று மேறுவ திடவமே யென்னி டைப்பலி யிடவமே
நின்ற தும்மிழலை யுள்ளுமே நீரெனைச் சிறிதும் உள்ளுமே. ௧

ஓதி வாயதும் மறைகளே உரைப்ப தும்பல மறைகளே
பாதி கொண்டதும் மாதையே பணிகின் றேன்மிகு மாதையே
காது சேர்கனங் குழையரே காத லார்கனங் குழையரே
வீதி வாய்மிகும் வேதியா மிழலை மேவிய வேதியா. ௨

பாடு கின்றபண் டாரமே பத்த ரன்னபண் டாரமே
சூடு கின்றது மத்தமே தொழுத என்னையுன் மத்தமே
நீடு செய்வதுந் தக்கதே நின்ன ரைத்திகழ்ந் தக்கதே
நாடு சேர்மிழலை யூருமே நாகம் நஞ்சழலை யூருமே. ௩

கட்டுகின்ற கழல்நாகமே காய்ந்ததும் மதனன் ஆகமே
இட்டமாவ திசை பாடலே யிசைந்த நூலினமர் பாடலே
கொட்டுவான் முழவம் வாணனே குலாயசீர் மிழலை வாணனே
நட்ட மாடுவது சந்தியே நானுய்தற் கிரவு சந்தியே. ௪

ஒலி வாதிடுங் காணமே யுன்னு மென்னுடைக் காணமே
ஏவு சேர்வுன் ஆணையே யருளி னின்னபொற் றாணையே
பாவி யாதரை மெய்யிலே பயின்ற நின்னடி மெய்யிலே
மேவி றுன்விறற் கண்ணனே மிழலை மேயமுக் கண்ணனே. ௫

வாய்ந்த மேனியெரி வண்ணமே மகிழ்ந்து பாடுவது வண்ணமே
காய்ந்து வீழ்ந்தவன் காலனே கடுநடஞ் செயுங் காலனே
போந்த தெம்மிடை யிரவிலே யும்மிடைக் கள்வ மிரவிலே
ஏய்ந்த தும்மிழலை யென்பதே விரும்பியே யணிவ தென்பதே. ௬

அப்பி யன்றகண் ணயனுமே யமரர் கோமகனு மயனுமே
ஒப்பி லின்றமரர் தருவதே ஒண்கையா லமரர் தருவதே
மெய்ப்ப யின்றவ ரிருக்கையே மிழலை யூரும திருக்கையே
செப்புமின் னெருது மேயுமே சேர்வுமக் கெருது மேயுமே. ௭

தான வக்குலம் விளக்கியே தாரகைச் செல விளக்கியே
வான டர்த்த கயிலாயமே வந்து மேவு கயிலாயமே
தானெ டுத்தவல் லரக்கனே தடமுடித் திரள ரக்கனே
மேன டைச்செல விருப்பனே மிழலை நற்பதி விருப்பனே. ௮

காய மிக்கதொரு பன்றியே கலந்த நின்னவுரு பன்றியே
ஏய விப்புவி மயங்கவே யிருவர் தாமனம் மயங்கவே
தூய மெய்த்திறன் அகண்டனே தோன்றி நின்றமணி கண்டனே
மேய வித்துயில் விலக்கணா மிழலை மேவிய விலக்கணா. ௯

கஞ்சியைக் குலவு கையரே கலக்கமா ரமணர் கையரே
அஞ்ச வாதிலருள் செய்யநீ யணைந்திடும் பரிசு செய்யநீ
வஞ்சனே வரவும் வல்லையே மதித்தெனைச் சிறிதும் வல்லையே
வெஞ்ச லின்றிவரு வித்தகா மிழலைசே ரும்விறல் வித்தகா. ௧௦

மேய செஞ்சடையின் அப்பனே மிழலைமே வியஎன் அப்பனே
ஏயு மாசெய விருப்பனே யிசைந்த வாசெய விருப்பனே
காப வர்க்கசம் பந்தனே காழி ஞானசம் பந்தனே
வாயுரைத்த தமிழ் பத்துமே வல்லவர்க்கும் இவை பத்துமே. கக

திருச்சிற்றம்பலம்

சீகாழி - பண் - கௌசிகம்

திருமாலைமாற்று

திருச்சிற்றம்பலம்

யாமாமாநீ யாமாமா யாழீகாமா காணாகா
காணாகாமா காழீயா மாமாயாநீ மாமாயா. க

யாகாயாழீ காயாகா தாயாரார தாயாயா
யாயாதாரா ராயாதா காயாகாழீ யாகாயா. உ

தாவாமூவா தாசாகா ழீநாதாநீ யாமாமா
மாமாயாநீ தாநாழீ காசாதாவா மூவாதா. ௩

நீவாவாயா காயாழீ காவாவானோ வாராமே
மேராவானோ வாவாகா ழீயாகாயா வாவாநீ. ௪

யாகாலாமே யாகாழீ யாமேதாவீ தாயாவீ
வீயாதாவீ தாமேயா ழீகாயாமே லாகாயா. ௫

மேலேபோகா மேதேழீ காலாலேகா லாணாயே
யேணாலாகா லேலாகா ழீதேமேகா போலேமே. ௬

நீயாமாநீ யேயாமா தாவேழீகா நீதானே
நேதாநீகா ழீவேதா மாயாயேநீ மாயாநீ. எ

நேணவராவிழ யாசைழியே வேகதளேரிய ளாயுழிகா
காழியுளாயரி ளேதகவே யேழிசையாழவி ராவணனே. அ

காலேமேமேலே காணீகா ழீகாலேமா லேமேபூ
பூமேலேமா லேகாழீ காணீகாலே மேமேகா. ௯

வேரியுமேணவ காழியொயே யேனைநிணேமட ளோகாதே
தேகாளோடம ணேநினையே யேயொழிகாவண மேயுரிவே. ௧௦

நேரகழாமித யாசழிதா யேனனியேனனி ளாயுழிகா
காழியுளானின யேனினயே தாழிசயாதமி ழாகரனே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருக்கழுமலம் - பண் - புறநீர்மை

திருச்சிற்றம்பலம்

படமலி கொன்றை தன்றுவா ளெருக்கும் வன்னியும் மத்தமுஞ் சடைமேற், படவொலி திரைகள் மோதிய கங்கைத் தலைவனார் தம்மிடம் பகரில், விடவொலி பரந்த வெண்டிரை முத்தம் இப்பிகள் சொணர்ந்தவெள் ளருவிக், கடலொலி யோதம் மோதவந் தலைக்குங் கழுமல நகரென லாமே. ௧

மின்னிய அரவும் வெறிமலர் பலவும் விரும்பிய திங்களுந் தங்கு, சென்னிய துடையான் தேவர்தம் பெருமான் சேயிழை யொடும்உறை விடமாம், பொன்னியல் மணியு முரிகரி மருப்புஞ் சந்தமும் உந்துவன் திரைகள், கன்னிய ராடக் கடலொலி மலியுங் கழுமல நகரென லாமே. ௨

சீருறு தொண்டர் கொண்டடி போற்றச் செழுமலர் புனலொடு தூபந், தாருறு கொன்றை தம்முடி வைத்த சைவனார் தங்கிட மெங்கும், ஊருறு பதிகள் உலகுடன் பொங்கி யொலிபுனல் கொளவுடன் மிதந்த, காருறு செம்மை நன்மையால் மிக்க கழுமல நகரென லாமே. ௩

மண்ணினா ரேத்த வானுளார் பரச அந்தரத் தமரர்கள் போற்றப், பண்ணினா ரெல்லாம் பலபல வேட முடையவர் பயில்விட மெங்கும், எண்ணினால் மிக்கார் இயல்பினால் நிறைந்தார் ஏந்திழை யவரொடு மைந்தர், கண்ணினால் இன்பங் கண்டொளி பரக்குங் கழுமல நகரென லாமே. ௪

சுருதியான் தலையும் நாமகள் மூக்குஞ் சுடரவன் கரமுமுன் னியங்கு, பரிதியான் பல்லும் இறுத்தவர்க் கருளும் பரமனார் பயின் றினி திருக்கை, விருதினான் மறையும் அங்கமோ ராறும் வேள்வியும்

வேட்டவர் ஞானங், கருதினு ருலகிற் கருத்துடை யார்சேர் கழுமல நகரென லாமே. ௫

புற்றில்வாள் அரவும் ஆமையும் பூண்ட புனிதனுர் பனிமலர்க் கொன்றை, பற்றிவான் மதியஞ் சடையிடை வைத்த படிறனுர் பயின்றினி திருக்கை, செற்றுவன் திரைகள் ஒன்றொடொன் றோடிச் செயிர்த்துவண் சங்கொடு வங்கங், கற்றுறை வரைகள் கரைக்குவந் துரைக்குங் கழுமல நகரென லாமே. ௬

அலைபுனற் கங்கை தங்கிய சடையார் அடல்நெடு மதிலொரு மூன்றுங், கொலையிடைச் செந்தீ வெந்தறக் கண்ட குழகனுர் கோயில தென்பர், மலையின்மிக் குயர்ந்த மரக்கலஞ் சரக்கு மற்றுமற் றிடையிடை யெங்குங், கலைகளித் தேறிக் கானலில் வாழுங் கழுமல நகரென லாமே. ௭

ஒருக்கமுன் னினையாத் தக்கன்றன் வேள்வி யுடைதர வுழறிய படையார், அரக்கனை வரையால் ஆற்றலன் றழித்த அழகனுர் அமர்ந் துறை கோயில், பரக்கும்வண் புகழார் பழியவை பார்த்துப் பலபல அறங்களே பயிற்றிக், காக்குமா றறியா வண்மையால் வாழுங் கழுமல நகரென லாமே. ௮

அருவரை பொறுத்த ஆற்றலி னனும் அணிகிளர் தாமரை யானும், இருவரும் ஏத்த எரியுரு வான இறைவனுர் உறைவிடம் வினவில், ஒருவரிவ் வுலகில் வாழ்கிலா வண்ணம் ஒலிபுனல் வெள்ள முன் பரப்பக், கருவரை சூழ்ந்த கடலிடை மிதக்குங் கழுமல நகரென லாமே. ௯

உரிந்துயர் உருவில் உடைதவிர்ந் தாரும் அத்துகில் போர்த்துழல் வாருந், தெரிந்துபுன் மொழிகள் செப்பின கேளாச் செம்மையார் நன் மையால் உறைவாங், குருந்துயர் கோங்கு கொடிவிடு முல்லை மல்லிகை சண்பகம் வேங்கை, கருந்தடங் கண்ணின் மங்கைமார் கொய்யுங் கழுமல நகரென லாமே. ௧௦

கானலங் கழனி யோதம்வந் துலவுங் கழுமல நகருறை வார்மேல்
ஞானசம் பந்தன் நற்றமிழ் மாலை நன்மையால் உரைசெய்து நவில்வார்
ஊனசம் பந்தத் துறுபிணி நீங்கி உள்ளமும் ஒருவழிக் கொண்டு
வானிடை வாழ்வர் மண்மிசைப் பிறவார் மற்றிதற் காணையும் நமதே.

திருச்சிற்றம்பலம்

திருவீழிமிழலை - பண் - புறநீர்மை

திருச்சிற்றம்பலம்

புள்ளித்தோ லாடை பூண்பது நாகம் பூசுசாந் தம்பொடி நீறு, கொள்ளித்தீ விளக்குக் கூளிகள் கூட்டங் காளியைக் குணஞ்செய்கூத் தடையோன், அள்ளற்கா ராமை அகடுவான் மதியம் ஏய்க்க முட் டாழை களாவினை, வெள்ளைக் கொம்பீனும் விரிபொழில் வீழி மிழலையா னெனவினை கெடுமே. க

இசைந்தவா றடியா ரிடுதவல் வானோர் இழுகுசந் தனத்திளங் கமலப், பசும்பொன்வா சிகைமேற் பரப்புவாய் காப்பாய் பத்திசெய் யாதவர் பக்கல், அசும்புபாய் கழனி யலர்கயன் முதலோ டடுத்தரிந் தெடுத்தவான் சும்மை, விசும்புதூர்ப் பனபோல் விம்மிய வீழி மிழலையா னெனவினை கெடுமே. உ

திருத்தன் ஆறங்கன் நீற்றன்நான் மறையன் நீலமார் மிடற்றன் நெற் றிக்கண், ஒருத்தன்மற் றெல்லா வுயிர்கட்கும் உயிரா யுளனிலன் கேடிலி புமைகோன், திருத்தமாய் நாளும் ஆடுநீர்ப் பொய்கை சிறியவர் அறிவினின் மிக்க, விருத்தரை யடிவீழ்ந் திடம்புகும் வீழி மிழலையா னெனவினை கெடுமே. ங

தாங்கருங் காலந் தவிரவந் திருவர் தம்மொடுங் கூடினாரங்கம், பாங்கினல் தரித்துப் பண்டுபோ லெல்லாம் பண்ணிய கண்ணுதற் பரமர், தேங்கொள்பூங் கமுகு தெங்கிளங் கொடிமாச் செண்பகம் வண்பலா இலுப்பை, வேங்கைபூ மகிழால் வெயிற்புகா வீழி மிழலையா னெனவினை கெடுமே. ச

கூசுமா மயானங் கோயில்வா யிற்கட் குடவயிற் றனசில பூதம், பூசுமா சாந்தம் பூதிமெல் லோதி பாதிநற் பொங்கா வரையோன், வாசமாம் புன்னை மௌவல்செங் கழுநீர் மலரணைந் தெழுந்தவான் தென்றல், வீசுமாம் பொழில்தேன் தவலைசேர் வீழி மிழலையா னெனவினை கெடுமே. ரு

பாதியோர் மாதர் மாலுமோர் பாகர் பங்கயத் தயனுமோர் பாலர்
ஆதியாய் நடுவாய் அந்தமாய் நின்ற அடிகளார் அமரர்கட் கமரர்
போதுசேர் சென்னிப் புருடராப் பணிசெய் பூசுரர் பூமகன் அனைய
வேதியர் வேதத் தொலியறா வீழி மிழலையா னெனவினை கெடுமே. சு

தன்தவம் பெரிய சலந்தா னுடலந் தடிந்தசக் கரமெனக் கருளென்
றன்றரி வழிபட் டிழிச்சியவிமானத் திறையவன் பிறையணிசடையன்
நின்றநாள் காலை யிருந்தநாள் மாலை கிடந்தமண் மேல்வரு கலியை
வென்றவே தியர்கள் விழாவறா வீழி மிழலையா னெனவினை கெடுமே.

கடுத்தவா ளரக்கன் கைலையன் றெடுத்த காமுரஞ் சிரம்நெரிந் தலற, அடர்த்ததோர் விரலால் அஞ்செழுத் துரைக்க அருளினன் தடமிகு நெடுவாள், படித்தநான் மறைகேட் டிருந்தபைங் கிளிகள் பதங்களை யோதப்பா டிருந்த, விடைக்குலம் பயிற்றும் விரிபொழில் வீழி மிழலையா னெனவினை கெடுமே. அ

அளவிட லுற்ற அயனொடு மாலும் அண்டம்மண் கிண்டியுங் காணா, முளையெரி யாய மூர்த்தியைத் தீர்த்த முக்கண்எம் முதல்வனை முத்தைத், தளையவிழ் கமலத் தவிசின்மேல் அன்னந் தன்னிளம் பெடையொடும் புல்கி, விளைகதிர்க் கவரி வீசவீற் றிருக்கும் மிழலையா னெனவினை கெடுமே. கூ

கஞ்சிப்போ துடையார் கையிற்கோ சாரக் கலதிகள் கட்டுரை விட்டு, அஞ்சித்தே விரிய எழுந்தநஞ் சதனை யுண்டமா ரர்க்கமு தருளி, இஞ்சிக்கே கதலிக் கனிவிழக் கமுகின் குலையொடும் பழம்விழத் தெங் கின், மிஞ்சுக்கே மஞ்சு சேர்பொழில் வீழி மிழலையா னெனவினை கெடுமே. க0

வேந்தர்வந் திறைஞ்ச வேதியர் வீழி மிழலையுள் விண்ணிழி விமானத், தேய்ந்ததன் தேவி யோடுறை கின்ற ஈசனை யெம்பெரு மானைத், தோய்ந்தநீர்த் தோணி புரத்துறை மறையோன் தூமொழி ஞானசம் பந்தன், வாய்ந்தபா மாலை வாய்நவில் வாரை வானவர் வழி படு வாரே. கக

திருச்சிற்றம்பலம்

திருஆலவாய் - பண் - புறநீர்மை

திருச்சிற்றம்பலம்

மங்கையர்க் கரசி வளவர்கோன் பாவை வரிவளைக் கைம்மட மானி
பங்கயச் செல்வி பாண்டிமா தேவி பணிசெய்து நாள்தொறும் பரவப்
பொங்கழ லுருவன் பூதநா யகனால் வேதமும் பொருள்களும் அருளி
அங்கயற் கண்ணி தன்னொடும் அமர்ந்த ஆலவா யாவதும் இதுவே. க

வெற்றவே அடியார் அடிமிசை வீழும் விருப்பினன் வெள்ளைநீ றணியும், கொற்றவன் தனக்கு மந்திரி யாய குலச்சிறை குலாவிநின் றேத்தும், ஒற்றைவெள் விடையன் உம்பரார் தலைவன் உலகினில் இயற்கையை யொழித்திட், டற்றவர்க் கற்ற சிவனுறை கின்ற ஆலவா யாவதும் இதுவே. உ

செந்துவர் வாயாள் சேலன கண்ணாள் சிவன்திரு நீற்றினை வளர்க்கும்
பந்தணை விரலாள் பாண்டிமா தேவி பணிசெயப் பாரிடை நிலவும்
சந்தமார் தாளம் பாம்புநீர் மத்தந் தண்ணெருக் கம்மலர் வன்னி
அந்திவான் மதிசேர் சடைமுடி யண்ணல் ஆலவா யாவதும் இதுவே.

கணங்களாய் வரினுந் தமியராய் வரினும் அடியவர் தங்களைக் கண்டால், குணங்கொடு பணியுங் குலச்சிறை குலாவுங் கோபுரஞ் சூழ் மணிக் கோயில், மணங்கமழ் கொன்றை வாளரா மதியம் வன்னிவண் கூவிள மாலை, அணைக்குவீற் றிருந்த சடைமுடி யண்ணல் ஆலவா யாவதும் இதுவே. ச

செய்யதா மரைமேல் அன்னமே யனைய சேயிழை திருநுதற்செல்வி
பையர வல்குற் பாண்டிமா தேவி நாள்தொறும் பணிந்தினி தேத்த
வெய்யவேற் சூலம் பாசம்அங் குசமான் விரிகதிர் மழுவுடன் தரித்த
ஐயனார் உமையோ டின்புறு கின்ற ஆலவா யாவதும் இதுவே. ரு

நலமில ராக நலமதுண் டாக நாடவர் நாடறி கின்ற
குலமில ராகக் குலமதுண் டாகத் தவம்பணி குலச்சிறை பரவும்
கலைமலி கரத்தன் மூவிலை வேலன் கரியுரி மூடிய கண்டன்
அலைமலி புனல்சேர் சடைமுடி யண்ணல் ஆலவா யாவதும் இதுவே.

முத்தின்தாழ் வடமுஞ் சந்தனக் குழம்பும் நீறுந்தன் மார்பினின் முயங்கப், பத்தியார் கின்ற பாண்டிமா தேவி பாங்கொடு பணிசெய நின்ற, சுத்தமார் பளிங்கின் பெருமலை யுடனே சுடர்மர கதம்அடுத் தாற்போல், அத்தனார் உமையோ டின்புறு கின்ற ஆலவா யாவதும் இதுவே. எ

நாவணங் கியல்பாம் அஞ்செழுத் தோதி நல்லராய் நல்லியல் பாகும், கோவணம் பூதி சாதனங் கண்டால் தொழுதெழு குலச்சிறை போற்ற, வேணங் கியல்பாம் இராவணன் திண்டோள் இருபதும் நெரி

தா வூன்றி, ஆவணங் கொண்ட சடைமுடி யண்ணல் ஆலவா யாவதும் இதுவே. ௮

மண்ணெலாம் நிகழ மன்னனாய் மன்னும் மணிமுடிச் சோழன் றன் மகளாம், பண்ணினேர் மொழியாள் பாண்டிமா தேவி பாங்கினாற் பணிசெய்து பரவ, விண்ணுளார் இருவர் கீழொடு மேலும் அளப்பரி தாம்வகை நின்ற, அண்ணலார் உமையோ டின்புறு கின்ற ஆலவா யாவதும் இதுவே. ௯

தொண்டரா யுள்ளார் திசைதிசை தோறுந் தொழுதுதன் குணத் தினைக் குலாவக், கண்டுநாள் தோறும் இன்புறுகின்ற குலச்சிறை கருதிநின் றேத்தக், குண்டரா யுள்ளார் சாக்கியர் தங்கள் குறியின்கண் நெறியிடை வாரா, அண்டநா யகன்றான் அமர்ந்துவீற் றிருந்த ஆலவா யாவதும் இதுவே. ௧௦

பன்னலம் புணரும் பாண்டிமா தேவி குலச்சிறை யெனுமிவர்பணியும்
அந்நலம் பெறுசீர் ஆலவா யீசன் திருவடி யாங்கவை போற்றிக்
கன்னலம் பெரிய காழியுள் ஞான சம்பந்தன் செந்தமி ழிவைகொண்
டின்னலம் பாட வல்லவர் இமையோர் ஏத்தவீற் றிருப்பவர் இனிதே.

திருச்சிற்றம்பலம்

திருப்பந்தணை நல்லூர் - பண் - புறநீர்மை

திருச்சிற்றம்பலம்

இடறினார் கூற்றைப் பொடிசெய்தார் மதிலை யிவைசொல்லி யுலகெழுந் தேத்தக், கடறினா ராவர் காற்றுளா ராவர் காதலித்துறை தரு கோயில், கொடிறனார் யாதுங் குறைவிலார் தாம்போய்க் கோவணங் கொண்டுகூத் தாடும், படிறனார் போலும் பந்தணை நல்லூர் நின்றஎம் பசுபதி யாரே. ௧

கழியுளா ரெனவுங் கடலுளா ரெனவுங் காட்டுளார் நாட்டுளா ரெனவும், வழியுளா ரெனவும் மலையுளா ரெனவும் மண்ணுளார் விண்ணுளா ரெனவும், சுழியுளா ரெனவுஞ் சுவடுதா மறியார் தொண்டர்வாய் வந்தன சொல்லும், பழியுளார் போலும் பந்தணை நல்லூர் நின்றஎம் பசுபதி யாரே. ௨

காட்டினா ரெனவும் நாட்டினா ரெனவுங் கடுந்தொழிற் காலனைக் காலால், வீட்டினா ரெனவுஞ் சாந்த வெண்ணீறு பூசியோர் வெண்மதி

சடைமேல், சூட்டினு ரெனவுஞ் சுவடுதா மறியார் சொல்லுள சொல் லும்நால் வேதப், பாட்டினர் போலும் பந்தணை நல்லூர் நின்றஎம் பசு பதி யாரே. ௩

முருகினர் பொழில்சூழ் உலகினு ரேத்த மொய்த்தபல் கணங் களின் றுயர்கண், டுருகினு ராகி யுறுதிபோந் துள்ளம் ஒண்மையால் ஒளிதிகழ் மேனி, கருகினு ரெல்லாங் கைதொழு தேத்தக் கடலுள்நஞ் சமுதமா வாங்கிப், பருகினர் போலும் பந்தணை நல்லூர் நின்றஎம் பசு பதி யாரே. ௪

பொன்னினர் கொன்றை யிருவடங் கிடந்து பொறிகிளர் பூண நூல் புரள, மின்னினர் உருவின் மிளிர்வதோர் அரவம் மேவுவெண் ணீறமெய் பூசித், துன்னினர் நால்வர்க் கறம்அமர்ந் தருளித் தொன் மையார் தோற்றமுங் கேடும், பன்னினர் போலும் பந்தணை நல்லூர் நின்றஎம் பசுபதி யாரே. ௫

ஒண்பொனு ரனைய அண்ணல்வாழ் கெனவும் உமையவள் கண வன் வாழ் கெனவும், அண்பினர் பிரியார் அல்லுநன் பகலும் அடியவர் அடியிணை தொழவே, நண்பினர் எல்லாம் நல்லரென் றேத்த வல்லவர் நீயரென் றேத்தும், பண்பினர் போலும் பந்தணை நல்லூர் நின்றஎம் பசுபதி யாரே. ௬

எற்றினர் ஏதும் இடைகொள்வா ரில்லை யிருநிலம் வானுல கெல்லை
தெற்றினர் தங்கள் காரண மாகச் செருமலைந் தடியிணை சேர்வான்
முற்றினர் வாழும் மும்மதில் வேவ மூவிலைச் சூலமும் மழுவும்
பற்றினர் போலும் பந்தணை நல்லூர் நின்றஎம் பசுபதி யாரே. ௭

ஒலிசெய்த குழலின் முழவம தியம்ப வோசையால் ஆடல றாத
கலிசெய்த பூதங் கையினு லிடவே காலினுற் பாய்தலும் அரக்கன் [யில்
வலிகொள்வர் புலியின் உரிகொள்வ ரேனை வாழ்வுநன் றானுமோர் தலை
பலிகொள்வர் போலும் பந்தணை நல்லூர் நின்றஎம் பசுபதி யாரே. ௮

சேற்றினர் பொய்கைத் தாமரை யானுஞ் செங்கண்மா லிவரிரு கூறுத், தோற்றினர் தோற்றத் தொன்மையை யறியார் துணைமை யும் பெருமையுந் தம்மில், சாற்றினர் சாற்றி யாற்றலோ மென்னச் சாண்கோடத் தவர்செய்த பாவம், பாற்றினர் போலும் பந்தணை நல் லூர் நின்றஎம் பசுபதி யாரே. ௯, ௧௦

கல்லிசை பூணக் கலையொலி யோவாக் கழுமல முதுபதி தன்னில்
நல்லிசை யாளன் புல்லிசை கேளா நற்றமிழ் ஞானசம் பந்தன்
பல்லிசை பகுவாய்ப் படுதலை யேந்தி மேவிய பந்தணை நல்லூர்
சொல்லிய பாடல் பத்தும்வல் லார்மேல் தொல்வினை சூழகி லாவே. கக

திருச்சிற்றம்பலம்

திருவோமாம்புலியூர் - பண் - புறநீர்மை

திருச்சிற்றம்பலம்

பூங்கொடி மடவாள் உமையொரு பாகம் புரிதரு சடைமுடி யடிகள், வீங்கிருள் நட்டம் ஆடுமெம் விகிர்தர் விருப்பொடும் உறைவிடம் வினவில், தேங்கமழ் பொழிலிற் செழுமலர் கோதிச் செறிதரு வண்டிசை பாடும், ஓங்கிய புகழார் ஓமமாம் புலியூர் உடையவர் வடதளி யதுவே. க

சம்பாற் கருளிச் சலந்தரன் வீயத் தழலுமிழ் சக்கரம் படைத்த
எம்பெரு மானார் இமையவ ரேத்த இனிதினங் குறைவிடம் வினவில்
அம்பர மாகி யழலுமிழ் புகையின் ஆகுதி யால்மழை பொழியும்
உம்பர்க ளேத்தும் ஓமமாம் புலியூர் உடையவர் வடதளி யதுவே. உ

பாங்குடைத் தவத்துப் பகீரதற் கருளிப் படர்சடைக் கரந்தநீர்க் கங்கை
தாங்குதல்தவிர்த்துத்தராதலத்திழித்த தத்துவன்உறைவிடம்வினவில்
ஆங்கெரி மூன்றும் அமர்ந்துட னிருந்த அங்கையால் ஆகுதி வேட்கும்
ஓங்கிய மறையோர் ஓமமாம் புலியூர் உடையவர் வடதளி யதுவே. ந

புற்றரா வணிந்து நீறுமெய் பூசிப் பூதங்கள் சூழ்தர வூரூர் [வினவில்
பெற்றமொன் றேறிப் பெய்பலி கொள்ளும் பிரானவன் உறைவிடம்
கற்றநால் வேதம் அங்கமோ ராறுங் கருத்தினார் அருத்தியால் தெரியும்
உற்றபல் புகழார் ஓமமாம் புலியூர் உடையவர் வடதளி யதுவே. ச

நிலத்தவர் வானம் ஆள்பவர் கீழோர் துயர்கெட நெடியமாற் கருளால், அலைத்தவல் லசுரர் ஆசற வாழி யளித்தவன் உறைவிடம் வினவில், சலத்தினாற் பொருள்கள் வேண்டுதல் செய்யாத் தன்மையார் நன்மையால் மிக்க, உலப்பில்பல் புகழார் ஓமமாம் புலியூர் உடையவர் வடதளி யதுவே. ரு

மணந்திகழ் திசைகள் எட்டும் ஏழிசையும் மலியுமா றங்கம்ஐ வேள்வி, இணைந்தநால் வேதம் மூன்றெரி யிரண்டு பிறப்பென வொருமையா லுணரும், குணங்களும் அவற்றின் கொள்பொருள் குற்ற மற்றவை யுற்றது மெல்லாம், உணர்ந்தவர் வாழும் ஓமமாம் புலியூர் உடையவர் வடதளி யதுவே. ௬, ௭

தலையொரு பத்துந் தடக்கைய திரட்டி தானுடை அரக்கனொண் கயிலை
அலைவது செய்த அவன்திறல் கெடுத்த ஆதியார் உறைவிடம் வினவில்
மலையென வோங்கும் மாளிகை நிலவும் மாமதில் மாற்றல ரென்றும்
உலவுபல் புகழார் ஓமமாம் புலியூர் உடையவர் வடதளி யதுவே. ௮

கள்ளவிழ் மலர்மே லிருந்தவன் கரியோ னென்றிவர் காண்பரி தாய
ஒள்ளெரி யுருவர் உமையவ ளோடும் உகந்தினி துறைவிடம் வினவில்
பள்ளநீர் வாளை பாய்தரு கழனிப் பனிமலர்ச் சோலைசூ ழாலை
ஒள்ளிய புகழார் ஓமமாம் புலியூர் உடையவர் வடதளி யதுவே. ௯

தெள்ளிய ரல்லாத் தேரரோ டமணர் தடுக்கொடு சீவரம் உடுக்கும்
கள்ளமார் மனத்துக் கலதிகட் கருளாக் கடவுளார் உறைவிடம் வினவில்
நள்ளிருள் யாமம் நான்மறை தெரிந்து நலந்திகழ் மூன்றெரி யோம்பும்
ஒள்ளியார் வாழும் ஓமமாம் புலியூர் உடையவர் வடதளி யதுவே. ௧௦

விளைதரு வயலுள் வெயில்செறி பவள மேதிகண் மேய்புலத் திடறி
ஒளிதர மல்கும் ஓமமாம் புலியூர் உடையவர் வடதளி யானைக்
களிதரு நிவப்பிற் காண்டகு செல்வக் காழியுள் ஞானசம் பந்தன்
அளிதரு பாடல் பத்தும்வல் லார்கள் அமரலோ கத்திருப் பாரே. ௧௧

திருச்சிற்றம்பலம்

திருக்கோணமலை - பண் - புறநீர்மை

திருச்சிற்றம்பலம்

நிரைகழல் அரவஞ் சிலம்பொலி யலம்பும் நிமலர்நீ றணிதிரு மேனி, வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த வடிவினர் கொடியணி விடையர், கரைகெழு சந்துங் காரகிற் பிளவும் அளப்பருங் கனமணி வரன்றிக், குரைகடல் ஓதம் நித்திலங் கொழிக்குங் கோணமா மலையமர்ந் தாரே. ௧

கடிதென வந்த கரிதனை யுரித்து அவ்வுரி மேனிமேற் போர்ப்பர், பிடியன நடையாள் பெய்வளை மடந்தை பிறைநுத லவளொடும் உடனுய்க், கொடிதெனக் கதறுங் குரைகடல் சூழ்ந்து கொள்ளமுன் நித்தி லஞ் சுமந்து, குடிதனை நெருங்கிப் பெருக்கமாய்த் தோன்றுங் கோணமா மலையமர்ந் தாரே. ௨

பனித்திளந் திங்கட் பைந்தலை நாகம் படர்சடை முடியிடை வைத்தார்
கனித்திளந் துவர்வாய்க் காரிகை பாக மாகமுன் கலந்தவர் மதில்மேல்
தனித்தபே ருருவ விழித்தழல் நாகந் தாங்கிய மேருவெஞ் சிலையாக்
குனித்ததோர் வில்லார் குரைகடல் சூழ்ந்த கோணமா மலையமர்ந் தாரே.

பழித்திளங் கங்கை சடையிடை வைத்துப் பாங்குடை மதனனைப் பொடியா, விழித்தவன் தேவி வேண்டமுன் கொடுத்த விமலனுர் கமலமார் பாதர், தெழித்துமுன் அரற்றுஞ் செழுங்கடல் தரளஞ் செம்பொனும் இப்பியுஞ் சுமந்து, கொழித்துவன் திரைகள் கரையிடைச் சேர்க்குங் கோணமா மலையமர்ந் தாரே. ௪

தாயினும் நல்ல தலைவரென் றடியார் தம்மடி போற்றிசைப் பார்கள், வாயினும் மனத்தும் மருவிநின் றகலா மாண்பினர் காண்பல வேடர், நோயிலும் பிணியுந் தொழிலர்பால் நீக்கி நுழைதரு நூலினர் ஞாலம், கோயிலுஞ் சுனையுங் கடலுடன் சூழ்ந்த கோணமா மலையமர்ந் தாரே. ௫

பரிந்துநன் மனத்தால் வழிபடும் மாணி தன்னுயிர் மேல்வருங் கூற்றைத், திரிந்திடா வண்ணம் உதைத்தவற் கருளுஞ் செம்மையார் நம்மையா ளுடையார், விரிந்துயர் மௌவல் மாதவி புன்னை வேங்கை வண் செருந்திசெண் பகத்தின், குருந்தொடு முல்லை கொடிவிடும் பொழில்சூழ் கோணமா மலையமர்ந் தாரே. ௬, ௭

எடுத்தவன் தருக்கை யிழித்தவர் விரலால் எத்திட வாத்தமாம் பேறு, தொடுத்தவர் செல்வந் தோன்றிய பிறப்பும் இறப்பறி யாதவர் வேள்வி, தடுத்தவர் வனப்பால் வைத்ததோர் கருணை தன்னருட் பெருமையும் வாழ்வும், கொடுத்தவர் விரும்பும் பெரும்புக ழாளர் கோணமா மலையமர்ந் தாரே. ௮

அருவரா தொருகை வெண்டலை யேந்தி யகந்தொறும் பலியுடன் புக்க, பெருவரா யுறையும் நீர்மையர் சீர்மைப் பெருங்கடல் வண்ண

னும் பிரமன், இருவரும் அறியா வண்ணம்ஒள் எரியாய் உயர்ந்தவர் பெயர்ந்தநன் மாற்கும், குருவாய் நின்றார் குரைகழல் வணங்கக் கோணமா மலையமர்ந் தாரே. க

நின்றுணுஞ் சமணும் இருந்துணுந் தேரும் நெறியலா தனபுறங்கூற வென்றநஞ் சுண்ணும் பரிசினர் ஒருபால் மெல்லிய லொடும்உடனாகித் துன்றுமொண் பௌவ மவ்வலுஞ் சூழ்ந்து தாழ்ந்துறுதிரைபலமோதிக் குன்றமொண் கானல் வாசம்வந் தலவுங் கோணமா மலையமர்ந் தாரே.

குற்றமி லாதார் குரைகடல் சூழ்ந்த கோணமா மலையமர்ந் தாரைக், கற்றுணர் கேள்விக் காழியர் பெருமான் கருத்துடை ஞானசம் பந்தன், உற்றசெந் தமிழார் மாலையீ ரைந்தும் உரைப்பவர் கேட்பவர் உயர்ந்தோர், சுற்றமு மாகித் தொல்வினை யடையார் தோன்றுவர் வானிடைப் பொலிந்தே. கக

திருச்சிற்றம்பலம்

திருக்குருகாவூர்வெள்ளடை - பண் - அந்தாளிக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

சுண்ணவெண் ணீறணி மார்பில் தோல்புனைந்
தெண்ணரும் பல்கணம் ஏத்தநின் றாடுவர்
விண்ணமர் பைம்பொழில் வெள்ளடை மேவிய
பெண்ணமர் மேனியெம் பிஞ்ஞக னாரே. க

திரைபுல்கு கங்கை திகழ்சடை வைத்து
வரைமக ளோடுடன் ஆடுதிர் மல்கு
விரைகமழ் தண்பொழில் வெள்ளடை மேவிய
அரைமல்கு வாளர வாட்டுகந் தீரே. உ

அடையலர் தொல்நகர் மூன்றெரித் தன்ன
நடைமட மங்கையோர் பாகம் நயந்து
விடையுகந் தேறுதிர் வெள்ளடை மேவிய
சடையமர் வெண்பிறைச் சங்கரன் நீரே. ங

வளங்கிளர் கங்கை மடவர லோடு
களம்பட ஆடுதிர் காடரங் காக
விளங்கிய தண்பொழில் வெள்ளடை மேவிய
இளம்பிறை சேர்சடை யெம்பெரு மானே. ச

சுரிகுழல் நல்ல துடியிடை யோடு
பொரிபுல்கு காட்டிடை யாடுதிர் பொங்க
விரிதரு பைம்பொழில் வெள்ளடை மேவிய
எரிமழு வாட்படை யெந்தை பிரானே. ௯

காவியங் கண்மட வாளொடுங் காட்டிடைத்
தீயக லேந்திநின் றாடுதிர் தேன்மலர்
மேவிய தண்பொழில் வெள்ளடை மேவிய
ஆவினில் ஐந்துகொண் டாட்டுகந் தீரே. ௰, ௧௧

திருச்சிற்றம்பலம்

திருநல்லூர்ப்பெருமணம் - பண் - அந்தாளிக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

கல்லூர்ப் பெருமணம் வேண்டா கழுமலம்
பல்லூர்ப் பெருமணம் பாட்டுமெய் யாய்த்தில
சொல்லூர்ப் பெருமணஞ் சூடல ரேதொண்டர்
நல்லூர்ப் பெருமணம் மேயநம் பானே. ௧

தருமண லோதஞ்சேர் தண்கடல் நித்திலம்
பருமண லாக்கொண்டு பாவைநல் லார்கள்
வருமணங் கூட்டி மணஞ்செயும் நல்லூர்ப்
பெருமணத் தான்பெண்ணோர் பாகங்கொண் டானே. ௨

அன்புறு சிந்தைய ராகி அடியவர்
நன்புறு நல்லூர்ப் பெருமணம் மேவிநின்
றின்புறும் எந்தை யிணையடி யேத்துவார்
துன்புறு வாரல்லர் தொண்டுசெய் வாரே. ௩

வல்லியந் தோலுடை யார்ப்பது போர்ப்பது
கொல்லியல் வேழத் துரிவிரி கோவணம்
நல்லிய லார்தொழு நல்லூர்ப் பெருமணம்
புல்கிய வாழ்க்கையெம் புண்ணிய னார்க்கே. ௪

ஏறுகந் தீரிடு காட்டெரி யாடிவெண்
ணீறுகந் தீர்நிரை யார்விரி தேன்கொன்றை
நாறுகந் தீர்திரு நல்லூர்ப் பெருமணம்
வேறுகந் தீருமை கூறுகந் தீரே. ௫

சிட்டப்பட் டார்க்கெளி யான்செங்கண் வேட்டுவப்
பட்டங்கட் டுஞ்சென்னி யான்பதி யாவது
நட்டக்கொட் டாட்டறு நல்லூர்ப் பெருமணத்
திட்டப்பட் டாலொத்தி ராலெம் பிரானிரே. ௬

மேகத்த கண்டன்என் தோளன்வெண் ணீற்றுமை
பாகத்தன் பாய்புலித் தோலொடு பந்தித்த
நாகத்தன் நல்லூர்ப் பெருமணத் தான்நல்ல
போகத்தன் யோகத்தை யேபுரிந் தானே. ௭

தக்கிருந் தீரன்று தாளால் அரக்கனை
உக்கிருந் தொல்க வுயர்வரைக் கீழிட்டு
நக்கிருந் தீரின்று நல்லூர்ப் பெருமணம்
புக்கிருந் தீரெமைப் போக்கரு ளீரே. ௮

ஏலுந்தண் தாமரை யானும் இயல்புடை
மாலுந்தம் மாண்பறி கின்றிலர் மாமறை
நாலுந்தம் பாட்டென்பர் நல்லூர்ப் பெருமணம்
போலுந்தங் கோயில் புரிசடை யார்க்கே. ௯

ஆதர் அமணொடு சாக்கியர் தாஞ்சொல்லும்
பேதைமை கேட்டுப் பிணக்குறு வீர்வம்மின்
நாதனை நல்லூர்ப் பெருமணம் மேவிய
வேதனை தாள்தொழ வீடெளி தாமே. ௧௦

நறும்பொழிற் காழியுள் ஞானசம் பந்தன்
பெறும்பத நல்லூர்ப் பெருமணத் தானை
உறும்பொரு ளாற்சொன்ன வொண்டமிழ் வல்லார்க்
கறும்பழி பாவம் அவலம் இலரே. ௧௧

திருச்சிற்றம்பலம்

ஆகத் திருப்பதிகங்கள் ௩௮௫

மூன்றந் திருமுறை

முற்றிற்று

திருவிடைவாய்*

திருச்சிற்றம்பலம்

மறியார் கரத்தெந் தையம்மா துமையோடும்
பிரியா தபெம்மான் உறையும் இடமென்பர்
பொறிவாய் வரிவண் டுதன்பூம் பெடைபுல்கி
வெறியார் மலரில் துயிலும் விடைவாயே. க

ஒவ்வாத என்பே யிழையா வொளிமௌலிச்
செவ்வான் மதிவைத் தவர்சேர் விடமென்பர்
எவ்வா யிலுமே டலர்கோ டலம்போது
வெவ்வா யரவம் மலரும் விடைவாயே. உ

கரையார் கடல்நஞ் சமுதுண் டவர்கங்கைத்
திரையார் சடைத்தீ வண்ணர்சேர் விடமென்பர்
குரையார் மணியுங் குளிர்சந் தமுங்கொண்டு
விரையார் புனல்வந் திழியும் விடைவாயே. ங

கூசத் தழல்போல் விழியா வருகூற்றைப்
பாசத் தொடும்வீ ழவுதைத் தவர்பற்றும்
வாசக் கதிர்ச்சா லிவெண்சா மரையேபோல்
வீசக் களியன் னமல்கும் விடைவாயே. ச

திரியும் புரமூன் றையுஞ்செந் தழலுண்ண
வெரியம் பெய்தகுன் றவில்லி யிடமென்பர்
கிரியுந் தருமாளி கைச்சூ ளிகைதன்மேல்
விரியுங் கொடிவான் விளிசெய் விடைவாயே. ரு

கிள்ளை மொழியா ளையிகழ்ந் தவன்முத்தீத்
தள்ளித் தலைதக் கனைக்கொண் டவர்சார்வாம்
வள்ளி மருங்குல் நெருங்கும் முலைச்செவ்வாய்
வெள்ளை நகையார் நடஞ்செய் விடைவாயே. சு

பாதத் தொலிபா ரிடம்பா டநடஞ் செய்
நாதத் தொலியர் நவிலும் இடமென்பர்

---

* இப்பதிகம் கல்வெட்டினின்று எடுக்கப்பட்டது.

ஓதத் தொலியுங் கெழுமும் முழவோடு
வேதத் தொலியும் பயிலும் விடைவாயே. ௭

எண்ணா தஅரக் கனூரத் தைநெரித்துப்
பண்ணார் தருபா டலுகந் தவர்பற்றாங்
கண்ணார் விழவிற் கடிவீ திகள்தோறும்
விண்ணோர் களும்வந் திறைஞ்சும் விடைவாயே. ௮

புள்வாய் பிளந்தான் அயன்பூ முடிபாதம்
ஒள்வான் கிலந்தே டும்ஒரு வர்க்கிடமாந்
தெள்வார் புனற்செங் கழுநீர் முகைதன்னில்
விள்வாய் நறவுண் டுவண்டார் விடைவாயே. ௯

உடைஏ தமிலார் துவராடை யுடுப்போர்
கிடையா நெறியான் கெழுமும் இடமென்பர்
அடையார் புரம்வே வமூவர்க் கருள்செய்த
விடையார் கொடியான் அழகார் விடைவாயே. ௰

ஆறும் மதியும் பொதிவே ணியனூரா
மாறில் பெருஞ்செல் வம்மலி விடைவாயை
நாறும் பொழிற்கா ழியர்ஞா னசம்பந்தன்
கூறுந் தமிழ்வல் லவர்குற் றமற்றோரே. ௧௧

திருச்சிற்றம்பலம்

சிவஸ்தல, சிவநாம சத்திநாம அட்டவணை

ஈழ - ஈழநாடு, கோ - கொங்குநாடு, சோ - சோழநாடு, துளு - துளுவநாடு, தொ - தொண்டைநாடு, நடு - நடுநாடு, பா - பாண்டிநாடு, மலை - மலைநாடு, வட - வடநாடு

ஸ்தலங்களின் பெயர்	நாடு	சுவாமி பெயர்	தேவியார் பெயர்
மூவரும் தேவாரம் பாடியுள்ள ஸ்தலங்கள் 44.			
1 திருஅதிகை	ந	வீரட்டேசுவரர்	திரிபுரசுந்தரி
2 திருஅரிசிற்கரைப் புத்தூர்	சோ	படிக்காசளித்த ஈசுவரர்	அழகாம்பிகை
3 திருஆமாத்தூர்	ந	அபிராமேசுவரர்	முத்தாம்பிகையம்மை
4 திருஆரூர்	சோ	வன்மீக நாதர்	அல்லியங்கோதையம்மை
5 திருஆலங்காடு	தொ	தேவர்சிங்கப் பெருமான்	வண்டார்குழலியம்மை
6 திருஆவடுதுறை	சோ	மாசிலாமணி ஈசுவரர்	ஒப்பிலாமுலையம்மை
7 திருஆனைக்கா	சோ	ஜம்புகேசுவரர்	அகிலாண்ட நாயகி
8 திருஇடைமருதூர்	சோ	மகாலிங்கேசுவரர்	பெருநலமாமுலை நாயகி
9 திருஐயாறு	சோ	பஞ்சநதேசுவரர்	அறம்வளர்த்த நாயகி
10 திருஒற்றியூர்	தொ	படம்பக்க நாதர்	வடிவுடையம்மை
11 திருக்கச்சி ஏகம்பம்	தொ	ஏகாம்பர நாதர்	காமாக்ஷியம்மை
12 திருக்கடவூர்	சோ	அமிர்தகடேசுவரர்	அபிராமியம்மை

ஸ்தலங்களின் பெயர்	நாடு	சுவாமி பெயர்	தேவியார் பெயர்
13 திருக்கடவூர் மயானம்	சோ	பிரமபுரீசுவரர்	மலர்குழல்மின்னம்மை
14 திருக்கைலாயம்	வ	கைலாயநாதர்	பார்வதியம்மை
15 திருக்கழிப்பாலை	சோ	பால்வண்ணநாதர்	வேதநாயகி
16 திருக்கழுக்குன்றம்	தொ	வேதகிரீசுவரர்	பெண்ணில்நல்லாளம்மை
17 திருக்கற்குடி	சோ	கற்பக நாதர்	அஞ்சனாக்ஷியம்மை
18 ஸ்ரீகாழி (12 பெயர்கள்)	சோ	பிரம்மபுரீசுவரர்	திருநிலை நாயகி
19 திருக்காளத்தி	தொ	காளத்திசுவரர்	ஞானப்பூங்கோதை
20 கோயில்	சோ	திருமூல நாதர்	உமையம்மை
21 திருக்கோளிலி	சோ	கோளிலி நாதர்	வண்டமர் பூங்குழலம்மை
22 திருச்சோற்றுத்துறை	சோ	ஓதவனேசுவரர்	அன்னபூரணி
23 திருத்அருத்தி	சோ	வேதேஸ்வரர்	முகிழாம்பிகை
24 திருநள்ளாறு	சோ	தர்பாரண்யேசுவரர்	போகமார்த்த பூண்முலையம்மை
25 திருநனிபள்ளி	சோ	நற்றுணையப்பர்	மலையான் மடந்தை
26 திருநாகேச்சுரம்	சோ	நாகநாதேசுவரர்	குன்றமுலை நாயகி
27 திருநாகைக்காரோணம்	சோ	காயாரோகணேசுவரர்	நீலாயதாக்ஷி
28 திருநின்றியூர்	சோ	மகாலக்ஷ்மீசுவரர்	உலக நாயகி
29 திருநெல்வாயிலாத்துறை	ந	அரத்துறை நாதர்	ஆநந்த நாயகி
30 ஸ்ரீ பருப்பதம்	வ	பருப்பத நாதர்	பருப்பத நாயகி
31 திருப்பாண்டிக் கொடுமுடி	கொ	கொடுமுடி நாதர்	பண்மொழி நாயகி
32 திருப்புகலூர்	சோ	அக்கினீசுவரர்	கருந்தாள் குழலி
33 திருப்புறம்பயம்	சோ	சாக்ஷி நாதேசுவரர்	கரும்பன்ன சொல்லம்மை
34 திருப்புன்கூர்	சோ	சிவலோக நாதர்	சொக்க நாயகி

35 திருப்பூவணம்	பா	பூவணநாதேசுவரர்	மின்னனையாளம்மை
36 திருப்பைஞ்ஞீலி	சோ	நீலகண்டேசுவரர்	விசாலாக்ஷி
37 திருமழபாடி	சோ	வஜ்ஜிரஸ்தம்பேசுவரர்	அழகாம்பிகை
38 திருமறைக்காடு	சோ	மறைக்காட்டீசுவரர்	யாழைப் பழித்த மொழியம்மை
39 திருமுதுகுன்றம்	ந	பழமலை நாதர்	பெரிய நாயகி
40 திருவலம்புரம்	சோ	வலம்புரிநாதேஸ்வரர்	வடுவகிர் கண்ணம்மை
41 திருவலிவலம்	சோ	மனத்துணை நாதேஸ்வரர்	வாளையங் கண்ணியம்மை
42 திருவாஞ்சியம்	சோ	வாஞ்சிலிங்கேசுவரர்	மங்கள நாயகி
43 திருவீழிமிழலை	சோ	வீழி அழகேசர்	சுந்தர குஜாம்பிகை
44 திருவெண்காடு	சோ	சுவேதாரண்யேசுவரர்	பிரம்மவித்தியா நாயகி

திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் பாடிய ஸ்தலங்கள் 52.

1 திருஅண்ணாமலை	ந	அருணாசலேசுவரர்	உண்ணாமுலையம்மை
2 திருஅவளிவணல்லூர்	சோ	சாக்ஷி நாயகேசுவரர்	சௌந்தர நாயகி
3 திருஅன்பிலாலந்துறை	சோ	ஆலந்துறை நாதர்	சௌந்தர நாயகி
4 திருஅன்னியூர்	சோ	ஆபத்சகாயேசுவரர்	பெரிய நாயகி
5 திருஆக்கூர்	சோ	தான்தோன்றியப்பர்	வாள்நெடுங்கண்ணி
6 திருஆலவாய்	பா	சொக்கநாதர்	மீனாக்ஷி
7 திருஇராமேச்சுவரம்	பா	இராம நாதேசுவரர்	பர்வத வர்த்தினி
8 திருஇன்னம்பர்	சோ	எழுத்தறி நாதர்	சௌந்தர நாயகி
9 திருஓமாம்புலியூர்	சோ	துயர்தீர்த்த நாதர்	பூங்கொடி நாயகி
10 திருக்கடம்பூர்	சோ	அமிர்தகடேசுவரர்	சோதி மின்னம்மை
11 திருக்கண்டியூர்	சோ	பிரமசிரக்கண்டீசுவரர்	மங்கள நாயகி
12 திருக்கருகாவூர் [ள்ளி	சோ	முல்லைவனேசுவரர்	கரும்பனையாளம்மை
13 மேலைத் திருக்காட்டுப்ப	சோ	தீயாடியப்பர்	சௌந்தர நாயகி

	ஸ்தலங்களின் பெயர்	நாடு	சுவாமி பெயர்	தேவியார் பெயர்
14	திருக்காறூர்	சோ	செம்மேனி நாதர்	சிவயோக நாயகி
15	திருக்கீழ்வேளூர்	சோ	கேடிலியப்பர்	வனமுலை நாயகி
16	திருக்குடமூக்கு	சோ	கும்பேசுவரர்	மங்கள நாயகி
17	திருத்தென்குரங்காடுது	சோ	ஆபத் சகாயேசுவரர்	பவளக்கொடியம்மை
18	திருக்கோகர்ணம் [றை	அ	மஹாபல நாதர்	கோகர்ண நாயகி
19	திருக்கோடிகா	சோ	திரிகோடீசுவரர்	திரிபுரசுந்தரி
20	திருக்கோவலூர்	ந	வீரட்டேசுவரர்	சிவானந்தவல்லி
21	திருக்கோழம்பம்	சோ	கோகிலேசுவரர்	சௌந்தர நாயகி
22	திருச்சாய்க்காடு	சோ	சாயாவனேசுவரர்	குயிலினும் நன்மொழியம்மை
23	திரிசிராப்பள்ளி	சோ	தாயுமானேசுவரர்	மட்டுவார் குழலம்மை
24	திருச்சிவபுரம்	சோ	சிவபுர நாதர்	சிங்காரவல்லி
25	திருச்செங்காட்டங்குடி	சோ	கணபதீசுவரர்	திருக்குழல் நாயகி
26	திருச்செம்பொன்பள்ளி	சோ	சொர்ணபுரீசுவரர்	மருவார் குழலி
27	திருச்சேறை	சோ	செந்நெறியப்பர்	ஞானவல்லி
28	திருநல்லம்	சோ	உமாமகேசுவரர்	மங்கள நாயகி
29	திருநல்லூர்	சோ	கலியாணசுந்தரேசுவரர்	கலியாணசுந்தரி
30	திருநாரையூர்	சோ	சௌந்தரேசுவரர்	திரிபுரசுந்தரி
31	திருநெய்த்தானம்	சோ	நெய்யாடியப்பர்	இளமங்கையம்மை
32	திருப்பந்தணைநல்லூர்	சோ	பசுபதீசுவரர்	காம்பனதோளி யம்மை
33	திருப்பராய்த்துறை	சோ	பராய்த்துறை நாதர்	பொன்மயிலாம்பிகை
34	திருப்பழனம்	சோ	ஆபத்ஸகாயர்	பெரிய நாயகி
35	திருப்பாசூர்	தொ	பாசூர் நாதர்	பசுபதி நாயகி

36 திருப்பாதிரிப்புலியூர்	ந	பாடலேசுவரர்	பெரிய நாயகி
37 திருப்புத்தூர்	பா	புத்தூரீசுவரர்	சிவகாமி யம்மை
38 திருப்புள்ளிருக்குவேளூர்	சோ	வைத்தியநாதர்	தையல் நாயகி
39 திருப்பெண்ணாகடம்	ந	சுடர்க்கொழுந்தீசுவரர்	கடந்தை நாயகி
40 திருப்பெருவேளூர்	சோ	பிரியாயீசுவரர்	மின்னனையா ளம்மை
41 திருமங்கலக்குடி	சோ	பிராணவரதேசுவரர்	மங்கள நாயகி
42 திருமணஞ்சேரி	சோ	அருள்வள்ளல் நாயகர்	யாழின்மொழி யம்மை
43 திருமயிலாடுதுறை	சோ	மாயூர நாதேசுவரர்	அபயாம்பிகை
44 திருமருகல்	சோ	மாணிக்க வண்ணேசுவரர்	வண்டுவார் குழலம்மை
45 திருமாற்பேறு	தொ	மால்வணங்கீசுவரர்	கருணை நாயகி
46 திருவலஞ்சுழி	சோ	கற்பகநாதீசுவரர்	பெரிய நாயகி
47 திருவாய்மூர்	சோ	வாய்மூர் நாதர்	பாலினு நன்மொழியம்மை
48 திருவான்மியூர்	தொ	மருந்தீசுவரர்	சொக்க நாயகி
49 திருவிசயமங்கை	சோ	விஜயநாதேசுவரர்	மங்கை நாயகி
50 திருவெண்ணியூர்	சோ	வெண்ணிக் கரும்பர்	அழகிய நாயகி
51 திருவேட்களம்	சோ	பாசுபதேசுவரர்	நல்ல நாயகி
52 திருவேதிகுடி	சோ	வேதபுரீசுவரர்	மங்கையர்க்கரசி

திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளும் சுந்தரமூர்த்தி சுவாமிகளும் பாடிய ஸ்தலங்கள் 13.

1 திருக்கருப்பறியலூர்	சோ	குற்றம்பொறுத்த நாதேசுரர்	கோல்வளையம்மை
2 திருக்கானப்பேர்	பா	காளையீசுரர், சுந்தரேசுரர், சோமேசுரர்	சொர்ணவல்லி, மீனாக்ஷி, சௌந்தர நாயகி
3 திருக்குருகாவூர்	சோ	வெள்ளிடையீசுரர்	காவியங்கண்ணியம்மை
4 திருக்கேதாரம்	வட	கேதாரேசுரர்	கேதார கௌரியம்மை
5 திருக்கேதீச்சுரம்	ஈழ	கேதீசுரர்	கௌரியம்பிகை

ஸ்தலங்களின் பெயர்	நாடு	சுவாமி பெயர்	தேவியார் பெயர்
6 திருக்கோலக்கா	சோ	சத்தபுரீசுரர்	ஓசைகொடுத்த நாயகி
7 திருநறையூர்	சோ	சித்தநாதேசுரர்	அழகாம்பிகை
8 திருப்பரங்குன்று	பா	பரங்கிரிநாதேசுரர்	ஆவுடைநாயகி
9 திருப்பனையூர்	சோ	சௌந்தரிய நாதர்	பெரியநாயகியம்மை
10 திருப்பாச்சிலாச்சிராமம்	சோ	மாற்றறிவரதர்	பாலசௌந்தரி
11 திருப்புனவாயில்	பா	பழம்பதிநாதேசுரர்	கருணை நாயகியம்மை
12 திருவாளொளிபுற்றூர்	சோ	மாணிக்கவண்ணேசுரர்	வண்டார் பூங்குழலம்மை
13 திருவேள்விக்குடி	சோ	கலியாணசுந்தரேசுரர்	பரிமளசுகந்தநாயகி

திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் பாடல் மாத்திரம் உள்ள ஸ்தலங்கள் 110.

1 திருஅகத்தியான்பள்ளி	சோ	அகத்தீசுரர்	பாகம்பிரியா நாயகி
2 திருஅச்சிறுபாக்கம்	தொ	பாக்கபுரேசுரர்	சுந்தர நாயகி
3 திருஅம்பர்ப்பெருந் திருக்கோயில்	சோ	பிரமபுரீசுரர்	பூங்குழலம்மை
4 திருஅம்பர்மாகாளம்	சோ	காளகண்டேசுரர், மாகாளநாதர்	பக்ஷி நாயகி, பயக்ஷய நாயகி
5 திருஅரசிலி	தொ	அரசிலிநாதர்	பெரிய நாயகி
6 திருஅரதைப்பெரும்பாழி	சோ	பாதாளேசுரர்	அலங்கார நாயகி
7 திருஅழுந்தூர்	சோ	வேதபுரீசுரர்	சௌந்தராம்பிகை
8 திருஅறையணிநல்லூர்	நடு	அறையணிநாதேசுரர்	அருள் நாயகி
9 திருஅனேகதங்காபதம்	வட	அருண்மன்னேசுரர்	மனோன்மணியம்மை
10 திருஆடானை	பா	ஆடானை நாதர், ஆதி ரத்தினேசுரர்	சிநேகவல்லி

11	திருஆப்பனூர்	பா	ஆப்பனூரீசுரர். திருவாப்புடை	அம்பிகையம்மை, குர்வங்கமழ்
12	திருஆவூர்ப்பசுபதீச்சுரம்	சோ	பசுபதீசுரர் [யார்	மங்களநாயகி [குழலம்மை
13	திருஇடும்பாவனம்	சோ	சற்குண நாதேசுரர்	மங்கள நாயகி
14	திருஇடைச்சுரம்	தொ	இடைச்சுரநாதர், ஞானபுரீசுரர்	இமயமடக்கொடியம்மை
15	திருஇந்திரநீலபருப்பதம்	வட	நீலாசலநாதர்	நீலாம்பிகை
16	திருஇராமனதீச்சுரம்	சோ	இராமநாதேசுரர்	கருவார் குழலியம்மை
17	திருஇரும்பூளை	சோ	காசி ஆரணியேசுரர்	ஏலவார் குழலியம்மை
18	திருஇரும்பைமாகாளம்	தொ	மாகாளேசுரர்	குயில் மொழியம்மை
19	திருஇலம்பையங்கோட்டூர்	தொ	சந்திரசேகரேசுரர்	கோடேந்து முலையம்மை
20	திருஈங்கோய்மலை	சோ	மரகதாசலேசுரர்	மரகதவல்லியம்மை
21	திருஉசாத்தானம்	சோ	மந்திரபுரீசுரர்	பெரிய நாயகியம்மை
22	திருஊறல்	தொ	உமாபதீசுரர்	உமையம்மை
23	திருஎருக்கத்தம்புலியூர்	நடு	நீலகண்டேசுரர்	நீலமலர்க்கண்ணம்மை
24	திருஏடகம்	பா	ஏடகநாதேசுரர்	சுகந்தகுந்தளாம்பாள், ஏலவார்
25	திருஓத்தூர்	தொ	வேதநாதேசுரர்	இளமுலைநாயகி [குழலி
26	திருக்கச்சிநெறிக்காரைக்	தொ	காரைத்திருநாதேசுரர்	காமாக்ஷியம்மை
27	திருக்கடிக்குளம் [காடு	சோ	கற்பகேசுரர்	சௌந்தர நாயகி
28	திருக்கடைமுடி	சோ	கடைமுடிநாதேசுரர்	அபிராமியம்மை
29	திருக்கண்ணார் கோயில்	சோ	கண்ணாயிரேசுரர்	முருகுவளர் கோதையம்மை
30	திருக்காவீரம்	சோ	காவீரேசுரர்	பிரத்தியக்ஷ மின்னம்மை
31	திருக்கருக்குடி	சோ	சற்குணலிங்கேசுரர். பிரமபுரீசர்	சர்வாலங்க்ருத மின்னம்மை, அத்துவித நாயகி, கலியாணி யம்மை
32	திருக்கருவூர்	கொ	பசுபதீசுரர்	கிருபாநாயகி, சௌந்தரிய நாயகி
33	திருக்கலிக்காமூர்	சோ	சுந்தரேசுரர்	அழகுவன முலையம்மை

ஸ்தலங்களின் பெயர்	நாடு	சுவாமி பெயர்	தேவியார் பெயர்
34 திருக்களர்	சோ	களர்முளைநாதேசுரர், பாரிஜாதவனேசுரர்	அழகேசுரியம்மை
35 திருக்கள்ளில் [ளி	தொ	சிவாநந்தேசுரர்	ஆனந்தவல்லியம்மை
36 கீழைத்திருக்காட்டுப்பள்	சோ	ஆரணிய சுந்தரேசுரர்	அகிலாண்ட நாயகி
37 திருக்காவிரிப்பூம்பட்டின	சோ	பல்லவனேசுரர்	சௌந்தரநாயகி
38 திருக்காறாயில் [ம்	சோ	கண்ணாயிரநாதேசுரர்	கைலாய நாயகி
39 திருக்குடந்தைக்காரோண	சோ	காசி விசுவநாதர், சோமநாதர்	காசிவிசாலாக்ஷி, தேனார்மொழி
40 திருக்குடவாயில் [ம்	சோ	கோணேசுரர்	பெரியநாயகி யம்மை [யம்மை
41 திருக்குரங்கணில்முட்டம்	தொ	வாலீசுரர்	இறையார் வளையம்மை
42 திருவடகுரங்காடுதுறை	சோ	குலைவணங்கீசுரர், அழகுசடை	அழகுசடை முடியம்மை
43 திருக்குற்றாலம்	பா	குறும்பலா ஈசுரர் [முடிநாதர்	குழல்வாய் மொழியம்மை
44 திருக்கைச்சினம்	சோ	கைச்சினநாதேசுரர், கரச்சின்	வெள்வளையம்மை
45 திருக்கொடிமாடச் செங்		[னேசுரர்	
குன்றூர்	கொ	அர்த்தநாரீசுரர்	பாகம்பிரியாளம்மை
46 திருக்கொடுங்குன்றம்	பா	கொடுங்குன்றீசுரர், உக்கிரகிரீசு	குயிலமிர்தநாயகியம்மை, அமிர்
47 திருக்கொள்ளம்பூதூர்	சோ	வில்வவனேசுரர் [ரர்	சௌந்தராம்பிகை [தேஸ்வரி
48 திருக்கொள்ளிக்காடு	சோ	அக்கினீசுரர்	பஞ்சினு மெல்லடியம்மை
49 திருக்கோட்டாறு	சோ	ஐராவதேசுரர்	வண்டமர் பூங்குழலம்மை
50 திருக்கோட்டூர்	சோ	கொழுந்தீசுரர்	மதுரவசனாம்பிகை, தேன்மொ
51 திருக்கோணமலை	ஈழ	கோணேசுரர்	மாதுமையாளம்மை [ழிப்பாவை
52 திருச்சக்கரப்பள்ளி	சோ	ஆலந்துறையீசுரர் பசுபதி நாய	அல்லியங்கோதை, பால்வளைநா
53 திருச்சாத்தமங்கை	சோ	அயவந்தீசுரர் [கேசுரர்	மலர்க்கண்ணம்மை [யகி

54	திருச்சிக்கல்	சோ	வெண்ணெயிலிங்கேசுரர்	வேனெடுங் கண்ணியம்மை
55	திருச்சிறுகுடி	சோ	மங்களேசுரர்	மங்கள நாயகி
56	திருச்சிற்றேமம்	சோ	பொன்வைத்த நாதேசுரர், சதுர்	அகிலாண்ட நாயகி, வேத நாயகி
57	திருச்சேய்ஞ்ஞலூர்	சோ	சத்தியகிரீசுரர் [வேதபுரீசுரர்	சகிதேவி யம்மை
58	திருச்சோபுரம்	நடு	சோபுரநாதேசுரர்	சோபுர நாயகி
59	திருத்தண்டலைநீணெறி	சோ	நீணெறிநாதேசுரர்	ஞானம்பிகை
60	திருத்தருமபுரம்	சோ	யாழ்மூரிநாதேசுரர்	சதா மதுராம்பிகை, தேனமிர்த
61	திருத்தலைச்சங்காடு	சோ	சங்கருணாதேசுரர்	சௌந்தரநாயகி யம்மை [வல்லி
62	திருந்துதேவன்குடி	சோ	சற்கடகேசுரர்	அருமருந்தம்மை
63	திருத்திலதைப்பதி	சோ	முத்தீசுரர்	பொற்கொடி யம்மை
64	திருத்தெங்கூர்	சோ	வெள்ளிமலை நாதேசுரர்	பெரியநாயகி யம்மை
65	திருத்தெளிச்சேரி	சோ	பார்வதீசுரர்	சத்தியம்மை
66	திருத்தென்குடித்திட்டை	சோ	பசுபதீசுரர்	உலகநாயகி யம்மை
67	திருத்தேவூர்	சோ	தேவபுரீசுரர்	மதுரபாஷணியம்மை, பண்ணி லாவிய மொழியுமை
68	திருநணா	கொ	சங்கமுக நாதேசுரர்	வேதாம்பிகை
69	திருநல்லூர்ப்பெருமணம்	சோ	சிவலோகத்தியாகேசர்	நங்கையுமை யம்மை
70	திருநாலூர் மயானம்	சோ	பலாசவனேசுரர்	பெரியாம்பிகை
71	திருநெடுங்களம்	சோ	நித்தியசுந்தரேசுரர்	ஒப்பிலநாயகி யம்மை
72	திருநெல்லிக்கா	சோ	நெல்லிவனநாதேசுரர்	மங்களநாயகி யம்மை
73	திருநெல்வாயில்	சோ	உச்சிநாதேசுரர்	கனகாம்பிகை
74	திருநெல்வெண்ணெய்	நடு	வெண்ணெயப்பர்	நீலமலர்க்கண்ணம்மை [கை
75	திருநெல்வேலி	பா	நெல்லையப்பர், வேணுவனேசுரர்	காந்திமதியம்மை, வடிவுடை மங்
76	திருப்பட்டீச்சுரம்	சோ	பட்டீசுரர், தேனுபுரீசுரர்	பல்வளைநாயகி யம்மை, ஞானம்பிகை

	ஸ்தலங்களின் பெயர்	நாடு	சுவாமி பெயர்	தேவியார் பெயர்
77	திருப்பரிதி நியமம்	சோ	பரிதியப் பேசுரர்	மங்களநாயகி
78	திருப்பழுவூர்	சோ	வடமூலநாதேசுரர்	அருந்தவநாயகி யம்மை
79	திருப்பதியனூர்	சோ	வீரட்டேசுரர் [யப்பர்	இளங்கொடியம்மை
80	திருப்பனந்தாள்	சோ	சடையப்பேசுரர், செஞ்சடை	பெரியநாயகி யம்மை
81	திருப்பாதாளீச்சுரம்	சோ	சர்ப்பபுரீசுரர், நாகநாதர்	அமிர்தநாயகி
82	திருப்பாம்புரம்	சோ	பாம்புரேசுரர்	வண்டார் பூங்குழலி யம்மை
83	திருப்பாற்றுறை	சோ	மூலநாதேசுரர்	மேகலாம்பிகை
84	திருப்புகலூர் வர்த்தமானீச்சரம்	சோ	வர்த்தமானேசுரர்	கருந்தாழ்குழலி யம்மை
85	திருப்புள்ளமங்கை	சோ	ஆலந்தரித்த ஈசுரர், பசுபதி	அல்லியங்கோதை
86	திருப்புறவார் பனங்காட்டூர்	நடு	பனங்காட்டீசுரர் [நாதேசுரர்	புறவாம்பிகை
87	திருப்பெரும்புலியூர்	சோ	வியாக்கிரபுரீசுரர்	சௌந்தர நாயகி
88	திருப்பேணுபெருந்துறை	சோ	சிவாநந்தேசுரர், பிரணவேசுரர்	மலையரசி யம்மை, மங்களநாயகி
89	திருமயிலாப்பூர்	தொ	கபாலீசுரர்	கற்பகவல்லியம்மை
90	திருமயேந்திரப்பள்ளி	சோ	திருமேனி யழகர்	வடிவாம்பிகை
91	திருமாகறல்	தொ	அடைக்கலங்காத்த நாதேசுரர்	புவனநாயகி
92	திருமாணிகுழி	நடு	மாணிக்கவரதேசுரர்	மாணிக்க வல்லியம்மை
93	திருமாந்துறை	சோ	ஆம்ரவனேசுரர்	அழகாலுயர்ந்த அம்மை
94	திருமீயச்சூர்	சோ	முயற்சி நாதேசுரர்	சௌந்தர நாயகி
95	தென்திருமுல்லைவாயில்	சோ	முல்லைவன நாதர்	கோதையம்மை
96	திருமூக்கீச்சுரம்	சோ	பஞ்சவர்ணேசுரர்	காந்திமதி யம்மை
97	திருவக்கரை	தொ	சந்திரசேகரேசுரர்	வடிவாம்பிகை

98 திருவடுகூர்	நடு	வடுகேசுரர்	வடுவகிர்க் கண்ணம்மை
99 திருவலிதாயம்	தொ	வலிதாயநாதர்	தாயம்மை
100 திருவல்லம்	தொ	வல்லநாதேசுரர் [சுரர்	வல்லாம்பிகை யம்மை
101 திருவியலூர்	சோ	யோகாநந்தேசுரர், புராதனே	சௌந்தர நாயகி
102 திருவிளநகர்	சோ	துறைகாட்டுவள்ளலார், உசீரவனேசுரர்	வேயுறுதோளி யம்மை, வம்சபுஜாம்பாள்
103 திருவிளமர்	சோ	பதஞ்சலிமனோகரேசுரர் வியாக்ரபாதேசுரர்	யாழினுமென்மொழியம்மை
104 திருவிற்குடி	சோ	வீரட்டானேசுரர்	மைவார் குழலியம்மை, ஏலவார்
105 திருவிற்கோலம்	தொ	திரிபுராந்தகேசுரர்	திரிபுராந்தகி யம்மை [குழலி
106 திருவெண்டுறை	சோ	வெண்டுறைநாதேசுரர்	வேனெடுங்கண்ணி யம்மை
107 திருவேட்டக்குடி	சோ	திருமேனி யழகேசுரர்	சாந்தநாயகி
108 திருவேற்காடு	தொ	வேற்காட்டீசுரர், வேதபுரீசுரர்	வேற்கண்ணியம்மை
109 திருவைகன்மாடக்கோ	சோ	வைகனுதேசுரர்	வைகலாம்பிகை
110 திருவைகாவூர் [யில்	சோ	வில்வவனேசுரர்	வளைக்கைநாயகி யம்மை

திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் பாடிய ஸ்தலங்களின் மொத்தம் (44+52+13+110)=219.

குறிப்பு :—கூஉஅ-வது பக்கத்தில் கூறப்பட்டுள்ள ஸ்ரீகாழி தலத்துக்குத் திருப்பிரமபுரம், திருவேணுபுரம், திருப்புகலி, திருவெங்குரு, திருத்தோணிபுரம், திருப்பூந்தராய், திருச்சிரபுரம், திருப்புறவம், திருச்சண்பை நகர், ஸ்ரீ காழி, திருக்கொச்சைவயம், திருக்கழுமலம் என்ற பன்னிரண்டு பெயர்கள் இந்தத் தேவாரத்தில் வழங்கப்பட்டுள்ளன.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

பாட்டு முதற்குறிப்பகராதி

தூ

தே

பாட்டு முதற்குறிப்பகராதி